CC-O. In Public Domain. Digitized by eGangotri

|| ஸ்ரீ: ||

ஸ்ரீ ஜகத்குரு க்ரந்தமாலா

பாகம் - 5



ஸ்ரீ சிவ ஸ்தோத்திரங்கள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

।। श्रीः ।।

ஸ்ரீ ஜகத்குரு க்ரந்தமாலா

பாகம் - 5

ஸ்ரீ சிவ ஸ்தோத்திரங்கள்

புதிய பதிப்பு

ஸ்ரீமதி லிங்கம்மாள் ராமராஜு
சாஸ்த்ரப்ரதிஷ்ட்டா டிரஸ்ட்,
இராஜபாளையம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

© ஸ்ரீமதி லிங்கம்மாள் ராமராஜு சாஸ்த்ரப்ரதிஷ்டா டிரஸ்ட்

மறுபதிப்பு : ஏப்ரல் 2005 (1000 பிரதிகள்)

விலை ரூ : **130/-**

பிரதிகள் கிடைக்குமிடம்:

1) ஸ்ரீமதிலிங்கம்மாள் ராமராஜு சாஸ்த்ரப்ரதிஷ்டா டிரஸ்ட்
1, காந்திகலை மன்றம் சாலை,
இராஜபாளையம்-626 117
e-mail : shastraprathishta@yahoo.com

2) சாஸ்த்ரப்ரகாஸிகா டிரஸ்ட்,
சந்திரவிலாஸ் அபார்ட்மெண்ட்ஸ்
A-3, No-9, 8வது தெரு
Dr. ராதாகிருஷ்ணன் சாலை, மைலாப்பூர்
சென்னை-600 004 Phone : 044-28475009
e-mail : info@sastraprakasika.org

Printed by :
ABHI PRINTOGRAPHS, SIVAKASI.
Phone : 04562 - 227997

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ சிருங்கேரி சாரதாம்பாள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



ஸ்ரீஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



அனந்தஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

।। श्री श्रृङ्गेरी श्रीजगद्गुरुमहासंस्थानम् ।।

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य पदवाक्यप्रमाणपारावारपारीण
यमनियमासनप्रणायामप्रत्याहारधारणाध्यानसमाध्यष्टाङ्ग
योगानुष्ठाननिष्ठ तपश्चक्रवर्त्यनाद्यविच्छिन्न
श्रीशङ्कराचार्यगुरुपरम्पराप्राप्त षड्दर्शनस्थापनाचार्य
व्याख्यानसिंहासनाधीश्वर सकलनिगमागमसारहृदय
सांख्यत्रयप्रतिपादक वैदिकमार्गप्रवर्तक सर्वतन्त्रस्वतन्त्रादिराजधानी
विद्यानगरमहाराजधानी कर्णाटकसिंहासन प्रतिष्ठापनाचार्य
श्रीमद्राजाधि राजगुरुभूमण्डलाचार्य ऋष्यश्रृङ्गपुरवराधीश्वर
तुङ्गभद्रातीरवासि श्रीमद्विद्याशङ्कर पादपद्माराधक
श्रीजगद्गुरु श्रीमदभिनवविद्यातीर्थस्वामिगुरुकरकमलसञ्जात

।। श्री जगद्गुरु शृङ्गेरी श्रीमद्भारतीतीर्थमहास्वामिभिः ।।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

निखिलास्तिकमहाजनविषये नारायणस्मरणपुरस्सरं विरचिता
आशिषस्समल्लसन्त ।

इह खलु समेऽपि लोकाः आत्मनः श्रेय एव सर्वदा समीहन्ते। तदर्थं नैकानि साधनानि शास्त्रेषु विहितानि। तेषु च भक्तेरस्ति विशिष्टं स्थानम्। अनन्येन मनसा भगवद्गुणानुकीर्तनं भगवत्कृपां संपादयति। तदर्थान्येव स्तोत्राणि नैकैः महापुरुषैः विरचितानि। तेषामर्थावगतिपुरस्सरं पठनं श्रेयसे अवकल्पते।

परशिवावतारैः श्रीमच्छङ्करभगवत्पादाचार्यैः लोकानामुपकाराय बहूनि देवतास्तोत्राणि संग्रथितानि। तानि नितान्तरमणीयानि ललितपदबन्धुराणि गभीरार्थानि च सन्ति। तेषां पठनं विशिष्टं फलं प्रसूते।

नैकवत्सरेभ्यः प्राक् शांकरग्रन्थावलिनाम्ना प्रकाशितानां तेषां द्रविडभाषानुवादपुरस्सरं राजपाळयनगरस्थ लिंगम्माळरामराजु शास्त्रप्रतिष्ठानेन पुनः प्रकाशनं विधीयत इति विजाय नितरां मोदामहे।

श्रीशारदाशशिकलावतंसयोरकम्पानुकम्पामरम्परया इयं संस्था ईदृशानि लोकोपकारकाणि कार्याणि विदधाना चिरमभिवर्धन्तां ग्रन्थोऽयं भक्तजनपाणि-पल्लवान्यलंकरोत्विति चाशास्महे।

इति नारायणस्मरणम्

शृङ्गगिरिः
चित्रभानु भाद्रशुक्ल त्रयोदशी
गुरुवासरः। 19.9.2002

श्री

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகள் ஸகல ஆஸ்திக மஹாஜனங்களின் கண் நாராயண ஸ்மரண பூர்வகமாக எழுதப்பட்ட ஆசீர்வாதங்கள்

இவ்வுலகில் உள்ள ஜனங்கள் ஆத்மாவின் ச்ரேயஸ்ஸைப் பொருட்டு எப்பொழுதும் எதிர்பார்க்கிறார்கள். அதன் பொருட்டு பல ஸாதனங்கள் ஸாஸ்திரங்களில் விதிக்கப்பட்டுள்ளன. அவைகளில் பக்திக்கு சிறப்புமிக்க ஸ்தானம் இருக்கிறது. ஒருமைப்பாட்டுடன் கூடிய மனதுடன் (மனஸினால்) பகவானின் குணங்களை கீர்த்தனம் பண்ணுதல் என்பது பகவத் கிருபையை ஸம்பாதித்து தருகிறது. அதன் பொருட்டுத்தான் அநேக மஹாபுருஷர்களால் ஸ்தோத்திரங்கள் செய்யப்பட்டுள்ளன அவைகளின் பொருளறிந்து படிப்பது ச்ரேயஸ்ஸிற்குக் காரணமாகும்.

பரமசிவனின் அவதாரமாய் விளங்கிய ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்யாரவர்களால் லோகோபகாரத்தின் பொருட்டு பல தேவதைகளின் ஸ்தோத்திரங்கள் கட்டப்பட்டுள்ளன. அவைகள் எப்பொழுதும் இனிமையாகவும் லலிதமானபதங்களை உடையதாகவும், ஆழமான பொருளை உடையதாகவும் இருக்கின்றன. அவைகளின் படனம் என்பது விசிஷ்டமான பயனை தரவல்லது.

பலவருடங்களுக்கு முன் **"சங்கர க்ரந்தாவலி"** என்ற பெயரால் பிரசுரிக்கப்பட்ட ஸ்தோத்திர புத்தகங்களை தமிழ் பாஷை மொழிபெயர்ப்புடன் ராஜபாளையத்தில் உள்ள ஸ்ரீமதி லிங்கம்மாள் ராமராஜு சாஸ்திர ப்ரதிஷ்டானத்தின் மூலம் மறு பதிப்பு செய்யப்படுகிறது என்று அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

ஸ்ரீ சாரதா சந்திரமௌளீஸ்வரரின் நிலையான அனுகம்பத்தின் பரம்பரையினால் இந்த ஸம்ஸ்தை இப்பேர்பட்ட லோகோபகாரமாக இருக்கும் கார்யங்களை செய்து கொண்டு வெகுகாலம் மேன்மேலும் வளரட்டும். அந்த புத்தகம் பக்த ஜனங்களின் கைகளை அலங்கரிக்கட்டும் என்றும் ஆசீர்வதிக்கிறோம்

நாராயணஸ்ம்ருதி :

சிருங்கேரி
சித்ரபானு பாத்ர சுக்ல த்ரயோதசீ
வியாழக்கிழமை 19-09-2002

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பதிப்புரை

ஈஸ்வரன் காலத்துக்கு ஏற்ப அவதாரம் செய்கிறான். அவதாரங்களில் பல விதங்கள் இருக்கின்றன.

அம்சாவதாரம், அர்சாவதாரம், பூர்ணாவதாரம் என்றெல்லாம் கூறுவர். பல மதங்கள் தோன்றி ஒன்றுக்கொன்று விரோதம் மேலோங்கி நிற்கும் காலத்தில் அத்வைத ஸித்தாந்தத்தை நிலைநாட்ட எடுத்த அவதாரம் தான் சங்கராவதாரம் என்பது. கேரளத்தில் பிறந்து எல்லா தேசத்திற்கும் யாத்திரை செய்து துன்மதங்களை அகற்றி ஷண்மதத்தை (அறு மதங்களை) ஸ்தாபித்து உலக மக்கள் ச்ரேயஸ்ஸை அடைய, அவரவர் தகுதியின் அடிப்படையில் மேன் நிலையை அடைய (மோக்ஷத்தை அடைய) பல கிரந்தங்களை இயற்றியுள்ளார். அவைகளில் மிகவும் எளிமையானதும் கருத்துமிக்கதும் அனைவராலும் போற்றக்கூடியதுமாய் விளங்குகின்றன ஸ்தோத்திர கிரந்தங்கள்.

பகவான் சங்கரர் ஸ்வானுபவம் பெறுவதற்கும் கிரமமாக முக்தியை அடைவதற்கும் எல்லா தேவதா மூர்த்திகள் பேரிலும் ஸதோத்திரங்களை அருளியிருக்கிறார்கள். எல்லா தேவதா மூர்த்திகளும் ஒரே பரப்ரம்மத்தின் உருவம் என்பது தான் ஸித்தாந்தம். எல்லோரும் பாராயணம் செய்வதற்கு ஏற்ற முறையில் லலிதமான பதங்களுடன் அமைந்துள்ள இந்த ஸ்தோத்திர க்ரந்தத்தை தமிழில் மொழிபெயர்ப்புடன் ஸ்ரீ ஸ்ரீசிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ சாரதா பீடாதிபதிகளின் பரமானுக்ரஹத்துடன் **'ஸ்ரீ ஜகத்குரு க்ரந்தமாலா'** என்கிற பெயரில் ஸ்ரீ சங்கர ஸேவா ஸமிதி வெளியிட்டுள்ளது என்பது அறிந்ததே. அவைகளை ஸ்ரீஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு சிருங்கேரி ஸ்ரீஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகளின் அனுக்ரஹத்துடன் அவரது 55-வது வார்ஷீக மஹோத்ஸவ தினத்தன்று மறுபதிப்பாக வெளியிட குருவருள், தெய்வ அருள் கிடைக்கப்பெற்றோம்.

சிவபெருமானின் பெருமைகளை விளக்கும் இந்த ஸ்தோத்திரங்கள் அழகிய விருத்தத்தில் அமைந்துள்ளபடியால் எல்லோருக்கும் படிக்கவும், கேட்கவும் மிக ரம்யமாக உள்ளது. இதனை படிக்கும் அனைவருக்கும் சகல ஐச்வர்யங்களையும் அளிக்கவல்ல பகவான் அவைகளை அளிக்கட்டும். இத்தொண்டில் எங்களை ஈடுபடுத்தி அருளிச்செய்து ஸ்ரீமுகம் கொடுத்தும் அனுக்ரஹித்த எங்களது குல குருவான ஸ்ரீஸ்ரீ பாரதீதீர்த்த ஸ்வாமிகளின் பாதார விந்தங்களில் நமஸ்காரம் செய்து இது போல் பணி மேன்மேலும் செய்ய எல்லாவித சக்திகளையும் அனுக்ரஹிக்குமாறு வேண்டுகிறேன்.

பி. ஆர். ராமசுப்பிரமணியராஜா

"ராமமந்திரம்"
இராஜபாளையம்.
ஏப்ரல் - 2005

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

விஷயானுக்ரமணிகை

		பக்கம்
1.	ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம்	1
2.	ஸ்ரீ சிவகேசாதி பாதாந்த வர்ணன ஸ்தோத்திரம்	23
3.	ஸ்ரீ மிருத்யுஞ்ஜய மானஸிக பூஜா ஸ்தோத்திரம்	78
4.	தசச்லோகீஸ்துதி	116
5.	ஸ்ரீ சிவபாதாதிகேசாந்தவர்ணன ஸ்தோத்திரம்	137 - 187

கைலாஸம்	137
பிநாகம்	138
குடாரம்	140
சூலம்	141
மான்	142
விருஷபம்	143
விநாயகர்	145
ஸுப்ரஹ்மண்யர்	146
சாஸ்தா	148
பார்வதி	149
ப்ரமதகணங்கள்	152
வாஸக்ருஹம்	153
ஸபை	154
ஆஸனம்	155
பாதங்கள்	156
நூபுரம்	158
முழங்கால்	159
துடைகள்	160
நிதம்பம்	161
மத்யப்ரதேசம்	162
ரோமாவளி	163
மார்பு	164

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

புஜங்கள்	165
கண்டம்	166
அதரம்	168
மூக்கு	169
குண்டலம்	170
கண்கள்	171
நெற்றி	174
கேசபாரம்	175
கிரீடம்	176
சந்திரகலை	178
ச்வேதச்சத்ரம்	179
சாமரம் வீசுபவரின் கைவளையொலி	180
அப்ஸரோநர்த்தனம்	181
நாரதகானம்	183
முரஜநாதம்	184
பக்தர்கள்	185
பலச்ருதி	186

6. ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திவர்ணமாலா ஸ்தோத்திரம் 188 - 210
7. வேதஸாரசிவ ஸ்தோத்திரம் 211 - 219
8. காலபைரவாஷ்டகம் 220 - 227
9. ஸுவர்ணமாலா ஸ்துதி 228 - 257
10. ஸ்ரீ சிவானந்த லஹரீ 259 - 375

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ श्रीः ॥

॥ श्रीशिवस्तोत्राणि ॥

ஸ்ரீ சிவ ஸ்தோத்திரங்கள்

ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்யார் அருளியவை.

॥ श्रीदाक्षिणामूर्तिस्तोत्रम् ॥

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம்

[ஆசார்யாள் அருளிய தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரங்கள் மூன்று. (1) தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம் (2) தக்ஷிணாமூர்த்தி வர்ணமாலா ஸ்தோத்திரம் (3) தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம். இவைகளில் முதலாவதான தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம் 19 சுலோகங்கள் கொண்டது ஆலமரத்தடியில் தெற்கு முகமாக அமர்ந்து சின்முத்ரையாலும் மௌனத்தாலும் தத்வ உபதேசம் செய்யும் ஸ்ரீ ஆதிகுருவான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியின் ஸ்வரூபம் இதில் நன்கு வர்ணிக்கப்படுகிறது. அர்த்தானுஸந்தானத்துடன் இந்த ஸ்துதியைப் பாராயணம் செய்வதால் இவ்வுலகில் பொருள், ஆயுள் முதலானவற்றைப் பெறுவான். அபஸ்மாரம் முதலான ரோகங்கள் இவனிடம் நெருங்காது. கடைசியில் தத்வ ஞானமும் ஏற்படும்]

उपासकानां यदुपासनीयमुपात्तवासं वटशाखिमूले ।
तद्धाम दाक्षिण्यजुषा स्वमूर्त्या जागर्तु चित्ते मम बोधरूपम् ॥

உபாஸகாநாம் யதுபாஸநீயம்
உபாத்த வாஸம் வடஶாகி மூலே ।
தத்தாம தாக்ஷிண்ய ஜுஷா ஸ்வமூர்த்யா
ஜாகர்த்து சித்தே மம போத ரூபம் ॥

उपासकानां–உபாஸகர்களுக்கு, **यत्**–எது, **उपासनीयं**–உபாஸிக்கத் தகுந்ததோ, **दाक्षिण्यजुषा**–எது அனுகூலமான தன்மைவாய்ந்த, **स्वमूर्त्या**–தன்னுடைய உருவத்துடன் (தக்ஷிணாமூர்த்தி ரூபத்துடன்) **वटशाखिमूले**-ஆலமரத்தடியில்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

उपात्तवासं–வஸித்து வருகின்றதோ, **बोधरूपं**–எது ஞான ஸ்வரூபமாய் நிலைத்து நிற்கின்றதோ, **तत्**–அந்த, **धाम**–ஒளி, **मम**–என்னுடைய, **चित्ते**–மனதில், **जागर्तु**–மிளிரட்டும்.

பரம்பொருள் ஞானஸ்வரூபம். அது தேஜோமயமாய் விளங்குகிறது. உருவம், குணம், பெயர் முதலியவைகள் அற்றது. இவ்வாறு விளங்கும் நிர்குண ப்ரம்மத்தை தியானிப்பது மிகவும் கடினம். ஆதலால் அப்பரம் பொருளே பக்தர்கள்பால் பரிவுகாட்டி தத்துவத்தை விளக்குவதற்காக தக்ஷிணாமூர்த்தியின் உருவைத்தாங்கி ஆலமரத்தடியில் அமர்ந்திருக்கின்றது. அம்மூர்த்தி மிகுந்த தாக்ஷிண்யம் வாய்ந்தது. பக்தர்களின் எண்ணங்களையறிந்து அவர்களுடைய மனதிற்குகந்தவாறு செயலாற்ற வல்லது. இவ்வாறு சிறந்த குணகணங்களைப்பெற்று விளங்குவதால் உபாஸகர்கள் இதைச் சுலபமாக உபாஸிக்கலாம். இம்மூர்த்தி என்மனதில் எப்பொழுதும் பிரகாசிக்கட்டும்.

பகவானுடைய மூர்த்தியையும் குணங்களையும் இடைவிடாது மனதில் நினைப்பதுதான் உபாஸனம் என்பது. இதற்குத்தான் தியானம் என்றும் பெயர். இவ்வாறு நினைப்பவர்களுக்கு உபாஸகர்கள் என்று பெயர். பகவானுடைய பலவிதமான மூர்த்திகளில் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபம் ஞானத்தை உபதேசிப்பதற்காக ஏற்பட்டது. ஆகையால் ஞானத்தை விரும்புபவர்கள் ஆலமரத்தடியில் தெற்கு முகமாக வீற்றிருக்கும் ஒளிமயமான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபத்தை தியானம் செய்கிறார்கள். பகவத் ஸ்வரூபம் மனதில் நிலைத்திருக்கவேண்டுமானால் அவருடைய அருள் வேண்டும். தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபம் மனதில் நிலைத்திருக்க இந்த சுலோகத்தில் அவரை பிரார்த்திக்கிறார்.

இந்த தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம் உபஜாதி என்ற விருத்தத்தில் எழுதப்பட்டுள்ளது. இதில் இந்த்ரவஜ்ரா, உபேந்த்ரவஜ்ரா என்ற இரண்டு விருத்தங்கள் கலந்து ஒன்று சேர்ந்துள்ளன. நிர்குணமான பரம்பொருள் பக்தர்களைக்காக்கும் பொருட்டு ஸகுணமான ரூபத்தையெடுத்துக்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கொண்டு தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபியாய்க் காட்சியளிக்கின்றது. இவ்விரண்டு ஸ்வரூபங்களையும் வர்ணிப்பதற்கேற்றதான விருத்தம் இங்கு அமைந்திருப்பது மிகவும் உசிதமானது. (1)

अद्राक्षमक्षीणदयानिधानमाचार्यमाद्यं वटमूलभागे ।
मौनेन मन्दस्मितभूषितेन महर्षिलोकस्य तमो नुदन्तम् ॥ २ ॥

அத்ராக்ஷமக்ஷீண தயா நிதாநம்
ஆசார்யமாத்யம் வடமூல பாகே ।
மௌனேன மந்தஸ்மித பூஷிதேந
மஹர்ஷி லோகஸ்ய தமோ நுதந்தம் ॥

अक्षीण – குறைவற்ற, **दया**–தயைக்கு, **निधानं**–இருப்பிடமாயும், **वटमूलभागे** – ஆலமரத்தடியில், **मन्दस्मित** – புன்முறுவலால், **भूषितेन** – அலங்கரிக்கப்பட்ட, **मौनेन** – மௌனத்தினால், **महर्षिलोकस्य** – மாமுனிவர்கள் குழாத்தின், **तमः** – அக்ஞான இருளை, **नुदन्तं** – நீக்குகின்றவருமான **आद्यं**– முதலாவது, **आचार्यं** – ஆசிரியரான தக்ஷிணாமூர்த்தியை **अद्राक्षम्** – கண்டேன்.

தக்ஷிணாமூர்த்தியான பரமேஶ்வரன் கருணைக்கடல். அவருடைய கருணை குறைவற்றது. அவர் தன்னை அண்டும் மாமுனிவர்களிடம் இரக்கம் காட்டி ஆலமரத்தடியில் அமர்ந்து அவர்களின் அக்ஞானம் என்னும் இருளை நீக்குகின்றார். அவர்தான் முதலாவது குருமூர்த்தி. அவர் தம் சீடர்களான மாமுனிவர்களுக்கு ஞானத்தை உபதேசிக்கும் முறை ஒப்பற்றது. அவர் வாய்திறவாமல் மௌனத்தை அனுஷ்டிக்கின்றார். அவருடைய முகத்தில் புன்முறுவல் திகழ்கின்றது. இவற்றின் ஒளியாலேயே முனிவர்களின் உள்ளத்தில் குடிகொண்டுள்ள அக்ஞான இருள் நீங்கி விடுகின்றது. அப்பொழுது அவர்கள் பரமேச்வரனுடைய உண்மையை உணர்கின்றனர்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

முதல் சுலோகத்தில் ஸ்ரீபகவத்பாதர் தக்ஷிணாமூர்த்தியான பரமேச்வரன் என் அகக்கண் முன் தோன்றவேண்டுமென வேண்டுகிறார். அவருடைய பக்திப்பெருக்கால் கட்டுண்ட கருணாமூர்த்தியும் அவர்முன் அக்கணமே காட்சியளிக்கின்றார். இதையே பகவத்பாதர் अद्राक्षं (கண்டேன்) என்று கூறுகிறார்.

இதனால் பக்தர்கள் மனம் உவந்து குருமூர்த்தியை வழிபடுவராயின் தயாபரனான அவரும் அவர்கள் முன் தோன்றி அவர்களுக்குத் தத்துவத்தை உபதேசித்து அவர்களைக் காத்தருள்வார் என்று நன்கு விளங்குகின்றது.

विद्राविताशेषतमोगणेन मुद्राविशेषेण मुहुर्मुनीनाम् ।
निरस्य मायां दयया विधत्ते देवो महांस्तत्वमसीति बोधम् ॥

வித்ராவிதாஶேஷ தமோ கணேன
முத்ரா விஶேஷேண முஹுர் முநீநாம் ।
நிரஸ்ய மாயாம் தயயா விதத்தே
தேவோ மஹான் தத்வமஸீதி போதம் ॥

महान् देवः–மஹாதேவர், **दयया**–இரக்கத்தால், **विद्रावित**–துரத்தப்பட்ட, **अशेष**–மீதமற்ற, **तमोगणेन**–இருள் கூட்டத்தை உடைய, **मुद्राविशेषेण**–சிறந்த ஞான முத்திரையால், **मुहुः**–அடிக்கடி, **मुनीनां**–முனிவர்களுடைய, **मायां**–மாயையை, **निरस्य**–நீக்கி, **तत्वमसि इति**–அது தான் நீ என்ற, **बोधं**–ஞானத்தை, **विधत्ते**–அளிக்கின்றார்.

தக்ஷிணா மூர்த்தியே பெருமை வாய்ந்த பரம்பொருள். அவர் பக்தர்களிடம் பரிவு காட்டும் தன்மை பெற்றவர். அவர்களது உள்ளங்களில் ஊன்றி நிற்கும் அஞ்ஞானமெனும் இருளை நீக்க அவர் சின்முத்திரையுடன் விளங்குகின்றார். கட்டை விரலையும் ஆள் காட்டி விரலையும் ஒன்றாகச் சேர்த்துக் காட்டும் அடையாளத்திற்குச் சின் முத்திரை என்று பெயர். இது ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே என்ற ஜீவப்ரம்மைக்யமெனும் தத்து

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வத்தைப் புலப்படுத்துகின்றது. இவ்வாறு இருப்பினும் மக்கள் இதை அறிவதில்லை. ஏனெனில் மாயை எனும் ஓர் இருள் உண்மையின் ஸ்வரூபத்தை மறைத்து விடுகின்றது. ஆனால் தக்ஷிணாமூர்த்தியின் சின்முத்திரை மாயை எனும் திரையை விலக்கித் தத்துவமஸி என்ற ஞானத்தை உபதேசிக்கின்றது.

தத்துவமஸி என்பது உபநிஷத்துக்களில் கூறப்பட்ட ஓர் மஹா வாக்யம். இதில் தத் என்ற பதம் ஈச்வரனைக் குறிக்கின்றது. அவன் தான் இவ்வுலகைப் படைத்துக் காத்துக் கடைசியாகத் தனக்குள்ளேயே லயமடையச் செய்யும் ஆற்றல் பெற்றவன். ஞான ஸ்வரூபியும் அவனே. அவன் தான் அழிவற்றவனாயும் எங்கும் நிறைந்தவனாயும் விளங்குகின்றான். இரண்டாவதான த்வம் என்ற பதத்திற்கு ஜீவன் என்று பொருள். இந்த ஜீவன் அல்ப அறிவுள்ளவன். இவன் பலவிதமான தோற்றங்களைப் பெறுகிறான். இவன் அஞ்ஞானமென்ற உபாதியையுடையவன். அதனால் தான் இவன் தான் சுகத்தை அடைவதாயும் துக்கத்தை அடைவதாயும் எண்ணுகின்றான். நன்கு பரிசோதித்துப் பார்க்கும் பொழுது ஜீவனும், ஈசுவரனும் ஒன்று தான் என்ற ஞானம் உண்டாகும். இந்த ஜீவனும் ஈசுவரனும் ஒன்றே என்ற உண்மையை அஸி என்ற பதம் எடுத்துக் காட்டுகின்றது. (3)

अपारकारुण्यसुधातरङ्गैरपाङ्गपातैरवलोकयन्तम् ।
कठोरसंसारनिदाघतप्तान्मुनीनहं नौमि गुरुं गुरूणाम् ॥४॥

அபார காருண்ய ஸுதா தரங்கை -
ரபாங்க பாதை ரவலோகயந்தம் ।
கடோர ஸம்ஸார நிதாக தப்தான்
முநீநஹம் நௌமி குரும் குரூணாம் ॥

अपार-எல்லையற்ற, **कारुण्य**-கருணையாகிய, **सुधा**-அமுதத்தின், **तरङ्गैः**-அலைகளையுடைய, **अपाङ्गपातैः**-கடைக்கண் பார்வைகளால், **कठोर**-கடுமையான, **संसारनिदाघ**-ஸம்ஸார

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மெனும் வெப்பத்தால், **तप्तान्**-தாபத்தை அடைந்த, **मुनीन्**-முனிவர்களை, **अवलोकयन्तम्**-பார்க்கின்றவரும், **गुरूणां**-குருக்களுக்கெல்லாம், **गुरुं**-குருவான தக்ஷிணாமூர்த்தியை, **अहं**-நான், **नौमि**-வணங்குகிறேன்.

தக்ஷிணாமூர்த்தியானவர் மிகுந்த இரக்கம் உள்ளவர். வாழ்க்கையின் இன்னல்களில் சிக்குண்டு தவிக்கும் மக்களின் துயரை நீக்குவதற்காக அவர் தம் கடைக்கண் பார்வைகளை அவர்கள்மீது செலுத்துகின்றார். அவைகளினின்று எல்லையற்ற அமுத மயமான ஒளிகள் அலை அலையாகக் கிளம்பித் துயர் படும் பக்தர்கள்பால் படிகின்றன. அதனால் அவர்களுடைய மூன்று வகையான தாபங்களும் நீங்கி விடுகின்றன. இவ்விதம் அவரது கடாக்ஷ வீக்ஷணத்திற்குப் பாத்திரமான மாமுனிவர்கள் ஆனந்தாமுதக் கடலில் ஆழ்ந்து மூழ்கி விடுகின்றனர். தக்ஷிணாமூர்த்தி தான் ஆதி குரு. அவரே ஜீவப்ரம்மைக்யத்தை உபதேசித்தவர். அவரிடமிருந்தே மற்ற ஆசார்யர்கள் தோன்றியுள்ளனர். ஆதலால் நான் அவரது திருவடிகளைப் பணிகின்றேன். (4)

ममाद्यदेवो वटमूलवासी कृपाविशेषात्कृतसंनिधानः ।
ओंकाररूपामुपदिश्य विद्यां आविद्यकध्वान्तमपाकरोतु ॥

மமாத்ய தேவோ வடமூல வாஸீ
க்ருபா விஶேஷாத் க்ருத ஸந்நிதான : ।
ஓம்கார ரூபாமுபதிச்ய வித்யாம்
ஆவித்யக த்வாந்தமபாகரோது ॥

आद्यदेवः-முழுமுதற்கடவுளான, **वटमूलवासी**-ஆலமரத்தடியில் வஸிக்கும் தக்ஷிணாமூர்த்தி, **कृपाविशेषात्**-சிறந்த கருணையால், **कृतसंनिधानः**-என்முன் தோன்றியவராய், **ओंकाररूपां**-ஓம்கார ரூபமாகிய, **विद्यां**-பிரம்ம வித்யையை, **उपदिश्य**-கற்றுக்கொடுத்து, **मम**-என்னுடைய, **आविद्यकध्वान्तं**-அஞ்ஞானத்தால் உண்டாகும் இருளை, **अपाकरोतु**-நீக்கட்டும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தக்ஷிணாமூர்த்தி தான் ஆதியான பரம்பொருள். அவர் தென் திசையை நோக்கிய வண்ணம் அமர்ந்திருத்தலால் தக்ஷிணாமூர்த்தி யென்று அழைக்கப்படுகின்றார். தன்னை அண்டும் பக்தர்கள் அனைவருக்கும் ஆத்ம ஞானத்தைப் புகட்டி அவர்களைக் கடைத்தேற்றுவதற்காகவே அவர் ஆல மரத்தடியில் அமர்ந்துள்ளார். அவர் பக்தர்களிடம் கருணை காட்டும் வள்ளல். நினைத்த மாத்திரத்திலேயே அவர்களுடைய அகக்கண் முன் தோன்றி ஓம்காரமெனும் வித்தையை உபதேசித்து உள்ளத்துறையும் அஞ்ஞான மெனும் இருளை நீக்கி அவர்களை ஆட்கொள்ளும் ஆற்றல் பெற்றவர். இவ்வாறு பரம கருணாமூர்த்தியாய் விளங்கும் தக்ஷிணாமூர்த்தி என் முன் தோன்றி பிரணவ வித்தையை உபதேசித்து அஞ்ஞானத்தையும் அகற்ற வேண்டுமென பரமாசார்யார் வேண்டுகின்றார். (5)

कलाभिरिन्दोरिव कल्पिताङ्गं मुक्ताकलापैरिव बद्धमूर्तिम् ।
आलोकये देशिकमप्रमेयमनाद्यविद्यातिमिरप्रभातम् ॥ ६ ॥

கலாபிரிந்தோரிவ கல்பிதாங்கம்
முக்தா கலாபைரிவ பத்த மூர்த்திம் ।
ஆலோகயே தேஶிக மப்ரமேயம்
அநாத்யவித்யா திமிர ப்ரபாதம் ॥

इन्दोः -சந்திரனுடைய, **कलाभिः** -கலைகளால், **कल्पित**- அமைக்கப்பட்ட, **अङ्गं इव**-உறுப்புக்களையுடையவர்போலவும் **मुक्ताकलापैः**-நல் முத்துக்களின் வரிசைகளால், **बद्धमूर्तिं इव**- கட்டப்பட்ட தேஹத்தையுடையவர்போலவும் **अप्रमेयम्**- மதிப்பிற்கெட்டாதவராயும், **अनाद्यविद्या**-ஆதியற்ற அஞ் ஞானமாகிய, **तिमिर**-இருட்டிற்கு, **प्रभातम्**-காலைவேளை யாகவும் விளங்குகின்ற, **देशिकं**-குருவை, **आलोकये**- காண்கின்றேன்.

தக்ஷிணாமூர்த்தியின் திருமேனி மிகவும் பொலிவு பெற்று விளங்குகின்றது. அவருடைய அங்கங்கள் சந்திர னுடைய கலைகளைக்கொண்டு அமைக்கப்பட்டவைபோல்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அனைவரது உள்ளங்களையும் மகிழ்விக்கின்றன. அவரது உடல் கட்டழகு வாய்ந்தது. அது அழகிய நல்முத்துக்களால் ஆக்கப்பட்டது போல் லாவண்யத்துடன் பிரகாசிக்கின்றது. அவரே பரம்பொருளாகத் திகழ்வதால் அவரது ஸ்வரூபத்தை அறிவது மிகவும் அரிது. ஏனெனில் அவர் அளவு கடந்தவர். அவர் பரஞ்ஜ்யோதியாய் வீற்றிருப்பதால் அவரைப் பார்த்த மாத்திரத்திலேயே அஞ்ஞானம் என்ற இருள் நீங்கி ஆத்ம ஞானத்தைப் பெற்று அனைவரும் ஆத்ம ஸாக்ஷாத்காரம் அடைகின்றனர். ஆதலால் அவரை இருட்டை நீக்கும் காலை வேளை என்று பகவத்பாதர் உருவகப்படுத்திக் கூறுகின்றார். இவ்வாறு தோன்றும் பரம்பொருளை நான் காண்கின்றேன் என்று அவர் தன்னுடைய அனுபவத்தை எடுத்துக் காட்டுகின்றார். (6)

स्वदक्षजानुस्थितवामपादं पादोदरालंकृतयोगपट्टम् ।
अपस्मृतेराहितपादमङ्गे प्रणौमि देवं प्रणिधानवन्तम् ॥

ஸ்வ தக்ஷ ஜாநு ஸ்தித வாம பாதம்
பாதோதராலங்க்ருத யோக பட்டம் |
அபஸ்ம்ருதே ராஹித பாத மங்கே
ப்ரணௌமி தேவம் ப்ரணிதாநவந்தம் ||

स्वदक्षजानु–தன்னுடைய வலது முழங்காலில், **स्थित**–வைக்கப்பட்ட, **वामपादं**–இடது காலையுடையவராயும், **पादोदर**–பாம்பினால், **अलंकृत**–அழகுபடுத்தப்பட்ட, **योगपट्टं**–யோக பட்டத்தையுடையவராயும், **अपस्मृतेः**–அபஸ்மாரம் என்ற அஸுரனின், **अङ्गे**–உடலில், **आहितपादं**–வைக்கப்பட்ட காலையுடையவராயும், **प्रणिधानवन्तं**–மனதை ஒருநிலைப்படுத்தியவராயுமுள்ள, **देवं**–கடவுளை, **प्रणौमि**–நன்கு வணங்குகிறேன்.

தக்ஷிணாமூர்த்தியானவர் தனது இடது காலை வலது காலின் மீது போட்டுக் கொண்டு அமர்ந்திருக்கின்றார். அவர் யோகாஸனத்தில் வீற்றிருக்கும் சமயம் பாம்பு அவரது யோக பட்டமாக விளங்குகின்றது. யோக பட்டமென்பது முழங்காலையும் முதுகையும் வளைத்துக் கட்டும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆடை. இவ்வாறு தம் மனதை ஓர் நிலைப்படுத்திய ஞான ஒளியான பரம்பொருள் அபஸ்மாரம் என்னும் அஸுரனின் உடலில் பாதத்தை வைத்துக் கொண்டிருக்கிறார். அதாவது படுத்துக் கொண்டிருக்கும் அவன் எழுந்திருக்க முடியாத படி காலால் அமிழ்த்திக் கொண்டிருக்கிறார். ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தியின் அருள் நமக்கு இருந்தால் அபஸ்மாரம்முதலான ரோகங்கள் நம்மிடம் நெருங்காது என்பதை இது காட்டு கிறது. இவ்வாறு விளங்கும் பரமயோகியான தக்ஷிணா மூர்த்தியை நாம் வணங்க வேண்டும். (7)

तत्वार्थमन्तेवसतामृषीणां युवापि यः सन्नुपदेष्टुमीष्टे ।
प्रणौमि तं प्राक्तनपुण्यजालैराचार्यमाश्चर्यगुणाधिवासम् ॥

தத்வார்த்த மந்தே வஸதாம் ருஷீணாம்
யுவாபி ய: ஸந்நுபதேஷ்டு மீஷ்டே ।
ப்ரணௌமி தம் ப்ராக்தந புண்ய ஜாலை:
ஆசார்ய மாஶ்சர்ய குணாதி வாஸம் ॥

यः-எந்த தக்ஷிணாமூர்த்தி, **युवा अपि सन्**-இளைஞனாக இருப்பினும், **अन्तेवसताम्**-தன் அருகாமையில் அமர்ந்திருக்கும் சீடர்களான, **ऋषीणां**-(விருத்தர்களான) மாமுனிவர் கட்கு, **तत्वार्थं**-ஆன்ம ஞானத்தை, **उपदेष्टुं**-கற்றுக்கொடுப்பதற்கு, **ईष्टे**-வல்லமைபெற்று விளங்குகின்றாரோ, **प्राक्तनपुण्यजालैः**-முன்பிறவிகளில் செய்த நல்வினைகளின் பெருக்கால், **आचार्यं**-எனது ஆசிரியராய் அமைந்தவரும், **आश्चर्यगुणाधिवासम्**-வியப்பை உண்டாக்கும் குணங்களின் உறைவிடமான, **तं**-அந்த தக்ஷிணாமூர்த்தியை, **प्रणौमि**-வணங்குகிறேன்.

தக்ஷிணாமூர்த்தியானவர் சிறிய தோற்றத்தையுடையவராய் ஆலமரத்தடியில் அமர்ந்திருக்கிறார். அவர் சீரிய குணங்கள் படைத்தவர். அவருடைய குணங்கள் அனைவருக்கும் மிக்க வியப்பை அளிக்கின்றன. அவர் வாலிபனாக இருப்பினும் வயது முதிர்ந்த மாமுனிவர்கள்கூட ஆன்ம அறிவைப் பெற அவரையே நாடிச் செல்கின்றனர்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அவ்வனைவருக்கும் அவர் உண்மைப் பொருளான ஜீவப்ரஹ்மைக்யத்தை வாய் திறவாமலேயே சின் முத்திரையால் விளக்கிக் காட்டுகின்றார். சிறுவன் பெரியோர்களுக்கு உபதேசிப்பதும், வாய் திறவாமல் மௌனியாகப் பாடம் சொல்வதும் எங்கும் காணாத அதிசயம். இதை தக்ஷிணாமூர்த்தியிடம் காணலாம்.

चित्रं वटतरोर्मूले वृद्धाः शिष्या गुरुर्युवा ।
गुरोस्तु मौनं व्याख्यानं शिष्यास्तु छिन्नसंशयाः ॥

அவரைக் குருவாகப் பெற அநேகபுண்ய கர்மாக்களைச் செய்திருக்க வேண்டும். **सतां सद्भिः संगः कथमपि पुण्येन भवति** என்பது சான்றோர் வாக்கு. அதாவது நல்லவர்களுக்கு நன்மக்களின் சேர்க்கை ஏதோ புண்ய வசத்தால் தான் ஏற்படுகிறது. இங்கு பரமாசார்யர் தனக்குப் பூர்வ ஜன்மங்களில் செய்த நல்வினைகளின் பயனால் தான் இவ்வாறு சிறப்புடன் விளங்கும் ஆசிரியர் கிடைத்திருக்கிறார் எனக் கூறுகின்றார். இப்படிப்பட்ட தக்ஷிணாமூர்த்தியை நாம் அனுதினமும் வணங்க வேண்டும். (8)

एकेन मुद्रां परशुं करेण करेण चान्येन मृगं दधानः ।
स्वजानुविन्यस्तकरः पुरस्तादाचार्यचूडामणिराविरस्तु ॥ ९ ॥

ஏகேந முத்ராம் பரஶும் கரேண
கரேண சான்யேந ம்ருகம் ததாந:।
ஸ்வஜாநு விந்யஸ்த கர: புரஸ்தாத்
ஆசார்ய சூடாமணி ராவிரஸ்து ॥

एकेन करेण–ஒரு கையினால், **मुद्रां**–சின்முத்திரையையும், **अन्येन करेण**–மற்றொரு கையினால், **परशुं**–கோடாரியையும், **अन्येन करेण**–மற்றுமோர் கையினால், **मृगं**–மானையும், **दधानः**–தரித்துக்கொண்டிருக்கின்றவராயும், **स्वजानु**–தன்னுடைய முழங்காலில், **विन्यस्तकरः**–வைக்கப்பட்ட கையையுடையவருமான, **आचार्यचूडामणिः**–ஆசார்யர்களுக்குள் சிறந்து

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

விளங்கும் ரத்னமான ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி, **पुरस्तात्**-முன்னால், **आविरस्तु**-தோன்றட்டும்.

ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி தன்னை அண்டும் பக்தர்களுக்கு ஞானோபதேசம் செய்வதற்காகத் தன்னுடைய கைகளில் ஒன்றில் சின் முத்திரையை வைத்துக்கொண்டிருக்கிறார். கட்டை விரலையும் ஆள் காட்டி விரலையும் சேர்த்துக் காட்டும் அடையாளம் சின் முத்திரை எனப்படுகின்றது. இந்த சின்முத்திரை ஜீவனும் பிரம்மமும் ஒன்றுதான் என்பதைக் காட்டுகின்றது. இந்த ஞானத்தைப் பெற்றவன் பிறவித் துன்பத்திலிருந்து விடுபட்டு பிரம்ம ஸாக்ஷாத்காரம் அடைகிறான். இதற்கு இடையூறாக இருப்பது அஞ்ஞானம். இதைப் போக்குவதற்கு அடையாளமாகத் தன் கையில் கோடாலியை வைத்துக்கொண்டிருக்கிறார். அடர்ந்த காட்டினுள் இருள் சூழ்ந்திருக்கும். செடி கொடி முதலியவற்றை வெட்டி எறிந்தால்தான் அங்கு வெளிச்சம் வரும். வெளிச்சம் வந்தவுடனே இருள் நீங்கும். அதுபோல் அஞ்ஞானமென்ற இருளையும் அதன் கார்யமான காமம் முதலியவற்றையும் அகற்றுவதன் நிமித்தமாக கோடாலி விளங்குகின்றது. ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி இவ்வாறு தன்னிடம் வரும் பக்தர்களைக் காக்கின்றார். காமம், க்ரோதம் முதலியவை மிருகங்களின் ஸ்வபாவகுணங்கள். ஒரு கையில் மானை வைத்துக் கொண்டிருப்பது காமாதிகளை அடக்கி இருப்பதைக் காட்டுகிறது. அவர் அருள் இருந்தால் நம்மையும் காமாதிகள் துன்புறுத்தாது. அவர் யோகாஸனத்தில் அமர்ந்திருப்பதால் ஓர் கையை முழங்காலில் வைத்துக்கொண்டிருக்கிறார். எப்பொழுதும் அண்டியவர்களைப் காப்பதற்காக அவர் த்யானத்தில் ஆழ்ந்துள்ளார். இவ்வாறான ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி என்முன் தோன்றட்டும். (9)

आलेपवन्तं मदनाङ्गभूत्या शार्दूलकृत्त्या परिधानवन्तम् ।
आलोकये कञ्चन देशिकेन्द्रमज्ञानवाराकरवाडवाग्निम् ॥ १० ॥

ஆலேபவந்தம் மதநாங்க பூத்யா
ஶார்தூலக்ருத்யா பரிதாநவந்தம் ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆலோகயே கஞ்சந தேஶிகேந்த்ரம்
அஞ்ஞான வாராகர பாடவாக்நிம் ॥

मदनाङ्गभूत्या-மன்மதனுடைய உடலின் திருநீற்றுல், **आलेपवन्तम्**-பூச்சுக்களை உடையவரும், **शार्दूलकृत्त्या**-புலித் தோலால், **परिधानवन्तं**-ஆடையணிந்தவரும், **अज्ञानवाराकर-बाडवाग्नि**-அஞ்ஞானமென்னும் கடலினுள் காணும் படபாக்னியாகத்தோன்றுபவருமான, **कञ्चन**-ஓர், **देशिकेन्द्रम्**-ஆசிரியப் பெருமானை, **आलोकये**-காண்கின்றேன்.

இங்கு பகவத்பாதர் ஸ்ரீ தக்ஷிணுமூர்த்தியின் ஸாக்ஷாத்காரத்தை விளக்குகிருர். முன் சுலோகத்தில் தக்ஷிணுமூர்த்தி என் கண் முன் தோன்ற வேண்டுமென்று வேண்ட உடனே அவர் பகவத்பாதரின் கண் முன் காட்சி அளிக்கின்ருர். அவரது திருமேனியின் திருக்கோலம் இங்கு காட்டப்படுகின்றது. முன் ஒரு சமயம் சிவபெருமான் இமயமலைச் சாரலில் தவம் செய்யும்பொழுது காமன் அவரது தவத்தைக் கலைக்கத் தனது மலர்க் கணையை எய்தான். அதனுல் சினமுற்ற சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணில் கிளம்பிய தீயால் காமனின் உடலை எரித்துச் சாம்பலாக்கினுர். அச்சாம்பலையே தம் உடல் முழுவதும் பூசிக் கொண்டார். அச்சிவபெருமானே தக்ஷிணுமூர்த்தியாய்த் தோற்றம் தருதலால் அவர் தனது மேனியை அந்தச் சாம்பல் பூச்சினுல் அலங்கரித்துக் கொண்டிருக்கிருர் என்று கூறுகிருர். இதனுல் அவர் தனது பக்தர்களின் உள்ளத்தெழும் காமக்கனலைக்களைந்து அவர்களைத் தூய்மை வாய்ந்தவர்களாகச் செய்ய வல்லவர் என்பது நன்கு விளங்குகின்றது. மேலும் அவர் தம் உடலைப் புலித் தோலால் அலங்கரித்துக் கொண்டிருக்கின்ருர். புலி இயற்கையிலேயே எப்பொழுதும் கோபம் குடி கொண்டுள்ளது. அதன் தோலை உரித்து ஆடையாகக் கட்டிக் கொண்டுள்ளார் என்று கூறுவது கோபத்தை அடக்கியிருப்பதைக் காட்டுகிறது. ஆகவே தக்ஷிணுமூர்த்தியின் அருள் பெற்றவர்களுக்கு காமம், க்ரோதம் இரண்டும் விலகிவிடும். உலகில் எல்லாத் துன்பங்களுக்கும் இவ்விரண்டுமே மூல காரணம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆனால் அஞ்ஞானம் என்ற இருள் அகத்தில் இருக்கும் வரை எப்பொழுதாவது காம க்ரோதங்கள் தலையைக்காட்டலாம். அதற்காக अज्ञानवाराकरवाडबाग्नि என்று அப்பெருமானை இங்கு வர்ணிக்கின்றார். அஞ்ஞானமென்பது ஓர் பெருங்கடல். அதற்கு எல்லை கிடையாது. ஆழம் கண்டு பிடிப்பதும் அரிது. ஆனால் அதற்குள் தோன்றும் பாடவாக்னி அக்கடலையே எரித்து அழித்து விடுகின்றது. இவ்வாறு அஞ்ஞானம் நீங்கியவுடன் தானாகவே ஸ்வயஞ் ஜோதி மயமான பெருமான் அகக்கண்முன் தோன்றுகின்றார். அதனால் மோக்ஷ சாம்ராஜ்யம் கிட்டுகின்றது. இதற்குச் சிறந்த வழிகாட்டியாகத் தோன்றுபவர் ஸாக்ஷாத் தக்ஷிணமூர்த்தியே. அவரை யான் இங்கு காண்கின்றேன்.

चारुस्मितं सोमकलावतंसं वीणाधरं व्यक्तजटाकलापम् ।
उपासते केचन योगिनस्त्वामुपात्तनादानुभवप्रमोदम् ॥ ११ ॥

சாருஸ்மிதம் ஸோமகலாவதம்ஸம்
வீணாதரம் வ்யக்தஜடாகலாபம் ।
உபாஸதே கேசந யோகிநஸ்த்வா
முபாத்த நாதானுபவப்ரமோதம் ॥

चारुस्मितं–அழகிய புன்முறுவலையுடையவரும், **सोमकलावतंसं**–சந்திர கலையை ஆபரணமாகக்கொண்டவரும், **वीणाधरं**–வீணையைக் கையிலேந்தியவரும், **व्यक्तजटाकलापं**–விரிந்த சடைக்கூட்டத்தையுடையவரும், **उपात्तनादानुभवप्रमोदं**–அடையப்பட்ட இன்னிசை நுகர்ச்சியின் மகிழ்ச்சியை உடையவருமான, **त्वां**–உம்மை, **केचन**–சில **योगिनः**-யோகிகள் **उपासते**–உபாஸிக்கின்றனர்.

இங்கு வீணா தக்ஷிணமூர்த்தியின் உபாஸனை கூறப்படுகிறது. அவர் முகத்தில் அகமகிழ்வின் சின்னமாய் புன் முறுவல் பூத்துக் காணப்படுகின்றது. அவரது சடைமுடியில் காணப்படும் சந்திரகலை அவரது முகத்தை மிகவும் பொலிவுபெறச் செய்கின்றது. அவர் தனது திருக்கரத்தில் வீணையைத் தாங்கி இன்னிசைகளை எழுப்பிக்கொண்டிருக்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கிறார். அவர் ஜடைகளை தரித்துக்கொண்டிருக்கிறார். அவர் வீணையின் இனிய நாதத்தை அனுபவித்து ஆனந்தமடைகின்றார். இவ்வாறாக ஆநந்த மூர்த்தியான தக்ஷிணா மூர்த்தியை உபாஸிக்கும் யோகிகள் அநாஹத சக்ரத்தில் எழும் இன்னிசையைக்கேட்டு ஆனந்தவெள்ளத்தில் ஆழ்கின்றனர்.

தக்ஷிணாமூர்த்தி, யோகதக்ஷிணாமூர்த்தி, வீணாதக்ஷிணா மூர்த்தி என்று மூன்று ரூபங்கள் உண்டு. தக்ஷிணாமூர்த்தியாக இருந்து வேதாந்த தத்வஞானத்தை உபதேசித்தார். யோகமுறைகளை அனுஷ்டித்துக் காண்பித்த நிலைக்கு யோக தக்ஷிணாமூர்த்தி என்று பெயர். நாரதாதிகளுக்கு வீணை வாசித்துக்காட்டிய நிலைக்கு வீணாதக்ஷிணாமூர்த்தி என்று பெயர். (11)

उपासते यं मुनयः शुकाद्याः निराशिषो निर्ममताधिवासाः ।
तं दक्षिणामूर्तितनुं महेशं उपास्महे मोहमहार्तिशान्त्यै ॥ १२ ॥

உபாஸதே யம் முநய: ஶுகாத்யா:
நிரா்ஶிஷ: நிர்மமதாதிவாஸா: ।
தம் தக்ஷிணாமூர்த்திதநும் மஹேஶம்
உபாஸ்மஹே மோஹமஹார்த்தி ஶாந்த்யை ॥

यं-எவரை, **शुकाद्याः**-சுகர் முதலிய, **मुनयः**-முனிவர்கள், **निराशिषः**-பற்றற்றவர்களாயும், **निर्ममताधिवासाः**-கர்வத்திற்கு இடம் கொடாதவர்களாகவும் இருந்துகொண்டு, **उपासते**-உபாசிக்கின்றார்களோ, **तं**-அந்த, **दक्षिणामूर्तितनुं**-தக்ஷிணாமூர்த்தியின் உருவந்தாங்கிய, **महेशं**-பரமேஶ்வரனை, **मोहमहार्तिशान्त्यै**-மோகமென்ற பெரும் துன்பம் நீங்குவதற்காக, **उपास्महे**-பஜிக்கின்றோம்.

பரமேஶ்வரனை சுகர் முதலிய மகரிஷிகள் உபாசிக்கின்றனர். அவர்களுக்கு மோஹம் இல்லை. அவர்கள் அனைவரும் ஒரு பொருளிலும் ஆசை இல்லாதவர்கள். அவர்கள் தங்களுடைய உள்ளத்தில் அகங்கார மமகாரங்களுக்கு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இடம் கொடாதவர்கள். அவர்கள் பரமேச்வரனை அனவரதமும் உபாஸிப்பதால் பரமாநந்தத்தைப் பெற்று மகிழ்கின்றனர்.

நமக்கோ, மோஹம், ஆசை, அஹங்காரம், இவை இன்னும் நீங்கவில்லை. இவைகளால் ஏற்படும் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். பரமேசனின் அருள் கிடைத்தால் தான் இவை நம்மை விட்டு விலகும். மோஹம் முதலியவை நீங்குவதற்காக தக்ஷிணாமூர்த்தியை உபாஸிப்போம். ஆசை, கர்வம் முதலியவை இல்லாத சுகாதிமுனிவர்களே அவரை உபாஸிக்கும் பொழுது நாம் உபாஸிக்க வேண்டும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? (12)

कान्त्या निन्दितकुन्दकन्दलवपुर्न्यग्रोधमूले वस-
न्कारुण्यामृतवारिभिर्मुनिजनं सम्भावयन्वीक्षितैः ।
मोहध्वान्तविभेदनं विरचयन्बोधेन तत्तादृशा
देवस्तत्वमसीति बोधयतु मां मुद्रावता पाणिना ॥ १३ ॥

காந்த்யா நிந்தித குந்த கந்தல வபுர் ந்யக்ரோதமூலே வஸன்
காருண்யாம்ருதவாரிபிர் முனிஜநம்
ஸம்பாவயன் வீக்ஷிதை: ।
மோஹத்வாந்த விபேதனம் விரசயன் போதேந
தத்தாத்ருஶா
தேவஸ்தத்வமஸீதி போதயது மாம்
முத்ராவதா பாணிநா ॥

कान्त्या-அழகினால், **निन्दित**-பழிக்கப்பட்ட, **कुन्दकन्दलवपुः**-புதியமல்லி அரும்பை உடைய சரீரமுள்ளவரும் **न्यग्रोधमूले**-ஆலமரத்தடியில், **वसन्**-வஸித்துக்கொண்டு, **कारुण्यामृतवारिभिः**-தயை என்னும் அமுதநீர் நிரம்பிய, **वीक्षितैः**-பார்வைகளால், **मुनिजनं**-முனிவர்களை, **सम्भावयन्**-அருளிக்கொண்டும், **तत्तादृशा**-அப்படிப்பட்ட, **बोधेन**-ஆத்ம ஞானத்தால், **मोहध्वान्तविभेदनं**-மோஹமெனும் இருட்டைப் பிளத்தலை, **विरचयन्**-செய்துகொண்டும்இருக்கிற, **देवः**-தக்ஷிணா

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மூர்த்தி, **मुद्रावता**-சின் முத்திரையுடன்கூடிய, **पाणिना**-கையால் **मां**-என்னை, **तत्वमसि**-நீ பரம்பொருளாய் இருக்கிறாய், **इति**-என்று, **बोधयतु**-அறிவுபெறச் செய்யட்டும்.

தக்ஷிணாமூர்த்தி மிகுந்த அழகு வாய்ந்தவர். அவரது திருமேனியின் காந்தி வெண்ணிறம் பொருந்திய மல்லிகையை இகழும் தன்மை வாய்ந்தது. அவர் தன்னைச் சாரும் மாமுனிவர்கள் அனைவரையும் பாராட்டிக்கொண்டு ஆலமரத்தடியில் அமர்ந்திருக்கின்றார் இரக்கத்துடன்கூடிய அவரது பார்வைகள் முனிவர்கள்மீது விழுகின்றன அவைகள் அமுதத்தின் திவிலைகளையே முனிவர்கள்மீது வாரி வீசுவதுபோல் காணப்படுகின்றன. அவர் ஆத்மஞான உபதேசத்தால் மோஹமெனும் இருளை நீக்குகின்றார். அவ்வாறு காட்சிதரும் தக்ஷிணாமூர்த்தி சின்முத்திரையுடன் கூடிய தனது திருக்கரத்தால் தத்வமஸி என்ற மஹாவாக்யார்த்தமான ஜீவப்ரஹ்மைக்ய ஞானம் ஏற்படும்படி அருள் செய்யட்டும். *(13)*

अगौरगात्रैरललाटनेत्रैरशान्तवेषैरभुजङ्गभूषैः ।
अबोधमुद्रैरनपास्तनिद्रैरपूर्णकामैरमरैरलं नः ॥ १४ ॥

அகௌர காத்ரை ரலலாடநேத்ரை –
ரஶாந்தவேஷை ரபுஜங்க பூஷை: ।
அபோதமுத்ரை ரநபாஸ்த நித்ரை –
ரபூர்ண காமை ரமரை ரலம் ந: ॥

अगौरगात्रैः –வெண்மையான சரீரம் இல்லாதவர்களாயும் **अललाटनेत्रैः** –நெற்றிக்கண் அற்றவர்களாயும், **अशान्तवेषैः**-அமைதியைத்தரும் வேஷம் இல்லாதவர்களாயும் **अभुजङ्गभूषैः**-பாம்புகளை அணிகலமாகக்கொள்ளாதவர்களாயும், **अबोधमुद्रैः** –சின்முத்திரை யில்லாதவர்களாயும், **अनपास्तनिद्रैः** –மோஹம் உள்ளவர்களாயும், **अपूर्णकामैः** –நிறைவேறாத மனோரதங்களையுடையவர்களுமான, **अमरैः** –தேவர்களால் **नः** –நமக்கு, **अलम्** –போதும்,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தக்ஷிணாமூர்த்தி அழகிய திருமேனி படைத்தவர். அவரது உடல் களங்கமற்ற சந்திரன்போல் வெண்மை யானது. அவரே பரமேச்வரன் ஆதலால் அவர் நெற்றிக் கண் பெற்று விளங்குகிறார். அக் கண்ணிலிருந்து அக்னி ஜ்வாலைகள் கிளம்புவதால் அவர் பகைவர்கள் அனை வரையும் அழிக்கும் ஆற்றலுடையவர். இவ்வாறு இருப் பினும் அவர் மிகவும் சாந்தஸ்வரூபி. ஆன்மஞானமே உருவெடுத்து விளங்குவதுபோல் காணத்தக்கவர். அவரு டைய திருமேனி அரவங்களால் அழகுபடுத்தப்பட்டுள்ளது. அதனால் அவர் பயங்கரமாயும் ரமணீயமாயும் காட்சியளிக் கின்றார். அவரது திருக்கரத்தில் ஜீவனும் பிரம்மமும் ஒன்றே என்று அறிவுறுத்தும் சின்முத்திரை காணப் படுகின்றது. அவர் என்றும் அஞ்ஞானமென்ற தூக்கத்தை விலக்கி ஆத்மபோதம் என்ற ஜாக்ரதவஸ்தையிலேயே இருக்கின்றார். இவ்வாறு நமது அறியாமையெனும் இருளை நீக்கி நமக்கு ஆன்ம ஒளியை அளிக்கும் சின்மயனை தக்ஷிணாமூர்த்தியையே நாம் போற்றுவோமாக. இக்குணங் கள் அற்ற மற்ற தெய்வங்களைப் போற்றுவதால் யாது பயன்? (14)

दैवतानि कति सन्ति चावनौ नैव तानि मनसो मतानि मे ।
दीक्षितं जडधियामनुग्रहे दक्षिणाभिमुखमेव दैवतम् ॥ १५ ॥

தைவதானி கதி ஸந்தி சாவனௌ
நைவ தானி மநஸோ மதானி மே ।
தீக்ஷிதம் ஜடதியாமநுக்ரஹே
தக்ஷிணாபிமுகமேவ தைவதம் ॥

अवनौ–பூமியில், **कति**–எவ்வளவு, **दैवतानि**–தேவதைகள், **सन्ति**–இருக்கின்றனர்? **तानि**–அவர்கள், **मे**-என்னுடைய, **मनसः**–மனதிற்கு, **नैव मतानि**–உகந்தவர்களாக இல்லவே இல்லை. **जडधियां**–அறிவற்றவர்களுக்கு, **अनुग्रहे**–அருள் புரிவதில், **दीक्षितं**–தீக்ஷைபெற்ற, **दक्षिणाभिमुखमेव**–தென் திசையை நோக்கியிருப்பவரே, **दैवतम्**–தேவதை.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இப்பூவுலகின்கண் எண்ணற்ற தெய்வங்கள் போற்றப் படுகின்றன. ஆனால் அவர்கள் தக்ஷிணாமூர்த்தியைப்போல் ஆன்மஞானத்தையளித்து ஜீவர்களை அஞ்ஞானமெனும் ஆழ்ந்த நித்திரையிலிருந்து எழுப்பும் சக்திவாய்ந்தவர்கள் அல்ல. ஆகையால் அவர்கள் என் மனதிற்கு உகந்தவர்கள் அல்ல. எனக்கு ஆத்மபோதத்தை அளிக்கவல்ல தக்ஷிணா மூர்த்தியே உகந்த தைவம்.

மேற்கண்டவாறு கூறியிருப்பதைக்கொண்டு பகவத் பாதர் மற்ற தெய்வங்களை இகழ்வதாக நினைக்கக்கூடாது. அவர் ஆறு சமயங்களையும் நிலைநாட்டிய ஆசார்ய புருஷர். தக்ஷிணாமூர்த்தியைப் போலவே மற்ற தேவதைகளையும் கொண்டாடுகின்றவர். அவர் மற்ற எல்லா தேவதைகளையும் போற்றுவதற்காகப் பல துதிகளையும் இயற்றியுள்ளார். நமக்குப் பல தெய்வங்களிடத்தும் பக்தி இருப்பினும் நம் மனம் ஒரே ஒரு தெய்வத்தினிடத்து நிலைத்து நிற்க வேண்டும். இம்மாதிரி ஒரே தெய்வத்தை அனவரதமும் தியானிப்பதற்கு "பராபக்தி" என்று பெயர். இவ்வாறு சிறந்த பக்தியுள்ள மகாபுருஷனுக்கு ஆன்மஞானம் எளிதில் கிட்டும். அவனவன் ருசிப்படி இஷ்டதேவதையினிடம் பர பக்தி ஏற்படுவதற்காக ஒவ்வொரு ஸ்தோத்திரத்திலும் அந்த தேவதையே மிகவும் உயர்ந்தது எனக் கூறுவார். **'नहि निन्दा निन्दितुं प्रवृत्ता अपि तु स्तुत्यं स्तोतुं'** என்ற நியாயப்படி நிந்தைபோல் காணப்படும் வாக்யங்களுக்கு தக்ஷிணா மூர்த்தியை ஸ்துதி செய்வதில்தான் தாத்பர்யம். உண்மையில் ஒரே ப்ரஹ்மம்தான் பல உருவம் கொண்ட பல தேவதைகளாகக் காணப்படுகிறது. *(15)*

मुदिताय मुग्धशशिनावतंसिने भसितावलेपरमणीयमूर्तये ।
जगदिन्द्रजालरचनापटीयसे महसे नमोऽस्तु वटमूलवासिने ॥

முதிதாய முக்த ஶஶிநாவதம்ஸிநே
பஸிதாவலேப ரமணீய மூர்த்தயே ।
ஜகதிந்த்ரஜால ரசநா படீயஸே
மஹஸே நமோऽஸ்து வடமூலவாஸிநே ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

मुदिताय-மகிழ்ச்சி உடையவராயும், **मुग्धशशिनावतंसिने**-அழகிய சந்திரனை அணிகலமாகக்கொண்டவராயும், **भसितावलेप**-விபூதியைப் பூசிக்கொண்டிருப்பதால், **रमणीयमूर्तये**-மனதைக்கவரும் தோற்றத்தை உடையவராயும், **जगदिन्द्रजाल**-இவ்வுலகமெனும் மாயையை, **रचनापटीयसे**-உண்டு பண்ணுவதில் ஸாமர்த்தியமுடையவராயும், **वटमूलवासिने**-ஆலமரத்தடியில் அமர்ந்திருப்பவராயும், **महसे**-ஜ்யோதி ஸ்வரூபியாயும் உள்ள தக்ஷிணாமூர்த்திக்கு, **नमः**-வணக்கம், **अस्तु**-இருக்கட்டும்.

தக்ஷிணாமூர்த்தி எப்பொழுதும் ஆனந்தத்துடன் விளங்குபவர். '**मुदितवदनं दक्षिणामूर्तिमीडे**' என்று மற்றோர் இடத்தில் காணப்படுகிறது. அவர் தனது சடைமுடியில் பிறைச்சந்திரனை அணிகலமாகத் தரித்துக்கொண்டுள்ளார். அவர் தனது உடலை விபூதியினால் அலங்கரித்துக்கொண்டிருக்கிறார். அவர் ஓர் சிறந்த மாயாவி. அவர் தன்னுடைய மாயையினால் இவ்வுலகத்தைப் படைத்திருக்கிறார். அவர் தேஜோமயமானவர். அவர் தன்னை அண்டும் பக்தர்களுக்கு ஆன்மஅறிவை அளிக்கும் பொருட்டு ஆலமரத்தடியில் அமர்ந்திருக்கின்றார். அவ்வாறு விளங்கும் தக்ஷிணாமூர்த்திக்கு வணக்கம் செலுத்த நாம் கடமைப்பட்டுள்ளோம்.

இங்கு இவ்வுலகு ஓர் மாயாமயமான படைப்பு என்று கூறப்பட்டுள்ளது. இது **ब्रह्म सत्यं जगन्मिथ्या** என்ற தத்துவத்தைக் காட்டுகின்றது. பரப்ரம்மம் ஒன்றுதான் உண்மை பொருள். இவ்வுலகம் நம் கண்முன் இருப்பதுபோல் தோன்றினும் உண்மையில் இதற்கு அஸ்தித்வம் என்பது கிடையாது. அதாவது இது ஓர் ஜாலம்-சொப்படி வித்யை சொப்படி வித்தைக்காரன் தன்னுடைய சாமர்த்யத்தால் பல பொருள்களை நம் கண்முன் கொண்டுவந்து காட்டுகிறான். ஆனால் அவைகள் உடனேயே மறைந்துவிடுகின்றன. அவைகள் உண்மைப்பொருள்கள் அல்ல. அது போலவே தக்ஷிணாமூர்த்தியும் மிகுந்த சாமர்த்யம் வாய்ந்த ஓர் ஜாலவித்தைக்காரன் தனது மாயா சக்தியினால் இவ்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வுலகத்தைப்படைத்து விடுகின்றான். ஆனால் இது அனைத்தும் மித்யை. நிலையற்றவை. உண்மைப்பொருள் ஒன்றுதான். அதையறிந்தால்தான் நாம் இந்த உலகப் பற்றையறுத்து மோக்ஷத்தையடையலாமென்று போதிப் பதற்காக ஆலமரத்தடியில் அவர் அமர்ந்திருக்கிறார். (16)

व्यालम्बिनीभिः परितो जटाभिः कलावशेषेण कलाधरेण ।
पश्यल्ललाटेन मुखेन्दुना च प्रकाशसे चेतसि निर्मलानाम् ॥

வ்யாலம்பினீபி: பரிதோ ஜடாபி:
கலாவஶேஷேண கலாதரேண ।
பஶ்யல்லலாடேந முகேந்துநா ச
ப்ரகாஶஸே சேதஸி நிர்மலாநாம் ॥

परितः–சுற்றிலும், **व्यालम्बिनीभिः**–தொங்குகின்ற, **जटाभिः**–சடைகளோடும், **कलावशेषेण**–ஓர் பிறையினால் மட்டும் எஞ்சியுள்ள, **कलाधरेण**–சந்திரனோடும், **पश्यल्ललाटेन**–நெற்றிக்கண்ணுடன்கூடிய, **मुखेन्दुना च**–சந்திரன் போன்ற முகத்துடனும், **निर्मलानां**–மாசற்றவர்களுடைய, **चेतसि**–மனதில், **प्रकाशसे**–விளங்குகின்றீர்.

தக்ஷிணாமூர்த்தி தன்னை த்யானம் செய்கின்றவர் களுடைய மனதில் தோற்றமளிக்கின்றார். அவர்கள் தங்களுடைய புண்யகர்மாக்களால் மனதிலுள்ள காமம் முதலான எல்லா அழுக்குகளையும் அகற்றித் தங்களுடைய மனதைப்பரிசுத்தமாக வைத்திருக்கிறார்கள். ஆதலால் அவர்களுடைய மனது ஓர் மாசற்ற கண்ணாடிபோல் ஆகி விடுகின்றது. அப்பொழுது தக்ஷிணாமூர்த்தியின் ஸ்வரூபம் அவர்களது மனதில் பிரதிபலிக்கின்றது. அதுசமயம் அவர் சடைமுடி தரித்தவராயும், பிறைச்சந்திரனைத் தனது தலை யில் தாங்கியவராயும் நெற்றிக்கண்ணைக் கொண்டவராயும், மதிவதனமுடையவராயும் காட்சியளிக்கிறார். (17)

उपासकानां त्वमुमासहायः पूर्णेन्दुभावं प्रकटीकरोषि ।
यदद्य ते दर्शनमात्रतो मे द्रवत्यहो मानसचन्द्रकान्तः ॥ १८ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உபாஸகாநாம் த்வமுமாஸஹாய:
பூர்ணேந்துபாவம் ப்ரகடீகரோஷி ।
யதத்ய தே தர்ஶந மாத்ரதோ மே
த்ரவத்யஹோ மாநஸ சந்த்ரகாந்த: ॥

त्वं-நீர், **उपासकानां**-தன்னை உபாஸிக்கின்றவர்களுக்கு, **उमासहायः**-பரமேச்வரியுடன்கூடியவராய், **पूर्णेन्दुभावं**-பூர்ணமான சந்திரனுடைய தன்மையை, **प्रकटीकरोषि**-வெளிப்படுத்துகின்றீர். **यद्**-எதனால், **अद्य**-இன்று, **ते दर्शनमात्रतः**-உம்மைக்கண்ட மாத்திரத்திலேயே, **मे**-என்னுடைய, **मानसचन्द्रकान्तः**-மனமாகிய சந்திரகாந்தக்கல், **द्रवति**-உருகுகிறது. **अहो**-ஆச்சர்யம்!

இந்த சுலோகத்தில் பகவத்பாதர் ஸ்வானுபவத்தை வர்ணிக்கின்றார். தன்னை உபாஸிக்கின்றவர்களுடைய அகக்கண்முன் பரமேச்வரன் அம்பிகையுடன் கூடியவராய்க் காட்சியளிக்கின்றார். அவர் பூர்ணசந்திரனைப்போன்றவர். பார்ப்பவர்களின் மனதைக் கொள்ளை கொள்ளும் தன்மை வாய்ந்தவர். அவரைக் கண்ட மாத்திரத்தில் பகவத்பாதர் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறார். அதை அவர் ஓர் உருவகத்தின் மூலமாக எடுத்துக்காட்டுகின்றார். அவருடைய மனதுதான் சந்திரகாந்தக்கல். பரமேச்வரனுடைய தோற்றமே சந்திரபிம்பம். ஆதலால் சந்திரபிம்பத்தைக்கண்டு சந்திரகாந்தக்கல் உருகுவதுபோல் பரமேச்வரனுடைய ஸ்வரூபத்தைக்கண்டு ஆசார்யபாதரின் உள்ளமும் உருகிவிடுகிறது. (18)

यस्ते प्रसन्नामनुसंदधानो मूर्तिं मुदा मुग्धशशाङ्कमौलेः ।
ऐश्वर्यमायुर्लभते च विद्यामन्ते च वेदान्तमहारहस्यम् ॥१९॥

யஸ்தே ப்ரஸந்நாமநுஸந்ததாநோ
மூர்த்திம் முதா முக்த ஶஶாங்க மௌளே: ।
ஐஶ்வர்யமாயுர் லபதே ச வித்யாம்
அந்தே ச வேதாந்த மஹாரஹஸ்யம் ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

इति श्रीदक्षिणामूर्तिस्तोत्रं संपूर्णम् ॥

यः-எவன் ஒருவன், **मुग्धशशाङ्कमौलेः**-அழகிய மதியை முடியில் தரித்திருக்கும், **ते**-உம்முடைய, **प्रसन्नां**-மகிழ்ச்சியுடைய, **मूर्तिं**-உருவத்தை, **मुदा**-சந்தோஷத்துடன்கூட, **अनुसंदधानः**-த்யானம் செய்துகொண்டிருக்கிறானோ, **सः**-அவன், **ऐश्वर्यं**-செல்வத்தையும், **आयुः**-நீண்ட ஆயுளையும், **विद्यां**-கல்வியையும், **अन्ते**-கடைசியில், **वेदान्तमहारहस्यं च**-வேதாந்தத்தின் சிறந்த ரஹஸ்யத்தையும், **लभते**-பெறுகிறான்.

பரமேச்வரன் தன் ஜடையில் அழகிய சந்திரகலையை அணிந்துகொண்டிருக்கிறான். அவன் ஆனந்தமயமாகக் காணப்படுகின்றான். இவ்வாறு நித்யானந்தரூபியாகத் தோன்றும் பரமேச்வரனை எவன் ஒருவன் அனவரதமும் அனுஸந்தானம் செய்கின்றானோ, அவன் சகலவிதமான நன்மைகளையும் அடைகிறான். அவன் அளவற்ற செல்வத்தையும், நீண்ட ஆயுளையும், சிறந்த அறிவையும் பெறுகின்றான். கடைசியாக மோக்ஷசாம்ராஜ்யத்தை அளிக்கவல்ல வேதாந்த ரஹஸ்யங்களையும் அறிந்துகொள்கிறான். ஆனந்தமயமான ஸ்வரூபத்தை தியானம் செய்தலால் இவனும் ஆனந்தரூபியாகவே ஆகிவிடுகின்றான்.

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம் முற்றிற்று.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ श्रीः ॥

॥ शिवकेशादिपादान्तवर्णनस्तोत्रम् ॥

ஸ்ரீ சிவகேசாதி பாதாந்தவர்ணன ஸ்தோத்திரம்.

[நிர்குண ப்ரஹ்மத்தை அறிய முடியாதவர்கள் தியானம் செய்வதற்காக உபநிஷத்தில் பலவிதமாக ஸகுண ப்ரஹ்மம் வர்ணிக்கப்படுகிறது. இதற்கும் சக்தியில்லாதவர்களுக்காக புராணங்களில் நம்மைப் போல் கர சரணாதி அவயவங்களுடன் ஈசுவரனுடைய பல மூர்த்திகள் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மூர்த்திகளின் திவ்ய மஹிமைகளைத் தான் எல்லா ஸ்தோத்திரங்களிலும் காணலாம் ஆனால் 33 சுலோகங்களுள்ள இந்த சிவகேசாதி பாதாந்த வர்ணன ஸ்தோத்திரத்தில் பரம சிவனுடைய கேசம் முதல் பாதம் ஈருக ஒவ்வொரு அவயவமும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அதாவது: ஜடை, த்ரிபுண்ட்ரம், நெற்றிக் கண், புருவம், கண்கள், குண்டலம், மூக்கு, கபோலம், அதரம், தந்தபங்க்தி (பற்களின் வரிசை), நாதம், ஹர்ஷஹாஸம், ஐந்து முகங்கள், கழுத்து, காலகூடம், தோர் மூலம், புஜங்கள், மார்பு, உதரம், ஜகனம், துடை, ஜாநு, முழங்கால், ப்ரபதம் (கால்நுனி), விரல்கள், நகம், பாதம், பாததூளி, மஹேசதத்வம், லீலை, உமை என்ற முறையில் ஒவ்வொரு அங்கத்தையும் வர்ணித்து அது எல்லோருக்கும் நன்மை தரும் என்று கூறுகிறார். இதை முழுவதும் படித்து அர்த்தத்தைத் தெரிந்துகொள்வதால் ஈசுவரனுடைய அவயவங்களைத் தனித்தனியாகவும் எல்லாம் சேர்ந்து முழு ஸ்வரூபத்தையும் மனதில் தாரணம் செய்ய அநுகூலமாக இருக்கும். இதேபோன்று பரமசிவனுடைய பாதத்திலிருந்து ஆரம்பித்து ஒவ்வொரு அவயவத்தையும் வர்ணிக்கும் சிவ பாதாதி கேசாந்த வர்ணன ஸ்தோத்திரமும், அப்படியே விஷ்ணு பாதாதி கேசாந்த ஸ்தோத்திரமும் ஆசார்யாளால் இயற்றப்பட்டுள்ளன. இவை பின்னால் வெளியாகும். ஸௌந்தர்யலஹரியிலும் 42வது சுலோகத்திலிருந்து இதே மாதிரி தேவியின் அங்க வர்ணனையைக் காணலாம்.]

(அ) முதல் சுலோகத்தில் பரமேசனுடைய 'கபர்தம்' என்று தனிப்பெயர்பெற்ற ஜடாபாரம் வர்ணிக்கப்படுகிறது:

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

देयासुर्मूर्ध्नि राजत्सरससुरसरित्पारपर्यन्तनिर्य-
त्प्रांशुस्तम्बाः पिशङ्गास्तुलितपरिणतारक्तशालीलता वः ।
दुर्वारापत्तिगर्तश्रितनिखिलजनोद्धारणे रज्जुभूता
घोराघोर्वीरुहालीदहनशिखिशिखाः शर्म शार्वाः कपर्दाः ॥

தேயாஸுர் மூர்த்நி ராஜத் ஸரஸ ஸுரஸரித் பார பர்யந்த நிர்யத்
ப்ராம்ஶு ஸ்தம்பா: பிஶங்காஸ் துலித பரிண தாரக்த ஶாலீலதா வ: ।
துர்வாராபத்தி கர்த்த ஶ்ரித நிகில ஜநோத்தாரணே ரஜ்ஜு பூதா
கோராகோர்வீ ருஹாலீ தஹந ஶிகி ஶிகா: ஶர்ம ஶார்வா: கபர்தா: ॥

मूर्ध्नि–சிரஸில், **राजत्**–விளங்குகின்ற, **सरस**–நீர் நிரம்பிய **सुरसरित्**–கங்கா நதியின், **पार**–கரையின், **पर्यन्त**–சமீபத்திலுள்ள இடங்களில், **निर्यत्**–வளர்கின்ற, **प्रांशु**–உயரமான, **स्तम्बाः**–புல் பூண்டுகளாக விளங்குகின்றவைகளும், **पिशङ्गाः**-மங்கிய செந்நிறமுடையவைகளாயும், **तुलित**–நிகராகச் செய்யப்பட்ட, **परिणत**–பழுத்து, **आरक्त**–சிறிது சிவந்திருக்கின்ற, **शालीलताः**–நெற்கதிர்களை உடையதும், **दुर्वार**–தவிர்க்க முடியாத, **आपत्ति**–ஆபத்தாகிய, **गर्त**–படுகுழியை, **श्रित**–அடைந்த, **निखिल**–எல்லா, **जन**–மக்களையும், **उद्धारणे**–கை தூக்கிவிடுவதில், **रज्जुभूताः**–கயறுகளாக ஆனவைகளாயும், **घोर**–பயங்கரமான, **अघ**–பாபமாகிய, **उर्वीरुह**–மரங்களுடைய, **आली**–வரிசைகளை, **दहन**–எரிப்பதில், **शिखि**–நெருப்பின், **शिखाः**-ஜ்வாலைகளாக விளங்குகின்றதும், **शार्वाः**-சிவபெருமானுடையதுமான, **कपर्दाः**– சடைமயிர்கள், **वः**-உங்களுக்கு, **शर्म**–சுகத்தை, **देयासुः**–கொடுக்கட்டும்.

முதலில் பரமாத்மாவாகிய சிவபெருமானின் சடைகள் வர்ணிக்கப்படுகின்றன. இவைகள் பாபங்களைப் போக்கும் வன்மை வாய்ந்தவைகள். நம் அனைவருக்கும் நன்மை

Sri Vidyabharathi Book Centre, Chennai

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பயக்கும் தன்மை கொண்டவைகள். ஸம்ஸாரமெனும் பாழும் கிணற்றில் தத்தளிக்கும் மானிட வர்க்கத்தைக் கை தூக்கி விடுவதற்குக் கயறுகள் போன்றவைகள். இச்சடைகள் நதிக் கரையின் அருகாமையில் உள்ள இடங்களில் வளரும் புல் பூண்டுகள் என்று உருவகப்படுத்திக் கூறப் பட்டுள்ளன. சிவபெருமான் தன்னுடைய தலையின் மீது நீர் நிரம்பிய கங்கா நதியைத் தாங்கி நிற்கின்றார். அக் கங்கா தேவியே இங்கு சிறந்த ஆறாக விளங்குகின்றது இவ்வாற்றின் அருகாமையிலுள்ள தலை தான் இங்கு செழிப்பு மிகும் வளம் வாய்ந்த நிலம். இதன்மீது வளரும் மங்கிய செந்நிறம் கொண்ட மயிர்களே புல் பூண்டுகள். இவைகள் மிகவும் உயரமாக வளர்ந்துள்ளன. நோய்வாய்ப் பட்டு ஆறாத் துயர் பெறும் மக்களுக்குப் புல் பூண்டுகள் உற்ற மருந்துகளாக ஆகி அவர்களுடைய துன்பத்தை நீக்குகின்றன. அது போலவே இச் சடைகளும் மக்களின் மனத் துயரைப் போக்கும் சக்தியுள்ளவை என்பது இதனால் நன்கு விளக்கப்பட்டுள்ளது. இச்சடைகள் நன்றாக வளர்ந்து பழுப்பு நிறமுள்ளவைகளாகக் காணப்படுவதால் இவைகள் நன்றாக முற்றிய நெற்கதிர்களுக்கு ஒப்பாகக் காணப்படு கின்றன. நெற் கதிர்கள் நமக்கு உணவளித்து நம்மை எவ்வாறு காக்கின்றனவோ அது போலவே இச் சடைகள் நம்மைக் காத்தருளும் என்பது இங்கு புலனாகின்றது. மேலும் நமக்கு எவ்வளவோ இன்னல்கள் ஏற்படுகின்றன. அவைகள் நம்மால் தவிர்க்க முடியாதவைகள். இவைகளே படுகுழிகள். இவைகளில் வீழ்ந்தவர்களைக் கரையேற்ற ஓர் பெரும் கயிறு அவசியமாக இருக்கின்றது. சிவபெருமானின் சடைகளே நம்மைக் கரையேற்றும் கயிறுகளாக இருந்து நம்மை ஆபத்திலிருந்து காப்பாற்றுகின்றன. மேலும் பயங்கரமான பாபங்கள் தான் கொடிய மரங்கள். சிவபெருமானின் செஞ்சடைகள் தான் தீக்கனல்கள். தீப் பொறிகள் செந்நிறமுள்ளவை யாதலால் சிவபெருமானின் செஞ்சடைகளைத் தீக்கனல்களாக உருவகப்படுத்திக் கூறப் பட்டுள்ளது. அக்னி ஜ்வாலைகள் காடுகளை எரித்துச் சாம்பலாகச் செய்கின்றன. அது போலவே இச் சடைகள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கொடிய பாபங்களாகிய மரங்களை எரித்துச் சாம்பலாகச் செய்து விடுகின்றன. இவ்வாறு விளங்கும் பரமேச்வர னுடைய சடைகள் நமக்கு மங்களங்களை வழங்க வேண்டு மென்று ஆசார்யபாதர் இங்கு வேண்டுகின்றார்.

இச் சுலோகம் ஸ்ரக்தரா என்ற விருத்தத்தில் அமைந் துள்ளது. இதில் பல அணிகளும் த்வனிப் பொருள்களும் நிறைந்துள்ளன. கங்கா நதி மிகுந்த விஸ்தாரமுள்ளது. அது சிவபெருமானின் தலையில் ஓர் பாகத்தில் இருப்பதாக வர்ணிக்கப்பட்டுள்ளது. ஆனால் சடைகளோ எனில் நதி யின் ஓரத்திலுள்ள இடங்களில் விஸ்தாரமாக வளர்ந்துள் ளன. இவ்வளவுக்கும் இடமாகத் தோன்றும் தலை கங்கை யைக் காட்டிலும் பெரியதாகத் தோன்றுகின்றது. ஆதலால் இங்கு அதிகம் என்ற அணி வ்யங்கியமாகத் தோன்றுகின் றது. இது உருவகத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளது. மேலும் சிவபெருமானுடைய சடைகள் ஆபத்தெனும் குழியில் விழுந்தவர்களை வெளியே எடுக்கும் கயிறுகள் என்று உருவகப் படுத்திக் கூறப்பட்டுள்ளது. இதனால் அச் சடைகளைத் தாங்கி நிற்கும் சிவபெருமான் நம் அனைவ ரையும் ஆபத்திலிருந்து காக்க வல்லவர் என்ற வ்யங்க் யார்த்தம் வெளிப்படுகின்றது.

இதனால் ஸம்ஸார மெனும் துன்பக் கடலில் ஆழ்ந்த வர்கள் அதிலிருந்து கரையேறுவதற்காகச் சிவபெருமா னின் சடைகளைத் துதித்தல் வேண்டும். அதனால் மகிழ் வுற்ற பரமேச்வரன் அவர்களிடம் பரிவு காட்டி அவர்களை அக் கடலில் ஆழ்ந்து அமிழாவண்ணம் காத்தருள் புரிகிறார் என்று விளங்குகிறது.

இந்த சுலோகத்தில் सरसमुरस என்பதிலும் शिखिशिखा என்பதிலும் அனுப்ராஸம் என்ற ஒலி அணியும் மற்றவை களில் உவமை, உருவகம், அதிகம் முதலிய பல அணிகளும் அமைந்துள்ளன. இதில் முக்யமாக ஆசீ என்ற அணி உள்ளது என்று ப்ராசீந ஆசார்யர்களின் கருத்து. இது உருவகத்துடன் கலந்திருப்பதால் கலப்பணியாகிறது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மேலும் எது இன்பத்தை அளிக்கின்றதோ அதுவே தனக்கோ அல்லது மற்றவர்களுக்கோ சுகத்தை அளிப்ப தற்காகத் துதிக்கப்படுகின்றது. இங்கு சடைகள் சுகத்தை அளிப்பதற்காகத் தோத்தரிக்கப்படுகின்றன. அதனுல் கபர்த சப்தம் யோகரூடமானது. கேவலரூடமல்ல என்ற வ்யங்க்யத்தால் அலங்காரத்தின் மூலம் பொருள் வ்யங்க்யத்தை அடைகின்றது. (1)

(அ) நெற்றியில் காணும் த்ரிபுண்ட்ரம், அதாவது விபூதியாலான மூன்று பட்டைகளை வர்ணிக்கிருர் :—

कुर्वन्निर्वाणमार्गप्रगमपरिलसद्रूप्यसोपानशङ्कां
शक्रारीणां पुराणां त्रयविजयकृतस्पष्टरेखायमाणम् ।
अव्यादव्याजमुच्चैरलिकहिमधराधित्यकान्तस्त्रिधोद्य-
ज्जाह्नव्याभं मृडानीकमितुरुडुपरुक्पाण्डरं वस्त्रिपुण्ड्रम् ॥

குர்வந் நிர்வாண மார்க ப்ரகம பரிலஸத் ரூப்ய
ஸோபாந ஶங்காம்
ஶக்ராரீணும் புராணும் த்ரயவிஜய க்ருத
ஸ்பஷ்ட ரேகாயமாணம் ।
அவ்யாதவ்யாஜமுச்சை ரலிக ஹிமதராதித்ய காந்த
ஸ்த்ரிதோத்ய-
ஜ்ஜாந்ஹவ்யாபம் ம்ருடாநீகமிதுருடுபருக்
பாண்டரம் வஸ்த்ரிபுண்ட்ரம் ॥

निर्वाणमार्ग–மோக்ஷ மார்க்கத்திற்கு, **प्रगम** –சுலபமாகச் செல்லும், **परिलसत्** –விளங்குகின்ற, **रूप्यसोपान**–வெள்ளிப் படிக்கட்டுகளின், **शङ्कां**–ஸந்தேகத்தை, **कुर्वन्** -செய்து கொண்டும், **शक्रारीणां**–இந்திரனின் பகைவர்களான அரக்கர் களுடைய, **पुराणां**- பட்டினங்களின், **त्रय**-மூன்றையும், **विजय**- ஜயித்ததால், **कृत**–செய்யப்பட்ட, **स्पष्ट**–வெளிப்படையான, **रेखायमाणम्** –அடையாளக் கோடுகளாய்க் காட்சியளிக்கின் றவைகளாயும், **उच्चैः** -உயரமான, **अलिक**–நெற்றியாகிய,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

हिमधराधित्यक-இமயமலையின் சாரலின், अन्तः-நடுவில், त्रिधोद्यत्-மூன்ருகக் கிளம்புகின்ற, जाह्नव्याभ-கங்கையைப் போன்றதும், उडुपरुक्पाण्डरं-சந்திரனுடைய ஒளியைப்போல் வெண்மையானதுமான, मृडानीकमितुः-பார்வதியின் பதியான பரமேச்வரனுடைய, त्रिपुण्ड्रम्-விபூதிப்பட்டையின் முக்கோடுகள், वः-உங்களை, अव्याजं-உண்மையாக, अव्यात्-காப்பாற்றட்டும்.

சிவபெருமானுடைய பரந்த நெற்றியின் கண் மூன்று விபூதிப்பட்டைகள் மின்னிக்கொண்டிருக்கின்றன. அவைகளை நன்கு த்யானம் செய்யும் பக்தர்கள் இம் மண்ணுலகை விட்டுச் செல்லும்போது மோக்ஷத்தை அடைகின்றனர். ஆகையால் இந்த விபூதிப்பட்டைகளே இங்கு மோக்ஷ மார்க்கத்தின் படிக்கட்டுகளாக வர்ணிக்கப்பட்டுள்ளன. இவ்வுலகில் உயர்ந்த இடங்களைச் சுலபமாக அடையும் பொருட்டுக் கற்களாலும் மற்றும் மரம் முதலிய ஸாதனங்களாலும் நல்ல படிக்கட்டுகள் அமைக்கப்படுகின்றன. அதுபோலவே மோக்ஷம் என்பது ஓர் உயர்ந்தநிலை. அதை அடைந்தவன் மறுபடியும் இம்மண்ணுலகை அடைவதில்லை. அவ்வாருன ஓர் உயர்ந்த நிலையை அடையப் பரமேச்வரனுடைய நெற்றியில் அழகான மூன்று படிகள் கட்டப்பட்டு உள்ளன. அவைகள் வெண்மையான விபூதியால் செய்யப்பட்டுள்ளதால் வெள்ளியால் கட்டப்பட்டவைகள் போல் காட்சியளிக்கின்றன. மேலும் பரமேச்வரனுடைய திருமேனி இமய பர்வதம்போல் உன்னதமானது. அவரது நெற்றியோ அப்பர்வதத்தின் ஓர் பெரிய சாரல் போல் தோற்றமளிக்கின்றது. இமயமலையில் கங்கைபெருகி மூன்ருகப் பிரிவது போல் இவரது நெற்றியில் திகழும் மூன்று பட்டைகளும் விளங்குகின்றன.

பரமேச்வரன் ஒரு தடவை தேவர்களுக்குப்பகைவர்களான அஸுரர்களின் முப்புரங்களையும் எரித்துச் சாம்பலாக்கினுர். மூன்று பட்டிணங்களையும் அழித்து அஸுரர்களை ஜயித்ததற்கு அடையாளமாக அவர் மூன்று கோடுகளைத் தனது நெற்றியில் வரைந்துகொண்டிருக்கின்ருர்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

போலும். இம்முப்பட்டை சந்திரனுடைய காந்தியைப்போல் பிரகாசித்துக்கொண்டு பார்ப்பவர்களின் உள்ளத்தெழும் மூன்று தாபங்களையும் நீக்கவல்லதாய்த் தோற்றுகின்றது. இவ்வாறாகத் திகழும் உமாகாந்தனின் விபூதிப்பட்டை பக்தர்கள் அனைவரையும் காத்தருளவேண்டும். (2)

(அ) காமாந்தகனின் நெற்றிக்கண் வர்ணிக்கப்படுகிறது:—

क्रुध्यद्गौरीप्रसादानतिसमयपदांगुष्ठसंक्रान्तलाक्षा-
बिन्दुस्पर्धि स्मरारेः स्फटिकमणिदृषन्मग्नमाणिक्यशोभम्।
मूर्ध्न्युद्यद्दिव्यसिन्धोः पतितशफरिकाकारि वो मास्तकं स्ता-
दस्तोकापत्तिकृत्त्यै हुतवहकणिकामोक्षरूपं सदाऽक्षि ॥

க்ருத்யத் கௌரீ ப்ரஸாதாநதிஸமய பதாங்குஷ்ட
ஸங்க்ராந்த லாக்ஷா
பிந்து ஸ்பர்தி ஸ்மராரே: ஸ்படிக மணித்ருஷந் மக்ந
மாணிக்ய ஶோபம் ।
மூர்த்ந்யுத்யத் திவ்யஸிந்தோ: பதித ஶபரிகாகாரி வோ
மாஸ்தகம் ஸ்தாத்
அஸ்தோகாபத்தி க்ருத்த்யை ஹுதவஹ கணிகா
மோக்ஷரூக்ஷம் ஸதாऽக்ஷி ॥

क्रुध्यत्-கோபமடைகின்ற, **गौरीप्रसाद**-பார்வதியை மகிழ்விக்கும் பொருட்டு, **आनतिसमय**-வணங்கும் காலத்தில், **पदाङ्गुष्ठ**-கால்கட்டை விரலினின்றும், **संक्रान्त**- படிந்த, **लाक्षा**-செம்பஞ்சுக்குழம்பின், **बिन्दुस्पर्धि** – திவிலையைப்போன்று விளங்குகின்றதாயும், **स्फटिकमणिदृषत्** – ஸ்படிகமென்னும் இரத்தினக்கல்லில், **मग्न** – பதிந்திருக்கும், **माणिक्यशोभम्**-மாணிக்கத்தின் அழகு வாய்ந்ததும், **मूर्ध्नि**-தலையில், **उद्यत्**-பெருகுகின்ற, **दिव्यसिन्धोः**–கங்கா நதியிலிருந்து, **पतित**-விழுந்த, **शफरिकाकारि**-மீனின் தோற்றத்தை உடையதாயும் **हुतवह**–நெருப்பின், **कणिका**–துணுக்குகளை, **मोक्ष**-விடுவதால்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

रूक्ष्-கடுமையான தாயும், मास्तकं-நெற்றியில் உள்ள துமான, स्मरारेः - பரமசிவனுடைய, अक्षि-கண், सदा-எப்பொழுதும் वः - உங்களுக்கு, अस्तोकापत्ति-பெரும் ஆபத்துக்களை, कृत्यै-நாசம் செய்வதற்காக, स्तात्-இருக்கட்டும்.

இங்கு பரமேச்வரனுடைய நெற்றிக்கண் வர்ணிக்கப் பட்டுள்ளது. அது செந்நிறம் உடையதாக இருக்கிறது. அதனால் அது பார்வதியின் கால் கட்டைவிரலில் தீட்டப் பட்டிருக்கும் செம்பஞ்சுக்குழம்பின் திவிலைபோல் காணப்படு கிறது. சில சமயங்களில் உலகத்தின் தாய்தந்தையர் களான பார்வதீ பரமேச்வரர்களுக்குள் ஊடல் உண்டாகும். அப்பொழுது தேவீ பரமேச்வரனிடம் கோபித்துக்கொள் வாள். அவளைச் சமாதானம் செய்ய எண்ணி பரமேச்வரன் அவளது திருவடிகளில் பண்ரிவான். அவ்வாறு அவன் பணியும்பொழுது தேவியின் திருக்கால்களில் தீட்டப்பட்ட செம்மஞ்சுக்குழம்பின் திவிலைதான் நெற்றியில் ஒட்டிக் கொண்டு கண் உருவத்தில் காக்ஷி அளிக்கிறதோ என்கிறார்.

மேலும் பரமேச்வரனுடைய நெற்றி ஸ்படிகம் போல் வெளுப்பானது. அதன் மத்தியில் உள்ள கண் ஸ்படிகக் கல்லில் பதித்திருக்கும் மாணிக்கத்தைப் போன்று சிகப்பு நிறத்துடன் பொலிவு பெற்று விளங்குகின்றது. சிவ பெருமான் தம் சடையில் கங்கா தேவியைத் தாங்கி நிற்கின்றார். அந்நதியில் அநேக மீன்கள் விளையாடிக் கொண்டிருக்கின்றன. அவைகளிலிருந்து ஓர் மீன் அவரது நெற்றியில் வீழ்ந்து கிடப்பது போல் அவரது கண் காட்சி அளிக்கின்றது. மீன் போல் அவரது கண் பக்தர்களிடம் பரிவு காட்டி அவர்கள் துன்பங்களைக் களைந்து இன்புறச் செய்கின்றது. இவ்வாறு இருப்பினும் அவரது கண்ணி லிருந்து தீப்பொறிகள் பறக்கின்றன. அதனால் அது பார்ப் பதற்கு மிகவும் பயங்கரமாகத் திகழ்கின்றது. இவ்வாறு கூறுவதால் சிவபெருமானது கண் தீய எண்ணம் கொண் டவர்களை எரித்துச் சாம்பலாக்கும் வன்மை வாய்ந்த தென்பது தெளிவாகக் காணப்படுகின்றது. இவ்வாறு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

விளங்கும் சிவபெருமானுடைய கண் நமக்கு உண்டாகும் இன்னல்கள் அனைத்தையும் களைந்து மகிழ்ச்சியைத் தர வேண்டும். (3)

(அ) பரமேசரின் இருபுருவங்களை வர்ணிக்கிறார்:—

भूत्यै दृग्भूतयोः स्याद्यदहिमहिमरुग्बिम्बयोः स्निग्धवर्णो
दैत्यौघध्वंसशंसी स्फुटमिव परिवेषावशेषो विभाति ।
सर्गस्थित्यन्तवृत्तिर्मयि समुपगतेतीव निर्वृत्तगर्वं
शर्वाणीभर्तुरुच्चैर्युगलमभिदधद्विभ्रमं तद्भ्रुवोर्वः ॥ ४ ॥

பூத்யை த்ருக்பூதயோ: ஸ்யாத் யதஹிம ஹிமருக் பிம்பயோ: ஸ்நிக்த வர்ணோ
தைத்யௌக த்வம்ஸ ஶம்ஸீ ஸ்புடமிவ பரிவேஷாவஶேஷோ விபாதி ।
ஸர்க ஸ்தித்யந்த வ்ருத்திர் மயி ஸமுபகதேதீவ நிர்வ்ருத்த கர்வம்
ஶர்வாணீ பர்த்துருச்சைர் யுகலமபிதத் விப்ரமம் தத் ப்ருவோர் வ: ॥

सर्गस्थित्यन्तवृत्तिः-படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலும், मयि-என்னிடத்தில், समुपगता-நன்கு வந்துள்ளது, इति-என்று, निर्वृत्तगर्वमिव-கர்வமடைந்தது போல், उच्चैः-உயர்ந்த, विभ्रमं-விலாஸத்தை, अभिदधत्-பெற்று விளங்கும், शर्वाणीभर्तुः-பார்வதியின் பதியான பரமேச்வரனுடைய, यत्-எந்த புருவங்களின் ஜோடி, दृग्भूतयोः-(சிவனுக்கு) கண்களாக அமைந்துள்ள, अहिमहिम-रुग्बिम्बयोः-சூர்யன் சந்திரன் இவர்களுடைய மண்டலங்களின், स्निग्धवर्णः-மிகுந்த ஒளியுடையதாய், दैत्यौघध्वंस-शंसी-அரக்கர்கள் குழாத்தின் அழிவைக்காட்டும், परिवेषाव-शेषः इव-பாதிவட்டம் போல, स्फुटं-தெளிவாக, विभाति-விளங்குகின்றதோ तत्-அந்த, भ्रुवोः युगलं-இரு புருவங்கள் वः-உங்களுடைய, भूत्यै-செல்வத்திற்காக, स्यात्-இருக்கட்டும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உலகிற்கு ஒளியைத் தந்து இருளை நீக்கும் சூரியனும் சந்திரனும் பரமேச்வரனுக்கு இரண்டு கண்களாக அமைந்துள்ளனர். அவைகளின் மேல் விளங்கும் இரு புருவங்களும் ஸூரிய மண்டலத்தையும் சந்திர மண்டலத்தையும் சுற்றிலும் காணப்படும் வட்டத்தின் பாதி (பாதி வட்டம்) போல் ஒளியுடன் விளங்குகின்றன. இது அரக்கர் கூட்டத்தின் அழிவுக்கு அறிகுறியாக இருக்கிறது.

இப் புருவங்களே ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களையும் செய்கின்றன. அதாவது சிவபெருமான் தம் புருவங்களை அசைத்தமாத்திரத்திலேயே உலகனைத்தும் உண்டாகிறது. இருக்கிறது. முடிவடைகிறது. புருவங்களை அசைப்பதைத் தவிர இதற்காக ஈசுவரன் வேறு ஒரு காரியமும் செய்வதில்லை. இதே அபிப்ராயத்தை ஸௌந்தர்ய லஹரியிலும் 'तवाज्ञामालम्ब्य क्षणचलितयोर्भ्रूलतिकयोः' (சு. 24) என்று கூறியுள்ளார். இவ்வாறு இம்முத்தொழில்களையும் தாங்களே செய்து வருவதால் மிகக் கர்வம் கொண்டு இரு புருவங்களும் உயர்ந்த இடத்தில் அமர்ந்திருக்கின்றன. இவ்வாறு விளங்கும் சிவபெருமானுடைய இரு புருவங்களும் எல்லாப் பிராணிகளுக்கும் ஐசுவர்யத்தைக் கொடுக்கட்டும். (4)

(அ) அரக்கர் கூட்டத்தை அழிக்கும் சஸ்திரம்போல் விளங்கும் இரு கண்களை வர்ணிக்கிறார்—

युग्मे रुक्माब्जपिङ्गे रह इव पिहिते द्राग्ययोः प्राग्दुहित्रा
शैलस्य ध्वान्तनीलाम्बररुचिरबृहत्कञ्चुकोऽभूत्प्रपञ्चः ।
त्र्यक्षस्यैते पवित्रे त्रिदशवरघटामित्रजैत्रोग्रशस्त्रे
नेत्रे नेत्रे भवेतां द्रुतमिह भवतामिन्द्रियाश्वान्नियन्तुम् ॥

யுக்மே ருக்மாப்ஜபிங்கே ரஹ இவ பிஹிதே த்ராக்
யயோ: ப்ராக் துஹித்ரா
ஶைலஸ்ய த்வாந்த நீலாம்பர ருசிர ப்ருஹத்
கஞ்சுகோ ऽபூத் ப்ரபஞ்ச: ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

த்ர்யக்ஷஸ்யைதே பவித்ரே த்ரிதஶ்வர கடாமித்ர
ஜைத்ரோக்ர ஶஸ்த்ரே
நேத்ரே வேத்ரே பவேதாம் த்ருதமிஹ பவதா
மிந்த்ரியாஶ்வாந் நியந்தும் ||

रुक्माब्जपिङ्गे-பொற்றாமரைபோல் பிங்கநிறமுள்ள, **ययोः**-எந்த இரண்டு கண்களுடைய, **युग्मे**-ஜோடிகளும், **शैलस्य**-மலையின், **दुहित्रा**-மகளால் (பார்வதியால்) **प्राक्**-முன்னால் **रह इव**-தனிமையில் போல, **द्राक्**-விரைவில், **पिहिते सति**-மூடப்பட்டவுடன், **प्रपञ्चः**-உலகம், **ध्वान्त**-இருளாகிய, **नीलाम्बर**-நீல வர்ணமுள்ள ஆடையினாலான, **रुचिर**-அழகிய, **बृहत्**-பெரிய, **कञ्चुकः**-சட்டையையுடையதாக, **अभूत्**-ஆயிற்றோ. **पवित्रे**-புனிதமாயும், **त्रिदशवरघटा**-சிறந்த தேவர்களின் கூட்டத்திற்கு, **अमित्र**-பகைவர்களான ராக்ஷஸர்களை **जैत्र**-ஜயிக்கின்ற, **उग्र**-பயங்கரமான, **शस्त्रे**-ஆயுதங்களாகத் திகழும், **त्र्यक्षस्य**-முக்கண்ணனுடைய, **एते नेत्रे**-இவ்விரு கண்களும், **इह**-இங்கு **भवतां**-உங்களுக்கு, **द्रुतं**-விரைவில், **इन्द्रियाश्वान्**-புலன்களாகிய குதிரைகளை, **नियन्तुं**-அடக்குவதற்கு, **वेत्रे**-சாட்டைகளாக, **भवेताम्**-ஆகட்டும்.

ஓர் சமயம் பார்வதீ தேவி பரமேச்வரனுடைய இரு கண்களையும் தன் கைகளால் பொத்தினாள். உலகனைத்திற்கும் ஒளி தந்து இருளைநீக்கவல்ல அவ்விருகண்களும் மூடப்பட்டவுடன் எங்கும் இருள் சூழ்ந்தது. ஏனெனில் சூர்ய சந்திரர்கள்தான் பரமேச்வரனுடைய இரு கண்கள். இவைகள் பொன்கள்போல் பொலிவுடன் விளங்குகின்றவை. இவைகள் மறைக்கப்பட்டவுடன் உலகம் ஒளியிழந்தது. எங்கும் இருள் சூழ்ந்து கிடந்தது. இதைக்காணும்பொழுது நீலநிறமுள்ள ஓர் பெரிய ஆடையை இவ்வுலகம் போர்த்திக் கொண்டிருக்கிறதோ என்ற ஐயம் எழுகின்றது. இவ்விரு கண்களும் தேவர்களின் பகைவர்களாகிய அரக்கர்களை அழிக்கும் ஆயுதங்களாக விளங்குகின்றன. சிவபெருமான் கோபத்துடன் அரக்கர்களைப் பார்க்கும்பொழுது அவரது

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கண்களிலிருந்து கிளம்பும் அக்னி ஜ்வாலைகள் அவர்களை எரித்துச்சாம்பலாக்கிவிடுகின்றன. இங்ஙனம் சக்தியுடன் கூடிய கண்கள் புலன்களாகிய குதிரைகளை நல்ல வழியில் ஓட்டிச் செல்லும் சாட்டைகளாக விளங்கட்டும். "इन्द्रियाणि हयानाहुः" என்று கடோபநிஷத்து கூறுகிறது. குதிரைகள் வண்டியை இழுத்துக் கொண்டு செல்வது போல புலன்கள் சரீரத்தையும் அதில் வீற்றிருக்கும் ஆத்மாவையும் இழுத்துச் செல்கின்றன. குதிரைகளைக் கெட்ட வழியில் போகாமல் தடுப்பதற்குச் சாட்டை அவசியமானது. அச்சாட்டையால் அவைகளை அடக்கித் தேர்ப்பாகன் அவைகளைச் சரியான வழியில் ஓட்டிச் செல்லுகிறான். அதனால் தேர் குறித்த இடத்திற்குப் போய்ச் சேருகிறது. அது போலவே சிவ பெருமானுடைய கடாக்ஷம் நம்முடைய புலன்களாகிய குதிரைகளை நல்வழியில் அழைத்துச் செல்கிறது. அதனால் நாம் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தைப் பெறுகிறோம்.

'யானைக்கூட்டம்' என்ற பொருள் உள்ள 'கடா' (घटा) என்ற சொல்லை உபயோகப்படுத்தியதிலிருந்து ஓர் விசேஷக் கருத்து வெளியாகிறது. அதாவது, தேவர்களை யானைகளாகக் கூறியதால் அவர்களின் எதிகளான அரக்கர்கள் ஸிம்மங்கள் என்பது தானாகவே கிடைக்கிறது. இதனால் ஒருவராலும் வெல்ல இயலாத இராக்கதர்களைச் சிவபெருமான் தன்னுடைய கொடிய பார்வையாலேயே கொன்று விடுகிறான் என்று புலனாகின்றது. இவ்வாறு கடா என்ற சொல் சிவபெருமானுடைய ஒப்பற்ற மஹிமையைக் காட்டுகிறது. மேலும் கடா என்ற சொல்லுக்கு ஸபை என்றும் பொருள் கொள்ளலாம். இதனால் அஸுரர்கள் தேவர்களை எங்கும் விரட்டியடிப்பதால் அவர்கள் ஒன்றுசேர முடியவில்லை. ஸபை கூட்ட முடியவில்லை. அஸுரர்களுக்குப் பயந்துகொண்டு தேவர்கள் எங்கெங்கேயோ தனித்தனியாக மறைந்து வஸிக்கிறார்கள். இவ்வளவு பலமிக்க அரக்கர்களையும் தம் பார்வை ஒன்றாலேயே அழித்து விடுகின்றார் பரமசிவன் என்று புலனாகிறது. இங்கு உபமாத்வனி நன்கு விளங்குகின்றது. (5)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

(அ) ரத்ன குண்டலங்களை வர்ணிக்கிறுர் :—

चण्डीवक्त्रार्पणेच्छोस्तदनु भगवतः चण्डरुक्पाण्डुगण्ड-
प्रोद्यत्कण्डूर्विनेतुं वितनुत इव ये रत्नकोणैर्विघृष्टिम् ।
चण्डार्चिर्मण्डलाभे सततनतजनध्वान्तखण्डातिशौण्डे
चाण्डीशे ते श्रियास्तामधिकमवनताखण्डले कुण्डले वः ॥

சண்டீ வக்த்ரார்ப்பணேச்சோஸ் ததநு பகவத:
சண்டருக் பாண்டு கண்ட
ப்ரோத்யத் கண்டூர் விநேதும் விதநுத இவ யே
ரத்நகோணைர் விக்ருஷ்டிம் |
சண்டார்ச்சிர்மண்டலாபே ஸதத நத ஜந த்வாந்த
கண்டாதி ஶௌண்டே
சாண்டீஶே தே ப்ரியாஸ்தாமதிகமவநதாகண்டலே
குண்டலே வ: ||

चण्डीवक्त्रार्पणेच्छोः-பார்வதீ தேவியின் முகத்தை முத்தமிட விரும்புகின்ற, भगवतः-பரமேச்வரனுடைய, ये-எந்தக்குண்டலங்கள், चण्डरुक्-சூரியன் போல், पाण्डुगण्ड-ஒளியுள்ள கன்னங்களில், प्रोद्यत्-உண்டாகின்ற, कण्डूः-தினவுகளை, विनेतुं-போக்குவதற்கு, रत्नकोणैः-இரத்தினங்களின் ஓரங்களால், विघृष्टिं-உராய்தலை, वितनुत इव (स्थिते)-செய்கின்றவை போல் (இருக்கின்றனவோ) तदनु-பிறகு, चण्डार्चिर्मण्डलाभे-சூர்யமண்டலத்தைப்போல் தேஜோமயமாகக் காணப்படுகின்றவைகளும், सतत-எப்பொழுதும் नतजन-வணங்குகின்ற ஜனங்களுடைய, ध्वान्त-அறியாமையெனுமிருளை, खण्डातिशौण्डे-போக்குவதில் மிகவும் சாமர்த்தியம் வாய்ந்தவைகளாயும், अवनताखण्डले-வணங்கப்பட்ட இந்திரனையுடையவைகளாயும், चाण्डीशे-சிவபெருமானுடையதுமான, ते कुण्डले-அந்த இருகுண்டலங்களும், अधिकं-மிகவும், वः-உங்களை, श्रियास्ताम्-போஷிக்கட்டும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பரமேச்வரனுடைய இரு குண்டலங்களும் மிகவும் தேஜோமயமாய் விளங்குகின்றன. அவை பலவகையான ரத்னங்கள் பதிக்கப்பட்டுள்ளன. இந்த அழகிய அணிகளை அணிந்த பரமேச்வரன் பார்வதி தேவியின் முகத்தில் முத்தமிட விரும்புகின்றார். அவர் அணிந்திருக்கும் குண்டலங்கள் அசையும்பொழுது அவைகளில் பதிக்கப் பட்டிருக்கும் இரத்தினங்களின் கூர்மையான நுனிகள் கன்னங்களில் உராய்கின்றன. இதனால் இவைகள் பரமேச்வரனுடைய கன்னங்களில் உண்டாகும் அரிப்பைப் போக்குகின்றதுபோல் காணப்படுகின்றன. இவைகள் சூர்ய மண்டலத்தைப்போல் தேஜோமயமாய் விளங்குகின்றன. சூர்யன் உலகத்தில் தோன்றும் இருளை நீக்கி ஒளியைப் பரப்புகிறான். இக்குண்டலங்களோவெனில் மக்கள் மனதில் படிந்துகிடக்கும் அக்ஞானம் என்னும் இருளை அகற்றி ஞானமென்ற ஒளியைத் தந்து அருள்கின்றன. தேவாதி தேவனாகிய இந்திரனும் இக்குண்டலங்களை வணங்கி வழி படுகின்றான். இவ்வாறு விளங்கும் பார்வதீபதியான பரமேச்வரனுடைய குண்டலங்கள் நம்மை நன்கு போஷிக் கட்டும். (6)

(அ) பரமசிவனின் மூக்கு வர்ணிக்கப்படுகிறது:—

खट्वाङ्गोदग्रपाणेः स्फुटविकटपुटो वक्त्ररन्ध्रप्रवेश-
प्रेप्सूदञ्चत्फणोरुश्वसदतिधवलाहीन्द्रशङ्कां दधानः ।
युष्माकं कम्रवक्त्राम्बुरुहपरिलसत्कर्णिकाकारशोभः
शश्वत्प्राणाय भूयादलमतिविमलोत्तुङ्गकोणः स घोणः ॥

கட்வாங்கோதக்ர பாணே: ஸ்புட விகட புடோ வக்த்ர ரந்த்ர ப்ரவேஶ
ப்ரேப்ஸூதஞ்சத் பணோரு ஶ்வஸததி தவளாஹீந்த்ர ஶங்காம் ததாந: ।
யுஷ்மாகம் கம்ர வக்த்ராம்புருஹ பரிலஸத் கர்ணிகாகார ஶோப:
ஶஶ்வத் ப்ராணாய பூயாதலமதிவிமலோத்துங்க கோண: ஸ கோண: ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

खट्वाङ्गोदग्रपाणेः-தன்னுடைய உயர்ந்த கையில் யோச தண்டத்தையுடைய பரமேச்வரனுடைய, **स्फुटविकटपुटः**-மிகவும் விசாலமான அழகிய துவாரங்களையுடையதும், **वक्त्ररन्ध्र**-வாய் என்ற பொந்தில், **प्रवेश**-நுழைவை, **प्रेप्सु**-அடைய வேண்டுமென்ற ஆசையால், **उदञ्चत्फण**-தூக்கிய படத்தையுடையதும், **उरुश्वसत्**-அதிகமாக மூச்சுவிடுகின்றதுமான. **अतिधवल**-மிகவும் வெளுப்பான, **अहीन्द्रशङ्कां**-ஸர்ப்பராஜனின் சந்தேகத்தை, **दधानः**-உண்டு பண்ணுகின்றதும், **कम्र**-அழகிய, **वक्त्राम्बुरुह**-முகமாகிய தாமரை மலரினுள், **परिलसत्**-விளங்கும், **कर्णिकाकारशोभः**-தாமரைக் காயின் உருவம் போல் பிரகாசிக்கின்றதும், **अतिविमल**-மிகவும் ஸ்வச்சமாயும், **उत्तुङ्ग**-உயரமாயும் உள்ள, **कोणः**-நுனியையுடையதுமான, **सः घोणः**-அந்த மூக்கு, **युष्माकं**-உங்களுக்கு, **शश्वत्**-எப்பொழுதும், **अलं**-மிகுந்த, **प्राणाय**-பலத்திற்காக, **भूयात्**-ஆகட்டும்.

பரமேச்வரன் யோகதண்டத்தைத் தன்னுடைய கையில் வைத்துக்கொண்டிருக்கின்றார். அவருடைய மூக்கு மிகவும் விசாலமான துவாரங்களையுடையது. அது படத்தை விரித்துக்கொண்டும் சீரிக்கொண்டும் பரமேச்வரனுடைய வாயில் புக முயற்சிக்கும் ஓர் ஸர்ப்பம் போல் காணப்படுகின்றது. மேலும் அது அவருடைய முகமாகிய தாமரையில் விளங்கும் கர்ணிகை (தாமரையின் உள் இருக்கும் காய்) போல், மிகவும் அழகாக விளங்குகின்றது. அது மிகவும் உயரமாகக் காணப்படுகின்றது. இவ்வாறு காட்சியளிக்கும் பார்வதீபதியின் மூக்கு உங்கள் அனைவருக்கும் மிகுந்த பலத்தை அளிக்கட்டும். (7)

(அ) கண்ணாடிபோல் விளங்கும் கபோலங்களின் (கன்னங்களின்) வர்ணனை:—

क्रुध्यत्यद्धा ययोः स्वां तनुमतिलसतोर्बिम्बितां लक्षयन्ती
भर्त्रे स्पर्धातिनिघ्ना मुहुरितरवधूशङ्कया शैलकन्या ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

युष्मांस्तौ शश्वदुच्चैरबहुलदशमीशर्वरीशातिशुभ्रा-
वव्यास्तां दिव्यसिन्धोः कमितुरवनमल्लोकपालौ कपोलौ ॥

க்ருத்யத்யத்தா யயோ: ஸ்வாம் தனுமதிலஸதோர்
பிம்பிதாம் லக்ஷயந்தீ
பர்த்ரே ஸ்பர்தாதிநிக்நா முஹுரிதரவதூஶங்கயா
ஶைலகந்யா ।
யுஷ்மாம்ஸ்தௌ ஶஶ்வதுச்சைரபஹுளதஶமீ
ஶர்வரீஶாதிஶுப்ரா-
வவ்யாஸ்தாம் திவ்யஸிந்தோ: கமிதுரவநமல்லோக
பாலௌ கபோலௌ ॥

शैलकन्या-மலைமகள், **अतिलसतोः**-மிகவும் பிரகாசிக்கிற **ययोः**-எந்த இரு கன்னங்களில், **बिम्बितां**-ப்ரதிபலித்திருக்கும், **स्वां**-தன்னுடைய, **तनुं**-உடலை, **मुहुः**-அடிக்கடி, **लक्षयन्ती**-பார்த்துக்கொண்டு, **इतरवधूशङ्कया**-மற்றொரு மனைவி என்ற சந்தேஹத்தால், **स्पर्धातिनिघ्ना**-பொறாமைக்குட்பட்டவளாய் **भर्त्रे**-தன் கணவனிடம், **अद्धा क्रुध्यति**-உண்மையாக சினம் கொள்கிறாளோ. **उच्चैः**-உன்னதமானவைகளாயும், **अबहुल-दशमी**-வளர்பிறையின் தசமியன்று விளங்கும், **शर्वरीश**-சந்திரனைப் போல், **अतिशुभ्रौ**-மிகவும் வெளுப்பாயும், **अवनमल्लोकपालौ**-வணங்குகின்ற இந்திரன், வருணன் முதலிய லோக பாலர்களையுடையவைகளுமான, **दिव्यसिन्धोः**-கங்கையின், **कमितुः**-கணவனான சிவ பெருமானுடைய, **तौ कपोलौ**-அவ்விரு கன்னங்களும், **युष्मान्**-உங்களை, **शश्वत्**-எப்பொழுதும், **अव्यास्ताम्**-காத்தருளட்டும்.

சிவபெருமானுடைய இரு கன்னங்களும் மிகவும் சிறந்து விளங்குகின்றன. அவைகள் ஸ்படிகம் போல் வெளுப்பான ஒளியுடன் காணப்படுகின்றன. அவைகளின் அருகாமையிலுள்ள பார்வதீ தேவியின் சரீரம் அவைகளில் பிரதிபலிக்கின்றது. அதைக்கண்ணுற்ற பார்வதீதேவிக்குச் சந்தேகம் வந்துவிடுகின்றது. பரமேச்வரன் தனக்குத்

Sri Vidyabharathi Book Centre, Trichy

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தெரியாமலேயே அன்யஸ்திரீயை தன் கன்னங்களுக்குள் மறைத்து வைத்திருக்கிறார் என்று அவள் அடிக்கடி நினைக்கின்றாள். இதனால் அவளுக்குப் பொறாமை உண்டாகிறது. உடனே அவள் சிவபெருமானிடம் சீற்றமடைகிறாள்.

மேலும் அவருடைய கன்னங்கள் சுக்ல பக்ஷத்து தசமி யன்று தோன்றும் சந்திரனைப்போல் அழகாகக் காணப்படு கின்றன. இந்திராதி தேவர்கள் எல்லோரும் சிவபெருமானிடம் வந்து வணங்கும்போது அவைகளில் அவர்களுடைய சரீரங்கள் ப்ரதிபலிக்கின்றன. இவ்வாறு ப்ரதிபலிக்கின்ற தேவர்களை உடைய பார்வதீபதியின் இருகன்னங்களும் உங்கள் எல்லோரையும் காத்தருளவேண்டும்.

சுக்ல பக்ஷத்துப் பௌர்ணமியன்று தோன்றும் சந்திரன் களங்கத்துடன் விளங்குகின்றது. ஆனால் தசமி யன்று தோன்றும் சந்திரனிடம் களங்கம் ஸ்பஷ்டமாகத் தோன்றாது. ஆகையால் மாசற்ற மஹேச்வரனுடைய கன்னங்களை தசமியில் தோன்றும் சந்திரனுக்கு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. (8)

(அ) கௌஸ்துபரத்னம்போல் சிவந்த அதரம் வர்ணிக்கப்படுகிறது :—

यो भासा भात्युपान्तस्थित इव निभृतः कौस्तुभो द्रष्टुमिच्छुः
सोत्थस्नेहान्नितान्तं गलगतगरलं पत्युरुच्चैः पशूनाम् ।
प्रोद्यत्प्रेम्णा यमार्द्रा पिबति गिरिसुता संपदः सातिरेका
लोकाः शोणीकृतान्ता यदरुणमहसा सोऽधरो वो विधत्ताम् ॥

யோ பாஸா பாத்யுபாந்த ஸ்தித இவ நிப்ருத: கௌஸ்துபோ த்ரஷ்டுமிச்சு:
ஸோத்த ஸ்நேஹாந்நிதாந்தம் கல கத கரளம் பத்யுருச்சை: பசூநாம் ।
ப்ரோத்யத் ப்ரேம்ணா யமார்த்ரா பிபதி கிரிஸுதா ஸம்பத: ஸாதிரேகா:
லோகா: சோணீக்ருதாந்தா யதருணமஹஸா ஸோऽதரோ வோ விதத்தாம் ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

पशूनां पत्युः-பசுபதியான பரமேச்வரனுடைய, **यः (अधरः)**-எந்த அதரம், **उच्चैः**-உன்னதமான, **गलगतगरलं**-கழுத்திலுள்ள விஷத்தை, **सोदर्यस्नेहात्**-தன்னுடன் கூடப்பிறந்தது என்ற நட்பினால் (ஸஹோதர வாஞ்சையால்) **नितान्तं**-மிகவும், **द्रष्टुं**-பார்ப்பதற்கு, **इच्छुः**-விருப்பமுடையதாய், **निभृतः**-அசைவற்றதாக, **उपान्तस्थितः**-அருகில் அமர்ந்துள்ள, **कौस्तुभः इव**-கௌஸ்துபம் என்ற மணிபோல், **भासा**-தன்னுடைய ஒளியால், **भाति**-விளங்குகின்றதோ, **गिरिसुता**-மலைமகள், **प्रोद्यत्प्रेम्णा**-மிகுந்த அன்பினால், **आर्द्रा**-நனைந்தவளாக, **यं**-எந்த அதரத்தை, **पिबति**-பருகுகின்றாளோ **लोकाः**-உலகங்கள், **यदरुणमहसा**-எந்த அதரத்தின் சிவந்த ஒளியால், **शोणीकृतान्ताः**-சிகப்பாகச் செய்யப்பட்ட நடுவை உடையவைகளாக இருக்கின்றனவோ, **सः अधरः**-அப்படிப்பட்ட அதரம், **सातिरेकाः**-அளவுகடந்த, **संपदः**-செல்வங்களை, **वः**-உங்களுக்கு, **विधत्ताम्**-கொடுக்கட்டும்.

பாற்கடலிலிருந்து அமுதத்தை எடுப்பதற்காகத் தேவர்களும் அசுரர்களும் ஓர் சமயம் அதைக்கடைந்தார்கள். அப்பொழுது கௌஸ்துபம் என்ற ஓர் சிறந்த ரத்னம் அக்கடலிலிருந்து தோன்றியது. அதுபோலவே அங்கு காலகூடம் என்ற விஷமும் உண்டாயிற்று. இவற்றில் ஒன்றான கௌஸ்துபம் என்ற மணியை மஹாவிஷ்ணு தன்னுடைய மார்பில் அணிந்துகொண்டார். சிவபெருமான் காலகூட விஷத்தைப்பருகி தேவாசுரர்களைக் காத்தருளினார். இங்கு சிவபெருமானுடைய சிவந்த அதரத்தைக் காணும்பொழுது அது கௌஸ்துபமணிதானோ என்று தோன்றுகிறது. கௌஸ்துபம், காலகூடம் இரண்டும் ஒரே பாற்கடலில் பிறந்ததால் ஸஹோதரர்கள். இரண்டும் வெவ்வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டன. கௌஸ்துபம் விஷ்ணுவின் மார்பிலும், காலகூடவிஷம் சிவனின் கழுத்திலும் இருக்கிறது. வெகுகாலமாகப் பிரிந்துள்ள தன் ஸஹோதரனை காலகூட விஷத்தை மிகவும் அருகில் இருந்து பார்ப்பதற்காகத்தான் கௌஸ்துபம் பரமசிவன்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

முகத்தில் அசைவற்று அமர்ந்திருக்கிறதோ என்று தோன்றுகிறது. கௌஸ்துபமணிபோல் மிகவும் சிகப்பு ஒளியுடன் காணப்படுகிறது அதரம். இவ்வாறு வர்ணிப்பதற்கு உத்ப்ரேக்ஷை என்று பெயர். இவ்வாறு விளங்கும் அதரத்தைப் பார்வதீதேவி மிகுந்த அன்புடன் பருகிப் பரவசமடைகின்றாள். பரமேச்வரனுடைய சிவந்த உதட்டின் ஒளி எங்கும் பரவுகின்றது. அதனால் உலகின்கண் உரையும் பொருளனைத்தும் செந்நிறம் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. பரமேச்வரனுடைய இவ்வுதடு உங்கள் அனைவருக்கும் அளவற்ற செல்வங்களை அள்ளித்தந்து அருள் புரியவேண்டும்.

உலகிலுள்ள பொருள்கள் பலநிறம் பெற்றவைகள். ஆயினும் அவைகள் தங்களுடைய நிறத்தை விட்டுச் சிவபெருமானின் உதட்டினுடைய செந்நிறத்தைப் பெற்றவைகளாக வர்ணிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கூறுவதற்குத் 'தத்குணம்' என்றுபெயர். (9)

(அ) தந்த பங்க்தி (பற்களின் வரிசை)யின் வர்ணனை:-

अत्यर्थं राजते या वदनशशधरादुच्चरच्चारुवाणी-
पीयूषाम्भःप्रवाहप्रसरपरिलसत्फेनपुञ्जावलीव ।
देयात्सा दन्तपङ्क्तिश्चिरमिह दनुदायाददौवारिकस्य
दीप्त्या दीप्तेन्दुकुन्दच्छविरमिततरां प्रोन्नताग्रा मुदं वः ॥

அத்யர்த்தம் ராஜதே யா வதந ஶஶதரா துச்சரச்சாருவாணீ
பீயூஷாம்ப: ப்ரவாஹ ப்ரஸர பரிலஸத் ப்பேந புஞ்ஜாவலீவ ।
தேயாத் ஸா தந்த பங்க்திஶ்சிரமிஹ தநு தாயாத தௌவாரிகஸ்ய
தீப்த்யா தீப்தேந்து குந்த ச்சவிரமிததராம் ப்ரோந்நதாக்ரா முதம் வ: ॥

दनुदायाद-தனுவினுடைய பிள்ளையான பாணாஸுரனுடைய, **दौवारिकस्य**-வாயில் காப்பவனாக விளங்கும் பரமேச்வரனுடைய, **या**-எந்த பற்களின் வரிசை, **वदन-शशधरात्**-முகமாகிய சந்திரனிடமிருந்து, **उच्चरत्**-கிளம்பு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கின்ற, चारु-அழகிய, वाणी-சொற்களாகிய, पीयूषाम्भः-அமுத ஜலத்தின், प्रवाह-வெள்ளத்தின், प्रसर-பெருக்கில், परिलसत्-விளங்குகின்ற, फेनपुञ्जावलीव-நுரைக்கூட்டம் போல, अत्यर्थं-மிகவும், राजते-விளங்குகின்றதோ, दीप्त्या-பிரகாசத்தால், दीप्त-காந்தியுள்ள, इन्दुकुन्द-சந்திரன் குந்த புஷ்பம் (வெள்ளை மல்லிகை) இவைகளைப் போன்ற, छविः-ஒளியையுடையதும் प्रोन्नताग्रा-உயர்ந்த நுனிகளையுடையதுமான, सा-அந்த, दन्तपङ्क्तिः-பற்களின் வரிசை, इह-இவ்வுலகில், चिरं-வெகு காலம், अमिततरां-மிகவும் அளவற்றதான, मुदं-சந்தோஷத்தை, वः-உங்களுக்கு देयात् -கொடுக்கட்டும்.

பரமேச்வரனுடைய பல் வரிசை மிகவும் அழகாகக் காணப்படுகின்றது. அவருடைய முகம் சந்திரன்போல் தோன்றுகின்றது. அவர் பேச ஆரம்பிக்கும் பொழுது அவரது முகமாகிய சந்திரனிடமிருந்து சொற்களாகிய அமுதம் பெருகுகின்றது. அப்பெருக்கில் காணப்படும் நுரைகளின் வரிசைபோலப் பற்களின் வரிசை விளங்குகின்றது. இவ்வரிசை சந்திரனைப்போலும் குந்தமலரைப் போலவும் பொலிவுபெற்றுள்ளது. மேலும் இது உயர்ந்த நுனிகளை உடையது. இப்பற்களின் வரிசை நமக்கு இவ்வுலகில் மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கட்டும்.

இங்கு பற்களின் வரிசையை அமுதப்பெருக்கின் நுரை என்று உருவகப்படுத்திக் கூறப்பட்டிருக்கிறது. அமுதத்தால் அம்ருத நிலையை அடையலாம். அதனால் என்றும் அளவுகடந்த ஆனந்தத்தை எய்தலாம். அதுபோலவே இங்கு சிவபெருமானுடைய அமுத நுரையைப்போன்ற பல் வரிசையும் நமக்கு இவ்வுலகின் கண் உயர்ந்த ஆனந்தத்தை அள்ளி அள்ளி அருளவேண்டும். இவ்வுலகின்கண் என்பது உபலக்ஷணமாகக் கூறப்பட்டுள்ளது. இம்மையில் மட்டு மல்லாது மறுமையிலும் இஃது நமக்கு ஆனந்தமளிக்க வேண்டுமென்பதே இதன் பொருள். மறு உலகில் அளவற்ற ஆனந்தத்தை அளிக்கவேண்டுமென்பதற்கு மோக்ஷத்தைக் கொடுக்கட்டுமென்பது பொருள்.

(10)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

(அ) பரமேசுவரனுடைய கண்டத்திலிருந்து கிளம்பும் ஓங்காரநாதத்தை வர்ணிக்கிறார்:—

न्यक्कुर्वन्नुर्वराभृन्निभघनसमयोद्घुष्टमेघौघघोषं
स्फूर्जद्वाद्योत्थितोरुध्वनितमपि परब्रह्मभूतो गभीरः ।
सुव्यक्तो व्यक्तमूर्तेः प्रकटितकरणः प्राणनाथस्य सत्याः
प्रीत्या वः संविदध्यात्फलममलमलं जन्मनाथः स नादः ॥

ந்யக்குர்வந்நுர்வராப்ருந்நிப கன ஸமயோத்குஷ்ட
மேகௌக கோஷம்
ஸ்பூர்ஜத் வாத்யோத்திதோரு த்வநிதமபி பரப்ரஹ்ம
பூதோ கபீர: ।
ஸுவ்யக்தோ வ்யக்த மூர்த்தே: ப்ரகடித கரண: ப்ராண
நாதஸ்ய ஸத்யா:
ப்ரீத்யா வ: ஸம்விதத்யாத் பலமமலமலம் ஜந்மநாத: ஸ நாத:॥

उर्वराभृत्-பூமியைத் தாங்குகின்ற மலைகளுக்கு, **निभ**-ஒப்பான, **घन**-மேகங்களுடைய, **समय**-காலமாகிய மழை நாட்களில், **उद्घुष्ट**-கர்ஜனையுடன்கூடிய, **मेघौघ**-மேகங்களுடைய கூட்டத்தின், **घोषं**-இடி முழக்கத்தையும், **स्फूर्जत्**-இடியைப்போல் முழங்குகின்ற, **वाद्योत्थित**-வாத்தியங்களிலிருந்து கிளம்பிய, **उरुध्वनितं अपि**-மிகுந்த ஒலியையும், **न्यक्कुर्वन्**-தாழ்ந்ததாகச் செய்துகொண்டு, **परब्रह्मभूतः**-பரம்பொருளின் தன்மை வாய்ந்ததாயும், **गम्भीरः**-கம்பீரமாயும், **सुव्यक्तः**-மிகுந்த விளக்கமுள்ளதாயும், **प्रकटितकरणः**-வெளிப்படுத்தப்பட்டுள்ள உதடு முதலிய உச்சரிப்பு ஸ்தானங்களையுடையதாயும், அதாவது நன்கு உச்சரிக்கப்பட்டதாயும், **जन्मनाथः**-தன்னை உபாஸிக்கின்றவர்களின் பிறவித்துன்பத்தை நீக்குகின்றதாயும் விளங்குகின்ற, **व्यक्तमूर्तेः**-எடுத்துக்கொள்ளப்பட்ட சரீரத்தையுடைய, **सत्याः**-தக்ஷனுடைய மகளான ஸதீதேவியின், **प्राणनाथस्य**-பதியான சிவபெருமானுடைய, **सः नादः**-அந்தப் புகழ்பெற்ற ஓங்காரம் **वः**-உங்களுக்கு, **प्रीत्या**-அன்புடன், **अलं**-நிறைந்த

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

अमलं–தோஷமற்ற, **फलं**-மோக்ஷமென்ற பலனை, **संविदध्यात्**– கொடுக்கட்டும்.

பரமேச்வரனுடைய முகத்திலிருந்து கிளம்பும் ஓங்கார நாதம் மழைகாலத்தில் மேகங்களிலிருந்து கிளம்பும் இடி முழக்கத்தையும் வெல்லும் சக்தி வாய்ந்தது. இன்னிசைகளை எழச்செய்யும் வாத்யங்களிலிருந்து உண்டாகும் நாதங்களையும் தோற்கச்செய்கின்றது. **स्फूर्जद्वार्ध्युत्थित** (ஸ்பூர்ஜத்வார்த்யுத்தித) என்றும் ஒரு பாடம் காணப்படுகிறது. அதற்கு இடிமுழக்கம் போன்ற கடலோசையைத் தோற்கச்செய்கின்றது என்று பொருள். இதுவே பரப்ரம்மத்தின் தன்மை வாய்ந்தது. பரம்பொருளைக்குறித்துக் காட்டும் அடையாளமாக விளங்குகின்றது. பரம்பொருள் நம் புலன்களுக்கு எட்டாதது. இவ்வாறு இருந்தபோதிலும், நாம் அதை நம்முடைய மனதால் த்யானம் செய்யலாம். அதற்கு உகந்ததாக ஓங்காரம் விளங்குகின்றது. இந்த ஓங்காரத்தைச் சொல்லி பரம்பொருளை அழைத்தால் அது நம்மிடம் சந்தோஷமடைகின்றது. பகவானிடமிருந்து கிளம்பும் இந்த ஓங்கார நாதம் மிகவும் கம்பீரமானது. இது நல்ல ஒலியுடன் விளங்குகிறது. பரமேச்வரனால் நன்கு உச்சரிக்கப்பட்டதான இந்த ஓங்காரம் பிறவி என்னும் துன்பத்தைக் களைகின்றது. உலகத்திலுள்ள ஜீவராசிகளின் இன்னல்கள் அனைத்தையும் நீக்குவதன் பொருட்டு பகவான் லீலாமானுஷ விக்ரஹத்தைப்பெற்றுப் பார்வதீபதியாகக் காட்சியளிக்கின்றார். இவருடைய திருவாயிலிருந்து எழுந்தருளும் மாசற்ற ஓங்காரநாதம் நம்மனைவருக்கும் மோக்ஷஸாம்ராஜ்யத்தைத் தந்தருளல் வேண்டும். **(11)**

(அ) ஈசுவரனின் அட்டஹாஸம் (சிரிப்பு) வர்ணிக்கப்படுகிறது:—

भासा यस्य त्रिलोकी लसति परिलसत्फेनपुञ्जार्णवान्त-
र्व्यामग्नेवातिगौरस्तुलितसुरसरिद्वारिपूरप्रसारः ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

पीनात्मा दन्तभाभिर्भृशमभिभविकारातिभीमः सदेष्टां
पुष्टां तुष्टिं कृषीष्ट स्फुटमिह भवतामट्टहासोऽष्टमूर्तेः ॥ १२ ॥

பாஸா யஸ்ய த்ரிலோகீ லஸதி பரிலஸத் பேந
புஞ்ஜார்ணவாந்தர்
வ்யாமக்நேவாதிகௌரஸ் துலித ஸுரஸரித் வாரிபூர
ப்ரஸார: ।
பீநாத்மா தந்தபாபிர் ப்ருசமபிபவிகாராதி.பீம: ஸதேஷ்டாம்
புஷ்டாம் துஷ்டிம் க்ருஷீஷ்ட ஸ்புடமிஹ பவதாம்
அட்டஹாஸோऽஷ்டமூர்த்தே: ॥

यस्य-எந்த அட்டஹாஸத்தினுடைய, **भासा**-ஒளியால், **त्रिलोकी**-மூவுலகும், **परिलसत्**-விளங்குகின்ற, **फेनपुञ्ज**-நுரைக் கூட்டங்களையுடைய, **अर्णवान्तः**-சமுத்திரத்தின் நடுவில், **व्यामग्ना इव**-மூழ்கிக்கிடக்கின்றதுபோல், **लसति**-பிரகாசிக் கின்றதோ. **अतिगौरः**-மிகவும் வெளுப்பானதாயும், **तुलित**-ஒப்பிடப்பட்ட, **सुरसरित्**-கங்கையினுடைய, **वारिपूर**-நீர்ப் பெருக்கின், **प्रसारः**-போக்கையுடையதாயும், **दन्तभाभिः**-பற்களுடைய ஒளிகளால், **पीनात्मा**-விருத்தியடைந்ததும், **भृशं**-மிகவும், **अभिभविक**-ஸாதுக்களை அவமதிக்கின்ற, **अराति**-பகைவர்களுக்கு, **भीमः**-பயங்கரமானதாயுமுள்ள **अष्टमूर्तेः**-சிவபெருமானுடைய, **अट्टहासः**-அட்டஹாஸம், **सदा**-எப்பொழுதும், **इह**-இவ்வுலகத்திலும் மறுஉலகத்திலும், **भवतां**-உங்களுக்கு, **स्फुटं**-தெளிவாக, **इष्टां**-விரும்பிய, **पुष्टां तुष्टिं**-மிகுந்த மகிழ்ச்சியை, **कृषीष्ट**-உண்டாக்கட்டும்.

சிவபெருமான் மட்டற்ற மகிழ்ச்சியால் அட்டஹாஸம் செய்கின்றார். அது மிகுந்த வெண்ணிறம் வாய்ந்ததாக உலகமெங்கும் விளங்குகிறது. இதனால் மூவுலகும் சமுத்திரத்தில் உள்ள நுரைக்கூட்டத்தில் மூழ்கிக்கிடக்கின்றது போல் காணப்படுகின்றது. மிகவும் வெளுப்பான அவ் வட்டஹாஸம் கங்கையின் பெருக்கைப்போல் எங்கும் பெருகிக்கொண்டிருக்கின்றது. ஏற்கனவே வெளுப்பாக

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உள்ள அச்சிரிப்பு பகவானுடைய புற்களின் ஒளியால் இரண்டுமடங்கு வெண்ணிறம் வாய்ந்ததாக ஆகின்றது. உலகத்திற்குத் தீங்கிழைக்கும் கசடர்கள் அப்பெரும் சிரிப்பைக் கண்டு அஞ்சுகின்றனர். இவ்வாறு விளங்கும் அட்டஹாஸம் உமக்கு என்றென்றும் இம்மையிலும் மறுமையிலும் மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்தருளட்டும். (12)

(அ) ஸத்யோஜாதம் முதலான ஐந்து முகங்களை வர்ணிக்கிறார் :—

सद्योजाताख्यमास्यं वियदमलमुदग्वर्ति यद्वामदेवं
धाम्ना हेम्ना सदृक्षं जलदनिभमघोराह्वयं दक्षिणं यत् ।
यद्बालार्कप्रभं तत्पुरुषनिगदितं पूर्वमीशानसंज्ञं
यद्दिव्यं तानि शम्भोः भवदभिलषितं पञ्च दद्युर्मुखानि ॥

ஸத்யோஜாதாக்யமாஸ்யம் வியதமலமுதக்வர்த்தி யத்
வாமதேவம்
தாம்னா ஹேம்னா ஸத்ருக்ஷம் ஜலத நிபமகோராஹ்வயம்
தக்ஷிணம் யத்।
யத்பாலார்க்கப்ரபம் தத்புருஷ நிகதிதம் பூர்வமீசாந
ஸம்க்ஞம்
யத்திவ்யம் தாநி சம்போ: பவதபிலஷிதம் பஞ்ச தத்யுர்
முகாநி ॥

वियदमलं-ஆகாயத்தைப்போல் மாசற்ற அல்லது ஆகாசத்தில் மாசற்றதான, **सद्योजाताख्यं**-'ஸத்யோ ஜாதம்' என்ற பெயர்கொண்ட **यत् आस्यम्**-யாதொரு முகமோ, **तथा**-அதுபோலவே, **उदग्वर्ति**-வடக்கிலுள்ள, **धाम्ना**-பிரகாசத்தால், **हेम्ना सदृक्षं**-தங்கத்தைப்போல் விளங்கும், **वामदेवं यत्**-'வாம தேவம்' என்ற யாதொரு முகமோ, **तथा**-அதுபோலவே **जलदनिभं**-மேகத்தைப்போல் நீலமான, **दक्षिणं**-தெற்கிலுள்ள, **अघोराह्वयं यत्**-'அகோரம்' என்று பெயர்கொண்ட யாதொரு முகமோ, **तथा**-அதுபோல, **बालार्कप्रभं**-இளங்கதிரவனைப்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

போன்ற ஒளிவாய்ந்த, **तत्पुरुषनिगदितं**–' தத்புருஷம் ' என்று கூறப்படும், **यत्** –எந்த முகமோ, **तथा**–அதுபோல, **पूर्वं**-கிழக்கிலுள்ள, **ईशानसंज्ञं**–' ஈசானம் ' என்று பெயர்கொண்ட, **यत्** - யாதொரு, **दिव्यं**–ஒளியோடுகூடிய முகமோ, **शंभोः** – சிவபெருமானுடைய, **तानि**-அந்த, **पञ्च मुखानि**-ஐந்து முகங்களும், **भवदभिलषितं**–உங்களுடைய மனோபீஷ்டங்களை, **दद्युः** – கொடுக்கட்டும்.

பரமேச்வரனுக்கு ஸத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என்று ஐந்து முகங்கள் இருக்கின்றன. இந்த ஐந்து முகங்களையும் " **सद्योजातं प्रपद्यामि** " என்று துவங்கி " **ईशानः सर्वविद्यानां** " என்று முடிகின்ற வேத மந்திரங்கள் போற்றுகின்றன. இவற்றுள் ஸத்யோஜாதமென்று கூறப்படும் முகம் ஆகாயத்தைப் போல் மாசற்று மேல்நோக்கிய வண்ணம் அமைந்துள்ளது இரண்டாவதாக வாமதேவமென்ற பெயர் கொண்ட முகம் தங்கத்தைப்போல் ஜ்வலிக்கும் தன்மை வாய்ந்து வட திசையைப் பார்த்துக்கொண்டிருக்கின்றது. மூன்றாவதாக அகோரமென்றழைக்கப்படும் முகம் நீலநிறமுள்ளது. இது தென்திசையை நோக்கி இருக்கின்றது. நான்காவதாக தத்புருஷமென்று போற்றப்படும் முகம் இளம் சூரியனைப்போல் காந்தியுடன் மேற்குத் திக்கைப்பார்த்துக் கொண்டிருக்கின்றது. ஐந்தாவதாக ஈசானம் என்ற பெயருடைய முகம் கிழக்குத்திசையை நோக்கிக்கொண்டிருக்கிறது. இவ்வாறு விளங்கும் பரமேச்வரனுடைய ஐந்து திவ்யமான முகங்களும் உங்களுடைய மனோபீஷ்டங்களையெல்லாம் நிறைவேற்றட்டும். (13)

(அ) பகவானுடைய கண்டத்தின் (கழுத்தின்) வர்ணனை :—

आत्मप्रेम्णा भवान्या स्वयमिव रचिताः सादरं संयवन्या
मष्या तिस्रः सुनीलाञ्जननिभगररेखाः समाभान्ति यस्याम् ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

आकल्पानल्पभासा भृशतररुचिराः कम्बुकल्पाम्बिकायाः
पत्युः साऽत्यन्तमन्तर्विलसतु सततं बन्धुरा कन्धरा वः ॥

ஆத்ம ப்ரேம்ணு பவாந்யா ஸ்வயமிவ ரசிதா: ஸாதரம்
ஸம்யவன்யா
மஷ்யா திஸ்ர: ஸுநீலாஞ்ஜன நிப கர ரேகா: ஸமாபாந்தி
யஸ்யாம் ।
ஆகல்பாநல்ப பாஸா ப்ருஶதர ருசிரா: கம்புகல்பாம்பிகாயா:
பத்யு: ஸாத்யந்தமந்தர்விலஸது ஸததம் பந்துரா
கந்தரா வ: ॥

भवान्या-பார்வதியால், **आत्मप्रेम्णा**-தன்னுடைய அன்பினுல், **संयवन्या**-கூட்டப்பட்ட, **मष्या**-மசியால், **सादरं**-மிகுந்த ஆதரவுடன், **स्वयं**-தாஞகவே, **रचिताः इव**-எழுதப்பட்டவைகள்போல் விளங்குகின்றவைகளாயும், **आकल्प**-அலங்காரத்தினுடைய, **अनल्पभासा**-மிகுந்த ஒளியால், **भृशतररुचिराः**-மிகவும் மனோஹரமாயும் உள்ள, **तिस्रः**-மூன்று **सुनील**-மிகவும் நீலமான, **अञ्जननिभ**-மைபோன்ற, **गररेखाः**-விஷத்தின் கோடுகள், **यस्यां**-எந்தக் கழுத்தில், **समाभान्ति**-நன்கு பிரகாசிக்கின்றனவோ, **कम्बुकल्पा**-சங்குக்கு ஒப்பான **बन्धुरा**-உன்னதமான, **अम्बिकायाः पत्युः**-அம்பிகையின் பதியான பரமேச்வரனுடைய, **सा कन्धरा**-அக்கழுத்து, **वः**-உங்களுடைய, **अन्तः**-மனதில், **सततं**-எப்பொழுதும், **अत्यन्तं**-மிகவும், **विलसतु**-விளங்கட்டும்.

பரமேச்வரனுடைய கழுத்து மிகவும் அழகு வாய்ந்தது. அது சங்குக்கு ஒப்பாக மிகவும் உன்னதமாகவும் மனோஹரமாகவும் விளங்குகின்றது. அதில் காலகூடவிஷத்தின் மூன்று கோடுகள் காணப்படுகின்றன. அவைகள் பார்வதீ தேவியே தன்னுடைய கணவன்பாலுள்ள அன்பினுல் நீல மைகூட்டி மிகுந்த ப்ரேமையுடன் வரைந்த கோடுகள்போல் காணப்படுகின்றன. நீலநிறமுள்ள இம்மூன்று ரேகைகளும் நீலமணியால் செய்யப்பட்ட கண்டாபரணங்கள் போல் பரமேச்வரனுடைய கழுத்தை அலங்கரிக்கின்றன. இவ்வாறு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தோன்றும் பரமேச்வரனுடைய கழுத்து உங்களுடைய உள்ளங்களில் என்றும் உரைந்து இருக்கட்டும். (14)

(அ) சம்புவின் கழுத்திலுள்ள காலகூட விஷத்தை வர்ணிக்கிறார்:—

वक्त्रेन्दोर्दन्तलक्ष्म्याश्चिरमधरमहाकौस्तुभस्याप्युपान्ते
सोत्थानां प्रार्थयन्स्वस्थितिमचलभुवे वारयन्त्यै निवेशम् ।
प्रायुङ्क्तेवाशिषो यः प्रति पतिममृतत्वे स्थितः कालशत्रोः
कालं कुर्वन्गलं वो हृदयमलमलं क्षालयेत्कालकूटः ॥ १५ ॥

வக்த்ரேந்தோர் தந்த லக்ஷ்ம்யாஶ்சிரமதர மஹாகௌஸ்து
பஸ்யாப்யுபாந்தே
ஸோத்தாநாம் ப்ரார்த்தயன் ஸ்வஸ்திதிமசலபுவே
வாரயந்த்யை நிவேஶம் ।
ப்ராயுங்க்தேவாஶிஷோ ய: ப்ரதி பதிமம்ருதத்வே
ஸ்தித: காலஶத்ரோ:
காலம் குர்வன் கலம் வோ ஹ்ருதயமலமலம் க்ஷாலயேத்
காலகூட: ॥

यः-எந்த காலகூட விஷம், **स्वोत्थानां**-தன்னுடன் உண்டானதால் ஸஹோதரர்களாக விளங்கும் **वक्त्रेन्दोः**-முகமாகிய சந்திரனுக்கும், **दन्तलक्ष्म्याः**-பற்களின் அழகாகிய இலக்ஷ்மீதேவிக்கும், **अधरमहाकौस्तुभस्य अपि** - உதடாகிய பெரிய கௌஸ்துபமணிக்கும் கூட, **उपान्ते**-அருகில், **चिरं**-வெகுகாலம், **स्वस्थितिं**-தன்னுடைய வாஸத்தை, **प्रार्थयन्**-வேண்டிக்கொண்டு, **निवेशं**-(தான்) அங்கிருப்பதை **वारयन्त्यै** தடைசெய்கின்ற, **अचलभुवे**-பார்வதிக்கு, **पतिं प्रति**-கணவனைக் குறித்து, **अमृतत्वे**-மரணமேற்படாத நிலையின் பொருட்டு, **आशिषः**-ஆசீர்வாதங்களை, **प्रायुंक्तेव**-கூறியது போல், **स्थितः**-இருக்கின்றதோ, **कालशत्रोः**-யமனை வதைத்த சிவபெருமானுடைய, **गलं**-கழுத்தை, **कालं**-கருப்பாக, **कुर्वन्** செய்துகொண்டிருக்கும், **सः कालकूटः**- அந்தக் காலகூட

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மென்ற விஷம், वः-உங்களுடைய, हृदयमलं-மனதிலுள்ள அழுக்கை, अलं-நன்கு, क्षालयेत्-கழுவட்டும்.

தேவர்களும் அசுரர்களும் அமுதத்தை எடுக்க நினைத்து பாற்கடலைக் கடைந்தார்கள். அப்பொழுது அக்கடலிலிருந்து சந்திரன், இலக்ஷிமி, கௌஸ்துபம், காலகூட விஷம் முதலிய பல பொருள்கள் கிளம்பி வந்தன. அவற்றுள் மிகுந்த பொலிவுடன் விளங்கும் சந்திரனே பரமேச்வரனுடைய முகமாக அமைந்தது. அதனுடன் பிறந்த லக்ஷ்மீதேவி பற்களின் வரிசையாகப் பிரகாசித்தாள். சிவந்த நிறத்துடன் மனதைக் கவரும் கௌஸ்துபம் என்ற மாணிக்கமே உதடாக ஆயிற்று. இவ்வாறு தன்னுடன் பிறந்தவர்கள் பரமேச்வரனுடைய முகத்தில் வசிப்பதைக் கண்ணுற்றுக் காலகூட விஷமும் அவைகளின் அருகாமையிலேயே தானும் அமர வேண்டுமென்று ஆசைப்பட்டது. ஆனால் பரமேச்வரனுடைய பக்கத்தில் பார்வதீ தேவி அமர்ந்திருந்தாள். காலகூடம் தன் கணவனது உயிரையே பருகி விடுமோ என்று அச்சங் கொண்ட அவள் அதை ஆங்கு அமர அனுமதிக்கவில்லை. அதனால் அவ்விஷம், நான் உன்னுடைய கணவன் ஆயுளை அபகரிக்கவில்லை. நான் அவருக்கு நீண்ட ஆயுள் உண்டாக வேண்டுமென்று ஆசீர்வதிக்கிறேன் என்று கூறிக் கொண்டு பரமேச்வரனுடைய கழுத்தில் அமர்ந்தது. அதனுடைய சேர்க்கையால் காலனை மாய்த்த மகேச்வரனுடைய கழுத்து கருப்பு நிறத்தையடைந்தது. இவ்வாறு விளங்கும் காலகூடம் உங்கள் மனதில் உறையும் அழுக்குகளைக் களையட்டும்.

பரமேச்வரனுடைய கழுத்தில் காணப்படும் காலகூட விஷத்தைத் தியானம் செய்தால் மனதிலுள்ள தீய எண்ணங்கள் அனைத்தும் தீர்ந்துவிடும். மனது பரிசுத்தமடையும். அதனால் ஸ்வயம்பிரகாசனான பகவான் அகக்கண் முன் தோன்றுவான். இங்கு அழுக்கை உண்டாக்கும் கரு விஷம் அழுக்கை அகற்றும் என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. விரோதமான காரணத்தால் மலம் போக்கப்படுகிறதென்று

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கூறப்படுவதால் இங்கு விபாவனு விசேஷமெனும் அணி காணப்படுகின்றது. (15)

(அ) மஹாதேவனின் தோர்மூலம் (கக்ஷப்பிரதேசம்) வர்ணிக்கப்படுகிறது :—

प्रौढप्रेमाकुलाया दृढतरपरिरंभेषु पर्वेन्दुमुख्याः
पार्वत्याश्चारुचामीकरवलयपदैरङ्कितं कान्तिशालि ।
तुङ्गं भोगाङ्गदाढ्यं सततमविहितं कर्म निर्मूलयेत्त-
द्दोर्मूलं निर्मलं यद्धृदि दुरितमपास्यार्जितं धूर्जटेर्वः ॥

ப்ரெளட ப்ரேமாகுலாயா த்ருடதர பரிரம்பேஷு
பர்வேந்து முக்யா:
பார்வத்யாஸ்சாரு சாமீகர வலய பதைரங்கிதம் காந்தி ஶாலி,
துங்கம் போகாங்கதாட்யம் ஸததமவிஹிதம் கர்ம
நிர்மூலயேத் தத்
தோர்மூலம் நிர்மலம் யத் ஹ்ருதி துரிதமபாஸ்யார்ஜிதம்
தூர்ஜடேர் வ: ||

दृढतर – மிகவும் இறுக்கமான, **परिरंभेषु** – ஆலிங்கனங்களில், **प्रौढ**–அதிகமான, **प्रेमाकुलायाः** – அன்புடன் கூடியவளும், **पर्वेन्दुमुख्याः** – பூர்ணசந்திரனைப்போன்ற அழகு வாய்ந்த முகத்தையுடையவளுமான, **पार्वत्याः**-பார்வதியின், **चारु**–அழகிய, **चामीकरवलयपदैः**-தங்க வளையல்களின் அடிகளால், **अंकितं**-அடையாளம் செய்யப்பட்டதும், **कान्तिशालि**-மிகுந்த தேஜஸுடன் விளங்குகின்றதும், **तुङ्गं**-உயரமானதும் **भोगाङ्गदाढ्यं**-அரவங்களாகிய தோள்வளைகள் நிறைந்ததுமான, **तत्**-அந்த, **धूर्जटेः**-பரமேச்வரனுடைய, **निर्मलं**-மாசற்ற **दोर्मूलं**-கக்ஷப்பிரதேசம் உங்களுடைய, **हृदि** மனதில், **आर्जितं** சேமித்து வைக்கப்பட்ட, **दुरितं**-பாபத்தை, **अपास्य**-போக்கி விட்டு, **सततं**-எப்பொழுதும், **अविहितं कर्म**-நிஷித்தமான கார்யத்தை, **निर्मूलयेत्**-வேறுடன் களையட்டும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பார்வதீ தேவி பரமேசுவரனை அன்புடன் இறுகத் தழுவிக் கொள்ளும்பொழுது அவளுடைய ஸுவர்ணவளை கள் சிவபெருமானுடைய புஜங்களில் பதிகின்றன. அதனுல் அப்புஜங்கள் அடையாளம் செய்யப் பட்டவைகளாக விளங்குகின்றன. மேலும் சிறந்த நாகங்கள் அவருடைய புஜங்களைச் சுற்றிக்கொண்டிருக்கின்றன. அவைகளே அவருக்கு விலையுயர்ந்த தோள்வளைகளாகக் காணப் படுகின்றன.

இவ்வித மஹிமை பொருந்திய கக்ஷப்பிரதேசம், உங்க ளுடைய மனதிலுள்ள பாபங்கள் எல்லாவற்றையும் போக் கட்டும். கோடிக்கணக்கான முற்பிறவிகளில் நாம் செய் துள்ள பாபங்கள் எல்லாம், நம் மனதில் மலைபோல் குவிந் துள்ளன. ஏற்கனவே பாபம் இருப்பதால்தான், மேலும் மேலும் பாபச்செயல் புரிகிருன். புண்யம் உள்ளவன் நற் காரியம் செய்வான். நாம் செய்யும் புண்ய கர்மாக்களும் பாப கர்மாக்களும் முறையே ஸுகத்தையும் துக்கத்தையும் கொடுப்பதுடன், வாஸநாரூபமாக மனதில் இருந்து கொண்டு முறையே புண்யத்தையும், பாபத்தையும் செய்யத் தூண்டுகின்றன. பகவானுடைய கக்ஷித்யானத்தால் நம் பாபங்கள் எல்லாம் விலகவே மேலும் பாபச் செயல்களைப் புரியமாட்டோம். (16)

(அ) ஸம்ஸாரக்கடலைக் கடக்க ஸ்படிக அணைபோல் விளங்கும் புஜங்களை வர்ணிக்கிருர் :—

कण्ठाश्लेषार्थमाप्ता दिव इव कमितुः स्वर्गसिन्धोः प्रवाहाः
क्रान्त्यै संसारसिन्धोः स्फटिकमणिमहासंक्रमाकारदीर्घाः ।
तिर्यग्विष्कम्भभूतास्त्रिभुवनवसतेर्भिन्नदैत्येभदेहा
बाहा वस्ता हरस्य द्रुतमिह निवहानंहसां संहरन्तु ॥ १७ ॥

கண்டாஶ்லேஷார்த்தமாப்தா: திவ இவ கமிது:
ஸ்வர்க ஸிந்தோ: ப்ரவாஹா:
க்ராந்த்யை ஸம்ஸார ஸிந்தோ: ஸ்படிகமணி மஹா
ஸங்க்ரமாகார தீர்கா: ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

திர்யக் விஷ்கம்ப பூதாஸ்த்ரிபுவந வஸதேர் பிந்ந
தைத்யேபதேஹா:
பாஹா வஸ்தா ஹரஸ்ய த்ருதமிவ நிவஹாநம்ஹஸாம்
ஸம்ஹரந்து ॥

कमितुः–அன்பரான பரமேச்வரனுடைய, **कण्ठाश्लेषार्थं**–கழுத்தைத் தழுவிக்கொள்வதற்காக, **दिवः**–ஆகாசத்திலிருந்து, **आप्ताः**–வந்த, **स्वर्गसिन्धोः**–ஆகாசகங்கையினுடைய, **प्रवाहाः इव (स्थिताः)** – பெருக்குகள் போலிருப்பவைகளும், **संसारसिन्धोः**–ஸம்ஸாரமாகிய கடலை, **क्रान्त्यै**–கடப்பதற்காக, **स्फटिकमणि**–படிகக்கற்களின், **महासंक्रमाकार**–பெரிய அணைகளின் உருவம்போல், **दीर्घाः**–நீண்டவைகளாயும், **त्रिभुवन-वसतेः**–மூன்று உலகங்களாகிய இல்லத்தின், **तिर्यग्विष्कम्भ-भूताः**-குறுக்கில் போடப்பட்ட தாழ்ப்பாள்கள் போன்றனவாயும், **भिन्न**-பிளக்கப்பட்ட, **दैत्येभ**-அரக்கர்களாகிய யானைகளின், **देहाः**–உடல்களையுடையவைகளாயும் விளங்குகின்ற **हरस्य**–சிவபெருமானுடைய, **ताः बाहाः**–அப்புஜங்கள், **द्रुतं**–விரைவில், **वः**–உங்களுடைய, **अंहसां**–பாவங்களின், **निवहान्**
குவியல்களை, **संहरन्तु**–நாசம் செய்யட்டும்.

தனது அன்பனான சிவபெருமானை ஆலிங்கனம் செய்து கொள்வதற்காக கங்காதேவி ஆகாசத்திலிருந்து வருகின்றாள். அவளுடைய நீர்ப் பெருக்குகளே பரமசிவனுடைய அழகிய புஜங்களாக விளங்குகின்றன; அப்புஜங்கள் ஸ்படிகங்கள்போல் காணப்படுகின்றன. அவைகள் பக்தர்களைத் தூக்கிவிடுகின்றன. ஆதலால் இவைகள் ஸம்ஸாரமெனும் கடலைக் கடப்பதற்காகக் கட்டுவித்த படிக அணைபோல் தோன்றுகின்றன. மேலும் இம்மூவுலகும் ஓர் பெரிய மாடிக் கட்டிடம் போன்றது. இதைக் காப்பதற்காகக் குறுக்கில் போடப்பட்ட தாழ்ப்பாள்கள் போல் பரமனுடைய புஜங்கள் அமைந்துள்ளன. இவைகள் மதங்கொண்ட அரக்கர்களாகிய யானைகளின் மத்தகங்களைப் பிளந்து உலகங்களைக் காக்கின்றன. இவைகள் உங்களுடைய பாவங்கள் அனைத்தையும் உடனேயே அழித்து உங்கள் அனைவரையும் காத்தருளட்டும். (17)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

(அ) பகவானுடைய மார்பு வர்ணிக்கப்படுகிறது :—

रक्षोवक्षोविफालं स्मरहरवनिताऽक्षीणवक्षोजकान्तं
वक्षो निक्षिप्तमालं मलयजमिलितोद्भासिभस्मोक्षितं यत् ।
क्षिप्रं तद्रूक्षचक्षुःश्रुतिगणफणरत्नौघभाभीक्ष्णशोभं
युष्माकं शश्वदेनः स्फटिकमणिशिलामण्डलाभं क्षिणोतु ॥

ரக்ஷோ வக்ஷோ விபாலம் ஸ்மரஹர வனிதா ऽ க்ஷீண வக்ஷோஜ காந்தம்
வக்ஷோ நிக்ஷிப்த மாலம் மலயஜ மிலிதோத்பாஸி பஸ்மோக்ஷிதம் யத் ।
க்ஷிப்ரம் தத் ரூக்ஷ சக்ஷு : ச்ருதி கண பண ரத்நௌக பாபீக்ஷ்ண சோபம்
யுஷ்மாகம் சச்வதேந : ஸ்படிக மணி சிலா மண்டலாபம் க்ஷிணோது ॥

रक्षोवक्षोविफालं-அரக்கர்களின் மார்பைப் பிளக்கின்றதாயும், स्मरहर-மன்மதனை எரித்த பரமேச்வரனுடைய, वनिता-மனைவியான பார்வதிதேவியின், अक्षीण-பருத்த, वक्षोजकान्तं-ஸ்தனங்களால் மனோஹரமானதாயும், निक्षिप्त-मालं-அணிந்து கொள்ளப்பட்ட ரத்னமாலைகளை உடையதாயும், मलयजमिलितोद्भासि-சந்தனக்குழம்புடன் சேர்ந்து விளங்குகின்ற, भस्मोक्षितं-விபூதியால் பூசப்பட்டதாயும், यत् वक्षः-யாதொரு மார்பு உள்ளதோ, रूक्ष-கொடிய, चक्षुः श्रुति-பாம்புகளின், गण-கூட்டங்களுடைய, फण-படங்களிலுள்ள रत्नौघ-ரத்னக்கூட்டங்களின், भा-ஒளியால், अभीक्ष्ण-மிகுந்த शोभं-அழகு வாய்ந்ததும், स्फटिकमणिशिला-ஸ்படிகமணிகளின், मण्डलाभं-மண்டலத்தைப் போல் விளங்குகின்றதுமான, तत् वक्षः-அம்மார்பு, शश्वत्-அடிக்கடி, युष्माकं-உங்களுடைய, एनः-பாபத்தை, क्षिप्रं-விரைவாக, क्षिणोतु-நாசம் செய்யட்டும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பரமசிவனுடைய மார்பு மிகவும் விசாலமானது. சிவபெருமான் அரக்கர்களுடன் மல்யுத்தம் செய்யும்பொழுது அது அவர்களுடைய மார்புகளைப் பிளந்து அவர்களை அழிக்கின்றது. பார்வதிதேவி பரமேச்வரனை இறுகத் தழுவிக்கொள்ளும்பொழுது அவளுடைய கொங்கைகள் அவரது மார்பில் படிகின்றன. அதனால் அவரது மார்பு மிகவும் அழகுபெறுகின்றது. அந்தக் கொங்கைகளில் பூசியுள்ள சந்தனம் பகவானுடைய மார்பில் உள்ள விபூதியுடன் கலந்து மிகுந்த வாஸனையுடன் காட்சியளிக்கிறது. மேலும் சிவபெருமான் ரத்னஹாரங்களைத் தமது மார்பில் அணிந்துகொண்டிருக்கின்றான். அவைகளின் ஒளிகள் அவரது மார்பை மிகவும் பிரகாசப்படுத்திக்கொண்டிருக்கின்றன. மிகக் கொடிய ஸர்ப்பங்கள் அவருடைய மார்பைச் சுற்றிக்கொண்டிருக்கின்றன. அவைகளின் படங்களில் சிறந்த ரத்னங்கள் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன. அவைகளின் ஒளியால் பரமேச்வரனுடைய மார்பு மிகவும் பிரகாசிக்கின்றது. ஸ்படிகக் கற்களின் மண்டலம்போன்ற அம்மார்பு உங்களுடைய பாபங்கள் அனைத்தையும் அடிக்கடி அழிக்கட்டும். (18)

(அ) பாற்கடல்போல் விளங்கும் பரமேசனுடைய உதரம் (வயிறு) வர்ணிக்கப்படுகிறது :—

मुक्तामुक्ते विचित्राकुलवलिलहरीजालशालिन्यवाञ्च-
न्नाभ्यावर्ते विलोलद्भुजगवरयुते कालशत्रोर्विशाले ।
युष्मच्चित्तत्रिधामा प्रतिनवरुचिरे मन्दिरे कान्तिलक्ष्म्याः
शेतां शीतांशुगौरे चिरतरमुदरक्षीरसिन्धौ सलीलम् ॥ १९ ॥

முக்தாமுக்தே விசித்ராகுல வலிலஹரீ ஜால ஶாலிந்யவாஞ்ச-
ந்நாப்யாவர்தே விலோலத் புஜகவர யுதே கால ஶத்ரோர்
விஶாலே ।
யுஷ்மச்சித்த த்ரிதாமா ப்ரதிநவ ருசிரே மந்திரே
காந்திலக்ஷ்ம்யா:
ஶேதாம் ஶீதாம்ஶு கௌரே சிர தரமுதர க்ஷீரஸிந்தௌ
ஸலீலம் ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

मुक्तामुक्ते-ஹாரத்திலுள்ள முத்துக்களுடன் கூடியதும், **विचित्र**-அதிசயமாயும், **आकुल** – நெருங்கியதுமான, **वलि**-மடிப்புகளின், **लहरीजाल**-காந்திப் பெருக்குகளால், **शालिनि**-விளங்குகின்றதும், **अवाञ्चन्**- இடதுபுறம் பிரிகின்ற, **नाभ्यावर्त** -தொப்புளாகிய சுழலையுடையதும், **विलोलत्** – அசைந்து கொண்டிருக்கின்ற, **भुजगवरयुते**-சிறந்த ஸர்ப்பங்களுடன் கூடியதும், **विशाले**-விசாலமானதும், **प्रतिनवरुचिरे** – ஒவ்வொரு விநாடியும் புதியதும் மனோஹரமானதும், **कान्ति-लक्ष्म्याः**-பிரகாசமாகிற லக்ஷ்மிக்கு, **मन्दिरे** – இருப்பிடமான தும், **शीतांशुगौरे**–சந்திரனைப்போல் வெளுப்பாகவும் உள்ள, **कालशत्रोः**–காலனை யழித்த சிவபெருமானுடைய, **उदरक्षीर-सिन्धौ**–வயிறாகிய பாற்கடலில், **युष्मत्**–உங்களுடைய, **चित्त-त्रिधामा**–மனமாகிய கங்கை, **सलीलं**–உல்லாசமாக, **चिरतरं**-வெகுகாலம், **शेताम्**–பள்ளிகொண்டிருக்கட்டும்.

இங்கு பரமேச்வரனுடைய வயிற்றைப் பாற்கடலாக உருவகப்படுத்திக் கூறப்பட்டிருக்கின்றது. பாற்கடலில் சிறந்த நல்முத்துகள் விளைகின்றன. பரமேச்வரன் தனது கழுத்தில் நீண்ட முத்துமாலைகளை அணிந்துகொண்டிருக்கிறான். அவைகளின் முத்துக்கள் அவனுடைய வயிற்றின் மேல் படிந்து அதை அழகுபடுத்துகின்றன. சமுத்திரம் ஒவ்வொரு நிமிடமும் எழுகின்ற அலைகளால் பார்ப்பவர்களின் கண்களைக் கவருகின்றது. அதுபோலவே பரமேச்வரனுடைய வயிற்றிலும் அலைகள் போன்ற மூன்று மடிப்புகள் காணப்படுகின்றன. சமுத்திரத்தில் பெருஞ்சுழல்கள் உண்டாகின்றன. அதேமாதிரி பரமேச்வரனுடைய நாபியும் இடதுபக்கமாகச் செல்லும் சுழல் போல் விளங்குகின்றது. பாற்கடலில் பல அரவங்கள் நீந்தி விளையாடுகின்றன. பரமேச்வரனுடைய வயிற்றிலும் பல பாம்புகள் சுற்றிக் கொண்டிருக்கின்றன. பாற்கடல் மிகவும் பரந்து எங்கும் வியாபித்துள்ளது. பரமேச்வரனுடைய வயிறும் விசாலமானது. பாற்கடல்போல் பரமசிவனது வயிறும் பார்ப்பவர்களின் உள்ளத்தை ஒவ்வொரு விநாடியும் மகிழ்விக்கின்றது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பாற்கடலில் மகாலக்ஷ்மி தோன்றினுள். ஆதலால் அது அவளுக்குப் பிறப்பிடமாய் அமைந்துள்ளது. அதேமாதிரி சிவபெருமானுடைய வயிறும் அழகுத்தெய்வத்தின் திருக் கோவிலாகக் காணப்படுகிறது. பாற்கடலைக் கடையும் பொழுது அதிலிருந்து சந்திரன் தோன்றினுன். அதனுல் அக்கடல் மிகவும் வெண்மையாக விளங்குகிறது. இங்கு சிவபெருமானது வயிறும் சந்திரனைப்போல் வெண்மையாகத் தோன்றுகின்றது. பக்தனுடைய மனமோ கங்காஜலம் போல் மாசற்றது. எவ்வாறு கங்கை நீர் கடலில் கலக் கின்றதோ அவ்வாறே பக்தனுடைய மனமும் பரமேச்வர னுடைய வயிற்றில்போய் ஒன்றுபட்டுவிடுகின்றது. கங்கா ஜலம் ஸமுத்திரத்துடன் சேர்ந்தவுடன் மறுபடி பிரிக்க முடியாதபடி ஸமுத்திர ஜலத்துடன் ஒன்ருகிவிடுகிறது. அதுபோல பகவானுடைய உதரத்தைத் தீவ்ரமாக தியானம் செய்யும் பக்தனுடைய மனம் பகவத் ஸ்வரூபத்தில் கலந்து விடுகிறது. அதனுல் அவன் பரம ஸுகத்தை அனுபவிக் கிருன். (19

(அ) புலித்தோல் கட்டிய பரமசிவனுடைய இடுப்பு வர்ணிக்கப்படுகிறது :—

वैयाघ्री यत्र कृत्तिः स्फुरति हिमगिरेर्विस्तृतोपत्यकान्तः
सान्द्रावश्यायमिश्रा परित इव वृता नीलजीमूतमाला ।
आबद्धाहीन्द्रकाञ्चीगुणमतिपृथुलं शैलजाक्रीडभूतं
तद्वो निःश्रेयसे स्याज्जघनमतिघनं बालशीतांशुमौलेः ॥

வையாக்ரீ யத்ர க்ருத்தி: ஸ்புரதி ஹிமகிரேர் விஸ்த்ரு
தோபத்யகாந்த:
ஸாந்த்ராவச்யாய மிச்ரா பரித இவ வ்ருதா நீல
ஜீமூத மாலா ।
ஆபத்தாஹீந்த்ர காஞ்சீ குணமதிப்ருதுலம் ஶைலஜாக்ரீட
பூதம்
தத்வோ நி:ஶ்ரேயஸே ஸ்யாஜ்ஜகநமதிகநம்
பால ஶீதாம்ஶுமௌளே: ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

यत्र-எந்த பரமேச்வரனுடைய இடுப்பில், वैयाघ्री कृत्तिः-புலித்தோல், हिमगिरेः-இமயமலையினுடைய, विस्तृत விசாலமான, उपत्यकान्तः – தாழ்வரையினுள், सान्द्रावश्यायमिश्रा-அடர்த்தியான பனியுடன்கூடிய, परितः-நான்கு பக்கங்களிலும், वृता-சூழ்ந்துள்ள, नीलजीमूतमाला इव-நீலமேகத்தின் வரிசைபோல, स्फुरति-விளங்குகிறதோ, आबद्धाहीन्द्र-काञ्चीगुणं-கட்டப்பட்ட பாம்புகளாகிய இடைப்பட்டையை உடையதும், अतिपृथुलं – மிகவும்பெரியதாயும், शैलजा-பார்வதி தேவிக்கு, आक्रीडभूतं-விளையாடும் உத்யானமாக அமைந்ததும், अतिघनं-மிகவும் அடர்ந்ததுமான, बालशीतांशु-मौलेः-இளம்பிறைச் சந்திரனைத் தலையில்கொண்ட சிவபெருமானுடைய, तत्-அந்த, जघनं-இடுப்பு, वः-உங்களுக்கு, निःश्रेयसे-மோக்ஷத்தையளிப்பதற்காக, स्यात्-இருக்கட்டும்.

சிவபெருமான் தன்னுடைய இடுப்பில் புலித்தோலைக் கட்டிக் கொண்டிருக்கிறார். அத்தோலில் அழகிய புள்ளிகள் அமைந்துள்ளன. இதனால் அது இமயமலையின் தாழ்வரைகளில் படிந்துள்ள நீலமேக மண்டலம்போல் விளங்குகின்றது. இமயமலையின் கனத்த பனித் துளிகள் மேக மண்டலங்களில் படிவதால் அவைகள் புள்ளிகள் பதிந்த புலித் தோலைப் போல் காணப்படுகின்றன. இடையிலுள்ள ஆடையை அவர் பாம்புகளாகிய அரை நாண் கயிற்றால் இறுகக் கட்டிக் கொண்டிருக்கிறார். மிகவும் விசாலமான இடுப்பு மலைமகள் விளையாடுவதற்கு உகந்த ஓர் அழகிய தோட்டம் போல் தோன்றுகின்றது. இவ்வாறு விளங்கும் இடுப்பு உங்கள் எல்லோருக்கும் மோக்ஷத்தை அளிக்கட்டும்.

(அ) மூவுலகங்களுக்கும் ஆதாரமான ஊருக்களின் (துடைகளின்) வர்ணனை :—

पुष्टावष्टम्भभूतौ पृथुतरजघनस्येव नित्यं त्रिलोक्याः
सम्यग्वृत्तौ सुरेन्द्रद्विरदवरकरोदारकान्ति दधानौ ।
सारावूरू पुरारेः प्रसभमरिघटाघस्मरौ भस्मशुभ्रौ
भक्तैरत्यार्द्रचित्तैरधिकमवनतौ वाञ्छितं वो विधत्ताम् ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

புஷ்டாவஷ்டம்ப பூதௌ ப்ருதுதர ஜகநஸ்யேவ
நித்யம் த்ரிலோக்யா
ஸம்யக் வ்ருத்தௌ ஸுரேந்த்ர த்விரதவர கரோதார
காந்திம் ததானௌ।
ஸாராவூரு புராரே: ப்ரஸபமரிகடா கஸ்மரௌ
பஸ்ம ஶுப்ரௌ
பக்தைரத்யார்த்ர சித்தைரதிகமவநதௌ
வாஞ்சிதம் வோ விதத்தாம் ॥

पृथुतर-மிகவும் பெரிய, जघनस्य इव-இடுப்புக்குப்போல், नित्यं-எப்பொழுதும், त्रिलोक्याः-தன் வயிற்றுக்குள் இருக்கும் மூன்று உலகங்களுக்கும், पुष्टावष्टम्भभूतौ - உறுதியான தாங்கும் தூண்களாகவிளங்குகின்றவைகளாயும், सम्यग्वृत्तौ நன்ருக உருண்டையானவைகளாயும், सुरेन्द्र-தேவேந்திரனுடைய, द्विरदवर-சிறந்த யானையாகிய ஐராவதத்தின், कर -துதிக்கையைப்போல், उदारकान्ति-சிறந்த அழகை, दधानौ-தரிக்கின்றவைகளாயும், सारौ - சிறப்புற்றவைகளாயும், प्रसभं-பலாத்காரமாக, अरिघटा-பகைவர்களின் கூட்டத்தை, घस्मरौ-நாசம் செய்கின்றவைகளாயும், भस्मशुभ्रौ-விபூதியால் வெளுப்பானவைகளாயும், अत्यार्द्रचित्तैः-பக்திவெள்ளத்தால் மிகவும் நனைந்த மனதையுடைய, भक्तैः-பக்தர்களால், अधिकं -மிகவும், अवनतौ-வணங்கப்பட்டவைகளாயுமுள்ள, पुरारेः-திரிபுரர்களைக் கொன்ற சிவபெருமானுடைய, ऊरू - இரு தொடைகளும், वः - உங்களுக்கு, वाञ्छितं - விரும்பிய பொருளை, विधत्ताम्-கொடுக்கட்டும்.

பரமேச்வரனுடைய இருதொடைகளும் மிகுந்த பலம் வாய்ந்தவை. அவைகள் அவருடைய இடுப்பைப்போல், விசாலமான வயிற்றையும் தாங்கி நிற்கின்றன. அவருடைய வயிற்றில் மூவுலகும் வீற்றிருக்கின்றன. இம்மூவுலகும் மூன்று மாடிகளுள்ள ஓர் பெரிய கட்டிடம்போல் அமைந்துள்ளது. இதைத்தாங்க மிக்க வலுவுள்ள தூண்கள் இன்றியமையாதவை. பரமேச்வரனுடைய தொடைகளே இத்தூண்கள். இவைகள் மிகவும் உருண்டு திரண்டு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தேவேந்திர னுடைய யானையாகிய ஐராவதத்தின் துதிக்கை போல் அழகாக விளங்குகின்றன. இவைகள் சத்ருக்களின் கூட்டத்தை யெல்லாம் நசுக்கும் சக்தி வாய்ந்தவைகள். இவைகளின் மேல் விபூதி பூசப்பட்டிருப்பதால் இவைகள் மிகவும் வெளுப்பாகத் தோன்றுகின்றன. பக்தர்கள் மிகுந்த ப்ரேமையுடன் இவைகளை வணங்கித் துதிக்கின்றனர். இவ்வாறு தோன்றும் இவ்விரு தொடைகளும் உங்களுடைய அபீஷ்டங்களை எல்லாம் ஈந்தருளட்டும். (21)

(அ) சந்திர மண்டலம் போன்ற கால் முட்டுக்களை வர்ணிக்கிறார்:—

आनन्दायेन्दुकान्तोपलरचितसमुद्गायिते ये मुनीनां
चित्तादर्शं निधातुं विदधति चरणे ताण्डवाकुञ्चनानि ।
काञ्चीभोगीन्द्रमूर्ध्नां प्रतिमुहुरुपधानायमाने तदानीं
शश्वत्स्तामन्तकारेर्द्युतिविजितसुधाभानुनी जानुनी वः ॥

ஆநந்தாயேந்துகாந்தோபல ரசித ஸமுத்காயிதே யே முநீநாம்
சித்தாதர்ஶம் நிதாதும் விதததி சரணே தாண்டவா குஞ்சநாநி ।
காஞ்சீ போகீந்த்ர மூர்த்நாம் ப்ரதிமுஹுருபதாநாய மாநே ததாநீம்
ஶஶ்வத் ஸ்தாமந்தகாரேர் த்யுதி விஜித ஸுதாபாநுநீ ஜாநுநீ வ: ॥

मुनीनां–முனிவர்களின், **चित्तादर्शं**–மனம் என்னும் கண்ணாடியை, **निधातुं**–வைப்பதற்கு, **इन्दुकान्तोपल**-சந்திரகாந்தக் கல்லினால், **रचित**-செய்யப்பட்ட, **समुद्गायिते**–சம்புடம்போல் விளங்குகின்ற, **ये**–எந்த கால் முட்டுகள், **चरणे**–கால், **ताण्डवाकुञ्चनानि**–தாண்டவமென்னும் நடனத்தில் வளைவுகளை, **विदधति सति**–செய்யும்பொழுது, **तदानीं**–அச்சமயம் மட்டும், **काञ्ची**–கடிஸூத்ரமாக விளங்கும், **भोगीन्द्र**–சிறந்த பாம்புகளின், **मूर्ध्नां**–தலைகளுக்கு, **प्रतिमुहुः**–அடிக்கடி, **उपधानायमाने** தலையணைகளாக ஆகின்றனவோ, **द्युति**–காந்தியால், **विजित**

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

—ஜயிக்கப்பட்ட, **सुधाभानुनी**-சந்திரனையுடைய, **ते**-அந்த, **अन्तकारेः**-காலனைக்கொன்ற பரமசிவனுடைய, **जानुनी**-கால் முட்டுகள், **शश्वत्**-எப்பொழுதும், **वः**-உங்களுக்கு, **आनन्दाय**-சந்தோஷத்தைக் கொடுப்பதற்காக, **स्ताम्**-இருக்கட்டும்

பரமேச்வரனுடைய கால் முட்டுக்கள் மிகவும் அழகுள்ளவை. அவை பக்தர்களின் மனம் என்னும் கண்ணாடியை வைப்பதற்கு சந்திரகாந்தக்கல்லால் செய்யப் பட்ட பேழை போன்று விளங்குகின்றன. பரமேச்வரன் மிக்க மகிழ்ச்சியுடன் தாண்டவமாடும்பொழுது தன்னுடைய கால்களை உயரத் தூக்குகின்றான். அப்பொழுது முழங்கால் கள் மாறி மாறி இடுப்பிற்கு மேல் தூக்கப்படுகின்றன. அவ்வமயம் பரமேச்வரனுடைய இடுப்பில் கட்டப்பட்டுள்ள ஸர்ப்பங்களின் தலைகள் அவற்றின் மேல் படுகின்றன. அப்பொழுது அவைகள் அப்பாம்புகளுக்குத் தலையணிபோல் விளங்குகின்றன. இவைகள் தங்களுடைய காந்தியால் பூர்ணசந்திரனையும் வெல்கின்றன. இவ்வாறு தோன்றும் பரமேச்வரனுடைய கால் முட்டுகள் உங்களுக்கு என் றென்றும் மகிழ்ச்சி அளிக்கட்டும். (22)

(அ) முழங்கால்களை வர்ணிக்கிறார்:—

मञ्जीरीभूतभोगिप्रवरगणफणामण्डलान्तर्नितान्त-
व्यादीर्घानर्घरत्नद्युतिकिसलयिते स्तूयमाने द्युसद्भिः ।
बिभ्रत्यौ विभ्रमं वः स्फटिकमणिदृषद्दण्डवद्भासिते ये
जङ्घे शङ्खेन्द्रशुभ्रे भृशमिह भवतां मानसे शूलपाणेः ॥

மஞ்ஜீரீபூத போகி ப்ரவர கண பணா மண்டலாந்தர் நிதாந்த
வ்யாதீர்காநர்க ரத்ந த்யுதி கிஸலயிதே ஸ்தூயமாநே
த்யுஸத்பி : ।
பிப்ரத்யௌ விப்ரமம் வ : ஸ்படிக மணி த்ருஷத் தண்டவத்
பாஸிதே யே
ஜங்கே ஶங்கேந்த்ர ஶுப்ரே ப்ருஶமிஹ பவதாம்
மாநஸே ஶூல பாணே: ॥

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ये-எந்த முழங்கால்கள், मञ्जीरीभूत-கால் சிலம்புகளாக விளங்குகின்ற, भोगिप्रवरगण-சிறந்த ஸர்ப்பக்கூட்டங்களுடைய, फणामण्डल-வட்டமான படங்களின், अन्तः-நடுவில் नितान्त-மிகவும், व्यादीर्घ-நீண்டவைகளான, अनर्घ-விலை உயர்ந்த, रत्नद्युति-ரத்னங்களின் ஒளியால், किसलयिते-துளிர்களுடன் கூடியவைபோலத் தோன்றுகின்றவைகளாயும், द्युसद्भिः-தேவர்களால், स्तूयमाने-புகழப்படுகின்றவைகளாயும் विभ्रमं-அழகை, बिभ्रत्यौ-தாங்குகின்றவைகளாயும், स्फटिकमणिदृषद्-படிகக்கல்லின், दण्डवत्-தண்டம்போல், भासिते-பிரகாசிக்கின்றவைகளாயும், शंखेन्द्र - சிறந்த சங்குபோல், शुभ्रे-வெளுப்பானவைகளாயும் இருக்கின்றனவோ, ते-அந்த शूलपाणेः-சூலமென்ற ஆயுதத்தைக் கையில் ஏந்திய சிவபெருமானுடைய, जङ्घे-முழங்கால்கள், इह-இங்கு, वः मानसे-உங்களுடைய மனதில், भृशं-அதிகமாக, भवताम्-இருக்கட்டும்.

சிவபெருமான் நடனகலாவல்லவர். நடனமாடுவதற்காக அவர் தன்னுடைய கால்களில் பாம்புகளாகிய சிலம்புகளை அணிந்து கொண்டிருக்கிறார். அப் பாம்புகளின் படங்களில் சிறந்தரத்னங்கள் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன. அவைகளின் ஒளி நிறைந்த கதிர்கள் அவருடைய முழங்கால்கள் மீது படிகின்றன. அதனால் அவைகள் அழகிய துளிர்களுடன் கூடியவைகள் போல் விளங்குகின்றன. இவைகள் தேவலோகத்தில் வாழும் தேவர்களால் புகழப்படுகின்றன. இவைகள் படிகம் என்னும் மணியால் செய்யப்பட்டவைகள் போல் தோன்றுகின்றன. சிறந்த சங்குகள் போல் மிகவும் வெளுப்பாகக் காணப்படுகின்ற சிவபெருமானுடைய இம்முழங்கால்கள் உங்களுடைய மனதில் என்றும் பிரகாசித்துக் கொண்டிருக்கட்டும். (23)

(அ) யோகிகள் தியானிக்கும் பாதாக்ரங்களின் (கால் நுனிகளின்) வர்ணனை :-

अस्तोकस्तोत्रशस्तैरपचितिममलां भूरिभावोपहारैः
कुर्वद्भिः सर्वदोच्चैर्मुनिभिरभिवृतौ धर्मविद्देवलाद्यैः ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

सम्यक्संपूज्यमानौ हृदयसरसिजे मानसे युष्मदीये
शर्वस्य क्रीडतां तौ प्रपदवरबृहत्कच्छपावच्छभासौ ॥ २४ ॥

அஸ்தோக ஸ்தோத்ர ஶஸ்தைரபசிதிமமலாம்
பூரி பாவோபஹாரை :
குர்வத்பி : ஸர்வதோச்சைர் முனிபிரபிவ்ருதௌ
தர்மவித் தேவலாத்யை : ।
ஸம்யக் ஸம்பூஜ்யமானௌ ஹ்ருதய ஸரஸிஜே மானஸே
யுஷ்மதீயே
ஶர்வஸ்ய க்ரீடதாம் தௌ ப்ரபதவர ப்ருஹத் கச்சபாவச்ச
பாஸௌ ॥

अस्तोक-அதிகமான, **स्तोत्र**-துதிகளால், **शस्तैः**-போற்றப் பட்டவர்களாயும், **भूरि**-மிகுந்த, **भाव**-பாவனையாகிற, **उपहारैः**-திரவ்யங்களால், **अमलां**-மாசற்ற, **अपचितिं**-பூஜையை, **सर्वदा**-எப்பொழுதும், **उच्चैः**-அதிகமாக, **कुर्वद्भिः**செய்கின்ற வர்களாயும் உள்ள, **मुनिभिः**-முனிவர்களால், **परिवृतौ**-சூழப் பட்டவைகளாயும், **धर्मवित्**-தர்மத்தையறிந்த, **देवलाद्यैः**-தேவலர் முதலியவர்களால், **हृदयसरसिजे** - ஹிருதயமாகிய தாமரையில், **सम्यक्**-நன்றாக, **संपूज्यमानौ**-பூஜிக்கப்படுகின்ற வைகளாயும், **अच्छभासौ**-நல்ல ஒளியுடன் கூடியவைகளா யும் உள்ள, **तौ**-அந்த, **शर्वस्य**-பரமேச்வரனுடைய, **प्रपद**-பாதங்களின் முன் பாகங்களாகிய, **वर**-சிறந்த, **बृहत्कच्छपौ**-பெரிய ஆமைகள், **युष्मदीये**-உங்களுடைய, **मानसे**-மனதில் **क्रीडताम्**-விளையாடட்டும்.

பரமேச்வரனுடைய முன் பாதங்கள் ஆமைகள் போல் அழகாக விளங்குகின்றன. அவைகள் மிகுந்த பிரகாசத்தை உடையவைகள். தர்மத்தை நன்கு அறிந்த தேவலர் போன்ற மாமுனிவர்கள் அத்திருப்பாதங்களைத் தங்களுடைய ஹ்ருதய கமலங்களில் இறுத்தி வழிபடுகிறார்கள். மேலும் மிகுந்த புகழ் வாய்ந்த தபஸ்விகள் அத்திருப்பாதங்களைச்சுற்றி அமர்ந்து மானஸ பூஜை செய்கிறார்கள். எல்லா உபசாரங்களையும் மனதாலே பாவனை செய்து ஸமர்ப்பணம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

செய்கிறார்கள். சரீரத்தாலும் வாக்காலும் செய்யப்படும் பூஜைகளைக்காட்டிலும் மனதால் செய்யப்படும் பூஜையே சாலச்சிறந்தது. தூய்மை வாய்ந்தது. பன்மடங்கு பலன் தரவல்லது. இத்திருப்பாதங்களாகிய ஆமைகள் உங்களுடைய மன்மாகிய மானஸ ஸரோவரத்தில் உல்லாஸமாக விளையாடட்டும்.

இங்கு பரமேச்வரனுடைய பாதங்களின் முன்பாகங்களை ஆமைகளாக உருவகப்படுத்திக் கூறப்பட்டிருக்கின்றது. ஆமைகள் பெரிய தடாகங்களில் உல்லாஸமாக விளையாடுகின்றன. அதுபோல இவ்வாமைகளும் பக்தர்களின் மனமாகிய தடாகத்தில் விளையாடவேண்டும். மானஸம் என்ற சொல் இரு பொருள் கொண்டது. அதற்கு மனது, மானஸஸரஸ் என்று இருபொருள்கள். இங்கு பக்தர் மனதே ஸரோவரம் பரமேச்வரனின் பாதங்களின் முன் பாகங்களே ஆமைகள். இவவாறு இருபொருள் கொண்டு மானஸம் என்ற சொல் கூறப்பட்டிருப்பதால் இங்கு சிலேஷை என்ற அணி அமைந்துள்ளது. மேலும் இங்கு எவ்வாறு ஆமைகள் உல்லாஸமாகத் தாமரைகள் நிறைந்த தடாகத்தில் விளையாடுகின்றனவோ அதேபோல பக்தர்களுடைய மனமாகிய தடாகத்திலும் பரமேச்வரனுடைய பாதங்கள் ரமிக்கட்டும் என்ற உவமையும் த்வனிக்கின்றது. பரமேச்வரனுடைய கால்களில் கச்சப ரேகைகள் விளங்குகின்றன என்பது இதன் கருத்து. இவ்வாறு சிறந்த ஸாமுத்ரிகாலக்ஷணம் வாய்ந்த பரமேச்வரனுடைய பாதகமலங்களை த்யானித்து வழிபடுகின்றவர்களுக்குச் சகல சிரேயஸ்ஸும் உண்டாகும் என்பது திண்ணம். (24)

(அ) ராவணன் கர்வத்தை அகற்றிய கால்விரல்களைத் துதிக்கிறார் :—

यः स्वस्यैकांशपातादतिबहुलगलद्रक्तवक्त्रप्रणुन्न-
प्राणं प्राक्रोशयन्प्राङ्निजमचलवरं चालयन्तं दशास्यम् ।
पादांगुल्यो दिशन्तु द्रुतमयुगदृशः कल्मषप्लोषकल्याः
कल्याणं फुल्लमाल्यप्रकरविलसिता वः प्रणद्धाह्विवल्यः ॥२५॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யா: ஸ்வஸ்யைகாம்ஶ பாதாததிபஹுல கலத்ரக்த வக்த்ர
ப்ரணுன்ன
ப்ராணம் ப்ராக்ரோஶயந் ப்ராங் நிஜமசலவரம் சாலயந்தம்
தஶாஸ்யம் ।
பாதாங்குள்யோ திஶந்து த்ருதமயுகத்ருஶ: கல்மஷ
ப்லோஷ கல்யா:
கல்யாணம் புல்லமால்ய ப்ரகர விலஸிதா: வ:
ப்ரணத்தாஹிவல்ய: ॥

या: – எந்த விரல்கள் **प्राक्**– முன் ஒரு சமயம் **निजं**– தன்னுடைய **अचलवरं**– சிறந்த மலையாகிய கைலயக்கிரியை **चालयन्तं**– அசைக்கின்ற **दशास्यं**– பத்து முகங்களையுடைய இராவணனை **स्वस्य**– தன்னுடைய **एकांशपातात्** ஒரு பாகத்தை அழுத்துவதால் **अतिबहुल**– மிகவும் அதிகமாக **गलत्**– பெருகுகின்ற **रक्त**– இரத்தத்தையுடைய **वक्त्र**– முகங்களிலிருந்து **प्रणुन्न**– வெளியேறுகின்ற **प्राणं**– உயிரையுடையவனாக **प्राक्रोशयन्**– கதறச் செய்தனவோ, **कल्मष**– பாவங்களை **प्लोष**– எரிப்பதில் **कल्या:** - சக்திவாய்ந்தவைகளாயும் **फुल्ल** - மலர்ந்த **माल्यप्रकर**- மலர் மாலைகளின் கூட்டங்களால் **विलसिता:** – விளங்குகின்றவைகளாயும் **प्रणद्ध**– கட்டப்பட்ட **अहिवल्य:** – கொடிகள் போன்ற பாம்புகளையுடையவைகளாயும் உள்ள **अयुगदृश:** – மூன்று கண்களை உடைய பரமேச்வரனுடைய **पादांगुल्य:** – (அந்த) கால்விரல்கள் **द्रुतं**– விரைவில் **व:** – உங்களுக்கு **कल्याणं**– நன்மையை **दिशन्तु**– அளிக்கட்டும்.

முன் ஒரு சமயம் இராவணன் குபேரனை வென்றுவிட்டு திரும்பும் பொழுது சிவபெருமான் வசித்துவரும் கைலயங்கிரியையும் தூக்கிக்கொண்டு செல்லமுயன்ருன். அவன் தன்னுடைய இருபது புஜங்களாலும் அம்மலையைப் பெயர்க்கத் துவங்கினுன். அப்பொழுது அம்மலை நடுங்கிற்று. அதையறிந்த பரமேச்வரன் அவனுடைய கர்வத்தை ஒடுக்க எண்ணித் தன் கால்விரல்களின் ஓர் பாகத்தை அம்மலை மீது மெதுவாக அழுத்தினுர். அதனுல் அவனது புஜங்கள் எல்லாம் நொறுங்கின, அவனது வாய்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

களிலிருந்து குருதி வெள்ளம் பெருகிற்று. அவனது உயிரும் உடலைவிட்டு நீங்க ஆரம்பித்தது. அவனும் சொல்லொணுத் துயருற்று ஓலமிட்டழுதான். பிறகு கர்வம் நீங்கி சிவனைத்துதித்து அவர் அருள்பெற்முன். சிவபெருமானுடைய கால்விரல்கள் அவ்வளவு சக்தி வாய்ந்தவை. அவைகள் பக்தர்களின் பாவங்களனைத்தையும் சுட்டுச்சாம்பலாக்கும் திறமை பெற்றவை. அவைகளைக் கொடிகள் போன்ற அரவங்கள் சுற்றிக்கொண்டிருக்கின்றன. மேலும் பரம பக்தர்கள் பரமேச்வரனுடைய பாத கமலங்களை வழிபடுவதற்காகப் போடப்படும் மலர்மாலைகள் அவைகள் மீது படிந்து கிடக்கின்றன. இவ்வாறு விளங்கும் முக்கண்ணனுடைய கால்விரல்கள் உங்களுக்கு க்ஷேமத்தை தந்தருளட்டும். (25)

(அ) நீலக்ரீவரின் பாதநகச்ரேணி வர்ணிக்கப்படுகிறது :—

प्रह्वप्राचीनबर्हिःप्रमुखसुरवरप्रस्फुरन्मौलिसक्त-
ज्यायोरत्नोत्करोस्रैरविरतममला भूरिनीराजिता या ।
प्रोद्ग्राग्रा प्रदेयात्ततिरिव रुचिरा तारकाणां नितान्तं
नीलग्रीवस्य पादाम्बुरुहविलसिता सा नखालिः श्रियं वः ॥

ப்ரஹ்வப்ராசீநபர்ஹி: ப்ரமுகஸுரவரப்ரஸ்புரந்மௌளிஸக்த
ஜ்யாயோரத்நோத்கரோஸ்ரைரவிரதமமலா பூரிநீராஜிதா யா
ப்ரோதக்ராக்ரா ப்ரதேயாத் ததிரிவ ருசிரா தாரகாணும் நிதாந்தம்
நீலக்ரீவஸ்ய பாதாம்புருஹவிலஸிதா ஸா நகாளி: ச்ரியம் வ:॥

प्रह्व– வணங்கிய **प्राचीनबर्हिःप्रमुख**– இந்திரன் முதலிய **सुरवर**– உயர்ந்ததேவர்களின் **प्रस्फुरन्**– விளங்குகின்ற **मौलि** கிரீடங்களில் **सक्त**– பதிக்கப்பட்டுள்ள **ज्यायोरत्न**– சிறந்த ரத்னங்களுடைய **उत्कर**– கூட்டங்களின் **उस्रैः** – கிரணங்களால் **अविरतं**– எப்பொழுதும் **भूरि**– அதிகமாக **नीराजिता**– பிரகாசமாகச் செய்யப்பட்டதாயும் **अमला**– மாசற்றதாயும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

प्रोदग्र– அதிக உன்னதமான **अग्रा**– நுனிகளையுடையதாயும் **तारकाणां**– நக்ஷத்திரங்களுடைய **ततिः इव**– வரிசைபோல **रुचिरा**– அழகு வாய்ந்ததுமான **नीलग्रीवस्य**– சிவபெருமானுடைய **पादाम्बुरुह**– தாமரைகள் போன்ற பாதங்களில் **विलसिता**– விளங்குகின்ற **या**– யாதொரு **नखालिः** - நகங்களின் வரிசை இருக்கின்றதோ **सा**– அது **वः** – உங்களுக்கு **नितान्तं**- மிகுந்த **श्रियं**– செல்வத்தை **प्रदेयात्**– கொடுக்கட்டும்.

இந்திராதி தேவர்கள் பரமேச்வரனுடைய பாதங்களில் பணிந்து வணங்குகின்றனர். அப்பொழுது அவர்களுடைய கிரீடங்களில் பதிக்கப்பட்டிருக்கும் உயர்ந்த ரத்னங்களின் கிரணங்கள் அவருடைய நகங்களின் மேல் விழுகின்றன. அந்நகங்கள் இயற்கையாகவே சிறந்த அழகுடன் பிரகாசிக்கின்றன. ரத்னங்களின் கிரணங்கள் படிவதால் நகங்கள் மிகுந்த காந்தியைப் பெறுகின்றன. தீப ஒளியால் தேவதைகளுக்கு நீராஜனம் செய்வதுபோல் தேவர்கள் மகுடத்திலுள்ள ரத்னங்களின் ஒளியால் மஹாதேவனின் கால்விரல் நகங்களுக்கு நீராஜனம் செய்கின்றனர். அவைகள் தூய்மைவாய்ந்தவை. நக்ஷத்திரங்களின் வரிசைகள் போல் பிரகாசிப்பவை. பக்தர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்பவை. இவ்வாறு விளங்கும் உயர்ந்த நுனிகளையுடைய சிவபெருமானுடைய நகங்களின் வரிசை உங்களுக்குச் சிறந்த செல்வத்தை அளிக்கட்டும். (26)

(அ) பக்தர்களின் மனதில் குடியிருக்கும் பாதாரவிந்தத்தை வர்ணிக்கிறார்:—

सत्याः सत्याननेन्दावपि सविधगते ये विकासं दधाते
स्वान्ते स्वां ते लभन्ते श्रियमिह सरसीवामरा ये दधानाः ।
..लं लोलम्बकानां कुलमिव विदुषां सेव्यते ये सदा स्वां
भूत्यै भूत्यैणपाणेर्विमलतररुचस्ते पदाम्भोरुहे वः ॥ २७ ॥

ஸத்யா: ஸத்யாநநேந்தாவபி ஸவிதகதே யே
விகாஸம் ததாதே
ஸ்வாந்தே ஸ்வாம் தே லபந்தே ஶ்ரியமிஹ
ஸரஸீவாமரா யே ததாநா: ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

லோலம் லோலம்பகாநாம் குலமிவ விதுஷாம் ஸேவதே
யே ஸதா ஸ்தாம்
பூத்யை பூத்யைணபாணேர் விமலதர ருசஸ்தே
பதாம்போருஹே வ: ||

सत्याः – பார்வதீ தேவியினுடைய आननेन्दौ– முகமாகிய சந்திரன் सविधगते सत्यपि– அருகில் இருந்தாலும் கூட ये– எந்த பாத கமலங்கள் विकासं दधाते– மலர்ச்சியை அடைகின்றனவோ ते अमराः – புகழ்பெற்ற அந்த விண்ணவர்கள் सरसि इव– பொய்கையில் போல स्वान्ते– தங்களுடைய மனதில் ये- எந்தப் பாத கமலங்களை दधानाः - வைத்துக் கொண்டு इह– இங்கு स्वां– தங்களுடைய श्रियं– செல்வத்தை लभन्ते– அடைகின்றார்களோ लोलं– ஆசையுடன் கூடிய लोलम्बकानां – வண்டுகளின் कुलमिव – கூட்டத்தைப்போல विदुषां– வித்வான்களுடைய कुलं– கூட்டம் ये– எந்தப் பாத கமலங்களை सेवते– வழிபடுகின்றதோ भूत्या (युक्तस्य)– ஐச்வர்யத்துடன் கூடியவனும் विमलतररुचः – மிகுந்த காந்தியை உடையவனுமான एणपाणेः மானைக் கையில் கொண்ட பரமேச்வரனுடைய ते पदाम्भोरुहे– அந்தப் பாத கமலங்கள் वः– உங்களுக்கு सदा– எப்பொழுதும் भूत्यै– செல்வத்திற்காக स्ताम्– இருக்கட்டும்.

பரமேச்வரன் மாசற்ற காந்தியுள்ளவன். அவன் தன்னுடைய கையில் மானை வைத்துக்கொண்டிருக்கிறான். அவனுடைய பாதகமலங்கள் மிகுந்த பொலிவுடன் விளங்குகின்றன. பார்வதீ தேவி அவனது பாதகமலங்களில் பணியும் பொழுது அவனுடைய முகம் அவைகளின் அருகில் நெருங்குகிறது அப்பொழுது பாதங்கள் மிகுந்த சோபையுடன் விளங்குகின்றன. முகம் சந்திரன் போலவும் பாதம் தாமரை போலவும் காக்ஷியளிக்கிறது. உலகில் சந்திரோதயமான பிறகு தாமரை மூடிவிடுகிறது. மலர்ந்திருப்பதில்லை. ஆனால் இங்கு தேவியின் முகம் என்ற சந்திரன் அருகில் வந்தபோதிலும் பாதாரவிந்தம் மலர்ந்தே இருக்கிறது. அதனால் இங்கு விபாவனா என்ற அணி விளங்குகின்றது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இது முகமாகிய சந்திரன் என்ற உருவகத்துடன் கலந்திருக்கின்றது. மேலும் இந்திராதி தேவர்கள் அப்பாதகமலங்களைத் தங்கள் மனமாகிய பொய்கையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். தாமரைகள் பொய்கையில் மலர்கின்றன. அதுபோல தேவர்களின் மனதில் இப்பாதங்கள் விளங்குகின்றன. அதாவது தேவர்கள் தங்களுடைய மனதில் பரமேச்வரனுடைய பாதகமலங்களை த்யானம் செய்கிறார்கள். அதனால் அவர்கள் தங்கள் தங்களுடைய ஐச்வர்யத்தை அடைகிறார்கள். வண்டுகளின் இனங்கள் மிக்க ஆவலுடன் தாமரையை அடைகின்றன. அது போலவே அறிவாளிகளின் கூட்டம் பரமேச்வரனுடைய பாதகமலங்களைப் போற்றுகின்றது. இவ்வாறு விளங்கும் பாதகமலங்கள் உங்களுக்குச் சகல ஐச்வர்யங்களையும் அள்ளி அளிக்கட்டும். (27)

(அ) ராகம் முதலிய தோஷங்களைப்போக்கி பிறவிக் கடலைத் தாண்டச்செய்யும் பாததூளியை வர்ணிக்கிறார்:—

येषां रागादिदोषक्षतमतियतयो यान्ति नित्यं प्रसादा-
द्देवान्नम्रात्ममूर्तिद्युसदृषिपरिषन्मूर्ध्नि भूषायमाणाः ।
श्रीकण्ठस्यारुणोद्यच्चरणसरसिजप्रोत्थितास्ते भवाख्या-
त्पारावाराच्चिरं वो दुरितहतिकृतस्तारयेयुः परागाः ॥ २८ ॥

யேஷாம் ராகாதி தோஷ க்ஷதமதி யதயோ யாந்தி
நித்யம் ப்ரஸாதாத்
தேவாந் நம்ராத்ம மூர்த்தி த்யுஸத்ருஷி பரிஷன்மூர்த்நி
பூஷாயமாணா: ।
ஸ்ரீகண்டஸ்யாருணோத்யச்சரண ஸரஸிஜ ப்ரோத்திதாஸ்தே
பவாக்யாத்
பாரா்வாராச்சிரம் வோ துரித ஹதி க்ருதஸ்தாரயேயு:
பராகா: ॥

रागादि- விஷயங்களில் பற்று முதலிய दोष – தோஷங்களால் क्षत – புண்பட்ட मति – புத்தியுள்ளவர்களாயிருந்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தாலும் यतयः – பஜிப்பவர்கள் येषां– எவைகளுடைய प्रसादात् அருளால் नित्यं – எப்பொழுதும் देवान् – தேவர்களை (தேவப்பிறவியை) यान्ति– அடைகிறார்களோ नम्र– வணங்கிய आत्ममूर्ति– தங்கள் தேகங்களையுடைய द्युसद्– தேவர்களுடையவும் ऋषि – முனிவர்களுடையவும் परिषत्– ஸபையின் मूर्ध्नि– தலையில் भूषायमाणाः அணிகளாக விளங்குகின்றவைகளாயும் चिरं–எப்பொழுதும் दुरित–பாவங்களுடைய हृति-நாசத்தை कृतः – செய்கின்றவைகளாயுமுள்ள श्रीकण्ठस्य–சிவபெருமானுடைய अरुणोद्यत् – சிகப்பாகக் காண்கின்ற चरणसरसिज – பாதங்களாகிய தாமரைகளிலிருந்து प्रोत्थिताः கிளம்பிய ते परागाः – அந்த தூளிகள் (மகரந்தப் பொடிகள்) भवाख्यात्– ஸம்ஸாரம் என்று பெயர் கொண்ட पारावारात्–ஸமுத்திரத்திலிருந்து वः – உங்களை तारयेयुः – கரையேற்றட்டும்.

சிவபெருமானுடைய திருவடிகள் செந்தாமரைகள் போல் விளங்குகின்றன. அவைகளிலிருந்து கிளம்பும் தூளிகள் மகரந்தப் பொடிகள்போல் காணப்படுகின்றன. இவைகளைப் பஜிப்பவர்களின் உள்ளத்தில் உரைந்துள்ள காமம் முதலிய மாசுகள் அனைத்தும் அகற்றப்படுகின்றன. ஆதலால் மாசுபடிந்த மனமுடையவர்கள் கூட இவைகளுடைய அருளால் கலங்கமற்ற மனத்தினராய் தேவலோகத்தையடைந்து ஆங்கு அவர்களுடன் இன்பமாக வாழ்கின்றனர். மேலும் இந்திராதி தேவர்களும் மாமுனிவர்களும் சிவபெருமானுடைய பாத கமலங்களைப் பணிந்து வழிபடுகின்றனர். அப்பொழுது அவருடைய பாத பத்மங்களிலிருந்து கிளம்பும் செந்நிறமுடைய மகரந்தப்பொடிகள் அவர்களுடய தலையில் படிகின்றன. இவ்வாறு படிவதால் அவைகள் அவர்களுடைய தலைக்கு ஆபரணமாக அமைகின்றன. சிவபெருமானுடைய பாத கமலங்களிலிருந்து கிளம்பும் இப்பராகங்கள் உங்கள் எல்லோரையும் ஸம்ஸாரமென்னும் கடலிலிருந்து கரையேற்றட்டும்.

இங்கு சிவபெருமானுடைய பாதங்களைக் கமலங்களாகவும் பாததூளிகளை மகரந்தப்பொடிகளாகவும் உருவகப்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

படுத்திக் கூறப்பட்டிருக்கிறது. ஏதாவது பாத்திரத்தில் அழுக்குப்படிந்தால் அதைச் சாம்பல் முதலியவற்றைப் போட்டுத் தேய்த்துச் சுத்தப் படுத்துகிறோம். அதுபோலவே பக்தர்களின் மனதில் படிந்த மாசு பாத துளியால் அகற்றப் படுவது குறிப்பிடத்தக்கது. (28)

(அ) உபநிஷத்தில் கூறியுள்ளபடி ஜ்யோதி ஸ்வரூபமாக பரமேச்வரனை வர்ணிக்கிறார் :—

भूम्ना यस्यास्तसीम्ना भुवनमनुसृतं यत्परं धाम धाम्नां
साम्नां साम्नायतत्वं यदपि च परमं यद्गुणातीतमाद्यम् ।
यच्चाम्होहन्निरीहं गगनमिति मुहुः प्राहुरुच्चैर्महान्तो
माहेशं तन्महो मे महितमहरहर्मोहरोहं निहन्तु ॥ २९ ॥

பூம்நா யஸ்யாஸ்த ஸீம்நா புவநமநுஸ்ருதம் யத்பரம்
தாம தாம்நாம்
ஸாம்நாம் ஸாம்நாய தத்வம் யதபி ச பரமம் யத்
குணாதீதமாத்யம் ।
யச்சாம்ஹோஹ்ரும் நிரீஹம் ககனமிதி முஹு: ப்ராஹு
ருச்சைர் மஹாந்தோ
மாஹேசம் தந் மஹோ மே மஹிதமஹரஹர் மோஹ
ரோஹம் நிஹந்து ॥

अस्तसीम्ना – எல்லையற்றதான **यस्य** – எந்தப் பரமேச்வரனுடைய தேஜஸின் **भूम्ना** அகண்டமான ஸ்வரூபத்தினால் **भुवनं** உலகம் முழுவதும் **अनुसृतं**-வியாபிக்கப்பட்டுள்ளதோ **यत्**-எந்தப் பரமேச்வரனுடைய தேஜஸ் **धाम्नां**-ஸூரியன் முதலான பிரகாச வஸ்துக்களுள் **परंधाम**-மிகுந்த பிரகாசமுள்ளதோ **अपि च**-மேலும் **यत्**-எது **साम्नां**-ஸாமோபநிஷதங்களின் **साम्नायतत्वं**-திருப்பித் திருப்பிக் கூறப்பட்ட ஜீவாபின்ன ஸ்வரூபமான **परमं**-பரப்ரஹ்மமாக விளங்குகின்றதோ **यत्**-எது **गुणातीत**-முக்குணங்களுக்கும் புறம்பானதாகவும், **आद्यम्** –முதற்காரணமாகவும் இருக்கின்றதோ, **यत्** –எது, **अंहोहृत्** -பாவத்தைப்போக்குகின்றதோ, **निरीहं**–

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

ஆசையற்றதோ, महान्तः-வேதங்களின்பொருளை நன்கு அறிந்த பெரியோர்கள், गगनमिति-ஆகாசமென்று, यत्-எந்த தேஜஸை, मुहुः-அடிக்கடி, उच्चैः-சந்தேகமில்லாமல், प्राहुः-கூறுகிறார்களோ, महितं-எல்லோராலும் நன்கு போற்றப்பட்ட, माहेशं-மஹேசுவரனுடையதான, तन्महः-அந்த ஜோதி, अहरहः-தினந்தோறும், मे-என்னுடைய, मोहरोहं-அக்ஞானத்தின் முளையை, निहन्तु-நாசம் செய்யட்டும்.

பரமேச்வரனுடைய தேஜஸ் எல்லையற்றது. இது அகண்டமானது. காலம், தேசம், வஸ்து என்ற மூன்று எல்லைகளும் இதற்குக்கிடையாது. இது எல்லாக்காலங்களிலும், எல்லா இடங்களிலும், எல்லாப்பொருள்களாகவும் விளங்குகிறது. இதை உபநிஷத்துக்கள் பூமா என்று கூறுகின்றன. भूमा त्वेव विजिज्ञासितव्यः, भूमानं भगवो विजिज्ञासे, यत्र नान्यत्पश्यति नान्यच्छृणोति नान्यद्विजानाति स भूमा" என்ற சாந்தோக்ய உபநிஷத் வாக்யங்கள் பூம ஸ்வரூபத்தை நன்கு விளக்குகின்றன. இது உலகம் முழுவதும் பரவியுள்ளது. ஞானஒளி வடிவமானது. இதைக்காட்டிலும் அதிக ஒளி வாய்ந்தது வேறு ஒன்றும் இல்லை. உலகங்களுக்கெல்லாம் பிரகாசத்தையளிக்கும் சூரியன், சந்திரன், அக்னி முதலியவைகள் இதனிடமிருந்தே ஒளியைப்பெறுகின்றன. இதன்முன் இவைகள் பிரகாசிக்கமுடியாது. இதையே "न तत्र सूर्यो भाति न चन्द्रतारकं नेमा विद्युतो भान्ति कुतोऽयमग्निः। तमेव भान्तमनुभाति सर्वं तस्य भासा सर्वमिदं विभाति॥ तच्छुभ्रं ज्योतिषां ज्योतिः॥" என்ற வேதவாக்யங்கள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. ஸாமவேத உபநிஷத்தான சாந்தோக்யத்தில் ஒன்பது தடவை உபதேசிக்கப்பட்ட ஜீவாபின்னமான ப்ரஹ்மதத்வமும் இந்தத் தேஜஸே. இது ஸத்வம் ரஜஸ், தமஸ், என்ற மூன்று குணங்களுக்கும் புறம்பானது. எல்லாவற்றிற்கும் இதுவே காரணம் இதற்குக் காரணம் வேறு ஒன்றும் இல்லை. இது எல்லாப் பாவங்களையும் போக்கவல்லது. இது எங்கும் நிறைந்த பொருளாய் இருப்பதால் ஆசையற்றது. இதையே வேதத்தின் பொருளைப்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பரிசீலிப்பதில் ஈடுபட்ட பெரியோர்கள் ஆகாசமென்று அழைக்கின்றனர். "अस्य लोकस्य का गतिरित्याकाश इति होवाच, सर्वाणि ह वा इमानि भूतान्याकाशादेव समुत्पद्यन्ते, आकाश प्रत्यस्तं यन्त्याकाशो ह्येवैभ्यो ज्यायानाकाशः परायणम्" "आकाशो वै नाम नामरूपयोर्निर्वहिता ते यदन्तरा तद्ब्रह्म तदमृतं स आत्मा" என்ற ச்ருதிகள் இதற்குச் சான்றுகளாகின்றன. இந்தப் பரமேச்வரனுடைய தேஜஸ் எல்லோராலும் பூஜிக்கப் படுகின்றது. இது ஞானஸ்வரூபமானது. இது என்னுடைய மனதில் தினமும் தோன்றும் அஞ்ஞானமெனும் இருளை நாசம் செய்யட்டும். (29)

(அ) பரமசிவனின் லீலைகளை வணங்குகிறார்:—

सुहितगिरिसुताभ्यः सूदितारिव्रजाभ्यः
सकलगुणनिधिभ्यः संपदम्भोनिधिभ्यः ।
नम इहभवतीभ्यः नन्दितश्रीपतिभ्यः
शकलितदुरिताभ्यः शम्भुलीलावलीभ्यः ॥ ३० ॥

ஸுஹித கிரிஸுதாப்ய: ஸூதிதாரி வ்ரஜாப்ய:
ஸகல குணநிதிப்ய: ஸம்பதம்போநிதிப்ய: ।
நம இஹபவதீப்ய: நந்தித ஸ்ரீபதிப்ய:
ஶகலித துரிதாப்ய: ஶம்பு லீலாவலீப்ய: ॥

सुहित– ஸந்தோஷமடையும்படி செய்யப்பட்ட गिरि-सुताभ्यः – மலையரசனின் மகளான பரமேச்வரியை உடைய வைகளாயும் सूदित– நாசம் செய்யப்பட்ட अरिव्रजाभ्यः – பகைவர்களின் கூட்டத்தை உடையவைகளாயும் सकलगुण – எல்லா குணங்களுக்கும் निधिभ्यः – பொக்கிஷமாக விளங்குகின்றவைகளாயும் सम्पद्– செல்வங்களின் अम्भोनिधिभ्यः – கடல்களாக அமைந்தவைகளாயும் नन्दित– மகிழ்விக்கப்பட்ட श्रीपतिभ्यः – லக்ஷ்மீ தேவியின் பதியான மஹாவிஷ்ணுவை உடையவைகளாயும் इहभवतीभ्यः - பூஜிக்கத்தக்கவைகளாயும் शकलित– பொடியாக்கப்பட்ட दुरिताभ्यः – பாவங்களை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உடையவைகளாயும் விளங்குகின்ற **शंभुलीलावलीभ्यः** – பரமேசுவரனுடைய திருவிளையாடல்களுக்கு **नमः** – வணக்கம்.

பரமேச்வரனுடைய திருவிளையாடல்கள் மலையரசனின் மகளான பார்வதீ தேவிக்கு மட்டற்ற மகிழ்ச்சியை உண்டு பண்ணுகின்றன. பகைவர்கள் அனைவரையும் அழித்து உலகிற்கு க்ஷேமத்தையளிக்கின்றன. அளவுகடந்த குணங்களின் பொக்கிஷமாகத் திகழ்கின்றன. அவைகளே சிறந்த செல்வங்களின் கடல்கள். மிகவும் போற்றத்தக்கவைகள். லக்ஷிமியின் பதியான மகாவிஷ்ணுவுக்கும் மிகுந்த சந்தோஷத்தையளிப்பவைகள். சகலவிதமான பாவங்களையும் தவிடுபொடியாகச் செய்கின்ற அப்பரமேச்வரனுடைய திருவிளையாடல்களுக்கு வணக்கம் செலுத்துவோம். (30)

(அ) பார்வதியை துதிக்கிறார்: —

पृथुकुचभरद्वन्द्वाभुग्नावलग्नविलासिनः
शिशिरकिरणश्रीसारस्याः श्रितेषु शिवप्रदाः ।
पृथुलजघनाः प्राणास्त्राणं क्रियासुरुमाह्वया-
श्चकितहरिणीनेत्रान्ता वो हरस्य बहिश्चराः ॥ ३१ ॥

ப்ருது குச பர த்வந்த்வாபுக்நாவலக்ந விலாஸிந:
ஶிஶிர கிரண ஸ்ரீஸாரஸ்யா: ச்ரிதேஷு ஶிவப்ரதா: ।
ப்ருதுல ஜகநா: ப்ராணாஸ்த்ராணம் க்ரியாஸுருமாஹ்வயா:
சகித ஹரிணீ நேத்ராந்தா வோ ஹரஸ்ய பஹிஸ்சரா: ॥

पृथु– பெரிய **कुचभर**– ஸ்தனங்களாகிய பாரங்களின் **द्वन्द्व**– ஜோடியால் **आभुग्न**– சிறிது வளைந்த **अवलग्न**– இடையினால் **विलासिनः** – உல்லாஸமாக விளங்குகின்றவைகளாயும் **शिशिरकिरण**– குளிர்ந்த கதிர்களையுடைய சந்திரனுடைய **श्री** அழகின் **सारस्याः** - இனிமை வாய்ந்தவைகளாயும் **श्रितेषु**– தன்னையண்டியவர்களிடத்தில் **शिवप्रदाः** – மங்களங்களைத் தருகின்றவைகளாயும் **पृथुलजघनाः** – பெரிய இடுப்பையுடையவைகளாயும் **चकित हरिणी**– பயந்த பெண்மானின் **नेत्रान्ताः**

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடைக் கண்களைப்போன்ற கடைக்கண்களை யுடையவை களாயும், **उमाह्वया:** - உமையென்று பெயருடை யவைகளு மான **हरस्य** – சிவபெருமானுடைய **बहिश्चरा:** – வெளியே சஞ்சரிக்கின்ற **प्राण:**–பிராணன் **व:** – உங்களுக்கு **त्राणं**– காப்பாற்றுதலை **क्रियासु:**–செய்யட்டும்.

உமாதேவியானவள் பரமேச்வரனுக்கு வெளியில் ஸஞ்சரிக்கும் ப்ராணன் போன்றவள். அவளுடைய இடை ஸ்தனங்களின் பாரத்தினுல் சிறிது வளைந்ததாக விளங்குகின்றது. அவளுடைய திருமேனி சந்திரபிம்பம்போல் பார்ப்பவர்களின் மனதைக் குளிரச்செய்கின்றது. அவள் தன்னை அண்டும் பக்தர்களுக்கு ஸகல மங்களங்களையும் அளிக்கின்ருள். அவளுடைய இடுப்பு பருமனுனது. அவளது மருண்ட பார்வைகள் அச்சமுற்ற பெண்மானின் பார்வைகளைப்போல் அழகுபெற்று மனதைக் கவர்கின்றன. இவ்வாறு தோன்றும் உமாதேவி எல்லோரையும் காத்தருளட்டும். அர்த்தநாரீசுவர ஸ்வரூபத்தில் பார்வதியும் பரமேசுவரனுடைய அங்கத்திலேயே சேர்ந்திருப்பதால் கேசாதி பாதாந்தாங்கவர்ணனையில் பார்வதியையும் தனியாக இந்த சுலோகத்தால் துதிக்கிருர். (31)

(அ) இந்தத் துதியின் பலனைக்கூறுகிருர்:—

आरभ्य स्मरजयिनः कपर्दभारा-
दङ्गानां स्तुतिरियमा पदाब्जपांसोः ।
ये भक्त्या मुहुरनया नमन्ति देवं
देवश्च स्मरति धिया स्वयं च तेषाम् ॥ ३२ ॥

ஆரப்ய ஸ்மர ஜயிந: கபர்த பாரா
தங்காநாம் ஸ்துதிரியமாபதாப்ஜ பாம்ஸோ: ।
யே பக்த்யா முஹுரநயா நமந்தி தேவம்
தேவஶ்ச ஸ்மரதி தியா ஸ்வயம் ச தேஷாம் ॥

इयं- இது **स्मरजयिन:** - மன்மதனைவென்ற சிவபெருமானுடைய **कपर्दभारात्** - ஜடாபாரத்திலிருந்து **आरभ्य**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

துடங்கி आ पदाब्जपांसोः - பாதகமலங்களிலுள்ள தூளிவரையில் अङ्गानां- அங்கங்களுடைய स्तुतिः - துதி. अनया-இந்தத் துதியால் ये- எவர்கள் मुहुः - அடிக்கடி भक्त्या- பக்தியுடன் देवं- பரமேச்வரனை नमन्ति- வணங்குகிறார்களோ देवश्च- பரமேச்வரனும் तेषां- அவர்களை स्वयं- தானாகவே धिया தன்னுடைய புத்தியால் स्मरति- நினைக்கிறார்.

இந்த ஸ்தோத்ரம் பரமேச்வரனுடைய ஜடைகளிலிருந்து ஆரம்பித்து பாதகமலங்களில் படிந்திருக்கும் தூளி வரையில் ஒவ்வொரு அங்கத்தையும் வர்ணிக்கின்றது. இந்த ஸ்தோத்திரத்தை மிகுந்த பக்தியுடன் பாடிப் பரமேச்வரனுடைய திருவடிகளைப் பன்முறை வணங்கவேண்டும். இவ்வாறு வணங்குகின்றவர்களைப் பரமேச்வரன் அவச்யம் தம் மனதில் இருத்திக்கொண்டு அவர்களைக் காத்தருள்வான். (32)

(அ) ஒவ்வொரு அங்கமும் நன்மையைத் தரவேண்டுமென்று பிரார்த்தித்துவிட்டு கடைசியில் சம்புவின் முழு ஸ்வரூபத்தை வேண்டுகிறார் :—

दीव्यन्मूर्धेन्दुखण्डः सितशितनखरच्छिन्नलोकेशमुण्डः
कम्राकारोरुदण्डः प्रलयहुतवहप्रस्फुरद्बाहुदण्डः ।
चण्डीष्टोद्योतशौण्डः स्वभुजनियमिताखण्डवाणीधवाण्डः
खण्डीभूतारिमण्डः कलयतु भवतां शर्म शम्भुः प्रचण्डः ॥

தீவ்யன் மூர்தேந்து கண்ட: ஸித ஶித நகர ச்சிந்ந
லோகேஶ முண்ட:
கம்ராகாரோரு தண்ட: ப்ரளய ஹுதவஹ ப்ரஸ்புரத்
பாஹு தண்ட: ।
சண்டீஷ்டோத்யோத ஶௌண்ட: ஸ்வபுஜ
நியமிதாகண்ட வாணீ தவாண்ட:
கண்டீபூதாரி மண்ட: கலயது பவதாம் ஶர்ம ஶம்பு:
ப்ரசண்ட: ॥

दीव्यन्मूर्धेन्दुखण्डः - பிரகாசிக்கின்ற பிறைச் சந்திரனைத் தலையில் தாங்கியவனும் सित- வெளுப்பானவைகளாயும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

शित- கூர்மையானவைகளாயும் உள்ள **नखर**- நகங்களால் **छिन्न**- கொய்யப்பட்ட **लोकेश**- பிரம்மதேவனுடைய **मुण्डः**- தலையையுடையவனும் **कम्राकार**- அழகிய தோற்றத்தை உடைய **ऊरुदण्डः** - தண்டங்கள் போன்ற தொடைகளை உடையவனும் **प्रलय** - ப்ரளயகாலத்து **हुतवह**-அக்னியைப் போல் **प्रस्फुरद्**- ஜ்வலிக்கின்ற **बाहुदण्डः** - சிறந்த புஜங்களை உடையவனும் **चण्डीश**- பார்வதியின் விருப்பத்தை **उद्योत**- வெளிப்படுத்துவதில் **शौण्डः** - ஸாமர்த்யமுள்ளவனும் **स्वभुज**- தன்னுடைய புஜங்களால் **नियमित**- கட்டுப்படுத்தப் பட்ட **अखण्ड**- பரிபூர்ணமான **वाणीधवाण्डः**- பிரம்மாண்டத் தையுடையவனும் **खण्डीभूत**- துண்டாக்கப்பட்ட **अरि**- பகைவர்களையே **मण्डः**- ஆபரணமாக உடையவனும் **प्रचण्डः** - மிகுந்த கோபத்தையுடையவனும் விளங்கு கின்ற **शम्भुः** - பரமேச்வரன் **भवतां**- உங்களுக்கு **शर्म**- ஸுகத்தை **कलयतु**- கொடுக்கட்டும்.

பரமேச்வரன் தன்னுடைய சடைமுடியில் பிறைச் சந்திரனை ஆபரணமாக அணிந்து கொண்டிருக்கிறான். அது ஆங்கு மிகுந்த ஒளியுடன் விளங்கிக் கொண்டிருக் கின்றது. அச் சிவபெருமான் தன்னுடைய வெண்மை யாகவும் கூர்மையாகவும் உள்ள நகங்களால் பிரமனுடைய தலையைக் கொய்தெறிந்தான். அவனுடைய இரு தொடை களும் மிகுந்த அழகுடன் விளங்குகின்றன. அவனுடைய வலிமை வாய்ந்த புஜங்கள் பிரளயகாலத்து அக்னியின் கொழுந்துகள்போல் ஜ்வலிக்கின்றன. அவன் பரமேச்வரி யின் அபீஷ்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதில் மிகுந்த சாமர்த்யம் வாய்ந்தவன். அவன் தன்னுடைய புஜங்களால் உலகங்கள் எல்லாவற்றையும் அடக்கி ஆள்கிறான். அழிக்கப்பட்ட பகைவர்களின் குழுக்களே அவனது அணி களாக அமைகின்றன. மிகவும் உக்ரமான அப் பரமேச்வரன் உங்கள் எல்லோருக்கும் மிகுந்த இன்பத்தையளிக்கட்டும்.

ஶிவகேஶாதி பாதாந்த ஸ்துதி முற்றும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ श्रीः ॥

॥ श्रीमृत्युंजयमानसिकपूजास्तोत्रम् ॥

ஸ்ரீ மிருத்யுஞ்ஜயமானஸிக பூஜா ஸ்தோத்திரம்.

[இது 46 சுலோகங்கள் கொண்டது. இதில் 44 சுலோகங்கள் பூஜை முறைகளைக் காண்பிப்பதாகவும் 45-வது சுலோகம் பலச்ருதியாகவும் 46-வது சுலோகம் சிவலிங்கதர்சனம், பஞ்சாக்ஷர ஜபம் இவைகளைப்பற்றிக் கூறுவதாகவும் அமைந்துள்ளது. சாஸ்திரங்களில் குறிப்பிட்ட திரவியங்களை முறைப்படி பகவானிடம் அர்ப்பணம் செய்வது தான் பூஜை எனப்படும். இந்த ஸமர்ப்பணத்தையே உபசாரம் என்று கூறுவார்கள். ஐந்து உபசாரங்கள் (பஞ்சோபசாரம்) பதினறு உபசாரங்கள் (ஷோடசோபசாரம்) 64 உபசாரங்கள் (சதுஷ்ஷஷ்டி உபசாரங்கள்) என்று பலமுறைகள் கூறப்பட்டிருக்கின்றன. அந்தந்த உபசாரத்திற்காகக் கூறப்பட்டுள்ள திரவ்யங்களை எல்லாம் சேகரித்து பகவன் மூர்த்தியையும் எதிரில் இருத்தி முறைப்படி அந்தந்த திரவ்யத்தை அர்ப்பணம் செய்யவேண்டும். இது பாஹ்ய பூஜை எனப்படும். இதைத் தவிற ஆந்தர பூஜை என்பது ஒன்று உண்டு. அதில் திரவ்யங்களை சேகரிப்பதோ, மூர்த்தியை எதிரில் வைத்துக் கொள்வதோ ஒன்றும் கிடையாது. எல்லாவற்றையும் மனதாலேயே பாவனை செய்வது. பாஹ்ய பூஜையில் எந்த எந்தக் காரியங்கள் நடைபெறுகின்றனவோ அவைகள் எல்லாவற்றையும் ஒன்றையும் விடாமல் மனதால் நினைப்பது. இதற்கு மானஸபூஜை என்றும் பெயர். பலவிதமான ஆஹாரவகைகளைப் பாகம் செய்து ஸ்வாமியின் எதிரில் வைத்து மந்திரம் சொல்லி நிவேதனம் செய்ய வேண்டும். மானஸ பூஜையில் திரவ்யங்களை சேகரிப்பதோ பாகம் செய்வதோ ஒன்றும் கிடையாது. எல்லாவித ஆஹார வகைகளும் எதிரில் இருப்பதாக பாவனைசெய்து மனதாலேயே நிவேதனம் செய்யவேண்டும். பாஹ்ய பூஜையில் அவனவன் சக்திக்குத்தக்கபடிதான் திரவ்யங்களைச் சேகரிக்கமுடியும். மானஸபூஜையில் எல்லாவித உயர்ந்த திரவ்யங்களையும் சிறிதும் சிரமம் இல்லாமல் பாவனை செய்யலாம். இந்த மானஸ பூஜா முறைகளை இந்த ஸ்தோத்திரத்தில் ஆசார்யாள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

காட்டுகிருர். இதில் 44 உபசாரங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அர்த்த ஞானத்துடன் இந்த ஸ்தோத்திரத்தைப் படித்து இதில் கூறியுள்ளபடி மனதால் பாவனை செய்தால் பாஹ்ய பூஜை செய்த பலன் கிடைக்கும். இதிலுள்ள சுலோகங்களைக் கொண்டே பாஹ்யபூஜையும் செய்யலாம். ஆனால் பாஹ்ய பூஜையைவிட மானஸ பூஜை சிறந்தது. பகவானின் அருள் விரைவில் கிடைக்கும். இதேமாதிரி த்ரிபுரஸுந்தரீ மானஸ பூஜா ஸ்தோத்திரமும் பகவத்பாதாளால் அருளப்பட்டிருக்கிறது]

(அ) முதல் சுலோகத்தால் மனதில் தியானம் செய்கிருர்:—

कैलासे कमनीयरत्नखचिते कल्पद्रुमूले स्थितं
कर्पूरस्फटिकेन्दुसुन्दरतनुं कात्यायनीसेवितम् ।
गङ्गातुङ्गतरङ्गरञ्जितजटाभारं कृपासागरं
कण्ठालंकृतशेषभूषणममुं मृत्युंजयं भावये ॥ १ ॥

கைலாஸே கமநீய ரத்ந கசிதே கல்பத்ருமூலே ஸ்திதம்
கர்பூர ஸ்படிகேந்து ஸுந்தர தநும் காத்யாயநீ ஸேவிதம் ।
கங்கா துங்க தரங்க ரஞ்ஜித ஜடா பாரம் க்ருபா ஸாகரம்
கண்டாலங்க்ருத ஶேஷ பூஷணமமும் ம்ருத்யுஞ்ஜயம்
பாவயே ॥

कैलासे- கைலயங்கிரியில் **कमनीय**- அழகிய **रत्न**- ரத்னங்களால் **खचिते** - இழைக்கப்பட்ட **कल्पद्रुमूले**.- கல்ப விருக்ஷத்தினடியில் **स्थितं**- வீற்றிருக்கின்றவராயும் **कर्पूर**- பச்சைக்கற்பூரம் **स्फटिक**- ஸ்படிகம் **इन्दु**- சந்திரன் இவை களைப்போல் **सुन्दर**-அழகிய **तनुं** - சரீரத்தையுடையவராயும் **कात्यायनीसेवितं**- பார்வதீ தேவியால் ஸேவிக்கப்பட்டவராயும் **गङ्गा**- கங்கையின் **तुङ्ग**- உயரமான **तरङ्ग**- அலைகளால் **रञ्जित**- அழகுபடுத்தப்பட்ட **जटाभारं**- ஜடைகளின் பாரத்தையுடை ய வராயும் **कृपासागरं** - கருணைக்கடலாயும் **कण्ठालंकृत** - கழுத்தில் அலங்கரிக்கப்பட்டுள்ள **शेष**- ஆதிசேஷனுகிய **भूषणं**- ஆபரணத்தை உடையவராயும் உள்ள **अमुं**- அந்த **मृत्युंजयं**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

காலனை வென்ற பரமேச்வரனை **भावये**- தியானம் செய்கிறேன்.

பரமேச்வரன் மஹாகைலாஸத்தில் கற்பகவிருக்ஷத்தின் அடியில் அமைக்கப்பட்டுள்ள ஓர் சிறந்த ரத்ன ஸிம்மாஸனத்தில் அமர்ந்திருக்கின்றான். அவனுடைய உடல் கற்பூரம், ஸ்படிகம், மதி இவைகளைப்போல் வெண்மையாக விளங்குகின்றது. அவனது அருகில் அமர்ந்துள்ள பார்வதீ தேவி அவனுக்குப் பணியாற்றுகின்றாள். அவனுடைய ஜடை மிகுந்த பாரமுடையது. அது ஆகாயத்திலிருந்து விழும் கங்கையைத்தாங்கி நிற்கின்றது. அந்நதியில் கிளம்பும் அலைகள் அவனுடைய ஜடையை அலங்கரிக்கின்றன. அவனே கருணைக்கடல். கடலில் நதி கூடுவது இயற்கைதானே. அதுபோல் கருணைக்கடலாகிய சிவனிடம் புனித நதியான கங்கை வந்து சேர்கின்றது. மேலும் இவனுடைய கழுத்து ஆதிசேஷ நாகத்தால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. கழுத்தில் அணியப்படும் நகையில் இரத்தினங்கள் பதிக்கப்பட்டிருக்கும். இந்த ஸர்ப்பத்தின் சிரஸ்ஸிலும் நாகரத்னங்கள் பிரகாசிக்கின்றன. இதனால் நீலநிறம் வாய்ந்த பரமேச்வரனுடைய கழுத்து நன்கு அலங்கரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு விளங்கும் காலனை வென்ற காலகாலனை நான் என்னுடைய மனதில் தியானம் செய்கின்றேன். (1)

(அ) தன் பூஜையை ஏற்றுக்கொள்ள எதிரில் வரும்படி அழைக்கிறார்:—

आगत्य मृत्युंजय चन्द्रमौले व्याघ्राजिनालंकृतशूलपाणे ।
स्वभक्तसंरक्षणकामधेनो प्रसीद विश्वेश्वर पार्वतीश ॥

ஆகத்ய ம்ருத்யுஞ்ஜய சந்த்ர மௌளே
வ்யாக்ராஜினாலங்க்ருத ஶூல பாணே ।
ஸ்வபக்த ஸம்ரக்ஷண காமதேநோ
ப்ரஸீத விஶ்வேஶ்வர பார்வதீஶ ॥

मृत्युञ्जय-யமனை வென்றவனே, **चन्द्रमौले**-பிறைச் சந்திரனைத் தலையில் தரித்திருக்கின்றவனே, **व्याघ्राजिन**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

புலித்தோலால் **अलंकृत**-அழகுபடுத்தப்பட்டவனே, **शूलपाणे**-சூலத்தைக் கையில் ஏந்தியவனே, **स्वभक्त**-தன்னுடைய, பக்தர்களை, **संरक्षण**-நன்கு காப்பதில், **कामधेनो**-காமதேனுவாக இருப்பவனே, **विश्वेश्वर**-உலகங்களையெல்லாம் ஆட்சி செய்கின்றவனே, **पार्वतीश**-பார்வதியின் பதியே, **आगत्य**-வந்து; **प्रसीद**-அருள்புரிவாயாக.

இங்கு மானஸ பூஜைக்காகப் பரமேச்வரனை தன் முன் வரும்படி அழைக்கிறார். யமனை வென்ற இறைவனே, பிறைச்சந்திரனைச் சடையில் தரிக்கும் தலைவனே. புலித்தோலை அணிவதால் அழகுடன் விளங்குபவனே, சூலந் தாங்கிய கையையுடையவனே, தன்னுடைய பக்தர்களைக் காத்தருளும் காமதேனுவே உலகனைத்தும் ஆட்சிசெய்யும் பார்வதீபதியே என்னிடம் வந்து எனக்கு அருள்புரிவாயாக.

இங்கு பரமேச்வரனைக் காமதேனுவென்று உருவகப் படுத்திக் கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. காமதேனு அபீஷ்டங்களையெல்லாம் அளிக்கும் சக்தி வாய்ந்தது. அவ்வாறே சிவபெருமானும் அன்பர்களுக்கு வேண்டியவை எல்லாம் அளிக்கவல்லவன். மேலும் அவன் பக்தன் பாலுள்ள அன்புப்பெருக்கால் தாயும் ஆனவன். ஆதலால் அப்பரமேச்வரனை இங்கு ஸ்திரீயாக விளங்கும் காமதேனு என வர்ணித்திருக்கின்றார். ம்ருத்யுஞ்ஜய என்று அழைக்கப் படுவதால் அவன் பக்தர்களுக்கு ஏற்படும் யமபாதையை அகற்றுவான் என்றும், சந்திரமௌளே என்று கூப்பிடுவதால் அவன் அவர்களுக்கு ஏற்படும் கிலேசங்களைப்போக்கி அவர்களின் மனதைக் குளிரச்செய்வான் என்றும், வ்யாக்ராஜினாலங்க்ருத என்பதால் மனதை அடங்கச் செய்து மோக்ஷத்தையளிப்பவனென்றும், சூலபாணே என்பதால் பக்தர்களின் பகைவர்களை அவன் நாசம் செய்வான் என்றும் பார்வதீச என்பதால் அவன் எல்லாவற்றையும் ஆக்க வல்லவன் என்றும் நன்கு வெளிப்படுகின்றது. தனக்குப் பரிபூர்ண அருள் கிடைக்க பார்வதியுடன் சேர்ந்த மஹேசுவரனை அழைக்கிறார். (2)

(அ) ஆஸனம் என்ற உபசாரத்தைக் கூறுகின்றார்:—

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

भास्वन्मौक्तिकतोरणे मरकतस्तम्भायुतालंकृते
सौधे धूपसुवासिते मणिमये माणिक्यदीपाञ्चिते ।
ब्रह्मेन्द्रामरयोगिपुंगवगणैर्युक्ते च कल्पद्रुमैः
श्रीमृत्युञ्जय सुस्थिरो भव विभो माणिक्यसिंहासने ॥

பாஸ்வன் மௌக்திக தோரணே மரகத
ஸ்தம்பாயுதாலங்க்ருதே
ஸௌதே தூப ஸுவாஸிதே மணிமயே மாணிக்ய
தீபாஞ்சிதே ।
ப்ரஹ்மேந்த்ராமர யோகி புங்கவ கணைர் யுக்தே ச
கல்பத்ருமை:
ஸ்ரீ ம்ருத்யுஞ்ஜய ஸுஸ்திரோ பவ விபோ மாணிக்ய
ஸிம்ஹாஸநே ॥

भास्वत्-ஒளிகள் பொருந்திய, **मौक्तिक**-முத்துக்களாலாகிய, **तोरणे**-தோரணங்களையுடையதும், **मरकतस्तम्भायुतालंकृते**-பதினாயிரக்கணக்கான மரகதத்தூண்களால் அலங்கரிக்கப்பட்டதும், **धूपसुवासिते**-தூபங்களின் நறுமணம் கமழும்படி செய்யப்பட்டதும், **मणिमये**-இரத்தினங்களால் இழைக்கப்பட்டதும், **माणिक्यदीप**இரத்தின தீபங்களால், **अञ्चिते**-ஜ்வலிக்கும்படி செய்யப்பட்டதும், **ब्रह्मेन्द्र**-பிரம்மா, இந்திரன் முதலிய, **अमर**-தேவர்களாலும், **योगिपुङ्गवगणैः**-சிறந்த யோகிகளுடைய கூட்டங்களாலும், **युक्ते**-சூழப்பட்டதும், **कल्पद्रुमैः**-கல்பவிருக்ஷங்களுடன், **युक्ते च**-கூடியதுமான, **सौधे**-அரண்மனையில், **माणिक्यसिंहासने**-இரத்தின ஸிம்மாஸனத்தில், **मृत्युञ्जय**-காலனைவென்ற பரமேச்வரனே, **विभो**-எங்கும் நிறைந்த பரம்பொருளே, **सुस्थिरो भव**-நன்கு நிலைத்து நிற்பாயாக.

எங்கும் நிறைந்த பரம்பொருளான பரமேச்வரனுக்கு மனதால் ஆஸனம் அளித்து உபசரிக்கப்படுகின்றது. இது மாணிக்கக் கற்களால் அமைக்கப்பட்ட ஸிம்மாஸனம். இது ஓர் சிறந்த அரண்மனையில் போடப்பட்டுள்ளது. அவ்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வரண்மணை ஒளி பொருந்திய நல்முத்துக்கள் கோர்த்த தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. அதனுள் மரகதக் கற்களால் இழைக்கப்பட்ட ஆயிரம் தூண்களை உடைய மனோஹரமான மண்டபம் இருக்கின்றது. அந்த மண்டபத்தில் அகரு முதலிய வாசனை திரவ்யங்களிலிருந்து கிளம்பும் தூபங்களால் மிகுந்த நறுமணம் நிரம்பியிருக்கின்றது. மேலும் ஆயிரக்கணக்கான இரத்தின தீபங்கள் அங்கு ஜ்வலிக்கின்றன. அங்கு அனைவருடைய அபீஷ்டங்களையும் நிறைவேற்றும் கல்பக விருக்ஷங்கள் விளங்குகின்றன. மேலும் பிரம்மா இந்திரன் முதலிய தேவர்களும் சிறந்த யோகிகளும் அங்கு நிறைந்துள்ளனர். இவ்வாறு விளங்கும் ஆயிரக்கால் மண்டபத்தின் நடுவில் அமைக்கப்பட்டுள்ள மாணிக்க ஸிம்மாஸனத்தில் எங்கும் நிறைந்த பரம்பொருள் அமர்ந்தருளும்படி பிரார்த்திக்கப்படுகின்றது. முதலில் த்யானம் செய்து பிறகு அவரை அழைத்து ஆஸனம் அளிக்கப்படுகிறது. ஸாதாரணமாகப் பூஜைகளில் தியானத்திற்குப்பிறகு 'ஆவாஹனம்' செய்து தான் ஆஸனம் கொடுப்பது வழக்கம். இங்கு 'ஆவாஹனம்' கூறப்படவில்லை. ஏனெனில் லிங்கம், பிம்பம், முதலியவைகளில் பூஜை செய்யும்பொழுதுதான் அதில் பகவத் ஸாந்நித்யம் ஏற்படுவதற்காக ஆவாஹனம் செய்ய வேண்டும். மானஸபூஜையில் எல்லாம் பாவனைதான். பகவானே எதிரில் வந்து இருப்பதாக பாவனை செய்து பூஜை செய்வதால் மற்றோர் பிம்பத்தில் ஆவாஹனம் செய்ய வேண்டியது அவசியமில்லை. (3)

(அ) 'பாத்யம்' என்ற உபசாரம் கூறப்படுகின்றது:-

मन्दारमल्लीकरवीरमाधवीपुन्नागनीलोत्पलचम्पकान्वितैः ।
कर्पूरपाटीरसुवासितैर्जलैराधत्स्व मृत्युञ्जय पाद्यमुत्तमम् ॥ ४ ॥

மந்தார மல்லீ கரவீர மாதவீ
புந்நாக நீலோத்பல சம்பகாந்விதை: ।
கர்பூர பாடீர ஸுவாஸிதைர் ஜலை-
ராதத்ஸ்வ ம்ருத்யுஞ்ஜய பாத்யமுத்தமம் ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

मृत्युञ्जय-யமனை வென்ற பெருமானே, **मन्दार**-மந்தாரை, **मल्ली**-மல்லிகை, **करवीर**-அரளி, **माधवी**-மாதவீ, **पुन्नाग**-புந்நாகம் **नीलोत्पल**–கருநெய்தல், **चम्पक**–சம்பகம் இந்த மலர்களுடன், **अन्वितैः**–கூடியவைகளாயும், **कर्पूर**-பச்சைக் கற்பூரம், **पाटीर**-சந்தனம் இவற்றால், **सुवासितैः**–நறுமண முள்ளதாகச்செய்யப்பட்டவைகளாயும் விளங்குகின்ற, **जलैः**-தீர்த்தங்களால், **उत्तमं**–சிறந்த, **पाद्यं**–பாத்யத்தை, **आधत्स्व**–பெற்றுக்கொள்வாயாக.

அமரருள்சிறந்த பரமேச்வரனை ஆஸனத்தில் அமர்த்திய பின்னர் பாதங்களைக் கழுவிக்கொள்வதற்காக அவனுக்கு பாத்யம் அளிக்கப்படுகின்றது. அது மந்தாரம், மல்லிகை, அரளி, மாதவீ, புந்நாகம், நீலோத்பலம், சம்பகம் முதலிய நறுமணம் கமழும் அருமலர்கள் நிறைந்தது. மேலும் கற்பூரம் சந்தனம் முதலியவற்றால் அது மிகவும் குளிர்ச்சியாகச் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு விளங்கும் பாத்யத்தை ஏற்று அருளவேண்டுமென்று காலகாலனைக் கேட்டுக்கொள்கிறார் சங்கரபகவத்பாதர். (4)

(அ) அர்க்யம் என்ற உபசாரம் கூறப்படுகிறது:—

सुगन्धिपुष्पप्रकरैः सुवासितैर्वियन्नदीशीतलवारिभिः शुभैः ।
त्रिलोकनाथार्तिहरार्घ्यमादराद् गृहाण मृत्युञ्जय सर्ववन्दित ॥

ஸுகந்தி புஷ்ப ப்ரகரை: ஸுவாஸிதைர்
வியந்நதீ ஸீதள வாரிபி: ஶுபை: ।
த்ரிலோகநாதார்த்திஹரார்க்யமாதராத்
க்ருஹாண ம்ருத்யுஞ்ஜய ஸர்வவந்தித ॥

त्रिलोकनाथ-மூவுலகையும் காத்தருள்பவனே, **आर्तिहर**-துன்பங்களை நீக்குகின்றவனே, **मृत्युञ्जय**-யமனைவென்றவனே **सर्ववन्दित**-எல்லோராலும் வணங்கப்பட்டவனே, **सुगन्धिपुष्पप्रकरैः**-நறுமணம் கமழும் மலர்களின் கூட்டத்தால், **सुवासितैः**-நல்மணம் தவழும்படி செயயப்பட்டதாயும், **शुभैः**–மங்களமானதாயும் [illegible], **वियन्नदी**-[illegible], **शीतलवारिभिः**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

குளிர்ந்த ஜலங்களாலான, **अर्घ्यं**-அர்க்யத்தை, **आदरात्**-ப்ரீதியுடன், **गृहाण**-பெற்றுக்கொள்.

மூன்று உலகங்களையும் காத்தருள்பவனே! பக்தர்களின் துன்பங்களனைத்தையும் நீக்குபவனே! அனைவராலும் போற்றப்படுகின்றவனே, யமனை வென்ற எம்பெருமானே! நறுமணம் கமழும் மலர்கள் நிறைந்ததும், சிறந்த வாசனை பொருந்தியதும் நன்மையளிக்கும் தன்மை வாய்ந்ததுமான கங்காநதியின் குளிர்ந்த ஜலங்களைக் கொண்டு என்னால் அளிக்கப்படும் அர்க்யத்தை ஆதரவுடன் ஏற்றுக் கொள்வாயாக. (5)

(அ) ஆசமனத்தால் உபசரிக்கிறார் :—

हिमाम्बुवासितैस्तोयैः शीतलैरतिपावनैः ।
मृत्युञ्जय महादेव शुद्धाचमनमाचर ॥ ६ ॥

ஹிமாம்புவாஸிதைஸ்தோயை: ஶீதளைரதிபாவனை: ।
ம்ருத்யுஞ்ஜய மஹாதேவ ஶுத்தாசமனமாசர ॥

मृत्युञ्जय-யமனைவென்றவனே, **महादेव**-பரமேசுவரனே, **हिमाम्बुवासितैः**-பன்னீரால் வாசனையுள்ளதாகச் செய்யப்பட்டவைகளாயும், **शीतलैः**-குளிர்ந்தவைகளாயும், **अतिपावनैः**-மிகுந்த பரிசுத்தமானவைகளாயும் உள்ள, **तोयैः**-ஜலங்களால் **शुद्धाचमनं**-புனிதமான ஆசமனத்தை, **आचर**-செய்வாயாக.

யமனை வென்றவனே! மஹாதேவனே! நான் உனக்கு நல்ல நறுமணம் வாய்ந்ததும், பன்னீர் நிறைந்ததும், பரிசுத்தமானதும், குளிர்ச்சி மிகுந்ததுமான தண்ணீரைத் தருகின்றேன். அதனால் நீ ஆசமனம் செய்திடுவாயாக. (6)

(அ) பரமேச்வரனுக்கு மதுபர்க்கம் அளிக்கப்படுகின்றது:—

गुडदधिसहितं मधुप्रकीर्णं सुघृतसमन्वितधेनुदुग्धयुक्तम् ।
शुभकर मधुपर्कमाहर त्वं त्रिनयन मृत्युहर त्रिलोकवन्द्य ॥ ७ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

குட ததி ஸஹிதம் மது ப்ரகீர்ணம்
ஸுக்ருத ஸமந்வித தேனுதுக்த யுக்தம் ।
ஶுபகர மதுபர்கமாஹர த்வம்
த்ரிநயந ம்ருத்யுஹர த்ரிலோக வந்த்ய ॥

गुडदधिसहितं-வெல்லம் தயிர் இவைகளுடன் கூடியதும் **मधुप्रकीर्णं**-தேன் கலந்ததும், **सुघृतसमन्वित**-நல்ல நெய்யுடன் கூடிய, **धेनुदुग्ध**-பசும்பாலுடன், **युक्तम्**-சேர்ந்ததுமான, **मधुपर्कं**-மதுபர்க்கத்தை, **शुभकर**-நன்மை செய்கின்றவனே, **त्रिनयन**-மூன்று கண்களுடையவனே, **मृत्युहर**-சாவைப் போக்குகின்றவனே, **त्रिलोकवन्द्य**-மூவுலகத்தோராலும் வணங்கத்தக்கவனே, **त्वं**-நீ, **आहर**-ஏற்றுக்கொள்வாயாக.

சாவைப்போக்கி மூவுலகையும் காத்தருளும் முக்கண்ணு, நான் உமக்கு வெல்லம், தயிர், தேன், நல்ல நெய், பசும்பால் இவைகள் கலந்த மதுபர்க்கத்தை அளிக்கின்றேன். அதை ஏற்றருள்புரிவாயாக. தேன் கலந்திருப்பதால் மதுபர்க்கம் என்றுபெயர். (7)

(அ) பஞ்சாமிருத ஸ்னானம்:—

पञ्चास्त्रशान्त पञ्चास्य पञ्चपातकसंहर ।
पञ्चामृतस्नानमिदं कुरु मृत्युञ्जय प्रभो ॥ ८ ॥

பஞ்சாஸ்த்ர ஶாந்த பஞ்சாஸ்ய பஞ்சபாதக ஸம்ஹர ।
பஞ்சாம்ருத ஸ்நாநமிதம் குரு ம்ருத்யுஞ்ஜய ப்ரபோ ॥

पञ्चास्त्रशान्त-ஐந்து பாணங்கள் கொண்ட காமனை அடக்கியவனே, **पञ्चास्य**-ஐந்து முகங்கள் கொண்டவனே, **पञ्चपातकसंहर**-ஐம்பெரும் பாவங்களை அழிப்பவனே, **मृत्युञ्जय**-யமனை வென்றவனே, **प्रभो**-வன்மை வாய்ந்தவனே, **इदं**-இந்த, **पञ्चामृतस्नानं**-ஐந்தமுதங்களின் நீராட்டலை, **कुरु**-செய்வாயாக.

அரவிந்தம், அசோகம், சூதம், நவமல்லிகை, நீலோத்பலம் என்ற ஐந்து மலர்களும் காமனுக்கு ஐந்து பாணங்கள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஐந்து பாணங்கள் கொண்ட காமனும் சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து கிளம்பிய தீப்பொறியில் சாம்பலாகி விட்டான். ஸத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என்ற ஐந்து முகங்கள் கொண்டவன். ஐம்பெரும் பாவங்களை அழிப்பவன், யமனை வென்ற வல்லன். யான் உனக்கு ஐந்து இனிய பொருள்களாலான பஞ்சாமிருத ஸ்நாநத்தைச் செய்விக்கின்றேன். அதை நீ ஏற்றருள் புரிவாயாக. பால், தயிர், நெய், வெல்லம், தேன் இவ்வைந்தும் கலந்தது பஞ்சாமிருதம். (8)

(அ) சுத்த தீர்த்த ஸ்நானம்:—

जगत्त्रयीख्यात समस्ततीर्थसमाहृतैः कल्मषहारिभिश्च ।
स्नानं सुतोयैः समुदाचर त्वं मृत्युञ्जयानन्तगुणाभिराम ॥ ९ ॥

ஜகத்த்ரயீக்யாத ஸமஸ்ததீர்த்த
ஸமாஹ்ருதை: கல்மஷஹாரிபிஶ்ச ।
ஸ்நாநம் ஸுதோயை: ஸமுதாசர த்வம்
ம்ருத்யுஞ்ஜயாநந்தகுணாபிராம ॥

जगत्त्रयीख्यात-மூவுலகத்திலும் பிரசித்திபெற்றவனே, **अनन्तगुणाभिराम**-எல்லையற்ற குணங்களால் அழகுவாய்ந்தவனே, **मृत्युञ्जय**-யமனைவென்ற பரமேச்வரனே, **त्वं**-நீ **समस्त-तीर्थ**-எல்லாப் புண்ய தீர்த்தங்களிலிருந்தும், **समाहृतैः**-கொண்டுவரப்பட்டவைகளாயும், **कल्मषहारिभिः**-பாவங்களைப் போக்குகின்றவைகளாயுமுள்ள, **सुतोयैः**-நல்ல ஜலங்களால், **स्नानं**-நீராடுதலை, **समुदाचर**-நன்கு செய்தருள்வாயாக.

மூவுலகங்களிலும் புகழ்பெற்றவனே, எல்லையற்ற குணங்களால் அனைவருக்கும் மனோஹரமாகத் தோற்றமளிக்கும் வள்ளலே, காலனை வென்ற கொற்றவனே! நான் உமது ஸ்நாநத்திற்காகப் பல புண்யதீர்த்தங்களிலிருந்து தண்ணீரைச் சேகரித்து வைத்திருக்கிறேன். அந்த தீர்த்தம் ஸகல பாவங்களையும் போக்கும் தன்மை வாய்ந்தது. அந்நீரில் நீ ஸ்நாநம் செய்வாயாக. (9)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

आनीतेनातिशुभ्रेण कौशेयेनामरद्रुमात् ।
मार्जयामि जटाभारं शिव मृत्युञ्जय प्रभो ॥ १० ॥

ஆநீதேநாதிஶுப்ரேண கௌஶேயேநாமரத்ருமாத் ।
மார்ஜயாமி ஜடாபாரம் ஶிவ ம்ருத்யுஞ்ஜய ப்ரபோ ॥

शिव–நன்மை அளிக்கின்றவனே, **मृत्युञ्जय**–யமனை வென்றவனே, **प्रभो**–வன்மை வாய்ந்தவனே, **अमरद्रुमात्**–கல்பவிருக்ஷத்திலிருந்து, **आनीतेन**–கொண்டுவரப்பட்ட, **अतिशुभ्रेण**–மிகவும் வெளுப்பான, **कौशेयेन**-பட்டு வஸ்திரத்தால், **जटाभारं**-உமது திருச்சடைகளை, **मार्जयामि**-துவட்டுகின்றேன்

நீராடிய பின்னர் பரமேச்வரனுடைய சடைகளைத் துவட்டுகிறார். ஏ சிவபெருமானே, யமனை வென்ற பிரபுவே! கல்பவிருக்ஷத்தை வேண்டி, அது கொடுத்து அங்கிருந்து கொண்டுவரப்பட்ட மிகத் தூய்மையான வெண்பட்டால் உம்முடைய பெருஞ் சடைக்கூட்டத்தை யான் துடைத்து விடுகின்றேன். (10)

(அ) சிறந்த வஸ்திரங்களால் உபசரிக்கிறார் :—

नानाहेमविचित्राणि चीरचीनाम्बराणि च ।
विविधानि च दिव्यानि मृत्युंजय सुधारय ॥ ११ ॥

நாநா ஹேம விசித்ராணி சீர சீநாம்பராணி ச ।
விவிதானி ச திவ்யானி ம்ருத்யுஞ்ஜய ஸுதாரய ॥

मृत्युंजय- யமனை வென்றவனே, **नानाहेमविचित्राणि** அநேகம் தங்கமயமான ஜரிகையுடன் கூடி அதிசயிக்கத்தக்கவைகளும் **विविधानि च**-பலவிதமானவைகளும் **दिव्यानि**- சிறந்தவைகளுமான, **चीरचीनाम्बराणि**- மரவுரிகளையும் பட்டு வஸ்திரங்களையும் **सुधारय**- நன்கு தரித்துக்கொள்.

யமனை வென்றவனே, தங்க ஜரிகை சேர்ந்து அதிசய வேலைப்பாடமைந்த பலவிதமான சிறந்த அநேகம் பட்டு வஸ்திரங்களையும் மரவுரிகளையும் அர்ப்பணம் செய்கிறேன். இவைகளை தரித்துக் கொள்வாயாக. (11)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

(அ) உபவீதம் :—

विशुद्धमुक्ताफलजालरम्यं मनोहरं काञ्चनहेमसूत्रम् ।
यज्ञोपवीतं परमं पवित्रमाधत्स्व मृत्युञ्जय भक्तिगम्य ॥ १२ ॥

விஶுத்த முக்தா பல ஜால ரம்யம்
மனோஹரம் காஞ்சன ஹேம ஸூத்ரம் ।
யக்ஞோபவீதம் பரமம் பவித்ரம்
ஆதத்ஸ்வ ம்ருத்யுஞ்ஜய பக்திகம்ய ॥

भक्तिगम्य-பக்தியால் அடையத்தகுந்தவனே, **मृत्युञ्जय**-யமனை வென்றவனே, **विशुद्ध**-களங்கமற்ற, **मुक्ताफल**-நல் முத்துக்களின், **जाल**-சரங்களால், **रम्यं**-அழகு வாய்ந்ததும், **मनोहरं**-மனதைக் கவரக்கூடியதும், **काञ्चनहेमसूत्रं**-தங்கத்தால் செய்யப்பட்ட சரட்டையுடையதும், **परमं पवित्रं**-மிகவும் புனிதமானதுமான, **यज्ञोपवीतं**-பூநூலை, **आधत्स्व**-ஏற்றுக் கொள்வாயாக.

பக்தியால் அடையத்தகுந்தவனே ! யமனை வென்ற ப்ரபுவே ! உனக்கு நான் சிறந்த பூநூலை அணிவிக்கிறேன். அது மிகவும் புனிதமானது. கலங்கமற்றது. நல்ல முத்துக்கள் கோர்க்கப்பட்டது. மிகவும் அழகு வாய்ந்தது. மனதைக்கவரும் சக்தி பெற்றது. இவ்வாறு விளங்கும் தங்கப்பூநூலைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த சுலோகத்தின் மூன்ருவது அடியில் யக்ஞோபவீததாரண மந்திரத்தின் ஓர் பகுதி காணப்படுகிறது. (12)

(அ) சந்தனத்தால் உபசரிக்கிருர் :—

श्रीगन्धं घनसारकुङ्कुमयुतं कस्तूरिकापूरितं
कालेयेन हिमाम्बुना विरचितं मन्दारसंवासितम् ।
दिव्यं देवमनोहरं मणिमये पात्रे समारोपितं
सर्वाङ्गेषु विलेपयामि सततं मृत्युञ्जय श्रीविभो ॥ १३ ॥

ஸ்ரீகந்தம் கநஸார குங்கும யுதம் கஸ்தூரிகா பூரிதம்
காலேயேன ஹிமாம்புநா விரசிதம் மந்தார ஸம்வாஸிதம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

திவ்யம் தேவ மனோஹரம் மணிமயே பாத்ரே ஸமாரோபிதம்
ஸர்வாங்கேஷு விலேபயாமி ஸததம் ம்ருத்யுஞ்ஜய
ஸ்ரீ விபோ ॥

मृत्युञ्जय-யமனை வென்றவனே, **श्रीविभो**-எங்கும் நிறைந்துள்ள பரமேச்வரனே, **घनसारकुंकुमयुतं**-பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ, இவைகளுடன் கூடியதாயும், **कस्तूरिकापूरितं**-கஸ்தூரி நிறைந்ததாயும், **कालेयेन**-சந்தணத்தாலும், **हिमाम्बुना**-பன்னீராலும், **विरचितं**-செய்யப்பட்டதாயும், **मन्दारसंवासितं**-மந்தாரமலரால் நறுமணமுடையதாகச் செய்யப்பட்டதாயும், **दिव्यं**-திவ்யமானதாயும், **देवमनोहरं**-தேவர்களுடைய மனதை வசீகரிக்கின்றதாயும், **मणिमये**-இரத்தினத்தால் இழைக்கப்பட்ட, **पात्रे**-பாத்திரத்தில், **समारोपितं**-வைக்கப்பட்டதாயுமுள்ள, **श्रीगन्धं**-வாசனைச் சந்தணத்தை, **सततं**-எப்பொழுதும், **सर्वाङ्गेषु**-எல்லா அங்கங்களிலும், **विलेपयामि**-பூசிவிடுகிறேன்.

காலனை வென்ற பரமேச்வரனே! உமக்காக நான் நல்ல மணமுள்ள சந்தணத்தை அரைத்து ரத்னத்தினால் இழைக்கப்பட்ட பாத்திரத்தில் வைத்திருக்கிறேன். அது கற்பூரம், குங்குமம், கஸ்தூரி இவைகளுடன் கூடியது. நல்ல பன்னீரால் கரைக்கப்பட்டுள்ளது. சிறந்த மந்தார மலர்களால் மிக்க வாசனையுள்ளதாகச் செய்யப்பட்டுள்ளது. திவ்யமான இச்சந்தணம் தேவர்களின் மனதை வசீகரிக்கும் இயல்புள்ளது இவ்வாறு விளங்கும் இச்சந்தணத்தை நான் உடல் முழுவதும் அள்ளிப்பூசுகிறேன். (13)

(அ) அக்ஷதையால் உபசாரம்:—

अक्षतैर्धवलैर्दिव्यैः सम्यक्तिलसमन्वितैः ।
मृत्युञ्जय महादेव पूजयामि वृषध्वज ॥ १४ ॥

அக்ஷதைர் தவலைர் திவ்யை: ஸம்யக்திலஸமந்விதை: ।
ம்ருத்யுஞ்ஜய மஹாதேவ பூஜயாமி வ்ருஷத்வஜ ॥

मृत्युञ्जय-காலனை வென்றவனே, **महादेव**-மஹாதேவனே, **वृषध्वज**-காளைக் கொடியோனே, **धवलैः**-வெளுப்பானவை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

களாயும், **दिव्यैः**–திவ்யமானவைகளாயும், **तिलसमन्वितैः**–எள்ளுடன் கூடியவைகளாயுமுள்ள, **अक्षतैः**–அக்ஷதைகளால் **सम्यक्**–நன்கு, **पूजयामि**–பூஜிக்கின்றேன்.

காலனை வென்றவனே! விருஷபத்தை அடையாள மாகக் கொண்டவனே! பரமேச்வரனே! நான் சிறந்தவை களாயும், வெண்மை வாய்ந்தவைகளாயும், எள்ளுடன் கூடியவைகளாயும் உள்ள அக்ஷதைகளால் உம்மைப் பூஜிக்கிறேன். (14)

(அ) புஷ்போபசாரம்:—

चम्पकपङ्कजकुरवककुन्दैः करवीरमल्लिकाकुसुमैः ।
विस्तारय निजमकुटं मृत्युञ्जय पुण्डरीकनयनाप्त ॥ १५ ॥

சம்பக பங்கஜ குரவக குந்தை: கரவீர மல்லிகா குஸுமை:
விஸ்தாரய நிஜ மகுடம் ம்ருத்யுஞ்ஜய புண்டரீக நயநாப்த ॥

पुण्डरीकनयनाप्त–செந்தாமரைக் கண்ணனின் நண்பனே, **मृत्युञ्जय**–யமனை வென்றவனே, **चम्पकपङ्कजकुरवककुन्दैः**–சம்பகம், தாமரை, மருதாணி, குந்தம் இந்த மலர்களாலும் **करवीरमल्लिकाकुसुमैः**–அரளி, மல்லிகை முதலிய மலர்களாலும் **निजमकुटं**–உம்முடைய கிரீடத்தை, **विस्तारय**–பெரியதாகச் செய்துகொள்.

செந்தாமரைகளைப் போன்ற அழகு வாய்ந்த கண்களை உடைய மஹா விஷ்ணுவின் நண்பனே! யமனை வென்ற வனே! நான் உமது கிரீடத்தின்மேல் சம்பகம், தாமரை, மருதாணி, குந்தம், அரளி, மல்லிகை முதலிய பல மலர் களைத் தூவுகிறேன். அம் மலர்களால் உன் தலையில் விளங்கும் மணிமகுடம் மிகவும் பெரியதாக விளங்கட்டும்.

(அ) மணி பாதுகைகளில் திருப்பாதங்களை வைக்கும் படி பிரார்த்திக்கிறார் :—

माणिक्यपादुकाद्वन्द्वे मौनिहृत्पद्ममन्दिरे ।
पादौ सत्पद्मसदृशौ मृत्युञ्जय निवेशय ॥ १६ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

மாணிக்ய பாதுகா த்வந்த்வே மௌனி ஹ்ருத் பத்ம மந்திரே
பாதௌ ஸத்பத்ம ஸத்ருஶௌ ம்ருத்யுஞ்ஜய நிவேஶய ||

मृत्युञ्जय-யமனை வென்றவனே, **मौनिहृत्पद्ममन्दिरे**-முனிவர்களின் தாமரைபோன்ற இருதயமாகிய ஆலயத்தில், **माणिक्यपादुकाद्वन्द्वे**-மாணிக்க ரத்னங்கள் பதித்த இரு பாதுகைகளில், **सत्पद्मसदृशौ**-சிறந்த தாமரைகளுக்கு ஒப்பான, **पादौ**-உன் இரு திருப்பாதங்களை, **निवेशय**-வைப்பாயாக.

யமனை வென்றவனே! முனிவர்கள் உன்னை அனவரதமும் தியானம் செய்கிறார்கள். அவர்கள் உன்னை வரவேற்பதற்காகத் தங்களுடைய இருதய கமலத்தில் இரு ரத்னப் பாதுகைகளை யமைத்து வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய இருதய கமலமே இரத்தினக் கற்களால் அமைக்கப்பட்ட திருக்கோவில். அக் கோவிலில் அமைக்கப்பட்டு இருக்கும் இரு பாதுகைகளின் மேலும் உனது திருப்பாதங்களை வைத்தருள்வாயாக. அவர்களுடைய இதயமாகிய கோவிலில் குடிகொண்டு அவர்களைக் காத்தருள்வாயாக.

(அ) பலவித ஆபரணங்களால் பகவானை அலங்கரிக்கிறார் :—

माणिक्यकेयूरकिरीटहारैः काञ्चीमणिस्थापितकुण्डलैश्च ।
मञ्जीरमुख्याभरणैर्मनोज्ञैरङ्गानि मृत्युञ्जय भूषयामि ॥ १७ ॥

மாணிக்ய கேயூர கிரீட ஹாரை: காஞ்சீ மணி ஸ்தாபித குண்டலைஶ்ச ।
மஞ்ஜீர முக்யாபரணைர் மனோக்ஞைரங்கானி ம்ருத்யுஞ்ஜய பூஷயாமி ||

मृत्युञ्जय-யமனை வென்றவனே, **माणिक्य**-மாணிக்கக் கல்பதித்த, **केयूर**-தோள்வளைகள், **किरीट**-மகுடம், **हारैः**-முத்துமாலைகள் இவைகளாலும், **काञ्ची**-இடுப்புப் பட்டிகை, **मणिस्थापित**-இரத்தினங்கள் பதிக்கப்பட்ட, **कुण्डलैः**-குண்டலங்களாலும், **मनोज्ञैः**-மனதைக் கவரக்கூடிய, **मञ्जीर**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

मुख्याभरणैः च-கால்ச்சிலம்பு முதலிய சிறந்த ஆபரணங்களாலும், **अङ्गानि**-உன் அங்கங்களை, **भूषयामि**-அலங்கரிக்கிறேன்.

யமனை வென்றவனே, நான் உன்னுடைய எல்லா அங்கங்களையும் மனதைக் கவரும் சிறந்த ஆபரணங்களால் அலங்கரிக்கின்றேன். உன்னுடைய சிரஸில் மணி மகுடத்தை வைக்கிறேன். உன்னுடைய செவிகளில் இரத்ன குண்டலங்களையும், தோள்களில் சிறந்த வளைகளையும், கழுத்தில் முத்து மாலைகளையும், இடுப்பில் இரத்னங்கள் பதித்த பட்டிகையையும், கால்களில் ஒலி மிகுந்த சிலம்புகளையும் அணிவிக்கிறேன். (17)

(அ) விநாயகர், குஹர் இவ்விரு தனயர்களும் பகவானுக்கு சாமரம் வீசுவதாக தியானிக்கிறார் :—

गजवदनस्कन्दधृतेनातिस्वच्छेन चामरयुगेन ।
गलदलकाननपद्मं मृत्युञ्जय भावयामि हृत्पद्मे ॥ १८ ॥

கஜவதந ஸ்கந்த த்ருதேநாதிஸ்வச்சேந சாமர யுகேந ।
கலதலகாநந பத்மம் ம்ருத்யுஞ்ஜய பாவயாமி ஹ்ருத்பத்மே ॥

मृत्युञ्जय-யமனை வென்றவனே, **गजवदन**-யானைமுகத்தோனான விநாயகர், **स्कन्द**-குஹர் இவ்விருவர்களாலும், **धृतेन**-பிடித்துக்கொள்ளப்பட்டதும், **अतिस्वच्छेन**-மிகவும் வெளுப்பானதுமான, **चामरयुगेन**-இரு சாமரங்களால், **गलद्**-கலைகின்ற, **अलकाननपद्मं**-கேசங்களுடன்கூடிய தாமரை போன்ற முகமுள்ள உம்மை, **हृत्पद्मे**-என்னுடைய ஹிருதய பத்மத்தில், **भावयामि**-த்யானம் செய்கின்றேன்.

யமனை வென்ற பரமேச்வரனே! உமது திருக்குமாரர்களான விநாயகனும், குமரனும் உனக்குப் பணியாற்றுகிறார்கள். அவர்களிருவரும் அழகிய வெண்சாமரங்களைத் தங்களுடைய கைகளில் ஏந்தி வீசுகிறார்கள். அங்ஙனம் செய்கையில் உமது சிரஸில் விளங்கும் திருச்சடைகள் அசைந்து உமது முகத்தின்மீது படிகின்றன. அவ்வாறு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சடைகள் உம்முகத்தில் படியும்பொழுது தாமரை போன்ற உம் முகம் பாசிகளுக்கிடையில் தோன்றும் பொற்றாமரை போல் பொலிவுடன் விளங்குகின்றது. அவ்வாறான உமது முகபத்மத்தை என்னுடைய இருதய கமலத்தில் இருத்தி வழிபடுகிறேன். (18)

(அ) ச்வேதச்சத்ரத்தை (வெண்குடையை) அர்ப்பணம் செய்கிறார்:—

मुक्तातपत्रं शशिकोटिशुभ्रं शुभप्रदं काञ्चनदण्डयुक्तम् ।
माणिक्यसंस्थापितहेमकुम्भं सुरेश मृत्युञ्जय तेऽर्पयामि ॥

முக்தாதபத்ரம் ஶஶி கோடி ஶுப்ரம்
ஶுப ப்ரதம் காஞ்சந தண்ட யுக்தம் ।
மாணிக்ய ஸம்ஸ்தாபித ஹேம கும்பம்
ஸுரேஶ ம்ருத்யுஞ்ஜய தேऽர்பயாமி ॥

शशिकोटिशुभ्रं – கோடிக்கணக்கான சந்திரர்கள்போல், வெளுப்பானதாயும், **शुभप्रदं**–நன்மை பயக்கின்றதாயும், **काञ्चनदण्डयुक्तं**–தங்கத்தாலான அடிக்கம்புடன் கூடியதாயும் **माणिक्यसंस्थापित**–ரத்னங்கள் பதித்த, **हेमकुम्भं**–பொற் கலசத்தை உடையதாயும் விளங்குகின்ற, **मुक्तातपत्रं**-முத்துக் குடையை, **मृत्युञ्जय**–யமனை வென்றவனே, **सुरेश**–தேவர்களை யெல்லாம் காத்தருள்கின்றவனே, **ते**–உனக்கு, **अर्पयामि**-அளிக்கின்றேன்.

காலனைக் கொன்றவனே! தேவர்களைக்காத்தருள்கின்றவனே! நான் உனக்கு ஓர் முத்துக்குடையையளிக்கிறேன். அது ஆயிரக்கணக்கான சந்திரர்கள்போல் மிகவும் வெளுப்பானது. தங்கத்தடியுடன் கூடியது. ரத்னங்கள் பதித்த பொற்குமிழி உடையது. எல்லா நன்மைகளையும் அளிக்க வல்லது. நீ அதனைப்பெற்று மகிழ்ந்திடுவாயாக. (19)

(அ) கண்ணாடியில் பார்க்கும்படி வேண்டுகிறார்:—

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

मणिमुकुरे निष्पटले त्रिजगद्गाढान्धकारसप्ताश्वे ।
कंदर्पकोटिसदृशं मृत्युञ्जय पश्य वदनमात्मीयम् ॥ २० ॥

மணி முகுரே நிஷ்படலே த்ரிஜகத் காடாந்தகாரஸப்தாஶ்வே ।
கந்தர்ப்ப கோடி ஸத்ருஶம் ம்ருத்யுஞ்ஜய பஶ்ய
வதநமாத்மீயம் ॥

मृत्युञ्जय-யமனை வென்றவனே, **निष्पटले**-தூசுபடியாததும், **त्रिजगद्गाढान्धकार**-மூவுலகிலும் வியாபித்துள்ள ஆழ்ந்த இருட்டிற்கு, **सप्ताश्वे**-சூரியனாக விளங்குகின்றதுமான, **मणिमुकुरे**-இரத்தினக் கண்ணாடியில், **कन्दर्पकोटिसदृशं**-கோடிக் கணக்கான மன்மதர்களுடையதுபோன்ற, **आत्मीयं**-உன்னுடைய, **वदनं**-முகத்தை, **पश्य**-பார்.

காலனை வென்றவனே! நான் உன் முன்னிலையில் இரத்தினக் கண்ணாடியை வைக்கிறேன். அது மாசுபடியாதது. சூரியன் எவ்வாறு மூவுலகிலும் நிறைந்துள்ள இருளைப்போக்குகிறானோ, அதுபோலவே இக்கண்ணாடி எங்கும் வியாபித்துள்ள இருட்டை நீக்கி ஒளியைத்தர வல்லது. இக்கண்ணாடியில் கோடிக்கணக்கான மன்மதர்களின் முகம் போல் அழகான உன்னுடைய முகத்தைப் பார்த்துக்கொள். (20)

(அ) ஸுகந்த தூபத்தால் உபசரிக்கிறார்:—

कर्पूरचूर्णं कपिलाज्यपूतं दास्यामि कालेयसमन्वितञ्च ।
समुद्भवं पावनगन्धधूपितं मृत्युञ्जयाङ्गं परिकल्पयामि ॥

கற்பூர சூர்ணம் கபிலாஜ்ய பூதம்
தாஸ்யாமி காலேய ஸமந்விதஞ்ச ।
ஸமுத்பவம் பாவந கந்த தூபிதம்
ம்ருத்யுஞ்ஜயாங்கம் பரிகல்பயாமி ॥

मृत्युञ्जय-யமனை வென்றவனே, **कपिलाज्यपूतं**-'கபிலா' என்ற பசுவின் நெய்யால் பரிசுத்தமானதும், **कालेयसमन्वितं च**-சந்தனத்துடன் கூடியதும், **समुद्भवं**-சிறப்புற்றதுமான,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

कर्पूरचूर्ण-கற்பூரப் பொடியை, **दास्यामि**-கொடுக்கிறேன் (இதனுல்), **अङ्गं**-அங்கத்தை, **पावनगन्धधूपितं**-புனித வாஸனையால் நறுமணமுள்ளதாக, **परिकल्पयामि**-செய்கிறேன்.

யமனை வென்றவனே! நான் உனக்கு உகந்த தூபத்தை அளிக்கிறேன். அது சிறந்த பசுவின் நெய்யால் பரிசுத்தம் செய்யப்பட்டுள்ளது. சந்தணத்தூளுடன் கூடியது. நன்ருகச் செய்யப்பட்டுள்ளது. சிறந்த வாசனை உள்ளது. கற்பூரப்பொடியுடன் கூடியது. அதை ஏற்றுக் கொள்வாயாக. (21)

(அ) தீபம்:—

वर्तित्रयोपेतमखण्डदीप्त्या तमो हरं बाह्यमथान्तरं च ।
साज्यं समस्तामरवर्गहृद्यं सुरेश मृत्युञ्जय वंशदीपम् ॥ २२ ॥

வர்த்தித்ரயோபேதமகண்டதீப்த்யா
    தமோ ஹரம் பாஹ்யமதாந்தரம் ச ।
ஸாஜ்யம் ஸமஸ்தாமரவர்க்கஹ்ருத்யம்
    ஸுரேஶ ம்ருத்யுஞ்ஜய வம்ஶதீபம் ॥

सुरेश-தேவாதிதேவனே, **मृत्युञ्जय**-யமனை வென்றவனே, **वर्तित्रयोपेतं**-மூன்று திரிகளுடன்கூடியதும், **अखण्डदीप्त्या**-பூர்ணமான ஒளியால், **बाह्यं**-வெளியில் உள்ளதும், **अथ आन्तरं च**-பின்னர் உள்ளேயுள்ளதுமான, **तमः**-இருளை, **हरं**-அகற்றுகின்றதும், **साज्यं**-நெய்யுடன் கூடியதும், **समस्त**-எல்லா, **अमरवर्ग**-தேவர்களுடைய கூட்டத்திற்கு, **हृद्यं**-மனோஹரமாயும் உள்ள, **वंशदीपं**-மூங்கில் விளக்கை, **ते**-உனக்கு, **परिकल्पयामि**-ஏற்றிவைக்கிறேன்.

யமனை வென்றவனே! அமரர்களுக்கெல்லாம் தலைவனுக விளங்குகின்றவனே! நான் உனக்குச்சிறந்த தீபத்தை ஏற்றிவைக்கிறேன். அது மூன்று திரிகளை உடையது. நல்ல நெய்யுட்ன் கூடியது. அணையாமல் எப்பொழுதும் எரியக்கூடியது. வெளியில் நிறைந்துள்ள இருட்டையும் [illegible] அறியாமையென்ற

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இருளையும் நீக்கும் ஆற்றல் பெற்றது. தேவர்களின் மனதைக் கவரக்கூடியது. இவ்விளக்கைப் பெற்று மகிழ்ந்திடுவாயாக. (22)

(அ) நைவேத்யம் :—

राजान्नं मधुरान्वितं च मृदुलं माणिक्यपात्रे स्थितं
हिङ्गूजीरकसन्मरीचिमिलितैः शाकैरनेकैः शुभैः ।
साकं सम्यगपूपसूपसहितं सद्योघृतेनाप्लुतं
श्रीमृत्युञ्जय पार्वतीप्रिय विभो सापोशनं भुज्यताम् ॥ २३ ॥

ராஜாந்நம் மதுராந்விதம் ச ம்ருதுளம்
மாணிக்ய பாத்ரே ஸ்திதம்
ஹிங்கூ ஜீரக ஸந்மரீசி மிலிதை: ஶாகைரநேகை: ஶுபை: ।
ஸாகம் ஸம்யகபூப ஸூப ஸஹிதம் ஸத்யோக்ருதேநாப்லுதம்
ஸ்ரீம்ருத்யுஞ்ஜய பார்வதீ ப்ரிய விபோ ஸாபோஶநம்
புஜ்யதாம் ॥

श्रीमृत्युञ्जय-யமனை வென்றவனே, **पार्वतीप्रिय**-மலைமகளுக்கு பிரியமானவனே, **विभो**-எங்கும் நிறைந்தவனே, **माणिक्यपात्रे**-இரத்தினப் பாத்திரத்தில், **स्थितं**-வைக்கப்பட்டுள்ளதும், **मधुरान्वितं**-சர்க்கரையுடன் கூடியதும், **मृदुलं**-மென்மையானதும், **अपूपसूपसहितं**-அப்பம், பருப்பு இவைகளுடன் கூடியதும், **सद्योघृतेन**-அப்பொழுதே வெண்ணையெடுத்துக் காய்ச்சிய நெய்யால், **आप्लुतं**-நனைக்கப்பட்டதுமான, **राजान्नं**-சிறந்த உணவு, **हिङ्गूजीरकसन्मरीचिमिलितैः**-பெருங்காயம், சீரகம், நல்ல மிளகு, இவைகளுடன்கூடிய, **अनेकैः**-பல, **शुभैः** நலல, **शाकैः साकं**-காய்கறிகளுடன்கூட, **सापोशनं**-முதலில் ஆபோசனத்துடன், **सम्यक्**-நன்கு, **भुज्यताम्**-சாப்பிடப் படட்டும்.

யமனை வென்றவனே! பார்வதிக்கு உகந்தவனே! எங்கும் நிறைந்து விளங்குகின்றவனே! நான் உனக்குச் சிறந்த உணவை யளிக்கின்றேன். அது இனிமையானது. மிகவும் மிருதுவானது. இரத்தினப் பாத்திரத்தில் வைக்கப்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பட்டுள்ளது. பெருங்காயம், மிளகு, சீரகம் முதலியவற்றுடன் கூடிய பல நல்ல காய்கறிகளுடன் கூடியது. அப்பம், பருப்பு முதலியவைகளாலும், நெய்யாலும் நன்கு பரிஷ்காரம் செய்யப்பட்டுள்ளது. இதை நன்கு புஜிப்பாயாக.

कूश्माण्डवार्ताकपटोलिकानां फलानि रम्याणि च कारवल्ल्याः ।
सुपाकयुक्तानि ससौरभाणि श्रीकण्ठ मृत्युञ्जय भक्षयेश ॥ २४ ॥

கூஶ்மாண்ட வார்த்தாக படோலிகாநாம்
  பலாநி ரம்யாணி ச காரவல்ல்யா: ।
ஸுபாக யுக்தாநி ஸஸௌரபாணி
  ஸ்ரீகண்ட ம்ருத்யுஞ்ஜய பக்ஷயேஶ ॥

मृत्युञ्जय-யமனை வென்றவனே, **श्रीकण्ठ**-விஷத்தைக் கழுத்தில் வைத்துக்கொண்ட, **ईश**-ஈசனே, **रम्याणि**-மனோஹரமானதும், **सुपाकयुक्तानि**-நன்கு பாகம் செய்ததும், **ससौरभाणि**-வாஸனையுடன் கூடியதுமான, **कूश्माण्डवार्ताकपटोलिकानां**-பூஷிணி, கத்திரி, புடல் இவைகளுடையவும், **कारवल्ल्याश्च**-பாகலினுடையவும், **फलानि**-காய்களை, **भक्षय**-சாப்பிடும்.

யமனை வென்றவனே, ஸ்ரீகண்டா, ஈசனே! பூஷிணிக்காய், கத்திரிக்காய், புடலங்காய், பாகற்காய் இவைகளை நன்கு பாகம் செய்து மனோஹரமாகவும், வாஸனையுள்ளதாகவும் ஆக்கி அளிக்கிறேன். சாப்பிடவேணும். (24)

शीतलं मधुरं स्वच्छं पावनं वासितं लघु ।
मध्ये स्वीकुरु पानीयं शिव मृत्युञ्जय प्रभो ॥ २५ ॥

ஶீதளம் மதுரம் ஸ்வச்சம் பாவநம் வாஸிதம் லகு ।
மத்யே ஸ்வீகுரு பாநீயம் ஶிவ ம்ருத்யுஞ்ஜய ப்ரபோ ॥

शिव-சிவபெருமானே, **मृत्युञ्जय**-யமனை வென்றவனே, **प्रभो**-பிரபுவே. **मध्ये**-நடுவில், **शीतलं**-குளிர்ந்ததாயும், **मधुरं**-இனிப்பாயும், **स्वच्छं**-தெளிந்ததாயும், **पावनं**-பரிசுத்தமாயும், **वासितं**-வாசனையுள்ளதாகச் செய்யப்பட்டதாயும், **लघु**-இலேசாயும் உள்ள, **पानीयं**-நீரை, **स्वीकुरु**-ஏற்றுக்கொள்ளும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிவபெருமானே! யமனை வென்ற பிரபுவே! சாப்பிடும் பொழுது நடுவில் தாகத்தைத் தணிப்பதற்காக நான் உமக்குக் குளிர்ச்சியாயும், இனிப்பாயும், தெளிவானதாயும், புனிதமானதும், நறுமணமுள்ளதாயும், இலேசானதாயு முள்ள தீர்த்தத்தைத் தருகின்றேன். அதை நீர் அருந்தி உமது தாகத்தைத் தவிர்த்துக்கொள்ளும். (25)

शर्करामिलितं स्निग्धं दुग्धान्नं गोघृतान्वितम्।
कदलीफलसंमिश्रं भुज्यतां मृत्युसंहर ॥ २६ ॥

ஶர்கரா மிளிதம் ஸ்நிக்தம் துக்தான்னம்
கோக்ருதான்விதம்।
கதலீபல ஸம்மிச்ரம் புஜ்யதாம் ம்ருத்யு ஸம்ஹர ॥

मृत्युसंहर-காலனை வதைத்தவனே! **शर्करामिलितं**-சர்க்கரை கலந்ததும், **स्निग्धं**-பசையுள்ளதும், **गोघृतान्वितं**-பசுவின் நெய்யுடன் கூடியதும், **कदलीफलसंमिश्रं**-வாழைப் பழத்துடன் கலந்ததுமான, **दुग्धान्नं**-பாலுஞ்சாதம், **भुज्यताम्**- சாப்பிடப்படட்டும்.

யமனை வதைத்த பரமேச்வரனே! நான் உமக்குப் பாலுண்டியளிக்கிறேன். அது சர்க்கரை கலந்தது. பசுவின் நெய்ப்பசையுடன் கூடியது. வாழைப்பழம் சேர்ந்தது. அதை நீ புஜிப்பாயாக. (26)

केवलमतिमाधुर्यं दुग्धैः स्निग्धैश्च शर्करामिलितैः।
एलामरीचिमिलितं मृत्युञ्जय भुङ्क्ष्व परमान्नम् ॥ २७ ॥

கேவலமதிமாதுர்யம் துக்தை: ஸ்நிக்தைஶ்ச
ஶர்கரா மிளிதை:।
ஏலா மரீசி மிலிதம் ம்ருத்யுஞ்ஜய புங்க்ஷ்வ பரமாந்நம் ॥

मृत्युञ्जय-யமனை வென்றவனே! **स्निग्धैः**-பசையுள்ளவை களாயும, **शर्करामिलितैः च**-சர்க்கரையுடன் கூடியவைகளாயு முள்ள, **दुग्धैः**-பாலால், **केवलं अतिमाधुर्यं**-மிகுந்த இனிப்பாகிய

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஒரே சுவையுள்ளதாயும், **एलामरीचिमिलितं**-ஏலம், மிளகு இவைகளுடன் கூடியதாயும் விளங்குகின்ற, **परमान्नं**-பாயஸத்தை, **भुङ्क्ष्व**-சாப்பிடுவாயாக.

யமனை வென்றவனே! நான் உனக்குச் சிறந்த பாயஸத்தை அளிக்கின்றேன். அது நல்ல பசையுள்ள பாலாலும் சர்க்கரையாலும் சமைக்கப்பட்டுள்ளது. ஆதலால் அது மிகவும் தித்திப்பானது. மேலும் அதில் ஏலம், மிளகு முதலியவைகளும் சேர்ந்துள்ளதால் அது நறுமணத்துடன் கூடியது. நீ அதை புஜிப்பாயாக. (27)

रम्भाचूतकपित्थकण्टकफलैर्द्राक्षारसस्वादुम-
त्खर्जूरैर्मधुरेक्षुखण्डशकलैः सन्नारिकेलाम्बुभिः ।
कर्पूरेण सुवासितैर्गुडजलैर्माधुर्ययुक्तैर्विभो
श्रीमृत्युञ्जय पूरय त्रिभुवनाधारं विशालोदरम् ॥ २८ ॥

ரம்பா சூத கபித்த கண்டக பலைர் த்ராக்ஷாரஸ ஸ்வாதுமத்
கர்ஜூரைர் மதுரேக்ஷு கண்ட ஶகலை: ஸந்நாரிகேலாம்புபி: ।
கர்பூரேண ஸுவாஸிதைர் குடஜலைர் மாதுர்ய யுக்தைர் விபோ
ஸ்ரீ ம்ருத்யுஞ்ஜய பூரய த்ரிபுவநாதாரம் விஶாலோதரம் ॥

श्रीमृत्युञ्जय-யமனை வென்றவனே, **विभो**-எங்கும் பரவி நிற்கும் சிவபெருமானே, **रम्भा**-வாழை, **चूत**-மா, **कपित्थ**-விளா, **कण्टक**-பலா இவைகளுடைய, **फलैः**-பழங்களாலும், **द्राक्षारस**-திராக்ஷா ரஸத்தாலும், **स्वादुमत्**-சுவையுள்ள, **खर्जूरैः**-பேரீச்சம் பழங்களாலும், **मधुर**-இனிப்பான, **इक्षुखण्ड**-கரும்புத் துண்டுகளின், **शकलैः**-பாகங்களாலும், **सन्नारिकेलाम्बुभिः**-நல்ல இளநீர்களாலும், **कर्पूरेण**-பச்சைக் கற்பூரத்தால், **सुवासितैः**-நறுமணம் கமழும்படி செய்யப்பட்டதாயும், **माधुर्ययुक्तैः**-இனிப்புடன் கூடியதுமான, **गुडजलैः**-பானகங்களாலும், **त्रिभुवनाधारं**-மூவுலகிற்கும் உறைவிடமான, **विशालोदरं**-விரிந்த வயிற்றை, **पूरय**-நிரப்பிக்கொள்வாயாக.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யமனை வென்றவனே! எங்கும் பரவி நிற்கும் பரம் பொருளே! நான் உமக்குப் பலவிதமான பழவகைகளையும் பானகங்களையும் வழங்குகிறேன். அவற்றை நீ அருந்தி மூவுலகங்களுக்கும் உறைவிடமாய் விளங்கும் உன் விசால மான வயிற்றை நிரப்பிக் கொள்வாயாக. பழங்களில் சிறந்து விளங்குவன வாழை, மா, விளா, பலா, திராக்ஷை, பேரீச்சை முதலியன. அவற்றை எல்லாம் உனக்கே அர்ப்பணம் செய்கின்றேன். மேலும் நல்ல தித்திப்பான கரும்புச்சாற்றையும் இளநீரையும், பானகத்தையும் அருந்து வதற்காக அளிக்கின்றேன். அப்பானகம் கற்பூரத்தின் சேர்க்கையால் நறுமணம் பெற்று விளங்குகின்றது. இவற்றால் உனது பெரும் வயிறு நிரம்பட்டும். மூவுலகங் களிலும் வசிக்கும் எல்லா பிராணிகளும் உன் உதரத்தில் இருப்பதால் நீ சாப்பிட்டு திருப்தியடைந்துவிட்டால் எல்லா பிராணிகளுக்கும் திருப்தி ஏற்பட்டுவிடும். (28)

मनोज्ञरम्भानवखण्डखण्डितान्रुचिप्रदान्सर्षपजीरकांश्च ।
ससौरभान्सैन्धवसेवितांश्च गृहाण मृत्युञ्जय लोकवन्द्य ॥ २९ ॥

மனோக்ஞ ரம்பா நவ கண்ட கண்டிதான்
ருசிப்ரதான் ஸர்ஷப ஜீரகாம்ஶ்ச ।
ஸஸௌரபான் ஸைந்தவ ஸேவிதாம்ஶ்ச
க்ருஹாண ம்ருத்யுஞ்ஜய லோக வந்த்ய ॥

मृत्युञ्जय–யமனை வென்றவனே, **लोकवन्द्य**–எல்லா உலகத் தினராலும் வணங்கத்தகுந்தவனே, **रुचिप्रदान्**–நல்ல சுவை தருகின்றவைகளும், **ससौरभान्**–நல்ல வாசனையுடன் கூடியவைகளும், **सैन्धवसेवितान् च**–உப்புடன் சேர்ந்தவை களும், **सर्षपजीरकांश्च**–கடுகு, சீரகம், கலந்ததுமான, **मनोज्ञ**– அழகிய, **रम्भानवखण्डखण्डितान्**–புதிய வாழைத்தண்டின் சிறு சிறு துண்டுகளை, **गृहाण**–ஏற்றுக்கொள்வாயாக.

யமனை வென்றவனே! எல்லா உலகங்களாலும் போற்றப்படுகின்ற பரமேச்வரனே! நான் உமக்காக புதிய வாழைத்தண்டை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி உப்பு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சேர்த்து கடுகு ஜீரகம் தாளிசம் செய்து நல்ல சுவையும் வாஸனையும் உள்ளதாக ஆக்கித் தருகிறேன். ஏற்றுக் கொள்வாயாக. (29)

(அ) மேலும் பலவித உணவு வகைகளைத் தருகிறார்:—

हिङ्गूजीरकसहितं विमलामलकं कपित्थमतिमधुरम् ।
बिसखण्डाँल्लवणयुतान्मृत्युञ्जय तेऽर्पयामि जगदीश ॥ ३० ॥

ஹிங்கூ ஜீரக ஸஹிதம்
விமலாமலகம் கபித்தமதிமதுரம் ।
பிஸகண்டான் லவணயுதான்
ம்ருத்யுஞ்ஜய தேऽர்பயாமி ஜகதீஶ ॥

मृत्युञ्जय-யமனை வென்றவனே, जगदीश-உலகையாள்பவனே, ते-உமக்கு, हिङ्गूजीरकसहितं-பெருங்காயம், சீரகம் இவைகளுடன் கூடிய, विमलामलकं-பரிசுத்தமான நெல்லிக் கனியையும், अतिमधुरं-மிகவும் இனிப்பான, कपित्थं-விளாம் பழத்தையும், लवणयुतान् - உப்புடன் கூடிய, बिसखण्डान् - தாமரைத் துண்டங்களையும், अर्पयामि-அளிக்கின்றேன்.

யமனை வென்றவனே! எல்லா உலகங்களையும் ஆளுகின்ற பரமேச்வரனே! நான் உமக்குப் பெருங்காயம் ஜீரகங்களுடன் கூடிய நல்ல நெல்லிக்கனியையும் மிகவும் இனிய விளாம்பழத்தையும், உப்புக்கலந்த தாமரைத் தண்டுகளின் துண்டுகளையும் அளிக்கின்றேன். (30)

एलाशुण्ठीसहितं दध्यन्नं चारुहेमपात्रस्थम् ।
अमृतप्रतिनिधिमाढ्यं मृत्युञ्जय भुज्यतां त्रिलोकेश ॥ ३१ ॥

ஏலா ஶுண்டீ ஸஹிதம் தத்யந்நம் சாரு ஹேம பாத்ரஸ்தம் ।
அம்ருத ப்ரதிநிதிமாட்யம் ம்ருத்யுஞ்ஜய புஜ்யதாம்
த்ரிலோகேஶ ॥

मृत्युञ्जय யமனை வென்றவனே! त्रिलोकेश-மூவுலகத்திற்கும் அதிபதியே, एलाशुण्ठीसहितं-ஏலம், சுக்கு இவைகளுடன் கூடியதும், आढ्यं-சிறந்ததும், अमृतप्रतिनिधिं-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அமுதத்திற்கு ஒப்பானதும், **चारुहेमपात्रस्थं**-அழகிய தங்கப் பாத்திரத்தில் வைக்கப்பட்டுள்ளதுமான, **दध्यन्नं**-தயிர்சாதம் **भुज्यताम्** – புஜிக்கப்படட்டும்.

யமனை வென்றவனே! மூன்று உலகங்களையும் ஆளுகின்றவனே! நான் உனக்கு சுக்கு ஏலம் முதலியவைகளுடன் கூடியதும் அமுதத்துக்கொப்பானதுமான நல்ல தயிர் சாதத்தைத் தங்கப்பாத்திரத்தில் வைத்திருக்கிறேன். அதை நீ புஜிப்பாயாக. (31)

जम्बीरनीराञ्चितशृङ्गबेरं मनोहरानम्लशलाटुखण्डान् ।
मृदूपदंशान् सहसोपभुङ्क्ष्व मृत्युञ्जय श्रीकरुणासमुद्र ॥ ३२ ॥

ஜம்பீர நீராஞ்சித ஶ்ருங்கபேரம்
மனோஹராநம்ல ஶலாடு கண்டாந் ।
ம்ருதூபதம்ஶான் ஸஹஸோபபுங்க்ஷ்வ
ம்ருத்யுஞ்ஜய ஸ்ரீகருணாஸமுத்ர ॥

मृत्युञ्जय-யமனை வென்றவனே, **श्रीकरुणासमुद्र**-கருணைக் கடலே, **जम्बीरनीराञ्चित**-எலுமிச்சை ரஸத்தால் சுவையாகச் செய்யப்பட்ட, **शृङ्गबेरं**-இஞ்சியையும், **मनोहरान्** –மனதைக் கவரக்கூடியதாயும், **अम्ल**–புளிப்புச் சுவையுள்ள, **शलाटु-खण्डान्** – காய் கிழங்குகளுடன் கூடியதுமான, **मृदूपदंशान्** – மெதுவான ஊறுகாய்களையும், **सहसा**-உடனேயே, **उपभुङ्क्ष्व**-சாப்பிடுவாயாக.

யமனை வென்றவனே! கருணைக்கடலே! நான் உனக்கு எலுமிச்ச ரஸத்துடன் கூடிய இஞ்சியையும் மனதிற்குப் பிரியமான காய் கிழங்குகளின் ஊறுகாய்களையும் தருகின்றேன். அவற்றை நீ உடனேயே புஜித்திடுவாயாக. (32)

नागररामठयुक्तं सुललितजम्बीरनीरसंपूर्णम् ।
मथितं सैन्धवसहितं पिब हर मृत्युंजय क्रतुध्वंसिन् ॥ ३३ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நாகர ராமடயுக்தம் ஸுலலித ஜம்பீர நீர ஸம்பூர்ணம் ।
மதிதம் ஸைந்தவ ஸஹிதம் பிப ஹர ம்ருத்யுஞ்ஜய
க்ரது த்வம்ஸின் ॥

मृत्युञ्जय-யமனை வென்றவனே, **क्रतुध्वंसिन्**- யாகத்தை நாசம் செய்தவனே! **हर**-பரமசிவனே! **नागररामठयुक्तं**-சுக்கு, பெருங்காயம் இவைகளுடன் கூடியதும், **सुललित**-நல்ல, **जम्बीरनीरसंपूर्णं**-எலுமிச்ச ரஸம் நிறைந்ததும், **सैन्धवसहितं**-உப்புடன் கூடியதுமான, **मथितं**-மோரை, **पिब**-குடிப்பாயாக.

யமனை வென்றவனே! தக்ஷனுடைய யாகத்தை அழித்தவனே! பரமேச்வரனே! நான் உனக்கு எலுமிச்சை ரஸம் சேர்த்துக்கரைத்த மோரைக் கொடுக்கின்றேன். அது நன்கு கடையப்பட்டுள்ளது. சுக்கு பெருங்காயம் இவைகளுடன் கூடியது. உப்பிட்டுச் சுவையாகச் செய்யப் பட்டுள்ளது. அதை நீ அருந்துவாயாக. (33)

(அ) உத்தராபோசனம்:—

मन्दारहेमाम्बुजगन्धयुक्तैर्मन्दाकिनीनिर्मलपुण्यतोयैः ।
गृहाण मृत्युञ्जय पूर्णकाम श्रीमत्परापोशनमभ्रकेश ॥ ३४ ॥

மந்தார ஹேமாம்புஜ கந்தயுக்தைர்
மந்தாகினி நிர்மல புண்ய தோயை: ।
க்ருஹாண ம்ருத்யுஞ்ஜய பூர்ணகாம
ஸ்ரீமத் பராபோஶனமப்ரகேஶ ॥

मृत्युंजय-யமனை வென்றவனே **पूर्णकाम**-நிறைவேறிய விருப்பங்களையுடையவனே **अभ्रकेश**-ஆகாயம்போல் எங்கும் விரிந்த கேசங்களையுடையவனே (ஆகாசத்தையே கேசமாகக் கொண்டவனே) **मन्दारहेमाम्बुज** -- மந்தாரம் பொற்றாமரை முதலிய மலர்களின் **गन्धयुक्तैः**-வாசனையுடன் கூடியவைகளான **मन्दाकिनी** - கங்கையினுடைய **निर्मल**-பரிசுத்தமாயும் **पुण्य**-புண்ணியமாயும் உள்ள **तोयैः**-ஜலங்களால் **श्रीमत्परापोशनं**-சிறந்த உத்தராபோசனத்தை **गृहाण**-ஏற்றுக்கொள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யமனை வென்றவனே! நிறைவேறிய ஸமஸ்த காமங்களையும் உடையவனே! விரிந்த செஞ்சடைகளையுடைய பரமேச்வரனே! ஆகாசத்தையே கேசமாகக்கொண்டவனே (உலகம் முழுவதையும் சரீரமாகக்கொண்ட பகவானுடைய விராட் ஸ்வரூபத்தில் ஆகாசமே கேசமாக அமைந்துள்ளது) சாப்பிட்ட பின்னர் உமக்கு உத்தராபோசனத்திற்காகச் சிறந்த புனிதமான கங்காஜலத்தைத் தருகின்றேன். அது மந்தாரம், பொற்றாமரை முதலிய மலர்களின் இனிய வாசனையுடன் கூடியது. அதை நீ அருந்துவாயாக. (34)

(அ) ஹஸ்தபாதப்ரக்ஷாலனம் (கைகால் அலம்புவது)

गगनधुनीविमलजलैर्मृत्युंजय पद्मरागपात्रगतैः ।
मृगमदचन्दनपूर्णैः प्रक्षालय चारु हस्तपदयुग्मम् ॥ ३५ ॥

ககநதுநீ விமல ஜலைர்
ம்ருத்யுஞ்ஜய பத்மராக பாத்ர கதை: ।
ம்ருகமத சந்தன பூர்ணை:
ப்ரக்ஷாலய சாரு ஹஸ்த பத யுக்மம் ॥

मृत्युंजय-யமனை வென்றவனே **पद्मरागपात्रगतैः**-பத்மராக ரத்னத்தால் இழைக்கப்பட்ட பாத்திரத்திலுள்ள **मृगमद-चन्दनपूर्णैः**-கஸ்தூரி, சந்தனம் இவைகள் நிறைந்த **गगनधुनी**-கங்கையின் **विमलजलैः**-கலக்கமற்ற தண்ணீர்களால் **चारु**-அழகிய **हस्तपदयुग्मम्**-இரு கைகளையும் இரு கால்களையும் **प्रक्षालय**-அலம்பிக்கொள்ளவேணும்.

யமனை வென்றவனே! சாப்பிட்ட பின்னர் உன்னுடைய கை கால்களைக் கழுவிக் கொள்வதற்காக நான் பத்மராக ரத்தினப் பாத்திரத்தில் கலங்கமற்ற கங்காஜலத்தைக் கொண்டுவந்து வைத்திருக்கிறேன். அதில் கஸ்தூரியும் சந்தனமும் சேர்ந்து மிகுந்த வாஸனையுடன் இருக்கிறது. அவைகளால் உன்னுடைய கை கால்களைக் கழுவிக் கொள். (35)

(அ) சாப்பிட்டபின் ஆசமனம்:—

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

पुन्नागमल्लिकाकुन्दवासितैर्जाह्नवीजलैः ।
मृत्युंजय महादेव पुनराचमनं कुरु ॥ ३६ ॥

புந்நாக மல்லிகா குந்த வாஸிதைர் ஜாஹ்நவீ ஜலை: ।
ம்ருத்யுஞ்ஜய மஹாதேவ புநராசமநம் குரு ॥

मृत्युंजय-யமனை வென்றவனே **महादेव**-மஹாதேவனே **पुन्नागमल्लिकाकुन्द**-புந்நாகம், மல்லிகை, குந்தம் இந்த மலர்களால் **वासितैः**-நறுமணமுள்ளதாகச் செய்யப்பட்ட **जाह्नवी-जलैः**-கங்கா ஜலங்களால் **पुनः**-மறுபடியும் **आचमनं**-ஆசமனத்தை **कुरु**-செய்.

யமனை வென்றவனே! தேவாதிதேவனே! சாப்பிட்ட பின்னர் ஆசமனத்திற்காக நான் உமக்கு புந்நாகம், மல்லிகை, குந்தம் முதலிய நறுமலர்களின் மணத்தால் சிறந்த வாசனையுடன் கூடியதாகச் செய்யப்பட்ட கங்கா ஜலத்தைக் கொடுக்கின்றேன். அதனால் நீ ஆசமனம் செய்வாயாக. (36)

(அ) தாம்பூலம் :—

मौक्तिकचूर्णसमेतैर्मृगमदघनसारवासितैः पूगैः ।
पर्णैः स्वर्णसमानैर्मृत्युंजय तेऽर्पयामि ताम्बूलम् ॥ ३७ ॥

மௌக்திக சூர்ண ஸமேதைர்
ம்ருகமத கநஸார வாஸிதை: பூகை: ।
பர்ணை: ஸ்வர்ண ஸமாநைர்
ம்ருத்யுஞ்ஜய தேऽர்பயாமி தாம்பூலம் ॥

मृत्युंजय-யமனை வென்றவனே! **ते**-உனக்கு **मौक्तिक-चूर्णसमेतैः**-நல் முத்துப்பொடிகளுடன் கூடிய **मृगमद**-கஸ்தூரி **घनसार**-பச்சைக் கற்பூரம் இவைகளால் **वासितैः**-வாசனையுள்ளதாகச் செய்யப்பட்ட **पूगैः**-பாக்குகளாலும் **स्वर्णसमानैः**-தங்கத்திற்கு ஒப்பான **पर्णैः**-வெற்றிலைகளாலும் **ताम्बूलं**-தாம்பூலத்தை **अर्पयामि**-கொடுக்கிறேன்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யமனை வென்றவனே! சாப்பிட்டபின்னர் நான் உனக்குத் தாம்பூலம் தருகின்றேன். இதில் நல்முத்துப் பொடியால் செய்யப்பட்ட சுண்ணாம்பும், பச்சைக்கற்பூரம், கஸ்தூரி முதலியவற்றால் நறுமணம் உள்ளதாகச் செய்யப் பட்ட பாக்குப்பொடியும், பொன்னிறமுள்ள வெற்றிலைகளும் உள்ளன. இதை நீ ஏற்றுக்கொள்வாயாக. (37)

(அ) நீராஜனம்:—

नीराजनं निर्मलदीप्तिमद्भिर्दीपांकुरैरुज्ज्वलमुच्छ्रितैश्च ।
घण्टानिनादेन समर्पयामि मृत्युंजयाय त्रिपुरान्तकाय ॥ ३८॥

நீராஜநம் நிர்மல தீப்திமத்பிர்
தீபாங்குரைருஜ்ஜ்வலமுச்ச்ரிதைச்ச ।
கண்டா நிநாதேந ஸமர்ப்பயாமி
ம்ருத்யுஞ்ஜயாய த்ரிபுராந்தகாய ॥

मृत्युंजयाय-யமனை வென்றவனும் **त्रिपुरान्तकाय**-த்ரிபுர ஸம்ஹாரம் செய்தவனுமான பரமேச்வரனுக்கு **निर्मल**-கலங்கமில்லாத **दीप्तिमद्भिः**-ஒளிகளையுடையவைகளாயும் **उच्छ्रितैः-च**-உயர்ந்தவைகளாயும் உள்ள **दीपांकुरैः**-விளக்கின் ஜ்வாலைகளால் **उज्ज्वलं**-நன்கு பிரகாசிக்கின்ற **नीराजनं**-கற்பூர ஹாரத்தியை **घण्टानिनादेन**-கண்டா நாதத்துடன் (மணியோசையுடன்) **समर्पयामि**-அளிக்கிறேன்.

பரமேச்வரன் யமனை வென்றவன். த்ரிபுரங்களை அழித்தவன். இவ்வாறு விளங்கும் பரமேச்வரனுக்கு உயரக் கிளம்பி யெழும் மாசற்ற தீபஜ்வாலைகளால் நன்கு பிரகாசிக்கும்படியாக மணியடித்துக்கொண்டு நீராஜனம் செய்கிறேன். (38)

(அ) பூஜையின் முடிவில் மறுபடியும் அர்க்யம்:—

विरिञ्चिमुख्यामरवृन्दवन्दिते सरोजमत्स्याङ्कितचक्रचिह्निते ।
ददामि मृत्युंजय पादपङ्कजे फणीन्द्रभूषे पुनरर्घ्यमीश्वर ॥ ३९॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

விரிஞ்சி முக்யாமர ப்ருந்த வந்திதே
ஸரோஜ மத்ஸ்யாங்கித சக்ர சிஹ்னிதே ।
ததாமி ம்ருத்யுஞ்ஜய பாத பங்கஜே
பணீந்த்ர பூஷே புனரர்க்யமீஶ்வர ॥

मृत्युंजय-யமனை வென்றவனே! **ईश्वर**-பரமேச்வரனே! **विरिञ्चिमुख्य**-பிரஹ்மா முதலிய **अमरबृन्द**-தேவர்களுடைய கூட்டங்களால் **वन्दिते**-வணங்கப்பட்டதும் **सरोज**-பத்ம (தாமரை) ரேகை **मत्स्य**-மத்ஸ்ய (மீன்) ரேகை இவைகளால் **अङ्कित**-அடையாளமிடப்பட்டதும் **चक्रचिह्निते**-சக்ர ரேகையால் அடையாளமிடப்பட்டதும் **फणीन्द्रभूषे**-சிறந்த பாம்புகளை அணியாகக் கொண்டதுமான **पादपङ्कजे**-உன்னுடைய பாத பத்மத்தில் **पुनः**-மறுபடியும் **अर्घ्य**-அர்க்யத்தை **ददामि**-கொடுக்கிறேன்.

யமனை வென்றவனே! ஏ பரமேச்வரனே! பூஜையின் முடிவில் உன்னுடைய பாதபத்மத்தில் மறுபடியும் நான் அர்க்யமளிக்கிறேன். உன்னுடைய திருவடிகள் பிரஹ்மா முதலிய தேவகணங்களால் வணங்கப்படுகின்றன. அவைகள் தாமரை, மத்ஸ்யம், சக்ரம் முதலிய சிறந்த ரேகைகளையுடையன. இவ்வாறு சிறந்த ஸாமுத்ரிகா லக்ஷணங்களுடன் விளங்குகின்றதும் அரவங்களையே அணிகலமாகப் பெற்றதாயும் உள்ள உமது திருவடிகளில் அர்க்யம் தருகின்றேன். (39)

(அ) புஷ்பாஞ்ஜலி ஸமர்ப்பணம்:—

पुंनागनीलोत्पलकुन्दजाजीमन्दारमल्लीकरवीरपङ्कजैः ।
पुष्पाञ्जलिं बिल्वदलैस्तुलस्या मृत्युंजयांघ्रौ विनिवेशयामि ॥

புந்நாக நீலோத்பல குந்த ஜாஜீ
மந்தார மல்லீ கரவீர பங்கஜை: ।
புஷ்பாஞ்ஜலிம் பில்வதலைஸ் துலஸ்யா
ம்ருத்யுஞ்ஜயாங்க்ரௌ விநிவேஶயாமி ॥

मृत्युंजय-யமனை வென்றவனே! **अंघ्रौ**-(உன்னுடைய) திருவடியில் **पुंनाग**-புன்னை **नीलोत्पल**-கருநெய்தல் **कुन्द**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

குந்தம் **जाजी**-ஜாஜீ **मन्दार**-மந்தாரை **मल्ली**-மல்லிகை **करवीर**-அரளி **पङ्कजैः**-தாமரை முதலிய மலர்களாலும் **बिल्वदलैः**-வில்வ தளங்களாலும் **तुलस्या**-துளசியாலும் **पुष्पाञ्जलिं**-புஷ்பாஞ்ஜலியை **विनिवेशयामि**-அர்ப்பணம் செய்கிறேன்.

யமனை வென்றவனே! நான் அஞ்ஜலியாக வைத்துக் கொண்ட என் இரு கைகளிலும் நிறைய புன்னை, கரு நெய்தல், குந்தம், ஜாஜீ, மந்தாரை, மல்லிகை, அரளி, தாமரை முதலிய மலர்களையும் வில்வதளங்களையும் துளசியையும் எடுத்துக்கொண்டு அவைகளை உனது திருவடிகளில் ஸமர்ப்பணம் செய்கிறேன். (40)

(அ) பிரதக்ஷிணம்:—

पदे पदे सर्वतमोनिकृन्तनं पदे पदे सर्वशुभप्रदायकम् ।
प्रदक्षिणं भक्तियुतेन चेतसा करोमि मृत्युंजय रक्ष रक्ष माम् ॥

பதே பதே ஸர்வதமோநிக்ருந்தனம்
பதே பதே ஸர்வஶுபப்ரதாயகம் |
ப்ரதக்ஷிணம் பக்தியுதேந சேதஸா
கரோமி ம்ருத்யுஞ்ஜய ரக்ஷ ரக்ஷ மாம் ||

मृत्युंजय-யமனை வென்றவனே! **पदे पदे**-ஒவ்வொருஅடியிலும் **सर्वतमोनिकृन्तनं**-எல்லா அக்ஞானத்தையும் அறுக்கின்றதும் **पदे पदे**-ஒவ்வொரு அடியிலும் **सर्वशुभप्रदायकं**-எல்லா நன்மைகளையும் கொடுக்கின்றதும் ஆன **प्रदक्षिणं**-பிரதக்ஷிணத்தை **भक्तियुतेन**-பக்தியோடு கூடிய **चेतसा**-மனதால் **करोमि**-செய்கிறேன் **मां**-என்னை **रक्ष**-காப்பாற்று **रक्ष**-காப்பாற்று.

யமனை வென்றவனே! நான் உன்னை பன்முறை வலம் வந்து வணங்குகிறேன். இவ்வாறு உன்னைப் பிரதக்ஷிணம் செய்யும்பொழுது ஒவ்வொரு அடியிலும் அறியாமை எனும் இருள் நீங்குகிறது. ஒவ்வொரு அடியிலும் பற்பல நன்மைகள் ஏற்படுகின்றன. உன்னை வலம் வருவதால் உண்டாகும் நலன்கள் எண்ணற்றன. ஏ பரம்பொருளே! என்னை எப்பொழுதும் காத்தருள். (41)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

(அ) நமஸ்காரம் :—

नमो गौरीशाय स्फटिकधवलाङ्गाय च नमः
नमो लोकेशाय स्थितविबुधलोकाय च नमः ।
नमः श्रीकण्ठाय क्षपितपुरदैत्याय च नमः
नमः फालाक्षाय स्मरमदविनाशाय च नमः ॥ ४२ ॥

நமோ கௌரீஶாய ஸ்படிக தவலாங்காய ச நம:
நமோ லோகேஶாய ஸ்தித விபுத லோகாய ச நம:
நம: ஸ்ரீகண்டாய க்ஷபித புர தைத்யாய ச நம:
நம: பாலாக்ஷாய ஸ்மர மத விநாஶாய ச நம: ॥

गौरीशाय-மலைமகளின் பதிக்கு **नमः**-வணக்கம் **स्फटिक**-ஸ்படிகம் போல் **धवलाङ्गाय**-வெளுப்பான அங்கங்களையுடையவனுக்கு **नमः**-வணக்கம். **लोकेशाय**-உலகங்களையாளுகின்றவனுக்கு **नमः**-வணக்கம். **स्थितविबुधलोकाय**-தேவ ஜனங்களைத் தாங்குகின்றவனுக்கு **नमः**-வணக்கம். **श्रीकण्ठाय**-அழகிய கழுத்தையுடையவனுக்கு **नमः** வணக்கம். **क्षपित**-நாசம் செய்யப்பட்ட **पुरदैत्याय**-த்ரிபுரன் என்ற அசுரனையுடையவனுக்கு **नमः**-வணக்கம். **फालाक्षाय**-நெற்றியில் கண்ணுடையவனுக்கு **नमः**-வணக்கம். **स्मर**-மன்மதனுடைய **मद**-மதத்தை **विनाशाय**-நாசம் செய்த பரமேச்வரனுக்கு **नमः**-வணக்கம்.

மலைமகளான பார்வதீ தேவியின் பதியாயும் ஸ்படிகம் போல் வெளுப்பான அங்கங்களையுடையவனும் உலகங்கள் அனைத்தையும் ஆட்சி செய்கின்றவனும் தேவர்களைக் காப்பாற்றியவனும் அழகிய கழுத்தையுடையவனும் கழுத்தில் விஷத்தைக்கொண்டவனும் திரிபுரன் என்ற அரக்கனை அழித்தவனும் நெற்றிக்கண்ணையுடையவனும் மன்மதனுடைய கர்வத்தையழித்தவனும் உள்ள பரமேச்வரனுக்கு வணக்கம். (42)

(அ) பிரார்த்தனை:—

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

संसारे जनितापरोगसहिते तापत्रयाक्रन्दिते
नित्यं पुत्रकलत्रवित्तविलसत्पाशैर्निबद्धं दृढम् ।
गर्वान्धं बहुपापवर्गसहितं कारुण्यदृष्ट्या विभो
श्रीमृत्युंजय पार्वतीप्रिय सदा मां पाहि सर्वेश्वर ॥ ४३॥

ஸம்ஸாரே ஜநிதாபரோகஸஹிதே தாபத்ரயாக்ரந்திதே
நித்யம் புத்ர களத்ர வித்த விலஸத் பாசைர்
நிபத்தம் த்ருடம் ।
கர்வாந்தம் பஹுபாப வர்க ஸஹிதம் காருண்ய
த்ருஷ்ட்யா விபோ
ஸ்ரீ ம்ருத்யுஞ்ஜய பார்வதீ ப்ரிய ஸதா மாம்
பாஹி ஸர்வேச்வர ॥

श्रीमृत्युंजय-யமனை வென்றவனே **विभो**-எங்கும் வியாபித்துள்ளவனே **पार्वतीप्रिय**-பார்வதீ தேவிக்குப் பிரியமானவனே **सर्वेश्वर**-எல்லாவற்றையும் ஆட்சி செய்கின்ற பரமேச்வரனே **जनितापरोगसहिते**-பிறவித் துன்பம், நோய் முதலியவற்றுடன் கூடியதும் **तापत्रयाक्रन्दिते**-மூன்று துன்பங்களால் கதறுகின்றதுமான **संसारे**-உலக வாழ்க்கையில் **नित्यं**-எப்பொழுதும் **पुत्र**-பிள்ளை **कलत्र**-மனைவி **वित्त**-செல்வம் இவற்றில் **विलसत्**-விளங்குகின்ற **पाशैः**-பற்றுதல்களாகிய கயிறுகளால் **दृढं**-இறுக **निबद्धं**-கட்டப்பட்டவனுயும் **गर्वान्धं**-இறுமாப்பால் கண்ணை இழந்தவனுயும் **बहुपापवर्गसहितं**-பல பாவங்களின் கூட்டத்துடன் கூடியவனுயும் உள்ள **मां**-என்னை **सदा**-எப்பொழுதும் **कारुण्यदृष्ट्या**-இரக்கத்துடன் கூடிய பார்வையினுல் **पाहि**-காப்பாற்று.

யமனை வென்றவனே! எங்கும் வியாபித்து நிற்கும் பரம்பொருளே! பார்வதீ மணுளனே! உலகனைத்தையும் காத்தருளும் உத்தமனே! இவ்வுலகம் பிறவி நோய் முதலிய பலவற்ருல் பல இன்னல்களை விளைவிக்கின்றது. இதனுள் குடியிருக்கும் பிராணிகள் ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகமெனும் மூன்று துன்பங்களால் துயருற்றுக் கதறுகின்றன. இத்தகைய உலக வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நான் அதிக இறுமாப்புக்கொண்டுள்ளேன். மகவு, மனையாள் செல்வம் முதலான பல பாசங்களால் இறுகக்கட்டப் பட்டுள்ளேன். மீண்டும் பல பாவங்களின் கூட்டங்களால் சூழப்பட்டுள்ளேன். நீ என்மீது என்றும் உனது கருணை கடாக்ஷங்களைச் செலுத்தி என்னை இரக்ஷித்தருள்வாயாக.

(அ) கடைசியாக ஆதிதம்பதிகளான பார்வதியும் மஹேசுவரனும் ஏகாந்தமாக இருக்கும் அவஸரத்தை தியானிக்கிறார் : —

सौधे रत्नमये नवोत्पलदलाकीर्णे च तल्पान्तरे
कौशेयेन मनोहरेण धवलेनाच्छादिते सर्वशः ।
कर्पूराञ्चितदीपदीप्तिमिलिते रम्योपधानद्वये
पार्वत्या करपद्मलालितपदं मृत्युंजयं भावये ॥ ४४ ॥

ஸௌதே ரத்நமயே நவோத்பல தலாகீர்ணே ச தல்பாந்தரே
கௌசேயேந மனோஹரேண தவளேனாச்சாதிதே ஸர்வச: ।
கர்பூராஞ்சித தீப தீப்தி மிளிதே ரம்யோபதாநத்வயே
பார்வத்யா கரபத்ம லாலிதபதம் ம்ருத்யுஞ்ஜயம் பாவயே ॥

कर्पूराञ्चितदीप-கற்பூரத்தால் அழகு வாய்ந்த விளக்கின் **दीप्ति**-ஒளியுடன் **मिलिते**-கூடிய **रत्नमये**-இரத்தினங்கள் பதித்த **सौधे**-அரண்மனையில் **नवोत्पलदलाकीर्णे** – புதிதாக மலர்ந்த உத்பல மலர்கள் பரப்பியுள்ளதும் **सर्वशः**-எல்லா இடங்களிலும் **धवलेन** – வெளுப்பானதும் **मनोहरेण**-மனதை வசீகரிக்கின்றதுமான **कौशेयेन**-பட்டினால் **आच्छादिते**-மறைக் கப்பட்டதும் **रम्योपधानद्वये**-அழகிய இரண்டு தலையணைகளை உடையதுமான **तल्पान्तरे**-படுக்கையின் நடுவில் **पार्वत्या**-பார்வதீதேவியால் **करपद्मलालितपदं** – தாமரைபோன்ற கை களால் வருடப்பட்ட பாதங்களையுடைய **मृत्युंजयं**-யமனை வென்ற பரமேச்வரனை **भावये**-தியானம் செய்கிறேன்.

பரமேச்வரன் இரத்னங்கள் வைத்துக்கட்டப்பட்ட மாளிகையில் சிறந்த மஞ்சத்தில் பள்ளிகொண்டிருக்கிறான். அக்கட்டிலின் மீது படுக்கையில் வெண்மையானதும் மிருது

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வானதும் வழவழப்பானதும் மனதை வசீகரிக்கின்றதுமான பட்டு விரிக்கப்பட்டுள்ளது. அதன்மீது அழகிய இரண்டு தலையணைகள் வைக்கப்பட்டுள்ளன. அப்பொழுதே மலர்ந்த உத்பல மலரின் இதழ்கள் படுக்கையில் பரப்பப்பட்டுள்ளன. கற்பூரத்துடன் கூடிய திருவிளக்குகள் அந்த அரண்மனை யில் எங்கும் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன. அவ்வாறு அவன் பள்ளிகொண்டிருக்கும்பொழுது பார்வதீதேவி அங்கு அமர்ந்து தனது மெல்லிய பத்மம்போன்ற திருக்கரங்களால் அவனுடைய பாதங்களைப்பிடித்து விடுகிருள். அவ்வாறு பள்ளியிருக்கும் பரமேச்வரனை நான் தியானம் செய்கிறேன்.

(அ) இவ்வாறு சிவபூஜை செய்பவர்களுக்கு ஏற்படும் பலனைக்காட்டுகிருர்:—

चतुश्चत्वारिंशद्विलसदुपचारैरभिमतै-
र्मनःपद्मे भक्त्या बहिरपि च पूजां शुभकरीम् ।
करोति प्रत्यूषे निशि दिवसमध्येऽपि च पुमान्
प्रयाति श्रीमृत्युंजयपदमनेकाद्भुतपदम् ॥ ४५ ॥

சதுஶ்சத்வாரிம்ஶத் விலஸதுபசாரைரபிமதைர்
மந:பத்மே பக்த்யா பஹிரபி ச பூஜாம் ஶுபகரீம் !
கரோதி ப்ரத்யூஷே நிஶி திவஸ மத்யேऽபி ச புமான்
ப்ரயாதி ஸ்ரீம்ருத்யுஞ்ஜய பதமநேகாத்புத பதம் ॥

यः पुमान्-எந்த மனிதன் **अभिमतैः**–பிரியமான **चतुश्चत्वारिंशत्**–நாற்பத்து நான்கு **विलसदुपचारैः**–சிறந்த உபசாரங்களால் **मनःपद्मे**-மனமாகிய தாமரையிலும் **बहिरपि च**-வெளியிலும் **भक्त्या**–பக்தியுடன் **शुभकरीं**-நன்மை செய்யக்கூடிய **पूजां**-பூஜையை **प्रत्यूषे**-அதிகாலையிலும் **दिवसमध्येपि**–நடுப்பகலிலும் **निशि च**–இரவிலும் **करोति**–செய்கிருனே **सः**–அவன் **अनेकाद्भुतपदं**- பல அற்புதங்களுக்கிருப்பிடமான **श्रीमृत्युंजयपदं**–யமனை வென்ற பரமேச்வரனுடைய பாதாரவிந்தத்தை **प्रयाति**–அடைகிருன்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இவ்வாறு இந்த துதியில் 44 சுலோகங்களால் நாற்பத்தி நான்கு உபசாரங்கள் வர்ணிக்கப்பட்டுள்ளன. இவைகள் அனைத்தும் பரமேச்வரனுக்குகந்தன. மிகச் சிறந்து விளங்குகின்றன. எந்த மனிதன் பக்திச்ரத்தையுடன் அதிகாலையிலும், நடுப்பகலிலும், இரவிலும் பரமேச்வரனைத் தனது இருதயகமலத்திலோ அல்லது வெளியிலோ த்யானித்து இவ்வாறு பூஜிக்கிருனோ அவன் பரமேச்வரனது பாதகமலத்தை அடைகிருன். இந்த சுலோகத்தில் ஆசார்யாள் மானஸபூஜை, பாஹ்யபூஜை, இரண்டையும் அனுஷ்டிக்கும்படிக் கூறுகிருர். தாம் உட்கார்ந்தபடியே மனதில் பகவன் மூர்த்தியை தியானித்து இந்த ஸ்தோத்திரத்தில் காட்டியுள்ளபடி எல்லா உபசாரங்களும் நடைபெறுவதாக மனதால் நினைப்பது மானஸபூஜை. இப்படியல்லாமல் எதிரில் பகவன் மூர்த்தியை வைத்துக்கொண்டு எல்லா திரவ்யங்களையும் சேகரித்து அந்தந்த திரவ்யங்களை அர்ப்பணம் செய்து பூஜிப்பது பாஹ்யபூஜை. பாஹ்ய பூஜையிலும் இதில் கூறப்பட்ட திரவ்யங்களில் ஏதாவது கிடைக்காமலிருந்தால் அதை மானஸமாகத்தான் அர்ப்பணம் செய்யவேண்டும். இந்தப் பூஜையை தினந்தோறும் காலை, மத்யானம், இரவு இந்த முக்காலங்களிலும் செய்ய வேண்டும் என்று கூறுகிருர். (45)

(அ) இந்தப் பூஜைக்கு அங்கமாக சிவலிங்க தர்சனத்தையும் பஞ்சாக்ஷர ஜபத்தையும் அவைகளின் பயனையும் கடைசி சுலோகத்தில் குறிப்பிடுகிருர் :—

प्रातर्लिङ्गमुमापतेरहरहः संदर्शनात्स्वर्गदं
मध्याह्ने हयमेधतुल्यफलदं सायंतने मोक्षदम् ।
भानोरस्तमये प्रदोषसमये पञ्चाक्षराराधनं
तत्कालत्रयतुल्यमिष्टफलदं सद्योऽनवद्यं दृढम् ॥ ४६ ॥

ப்ராதர் லிங்கமுமாபதேரஹரஹ ஸ்ஸந்தர்ஶநாத் ஸ்வர்கதம்
மத்யாங்ஹே ஹயமேத துல்ய பலதம் ஸாயந்தநே
மோக்ஷதம் ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பாநோரஸ்தமயே ப்ரதோஷ ஸமயே பஞ்சாக்ஷராராதநம்
தத்காலத்ரய துல்யமிஷ்டபலதம் ஸத்யோऽநவத்யம்
த்ருடம் ||

अहरहः-ஒவ்வொரு நாளும் प्रातः-காலையில் संदर्शनात्-நன்கு தரிசனம் செய்வதால் उमापतेः-பரமேச்வரனுடைய लिंगं-லிங்கம் स्वर्गदं-ஸ்வர்க்கத்தையளிக்கின்றது. मध्याह्ने-நடுப்பகலில் हयमेधतुल्यफलदं-அசுவமேத யாகத்திற்குச் சமமான பலனையளிக்கிறது. सायंतने-சாயங்காலத்தில் मोक्षदं-மோக்ஷத்தைத் தருகிறது. भानोः अस्तमये-சூரியன் அஸ்தமிக்கும் பொழுதும் प्रदोषसमये-பிரதோஷ காலத்திலும் पञ्चाक्षराराधनं-பஞ்சாக்ஷரமந்திரத்தால் ஆராதிப்பது सद्यः-உடனேயே अनवद्यं-குற்றமற்றதாயும் दृढं-நிலைத்து நிற்பதாயும் तत्कालत्रयतुल्यं-அந்த மூன்று காலங்களிலும் ஏற்படும் பலனுக்கு ஒப்பாகவும் உள்ள इष्टफलदं-விரும்பிய பலனைத் தருகின்றது.

பார்வதீ பதியான பரமேச்வரனுடைய லிங்கத்தை தினந்தோறும் காலை வேளையில் தர்சனம் செய்வதால் ஸ்வர்க்கம் கிடைக்கிறது. மத்யான வேளையில் தர்சனம் செய்வதால் அசுவமேதம் என்ற வேள்வியைச் செய்வதால் உண்டாகும் பலனுக்கு ஒப்பான சிறந்த பலன் உண்டாகிறது. சாயங்காலத்தில் தரிசித்தால் மோக்ஷமேற்படுகிறது. சூரியன் அஸ்தமிக்கும்பொழுதும் பிரதோஷ வேளையிலும் பஞ்சாக்ஷர ஆராதனை செய்தால் மூவேளைகளிலும் தர்சனம் செய்வதால் யாதுபயன் ஏற்படுமோ அதுபோன்ற விரும்பிய பலன் எல்லாம் உடனேயே கிடைக்கின்றது. அது கலங்கமற்றதாயும் என்றும் நிலைத்ததாயும் இருக்கும். (46)

ஸ்ரீ மிருத்யுஞ்ஜயமானஸிக பூஜா ஸ்தோத்திரம்

முற்றிற்று.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ श्रीः ॥

॥ दशश्लोकीस्तुतिः ॥

தசச்லோகீஸ்துதி

[இந்த ஸ்தோத்திரத்தின் பெயரிலிருந்தே இது பத்து சுலோகங்கள் கொண்டது என்பதைத் தெரிந்து கொள்ளலாம் இந்த ஸ்தோத்திரத்தில் ஒவ்வொரு சுலோகத்தின் கடைசிப் பாதத்திலும் 'तस्मिन् मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि' (தஸ்மின் மே ஹ்ருதயம் ஸுகேன ரமதாம் ஸாம்பே பரப்ரஹ்மணி– அந்த அம்பிகையுடன் கூடிய பரமேசுவரனிடம் என் மனது ஸுகமாக விளையாடட்டும்) என்று காணப்படுகிறது. முதல் சுலோகத்தில் மட்டும் எட்டு வேற்றுமை (விபக்தி) களையும் காட்ட வந்தபடியால் இதே வாக்யம் காணப் படாவிட்டாலும் 'मम रतिः साम्बे परब्रह्मणि' என்று இதன் கருத்து காணப்படுகிறது. இதில் த்ரிபுர ஸம்ஹாரம், காமதஹனம், தன் நேத்ரத்தை ஸமர்ப்பித்த விஷ்ணுவுக்கு அனுக்ரஹம் செயததது, ப்ரஹ்மாவின் சிரஸ்ஸைக் கொய்தது, காலகூட பக்ஷணம் முதலிய லீலைகளின் மூலம் பரஹ்மா முதலான யாவருக்கும் நன்மை புரிந்த ஸாம்பனே உயர்ந்த தெய்வம் என்பதைக் காட்டி அவரிடமே என் மனது நிலைத்து, இன்புறட்டும் என்று வேண்டுகிறார். ஒன்பதாவது சுலோகத்தில் மாண்டூக்யோபநிஷததின் கருத்தைக் காட்டுகிறார்]

साम्बो नः कुलदैवतं पशुपते साम्ब त्वदीया वयं
साम्बं स्तौमि सुरासुरोरगगणाः साम्बेन सन्तारिताः ।
साम्बायास्तु नमो मया विरचितं साम्बात्परं नो भजे
साम्बस्यानुचरोऽस्म्यहं मम रतिः साम्बे परब्रह्मणि ॥ १ ॥

ஸாம்போ நঃ குல தைவதம் பசுபதே ஸாம்ப த்வதீயா வயம்
ஸாம்பம் ஸ்தௌமி ஸுராஸுரோரக கணாঃ ஸாம்பேன ஸந்தாரிதாঃ ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸாம்பாயாஸ்து நமோ மயா விரசிதம் ஸாம்பாத் பரம்
நோ பஜே
ஸாம்பஸ்யா நுசரோऽஸ்ம்யஹம் மம ரதி: ஸாம்பே
பரப்ரஹ்மணி ॥

नः-நமக்கு साम्बः-அம்பிகையுடன் விளங்கும் பரமேச்வரன் कुलदैवतम्-குலத்தைக் காக்கும் கடவுள் पशुपते-பசுக்களின் (பிராணிகளின்) தலைவனே! साम्ब-அம்பிகையுடன் கூடிய பரமேச்வரனே! वयं-நாங்கள் எல்லோரும் त्वदीयाः-உன்னைச் சேர்ந்தவர்கள் साम्बं-அம்பிகையுடன் கூடிய பரமேச்வரனை स्तौमि-துதிக்கிறேன் सुरासुरोरगगणाः-தேவர்கள், அஸுரர்கள், நாகர்கள் இவர்களின் கூட்டங்கள் எல்லாம் साम्बेन-அம்பிகையுடன் கூடிய பரமேச்வரனால் संतारिताः-கரையேற்றப்பட்டார்கள் मया-என்னால் विरचितं-செய்யப்பட்ட नमः-வணக்கம் साम्बाय-ஸாம்பனின் பொருட்டு अस्तु-இருக்கட்டும் साम्बात्परं-அம்பிகையுடன் கூடியபரமேச்வரனைக் காட்டிலும் வேறு ஒருவரையும் नो भजे-நான் போற்ற மாட்டேன் अहं-நான் साम्बस्य-அம்பிகையுடன் கூடிய பரமேச்வரனுடைய अनुचरः-பணியாளாக अस्मि-இருக்கிறேன் साम्बे-அம்பிகையுடன் கூடிய பரமேச்வரனான परब्रह्मणि-எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளிடம் मम-எனக்கு रतिः-பிரியம் (இருக்கிறது.)

பரமேச்வரன் அம்பிகையுடன் சேர்ந்து உலகனைத்தையும் படைத்துக் காத்தருள்கின்றான். அம்பிகையுடன் கூடிய பரம் பொருளே எல்லா வல்லமையும் பெற்று விளங்குகிறான். அவனே எனது குலத்தைக்காக்கும் கடவுள். நாமெல்லோரும் பசுக்கள் ஏனெனில் அறியாமை என்னும் காரிருளில் அல்லல் படும் நமக்கும் விலங்குகளுக்கும் வித்யாசம் எதுவும் இல்லை. அவைகளும் உணவு, தூக்கம், சிற்றின்பம் முதலியவற்றில் ஈடுபடுகின்றன. நாமும் அவ்வித உணர்ச்சிகளை உடையவர்களாய் இன்ப துன்பங்களுக்குள் உழலுகின்றோம் இதையே पश्वादिभिश्चाविशेषात् என்று ஸூத்திர பாஷ்யத்தில் ஆசார்யாள் கூறுகிறார். மேலும் பசுக்களைப்போல் நாமும் ஸம்ஸாரபாசத்தால் கட்டுப்பட்டிருக்கிறோம். பரமேச்வரனே பசுபதி. பசுக்களைக் காக்கின்ற கோபாலன்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

எவ்வாறு அவைகளை ஆபத்தினின்றும் இரக்ஷித்து அவைகளுக்குரிய இடத்திற்கு ஓட்டிக்கொண்டுபோகிருனே அவ்வாறே பரமேச்வரனும் நம்மைப் பல இன்னல்களினின்றும் விடுவித்து பாசத்தைப்போக்கி பரமபதத்தை அடையச் செய்கிருன். ஆதலால் நாமனைவரும் அப் பசுபதியைச் சார்ந்தவர்கள். அவனுலேயே கணக்கற்ற பக்தர்கள் துன்பக் கடலிலிருந்து கரையேற்றப்பட்டிருக்கிருர்கள். தேவர்களும் அஸுரர்களும் நாகர்களும் அவருடைய அருளாலேயே இன்னல்கள் நீங்கி நன்மை பெற்றனர். அவ்வாறு விளங்கும் அம்பிகையின் பதியான பரமேச்வரனுக்கு நான் வணக்கம் செலுத்துகிறேன். அம்பிகா பதியான பரமேசுவரனைக் காட்டிலும் வேறு ஒருவரையும் நான் பஜிக்கமாட்டேன். ஏனெனில் நான் பரமேச்வரனுடைய வேலையாள். அம்பிகையின் பதியான பரமேச்வரனே எங்கும் நிறைந்த பரம்பொருள். அவனிடம் என் மனது ஈடுபடட்டும்.

மாயா ஸம்பந்தமற்ற ஸச்சிதானந்த வடிவம்தான் ப்ரப்ரஹ்மம் என்பது. அந்த நிலையில் ஜகத் ஸ்ருஷ்டியோ, ரக்ஷணமோ, அனுக்ரஹமோ, லீலாவிலாஸமோ ஒன்றும் கிடையாது. அது மனதிற்கும், வாக்குக்கும் எட்டாதது. அதில் மனதைச் செலுத்துவதோ, ஸ்தோத்திரம் செய்வதோ முடியாதகாரியம். இங்கு, தான் ஸ்துதிசெய்யும் பரப்ரஹ்மத்தில் மனது இன்புற்றிருக்கவேண்டுமென வேண்டுகிருர். ஆகவே இங்கு பரப்ரஹ்மம் என்பது பக்தர்களை அனுக்ரஹிப்பதற்காக மாயையுடன் சேர்ந்து தன் இச்சைப்படி சரீரத்தை எடுத்துக்கொண்ட ஸகுணமான பரமேசுவரனைக் குறிக்கிறது. குழந்தைகளிடம் மிகுந்த வாத்ஸல்யம் கொண்ட ஜகன்மாதாவான அம்பிகையுடன் சேர்ந்திருந்தால்தான் தாயின் சிபார்சால் நாம் செய்த குற்றங்களை மன்னித்து பரமேசுவரன் கிருபைபுரிவார். அதனுல்தான் இங்கு ஸாம்ப பரமேசுவரனை வேண்டுகிருர்.

இங்கு நிர்குண வஸ்துவைக் குறிப்பிடும் 'परब्रह्मणि' என்ற பதத்திற்கு 'साम्बे' என்பது விசேஷணமாகக்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் நிர்குணமும் ஸகுணமும் வெவ்வேறல்ல, ஒரே தத்வம்தான் என்பதைக் காட்டுகிறார். உள்ளது நிர்குணம்தான். அதுவே உண்மைப்பொருள். அதுவே வாஸ்தவமல்லாத மாயையால் ஸகுணமாகத் தோற்றம் அளிக்கிறது. பலவித வேஷங்களுடன் பிரஜைகளுக்கு மஹாராஜனாகக் காக்ஷியளிக்கும் மனிதனே எல்லாவற்றையும் களைந்து அந்தப்புரத்தில் மஹாராணிக்கு சுத்த ஸ்வரூபனாகக் காக்ஷியளிக்கின்றான்.

இந்த சுலோகத்தில் 'எனக்கு ஸாம்ப பரமேசுவரரிடம் பிரீதி இருக்கட்டும்' என்று கூறுகிறார். இதையே சற்று விரிவாகப் பின் சுலோகங்களில் என் மனது ஸுகமாக ஸாம்பனிடம் ரமிக்கட்டும் என்று கூறுகிறார். உலகில் எல்லோருக்கும் மனைவி, குழந்தை, பணம் முதலியவற்றில் மிகுந்த ப்ரீதி இருக்கிறது. இது இருக்கும்வரை பகவானிடம் ப்ரீதி ஏற்படாது. இவை கிடைப்பதற்காக ஒரு சமயம் பகவானிடம் ப்ரீதி வைத்தாலும் அது ஸ்திரமாக இருக்காது. அவை கிடைத்தவுடன் விலகிவிடும். ஆகவே பகவானிடம் நிரதிசயமான ப்ரீதி ஏற்படவேண்டுமானால் அவருடைய கல்யாண குணங்களைத் தெரிந்து கொள்வதுடன் உலக விஷயங்கள் யாவற்றிலும் பூர்ண வைராக்யம் ஏற்படவேண்டும். காமுகன் மனம் எப்பொழுதும் அனாயாஸமாக பெண்களிடம் செல்வதுபோல் பகவானிடம் ஸுகமாக மனம் நிலை பெற்றிருக்கவேண்டும். இதையே இங்கு வேண்டுகிறார்.

இந்த தசச்லோகீஸ்துதி சார்தூல விக்ரீடதம் என்ற சந்தஸில் எழுதப்பட்டுள்ளது. இந்த முதல் சுலோகத்தில் ஏழு வேற்றுமைகளின் ப்ரயோகமும் அவைகளின் பொருளும் நன்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இதனால் இதைப் படிப்பவர்களுக்கு பக்தியேற்படுவதுடன் ஸம்ஸ்கிருதபாஷா ஞானமும் நன்கு ஏற்படும். (1)

(அ) த்ரிபுரஸம்ஹாரம் செய்து தேவர்களைக் காப்பாற்றிய வரலாற்றைக் கூறுகிறார்:—

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

विष्ण्वाद्याश्च पुरत्रयं सुरगणाः जेतुं न शक्ताः स्वयं
यं शंभुं भगवन्वयं तु पशवोऽस्माकं त्वमेवेश्वरः ।
स्वस्वस्थाननियोजिताः सुमनसः स्वस्था बभूवुस्तत-
स्तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥ २ ॥

விஷ்ண்வாத்யாஶ்ச புரத்ரயம் ஸுரகணா ஜேதும்
ந ஶக்தா : ஸ்வயம்
யம் ஶம்பும் பகவன் வயம் து பஶவோऽஸ்மாகம்
த்வமேவேஶ்வர: ।
ஸ்வஸ்வஸ்தாநநியோஜிதா: ஸுமநஸ : ஸ்வஸ்தா
பபூவுஸ்தத:
தஸ்மின் மே ஹ்ருதயம் ஸுகேந ரமதாம் ஸாம்பே
பரப்ரஹ்மணி ॥

विष्ण्वाद्याः–விஷ்ணு முதலிய **सुरगणाः च**–தேவர்களுடைய கூட்டங்களும் **पुरत्रयं**–மூன்றுபட்டினங்களையுடைய திரிபுரர்களை **स्वयं**–தாங்களாகவே **जेतुं**–வெல்ல **न शक्ताः**–இயலாதவர்களாக **यं शंभुं**–எந்த சிவ பெருமானை '**भगवन्**–எல்லா வல்லமைகளும் வாய்ந்தவனே **वयंतु**நாங்களோ எனில் **पशवः**-பசுக்கள் **अस्माकं**–எங்களுக்கு **त्वमेव**–நீயே **ईश्वरः**–ரக்ஷகன்' (என்று உரைத்தனரோ) **ततः**–த்ரிபுரஸம்ஹாரம் செய்தபின் **स्वस्वस्थाननियोजिताः**–தங்கள் தங்கள் பதவிகளில் அமர்த்தப்பட்ட **सुमनसः**–தேவர்கள் **स्वस्थाः बभूवुः**–ஸ்வஸ்தர்களாக ஆனார்களோ **तस्मिन्**–அப்படிப்பட்ட **साम्बे**–அம்பிகையுடன் கூடிய **परब्रह्मणि**–பரம்பொருளிடத்தில் **मे**–என்னுடைய **हृदयं**-மனம் **सुखेन**–ஸுகமாக **रमताम्**–விளையாடட்டும்.

முன் ஒரு ஸமயம் தாரகாஸுரன் குமாரர்களான தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி இம்மூவரும் பிரஹ்மாவின் வரபலத்தால் தங்கம், வெள்ளி, இரும்பு இவைகளால் தனித்தனியாக மூன்றுபுரங்களை நிர்மாணித்துக் கொண்டு அவைகளுடன் ஆகாசத்தில் பறந்து வந்து அமர்ந்து உலகைத்துன்புறுத்தி வந்தனர். தேவர்கள் எல்லோரும் சேர்ந்து அவர்களுடன் சண்டையிட்டுத்தோல்வி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அடைந்தவர்களாய் தங்கள் ஸ்தானங்களை இழந்து தேவ லோகத்தை விட்டு மேரு மலையில் ஒளிந்துகொண்டு தவம் செய்தனர். நேரில் தர்சனம் கொடுத்த பரமேசுவரனிடம் தாங்கள் படும் துன்பத்தைச் சொல்லி முறையிட்டனர். 'ப்ரபோ, நாங்கள் எல்லோரும் பசுக்கள். நீயோ பசுபதி. எங்கள் துன்பத்தைப் போக்குவது உம் கடமையல்லவா! உலகைத்துன்புறுத்திவரும் அஸுரர்களையழித்து எங்களைக் காப்பாற்றவேண்டும். வேறுகதியில்லை' என்று வேண்டினர். பிறகு பகவான் புறப்பட்டு யுத்தத்தில் த்ரிபுரர்களை ஸம்ஹாரம் செய்து தேவர்களின் துன்பத்தைப்போக்கி அவரவர் பதவியில் தேவர்களை நிலைநிறுத்தினர். பிறகு பரமேசன் கிருபையால் தேவர்கள் இழந்த தங்கள் ஸ்தானங்களை மீண்டும் பெற்று ஸ்வஸ்தர்களாகி (ஸ்வர்கலோகத்தில் வஸிப்பவர்களாகவும் தங்கள் தங்கள் இடங்களில் இருப்பவர்களாகவும் ஆகி) ஆனந்தம் அடைந்தனர். இவ்வாறு ஒருவராலும் செய்யமுடியாத த்ரிபுர ஸம்ஹாரத்தைச் செய்து உலகைக்காப்பாற்றிய ஸாம்ப னிடத்திலேயே என் மனம் இன்பம் அடையவேண்டும் (2)

(அ) த்ரிபுரஸம்ஹாரத்தில் தேவர்கள் செய்த பணிகளைக் கூறுகிருர்:—

क्षोणी यस्य रथो रथाङ्गयुगलं चन्द्रार्कबिम्बद्वयं
कोदण्डः कनकाचलो हरिरभूद्बाणो विधिः सारथिः ।
तूणीरो जलधिर्हयाः श्रुतिचयो मौर्वी भुजङ्गाधिपः
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥ ३ ॥

க்ஷோணீ யஸ்ய ரதோ ரதாங்க யுகளம் சந்த்ரார்க்க பிம்பத்வயம்
கோதண்ட: கனகாசலோ ஹரிரபூத் பாணோ விதி: ஸாரதி: ।
தூணீரோ ஜலதிர் ஹயா: ஶ்ருதிசயோ மௌர்வீ புஜங்காதிப:
தஸ்மின் மே ஹ்ருதயம் ஸுகேந ரமதாம் ஸாம்பே பரப்ரஹ்மணி ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

यस्य-எவனுக்கு **क्षोणी**-பூமி **रथः**-தேராகவும் **चन्द्रार्कबिम्बद्वयं**-சந்திர சூரியர்களுடைய இரண்டு பிம்பங்களும் **रथाङ्गयुगलं**-தேரின் இருசக்கரங்களாயும் **कनकाचलः**-மேருமலை **कोदण्डः**-வில்லாகவும் **हरिः**-விஷ்ணு **बाणः**-கணையாகவும் **विधिः**-நான்முகன் **सारथिः**-தேரோட்டியாகவும் **जलधिः**-ஸமுத்திரம் **तूणीरः**-அம்புறுத்தூணியாகவும் **श्रुतिचयः**-நான்கு வேதங்களும் **हयाः**-குதிரைகளாகவும் **भुजङ्गाधिपः**-பாம்புகளுக்கு அரசனுகிய வாசுகி **मौर्वी**-நாண்கயிருகவும் **अभूत्**-ஆயிற்ருே **तस्मिन्**-அந்த **साम्बे**-அம்பிகையுடன் கூடிய **परब्रह्मणि**-பரம்பொருளிடத்தில் **मे**-என்னுடைய **हृदयं**-மனம் **सुखेन**-ஸுகமாக **रमताम्**-விளையாடட்டும்.

த்ரிபுரர்களால் துன்புறுத்தப்பட்ட தேவர்கள் எல்லோரும் சேர்ந்து பகவானிடம் முறையிட்ட பொழுது மஹேசன் "அரக்கர்களுடன் சண்டையிடுவதற்கு படைக் கலங்கள் வேண்டுமே. அவை இருந்தால் யுத்தம் செய்து அரக்கர்களை அழிக்கலாம்" என்று கூறினர். த்ரிபுர ஸம்ஹாரம் செய்ய தேவர்கள் சிறிதும் சக்தியற்றவர்கள் என்பதும், வேறு உதவியோ, முயற்சியோ ஒன்றும் இல்லாமல் சும்மா இருக்கும் நிலையிலேயே தான் ஒருவனே அவர்களை அழிக்கமுடியும் என்பதும் உலகிற்கு வெளிப்பட வேண்டும் என்பது ஈசனின் கருத்து. ஈசன் வார்த்தையைக் கேட்ட தேவர்கள் "இந்த அஸுரர்களை அழிக்க தங்கள் படைக்கலங்களுக்கு வலிமை போதாது. தாங்களே படைக் கலங்களின் உரு எடுத்துக்கொண்டு தங்கள் சக்தியின் மூலம் அஸுரர்களை அழிக்க ஈசனுக்கு உதவிசெய்ய வேண்டும்" என எண்ணினர். உடனே பூமியைத் தேராகவும், ஸூர்யனையும் சந்திரனையும் இரு தேர்ச்சக்கரங் களாகவும், நான்கு வேதங்களையும் குதிரைகளாகவும், பிரஹ்மாவை ஸாரதியாகவும், மேரு மலையை வில்லாகவும், விஷ்ணுவை அம்பாகவும் வாஸுகியை ஞாண் கயிருகவும், ஸமுத்திரத்தை அம்புராத்தூணியாகவும், ஆக்கி ஸஜ்ஜப் படுத்தினர். பரமேசுவரனும் தேரில் ஏறிக்கொண்டு எல்லாவற்றையும் கைக்கொண்டு த்ரிபுரர்களுடன் சண்டை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யிடத் தயாராஞர். ஆனுல் இந்தப் படைக்கலங்களைக் கொண்டு சண்டையிட முடியவில்லை. அதனதன் காரியத்தைக்கூட அவைகள் செய்யவில்லை. பாணமாக அமைந்த விஷ்ணு காத்தற்கடவுளானபடியால் ஸம்ஹாரம் செய்ய விரும்பவில்லை. தேர்ச் சக்கரங்களாக அமைந்த ஸூர்ய சந்திரர்கள் ஒரே சமயத்தில் ஒரே பக்கமாகச் செல்லவில்லை. வேதங்களாக அமைந்த குதிரைகள் தேரில் இருக்கும் பகவானையே பார்த்து நிற்கின்றன. எதிர்புறமாகச் செல்லவில்லை. இந்த நிலைமையைப் பார்த்து மஹேசன் சிரித்தார். அந்த சிரிப்பிஞலேயே அரக்கர்கள் சாம்பலாகி விட்டனர்.

'क्रियासिद्धिः सत्वे भवति महतां नोपकरणे' என்று ஓர் கவி இதே கருத்தைக் கூறுகிருர். இவ்வாறு ப்ரஹ்மாதி தேவர்களும்கூட படைக்கலமாகி எவருக்கு ஸேவைசெய்தனரோ, எவர் ஒருவருடைய உதவியுமில்லாமல் தானும் சிரமப் படாமல் சிரிப்பிஞலேயே அரக்கர்களை அழித்தாரோ, அந்த ஸாம்பனிடம் என் மனம் நிலைத்து இன்பம் அடையட்டும்.

இந்த த்ரிபுரஸம்ஹாரம் என்பது வேருெரு தத்வார்த்தத்தையும் வ்யங்க்யமாகப் புலப்படுத்துகிறது. சரீரத்திற்கு 'புரம்' என்ற பெயர் கீதையிலும் உபநிஷத்திலும் காணப்படுகிறது. 'नवद्वारे पुरे' 'पुरमेकादशद्वारं' ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணம் என்று மூன்று சரீரங்கள். ரக்தம், மாம்ஸம் முதலியவை ஸ்தூலம். ஐந்து பிராணன்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள் மனம், புத்தி இவை ஸூக்ஷ்ம சரீரம். அக்ஞானம் காரண சரீரம். இவைகளால் தான் நாம் துன்புறுகிருேம். இந்திரியங்களிலும் மனதிலும் ஏற்படும் ராஜஸ தாமஸ விருத்திகளே அஸுரர்கள். இவைகளால் மேலும் மேலும் பல பல கீழ்ப் பிறவிகளையடைந்து அல்லல்படுகிருேம். ஸாத்விக விருத்திகளே தேவர்கள். அவைகளால் பரமாத்ம ஸ்வரூபத்தை தியானித்து தத்வத்தை அறியமுற்பட்டால் மஹேசன் கிருபைகூர்ந்து ஞானத்தை அருள்கிருர். ज्ञानमिच्छेन्महेश्वरात् ஞானம் ஏற்பட்டால் முப்புரங்களும் அழிந்துவிடுகின்றன.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மறுபடியும் பிறவி ஏற்படுவதில்லை. ஸ்வஸ்தனுக ப்ரஹ்மானந்தத்தை அடைகிறுன். (3)

(அ) காமதஹனம், ப்ரஹ்மசிரஸ்சேதம், விஷ்ணு நேத்ரத்தால் பூஜித்தது, இவைகளால் ஸாம்பனின் உத்கர்ஷத்தைக் காட்டுகிறுர் :—

येनापादितमङ्गजाङ्गभसितं दिव्याङ्गरागैः समं
येन स्वीकृतमब्जसम्भवशिरः सौवर्णपात्रैः समम् ।
येनाङ्गीकृतमच्युतस्य नयनं पूजारविन्दैः समं
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥ ४ ॥

யேனாபாதிதமங்கஜாங்க பஸிதம் திவ்யாங்கராகை: ஸமம்
யேந ஸ்வீக்ருதமப்ஜஸம்பவ மிர: ஸௌவர்ண பாத்ரை: ஸமம் ।
யேநாங்கீக்ருதமச்யுதஸ்ய நயநம் பூஜாரவிந்தை: ஸமம்
தஸ்மின் மே ஹ்ருதயம் ஸுகேந ரமதாம் ஸாம்பே பரப்ரஹ்மணி ॥

येन-எந்த பரமேச்வரனுல் **अङ्गजाङ्ग भसितं**-மன்மதனுடைய உடலின் சாம்பல் **दिव्याङ्गरागैः**-திவ்யமான வாசனைப் பூச்சுகளோடு **समं**-ஸமமாக **आपादितं**-செய்யப்பட்டதோ **येन**-எந்த பரமேச்வரனுல் **अब्जसम्भव**-தாமரையிலிருந்து உண்டான நான்முகக்கடவுளின் **शिरः**-தலை **सौवर्णपात्रैः**-தங்கத்தினுல் செய்யப்பட்டபாத்திரங்களுக்கு **समं**-ஸமமாக **स्वीकृतं**-ஏற்றுக் கொள்ளப்பட்டதோ **येन**-எந்த பரமேச்வரனுல் **अच्युतस्य**--விஷ்ணுவின் **नयनं**-கண் **पूजारविन्दैः**-பூஜைக்குகந்த தாமரைகளுக்கு **समं**-ஸமமாக **अङ्गीकृतं**-அங்கீகரிக்கப்பட்டதோ **तस्मिन्**-அப்படிப்பட்ட **साम्बे**-அம்பிகையுடன் கூடிய **परब्रह्मणि**-பரம்பொருளிடத்தில் **मे**-என்னுடைய **हृदयं**-மனம் **सुखेन**-ஸுகமாக **रमताम्**-இன்புற்றிருக்கட்டும்.

காமத்தை உண்டுபண்ணி உலகம் முழுவதையும் அடக்கியாளும் மன்மதன் தனியாக வீற்றிருக்கும் பரம சிவனையும் தன்வசமாக்க எண்ணி மலரம்புகளை எய்தான்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அவர் மனதிலும் காமம் எழும்படி முயற்சித்தான். ஆனால் அவர் நெற்றிக்கண்ணைத்திறக்கவே அதிலிருந்து கிளம்பிய தீப்பொறியால் காமன் எரிந்துபோனான். காமனது உடல் சாம்பலையே சிறந்த வாசனைப்பொடியாக எண்ணி தன் சரீரத்தில் பூசிக்கொண்டார். உலகில் காமனை ஜயித்தவர் ஈசுவரன் ஒருவரே.

ஆதியில் பிரஹ்மாவுக்கும் ஐந்து தலைகள் இருந்தன. அதனால் அவர் "உலகை ஸிருஷ்டிக்கும் தானே மேலான தெய்வம். தனக்கு மேற்பட்டவர் ஒருவரும் இல்லை" எனச் செருக்குற்றிருந்தார். அவருடைய கர்வத்தைப் போக்கி அனுக்ரஹம் செய்வதற்காக அவர் எதிரில் பரமேசன் ஜ்யோதிரூபமாகத்தோன்றி அதன் நடுவில் உமாமஹேசுவரனாகவும் காக்ஷி கொடுத்தார். அதைக்கண்டும் அஹங்கை நீங்காமல் மஹேசனைப்பலவாறு இகழ்ந்து பேசினார். உடனே சினங்கொண்டு தன்னை இகழ்ந்து பேசிய தலையை மட்டும் தன் நகத்தால் கொய்தார். அதன்பின் அவர் நான்முகராய் விட்டார். பிறகு கர்வம் நீங்கப்பெற்று ப்ரஹ்மா மஹேசனின் காலில் விழுந்து வணங்கி பலவாறு துதித்து அவர் அருளைப்பெற்றார். அந்தத்தலையை தங்கப் பாத்திரத்தைப்போல் கையில் வைத்துக்கொண்டிருக்கிறார் பரமசிவன். படைத்தற்கடவுளான பிரஹ்மாவையும் அடக்கியவர் ஸாம்பனே.

விஷ்ணுவின் சக்ரம் ததீசிமுனிவரிடம் பிரயோகிக்கப் பட்டு ஒடிந்து போய்விடவே அம்மாதிரி மற்றோர் சக்ராயுதம் பெறுவதற்காக விஷ்ணு பரமேசனை தினமும் ஆயிரம் தாமரைகளால் பூஜித்து வந்தார். ஒருநாள் ஈசுவர ஸங்கல்பத்தால் ஒரு தாமரைப்பூ மறையவே அர்ச்சனை முடியும் சமயத்தில் ஒரு புஷ்பம் குறைந்திருப்பதை அறிந்த விஷ்ணு தாமரை போன்ற தமது ஒரு நேத்ரத்தைப் பிடுங்கி அதைக் கொண்டே பகவானை அர்ச்சித்து பூஜையை முடித்தார். ஸந்தோஷம் அடைந்த மஹேசுவரன் நாராயணனுக்குக் கண்ணைக்கொடுத்து மிகுந்த சக்தியுள்ள சக்ராயுதத்தையும் தந்தருளினார். காத்தற்கடவுளான விஷ்ணுவுக்கும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அனுக்ரஹம்செய்த மூர்த்தி ஸாம்பனே. அவரிடம் என்மனது நிலைத்திருக்கட்டும். இதைப்பற்றி விரிவாக ஏழாவது சுலோகத்தில் காணலாம். (4)

(அ) மேலும் சிவோத்கர்ஷத்தைக் காட்டுகிறார் :—

गोविन्दादधिकं न दैवतमिति प्रोच्चार्य हस्तावुभा-
वुद्धृत्याथ शिवस्य संनिधिगतः व्यासो मुनीनां वरः ।
यस्य स्तम्भितपाणिरानतिकृता नन्दीश्वरेणाभव-
त्तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥ ५ ॥

கோவிந்தாததிகம் ந தைவதமிதி ப்ரோச்சார்ய ஹஸ்தாவுபா -
வுத்த்ருத்யாத ஶிவஸ்ய ஸந்நிதிகத: வ்யாஸோ முநீநாம் வர: ।
யஸ்ய ஸ்தம்பித பாணிராநதிக்ருதா நந்தீஶ்வரேணாபவத்
தஸ்மின் மே ஹ்ருதயம் ஸுகேந ரமதாம் ஸாம்பே பரப்ரஹ்மணி ॥

गोविन्दात् अधिकं-கோவிந்தனைக் காட்டிலும் மேலான **दैवतं**-தேவதை **न**-இல்லை **इति**-என்று **प्रोच्चार्य**-உரக்கக் கூறிக் கொண்டு **अथ**-பிறகு **उभौ**-இரு **हस्तौ**-கைகளையும் **उद्धृत्य**-உயரத் தூக்கிக்கொண்டு **शिवस्य**-சிவபெருமானுடைய **संनिधिगतः**-ஸந்நிதியை அடைந்த **मुनीनां**-முனிவர்களுக்குள் **वरः**-சிறந்த **व्यासः**-வியாஸர் **यस्य**-எந்த சிவபெருமானுக்கு **आनतिकृता**-வணக்கத்தைச் செய்கின்ற **नन्दीश्वरेण**-நந்தி தேவனால் **स्तम्भितपाणिः**-அசைவின்றி செய்யப்பட்ட கைகளை உடையவராக **अभवत्**-ஆனாரோ **तस्मिन्**-அப்படிப்பட்ட **साम्बे**-அம்பிகாதேவியுடன் கூடிய **परब्रह्मणि**-பரம் பொருளிடத்தில் **मे हृदयं**-என்னுடைய மனம் **सुखेन**-ஸுகமாக **रमताम्**-விளையாடிக் கொண்டிருக்கட்டும்.

வ்யாஸர் முனிவர்களுள் சிறந்தவர். அவரே நான்கு வேதங்களையும் வகுத்துக்கொடுத்தவர். அதனாலேயே அவருக்கு வேதவ்யாஸர் என்ற பெயர் வழங்கலாயிற்று.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மேலும் அவர் பதினெட்டுப் புராணங்களையும் இயற்றியுள்ளார். இவ்வாறு சிறந்து விளங்கும் வியாஸர் 'மஹாவிஷ்ணுதான் எல்லா தேவர்களைக்காட்டிலும் சிறந்தவர். அவரைக்காட்டிலும் மேலானவர் வேறு யாருமிலர்' என உரைத்துக்கொண்டு சிவனுடைய ஸந்நிதியையடைந்தார். அவர் தன்னுடைய கருத்தைச் சித்தாந்தப்படுத்தத் தனது இரு கைகளையும் உயரத்தூக்கிக்கொண்டு சிவஸந்நிதியிலேயே அவ்வாறு கூறினர். அப்பொழுது நந்திகேசுவரர் சிவனுக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தார். அதைக் கண்டவுடன் அவர் வியாஸருடைய கையை ஸ்தம்பிக்கச் செய்துவிட்டார். உயரத்தூக்கிய கை அப்படியே அசைவற்று இருந்தது. கீழே இறக்கமுடியவில்லை. அதனல் வியாஸர் தன்னுடைய கருத்தை நிலைநாட்டமுடியாமல் போய்விட்டது. ஆகையால் பரமேச்வரன் ஒருவனே பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற மூவருக்கும் மேலானவன். அவனே பரம்பொருள் என்று தீர்மானிக்கப்படுகின்றது. (5)

(அ) பரமசிவனின் விராட்ரூபத்தையும் தத்வத்தையும் காட்டுகிருர்:—

आकाशश्चिकुरायते दशदिशाभोगो दुकूलायते
शीतांशुः प्रसवायते स्थिरतरानन्दः स्वरूपायते ।
वेदान्तो निलयायते सुविनयो यस्य स्वभावायते
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥ ६ ॥

ஆகாஶஶ்சிகுராயதே தஶதிஶாபோகோ துகூலாயதே
ஶீதாம்ஶு: ப்ரஸவாயதே ஸ்திரதரானந்த: ஸ்வரூபாயதே।
வேதாந்தோ நிலயாயதே ஸுவிநயோ யஸ்ய ஸ்வபாவாயதே
தஸ்மின் மே ஹ்ருதயம் ஸுகேந ரமதாம் ஸாம்பே
பரப்ரஹ்மணி ||

यस्य–எந்த பரமேச்வரனுக்கு **आकाशः**–ஆகாயம் **चिकुरायते**–தலை மயிராக ஆகின்றதோ **दशदिशाभोगः**–பத்து திக்குகளின் பரப்பும் **दुकूलायते**—பட்டு வஸ்திரமாக ஆகின்றதோ **शीतांशुः**—குளிர்ந்த கிரணங்களையுடைய

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சந்திரன் **प्रसवायते**-(தலையில் சூட்டியுள்ள) மலராக விளங்கு கிருனே **स्थिरतरानन्दः**-என்றும் நிலைத்து நிற்கும் ஆனந்தம் **स्वरूपायते**-ஸ்வரூபமாக விளங்குகின்றதோ **वेदान्तः**-உபநிஷத்து **निलयायते**-இருப்பிடமாக இருக்கிறதோ **सुविनयः**-நல்ல அடக்கம் **स्वभावायते**-இயற்கையான குணமாகிறதோ **तस्मिन्**--அப்படிப்பட்ட **साम्बे**--அம்பிகையுடன்கூடிய **पर-ब्रह्मणि**-பரப் பிரம்மத்தினிடத்தில் **मे हृदयं**-என் மனம் **सुखेन**-ஸுகமாக **रमताम्**-களித்திருக்கட்டும்.

பரமேசுவரனுக்கு ஆகாசம் கேசமாக அமைந்திருக்கிறது. 'வ்யோமகேசன்' என்பது அவனுடைய பெயர். இதன் கருத்து என்னவெனில் பிரபஞ்சம் முழுவதும் அவன் சரீரம் என்பது. சரீரம் என்ருல் பாதாதிகேசாந்த அவயவங்கள் இருக்கவேண்டும். அதற்காக இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. உருவமற்ற பரமேசுவரனை மனதில் தியானிப்பதற்காக பிரபஞ்சத்தை உருவமாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. திசைகளே ஆடைகளாக அமைந்துள்ளன. திகம்பரன் என்று பெயர். திசை ஆடையாஞல் அதற்குட்பட்ட பிரபஞ்சம் முழுவதும் அவனது சரீரம் என்று கிடைக்கிறது. ஆகாசம் கேசமாக அமைந்ததும் அதில் பிரகாசிக்கும் சந்திரன் கேசத்தில் சூடிக்கொள்ளும் மலராக ஆகிருன். சந்திரசேகரர் என்று அவனுக்குப்பெயர். இவை எல்லாம் தியானம் செய்வதற்காகக் கல்பிக்கப்பட்டது. வாஸ்தவமல்ல. மாயையினுல் தோன்றும் பிரபஞ்சம் உண்மையில்லை. ஆகவே பிரபஞ்சமாகிய சரீரமும் அவருடைய உண்மை ஸ்வரூபமில்லை. வாஸ்தவத்தில் அவருக்கு சரீரமோ, உருவமோ ஒன்றும் கிடையாது. ஆனந்தமே அவருடைய உண்மை ஸ்வரூபம். உலகில் நாம் விஷயங்களில் பெறும் ஆனந்தம் உடனே மறைந்துவிடுகிறது. பகவானுடைய ஸ்வரூபமான ஆனந்தம் எப்பொழுதும் நிலைத்து இருப்பது, ஸத்தானது. ஸச்சிதானந்தமே அவன் ஸ்வரூபம். இந்த தத்வத்தை உபநிஷத்துக்களின் மூலம்தான் அறிய வேண்டும். அவைகளே அவனது இருப்பிடம். விநயமே அவரது ஸ்வபாவம், அதாவது ஒரு விகாரமும் இல்லாமல்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சாந்தமான ஸ்வரூபம். இவ்வாறு ஜகத்சரீரியாகவும் உண்மையில் அசரீரியாகவும் ஆனந்தவடிவமாகவும் விளங்கும் ஸாம்பனிடம் என் மனது ரமிக்கட்டும். (6)

(அ) மஹாவிஷ்ணுவுக்கு அருள்செய்த லீலையை வர்ணிக்கிறார்:—

विष्णुर्यस्य सहस्रनामनियमादम्भोरुहाण्यर्चय-
न्नेकोनोपचितेषु नेत्रकमलं नैजं पदाब्जद्वये ।
संपूज्यासुरसंहतिं विदलयंस्त्रैलोक्यपालोऽभव-
त्तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥ ७ ॥

விஷ்ணுர் யஸ்ய ஸஹஸ்ரநாமநியமா தம்போருஹா-
ண்யர்சயன்
ஏகோநோபசிதேஷு நேத்ரகமலம் நைஜம் பதாப்ஜ த்வயே ।
ஸம்பூஜ்யாஸுர ஸம்ஹதிம் விதலயம்ஸ்த்ரைலோக்ய
பாலோ ऽபவத்
தஸ்மின் மே ஹ்ருதயம் ஸுகேந ரமதாம் ஸாம்பே
பரப்ரஹ்மணி ॥

सहस्रनामनियमात्-ஆயிரம் திருநாமங்களைச் சொல்லிப் பூஜை செய்தல் என்ற நியமத்துடன் **अम्भोरुहाणि**-தாமரை மலர்களை **अर्चयन्**-(தினமும்) பூஜித்துக் கொண்டுவரும் **विष्णुः**-விஷ்ணுவானவர் **एकोनोपचितेषु**-(ஒரு நாள்) சேகரிக்கப்பட்ட புஷ்பங்களில் ஆயிரத்துக்கு ஒன்று குறைவாக இருக்கும்பொழுது **नैजं**-தன்னுடையதான **नेत्रकमलं**-கண்ணாகிய தாமரையை **यस्य**-எந்தப் பரமேசனுடைய **पदाब्जद्वये**-இரண்டு தாமரைபோன்ற பாதங்களில் **संपूज्य**-நன்கு பூஜித்து **असुरसंहतिं**-அஸுரர்களின் கூட்டத்தை **विदलयन्**-நாசம் செய்து கொண்டு **त्रैलोक्यपालः**-மூவுலகையும் காப்பவராக **अभवत्**-ஆனாரோ **तस्मिन्**-அப்படிப்பட்ட **साम्बे**-அம்பிகையுடன்கூடிய **परब्रह्मणि**-பரம் பொருளிடத்தில் **मे**-என்னுடைய **हृदयं**-மனம் **सुखेन**-ஸுகமாக **रमताम्**-விளையாடட்டும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஒரு சமயம் மஹாவிஷ்ணு தேவர்களுக்குப் பற்பல இன்னல்களை விளைவிக்கும் அஸுரர்களை அழிப்பதற்காகச் சக்ராயுதம் வேண்டிப் பரமேச்வரனைப் பூஜித்து வந்தார். அவர் தினமும் பரமேச்வரனுடைய ஆயிரம் திருநாமாக்களையும் கூறி ஆயிரம் தாமரை மலர்களைக்கொண்டு பரமேச்வரனுடைய பாதகமலங்களைப்பூஜித்து வந்தார். இவ்வாறு நியமத்துடன் மஹாவிஷ்ணு பூஜை செய்துகொண்டு வருகையில் ஒருநாள் ஓர் மலர் குறைந்துவிட்டது. 999 மலர்கள்தான் இருந்தன. பூஜை நடுவில் எழுந்து சென்று வேறு மலர் எடுத்துவந்தால் விரதபங்கம் ஏற்படும் ஆனாலும் மஹாவிஷ்ணு மனந்தளராது தன்னுடைய தாமரைபோன்ற ஓர் கண்ணைப் பெயர்த்து எடுத்து அதையே ஓர் மலராக சிவபெருமானுடைய திருவடிகளில் அர்ப்பணம் செய்தார். சிவபெருமானும் விஷ்ணுவின் பக்தியை மெச்சி அதை ஏற்றுக்கொண்டார். அப்பொழுது அப்பரமேச்வரன் மஹாவிஷ்ணுவிற்குச் சக்ரம் என்ற ஆயுதத்தைத் தந்தருளினார். அதன் உதவியால் மஹாவிஷ்ணு அஸுரர்கள் அனைவரையும் அழித்து மூவுலகையும் காத்தார். அதனால் அவர் மூவுலகையும் காக்கவல்லவர் என்ற புகழும் பெற்றார். இதனால் எல்லா உலகையும் காத்தருளும் மஹாவிஷ்ணுவும் பரமேச்வரனுடைய க்ருபைக்குப்பாத்ரமானவர். அவருடைய அருள் இருந்தால் நாம் வெற்றிபெறமுடியும் என்பது நன்கு புலனாகின்றது. அவ்வாறு அருள்புரியும் அம்பிகையுடன் கூடிய பரம்பொருளிடத்தில் என் மனம் இன்புற்று இருக்கட்டும். (7)

शौरिं सत्यगिरं वराहवपुषं पादाम्बुजादर्शने
चक्रे यो दयया समस्तजगतां नाथं शिरोदर्शने ।
मिथ्यावाचमपूज्यमेव सततं हंसस्वरूपं विधिं
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥ ८ ॥

ஸௌரிம் ஸத்யகிரம் வராஹ வபுஷம் பாதாம்புஜா தர்ஶநே
சக்ரே யே தயயா ஸமஸ்த ஜகதாம் நாதம் ஶிரோ தர்ஶநே ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மித்யாவாசமபூஜ்யமேவ ஸததம் ஹம்ஸ ஸ்வரூபம் விதிம்
தஸ்மின் மே ஹ்ருதயம் ஸுகேந ரமதாம் ஸாம்பே
பரப்ரஹ்மணி ||

यः-எந்தப் பரமேச்வரன் वराहवपुः-பன்றியின் ருபத்தை உடையவரும் पादाम्बुजादर्शने-தாமரைபோன்றதிருவடிகளைக் காணுத விஷயத்தில் सत्यगिरं-உண்மையாகப் பேசியவருமான शौरिं மகாவிஷ்ணுவை दयया-தயவினுல் समस्तजगतां-எல்லா உலகங்களுக்கும் नाथं-தலைவனுக चक्रे-செய்தானே शिरोदर्शने -- தலையைக் காணும் விஷயத்தில் मिथ्यावाचं-பொய் வார்த்தை பேசியவரும் हंसस्वरूपं-அன்னப் பறவையின் ருபத்தை உடையவருமான विधिं-நான்முகனை सततं—எப்பொழுதும் अपूज्यमेव--பூஜிக்கத் தகாதவனுகவே चक्रे-செய்தானே तस्मिन्-அப்படிப்பட்ட साम्बे - அம்பிகையுடன்கூடிய परब्रह्मणि-பரம் பொருளிடத்தில் मे-என்னுடைய हृदयं-மனம் सुखेन-ஸுகமாக रमताम्-விளையாடட்டும்.

ஒருசமயம் நான்முகனும், பிரஹ்மாவும் நானே பெரியவன், நானே முதற்கடவுள் என்று வாதிட்டுச் சண்டையிட்டனர். அவர்களுக்கு உண்மையை உணர்த்தப் பரமேசன் அடியும் முடியும் கண்ணுக்குத் தெரியாத பெரிய ஜோதி வடிவாக அவர்கள் எதிரில் தோன்றினர். இவருக்கு லிங்கோத்பவ மூர்த்தி என்று பெயர். அவரை அவர்களால் அறிந்துகொள்ள முடியவில்லை. இந்த உருவத்தின் அடியையோ, முடியையோ தெரிந்துவருபவர்தான் நம்முள் பெரியவர் என்று அவர்கள் தீர்மானித்துக் கொண்டனர். திருமால் ஓர் பெரிய பன்றியின் வடிவம் தாங்கி நிலத்தைப் பிளந்துகொண்டு கீழ் உலகங்கள் எங்குஞ் சென்றுர். அவர் நெடுங்காலம் முயன்றும் அச்சிவபெருமானின் அடியைக் காணமுடியவில்லை. பின்னர் அவர் திரும்பி வந்து தன்னுல் அடியைக்காண முடியவில்லை என்ற உண்மையை வெளியிட்டார். நான்முகன் ஓர் அன்னப்பறவையின் உருவந் தாங்கி உயரப் பறந்து பல ஆண்டுகள் தேடினுன். ஆயினும் அவனுல் அரவங்களை அணிகலங்களாகக் கொண்ட பரமசிவனின் முடியைக் காண முடியவில்லை,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பின்பு அவன் அயர்ந்து முடியைக் காணுமலேயே திரும்பி வந்தான். அவ்வாறு இருந்தும் நான் பரமேச்வரனுடைய முடியைக் கண்டுவிட்டேன். ஆதலால் நானே முழு முதற் கடவுள் என்று பொய் உரைத்தார். அது கேட்டுச் சினங் கொண்ட சிவபெருமான் அவனை இகழ்ந்து இனி ஒருவரும் உன்னைப் பூஜிக்கமாட்டார்கள் என்று கூறினுர். அது முதற் கொண்டு நான்முகனுக்கு எங்கும் பூஜை இல்லாமல் போய் விட்டது. உண்மை உரைத்த மஹா விஷ்ணுவை த்ரிலோக நாதனுகச் செய்தார். இவ்வாறு ப்ரஹ்மா, விஷ்ணு இவர் களாலும் அறிய முடியாத உருவம் கொண்டவர் பரமேசன் அவர்களுக்கு நிக்ரஹானுக்ரஹங்கள் செய்யும் சக்தி வாய்ந் தவர். அம்பிகையுடன் கூடிய அந்தப் பரமேச்வரன் என் மனத்தில் எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருக்கட்டும் என்னுடைய மனம் அப் பரமேச்வரனிடம் இன்புற்று இருக்கட்டும். (8)

(அ) அஷ்டமூர்த்தி ஸ்வரூபத்தையும் துரீய ஸ்வரூபத் தையும் காட்டுகிருர் :—

यस्यासन्धरणीजलाग्निपवनव्योमार्कचन्द्रादयः
विख्यातास्तनवोऽष्टधा परिणता नान्यत्ततो वर्तते ।
ओंकारार्थविवेचिनी श्रुतिरियं चाचष्ट तुर्यं शिवं
तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥ ९ ॥

யஸ்யாஸன் தரணீ ஜலாக்நி பவந வ்யோமார்க சந்த்ராதய:
விக்யாதாஸ்தநவோऽஷ்டதா பரிணதா நாந்யத்
ததோ வர்ததே ।
ஓம்காரார்த்த விவேசிநீ ஶ்ருதிரியம் சாசஷ்ட துர்யம் ஶிவம்
தஸ்மிந் மே ஹ்ருதயம் ஸுகேந ரமதாம் ஸாம்பே
பரப்ரஹ்மணி ॥

यस्य-எந்தப் பரமேச்வரனுக்கு **विख्याताः**-மிகுந்த புகழ் வாய்ந்த **धरणी**-பூமி **जल**-நீர் **अग्नि**-நெருப்பு **पवन**-காற்று **व्योम**-ஆகாயம் **अर्क**-சூரியன் **चन्द्रादयः**-சந்திரன் முதலியன

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

अष्टधा-எட்டு வகையாக **परिणताः**-அமைந்த **तनवः**-சரீரங்களாக **आसन्**-ஆயினவோ **ततः**-அவரைக் காட்டிலும் **अन्यत्**-வேறு ஒன்றும் **न वर्तते**-இல்லையோ. **ओंकारार्थ**-ஓம் என்ற சொல்லின் பொருளை **विवेचिनी**-தெளிவாக விளக்குகின்ற **इयं श्रुतिः**-இந்த வேதமும் எந்தப் பரமேச்வரனை **तुर्यं शिवं च**-நான்காவது பொருள், சிவம் என்று **आचष्ट**-கூறிற்றோ **तस्मिन्**-அப்படிப்பட்ட **साम्बे**-அம்பிகையுடன் கூடிய **परब्रह्मणि**-பரம்பொருளிடத்தில் **मे**-என்னுடைய **हृदयं**-மனம் **सुखेन**-ஸுகமாக **रमताम्**-விளையாடட்டும்.

பரமேச்வரன் எட்டு சரீரங்களையுடையவர். அவை முறையே நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம், கதிரவன், மதி, யஜமானன் என்பவை. பிரபஞ்சம் முழுவதும் இந்த எட்டுப்பொருள்களில் அடங்கிவிட்டபடியால் இவற்றைக் காட்டிலும் வேருனது உலகில் ஒன்றும் இல்லை. ஆகவே பிரபஞ்சம் முழுவதும் பகவானுடைய சரீரம் இந்த பிரபஞ்சத்திற்கு பரமாத்மாவே காரணமானபடியால் காரணத்தைக் காட்டிலும் காரியம் வேறல்ல என்ற நியாயப்படி பிரபஞ்சம் பரமாத்மாவைக் காட்டிலும் வேறல்ல. தோன்றுவது மாயையால் தான். உண்மைப்பொருள் பரமாத்மா ஒன்றுதான். இதே கருத்தை பகவத்பாதாள் தக்ஷிணாமூர்த்யஷ்டகத்திலும்

भूरम्भांस्यनलोऽनिलोऽम्बरमहर्नाथो हिमांशुः पुमान्
इत्याभाति चराचरात्मकमिदं यस्यैव मूर्त्यष्टकम् ।
नान्यत्किंचन विद्यते विमृशतां यस्मात्परस्माद्विभोः
तस्मै श्रीगुरुमूर्तये नम इदं श्रीदक्षिणामूर्तये ॥

என்று காட்டுகிருர். இவ்வளவும் வியவஹார தசையில் கூறினேம். பரமார்த்த நிலையில் விசாரித்துப் பார்த்தோமானல் பிரபஞ்சமே உண்மையில் கிடையாது. ஆகவே அதன் ஸம்பந்தமும் ஆத்மாவுக்கு இல்லை. பரமாத்மா துரீயமான (நான்காவது) பொருள். அதுவே சிவம் என்று ஓங்காரத்தின் பொருளை விளக்கவந்த மாண்டுக்ய உபநிஷத்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கூறுகிறது. அதாவது: ஸர்வபிரபஞ்சத்தையும் ஓங்கார ஸ்வரூபமாகவும் அதையே ப்ரஹ்மமாகவும் காட்டி, நமக்குப் புரிவதற்காக நான்காகப்பிரித்து வியஷ்டியில் ஜாக்ரத வஸ்தையில் ஆத்மாவுக்கு விசுவன் என்றும் ஸ்வப்னுவஸ்தை யில் தைஜஸன் என்றும் ஸுஷுப்தி அவஸ்தையில் ப்ராஜ்ஞன் என்றும் பெயரும் லக்ஷணங்களும் கூறி இவ்வாறே ஸமஷ்டியில் பிரபஞ்சத்தையே சரீரமாகக் கொண்ட பரமாத்மாவுக்கும் வைச்வாநரன், ஹிரண்யகர்பன், ஸூத்ராத்மா என்ற பெயர்களையும் கூறி இரண்டு இடங் களிலும் துரீயமான (நான்காவதான) வஸ்து ஒன்றே தான் என்றும் அதுவே பரப்ரஹ்மம் என்றும் சிவம் என்றும் கூறியிருக்கிறது. ஆகையால் மாண்டுக்ய உபநிஷத்தில் ஓங்காரப் பொருளாகக் கூறப்பட்ட துரீயம் சிவன் தான். அந்த சிவனிடத்திலேயே என்மனம் நிலைத்து இன்பமடை யட்டும். (9)

(அ) காலகூட விஷத்தைச் சாப்பிட்டு தேவர்களைக் காத்தருளிய லீலையைக் காட்டுகிறுர் :—

विष्णुब्रह्मसुराधिपप्रभृतयः सर्वेऽपि देवा यदा
संभूताज्जलधेर्विषात्परिभवं प्राप्तास्तदा सत्वरम् ।
तानार्ताञ्शरणागतानिति सुरान्योऽरक्षदर्धक्षणा-
त्तस्मिन्मे हृदयं सुखेन रमतां साम्बे परब्रह्मणि ॥ १० ॥

விஷ்ணு ப்ரஹ்ம ஸுராதிபப்ரப்ருதய: ஸர்வேऽபி தேவா யதா
ஸம்பூதாத் ஜலதேர் விஷாத் பரிபவம் ப்ராப்தாஸ்ததா
ஸத்வரம் ।
தாநார்த்தான் ஶரணுகதாநிதி ஸுரான்
யோऽரக்ஷதர் தக்ஷணுத்
தஸ்மின் மே ஹ்ருதயம் ஸுகேந ரமதாம் ஸாம்பே
பரப்ரஹ்மணி ॥

यदा—எப்பொழுது **विष्णुब्रह्मसुराधिपप्रभृतयः**— திருமால், நான்முகன், தேவேந்திரன் முதலிய **सर्वे देवाः अपि**—எல்லா

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தேவர்களும்கூட **जलधेः**–ஸமுத்திரத்திலிருந்து **संभूतात्**–உண்டான **विषात्**–விஷத்திலிருந்து **परिभवं**–பெரும் துன்பத்தை **प्राप्ताः**–அடைந்தார்களோ **तदा**–அப்பொழுது **सत्वरं**–உடனேயே **आर्तान्**–பீடிக்கப்பட்டவர்களும் **शरणागतान्**––தஞ்சமடைந்தவர்களுமான **तान्**––அந்த **सुरान्**–தேவர்களை **यः**–எந்த பரமேச்வரன் **अर्धक्षणात्**–அரை விநாடியில் **अरक्षत्**–காத்தருளினாரோ **तस्मिन्**–அப்படிப்பட்ட **साम्बे**–அம்பிகையுடன்கூடிய **परब्रह्मणि**–பரம்பொருளிடத்தில் **मे हृदयं**–என்னுடைய மனம் **सुखेन**–ஸுகமாக **रमताम्**–விளையாடட்டும்.

ஒருசமயம் அமுதத்தைப்பெற தேவர்களும் அஸுரர்களும் மந்தரகிரியை மத்தாகவும் வாஸுகியைக் கயிறுகவும் வைத்துக்கொண்டு பாற்கடலைக் கடைந்தனர். அப்பொழுது அதிலிருந்து முதலில் கிளம்பிய காலகூடமென்ற விஷத்தை கண்டவுடனேயே உலகைப் படைத்த பிரஹ்மா, அதைக் காக்கும் பொறுப்புள்ள திருமால், தேவேந்திரன் முதலான தேவர்கள் அனைவரும் அச்சமடைந்து நாற்புறங்களிலும் ஓட ஆரம்பித்தனர். எங்கும் பரவி வரும் விஷஜ்வாலையால் துன்பமுற்றவர்களாய் மஹாதேவனைச் சரணமடைந்தனர். அவ்வாறு துயரமுற்றுத் தன்னைச் சரணடைந்த தேவர்களிடம் பரிவுகொண்ட பரமேச்வரன் அந்த ஹாலாஹல மென்ற விஷத்தைக் கையில் ஏந்தி அரைவிநாடியில் பருகி விட்டார். அவ்வாறு அவர் அவ்விஷத்தைப் பருகி தேவர்கள் அனைவரையும் காத்தருளினார்.

இவ்வாறு பற்பல தடவைகளில் ப்ரஹ்மாதி தேவர்களுக்கும், உலகம் முழுவதற்குமே ஏற்பட்ட பெரிய இன்னல்களைப் போக்கி பரமேசுவரன்தான் காப்பாற்றியிருக்கிறார். வேறு ஒருவராலும் நீக்க முடியவில்லை. அவருடைய ஸ்வரூபத்தை அவர் அருள் இல்லாவிட்டால் ப்ரஹ்மாதி தேவர்களும் அறிந்துகொள்ள முடியாது. பிரபஞ்சம் முழுவதும் அவர் சரீரம். இவ்வாறு தியானம் செய்தால் எல்லா நன்மைகளையும் பெறலாம். ஆனால் உபநிஷத்தில் கூறப்பட்ட

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பிரணவப் பொருளாயும் பிரபஞ்ச ஸம்பந்தமில்லாததும், மாயாதீதமானதும் துரீய சிவ ஸ்வரூபமானதுமான ஸச்சிதானந்தம்தான் அவருடைய உண்மை தத்வம். ஸாம்ப பரமேசுவரனை எப்பொழுதும் தியானம் செய்து வந்தால் அவர் அருளால் ஸச்சிதானந்த ஸ்வருபமாக ஆகி பேரானந்தத்தை யடையலாம். (10)

தசச்லோகீஸ்துதி முற்றிற்று.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ श्रीः ॥

श्रीशिवपादादिकेशान्तवर्णनस्तोत्रम् ॥

ஸ்ரீ சிவபாதாதிகேசாந்த வர்ணன ஸ்தோத்ரம்

[இந்தப் பதினைந்தாவது மலரில் முதலாவதாக 41 சுலோகங்கள் கொண்ட ஸ்ரீ சிவபாதாதி கேசாந்த வர்ணன ஸ்தோத்ரம் வெளியிடப்படுகிறது. பாதாதி கேசாந்த வர்ணனம் (திருவடிமுதல் கேசம்வரையிலுள்ள அவயவங்களின் வர்ணனை) என்ற பெயர் இதற்கு வழக்கத்தில் இருந்தபோதிலும் இவைமட்டுமல்லாமல் மஹேச்வரனுடைய வாஸஸ்தானமான மஹா கைலாஸம் முதல் கொண்டே வர்ணனத்தை ஆரம்பித்து கைலாஸம், பிநாகம் என்ற வில், குடாரம், த்ரிசூலம், மான், விருஷபம், கணேசர், ஸ்கந்தர், சாஸ்தா, பார்வதி, ப்ரமதகணங்கள், கிருஹம், ஸபை, பீடம், பாதம், நூபுரம், முழங்கால், துடை, நிதம்பம், இடை, ரோமாவளி, மார்பு, கைகள், கழுத்து, அதரம், மூக்கு, கண்கள், நெற்றி, கேசம், கிரீடம், சந்திரகலை, சாமரம் வீசும் சேடிகள், அப்ஸரோநர்த்தனம், நாரதவீணாகானம், மிருதங்கநாதம் இவ்வளவையும் வர்ணித்துவிட்டுக் கடைசியில் எல்லா உலகங்களிலும் உள்ள சிவபக்தர்களான எல்லா ஜீவர்களையும் வணங்குகிறார். நிறைந்த செல்வம், ஸபையில் கௌரவம், பூர்ணாயுஸ், சிவபதம் இத்தனையும் இதைப் படித்தால் கிடைக்குமெனக் கூறுகிறார்.]

கைலாஸ வர்ணனை :—

कल्याणं नो विधत्तां कटकतटलसत्कल्पवाटीनिकुञ्ज-
क्रीडासंसक्तविद्याधरनिकरवधूगीतरुद्रापदानः ।
तारैर्हेरम्बनादैस्तरलितनिनदत्तारकारातिकेकी
कैलासः शर्वनिर्वृत्यभिजनकपदः सर्वदा पर्वतेन्द्रः ॥ १ ॥

கல்யாணம் நோ விதத்தாம் கடகதடலஸத்கல்பவாடீநிகுஞ்ஜ
க்ரீடாஸம்ஸக்தவித்யாதரநிகரவதூகீதருத்ராபதாந: ।
தாரைர் ஹேரம்பநாதைஸ்தரளிதநிநதத்தாரகாராதிகேகீ
கைலாஸ: ஶர்வநிர்வ்ருத்யபிஜநகபத: ஸர்வதா பர்வதேந்த்ர: ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

कटकतट-தாழ்வரைகளில், लसत्-விளங்குகின்ற, कल्पवाटी-கல்பவிருக்ஷத்தோட்டத்திலுள்ள, निकुञ्ज-கொடிமண்டபத்தில், क्रीडा-விளையாடுவதில், संसक्त-நன்கு ஈடுபட்ட, विद्याधरनिकर-வித்யாதரகணங்களின், वधू-பெண்களால், गीत-பாடப்பட்ட, रुद्रापदानः - பரமேச்வரனுடைய வீரச் செயல்களையுடையதும், तारैः-உரத்ததான, हेरम्ब-விநாயகருடைய, नादैः-ஒலிகளால், तरलित-சஞ்சலமுள்ளதாக செய்யப்பட்டதும், निनदत् -சப்தத்தைச் செய்கின்றதுமான, तारकाराति-தாரகன் என்ற அசுரனுடைய பகைவனான ஸுப்ரமண்யப்பெருமானின், केकी-மயிலை உடையதும் शर्व-பரமேச்வரனுக்கு, निर्वृति-சந்தோஷத்தை, अभिजनक-உண்டு பண்ணுகின்ற, पदः-இடங்களையுடையதுமான, पर्वतेन्द्रः மலைகளுக்கெல்லாம் அதிபதியான, कैलासः-கைலயாங்கிரி, सर्वदा-எப்பொழுதும், नः-நமக்கு, कल्याणं-மங்களத்தை, विधत्ताम् -செய்யட்டும்.

கைலாஸமென்ற மலை மிகவும் புகழ்பெற்றது. அதன் தாழ்வரைகளில் வேண்டுபவர்களின் மனோரதத்தை நிறைவேற்றும் கல்பவிருக்ஷங்களின் தோட்டம் உள்ளது. அவைகளிடையே பற்பல சிறு செடி கொடிகளால் சூழப்பட்ட பல இடங்கள் உள்ளன. அவைகளின் நடுவில் வித்யாதரப் பெண்கள் விளையாடும்பொழுது பரமசிவனுடைய வீரச்செயல்களைப் பாடுகின்றனர். அவைகளைக் கேட்டு இன்புற்ற கணதிபன் உரக்க ஆரவாரம் செய்கின்றான்- அவனுடைய குரல் மேகத்தின் இடி முழக்கம்போல் ஒலிக்கின்றது. அதைக்கேட்ட முருகப்பெருமானின் மயில் மேகமே கர்ஜிக்கின்றதென்று எண்ணி உள்ளம் பூரித்துக் கே கா என்ற இன்னிசையை எழுப்புகின்றது. இவற்றால் அங்கு வசித்துவரும் பரம்பொருளாகிய சிவபெருமானுக்கு மட்டிலா மகிழ்ச்சி ஏற்படுகின்றது. இவ்வாறு விளங்கும் கைலாஸபர்வதம் நமக்கு மங்களத்தை அருளட்டும். (1)

பிநாகம் என்ற வில்: —

यस्य प्राहुः स्वरूपं सकलदिविषदां सारसर्वस्वयोगं
यस्येषुः शार्ङ्गधन्वा समजनि जगतां रक्षणे जागरूकः ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

मौर्वी दर्वीकराणामपि च परिवृढः पूस्त्रयी सा च लक्ष्यं
सोऽव्यादव्याजमस्मानशिवभिदनिशं नाकिनां श्रीपिनाकः ॥

யஸ்ய ப்ராஹு: ஸ்வரூபம் ஸகல திவிஷதாம் ஸார ஸர்வஸ்வ யோகம்
யஸ்யேஷு: ஶார்ங்க தன்வா ஸமஜனி
ஜகதாம் ரக்ஷணே ஜாகரூக: ।
மௌர்வீ தர்வீகராணமபி ச பரிப்ருட: பூஸ்த்ரயீ ஸா ச லக்ஷ்யம்
ஸோऽவ்யாதவ்யாஜமஸ்மானஶிவபிதனிஶம் நாகினாம் ஸ்ரீபினாக: ॥

यस्य–எதனுடைய, **स्वरूपं**–உருவத்தை, **सकल**–எல்லா, **दिविषदां**–விண்ணவர்களுடைய, **सारसर्वस्वयोगं**–சிறந்த பல மெல்லாம் சேர்ந்து அமைந்துள்ளதாக, **प्राहुः**–கூறுகின்றார் களோ, **जगतां**-உலகங்களை, **रक्षणे**-காப்பதில், **जागरूकः**-விழிப் புடன் இருக்கும், **शार्ङ्गधन्वा**–சார்ங்கம் என்ற வில்லையுடைய லக்ஷ்மீபதி, **यस्य**–எதற்கு, **इषुः**-அம்பாக, **समजनि**–ஆனாரோ, **अपि च**-மேலும், **दर्वीकराणां**-பாம்புகளுக்கு, **परिवृढः**–அரச னாகிய வாஸுகி, **मौर्वी**–(எதற்கு) நாண்கயிருக ஆனாரோ, **सा**–அப்பேர்ப்பட்ட (மிகுந்த பலமுள்ள), **पूस्त्रयी च**–முப்புர மும், **लक्ष्यं**–(எதற்கு) இலக்காக ஆயிற்றோ, **नाकिनां**–தேவர்களின், **अशिवभित्** – அமங்களத்தைப்போக்கும், **सः**–அந்த, **श्रीपिनाकः**–சிறந்த பினாகம் என்ற வில், **अव्याजं**–கபடமின்றி, **अस्मान्** – நம்மை, **अनिशं** – எப்பொழுதும், **अव्यात्** – காப்பாற்றட்டும்.

ஒருகாலத்தில் திரிபுரர்கள் என்ற அஸுரர்கள் எல்லா உலகங்களையும் வென்று தேவர்களுடைய பதவிகளையும் கைப் பற்றிக்கொண்டார்கள். மேலும் அவர்கள் பட்டிண வடிவம் கொண்டு பல இடங்களில் உட்கார்ந்து அவைகளை அழித்து வந்தார்கள். அப்பொழுது தேவர்கள் அனைவரும் பரமேச்வரனை அண்டித் தங்களுடைய குறைகளைத் தெரியப்படுத்தினர்கள். பரமசிவனும் அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி அவர்களை அழிக்கப் புறப்பட்டார். அப்பொழுது தேவர்கள் எல்லோரும் தங்கள் தங்களுடைய வலிமையையெல்லாம் யுத்த ஸாதனத்தின் பொருட்டுச் சிவபெருமானுக்கு அளித்தார்கள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அதுவே பிநாகம் என்ற புகழ்வாய்ந்த வில்லாக அமைந்தது. உலகங்களைக் காப்பதில் ஊக்கமுடைய மஹாவிஷ்ணுவே அதற்குப் பாணமாக விளங்கினார். பாம்புகளுக்குத் தலைவனான வாஸுகி ஞாண் கயிறாக ஆனான். மிகுந்த வலிமையுள்ள த்ரிபுரர்கள் அந்த வில்லுக்கு இலக்காக ஆனார்கள், இது எப்பொழுதும் தேவர்களின் துன்பங்களைப் போக்கடிக்கிறது. அவ்வாறு இருக்கும் அவ்வில் பரமசிவனுடைய கையில் விளங்கிக் கொண்டிருக்கிறது. அது நம்மிடம் இரக்கம்கொண்டு நம்முடைய துன்பங்களையும் களைந்து நம்மைக் காப்பாற்றட்டும். (2)

சிவனின் கோடாலி என்ற ஆயுதம் :—

आतङ्कावेगहारी सकलदिविषदामङ्घ्रिपद्माश्रयाणां
मातङ्गाद्युग्रदैत्यप्रकरतनुगलद्रक्तधाराक्तधारः ।
क्रूरः सूरायुतानामपि च परिभवं स्वीयभासा वितन्वन्
घोराकारः कुठारो दृढतरदुरिताख्याटवीं पाटयेन्नः ॥ ३ ॥

ஆதங்காவேக ஹாரீ ஸகல திவிஷதாமங்க்ரி பத்மாச்ரயாணாம்
மாதங்காத்யுக்ர தைத்ய ப்ரகர தனுகலத் ரக்த தாராக்த தார: ।
க்ரூர: ஸூராயுதானாமபி ச பரிபவம் ஸ்வீயபாஸா விதன்வன்
கோராகார: குடாரோ த்ருடதர துரிதாக்யாடவீம் பாடயேந்ந: ॥

अंघ्रिपद्माश्रयाणां–தாமரைபோன்ற தன்னுடைய திருவடியை அண்டியவர்களான, सकल–எல்லா, दिविषदां–தேவர்களுடையவும், आतङ्क–துன்பங்களையும், आवेग–கவலைகளையும், हारी–போக்குகின்றதும், मातङ्गादि-மாதங்கன் முதலிய, उग्र-கொடிய, दैत्यप्रकर–அஸுரர்களுடைய கூட்டத்தின், तनु-உடலிலிருந்து, गलत् –பெருகுகின்ற, रक्तधारा–இரத்தப்பெருக்கால், अक्त–பூசப்பட்ட, धारः–நுனியை உடையதும், क्रूरः–கொடியதும், स्वीयभासा–தன்னுடைய ஒளியால், सूरायुतानां अपि च-பதினாயிரம் சூர்யன்களுக்கும், परिभवं-அவமானத்தை वितन्वन् –செய்துகொண்டு घोराकारः–பயங்கரமான தோற்றத்தையுடையதுமான, कुठारः-கோடாலி, नः-நம்முடைய, दृढतर–மிகவும் அடர்த்தியான, दुरिताख्य–பாபம் என்ற பெயரை உடைய, अटवीं-காட்டை, पाटयेत् –வெட்டட்டும்,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிவபெருமானுடைய கையில் விளங்கும் கோடாலி அடிபணியும் விண்ணவர்களின் மனக் கவலைகளையும் துயரங்களையும் அகற்றி அவர்களைக் காத்தருள்கின்றது. அது மாதங்கன் முதலிய பல அரக்கர்களை வெட்டி அழித்திருக்கிறது, அதனுடைய கூர்மையான நுனி அவ்வரக்கர்களின் ரத்தப்பெருக்கால் பூசப்பட்டு சிவந்த ஒளியுடன் விளங்குகிறது அதனால் ஆயிரக்கணக்கான சூரியர்கள்கூட அதற்குச்சமமான காந்தியை அடைய முடியாது- அது தனது சிறந்த ஒளியால் அச்சூரியர்களையும் பழிக்கின்றது. பார்ப்பதற்குப் பயங்கரமாகத் தோன்றும் அக் கோடலி நம்முடைய பாபமாகிய அடர்ந்த காட்டை வெட்டி அழித்தருளட்டும். (3)

மூலம் :—

कालारातेः कराग्रे कृतवसतिरुरःशाणशातो रिपूणां
काले काले कुलाद्रिप्रवरतनयया कल्पितस्नेहलेपः ।
पायान्नः पावकार्चिःप्रसरसखमुखः पापहन्ता नितान्तं
शूलः श्रीपादसेवाभजनरसजुषां पालनैकान्तशीलः ॥ ४ ॥

காலாராதே: கராக்ரே க்ருத வஸதிருர:ஶாண ஶாதோ ரிபூணாம்
காலே காலே குலாத்ரிப்ரவர தனயயா கல்பித ஸ்நேஹ லேப: ।
பாயாந்ந: பாவகார்ச்சி:ப்ரஸர ஸகமுக: பாபஹந்தா நிதாந்தம்
ஶூல: ஸ்ரீபாத ஸேவா பஜந ரஸ ஜுஷாம் பாலனைகாந்த ஶீல: ॥

कालारातेः-யமனின் பகைவனான சிவபெருமானுடைய, **कराग्रे**-கையின் நுனியில், **कृतवसतिः**-செய்யப்பட்ட இருப்பிடத்தையுடையதும், **रिपूणां**-பகைவர்களுடைய, **उरःशाणशातः**-மார்பாகிற சாணைக்கல்லில் தீட்டப்பட்டதும், **काले काले**-அந்தந்த வேளைகளில், **कुलाद्रिप्रवरतनयया**-குல பர்வதங்களில் சிறந்த ஹிமவானின் பெண்ணாகிய பார்வதீதேவியால் **कल्पितस्नेहलेपः**-செய்யப்பட்ட எண்ணெயின் பூச்சையுடையதும், **पावकार्चिःप्रसरसखमुखः**-அக்னியின் ஜ்வாலைபோன்ற நுனியையுடையதும், **नितान्तं**-மிகவும், **पापहन्ता**-தீவினையை யழிப்பதும், **श्रीपाद**-சிவபெருமானுடைய திருவடிகளின், **सेवाभजन**-ஸேவையாகிய பக்தியின், **रस**-ரஸத்தை, **जुषां**-அனுபவிப்பவர்களுக்கு, **पालनैकान्त शीलः**-தவறாமல் காவல்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

புரியும் தன்மை வாய்ந்ததுமான, **शूलः**-சூலம் என்ற ஆயுதம் **नः**-நம்மை, **पायात्**-காத்தருளட்டும்.

உலகங்கள் அனைவற்றையும் காத்தருளும் தன்மைவாய்ந்த உத்தமனுன பரமசிவன் தன்னுடைய கையின் நுனியில் திரிசூலம் என்ற ஆயுதத்தைத் தாங்கி நிற்கின்ருன். அது பகைவர்களுடைய மார்பாகிய சாணைக்கல்லில் தீட்டப்பட்டு மிகுந்த பதத்தைப்பெற்று விளங்குகின்றது. அது துருப்பிடித்து மழுங்கிப் போகாமல் இருப்பதற்காக மலையரசனின் திருமகளாகிய பார்வதியம்மையார் அதற்கு அடிக்கடி எண்ணை பூசிவருகின்ருள். அதன் நுனி மிகவும் நீளமாயும் கூர்மையாயும் அமைந்துள்ளது. அதனுல் அது கொழுந்துவிட்டு எரியும் அக்னியின் நீண்டு வளர்ந்து வீசும் ஜ்வாலைபோல் விளங்குகின்றது. அது தன்னை யண்டிய அன்பர்களின் தீவினைகளைக் களைந்து அவர்களைப் பரிசுத்தர்களாகச் செய்கின்றது. மேலும் அது சிவபெருமானின் திருவடிகளைச் சேவித்து பக்தியெனும் இனிய ரஸத்தைப் பருகி ஆனந்த வெள்ளத்தில் ஆழ்ந்திருக்கும் பக்தர்களைக் காத்தருளும் தன்மை வாய்ந்தது. அவ்வாறு விளங்கும் திரிசூலம் நம்மைக் காத்தருளவேண்டும். (4)

மான் :—

देवस्याङ्काश्रयायाः कुलगिरिदुहितुर्नेत्रकोणप्रचार-
प्रस्तारानत्युदारान्पिपठिषुरिव यो नित्यमत्यादरेण ।
आधत्ते भङ्गितुङ्गैरनिशमवयवैरन्तरङ्गं समोदं
सोमापीडस्य सोऽयं प्रदिशतु कुशलं पाणिरङ्गः कुरङ्गः ॥

தேவஸ்யாங்காச்ரயாயா: குலகிரி துஹிதுர்
நேத்ர கோண ப்ரசார-
ப்ரஸ்தாரானத்யுதாரான் பிபடிஷுரிவ யோ நித்யமத்யாதரேண ।
ஆதத்தே பங்கி துங்கைரநிசமவயவைரந்தரங்கம் ஸமோதம்
ஸோமாபீடஸ்ய ஸோऽயம் ப்ரதிசது குசலம்
பாணிரங்க: குரங்க: ॥

यः-எந்த மான், **देवस्य**-பரமசிவனுடைய, **अङ्काश्रयायाः**-மடியை அடைந்திருக்கின்ற, **कुलगिरिदुहितुः**-குலபர்வதமான ஹிமவானின் பெண்ணுன பார்வதீதேவியினுடைய, **अत्युदारान्**-மிகச்சிறந்த, **नेत्रकोण**-கடைக்கண்ணின், **प्रचार-प्रस्तारान्**-ஸஞ்சார வரிசைகளை, **अत्यादरेण**-மிகுந்த ஆதர

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வுடன், नित्यं-எப்பொழுதும், पिपठिषुः इव-கற்றுக்கொள்ள விரும்பியதுபோல, भङ्गितुङ्गैः-வளைவுகளால் உயர்ந்த, अवयवैः-உறுப்புக்களால், सोमापीडस्य-சந்திரனை அணிகலமாகப் பெற்ற பரமேச்வரனுடைய, अन्तरङ्गं-மனதை, अनिशं-எப்பொழுதும், समोदं-மகிழ்வுடன் கூடியதாக, आधत्ते-செய்கின்றதோ, सः अयं-அப்படிப்பட்ட இந்த, पाणिरङ्गः-சிவபெருமானின் கையையே நாட்டியமேடையாகக்கொண்ட, कुरङ्गः-மான், कुशलं-க்ஷேமத்தை, प्रदिशतु-கொடுக்கட்டும்.

பரமேச்வரன் தன்னுடைய கையில் ஒரு அழகிய மானை ஏந்தி வைத்துக்கொண்டிருக்கின்றார். அவருடைய சடைகளை அவருடைய தலையில் விளங்கும் மதி அலங்கரித்துக்கொண்டிருக்கின்றது. அவருடைய மடியில் அன்னை பார்வதீதேவி அமர்ந்து கொண்டு தன்னுடைய கடைக்கண் பார்வைகளின் விலாஸங்களால் உலகங்கள் எல்லாவற்றையும் உய்வித்துக்கொண்டிருக்கிறாள். அவ்வன்னையின் கடாக்ஷவீக்ஷணங்கள் பக்தர்களுக்கு அநுக்ரஹம்செய்து அவர்களை ஆனந்தஸாகரத்தில் மூழ்கச் செய்வதில் முனைந்துள்ளன. அவ்வழகிய கடைக்கண் பார்வையிலுள்ள ஸஞ்சார வரிசைகளைக் கண்ட சிவபெருமான் கையில் திகழும் மான் அவைகளைத் தானும் கற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆவல் கொண்டதுபோலத் தன்னுடைய அங்கங்களைப் பலவாறாக வளைத்துக்கொண்டு பரமசிவனுக்கு மிகுந்த ஆனந்தத்தையளித்துக்கொண்டு விளங்குகின்றது. பரமேச்வரன் கையிலுள்ள அம்மான் அவ்வாறு தனது அங்கங்களை வளைப்பதால் அது பரமேச்வரனுடைய உள்ளங்கையாகிய அரங்கில் நடனம்புரிவதுபோல் காட்சியளிக்கிறது. அவ்வாறு அது நடனமாடும் ஆனந்தக்கூத்தனுக்கே ஆனந்தமளித்துக் கொண்டிருப்பதால் மிகச் சிறப்புடன் தோற்றமளிக்கிறது. அப்படிப்பட்ட அம்மான் நமக்கு நலன்களையளித்து நம்மைக் காத்தருளட்டும். (5)

விருஷபம் :—

कण्ठप्रान्तावसज्जत्कनकमयमहाघण्टिकाघोरघोषैः
कण्ठारावैरकुण्ठैरपि भरितजगच्चक्रवालान्तरालः ।
चण्डः प्रोद्दण्डशृङ्गः ककुदकवलितोत्तुङ्गकैलासशृङ्गः
कण्ठेकालस्य वाहः शमयतु शमलं शाश्वतः शाक्वरेन्द्रः ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கண்ட ப்ராந்தாவஸஜ்ஜத் கனகமய மஹாகண்டிகா கோர
கோஷை:
கண்டாராவைரகுண்டைரபி பரித ஜகச்சக்ரவாளாந்தராள: ।
சண்ட: ப்ரோத்தண்ட ச்ருங்க: ககுத கபலிதோத்துங்க
கைலாஸ ச்ருங்க:
கண்டேகாலஸ்ய வாஹ: ஶமயது ஶமலம் ஶாச்வத:
ஶாக்வரேந்த்ர: ॥

कण्ठ–கழுத்தின், प्रान्त–ஓரத்தில், अवसज्जत्–சேர்ந்திருக்கிற, कनकमय–தங்கத்தாலான, महा–பெரிய, घण्टिका–மணியினுடைய, घोर–பயங்கரமான, घोषैः–முழக்கங்களாலும், अकुण्ठैः–மழுங்காத (மிகுந்த ஒலியுடன்கூடிய), कण्ठारावैः अपि–ஹம்பா என்ற கோஷங்களாலும், भरित–நிரப்பப்பட்ட, जगच्चक्रवाल – உலகமாகிய சக்கிரத்தின், अन्तरालः – இடைவெளிகளையுடையதும், चण्डः–மிகவும் பயங்கரமானதும், प्रोद्दण्ड–மிகவும் உயரமான, शृङ्गः–கொம்புகளையுடையதும், ककुद–(தன்னுடைய) திமிழால், कबलित–விழுங்கப்பட்ட, उत्तुङ्ग–மிகவும் உயரமான, कैलास–கைலயங்கிரியினுடைய, शृङ्गः–உச்சியையுடையதுமான, कण्ठेकालस्य–நீல நிறமுள்ள கழுத்தையுடைய பரமேச்வரனுடைய, वाहः–வாஹனமான, शाश्वतः–அழிவற்ற, शाक्वरेन्द्रः–விருஷபராஜன், शमलं–பாபத்தை, शमयतु–போக்கட்டும்.

பரமேச்வரனுடைய வாஹனம் அமரத்வம் வாய்ந்த சிறந்த விருஷபம். அதனுடைய கழுத்தில் மிகப் பெரிய தங்கமணி ஒன்று கட்டித் தொங்கவிடப்பட்டுள்ளது. அந்தக்காளை தனது தலைவனான கைலயம்பதியைக் கண்டவுடன் உரத்த குரலில் ஹம்பா என்று கத்துகின்றது. அப்பொழுது அதன் கழுத்தில் தொங்கும் அம்மணியும் பயங்கரமான நாதத்தை எழுப்புகின்றது. அவ்வாறு கிளம்பும் பயங்கரநாதம் அண்டசராசரங்கள் அனைவற்றையும் நிரப்பிவிடுகின்றது. அவ்வாறு உரக்கக் கத்தும் பொழுது அது மிகவும் பயங்கரமாகக் காணப்படுகின்றது. அதன் இரு கொம்புகளும் நீண்டு உயர்ந்திருப்பதால் அவைகள் பார்ப்பவர்களுக்கு அச்சத்தை உண்டுபண்ணுகின்றன. மேலும் அக்காளை வெள்ளிமலைபோன்ற மேனியை உடையதாக விளங்குகின்றது. அதனுடைய திமிழ் கைலாஸத்தின் சிகரத்தையே

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஜயித்துவிட்டதுபோல் உயர்ந்து தோன்றுகின்றது. அவ்வாறு சிறப்புற்றிருப்பதாலேயே ஹாலாஹல விஷத்தைப் பருகியதால் நீலமயமான கழுத்தையுடைய பரமேச்வரன் அதையே தன்னுடைய வாஹனமாக ஏற்றுக்கொண்டுவிட்டான் என்று தோன்றுகின்றது. அவ்வாறு விளங்கும் விருஷபராஜன் நம் தீவினைகளைக் களைந்து நம்மைக் காத்தருளவேண்டும்.

குறிப்பு :—சிவபெருமான் வசிக்கும் இடம் கைலயங்கிரி. அது வெண்மையானது. வெள்ளியினுல் ஆனது. சிவபெருமானுடைய வாஹனம் விருஷபம். அதுவும் வெளுப்பானது, கைலயங்கிரி தனது சிகரத்தால் உயர்ந்து விளங்குகிறது. விருஷபமோவெனில் தனது அழகிய திமிழால் அச்சிகரத்தையே ஜயித்துவிடுகின்றது. அதனுல் அவ்விருஷபம் பலத்த கோஷத்தைச் செய்கின்றது. அதன் கழுத்திலுள்ள மணியும் அதையனுசரித்து உத்கோஷிக்கின்றது. இந்த வெற்றி நாதம் உலகம் முழுவதும் பரவி நிற்கின்றது. இவ்வாறு உத்கோஷம் செய்யும் விருஷபம் நம்முடைய தீவினை என்ற அரக்கனையும் கொன்று இருமடங்காக வெற்றி பெறவேண்டும். (6)

விநாயகர் :—

निर्यद्दानाम्बुधारापरिमलतरलीभूतरोलम्बपाली-
झङ्कारैः शङ्कराद्रेः शिखरशतदरीः पूरयन्भूरिघोषैः ।
शार्वः सौवर्णशैलप्रतिमपृथुवपुः सर्वविघ्नापहर्ता
शर्वाण्याः पूर्वसूनुः स भवतु भवतां स्वस्तिदो हस्तिवक्त्रः ॥

நிர்யத் தானம்புதாரா பரிமல தரளீபூத ரோலம்பபாலீ
ஜங்காரை: ஶங்கராத்ரே: ஶிகர ஶததரீ: பூரயன் பூரிகோஷை: ।
ஶார்வ: ஸௌவர்ண ஶைல ப்ரதிம ப்ருது வபு:
ஸர்வ விக்னுபஹர்த்தா
ஶர்வாண்யா: பூர்வ ஸூநு: ஸ பவது பவதாம் ஸ்வஸ்திதோ
ஹஸ்தி வக்த்ர: ॥

निर्यत्-வெளிக்கிளம்புகின்ற, **दानाम्बु**-மதஜலத்தினுடைய, **धारा**-பெருக்கின், **परिमल**-வாஸனையால், **तरली-भूत**-சஞ்சலமடைந்த, **रोलम्बपाली**-வண்டுகளின் வரிசையின்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

झङ्कारैः–ஜம் என்ற ஒலிகளாலும், **भूरि**-மிகுந்த, **घोषैः**-வீரிடுதல்களாலும், **शङ्कराद्रेः**–பரமேச்வரனுடைய மலையாகிய கைலாஸத்தின், **शिखर**–உச்சியிலுள்ள, **शत**–நூற்றுக்கணக்கான, **दरीः**–குகைகளை, **पूरयन्**–நிரப்புகிறவராயும், **शार्वेः**–பரமேச்வரனுடைய குமாரனுயும், **सौवर्णशैल**-தங்கமயமான மேருமலைக்கு **प्रतिम**–ஒப்பான, **पृथु**–பருமனுன, **वपुः**–உடலையுடையவரும், **सर्व**-எல்லா, **विघ्न**–இடையூறுகளையும், **अपहर्ता**–போக்குகின்றவரும், **शर्वाण्याः**–பார்வதீ தேவியினுடைய, **पूर्वसूनुः**-முதற் பிள்ளையுமான, **सः**–அந்த, **हस्तिवक्त्रः**–யானைமுகத்தோன், **भवतां**–உங்களுக்கு, **स्वस्तिदः**–நலனையளிப்பவராக, **भवतु**–இருக்கட்டும்.

கையிலயம்பதியின் அருகில் அவரது திருக்குமாரனுன கணபதியும் வீற்றிருக்கின்ருர். அவர் யானை முகத்தையுடையவர். அதனுல் அவரது கன்னங்களிலிருந்து நறுமணம் வாய்ந்த மதஜலம் பெருகிக்கொண்டிருக்கிறது. அதனுல் இழுக்கப்பட்ட வண்டினங்கள் ரீங்காரத்துடன் அவரது முகத்தை வட்டமிடத் தொடங்குகின்றன. அதனுல் அவர் வீரிட்டெழுகின்ருர். அந்த நாதம் கையிலயங்கிரியின் நூற்றுக்கணக்கான குகைகளில் எதிரொலிக்கின்றது. மேலும் அவர் மாசற்ற பொன்போன்ற பெரிய மேனிபடைத்தவர். இன்னல்கள் அனைவற்றையும் அகற்றும் ஆற்றல் பெற்றவர். பார்வதீ தேவியின் மூத்த மகன். இவ்வாறு சிறப்புற்று விளங்கும் யானைமுகத்தோன் நம் துயரத்தைத் தணித்து நமக்குப்பல நன்மைகளையும் ஈந்து நம்மைக் காத்தருள்வாராக. (7)

ஸுப்ரஹ்மண்யர் :—

यः पुण्यैर्देवतानां समजनि शिवयोः श्लाघ्यवीर्यैकमत्या-
यन्नाम्नि श्रूयमाणे दितिजभटघटाः भीतिभारं भजन्ते ।
भूयात्सोऽयं विभूत्यै निशितशरशिखापाटितक्रौञ्चशैलः
संसारागाधकूपोदरपतितसमुत्तारकस्तारकारिः ॥ ८ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யः புண்யைர் தேவதாநாம் ஸமஜநி ஶிவயோ:
ஶ்லாக்ய வீர்யைகமத்யாத்
யந்நாம்நி ஶ்ரூயமாணே திதிஜ படகடா பீதிபாரம் பஜந்தே ।
பூயாத் ஸோऽயம் விபூத்யை நிஶித ஶர ஶிகா
பாடித க்ரௌஞ்ச ஶைல:
ஸம்ஸாராகாத கூபோதர பதித ஸமுத்தாரகஸ் தாரகாரி: ॥

यः–எந்த ஸ்கந்தன், देवतानां–தேவதைகளுடைய, पुण्यैः–புண்யங்களால், शिवयोः–பார்வதீ பரமேச்வரர்களுடைய, श्लाघ्य–புகழத்தக்க, वीर्य–வீர்யங்களின், ऐकमत्यात्–ஒன்று சேர்ந்ததால், समजनि–பிறந்தானே, यन्नाम्नि श्रूयमाणे–எவனுடைய பெயர் கேட்கப்படும்பொழுது, दितिजभटघटाः–திதியின் பிள்ளைகளான அசுர வீரர்களின் கூட்டங்கள், भीति-भारं–மிகுந்த பயத்தை, भजन्ते–அடைகின்றனவோ, निशित–கூர்மையான शर–அம்புகளின் शिखा–நுனியால் पाटित–பிளக்கப்பட்ட क्रौञ्चशैलः–க்ரௌஞ்சம் என்ற மலையையுடையவராயும் संसार–ஸம்ஸாரமாகிய अगाध–ஆழமான कूप–கிணற்றின் उदर–நடுவில் पतित–விழுந்தவர்களை समुत्तारकः–கரையேற்றுபவராயும் உள்ள सः अयं–அப்படிப்பட்ட இந்த तारकारिः–தாரகனுடைய பகைவனான ஸ்கந்தன் विभूत्यै–சிறந்த செல்வத்திற்காக भूयात्– இருக்கட்டும்.

முன்பு தாரகன் என்ற ஒரு அரக்கன் தேவர்களைப் போரில் வென்று அவர்களுக்கு அளவுகடந்த இன்னல்களை விளைவித்துக் கொண்டிருந்தான். அத்தேவர்களின் புண்ய பலத்தால் லோக மாதாவான பார்வதீ தேவிக்கும் தந்தையான பரமேச்வரனுக்கும் ஸ்கந்தன் என்ற பிரஸித்தி வாய்ந்த திருக்குமாரன் பிறந்தான். அவன் தன்னுடைய கூர்மையான பாணங்களைக்கொண்டு க்ரௌஞ்சம் என்ற மலையைப் பிளந்து பரசுராமனுக்குத் தன்னுடைய திறமையைக்காண்பித்தான். அவனுடைய பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே அசுரர்கள் அனைவரும் அஞ்சி நடுங்கினர். ஞானக்கடவுளாக இருப்பதால் அவன் ஸம்ஸாரமென்ற ஆழமான கிணற்றில் வீழ்ந்து தவிக்கின்றவர்களைக் கரையேற்றுகின்றான். தாரகனைக்கொன்று தேவர்களின் இன்னல்களைக் களைந்த அந்த முருகப்பெருமான் நமக்குச் சிறந்த செல்வத்தைத் தந்து நம்மைக் காத்தருள்வாராக. (8)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சாஸ்தா :—

आरूढः प्रौढवेगप्रविजितपवनं तुङ्गतुङ्गं तुरङ्गं
चेलं नीलं वसानः करतलविलसत्काण्डकोदण्डदण्डः ।
रागद्वेषादिनानाविधमृगपटलीभीतिकृद्भूतभर्ता
कुर्वन्नाखेटलीलां परिलसतु मनःकानने मामकीने ॥ ९ ॥

ஆரூட: ப்ரௌட வேக ப்ரவிஜித பவனம் துங்க துங்கம் துரங்கம்
சேலம் நீலம் வஸாந: கரதல விலஸத் காண்ட கோதண்ட தண்ட: ।
ராக த்வேஷாதி நாநாவித ம்ருக படலீ-பீதிக்ருத் பூத பர்த்தா
குர்வந்நாகேட லீலாம் பரிலஸது மன: கானனே மாமகீனே ॥

प्रौढवेग—அதிகமான வேகத்தினுல் प्रविजितपवनं— தோற்கடிக்கப்பட்ட வாயுவை உடையதும் तुङ्गतुङ्गं—மிகவும் உயரமானதுமான तुरङ्गं—குதிரையின்மேல் आरूढः—ஏறிக்கொண்டிருப்பவனுகவும் नीलं— நீல நிறமுள்ள चेलं—ஆடையை वसानः—அணிந்துகொண்டிருப்பவனுகவும் करतल—கையில் विलसत्—விளங்குகின்ற काण्ड—அம்பையும் कोदण्ड—வில்லின் दण्डः—தண்டத்தையுமுடையவனுகவும் भूतभर्ता—பூதகணங்களுக்குத் தலைவனுகவும் உள்ள ஹரிஹரபுத்ரன் मामकीने—என்னுடையதான मनःकानने—மனமாகிய காட்டில் राग—ஆசை द्वेष—வெறுப்பு आदि—முதலிய नानाविध—பலவிதமான मृग—விலங்குகளுடைய पटली—கூட்டத்திற்கு भीतिकृत्— பயத்தைச் செய்கின்றவனுக आखेटलीलां— வேட்டையாகிய விளையாட்டை कुर्वन्-செய்துகொண்டு परिलसतु—விளங்கட்டும்.

ஹரிஹரபுத்திரன் கறுப்பான ஆடைகளை அணிந்து காற்றைக் காட்டிலும் வேகமாகச் செல்லக்கூடிய உயர்ந்த குதிரையில் ஏறிக்கொண்டு வேட்டைக்காகப் புறப்படுகிருன். அப்பொழுது பூதகணங்கள் அவனைப் புடைசூழ்ந்து செல்கின்றன. அவனுடைய கையில் நீண்ட தண்டம்போன்ற கோதண்டமும் அம்பும் விளங்கிக்கொண்டிருக்கின்றன. அவ்வாறு காக்ஷியளிக்கும் அக்குமாரன் என்னுடைய மனமாகிய காட்டில் புகுந்து அங்கு சஞ்சரிக்கும் ஆசை, வெறுப்பு முதலிய கொடிய விலங்கினங்களை எப்பொழுதும் வேட்டையாடிக்கொண்டிருக்கட்டும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இங்கு விஷ்ணு சிவன் என்ற இரு தேவர்களுக்கும் பிறந்து சாஸ்தா என்று பிரஸித்திபெற்று விளங்கும் திருக்குமாரனை ஒரு வேடனாக உருவகப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. வேடராஜன் கருப்பாடையணிந்து உயர்ந்த குதிரையின்மேல் ஏறிக்கொண்டு கரத்தில் வில்லும் அம்பும் ஏந்தி கானகத்திற்குள் புகுந்து கொடிய விலங்குகளைக் கொல்கிறான். அவனை அவனது வீரர்கள் பின்பற்றிச் செல்கின்றனர். அதுபோலவே இக்கடவுளும் விளங்குகிறார். (9)

(அ) இரு சுலோகங்களால் பார்வதியை வர்ணிக்கிறார்:—

अम्भोजाभ्यां च रम्भारथचरणलताद्वन्द्वकुम्भीन्द्रकुम्भै-
बिंबेनेन्दोश्च कम्बोरुपरि विलसता विद्रुमेणोत्पलाभ्याम् ।
अंभोदेनापि संभावितमुपजनिताडम्बरं शंबरारेः
शंभोः संभोगयोग्यं किमपि धनमिदं संभवेत्संपदे नः ॥

அம்போஜாப்யாம் ச ரம்பா ரதசரண லதா த்வந்த்வ
கும்பீந்த்ர கும்பை:
பிம்பேநேந்தோச்ச கம்போருபரி விலஸதா
வித்ருமேணோத்பலாப்யாம் ।
அம்போதேனாபி ஸம்பாவிதமுப ஜனிதாடம்பரம் ஶம்பராரே:
ஶம்போ: ஸம்போக யோக்யம் கிமபி தனமிதம் ஸம்பவேத்
ஸம்பதே ந: ॥ 10

अम्भोजाभ्यां-இரண்டு தாமரைகளாலும், **रम्भा**-வாழை, **रथचरण**-தேரின் சக்கரம், **लता**-கொடி, **द्वन्द्वकुम्भीन्द्र**-சிறந்த யானையின், **कुम्भैश्च**-இரு மஸ்தகங்கள் இவைகளாலும், **इन्दोः** – சந்திரனுடைய, **बिम्बेन च**-பிம்பத்தாலும், **कम्बोः**– சங்கினுடைய, **उपरि**–மேலே, **विलसता**-விளங்குகின்ற, **विद्रुमेण**-பவழத்தாலும், **उत्पलाभ्यां**-இரண்டு அல்லிப் புஷ்பங்களாலும், **अम्भोदेन अपि**-மேகத்தாலும், **संभावितं**-மிகச் சிறந்ததாகக் கருதப்பட்டதும், **शंबरारेः** – மன்மதனுக்கு, **उपजनिताडम्बरं**-கர்வத்தை உண்டுபண்ணக்கூடியதும், **शंभोः** – பரமசிவனுக்கு, **संभोगयोग्यं** – அனுபவிக்கத்தக்கதுமான, **किमपि**-வர்ணிக்கமுடியாத, **इदं धनं**-இந்தச் செல்வம்,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

नः-நமக்கு, **संपदे**-ஐசுவர்யத்தின் பொருட்டு, **संभवेत्**-இருக்கட்டும்.

இந்த சுலோகத்தில் பார்வதீ தேவியின் ஸௌந்தர்யத்தை மிக்க அழகான ரீதியில் வர்ணிக்கிறார். கவிகள் நாரீமணிகளை வர்ணிக்கும்பொழுது ஒவ்வொரு அவயவத்திற்கும் ஒவ்வொன்றை உபமானமாகக் கூறுவார்கள். அதாவது: தாமரை போன்ற பாதங்கள், வாழை போன்ற துடைகள், தேர்ச்சக்கரம் போன்ற இடுப்பு, கொடி போன்ற ரோமாவளி, யானையின் மஸ்தகம் போன்ற ஸ்தனங்கள், சந்திரபிம்பம் போன்ற வதனம், சங்கம் போன்ற கண்டம், சங்கத்தின் மேல் பவழம் தொங்குவதுபோல் சிவந்த அதரம். நீலோத்பலம் போன்ற கூந்தல் இவ்விதமாகத் தான் வர்ணிப்பது வழக்கம், இதன்மூலம் அப்பெண்மணி மிகச் சிறந்த அழகுள்ளவள் என்பதைக் காட்டுவார்கள். இவ்வாறு பார்வதியின் அங்கங்களை வர்ணிப்பதில் ஆசார்யாளுக்கு இஷ்ட மில்லை. ஏனெனில் உபமேயத்தைவிட உபமானம் சிறந்தது என்பதுதான் யாவரும் ஒப்புக்கொண்ட உண்மை. ஆகையால் பார்வதியின் அங்கங்கள் அழகுள்ளவை என்று காட்டப்பட்ட போதிலும் உபமானமாகக் கூறப்பட்ட தாமரை முதலியவைகள் பார்வதியின் அங்கங்களைவிடச் சிறந்தவை என்பதும் தானாகவே கிடைத்துவிடும் இதற்காக தாமரை முதலியவைகளை இங்கு உபமானமாகக் கூறாமல் கவிகள் உபமானமாகக் கூறும் தாமரை முதலியவைகள் பார்வதியின் அங்க லாவண்யத்தைப் பார்த்து "நாங்கள் உபமானமாயிருக்கத் தகுதியற்றவர்கள். எங்கள் அழகைவிட பார்வதியின் அங்கம் கோடி மடங்கு அழகு பொருந்தியது" என்று கூறி பார்வதியைப் போற்றுகின்றன வாம். இதிலிருந்து பார்வதியின் அங்க லாவண்யம் வாக்குக்கு எட்டாதது என்று கிடைக்கிறது. இந்த அழகைப் பார்த்து 'பரமசிவனையும் ஜயிப்பேன்' என்று மன்மதன் கர்வம்கொள்ளு கிறான். இந்த அழகுச்செல்வம் பரமசிவன் ஒருவனுக்கே உரியது. பரமசிவனுக்கு எல்லாச் செல்வமும் இவள்தான். இவளால்தான் பரமசிவன் ஈச்வரனாக ஆகிறார். பரமசிவனுடைய செல்வமான பார்வதி நமக்கு ஐசுவர்யத்தையளிக்கட்டும். *(10)*

वेणीसौभाग्यविस्मापिततपनसुताचारुवेणीविलासा-
न्वाणीनिर्धूतवाणीकरतलविधृतोदारवीणाविरावान् ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

एणीनेत्रान्तभङ्गीनिरसननिपुणापाङ्गकोणानुपासे
शोणान्प्राणानुदूढप्रतिनवसुषमाकन्दलानिन्दुमौलेः ॥

வேணீ ஸௌபாக்ய விஸ்மாபித தபனஸுதா சாருவேணீ
விலாஸான்
வாணீ நிர்தூத வாணீ கரதல வித்ருதோதார வீணு விராவான் ।
ஏணீ நேத்ராந்த பங்கீ நிரஸன நிபுணபாங்க கோணனுபாஸே
ஶோணன் ப்ராணனுதூட ப்ரதிநவ ஸுஷமா
கந்தலானிந்துமௌளே: ॥

वेणी - கூந்தலின், **सौभाग्य** - அழகால், **विस्मापित**- வியக்கும்படி செய்யப்பட்ட, **तपनसुता** - ஸூர்யனுடைய பெண்ணுன யமுனையின், **चारु** - மனேஹரமான, **वेणी-विलासान्**-பிரவாஹங்களின் விலாஸங்களையுடையவைகளும் **वाणी**-பேச்சினுல், **निर्धूत**-உதறித்தள்ளப்பட்ட, **वाणी**- ஸரஸ்வதி தேவியின் **करतल**-கையில், **विधृत**-தாங்கப்பட்ட, **उदार**-சிறந்த, **वीणा** - வீணையின், **विरावान्**-நாதங்களை யுடையவைகளும், **एणी** - பெண்மானின், **नेत्रान्त** - கண் ஓரங்களின், **भङ्गी**-கோணல்களை, **निरसन**-விரட்டுவதில், **निपुण**-தேர்ச்சிபெற்ற, **अपाङ्गकोणान्**-கடைக்கண் பார்வைகளை உடையவைகளும், **शोणान्**-சிவந்தவைகளும், **उदूढ-प्रतिनवसुषमाकन्दलान्**-புதிது புதிதாக முளைவிடும் அழகைத் தாங்கிக்கொண்டுள்ளதுமான, **इन्दुमौलेः**-பரமசிவனுடைய, **प्राणान्**-ப்ராணன்களை (ப்ராணனுக விளங்கும் பார்வதீ தேவியை) **उपासे**-உபாஸிக்கிறேன்.

பார்வதீதேவியின் கூந்தல்கள் கருத்து நீண்டவைகள். அவைகள் யமுனு நதியின் பிரவாஹத்தைக் காட்டிலும் மிகுந்த அழகுவாய்ந்தவைகள். ஆதலால் அவைகளைக்கண்டு யமுனையின் இருண்ட பிரவாஹங்களே வியப்படைகின்றன. மேலும் அவளுடைய பேச்சில் உள்ள இயற்கையான இனிமை எல்லோரையும் மகிழ்விக்கின்றது. அது வாக்தேவியின் வீணையில் எழும் இனிய நாதத்தையும் புறக்கணிக்கும் தன்மைவாய்ந்தது. அவளுடைய மனேஹரமான கடைக்கண் பார்வைகள் பெண் மானின் மிரண்ட பார்வைகளையும் தோற்கச் செய்கின்றன. அவளுடைய அழகு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஒவ்வொரு விநாடியும் புதிது புதிதாக மிளிர்கின்றது. அவள் செந்நிறம் பொருந்திய மேனியுடையவளாகக் காணப்படுகிருள். அவளே பரமசிவனுடைய பிராணன். அத்தகைய பார்வதீ தேவியை நான் உபாஸிக்கிறேன். (11)

ப்ரமதகணங்கள்:—

नृत्तारंभेषु हस्ताहतमुरजधिमिद्धिंकृतैरत्युदारै-
श्चित्तानन्दं विधत्ते सदसि भगवतः सन्ततं यः स नन्दी ।
चण्डीशाद्यास्तथाऽन्ये चतुरगुणगणप्रीणितस्वामिसत्का-
रोत्कर्षोद्यत्प्रसादाः प्रमथपरिवृढाः पान्तु संतोषिणो नः ॥

ந்ருத்தாரம்பேஷு ஹஸ்தாஹத முரஜ திமித்திம் க்ருதை ரத்யுதாரை:
சித்தாநந்தம் விதத்தே ஸதஸி பகவத: ஸந்ததம் ய: ஸ நந்தீ ।
சண்டீசாத்யாஸ்ததாऽன்யே சதுர குண கண ப்ரீணித ஸ்வாமி ஸத்கா
ரோத்கர்ஷோத்யத் ப்ரஸாதா: ப்ரமத பரிவ்ருடா: பாந்து ஸந்தோஷிணோ ந: 12

य:-எவர், सदसि-ஸபையில், नृत्तारंभेषु-நர்த்தனம் செய்யும் சமயங்களில், अत्युदारै:-மிகவும் புகழத்தகுந்த, हस्त-கைகளால், आहत-அடிக்கப்பட்ட, मुरज-மிருதங்க வாத்தியத்தினுடைய, धिमिद्धिंकृतै:-திமிதிம் என்ற ஒலிகளால், सन्ततं-எப்பொழுதும், भगवत:-பகவானுக்கு, चित्तानन्दं-மனதிற்கு மகிழ்ச்சியை, विधत्ते-செய்கின்ருரோ, स:-அந்த, नन्दी-நந்திகேச்வரரும், तथा-அப்படியே, चतुर-சாமர்த்யமான, गुणगण-குணங்களின் கூட்டங்களால், प्रीणित-சந்தோஷப்படுத்தப்பட்ட, स्वामि-யஜமானுடைய, सत्कारोत्कर्ष-சிறந்த மரியாதையால், उद्यत्प्रसादा:-கிளம்பிய அனுக்ரஹங்களையுடையவர்களாயும், सन्तोषिण:-மட்டிலா ஆனந்தமுடையவர்களாயும், திகழ்கின்ற अन्ये-மற்ற, चण्डीशाद्या:-சண்டீசன் முதலிய, प्रमथपरिवृढा:-பிரமதகணங்களின் தலைவர்களும், न:-நம்மை, पान्तु-காப்பாற்றட்டும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிவபெருமான் நடனமாடுவதில் பிரியமுடையவர். அவர் நடனமாடும் ஸமயங்களிலெல்லாம் அவரது மெய்க்காப்பாளனை நந்திகேச்வரர் மத்தள வாத்யத்தையெடுத்து தனது இரு கரங்களாலும் அதைத் தட்டுகிறார். அப்பொழுது திம் திம் என்ற ஒலிகள் கிளம்புகின்றன. அச்சப்தங்களைக்கேட்டுப் பரமசிவன் மிகுந்த சந்தோஷத்தையடைகிறார். சண்டீசன் முதலிய சிவகணங்களுடைய தலைவர்களும் தங்கள் தங்களுடைய சிறந்த குணங்களால் சிவபெருமானைப் போற்றி வழிபடுகின்றனர். அதனால் திருப்தியடையும் பரமேச்வரன் அவர்களுக்கு அனுக்ரஹம் செய்கிறார். அதனால் அச்சிவகணத்தலைவர்கள் அழிவற்ற ஆனந்தத்தை அடைகின்றனர். இவ்வாறு பேரின்பம் பெற்ற நந்திகேச்வரரும், மற்றும் சண்டீசன் முதலிய சிவகணத்தலைவர்களும் நம்மைக் காப்பாற்றியருளவேண்டும். (12)

(அ) பரமசிவன் வசிக்கும் மாளிகையை வர்ணிக்கிறார்:—

मुक्तामाणिक्यजालैः परिकलितमहासालमालोकनीयं
प्रत्युप्तानर्घरत्नैर्दिशि दिशि भवनैः कल्पितैर्दिक्पतीनाम् ।
उद्यानैरद्रिकन्यापरिजनवनितामाननीयैः परीतं
हृद्यं हृद्यस्तु नित्यं मम भुवनपतेर्धाम सोमार्धमौलेः ॥

முக்தா மாணிக்ய ஜாலை: பரிகலித மஹாஸாலமாலோகநீயம்
ப்ரத்யுப்தானர்க்க ரத்னைர் திசி திசி பவனை: கல்பிதைர்
திக்பதீனாம் ।
உத்யானை ரத்ரிகன்யா பரிஜன வனிதா மானனீயை: பரீதம்
ஹ்ருத்யம் ஹ்ருத்யஸ்து நித்யம் மம புவனபதேர் தாம
ஸோமார்த்தமௌளே: ॥ 13

मुक्तामाणिक्यजालैः-முத்துக்கள், மாணிக்கங்கள் இவைகளின் கூட்டங்களால், **परिकलितमहासालं**-கட்டப்பட்ட பெரிய கோட்டைச் சுவர்களையுடையதாயும், **आलोकनीयं**-பார்க்கத்தக்கதாயும், **दिशि दिशि**-ஒவ்வொரு திசையிலும், **कल्पितैः**-கட்டப்பட்ட, **प्रत्युप्त**-பதிக்கப்பட்ட, **अनर्घ**-விலைமதிக்கமுடியாத, **रत्नैः**-ரத்னங்களையுடைய, **दिक्पतीनां**-திக்பாலர்களுடைய, **भवनैः**-வீடுகளாலும், **अद्रिकन्या**-மலை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யரசனின் மகளாகிய பார்வதீ தேவியின், **परिजनवनिता**-பணிப்பெண்களால், **माननीयैः**-ஸேவிக்கத்தக்கதான, **उद्यानैः**-தோட்டங்களாலும், **परीतं** - சூழப்பட்டதும், **हृद्यं** - மனதைக் கவரக்கூடியதுமான, **भुवनपतेः**-உலகனைத்திற்கும் தலைவனை, **सोमार्धमौलेः**-பிறைச்சந்திரனைத் தலையில் கொண்ட பரமேச்வரனுடைய, **धाम**-இருப்பிடம், **नित्यं**-எப்பொழுதும் **मम**-என்னுடைய, **हृदि**-மனதில், **अस्तु**-விளங்கட்டும்.

உலகங்களைக் காத்தருளும் பரமேச்வரன் வசிக்கும் மாளிகை முத்துக்களும் மாணிக்கங்களும் இழைத்த கோட்டைச்சுவர்களால் சூழப்பட்டுள்ளது. அதைச் சுற்றிலும் திக்பாலகர்கள் வசிக்கும் வீடுகள் அமைந்துள்ளன. அவைகளில் ரத்னங்கள் பதிக்கப் பெற்றுள்ளன. மேலும் அழகிய தோட்டங்கள் சிவபெருமானுடைய வீட்டைச் சுற்றிலும் அமைந்துள்ளன. அவற்றில் பார்வதீ தேவியின் தாதிகள் உலாவுகின்றனர். அப்பெருமானுடைய பவனம் பார்ப்பதற்கு மிகவும் அழகு வாய்ந்ததாய் விளங்குகின்றது. இவ்வாறு விளங்கும் பரமசிவனுடைய இருப்பிடம் என்னுடைய மனதில் எப்பொழுதும் விளங்கட்டும். (13)

(அ) ஸபையை வர்ணிக்கிறார் :—

स्तम्भैर्जम्भारिरत्नप्रवरविरचितैः संभृतोपान्तभागं
शुम्भत्सोपानमार्गं शुचिमणिनिचयैर्गुम्भितानल्पशिल्पम् ।
कुम्भैः संपूर्णशोभं शिरसि सुघटितैः शातकुम्भैरपङ्कैः
शंभोः संभावनीयं सकलमुनिजनैः स्वस्तिदं स्यात्सदो नः ॥ १४ ॥

ஸ்தம்பைர் ஜம்பாரி ரத்ன ப்ரவர விரசிதை:
ஸம்ப்ருதோபாந்த பாகம்
ஶும்பத் ஸோபான மார்கம் ஶுசி மணி நிசயை:
கும்பிதாநல்ப ஶில்பம் ।
கும்பை: ஸம்பூர்ண ஶோபம் ஶிரஸி ஸுகடிதை:
ஶாதகும்பைரபங்கை:
ஶம்போ: ஸம்பாவனீயம் ஸகல முனிஜனை: ஸ்வஸ்திதம்
ஸ்யாத் ஸதோ ந: ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

जम्भारिरत्नप्रवरविरचितैः-சிறந்த இந்திர நீலக்கற்களால் செய்யபபட்ட, **स्तम्भैः**-தூண்களால், **सम्भृतोपान्तभाग**-சூழப் பட்ட சுற்றுப்பக்கங்களையுடையதாயும், **शुचिमणिनिचयैः**-மாசற்ற இரத்னங்களின் கூட்டங்களால், **शुम्भत्सोपानमार्ग**-விளங்குகின்ற படிக்கட்டின் வழியையுடையதாயும், **गुम्भितानल्पशिल्पं**-சேர்க்கப்பட்ட மிகுந்த சித்திரக்கலைகளையுடைய தாயும், **शिरसि** மேல்பாகத்தில், **सुघटितैः**-நன்கு பொருத்தப் பட்ட, **अपङ्कैः** அழுக்கில்லாத, **शातकुम्भैः**-தங்கமயமான, **कुम्भैः**-கலசங்களால், **संपूर्णशोभं**-நிறைந்த காந்தியையுடைய தாயும், **सकलमुनिजनैः**-எல்லா முனிவர்களாலும், **सम्भावनीयं**-போற்றத்தக்கதாயும் உள்ள, **शम्भोः**-பரமசிவனுடைய, **सदः**-ஸபை, **नः**-நமக்கு, **स्वस्तिदं**-க்ஷேமத்தைக் கொடுப்பதாக **स्यात्**-இருக்கட்டும்.

பரமசிவனின் சித்ஸபை மிகுந்த அழகுவாய்ந்தது. அது இந்திர நீலக்கற்களால் ஆன தூண்களால் ஓரங்களில் தாங்கப் பட்டு விளங்குகின்றது மேலும் அது மாசற்ற வெண்மையான இரத்தினங்களால் செய்யப்பட்டுப் பல சித்திர வேலைப்பாடு களுடன் கூடிய சிறந்த படிக்கட்டையுடையது. அதன் உச்சியில் தங்கக்கலசங்கள் அமைந்துள்ளன. மாமுனிவர்கள் அனைவரும் அங்கு வந்து வீற்றிருக்கின்றனர். அவ்வாறு சிறந்து விளங்கும் அச்சித்சபை நம்மனைவருக்கும் க்ஷேமத்தையளிக்கவேண்டும், (14)

பரமசிவன் அமரும் ஆஸனம் :—

न्यस्तो मध्ये सभायाः परिसरविलसत्पादपीठाभिरामो
हृद्यः पादैश्चतुर्भिः कनकमणिमयैरुच्चकैरुज्ज्वलात्मा ।
वासोरत्नेन केनाप्यधिकमृदुतरेणास्तृतो विस्तृतश्रीः
पीठः पीडाभरं नः शमयतु शिवयोः स्वैरसंवासयोग्यः ॥ १५ ॥

ந்யஸ்தோ மத்யே ஸபாயா: பரிஸர விலஸத் பாத பீடாபிராமோ
ஹ்ருத்ய: பாதைச்சதுர்பி: கனக மணிமயை-
ருச்சகைருஜ்வலாத்மா ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வாஸோ ரத்னேன கேனுப்யதிக ம்ருதுதரேணாஸ்த்ருதோ
விஸ்த்ருதஸ்ரீ:
பீட: பீடா பரம் ந: ஶமயது ஶிவயோ: ஸ்வைர ஸம்வாஸ
யோக்ய: ll 51

सभायाः-ஸபையின், **मध्ये**-நடுவில், **न्यस्तः**-வைக்கப்பட்டதும், **परिसर**-பக்கத்தில், **विलसत्**-விளங்குகின்ற, **पादपीठ**-பாதம் வைக்கும் பீடத்தால், **अभिरामः**-அழகுவாய்ந்ததும், **उच्चैः**-உயரமான, **कनकमणिमयैः** - பொன், ரத்னம் இவைகளால் செய்யப்பட்ட, **चतुर्भिः**-நான்கு, **पादैः**-கால்களால், **हृद्यः** - மனத்தைக் கவருகின்றதும், **उज्ज्वलात्मा** - பிரகாசிக்கின்ற ஸ்வரூபத்தையுடையதும், **अधिकमृदुतरेण** - மிகுந்த மென்மைவாய்ந்த, **केनापि**-வர்ணிக்கமுடியாத, **वासोरत्नेन**-சிறந்த வஸ்திரத்தினால், **आस्तृतः**-மூடப்பட்டதும், **विस्तृतश्रीः**-பரந்த காந்தியையுடையதாயும், **शिवयोः**-பார்வதீபரமேச்வரர்களுக்கு, **स्वैरसंवासयोग्यः**-தனிமையில் இஷ்டப்படி இருக்கத்தக்கதுமான, **पीठः**-ஆஸனமானது, **नः**-நம்முடைய, **पीडाभरं**-துன்பச்சுமையை, **शमयतु**-ஒடுக்கட்டும்.

சிவபெருமானுடைய ஆஸனம் ஸபையின் நடுவில் வைக்கப்பட்டுள்ளது. அது இரத்தினங்கள் பதித்த நான்கு உயரமான தங்கக் கால்களால் தாங்கப்பட்டுள்ளது. அப்பீடத்தின் மேல் மென்மையான சிறந்த வஸ்திரம் விரிக்கப்பட்டுள்ளது. அது பார்வதீ பரமேச்வரர்கள் தங்களிஷ்டப்பட்டபடி வீற்றிருக்கத் தகுதிவாய்ந்தது. இதன் அருகில் கால்களை வைத்துக் கொள்ளத் தனியாக ஒரு பீடம் உள்ளது. அவ்வாறு சிறந்து விளங்கும் அப்பீடம் நம்முடைய துன்பங்கள் எல்லாவற்றையும் களையட்டும். (15)

திருவடிகள்:—

आसीनस्याधिपीठं त्रिजगदधिपतेरंघ्रिपीठानुषक्तौ
पाथोजाभोगभाजौ परिमृदुलतलोल्लासिपद्मादिरेखौ ।
पातां पादावुभौ तौ नमदमरकिरीटोल्लसच्चारुहीर-
श्रेणीशोणायमानोन्नतनखदशकोद्भासमानौ समानौ ॥ १६ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆஸீனஸ்யாதிபீடம் த்ரிஜகததிபதேரங்க்ரிபீடானுஷக்தௌ
பாதோஜாபோக பாஜௌ பரிம்ருதுல தலோல்லாஸி
பத்மாதி ரேகௌ 1
பாதாம் பாதாவுபௌ தௌ நமதமர கிரீடோல்லஸச்சாரு ஹீர
ஶ்ரேணீ ஶோணாய மானோன்னத நக
தஶகோத்பாஸமானௌ ஸமானௌ ll 16

अधिपीठं-பீடத்தில், **आसीनस्य**-அமர்ந்துள்ள, **त्रिजगदधिपतेः**-மூன்று உலகங்களுக்கும் தலைவரான பரமேச்வரரின் **अंघ्रिपीठानुषक्तौ** - பாதபீடத்தில் அமைந்துள்ளவைகளாயும், **पाथोजाभोगभाजौ**-தாமரைகளின் வடிவத்தை அடைந்தவைகளாயும், **परिमृदुल**-மிகுந்த மென்மை வாய்ந்த, **तलोल्लासि**-உள்ளங்காலில் பிரகாசிக்கும், **पद्मादि**-தாமரை முதலிய, **रेखौ** ரேகைகளுடையவைகளாயும், **नमदमर**-(தன்னை) வணங்கும் விண்ணவர்களுடைய, **किरीटोल्लसत्**-முகுடங்களில் விளங்கும், **चारु**-அழகிய, **हीर**-இரத்தினங்களுடைய, **श्रेणी**-வரிசைகளால், **शोणायमान**-சிவந்ததாக இருக்கும், **उन्नत**-உயர்ந்த **नखदशक** - பத்து நகங்களால், **उद्भासमानौ**-உயர்ந்தகாந்தியுடையவைகளாயும், **समानौ**-ஒரே மாதிரியாகவும் உள்ள, **तौ** -அந்த, **उभौ**-இரண்டு, **पादौ**-பாதங்களும், **पाताम्**-(நம்மை) காத்தருளட்டும்.

பரமேச்வரனுடைய இரண்டு பாதங்களும் ஒரே மாதிரியாக அமைந்துள்ளன. அவைகள் செந்தாமரைகள்போல் மிகவும் அழகாக விளங்குகின்றன. அவைகளின் உட்பகுதியில் பத்மம் சங்கம் முதலிய ரேகைகள் காணப்படுகின்றன. அப்பாத பத்மங்களில் விண்ணுலகத்தவரனைவரும் வந்து தண்டனிட்டு வணங்குகின்றனர். அதனால் அவர்களுடைய கிரீடங்களில் பதித்த இரத்தினங்களின் ஒளி அவற்றின்மேல் பரவுகின்றது. அப்பொழுது கால்களிலுள்ள பத்து நகங்களும் சிவந்து. விளங்குகின்றன. அவ்வாறு அரியாஸனத்தில் அமர்ந்திருக்கும் அரனுடைய திருப் பாத கமலங்கள் நம்மைக் காத்தருளட்டும். (16)

(அ) நூபுரம் -திருப்பாதங்களில் அணிந்துள்ள சலங்கைகள்:

CC-O. In Public Domain. Digitized by eGangotri

यन्नादो वेदवाचां निगदति निखिलं लक्षणं पक्षिकेतो-
र्लक्ष्मीसंभोगसौख्यं विरचयति ययोश्चापरो रूपभेदः ।
शंभोः संभावनीये पदकमलसमासङ्गतस्तुङ्गशोभे
माङ्गल्यं नः समग्रं सकलसुखकरे नूपुरे पूरयेताम् ॥ १७ ॥

யந்நாதோ வேத வாசாம் நிகததி நிகிலம் லக்ஷணம் பக்ஷி கேதோ:
லக்ஷ்மீ ஸம்போக ஸௌக்யம் விரசயதி யயோஸ்சாபரோ
ரூபபேத: I
ஶம்போஸ்ஸம்பாவனீயே பதகமல ஸமாஸங்கதஸ் துங்க ஶோபே
மாங்கல்யம் ந: ஸமக்ரம் ஸகல ஸுககரே நூபுரே பூரயேதாம் ll

यन्नादः–எவைகளின் ஒலி, **वेदवाचां**–மறைகளின் வாக்கு களுடைய, **निखिलं** - எல்லா, **लक्षणं** - இலக்கணத்தையும், **निगदति**-நன்கு உரைக்கின்றதோ, **ययोः** – எவைகளுடைய, **अपरः**–மற்றொரு, **रूपभेदः**–வடிவமாற்றம், **पक्षिकेतोः**-கருடனை கொடியாகக்கொண்ட மஹாவிஷ்ணுவிற்கு, **लक्ष्मी**-இலக்குமி யுடன், **संभोग**-கூடுவதால் உண்டாகும், **सौख्यं**-இன்பத்தை, **विरचयति**–செய்கின்றதோ, **संभावनीयें** – எல்லோராலும் மதிக் கத்தகுந்த, **शम्भोः**–பரமேச்வரனுடைய, **पदकमल** – செந் தாமரைகள் போன்ற பாதங்களுடைய, **समासङ्गतः**–சேர்க்கை யால், **तुङ्गशोभे**-சிறந்த காந்திவாய்ந்தவைகளும், **सकल**- அனை வருக்கும், **सुखकरे**-இன்பத்தை விளைவிக்கின்றவைகளுமான, **नूपुरे**–சலங்கைகள், **नः**–நமக்கு, **समग्रं**–எல்லா, **माङ्गल्यं**–மங்க ளத்தையும், **पूरयेताम्**–நிரப்பச்செய்யட்டும்.

ஆதிசேஷனே பரமேச்வரனுடைய கால் சலங்கைகளாகக் காட்சியளிக்கின்றார். அவரே பதஞ்ஜலி மகரிஷியாக அவதரித்து பாணினியின் வியாகரண ஸூத்திரங்களுக்குச் சிறந்த விரிவுரை வகுத்துக்கூறியுள்ளார். அதற்கு மஹா பாஷ்யம் என்று சிறப்புப் பெயர் அமைந்துள்ளது. அந்த மஹா பாஷ்யமே வேதங்களிலுள்ள சொற்களுக்கு இலக்கணம் கூறுகின்றது. ஆதலால் இங்கு பரமேச்வரனுடைய கால் சதங்கைகளின் நாதமே வேதவாக்கு களுக்கு இலக்கணம் செப்புகின்றது என்று இயம்புகின்றார் நமது பரமாசார்யராக விளங்கும் ஆதிசங்கர பகவத்பாதர். மேலும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சலங்கைகளாக உருவெடுத்த ஆதிசேஷனே தனது சுயரூபத்தில் கருடக்கொடியோனுகிய மஹாவிஷ்ணுவிற்குப் படுக்கையாகக் காக்ஷியளிக்கின்றுர். அவ்வாறு விளங்கும் அச்சேஷசயனத்தில் மகாவிஷ்ணு தனது இல்லாளான இலக்குமிதேவியுடன் சேர்ந்து உரங்கிக்கொண்டு நிரதிசயமான ஆனந்தத்தை அடைகின்றுர். இவ்வாருகப் பரமசிவனுடைய கால் சதங்கைகளின் மற்றெரு தோற்றமான ஆதிசேஷ சயனம் அம்மஹாவிஷ்ணுவிற்குச் சிறந்த இன்பத்தையூட்டுகின்றது. பரமேச்வரனுடைய பாதகமலங்களின் சேர்க்கையால் அந்தத் தண்டைகள் சிறந்த பொலிவைப்பெற்று விளங்குகின்றன, அதனுலேயே அவைகள் அனைவராலும் போற்றப்படுகின்றன. அவைகள் எல்லாவிதமான இன்பங் களையும் தருகின்றன. அவ்வாறு விளங்கும் சலங்கைகள் நமக்குப் பரிபூர்ணமான ஆனந்தத்தையளிக்கட்டும். *(17)*

ஜங்கைகள் :—

अङ्गे शृङ्गारयोनेः सपदि शलभतां नेत्रवह्नौ प्रयाते
शत्रोरुद्धृत्य तस्मादिषुधियुगमधो न्यस्तमग्रे किमेतत् ।
शङ्कामित्थं नतानाममरपरिषदामन्तरङ्कूरयत्त-
त्संघातं चारु जङ्घायुगमखिलपतेरंहसां संहरेन्नः ॥ १८ ॥

அங்கே ஶ்ருங்கார யோனே: ஸபதி ஶலபதாம் நேத்ர வஹ்னௌ ப்ரயாதே
ஶத்ரோருத்த்ருத்ய தஸ்மாதிஷுதியுகமதோ ந்யஸ்தமக்ரே கிமேதத் ।
ஶங்காமித்தம் நதானமமர பரிஷதாமந்தரங்கூரயத்தத்
ஸங்காதம் சாரு ஜங்கா யுக மகிலபதேரம்ஹஸாம் ஸம்ஹரேந்ந: ॥

शृङ्गारयोनेः-மன்மதனுடைய, **अङ्गे**-அவயவம், **नेत्रवह्नौ**-(சிவபெருமானுடைய) நெற்றிக்கண்ணில் உண்டான தீயில், **शलभतां**-விட்டில்பூச்சியின் தன்மையை, **सपदि**-உடனேயே, **प्रयाते**-அடைந்தவுடன், **तस्मात् शत्रोः**-அந்தப்பகைவனிடமிருந்து, **इषुधियुगं**-இரண்டு அம்புராத்தூணிகளையும், **उद्धृत्य**-தனியாக எடுத்து, **अग्रे**-முன்னுல், **अधः**-கீழே, **न्यस्तं किम् एतत्**-வைக்கப்பட்டதுதானு இது? **इत्थं** – இம்மாதிரி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

नतानां-(தன்னை) வணங்கிய, **अमरपरिषदां**-தேவர் கூட்டங்களின், **अन्तः**-மனதில், **शङ्कां**-ஐயத்தை, **अंकुरयत्**-முளைக்கச் செய்கின்ற, **चारु**-அழகிய, **अखिलपतेः**-அனைவற்றிற்கும் தலைவனான பரமேச்வரனுடைய, **तत्**-அந்த, **जङ्घायुगं**-இரண்டு முழங்கால்களும், **नः**-நம்முடைய, **अंहसां**-பாபங்களின், **संघातं**-கூட்டத்தை, **संहरेत्**-நாசம் செய்யட்டும்.

பரமேச்வரனுடைய இரண்டு முழங்கால்களும் அம்புறாத் தூணிகள் போல் விளங்குகின்றன. அவைகளைக் கண்ணுற்ற அமரர்களின் கூட்டங்கள், சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணிலிருந்து கிளம்பிய தீயால் மன்மதன் எரிக்கப்பட்டவுடன் சிவபெருமான் அவனுடைய இரண்டு அம்புறாத்தூணிகளையுமே எடுத்துத் தன்முன்னால் கீழே வைத்துக்கொண்டிருக்கிறாரோ என்று சந்தேகப்படலாயினர். அவ்வாறு தோன்றும் அவ்வழகிய முழங்கால்கள் நமது பாபங்களின் குவியல்கள் எல்லாவற்றையும் எரித்துச் சாம்பலாக்கட்டும். (18)

இருதுடைகள்:—

जानुद्वन्द्वेन मीनध्वजनृवरसमुद्गोपमानेन साकं
राजन्तौ राजरम्भाकरिकरकनकस्तम्भसम्भावनीयौ ।
ऊरू गौरीकराम्भोरुहसरससमामर्दनानन्दभाजौ
चारू दूरीक्रियास्तां दुरितमुपचितं जन्मजन्मान्तरे नः ॥ २९ ॥

ஜானுத்வந்த்வேன மீனத்வஜ ந்ருவர
ஸமுத்கோபமானேன ஸாகம்
ராஜந்தௌ ராஜரம்பா கரிகர கநக ஸ்தம்ப ஸம்பாவநீயௌ ।
ஊரு கௌரீ கராம்போருஹ ஸரஸ ஸமாமர்த்தனானந்தபாஜௌ
சாரு தூரீக்ரியாஸ்தாம் துரிதமுபசிதம் ஜன்மஜன்மாந்தரே நः ॥

मीनध्वज-மீனைக் கொடியாகக்கொண்ட மன்மதராஜனுடைய **समुद्गोपमानेन**-தாம்பூலப்பெட்டிக்கு ஒப்பான **जानुद्वन्द्वेन**-இரு முழங்கால்களுடன் **साकं**-கூட **राजन्तौ**-விளங்குகின்றவைகளாயும் **राजरम्भा**-இராஜவாழை **करि**-யானையினுடைய **कर**-துதிக்கை **कनकस्तम्भ**-தங்கத்தூண் இவைகளால் **सम्भावनीयौ**-மதிக்கத்தகுந்தவைகளாயும் **गौरी**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பார்வதியினுடைய **कराम्भोरुह**-தாமரைபோன்ற கைகளால் **सरस**-மிகுந்த ஆனந்தத்துடன் **समामर्द्न**- நன்கு பிடித்துவிடுவதால் **आनन्दभाजौ**-ஆனந்தத்தையடைந்தவைகளாயும் உள்ள **चारू**-அழகிய **ऊरू**-இரண்டு தொடைகளும் **नः**-நம்முடைய **जन्म**-இப்பிறவியிலும் **जन्मान्तरे**-மற்றப் பிறவிகளிலும் **उपचितं**-சேமித்துவைக்கப்பட்ட **दुरितं**-பாபத்தை **दूरीक्रियास्ताम्**-அகற்றட்டும்.

சிவபெருமானுடைய தொடைகள் அழகு மிகுந்தவைகள். அவைகள் காமதேவனின் தாம்பூலப்பெட்டியைப் போன்ற இரண்டு முழங்கால்களுடன் சேர்ந்து விளங்குகின்றன அவைகள் இராஜவாழை, யானையின் துதிக்கை, தங்கத்தூண் முதலியவைகளைப்போல் பிரகாசிக்கின்றன. அவைகளைப் பார்வதீதேவி தன்னுடைய மலர்போன்ற மெல்லிய கரங்களால் பிடித்து விடுகிருள். அதனுல் அவைகள் மட்டற்ற மகிழ்ச்சியையடைகின்றன. அவ்வாறு விளங்கும் அத்தொடைகள் நம்முடைய முற்பிறவிகளில் சேர்ந்துள்ள எல்லாப் பாபங்களையும் அகற்றட்டும். (19)

நிதம்ப ப்ரதேசம்:—

आमुक्तानर्घरत्नप्रकरकरपरिष्वक्तकल्याणकाञ्ची-
 दाम्ना बद्धेन दुग्धद्युतिनिचयमुषा चीनपट्टाम्बरेण ।
संवीते शैलकन्यासुचरितपरिपाकायमाणे नितम्बे
 नित्यं नर्नर्तु चित्तं मम निखिलजगत्स्वामिनः सोममौलेः ॥

ஆமுக்தாநர்க ரத்ன ப்ரகர கர பரிஷ்வக்த கல்யாண காஞ்சீ
தாம்நா பத்தேன துக்த த்யுதி நிசயமுஷா சீன பட்டாம்பரேண ।
ஸம்வீதே சைலகன்யா ஸுசரித பரிபாகாயமாணே நிதம்பே
நித்யம் நர்நர்து சித்தம் மம நிகில ஜகத்ஸ்வாமின :
ஸோமமௌளே: ॥ 20

आमुक्त-பதிக்கப்பட்ட **अनर्घ**-விலையுயர்ந்த **रत्न**- ரத்னங்களுடைய **प्रकर**-கூட்டத்தின் **कर**-கிரணங்களால் **परिष्वक्त**-சூழப்பட்ட **कल्याण**-மங்களகரமான **काञ्चीदाम्ना**-தங்க ஒட்டியாணத்தினுல் **बद्धेन**-கட்டப்பட்டதும் **दुग्ध**- பாலி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

னுடைய **द्युतिनिचय**-ஒளிக்கூட்டத்தை **मुषा**-அபஹரிக்கின்ற **चीनपट्टाम्बरेण** - சீனதேசத்துப் பட்டினால் - **संवीते**-மறைக்கப்பட்டதும் **शैलकन्या**-மலையரசனின் பெண்ணான பார்வதீதேவியின் **सुचरित**-புண்ணியங்களின் **परिपाकायमाणे**-பரிபாகம்போல் தோன்றுகின்றதுமான **निखिलजगत्स्वामिनः**-உலகங்கள் எல்லாவற்றிற்கும் அதிபதியான, **सोममौलेः**-சந்திரசேகரருடைய, **नितम्बे**-இடுப்பில், **मम**-என்னுடைய, **चित्तं**-மனம், **नित्यं**-எப்பொழுதும், **नर्नर्तु**-கூத்தாடிக் கொண்டே இருக்கட்டும்.

பரமேச்வரனுடைய இடுப்பு மிகுந்த அழகுவாய்ந்தது. அது மெல்லிய சீனப் பட்டால் மறைக்கப்பட்டுள்ளது. அப்பட்டின் வெண்மை பாலின் வெண்ணிறத்தையும் தோல்வியுறச் செய்கிறது. அதைச் சுற்றித் தங்க ஒட்டியாணம் போடப்பட்டுள்ளது. அதில் விலை மதிக்கமுடியாத சிறந்த இரத்தினங்கள் பதிக்கப்பட்டுள்ளன. அவைகளின் கிரணங்கள் எங்கும் பரவி மங்களத்தை உண்டுபண்ணுகின்றன. அவ்வாறு சிறந்து விளங்கும் சந்திரசேகரருடைய அவ்விடுப்பு பார்வதீ தேவி செய்த மாதவத்தின் பயனே உருவெடுத்து வந்ததுபோலக் காக்ஷியளிக்கின்றது. அப்பேற்பட்ட பரமேச்வரனுடைய அவ்விடுப்பின்கண் என் மனம் எப்பொழுதும் ஆனந்ததாண்டவம் ஆடட்டும். (20)

மத்ய ப்ரதேசம்:—

संध्याकालानुरज्यद्दिनकरसरुचा कालधौतेन गाढं
व्यानद्धः स्निग्धमुग्धः सरसमुदरबन्धेन वीतोपमेन ।
उद्दीप्रैः स्वप्रकाशैरुपचितमहिमा मन्मथारेरुदारो
मध्यो मिथ्यार्थसध्र्यङ्मम दिशतु सदा संगतिं मङ्गलानाम् ॥

ஸந்த்யா காலானுரஜ்யத் தினகர ஸருசா காலதௌதேன காடம்
வ்யாநத்த: ஸ்நிக்த முக்த: ஸரஸமுதர பந்தேன வீதோபமேன ।
உத்தீப்ரை: ஸ்வப்ரகாசைருபசித மஹிமா மன்மதாரேருதாரோ
மத்யோ மித்யார்த்த ஸத்ர்யங் மம திசது ஸதா ஸங்கதிம்
மங்களாநாம் ॥ (21)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

सन्ध्याकाल-ஸந்தியாகாலத்தில், **अनुरज्यत्**-சிவந்திருக்கும், **दिनकरसरुचा**-ஸூர்யனுக்கு ஒப்பான காந்தியை உடையதும், **कालधौतेन**-தங்கத்தால் செய்யப்பட்டதும், **वीतोपमेन**-உபமானம் அற்றதுமான, **उदरबन्धेन**-வயிற்றில் கட்டிக்கொள்ளும் பட்டையால், **सरसं**-அழகாகவும், **गाढं**-இறுக்கமாயும், **व्यानद्धः**-கட்டப்பட்டதும், **स्निग्धमुग्धः**-காந்தி, அழகு இவைகளையுடையதும், **उद्दीप्तैः**-சிறந்து விளங்குகின்ற **स्वप्रकाशैः**-தன்னுடைய ஒளிகளால், **उपचितमहिमा**-அதிகமான மேன்மையை உடையதுமான, **मन्मथारेः**-காமனின் எதிரியான பரமேச்வரனுடைய, **मिथ्यार्थसध्र्यङ्**-பொய் யென்று நினைக்கக்கூடியதும், **उदारः**-சிறந்ததுமான, **मध्यः**-இடை, **मम**-எனக்கு, **सदा**-எப்பொழுதும், **मङ्गलानां**-மங்களங்களுடைய, **संगतिं**-சேர்க்கையை, **दिशतु**-கொடுக்கட்டும்.

சிவபெருமானுடைய இடை மிகவும் மெல்லியது. அதனால் அது பொய்யெனக் கருதக்கூடியதாகக் காணப்படுகிறது. அது ஸந்தியாகாலத்தில் காணும் சூரியனின் ஒளிபோன்ற ஒளியை உடைய நிகரற்ற தங்கப்பட்டையால் இறுகக் கட்டப்பட்டுள்ளது. அதன் ஒளி எங்கும் பரவுவதால் அது அவ்வொளியாலேயே மேலும் மேலும் பொலிவு பெற்றுத் துலங்குகிறது அவ்வாறு விளங்கும் அப்பரமனுடைய அவ்விடை நமக்குச் சிறந்த மங்களங்களை வழங்கவேண்டும். (21)

ரோமாவளி:—

नाभीचक्रालवालान्नवनवसुषमादोहदश्रीपरीता-
दुद्गच्छन्ती पुरस्तादुदरपथमतिक्रम्य वक्षः प्रयान्ती ।
श्यामा कामागमार्थप्रकथनलिपिवद्भासते या निकामं
सा मा सोमार्धमौलेः सुखयतु सततं रोमवल्लीमतल्ली ॥ २२ ॥

நாபீசக்ராலவாலாத் நவநவ ஸுஷமா தோஹத ஸ்ரீபரீதாத்
உத்கச்சந்தீ புரஸ்தாதுதர பதமதிக்ரம்ய வக்ஷ: ப்ரயாந்தீ ।
ஶ்யாமா காமாகமார்த்த ப்ரகதன லிபிவத் பாஸதே யா நிகாமம்
ஸா மா ஸோமார்த்தமௌளே: ஸுகயது ஸததம்
ரோமவல்லீ மதல்லீ ॥ (22

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

नवनव-புதிது புதிதான, सुषमा-அழகென்னும், दोहद-श्रीपरीतात्-உரத்தின் செல்வம் நிறைந்த, नाभीचक्रालवालात्-தொப்புளாகிய பாத்தியிலிருந்து, पुरस्तात्-முன்பக்கத்தில், उद्गच्छन्ती-மேல் கிளம்புகின்றதும், उदरपथं-வயிற்றின் வழியை, अतिक्रम्य-கடந்து, वक्षः-மார்பை, प्रयान्ती-அடைகின்றதும், श्यामा-கருப்பானதுமான, या-எது, कामागम-காம சாஸ்திரத்தின், अर्थ-பொருளை, प्रकथन-விளக்கிச்சொல்கின்ற लिपिवत्-எழுத்துப்போல, भासते-விளங்குகிறதோ, सा-அந்த सोमार्धमौलेः-பிறைச்சந்திரனை சிரஸில்கொண்ட பரமேச்வரனுடைய, रोमवल्लीमतल्ली-சிறந்த கொடிபோன்ற ரோமவரிசை मा-என்னை, सततं-எப்பொழுதும், नितरां-மிகவும், सुखयतु-மகிழ்ச்சியடையச்செய்யட்டும்.

பரமசிவனுடைய ரோமாவளி ஓர் கொடிபோல் விளங்குகிறது. அது நாபியாகிய பாத்தியிலிருந்து உற்பத்தியாகிறது. அங்கு அது அழகு என்ற உரத்தால் நன்கு வளர்க்கப்பட்டு வயிற்றின் வழியாகக் கிளம்பிச்சென்று பரமசிவனுடைய மார்பை அடைகிறது. அங்கு அது காமசாஸ்திரத்தின் தத்துவத்தை விளக்கும் அக்ஷர வரிசைபோல் காணப்படுகின்றது. அப்படிப்பட்ட ரோமாவளி எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை எப்பொழுதும் அளிக்கட்டும் (22)

மார்பு :—

आश्लेषेष्वद्रिजायाः कठिनकुचतटीलिप्तकाश्मीरपङ्क-
व्यासङ्गादुद्यदर्कद्युतिभिरुपचितस्पर्धमुद्दामहृद्यम् ।
दक्षारातेरूढप्रतिनवमणिमालावलीभासमानं
वक्षो विक्षोभिताघं सततनतिजुषां रक्षतादक्षतं नः ॥ २३ ॥

ஆச்லேஷேஷ்வத்ரிஜாயா: கடின குசதடீ லிப்த காச்மீர பங்க-
வ்யாஸங்காதுத்யதர்க்க த்யுதிபிருபசித ஸ்பர்த்தமுத்தாம ஹ்ருத்யம் ।
தக்ஷாராதேரூட ப்ரதிநவ மணிமாலாவலீ பாஸமானம்
வக்ஷோ விக்ஷோபிதாகம் ஸதத நதிஜுஷாம் ரக்ஷதாதக்ஷதம் ந: ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

अद्रिजायाः-மலையரசனுடைய மகளாகிய பார்வதீ தேவியின், **आश्लेषेषु**- ஆலிங்கனங்களில், **कठिन**-கடினமான, **कुचतटी**-ஸ்தன பிரதேசத்தில், **लिप्त**-பூசப்பட்ட, **काश्मीरपङ्क**-குங்குமப்பூவாலன பூச்சின், **व्यासङ्गात्** -சேர்க்கையால் **उद्यदर्कद्युतिभिः**-உதயமாகும் கதிரவனுடைய காந்திகளுடன், **उपचितस्पर्धं**-போட்டியிடுகின்றதும், **उद्दाममहृद्यं**-அழகு மிகுந்ததும், **उदूढ**-அணிந்துகொள்ளப்பட்ட, **प्रतिनव**-மிகப்புதிய **मणिमालावली**-இரத்தின மாலைகளின் வரிசைகளால், **भासमानं**-விளங்குகின்றதும், **सतत**-எப்பொழுதும், **नतिजुषां**-வணங்குகின்றவர்களுடைய, **विक्षोभिताघं**-பாபங்களை நாசம் செய்கின்றதுமான, **दक्षारातेः**-தக்ஷனை நாசம் செய்த பரமேச்வரனுடைய, **वक्षः**-மார்பு, **नः**-நம்மை, **अक्षतं**-குறைவில்லாமல், **रक्षतात्** -காப்பாற்றட்டும்.

பரமேச்வரனுடைய வக்ஷஸ்தலம், பார்வதீ தேவியை ஆலிங்கனம் செய்துகொள்ளும்பொழுது அத்தேவி தனது கொங்கைகளில் பூசிக்கொண்டிருக்கும் குங்குமப் பூச்சின் சேர்க்கையால் புதிதாக உதிக்கின்ற கதிரவனுடைய காந்திகளுடன் கூட போட்டி போடுவதுபோல சிவப்பாகக் காணப்படுகிறது. பரமேச்வரன் சிறந்த இரத்தின மாலைகளைத் தனது மார்பில் தரித்துக்கொண்டிருக்கிறான். அம்மாலைகளின் வரிசைகளால் அவரது மார்பு மிகுந்த காந்தியுடன் பிரகாசிக்கிறது அது பரமசிவனுடைய அடியார்களின் பாபங்களைப் போக்குகிறது. அவ்வாறு சிறந்து விளங்கும் அப்பரமனின் மார்பு நம்மைக் குறைவின்றிக் காத்தருள வேண்டும். (23)

புஜங்கள் :—

वामाङ्के विस्फुरन्त्याः करतलविलसच्चारुरक्तोत्पलायाः
कान्ताया वामवक्षोरुहभरशिखरोन्मर्दनव्यग्रमेकम् ।
अन्यांस्त्रीनप्युदारान्वरपरशुमृगालंकृतानिन्दुमौले-
र्बाहूनाबद्धहेमाङ्गदमणिकटकानन्तरालोकयामः ॥ २४ ॥

வாமாங்கே விஸ்புரந்த்யா: கரதல விலஸச் சாரு ரக்தோத்பலாயா:
காந்தாயா: வாம வக்ஷோருஹ பர ஶிகரோன்மர்தனவ்யக்ரமேகம்।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அன்யாம்ஸ்த்ரீனப்யுதாரான் வர பரஶு ம்ருகா
லங்க்ருதானிந்துமௌளே:
பாஹூனுபத்த ஹேமாங்கத மணி கடகாநந்தராலோகயாம: ||

वामाङ्क-இடது மடியில், **विस्फुरन्त्याः**-விளங்குகின்றவளும் **करतल**-கையில், **विलसत्**-விளங்குகின்ற, **चारु**-அழகிய, **रक्त**-சிவந்த, **उत्पलायाः**-அல்லி மலரையுடையவளுமான, **कान्तायाः**-மனைவியான பார்வதீதேவியின், **वाम**-இடது (அழகிய) **वक्षोरुहभर**-கொங்கையின் பாரத்தின், **शिखर**-உச்சியை, **उन्मर्दन**-அமுக்குவதில், **व्यग्र**-ஈடுபட்ட, **एकं**-ஒரு கையையும் **वर-परशु-मृगालङ्कृतान्**-வரம், கோடாலி, மான் இவைகளால் அலங்கரிக்கப்பட்டவைகளாயும், **उदारान्**-வள்ளல்களாயும், **आबद्ध**-அணிந்துகொள்ளப்பட்ட, **हेमाङ्गद**-தங்கத்தோள்வளை களையும், **मणिकटकान्**-இரத்தினக்காப்புக்களையும் உடையவைகளாயும் இருக்கின்ற, **इन्दुमौलेः**-பிறையைத் தலையிலுடைய பரமேச்வரனுடைய, **अन्यान्**-மற்ற, **त्रीन्**-மூன்று, **बाहून् अपि**-கைகளையும், **अन्तः**-மனதிற்குள் **आलोकयामः**-காண்கிறோம்.

பரமேச்வரனுடைய கைகளில் ஒன்று அவரது இடது மடியில் விளங்குபவளாயும், தனது கையில் அழகிய அல்லிமலரை உடையவளுமான பார்வதீ தேவியின் ஸ்தனபாரத்தின் உச்சியை அமுக்குவதில் ஈடுபட்டுள்ளது. மற்ற மூன்று கைகளும் முறையே வரம், கோடாலி, மான் இவைகளை ஏந்திக்கொண்டுள்ளன. அவைகள் அழகிய தங்கத் தோள்வளைகளாலும் இரத்தினக் காப்புகளாலும் அலங்கரிக்கப்பட்டு விளங்குகின்றன, அவைகள் மிகுந்த உதாரமான குணம் படைத்தவைகள். அவைகளை நாம் நமது மனதிற்குள் என்றும் காண்போமாக. (24)

கழுத்து :—

संभ्रान्तायाः शिवायाः पतिविलयभिया सर्वलोकोपतापा-
त्संविग्नस्यापि विष्णोः सरभसमुभयोर्वारणप्रेरणाभ्याम् ।
मध्ये त्रैशङ्कवीयामनुभवति दशां यत्र हालाहलोष्मा
सोऽयं सर्वापदां नः शमयतु निचयं नीलकण्ठस्य कण्ठः ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸம்ப்ராந்தாயா: ஶிவாயா: பதி விலய பியா
ஸர்வ லோகோபதாபாத்
ஸம்விக்நஸ்யாபி விஷ்ணோ: ஸரபஸமுபயோர்
வாரண ப்ரேரணப்யாம் ।
மத்யே த்ரைஶங்கவீயாமனுபவதி தஶாம் யத்ர
ஹாலாஹலோஷ்மா
ஸோऽயம் ஸர்வாபதாம் ந: ஶமயது நிசயம்
நீலகண்டஸ்ய கண்ட: ॥ (25)

पतिविलय-கணவனுக்கு நாசம் ஏற்படுமோ என்ற **भिया**-அச்சத்தால், **संभ्रान्तायाः**-பரபரப்படைந்த, **शिवायाः**-பார்வதீ தேவியினுடையவும், **सर्वलोकोपतापात्**-உலகங்கள் எல்லாம் துன்புறுவதால், **संविग्नस्य**-கவலையுற்ற, **विष्णोश्च अपि**-விஷ்ணுவினுடையவும், **उभयोः**-இவ்விருவர்களுடைய வும், **सरभसं**-ஆத்திரத்துடன்கூடிய, **वारणप्रेरणाभ्यां**-தடுப் பதாலும், தூண்டுவதாலும், **मध्ये**-நடுவில், **त्रैशङ्कवीयां**-திரிசங்குவினுடைய, **दशां**-நிலையை, **यत्र**-எங்கு, **हालाहलोष्मा**-ஹாலாஹலமென்ற விஷத்தீ, **अनुभवति**-அனுபவிக்கிறதோ, **सोऽयं**-அப்படிப்பட்ட இந்த, **नीलकण्ठस्य**-நீலமான கழுத்தை உடைய பரமசிவனுடைய, **कण्ठः**-கழுத்து, **नः**-நம்முடைய **सर्वापदां**-எல்லா ஆபத்துக்களுடைய, **निचयं**-கூட்டத்தை, **शमयतु**-அழிக்கட்டும்.

தேவர்களும் அஸுரர்களும் வாஸுகி என்ற அரவத்தைக் கயிருகக்கொண்டு பாற்கடலைக் கடையும்பொழுது ஹாலாஹலம் என்ற மிகக் கொடிய விஷம் முதலில் கிளம்பியது அவ்விஷம் உலகங்கள் எல்லாவற்றையும் எரிக்கத் தொடங்கிற்று அவ்வாறு கிளம்பிய அவ்விஷத்தைச் சிவபெருமான் அள்ளிப்பருகினர். அதனல் தன் கணவனுக்கு ஆபத்து வருமோ என்று அஞ்சிய மலையரசனின் மகள் அது தனது கணவனுடைய வயிற்றுக்குள் போகாமல் இருப்பதற்காகப் பரபரப்புடன் சாப்பிடவேண்டா மென்று பரமசிவனைத் தடுத்தாள். அவ்விஷம் வெளியே வந்தால் உலகமெல்லாம் அழிந்துவிடுமே என்று பயந்த மஹாவிஷ்ணு அதை வெளியே விடவேண்டாம் சாப்பிட்டுவிடுங்கள் என்று பரமசிவனைத் தூண்டினர் இவ்வாறு பார்வதியின் வார்த்தைக் காக விஷத்தை உள்ளே செலுத்தாமலும் விஷ்ணுவிற்காக வெளியில் விடாமலும் இருக்கும்பொழுது அவ்விஷம் உள்ளும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

போகமுடியாமல் வெளியிலும் போகமுடியாமல் நடுவிலேயே கழுத்தில் தங்கிவிட்டது. விச்வாமித்ரரின் வார்த்தையால் கீழே வராமலும் இந்திரனின் வார்த்தையால் மேலே போகாமலும் நடுவிலேயே ஆகாசத்தில் நிற்கும் த்ரிசங்குவின் நிலையே விஷத்திற்கும் ஏற்பட்டது. அவ்வாறு தங்கிய அவ்விஷத்தால் சிவபெருமானுடைய கழுத்து நீலநிறமுள்ளதாக ஆகிவிட்டது. அவ்வாறு விளங்கும் அக்கழுத்து நமது ஆபத்துக்களையெல்லாம் களைந்தொழிக்கட்டும். (25)

அதரம் :—

ह्यैरद्रीन्द्रकन्यामृदुदशनपदैर्मुद्रितो विद्रुमश्री-
रुद्द्योतन्त्या नितान्तं धवलधवलया मिश्रितो दन्तकान्त्या ।
मुक्तामाणिक्यजालव्यतिकरसदृशा तेजसा भासमानः
सद्योजातस्य दद्यादधरमणिरसौ संपदां संचयं नः ॥ २६ ॥

ஹ்ருத்யைரத்ரீந்த்ர கன்யா ம்ருது தசன பதைர் முத்ரிதோ வித்ருமஸ்ரீ
ருத்யோதந்த்யா நிதாந்தம் தவள தவளயா மிஸ்ரிதோ தந்த காந்த்யா ।
முக்தா மாணிக்ய ஜால வ்யதிகர ஸத்ருசா தேஜஸா பாஸமான:
ஸத்யோ ஜாதஸ்ய தத்யாததரமணிரஸௌ ஸம்பதாம் ஸஞ்சயம் ந: ॥ (26)

हृद्यैः-மனோஹரமான, **अद्रीन्द्रकन्या**-மலையரசனின் பெண்ணாகிய பார்வதீதேவியின், **मृदु**-மெல்லிய, **दशनपदैः**-பற்களின் அடையாளங்களால், **मुद्रितः**-அடையாளமிடப் பட்டதும், **विद्रुमश्रीः**-பவழத்தின் அழகையுடையதும் **नितान्तं**-மிகவும், **उद्द्योतन्त्या**-பிரகாசிக்கின்றதும், **धवलधवलया**-மிகவும் வெளுப்பானதுமான, **दन्तकान्त्या**-பற்களின் காந்தியுடன், **मिश्रितः**-கலந்ததும், **मुक्ता**-முத்துக்களும், **माणिक्यजाल**-மாணிக்கக் கூட்டங்களும், **व्यतिकरसदृशा**-சேர்ந்ததுபோன்ற **तेजसा**-ஒளியால், **भासमानः**-பிரகாசிக்கின்றதுமான, **सद्योजातस्य**-ஸத்யோஜாதன் என்று கூறப்படும் சிவபெருமானுடைய, **असौ**-அந்த, **अधरमणिः**-கீழ் உதடாகிய சிறந்த

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இரத்தினம், **नः**-நமக்கு, **सम्पदां**-செல்வங்களுடைய, **सञ्चयं**-கூட்டத்தை, **दद्यात्**-கொடுக்கட்டும்.

பரமேச்வரனுடைய கீழ் உதடு சிவந்த ரத்னம் போன்றது. அது பார்வதீ தேவியின் பற்களின் அடையாளத்துடன் கூடியது. அது வெண்மையான பற்களின் காந்தியுடன் சேருவதால் முத்தும் மாணிக்கமும் சேர்ந்ததுபோல் பிரகாசிக்கின்றது, அவ்வாறு விளங்கும் அப்பரமேச்வரனுடைய அதரம் நமக்கு நிறைந்த செல்வத்தையளிக்கட்டும். (26)

பகவானின் நாஸிகை (மூக்கு) :—

कर्णालंकारनानामणिनिकररुचां संचयैरञ्चितायां
वर्ण्यायां स्वर्णपद्मोदरपरिविलसत्कर्णिकासंनिभायाम् ।
पद्धत्यां प्राणवायोः प्रणतजनहृदम्भोजवासस्य शंभो-
र्नित्यं नश्चित्तमेतद्विरचयतु सुखेनासिकां नासिकायाम् ।।२७।।

கர்ணாலங்கார நாநாமணி நிகரருசாம் ஸஞ்சயைரஞ்சிதாயாம்
வர்ண்யாயாம் ஸ்வர்ண பத்மோதர பரிவிலஸத் கர்ணிகா
ஸந்நிபாயாம் ।
பத்தத்யாம் ப்ராண வாயோ: ப்ரணத ஜன ஹ்ருதம்போஜ
வாஸஸ்ய ஶம்போ:
நித்யம் நஶ்சித்தமேதத் விரசயது ஸுகேநாஸிகாம் நாஸிகாயாம் ।।

कर्णालङ्कार-காதின் அணிகளிலுள்ள, **नानामणि**-பலவித மான இரத்தினங்களின், **निकर**-கூட்டத்தினுடைய, **रुचां**-காந்திகளின், **सञ्चयैः**-ஸமூஹங்களுடன், **अञ्चितायां**-விளங்குவதும், **वर्ण्यायां**-புகழத்தக்கதும், **स्वर्णपद्म** – பொற்றாமரையின், **उदर**-வயிற்றில் (உள்ளே), **परिविलसत्**-விளங்கும் **कर्णिकासन्निभायां**-கர்ணிகைக்கு ஒப்பானதும், **प्राणवायोः**-பிராணவாயுவின், **पद्धत्यां**-வழியானதுமான, **प्रणत**-தன்னை வணங்கிய, **जन**-மக்களுடைய, **हृदम्भोज**-ஹிருதயமாகிய தாமரையில், **वासस्य**-வாஸத்தையுடைய, **शम्भोः**-பரமேச்வரனுடைய, **नासिकायां**-மூக்கில், **नित्यं**-எப்பொழுதும், **नः**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நம்முடைய, **एतत् चित्तं**-இந்த மனது, **सुखेन**-ஸுகமாக, **आसिकां**-இருத்தலை, **विरचयतु**-செய்யட்டும்.

பரமேச்வரனுடைய காதுகளில் ரத்தின குண்டலங்கள் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன. அவைகளின் ஒளி அவரது மூக்கின்மேல் படுவதால் அது மிகுந்த அழகுடன் விளங்கிக் கொண்டிருக்கிறது அதனுல் வியப்படைந்த கவிமணிகள் அதைப் போற்றிப் பாடுகின்றனர். அது பொற்றாமரைக்குள் விளங்கும் கர்ணிகைபோல் காட்சியளிக்கின்றது. அது பிராணவாயு சஞ்சரிக்கும் மார்க்கமாகத் திகழ்கின்றது. பக்தர்களின் மனதில் வாஸம் செய்யும் பரமேச்வரனுடைய அந்த மூக்கில் நம்முடைய மனம் எப்பொழுதும் பற்றுதல் கொண்டதாக இருக்கட்டும் (27)

குண்டலங்கள் :—

अत्यन्तं भासमाने रुचिरतररुचां संगमात्सन्मणीना-
मुद्यच्चण्डांशुधामप्रसरनिरसनस्पष्टदृष्टापदाने ।
भूयास्तां भूतये नः करिवरजयिनः कर्णपाशावलंबे
भक्तालीभालसज्जज्जनिमरणलिपेः कुण्डले कुण्डले ते ॥

அத்யந்தம் பாஸமானே ருசிரதர ருசாம் ஸங்கமாத் ஸந்மணீநாம்
உத்யச்சண்டாம்சு தாம ப்ரஸர நிரஸன ஸ்பஷ்ட
த்ருஷ்டாபதானே ।
பூயாஸ்தாம் பூதயே ந: கரிவர ஜயின: கர்ண பாசாவலம்பே
பக்தாலீ பால ஸஜ்ஜஜ்ஜனி மரண லிபே: குண்டலே
குண்டலே தே ॥ (28)

रुचिरतर-மிகவும் அழகிய, **रुचां**-காந்திகளையுடைய, **सन्मणीनां**-நல்ல இரத்தினங்களுடைய, **सङ्गमात्**-சேர்க்கையால், **अत्यन्तं**-மிகவும், **भासमाने**-பிரகாசிக்கின்றவைகளாயும், **उद्यत्**-கிளப்புகின்ற, **चण्डांशु**-கதிரவனுடைய, **धाम**-ஒளிகளின், **प्रसर**-பரவுதலை, **निरसन**-பழிப்பதில், **स्पष्ट**-தெளிவாக, **दृष्ट**-காணப்பட்ட, **अपदाने**-புகழையுடையவைகளாயும் **भक्ताली**-பக்தர்களின் வரிசைகளின், **भाल**-நெற்றிகளில், **सज्जत्**-ஒட்டியிருக்கும், **जनि**-பிறப்பு, **मरण**-சாவு இவைகளின்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

लिपेः—எழுத்திற்கு, **कुण्डले**—சுழிபோன்றதும், **करिवरजयिनः**—பெரிய யானையின் உருவையுடைய அந்தகன் என்ற அரக்கனை வென்ற பரமேச்வரனுடைய, **कर्णपाशावलम्बे**—அழகிய காதுகளில் தொங்குகின்றவைகளாயும் உள்ள, **ते**—அந்த, **कुण्डले**—இரண்டு குண்டலங்களும், **नः**—நமக்கு, **भूतये**—செல்வத்தையளிப்பதற்காக, **भूयास्ताम्**—இருக்கட்டும்

பெரிய யானையின் வடிவம் கொண்ட அந்தகன் என்ற அரக்கனையழித்த சிவபெருமானுடைய காதுகளில் அழகு வாய்ந்த இரத்தினங்கள் பதிக்கப்பட்ட குண்டலங்கள் தொங்கிக்கொண்டிருக்கின்றன. அவைகள் எங்கும் பரவிக்கொண்டிருக்கும் கதிரவனின் செங்கதிர்களேயும் மங்கச் செய்கின்றன. அவைகள் தன்னையண்டும் அடியார்களைக் காத்தருளும் தன்மை வாய்ந்தவை. ஆதலால் அவைகள் பிரம்மதேவரால் அவர்களின் லலாடத்தில் எழுதப்பட்ட ஜனன மரணங்களின் எழுத்துக்களைக் குண்டலம் போட்டு உபயோகமற்றவைகளாகச் செய்கின்றன. அவ்வாறு விளங்கும் அக்குண்டலங்கள் நம்மைக் காத்தருளட்டும்.

குறிப்பு:—நாம் எழுதும்பொழுது ஏதாவது பிழைகள் ஏற்பட்டால் அப்பிழையான எழுத்துக்களைச் சுற்றி வட்டம் போட்டு அவைகள் உபயோகமற்றவை என்று ஒதுக்கித் தள்ளிவிடுகிறோம். பிரம்மதேவன் ஒவ்வொருவருடைய நெற்றியிலும் அவரவர்களுடைய பிறப்பு வளர்ப்பு மரணம் முதலியவற்றைக் கணக்கிட்டுப் புள்ளி விபரம் போட்டிருக்கிறார். சிவபெருமானோவெனில் தன்னடியார்களின் நெற்றியில் எழுதப்பட்ட அவ்வெழுத்துக்களைச் சுற்றித் தன்னுடைய குண்டலங்களால் சுழிகளைப் போட்டு அவைகள் தப்பானவைகள் என்று காட்டி நீக்கி விடுகிறார். ப்ரஹ்ம லிபியைக்கூட மாற்றிவிடுகிறார் அதாவது பரமசிவனுடைய அடியார்களுக்கு ஸம்ஸார பயம் கிடையாது அவர்கள் பிறவாத் தன்மையைப் பெற்றுப் பரமசிவனுடன் ஒன்றி விடுகின்றனர் என்பது இதன் பொருள். (28)

(அ) இரு சுலோகங்களால் மூன்று கண்களை வர்ணிக்கிறார்:—

यास्यां कालव्यवस्था भवति तनुमतां यो मुखं देवतानां
येषामाहुः स्वरूपं जगति मुनिवरा देवतानां त्रयीं ताम् ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

रुद्राणीवक्त्रपङ्केरुहसततविहारोत्सुकेन्दिन्दिरेभ्य-
स्तेभ्यस्त्रिभ्यः प्रणामाञ्जलिमुपरचये त्रीक्षणस्येक्षणेभ्यः ॥

யாப்யாம் காலவ்யவஸ்தா பவதி தனுமதாம் யோ முகம் தேவதானாம்
யேஷாமாஹு: ஸ்வரூபம் ஜகதி முனிவரா தேவதானாம் த்ரயீம் தாம் ।
ருத்ராணீ வக்த்ர பங்கேருஹ ஸதத விஹாரோத் ஸுகேந்திந்திரேப்ய:
தேப்யஸ்த்ரிப்ய: ப்ரணாமாஞ்ஜலிமுபரசயே த்ரீக்ஷணஸ்யேக்ஷணேப்ய: ॥ (29)

याभ्यां-எவர்களால், तनुमतां-சரீரத்தையுடையவர்களுக்கு कालव्यवस्था-பகல் இரவு என்ற நேரங்களின் கட்டுப்பாடு, भवति-ஏற்படுகிறதோ, यः-எது, देवतानां-தேவதைகளுக்கு, मुखं-முகமாக இருக்கிறதோ, तां-அந்த, दैवतानां त्रयीं-(ஸூரியன், சந்திரன், அக்னி என்ற) மூன்று தேவதைகளையும், येषां-எந்தக் கண்களுடைய, स्वरूपं-ஸ்வருபமாக, जगति-உலகில், मुनिवराः-மாமுனிவர்கள், आहुः-கூறுகிறார்களோ, रुद्राणी-பார்வதீ தேவியின், वक्त्र-முகமாகிய, पङ्केरुह-தாமரையில், सतत-எப்பொழுதும், विहार-விளையாடுவதில், उत्सुक-ஆவல்கொண்ட, इन्दिन्दिरेभ्यः-சிறந்த வண்டினங்களாகிய, तेभ्यः-அந்த, त्रीक्षणस्य-மூன்று கண்களையுடைய பரமசிவனுடைய, त्रिभ्यः-மூன்று, ईक्षणेभ्यः-கண்களுக்கும், प्रणामाञ्जलिं-கை கூப்பிய வணக்கத்தை, उपरचये-செய்கிறேன்.

உலகில் சூரியன் காலையில் உதித்து மாலையில் அஸ்தமனத்தையடைகிறான். அதனால் பகல் நேரம் உண்டாகிறது. பிறகு சந்திரன் தன்னுடைய சீதகிரணங்களால் உலகத்தைப் பிரகாசப்படுத்தி இரவை விளங்கவைக்கிறான். இவ்வாறாக சூரியனும் சந்திரனும் பகல் இரவு என்ற காலங்களை வரையறுக்கின்றனர். அக்னிதேவன் அமரர்களின் முகமாக இருந்து கொண்டு யக்ஞங்களில் கொடுக்கும் ஹவிஸ்ஸை அவர்களிடம் சேர்க்கிறான். இந்த ஸூர்யன், சந்திரன், அக்னி என்ற மூவருமே தேவர்களில் மிகச் சிறந்தவர்கள். இவ்வுலகிலுள்ளவருக்கும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மேலுலகிலுள்ளவருக்கும் இவர்கள் பேருதவி செய்கின்றனர். நாம் பிரத்யக்ஷமாகக் காணும் தெய்வங்கள் இம்மூவர்தான். இத்தனைச் சிறப்புப் பெற்றுள்ள இம்மூன்று தேவதைகளும் பரமசிவனுடைய மூன்று கண்களாக அமைந்திருக்கின்றனர். அக்னியே பரமசிவனின் நெற்றிக்கண்ணாகவும், ஸூர்ய-சந்திரர்கள் மற்ற இரு கண்களாகவும் விளங்குவதாக முனிபுங்கவர்கள் கூறுகின்றனர். தாமரைப்பூவில் வண்டுகள் மொய்ப்பதுபோல் பார்வதியின் வதனாரவிந்தத்திலேயே இம்மூன்று கண்களும் அன்புடன் எப்பொழுதும் ஈடுபட்டு அதிலுள்ள லாவண்யாமிருதத்தை ஆசையுடன் பருகுகின்றன. அதாவது அவளுடைய முகத்தின் அழகையே எப்பொழுதும் பார்த்துப் பார்த்து இன்புறுகின்றன. இவ்வாறு விளங்கும் முக்கண்ணனின் மூன்று கண்களையும் கைகூப்பிக் கும்பிடுகிறேன். (29)

மூன்று கண்கள் :—

वामं वामाङ्कगाया वदनसरसिजे व्यावलद्वल्लभाया
व्यानम्रेष्वन्यदन्यत्पुनरलिकभवं वीतनिःशेषरौक्ष्यम् ।
भूयो भूयोऽपि मोदान्निपतदतिदयाशीतलं चूतबाणे
दक्षारेरीक्षणानां त्रयमपहरतादाशु तापत्रयं नः ॥ ३० ॥

வாமம் வாமாங்ககாயா: வதன ஸரஸிஜே வ்யாவலத் வல்லபாயா:
வ்யாநம்ரேஷ்வன்யதன்யத் புனரலிகபவம் வீத நிஸ்ஸேஷ
ரௌக்ஷ்யம் ।
பூயோ பூயோபி மோதாந்நிபதததி தயா ஶீதலம் சூதபாணே
தக்ஷாரேரீக்ஷணானாம் த்ரயமபஹர தாதாஶு தாபத்ரயம் ந: ॥ (30)

वामाङ्कगायाः—இடது மடியில் அமர்ந்திருக்கின்ற, **वल्ल-भायाः**—பிரிய மனைவியான பார்வதியின், **वदनसरसिजे**—தாமரைபோன்ற முகத்தில், **व्यावलत्**—சுற்றிக்கொண்டு இருக்கும் **वामं**—இடது கண்ணும், **व्यानम्रेषु**—வணங்கும் பக்தர்களிடம், **व्यावलत्**—செல்லுகின்ற **अन्यत्**—மற்றதான வலது கண்ணும் **पुनः**—மேலும், **वीतनिश्शेषरौक्ष्यं**—பாக்கியன்னியில் கொடுமை முழுவதும் நீங்கியதும், **भूयो भूयोपि**—திரும்பத் திரும்ப, **मोदात्**—ஸந்தோஷத்தால், **चूतबाणे**—மாம் பூவை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அம்பாகக்கொண்ட காமனிடம், **अतिदयाशीतलं**-மிகுந்த கருணரஸத்தால் குளிர்ந்ததாக, **निपतत्**-விழுகின்றதும், **अलिकभवं**-நெற்றியில் உண்டானதுமான, **अन्यत्**-மற்ருெரு கண்ணும் **दक्षारेः**-தக்ஷனின் சத்துருவான பரமசிவனின், **ईक्षणानां त्रयं**-இந்த மூன்று கண்களும், **आशु**-விரைவில், **नः**-நம்முடைய, **तापत्रयं**-மூன்று தாபங்களையும், **अपहरतात्**-போக்கட்டும்.

பகவானின் மூன்று கண்களில் ஒன்று தனது இடது மடியில் அமர்ந்திருக்கும் அன்பிற்குரிய பார்வதியின் திருமுகத்தையே பார்த்துக்கொண்டிருக்கிறது. தனது திருவடிகளை வணங்கும் பக்தர்களை வலது கண் நோக்குகிறது. முன்னால் காமனை எரித்த நெற்றிக்கண் இப்பொழுது பார்வதியுடன் சேர்ந்திருப்பதால் அதிலுள்ள கொடுமைகளெல்லாம் நீங்கி ஸந்தோஷத்துடன் காமனிடம் அடிக்கடி குளிர்ந்த ரஸம் பெருகும் வண்ணம் செல்கிறது. இவ்விதமான முக்கண்களும் ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் என்ற மூன்றுவித தாபங்களையும் விலக்கட்டும். (30)

லலாடம் (நெற்றி) :—

यस्मिन्नर्धेन्दुमुग्धद्युतिनिचयतिरस्कारनिस्तन्द्रकान्तौ
काश्मीरक्षोदसंकल्पितमिव रुचिरं चित्रकं भाति नेत्रम् ।
तस्मिन्नुल्लोलचिल्लीनटवरतरुणीलास्यरङ्गायमाणे
कालारेः फालदेशे विहरतु हृदयं वीतचिन्तान्तरं नः ॥

யஸ்மின்னர்த்தேந்து முக்த த்யுதிநிசய திரஸ்கார நிஸ்தந்த்ர காந்தௌ
காச்மீர க்ஷோத ஸங்கல்பிதமிவ ருசிரம் சித்ரகம் பாதி நேத்ரம் ।
தஸ்மின்னுல்லோல சில்லீ நடவர தருணீ லாஸ்ய ரங்காயமாணே
காலாரே: பாலதேசே விஹரது ஹ்ருதயம் வீத சிந்தாந்தரம் ந: ॥

अर्धेन्दु-பாதிசந்திரனின் **मुग्ध**-அழகிய, **द्युतिनिचय**-ஒளிக் கூட்டத்தை, **तिरस्कार**-அவமதிப்பதில், **निस्तन्द्र**-சோம்பலில்லாத, **कान्तौ**-ஒளியை உடைய, **यस्मिन्**-எதில், **काश्मीर-क्षोद**-குங்குமப்பூவின் பொடியால், **संकल्पितं**-இடப்பட்ட

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

रुचिरं-அழகிய, **चित्रकमिव**-திலகம்போல், **नेत्र**-கண், **भाति**-விளங்குகிறதோ, **तस्मिन्**-அந்த, **उल्लोलचिल्ली**-அசையும் புருவங்களாகிற, **नटवरतरुणी**-சிறந்த நடன மாதின், **लास्य**-நாட்யத்திற்கு, **रङ्गायमाणे**-நாட்ய மேடைபோல் இருக்கின்ற, **कालारेः**-யமனுக்கு சத்ருவான சிவனின், **फालदेशे**-நெற்றி பிரதேசத்தில், **नः**-நம்முடைய, **हृदयं**-மனது, **वीतचिन्तान्तरं**-வேறு கவலைகள் நீங்கியதாக, **विहरतु**-விளையாடட்டும்.

பகவானின் நெற்றி பாதி வட்டவடிவமுள்ள சந்திரனின் ஒளியைவிடப் பன்மடங்கு அதிக ஒளியுடன் விளங்குகிறது. நெற்றியில் உள்ள கண் குங்குமப்பூவைக் குழைத்து இடப்பட்ட அழகிய திலகமோ என்று எண்ணச்செய்கிறது அசையும் புருவமாகிற நடனமாது நாட்யமாடுவதற்கு ஏற்ற நாட்ய மேடையாக நெற்றி காக்ஷியளிக்கிறது. இவ்விதமான பகவானின் நெற்றியில் எல்லாக் கவலைகளையும் துறந்து என் மனம் ஈடுபடட்டும். (31)

கேசபாரம் :—

स्वामिन्गङ्गामिवाङ्गीकुरु तव शिरसा मामपीत्यर्थयन्तीं
धन्यां कन्यां खरांशोः शिरसि वहति किं न्वेष कारुण्यशाली ।
इत्थं शङ्कां जनानां जनयदतिघनं कैशिकं कालमेघ-
च्छायं भूयादुदारं त्रिपुरविजयिनः श्रेयसे भूयसे नः ॥

ஸ்வாமின் கங்காமிவாங்கீகுரு தவ ஶிரஸா மாமபீத்யர்த்தயந்தீம்
தன்யாம் கன்யாம் கராம்ஶோ: ஶிரஸி வஹதி கிம் ந்வேஷ
காருண்ய ஶாலீ ।
இத்தம் ஶங்காம் ஜநாநாம் ஜநயததிகனம் கைஶிகம் காலமேகச்
சாயம் பூயாதுதாரம் த்ரிபுர விஜயிந: ச்ரேயஸே பூயஸே ந: ॥

स्वामिन्-ஸ்வாமியே! **तव**-உம்முடைய, **शिरसा**-சிரஸ்ஸால், **गङ्गामिव**-கங்கையைப்போல், **मामपि**-என்னையும், **अङ्गीकुरु**-ஏற்றுக்கொள்ளும், **इति**-என்று, **अर्थयन्तीं**-பிரார்த்திக்கிறவளும், **धन्यां**-பாக்யசாலியுமான, **खरांशोः**-ஸூரியனுடைய, **कन्यां**-பெண்ணான யமுனையை, **कारुण्यशाली**-கருணையுடன் விளங்கும், **एषः**-இந்தப் பரமசிவன், **शिरसि**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிரஸ்ஸில், **किं नु वहति**-தாங்குகிருரா? **इत्थं**-இவ்விதமான, **शङ्कां**-ஸந்தேஹத்தை, **जनानां**-ஜனங்களுக்கு, **जनयत्**-உண்டு பண்ணுகின்றதும், **अतिघनं**-மிகவும் நெருக்கமானதும், **कालमेघच्छायं**-கரும்முகில்போன்ற நிறமுள்ளதும், **उदारं**-சிறந்ததுமான, **त्रिपुरविजयिनः**-த்ரிபுரர்களை ஜயித்த பரமசிவனின் **कैशिकं**-கேச ஸமூஹம், **नः**-நமக்கு, **भूयसे श्रेयसे**-அதிகமான நன்மையின் பொருட்டு, **भूयात्**-ஆகட்டும்.

இந்த சுலோகத்தில் பகவானின் கேசபாரத்தை வர்ணிக்கிருர். அது கருமேகம் போல மிகக் கருமையாகவும் அடர்த்தியாகவும் சிறந்ததாகவும் விளங்குகிறது. ஈசவரன் சிரஸ்ஸில் கங்கையை தரித்துக்கொண்டிருக்கிருர். அதனல் அவருக்கு கங்காதரர் என்று பெயர். இதைப்பார்த்து யமுனை தானும் சக்களத்தியான கங்கையின் நிலையை அடையவேண்டுமென்ற எண்ணங்கொண்டு தவம் செய்து பகவானிடம் வேண்டிக் கொண்டதின் பேரில் கருணைமூர்த்தியான அவரும் அங்கீகரித்து அவளுடைய எண்ணத்தை நிறைவேற்ற யமுனையை தம் சிரஸ்ஸில் வைத்துக்கொண்டிருக்கிருரோ என்ற ஸந்தேஹம் பார்ப்பவர்களுக்கு ஏற்படுகிறது. யமுனை கருப்பு நிறத்துடன் காணப்படுகிறது. மேலும் நீண்ட கேசத்தை விரித்தால் பிரவாஹம் போலவும் தோன்றுகிறது. கேசம் பிரவாஹம்போல் காக்ஷி அளிப்பதால்தான் கேசத்தைக்குறிக்கும் **वेणी** (வேணீ) என்ற பதம் பிரவாஹத்தையும் குறிக்கிறது. ஸூரியனும் சந்திரனும் பகவானுடைய கண்களாக இருப்பவர்கள். அதில் அமிருத கிரணனுயிருப்பதால் சந்திரனுக்கு பகவானின் சிரஸ்ஸில் ஸ்தானம் கிடைத்தது. க்ரூரமான கிரணமுள்ள ஸூரியனுக்கு அந்த ஸ்தானம் கிடைக்கவில்லை. ஆனாலும் அவன் பெண்ணுன யமுனை மஹா பாக்யத்தால் தன் பிதாவுக்குக் கிடைக்காத அந்த ஸ்தானத்தை அடைந்துவிட்டாள். **खरांशोः** (கராம்சோ:) என்ற பதத்திலிருந்து இது த்வனிக்கிறது. யமுனையின் பிரவாஹமோ என்று தோன்றும் கேசபாரம் நமக்கு அதிகமான நன்மையைக் கொடுக்கட்டும். (32)

கிரீடம்:—

भृङ्गाराकल्पयोग्यैः शिखरिवरसुतासत्सखीहस्तलूनैः
सूनैराबद्धमालावलिपरिविलसत्सौरभाकृष्टभृङ्गम् ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

तुङ्गं माणिक्यकान्त्या परिहसितसुरावासशैलेन्द्रशृङ्गं
संघं नः संकटानां विघटयतु सदा काङ्कटीकं किरीटम् ॥

ச்ருங்காராகல்ப யோக்யை: பிகரிவர ஸுதா ஸத்ஸகீ
ஹஸ்த லூனை:
ஸூனைராபத்த மாலாவளி பரிவிலஸத் ஸௌரபாக்ருஷ்ட
ப்ருங்கம்।
துங்கம் மாணிக்ய காந்த்யா பரிஹஸித ஸுராவாஸ ஶைலேந்த்ர
ச்ருங்கம்
ஸங்கம் ந: ஸங்கடானும் விகடயது ஸதா காங்கடீகம் கிரீடம் ॥

शृङ्गाराकल्पयोग्यैः-சிருங்கார வேஷத்திற்குத் தகுந்தவைகளும், शिखरिवर-மலைகளில் சிறந்த ஹிமவானின், सुता-பெண்ணுன பார்வதியின், सत्सखीहस्तलूनैः-நற்தோழிகளின் கைகளால் பறிக்கப்பட்டவைகளுமான, सूनैः-மலர்களால், आबद्ध-கட்டப்பட்ட, मालावलि-மாலைகளின் வரிசையில், परिविलसत् -விளங்கும், सौरभाकृष्टभृङ्गं-நறுமணத்தால் இழுக்கப்பட்ட வண்டுகளை உடையதும், तुङ्गं-உயரமானதும், माणिक्यकान्त्या-மாணிக்கத்தின் ஒளியால், परिहसित-பழிக்கப்பட்ட, सुरावास-தேவர்களின் இருப்பிடமான, शैलेन्द्र-மேரு மலையின், शृङ्गं-உச்சியை உடையதும், काङ्कटीकं-ஸுவர்ண லோஹத்தால் ஆனதுமான, किरीटं-கிரீடமானது, नः-நம்முடைய, संकटानां संघं-துன்பங்களுடைய கூட்டத்தை, सदा-எப்பொழுதும், विघटयतु-விலக்கட்டும்.

பகவானின் சிரஸ்ஸில் விளங்கும் கிரீடம் உயரமாகவும் மாணிக்க ரத்னம் பதிக்கப்பட்டும் விளங்குகிறது. தன் ஒளியால் தேவர்கள் வாழும் தங்கமலையையும் தோற்கச் செய்கிறது. பார்வதீ தேவியின் அருமைத் தோழிகள் தங்கள் கையாலேயே சிருங்கார வேஷத்திற்குத் தகுந்ததான நறுமணமும் அழகிய நிறமுமுள்ள மலர்களைப் பறித்து மாலைகள் கட்டி கிரீடத்தில் அணிவித்திருக்கிறுர்கள். அதிலுள்ள சிறந்த வாசனையால் கவரப்பட்டு வண்டுகள் வந்து மொய்க்கின்றன. இந்தக் கிரீடம் எல்லாத் துன்பங்களையும் போக்கட்டும். (33)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சந்திரகலை :—

वक्राकारः कलङ्की जडतनुरहमप्यङ्घ्रिसेवानुभावा-
दुत्तंसत्वं प्रयातः सुलभतरघृणास्यन्दिनश्चन्द्रमौलेः ।
तत्सेवन्तां जनौघाः शिवमिति निजयावस्थयैव ब्रुवाणं
वन्दे देवस्य शंभोर्मुकुटसुघटितं मुग्धपीयूषभानुम् ॥ ३४ ॥

வக்ராகார: களங்கீ ஜட தனுரஹமப்யங்க்ரி ஸேவானுபாவாத்
உத்தம்ஸத்வம் ப்ரயாத: ஸுலபதர க்ருணா ஸ்யந்தினச்
சந்த்ரமௌளே: ।
தத் ஸேவந்தாம் ஜநௌகா: ஶிவமிதி நிஜயாவஸ்த்தயைவ
ப்ருவாணம்
வந்தே தேவஸ்ய ஶம்போர் முகுட ஸுகடிதம் முக்தபீயூஷ
பானும் ॥

वक्राकारः-கோணலான உருவமுள்ளவனும், **कलङ्की**-குற்றமுள்ளவனும், **जडतनुः**- அறிவற்ற சரீரமுள்ளவனுமான **अहमपि**-நானும், **अंघ्रिसेवानुभावात्** —பாதஸேவா மஹிமையால், **सुलभतर**-மிகவும் எளிதில் அடையத்தக்க, **घृणास्यन्दिनः**-கருணா ப்ரவாஹத்துடன் கூடிய, **चन्द्रमौलेः**-பரமசிவனின், **उत्तंसत्वं**-சிரோபூஷணமாக இருக்கும் தன்மையை, **प्रयातः**-அடைந்திருக்கிறேன். **तत्**-ஆகையால், **जनौघाः**-ஜன ஸமூஹங்களே! **शिवं**-சிவனை, **सेवन्तां**-ஸேவியுங்கள், **इति**-என்று **निजया अवस्थयैव** – தன் நிலைமையினாலேயே, **ब्रुवाणं**-சொல்கிறவனும், **देवस्य**-தேவனான, **शंभोः**-பரமசிவனின் **मुकुटसुघटितं**-கிரீடத்தில் சேர்க்கப்பட்டுள்ளவனுமான, **मुग्धपीयूषभानुं**-அழகிய அம்ருதகிரணனான சந்திரனை, **वन्दे**-வணங்குகிறேன்.

சிவனின் சிரஸ்ஸில் விளங்கும் சந்திரனை வணங்குகிறார். பரம சிவனின் சிரஸ்ஸில் கிரீடத்தில் உள்ள சந்திரன் அவருடைய சிரஸ்ஸிற்கே அணிகலனாக விளங்குகிறான், எல்லோரும் வணங்கும் ஸர்வேசுவரனுடைய அங்கங்களில் மிகவும் மேலாக உள்ள சிரஸ்ஸில் அதாவது மிகவும் உயர்ந்ததும் சிறந்ததுமான ஸ்தானத்தில் சந்திரனுக்கு இடம் கிடைத்திருக்கிறது. சந்திரனே

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

எல்லா தோஷங்களும் நிரம்பியவன். பரமசிவனின் சிரஸில் விளங்கும் பாதிப்பிறை வடிவம் கோணலானது (வளைந்துள்ளது) குற்றமுள்ளவன் (களங்கமுள்ளவன்) அறிவில்லாதவன் (குளிர்ச்சியான சரீரமுள்ளவன்) 'डलयोरभेदः' (டலயோரபேத:) என்ற நியாயத்தால் ஜலமயமான சரீரமுள்ளவன் என்றும் சொல்லலாம். புண்யத்தின் பயனாக சந்திரமண்டலத்திற்குச் சென்ற ஜீவர்களின் சரீரமும் ஜலமயமாக குளிர்ச்சியாக இருக்கும் என்று உபநிஷத் கூறுகிறது. இவ்வாறு பல தோஷங்கள் உள்ள சந்திரன் ஈசுவரனுடைய சிரஸில் இருப்பதற்குக் கொஞ்சமும் தகுதியற்றவன். ஆனாலும் பகவத்பாதாரவிந்தத்தை ஸேவித்ததாலும், பகவானின் கருணாபிரவாஹம் யாவரும் மிகவும் எளிதாகப் பெறத்தக்கதாக இருக்கிறபடியாலும்தான் இந்த உயர்ந்த ஸ்தானம் சந்திரனுக்கும் கிடைத்துவிட்டது ஜனக் கூட்டத்தில் உயரமான மேடையில் ஏறி பேச்சாளர்கள் பேசுவது போல் சந்திரனும் உயரமான இடத்தில் இருந்துகொண்டு "ஹே ஜனங்களே என்னைப்போல இந்த உயர்ந்த ஸ்தானத்தை அடைய விரும்பினால் நீங்களும் சிவ சரணங்களை ஸேவியுங்கள். அவர் கருணையால் இந்த ஸ்தானத்தை அடையலாம். அந்தக்கருணையை யாவரும் எளிதில் பெறலாம்" என்று தன் நிலையைக்காட்டி எடுத்துக்கூறுகிறானே என்று தோன்றும்படியாக இருக்கிறது. சிவனுடைய சிரஸ்ஸில் விளங்குவதால் அந்த சந்திரனையும் வணங்குகிறேன். (34)

வெண்குடை: —

कान्त्या संफुल्लमल्लीकुसुमधवलया व्याप्य विश्वं विराज-
न्वृत्ताकारो वितन्वन्मुहुरपि च परां निर्वृतिं पादभाजाम् ।
सानन्दं नन्दिदोष्णा मणिकटकवता वाह्यमानः पुरारेः
श्वेतच्छत्राख्यशीतद्युतिरपहरतादापदस्तापदा नः ॥ ३५ ॥

காந்த்யா ஸம்புல்ல மல்லீ குஸும தவளயா வ்யாப்ய விச்வம் விராஜன்
வ்ருத்தாகாரோ விதன்வன் முஹுரபிச பராம் நிர்வ்ருதிம் பாதபாஜாம் ।
ஸாநந்தம் நந்தி தோஷ்ணா மணிகடகவதா வாஹ்யமான: புராரே:
ச்வேதச்சத்ராக்ய ஶீதத்யுதிரபஹரதாதாபதஸ் தாபதா ந: ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

संफुल्ल-நன்கு மலர்ந்த, **मल्लीकुसुम**-மல்லிகை மலர்போல், **धवलया**-வெளுப்பான, **कान्त्या**-ஒளியினால், **विश्वं**-பிரபஞ்சத்தை, **व्याप्य**-வியாபித்துக்கொண்டு, **विराजन्**-விளங்குகின்றதும், **वृत्ताकारः**-வட்டமான வடிவமுள்ளதும், **पादभाजां**-திருவடிகளை ஸேவிக்கிறவர்களுக்கு, **परां**-உயர்ந்த, **निर्वृतिं**-ஆனந்தத்தை, **मुहुरपि च**-அடிக்கடி, **वितन्वन्**-உண்டு பண்ணுகிறதும், **मणिकटककवता**-ரத்தினக் காப்புகளுடன் கூடிய, **नन्दिदोष्णा**-நந்தியின் கையால், **सानन्दं**-ஸந்தோஷத்துடன்கூட, **वाह्यमानः**-தாங்கப்படுகிறதுமான, **पुरारेः**-பரமசிவனின், **श्वेतच्छत्राख्यशीतद्युतिः**-வெண்குடை என்ற பெயருள்ள சந்திரன், **नः**-நமக்கு, **तापदाः**-தாபத்தைத்தரும் **आपदः**-ஆபத்துக்களை, **अपहरतात्**-போக்கட்டும்.

நந்திகேசுவரர் ரத்ன கடகம் பூண்ட தம் திருக்கைகளால் பகவானுக்கு வெண்குடை பிடிக்கிறார். அவர் சிறந்த பக்தரானதால் இந்தக் கைங்கர்யம் தனக்குக் கிடைத்ததே என்ற ஸந்தோஷத்துடன் குடை பிடிக்கிறார். மல்லிகை மலர் போன்ற வெண்மை நிறம் கொண்டது குடை. வட்ட வடிவமுள்ள இதன் ஒளி உலகம் முழுவதும் பரவியுள்ளது. பாதஸேவை செய்யும் பக்தர்கள் இதைப்பார்த்துப் பார்த்து ஆனந்தமடைகின்றனர். அவர் பாதத்தை அடைந்தவர்களுக்கும் வெண்குடையின் நிழல் கிடைக்கும். இது வெண்மதி போல் விளங்குகின்றது. இந்த வெண்குடை மனதிற்கும் உடலுக்கும் தாபங்களைத்தரும் துன்பங்களை யெல்லாம் விலக்கட்டும். (35)

(அ) சாமரம் போடும் சேடிகளுடைய கைவளையல்களின் ஒலியைத் துதிக்கிறார்:—

दिव्याकल्पोज्ज्वलानां शिवगिरिसुतयोः पार्श्वयोराश्रितानां
रुद्राणीसत्सखीनां मदतरलकटाक्षाञ्चलैरञ्चितानाम् ।
उद्वेल्लद्बाहुवल्लीविलसनसमये चामरान्दोलनीना-
मुद्भूतः कङ्कणालीवलयकलकलो वारयेदापदो नः ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

திவ்யாகல்போஜ்வலானாம் ஶிவ கிரிஸுதயோ:
பார்ச்வயோராச்ரிதானாம்
ருத்ராணீ ஸத்ஸகீனாம் மத தரள கடாக்ஷாஞ்சலைரஞ்சிதானாம் ।
உத்வேல்லத் பாஹுவல்லீ விலஸன ஸமயே
சாமராந்தோலனீனாம்
உத்பூத: கங்கணாலீ வலய கலகலோ வாரயேதாபதோ ந: ।

दिव्याकल्पोज्ज्वलानां-சிறந்த வேஷங்களுடன் விளங்குபவர்களும், शिवगिरिसुतयोः-சிவன், பார்வதீ இவர்களுடைய, पार्श्वयोः- இருபக்கங்களை, आश्रितानां-அடைந்திருக்கின்றவர்களும், मदतरल-லாகிரியால் சஞ்சலமான, कटाक्षाञ्चलैः-கடைக்கண் பார்வைகளுடன், अंचितानां-விளங்குகின்றவர்களும், रुद्राणीसत्सखीनां-பார்வதியின் நற்தோழிகளுமான, चामरान्दोलनीनां-சாமரம் வீசும் பெண்களின், उद्वेल्लद्बाहुवल्ली-विलसनसमये-அசைகின்ற கொடிபோன்ற கைகளை அழகாக ஆட்டும் சமயத்தில், उद्भूतः-உண்டான, कङ्कणालीवलय-कलकलः-காப்புவரிசை, வளைகள் இவற்றின் 'கல கல' என்னும் ஒலி, नः-நம்முடைய, आपदः-ஆபத்துக்களை, वारयेत्-தடுக்கட்டும்.

பார்வதீ பரமேசுவரர்கள் சேர்ந்து ஸபையில் வீற்றிருக்கின்றனர். பார்வதியின் அருகில் சில பெண்களும் சிவனின் அருகில் சில பெண்களும் நின்று சாமரம் வீசுகின்றனர். இவர்கள் எல்லோரும் பார்வதீ தேவியின் சிறந்த தோழிகள். இவர்கள் சிறந்த வேஷம் தரித்திருக்கின்றனர். தாம்பூலம் முதலியவற்றின் லாகிரியால் கண் பார்வை சுழலுகிறது இவர்கள் சாமரம்போடும் பொழுது கைகள் அசைந்து அவற்றிலுள்ள கங்கணங்கள், வளையல்கள் இவைகள் 'கல கல' என்று ஒலிக்கின்றன. இந்த ஒலி நம் ஆபத்தைத் தடுக்கட்டும். (36)

நர்த்தனம்:—

स्वर्गौकस्सुन्दरीणां सुललितवपुषां स्वामिसेवापराणां
वल्गद्भूषाणि वक्त्राम्बुजपरिविगलन्मुग्धगीतामृतानि ।
नित्यं नृत्तान्युपासे भुजविधुतिपदन्यासभावावलोक-
प्रत्युद्यत्प्रीतिमाद्यत्प्रमथनटनटीदत्तसंभावनानि ॥ ३७ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்வர்கௌக: ஸுந்தரீணாம் ஸுலலித வபுஷாம்
ஸ்வாமி ஸேவா பராணாம்
வல்கத் பூஷாணி வக்த்ராம்புஜ பரிவிகலன் முக்த கீதாம்ருதானி ।
நித்யம் ந்ருத்தான்யுபாஸே புஜ விதுதி பதந்யாஸ பாவாவலோக
ப்ரத்யுத்யத் ப்ரீதி மாத்யத் ப்ரமத நட நடீ தத்த ஸம்பாவனானி ॥

सुललितवपुषां-மிக அழகிய சரீரமுள்ளவர்களும், **स्वामि-सेवापराणां**-யஜமானனான பரமசிவனுக்கு ஸேவை செய்வதில் ஈடுபட்டவர்களுமான, **स्वर्गौकस्सुन्दरीणां**-ஸ்வர்க்க லோகத்தில் வாழும் அழகிய பெண்களின், **वल्गद्भूषाणि**- அசையும் ஆபரணங்களை உடையவைகளும், **वक्त्राम्बुजपरिविगलन्मुग्ध-गीतामृतानि**-தாமரைபோன்ற முகத்திலிருந்து வெளிவரும் அழகிய அமிருதம்போன்ற கானங்களை உடையவைகளும் **भुजविधुति**-ஹஸ்தங்களை அசைத்தல் (அபிநயம்), **पदन्यास**-பாதங்களை எடுத்து வைத்தல், **भावावलोक**-சிருங்காரம் முதலான பாவங்களுடன் பார்வை இவைகளால், **प्रत्युद्यत्** - உண்டாகும், **प्रीति** -ஸந்தோஷத்தால், **माद्यत्** -மதம் கொண்ட **प्रमथनटनटी** -ப்ரமத கணங்களிலுள்ள நடர்களாலும் நர்த்தகிகளாலும், **दत्त**-கொடுக்கப்பட்ட, **संभावनानि**-நன்மதிப்பை உடையவைகளாயுமுள்ள, **नृत्यानि**-நர்த்தனங்களை, **नित्यं**- எப்பொழுதும், **उपासे**-தியானம் செய்கிறேன்.

ஸ்ரீ பரமேசுவரனும் பார்வதியும் அமர்ந்திருக்கும் ஸபையில் ஸ்வர்க்கலோகத்தில் வஸிக்கும் அழகிய அப்ஸர ஸ்திரீகள் ஈசுவர ஸேவையாகவே எண்ணி நாட்யமாடுகின்றனர். அழகிய சரீரமுள்ள அவர்கள் அணிந்துள்ள அலங்காரங்கள் நாட்டியம் ஆடும்பொழுது அசைகின்றன. இது பார்ப்பதற்கு மனோக்ஞமாக இருக்கிறது. அவர்களின் முகாரவிந்தத்திலிருந்து வெளி வரும் கானம் கர்ணாமிருதமாக இருக்கிறது. ஹஸ்தாபிநயம், பாதந்யாஸம், நன்கு பாவங்களைக் காட்டுகின்ற பார்வைகள் இவைகளைப் பார்த்து ஆனந்த பரவசர்களாக ப்ரமதகணங்களிலுள்ள நடனக்கலையில் தேர்ந்த ஆண்களும் பெண்களும் மெச்சுகின்றனர். இவ்விதமான நர்த்தனங்களை தியானிக்கிறேன்.

(37)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நாரதகானம் :—

स्थानप्राप्त्या स्वराणां किमपि विशदतां व्यञ्जयन्मञ्जुवीणा-
स्वानावच्छिन्नतालक्रममममृतमिवास्वाद्यमानं शिवाभ्याम् ।
नानारागातिहृद्यं नवरसमधुरस्तोत्रजातानुविद्धं
गानं वीणामहर्षेः कलमतिललितं कर्णपूरायतां नः ॥ ३८ ॥

ஸ்தான ப்ராப்த்யா ஸ்வராணும் கிமபி விஸுததாம் வ்யஞ்ஜயன் மஞ்ஜுவீணு
ஸ்வானுவச்சின்ன தாள க்ரமமம்ருதமிவாஸ்வாத்யமானம் ஶிவாப்யாம் ।
நாநா ராகாதிஹ்ருத்யம் நவரஸ மதுர ஸ்தோத்ர ஜாதானுவித்தம்
கானம் வீணுமஹர்ஷே: கலமதிலலிதம் கர்ணபூராயதாம் ந: ॥

स्थानप्राप्त्या-அதனதன் ஸ்தானங்களை அடைவதால், **स्वराणां**-ஸ்வரங்களின், **विशदतां**-தெளிவாக இருக்கும் தன்மையை, **किमपि**-வர்ணிக்க முடியாதபடி, **व्यञ्जयत्**-எடுத்துக்காட்டுகின்றதும், **मञ्जुवीणा**-அழகிய வீணையின், **स्वानावच्छिन्न**-நாதத்துடன் சேர்ந்த, **तालक्रमं**-தாள வரிசையை உடையதும், **नानारागातिहृद्यं**-பலவிதமான ராகங்களால் மனதிற்கு மிகவும் இன்பத்தைத் தருவதும், **नवरसमधुर**-ஒன்பது ரஸங்களுடன் கூடிய இனிமையான, **स्तोत्रजातानुविद्धं**-பல ஸ்தோத்ரங்களுடன் கூடியதும், **शिवाभ्यां**-பார்வதீ பரமேசுவரர்களால், **अमृतमिव**-அமிருதத்தைப்போல, **आस्वाद्यमानं**- அனுபவிக்கப்படுகிறதும், **कलं**-அவ்யக்தமானதும், **अतिललितं**-மிகவும் லலிதமானதுமான, **वीणामहर्षेः**-வீணையுடன் ஸஞ்சரிக்கும் நாரதரின், **गानं**-கானமானது, **नः**-நமக்கு, **कर्णपूरायतां**-காதுக்கு ஆபரணமாயிருக்கட்டும்.

பரமசிவனுடைய ஸபையில் நடைபெறும் நாரத மஹரிஷியின் வீணுகானம் நம் காதுகளுக்கு ஆபரணமாக இருக்கட்டும். இந்த சுலோகத்தில் 'நாரதர்' என்ற பெயர் குறிப்பிடப்படா விட்டாலும், மஹரிஷிகளுள் நாரதர் ஒருவரே வீணுகானம் செய்கிறவரானபடியால் 'வீணு மஹரிஷி' என்ற பதம் நாரதரைக்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

குறிக்கிறது. அழகிய வீணையின் நாதத்திற்குத் தகுந்தபடி தாள வரிசைகளுடனும், அதனதன் ஸ்தானங்களை அடைவதால் ஸ்வரங்கள் தெளிவாகவும் இனிமையாகவும் இருக்கும்படியும் வீணாகானம் நடைபெறுகிறது. பலவித ராகங்களாலும் நவரஸ பரிதமான ஸ்தோத்ரங்களாலும் லலிதமும் இனிமையும் கலந்த அந்த வீணாகானத்தை அமிருதத்தைப் பருகுவது போல் பார்வதீ பரமேசுவரர்கள் கேட்டு இன்புறுகின்றனர். இந்த நாரதரின் வீணாகானத்தைக் கேட்பதுதான் காதுகளுக்குச் சிறப்பையளிக்கக் கூடியது. (38)

முரஜ நாதம்:—

चेतो जातप्रमोदं सपदि विदधती प्राणिनां वाणिनीनां
पाणिद्वन्द्वाग्रजाग्रत्सुललितरणितस्वर्णतालानुकूला ।
स्वीयारावेण पाथोधररवपटुना नादयन्ती मयूरीं
मायूरी मन्दभावं मणिमुरजभवा मार्जना मार्जयेन्नः ॥

சேதோ ஜாதப்ரமோதம் ஸபதி விதததீ ப்ராணிநாம் வாணிநீநாம்
பாணித்வந்த்வாக்ர ஜாக்ரத் ஸுலலித ரணித ஸ்வர்ண
தாளானுகூலா ।
ஸ்வீயாராவேண பாதோதரரவபடுநா நாதயந்தீ மயூரீம்
மாயூரீ மந்தபாவம் மணிமுரஜபவா மார்ஜநா மார்ஜயேந்ந: ॥

प्राणिनां-பிராணிகளின், **चेतः**-மனதை, **सपदि**-உடனேயே **जातप्रमोदं**-ஸந்தோஷமடைந்ததாக, **विदधती**-செய்கின்றதும், **वाणिनीनां**-நர்த்தகிகளின், **पाणिद्वन्द्वाग्र**-இருகைகளின் நுனியில் **जाग्रत्**-விளங்கும், **सुललित**-மிக அழகிய, **रणित**-நாதத்தை உடைய, **स्वर्णतालानुकूला**-ஸுவர்ண மயமான தாளவாத்தியத்திற்கு ஒத்ததாயும், **पाथोधररव**-மேகநாதம்போல், **पटुना**-நன்கு ஒலிக்கும், **स्वीयारावेण**-தன் ஒலியால், **मयूरीं**-பெண்மயிலை, **नादयन्ती**-சப்தமிடச்செய்கின்றதும், **मायूरी**-மயிலுக்குப்பிரியமுமான, **मणिमुरजभवा**-ரத்னக்கற்கள் பதித்த முரஜவாத்யத்திலிருந்து உண்டான, **मार्जना**-ஒலி, **नः**-நம்முடைய, **मन्दभावं**-அறியாமையை, **मार्जयेत्**-போக்கட்டும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பரமேசுவரனது திருச்சபையில் வாசிக்கும் முரஜ வாத்யத்தின் நாதம் நம் அறியாமையைப் போக்கட்டும். நர்த்தகிகள் தங்கள் இரு கைகளில் விளங்கும் ஸுவர்ண தாள வாத்தியத்திலிருந்து கைகளின் நுனியால் எழுப்பும் தாளத்திற்கு ஒற்றுமையாக முரஜ வாத்யம் ஒலிக்கிறது. மேகத்தின் ஒலிபோன்ற இதன் நாதத்தால் பெண் மயில் ஆனந்தத்துடன் 'கேகா' என்று அகவுகிறது. இந்த நாதத்தைக்கேட்டவுடனேயே எல்லா பிராணிகளுடைய மனதிலும் ஸந்தோஷம் ஏற்படுகிறது. (39)

(அ) கடைசியில் பகவத் பக்தர்கள் யாவரையும் வணங்குகிறார்:—

देवेभ्यो दानवेभ्यः पितृमुनिपरिषत्सिद्धविद्याधरेभ्यः
साध्येभ्यश्चारणेभ्यो मनुजपशुपतज्ञातिकीटादिकेभ्यः ।
श्रीकैलासप्ररूढास्तृणविटपिमुखाश्चापि ये सन्ति तेभ्यः
सर्वेभ्यो निर्विचारं नतिमुपरचये शर्वपादाश्रयेभ्यः ॥ ४० ॥

தேவேப்யோ தானவேப்ய: பித்ரு முனி பரிஷத் ஸித்த
வித்யாதரேப்ய:
ஸாத்யேப்யச்சாரணேப்யோ மனுஜ பஸு பதஜ்ஜாதி
கீடாதிகேப்ய: ।
ஸ்ரீகைலாஸ ப்ரரூடாஸ்த்ருண விடபிமுகாச்சாபி யே ஸந்தி தேப்ய:
ஸர்வேப்யோ நிர்விசாரம் நதிமுபரசயே ஶர்வ பாதாச்ரயேப்ய: ॥

देवेभ्यः-தேவர்களுக்கும், **दानवेभ्यः**-அஸுரர்களுக்கும், **पितृ**-பித்ருக்கள், **मुनि**-முனிவர் இவர்களின், **परिषत्**-கூட்டம், **सिद्ध**-ஸித்தர், **विद्याधरेभ्यः**-வித்யாதரர் இவர்களுக்கும், **साध्येभ्यः**-ஸாத்யர்களுக்கும், **चारणेभ्यः**-சாரணர்களுக்கும், **मनुज**-மனிதர், **पशु**-மிருகம், **पतज्ञाति**-பறவை இனம், **कीटादिकेभ्यः**-புழு முதலியவைகளுக்கும், **ये**-எந்த, **तृणविटपिमुखाः**-புல், மரம் முதலியவைகள், **श्रीकैलासप्ररूढाः**-ஸ்ரீ கைலாஸத்தில் முளைத்து, **सन्ति**-இருக்கின்றனவோ, **तेभ्यश्चापि**-அவைகளுக்கும், **शर्वपादाश्रयेभ्यः**-பரமசிவனின் திருவடிகளை அண்டிய, **सर्वेभ्यः**-எல்லாவற்றிற்கும், **निर्विचारं**-ஆலோசனையில்லாமல், **नति**-நமஸ்காரத்தை, **उपरचये**-செய்கிறேன்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பரமசிவனுடைய திருவடிகளை அண்டியவர்கள் எப்பிறவியில் இருந்தபோதிலும் அவர்களுடைய ஜாதி, குலம், கௌரவம், ஐசுவர்யம் முதலான ஒன்றையும் கவனியாமல், அவர்கள் மேலான நிலையிலிருந்தாலும் தாழ்ந்த நிலையிலிருந்தாலும் அவர்கள் பகவத் பக்தர்களாயிருந்தால் அவர்களை வணங்குகிறேன். அதாவது தேவர்கள், அஸுரர்கள், பித்ருக்கள், முனிவர்கள், ஸித்தர்கள், வித்யாதரர்கள், ஸாத்யர்கள், சாரணர்கள் முதலான உயர் பிறவியிலுள்ளவர்களுக்கும், மத்யமஜாதியான மனிதர்களுக்கும் மிருகம், பறவை, புழு முதலான கீழ்ப்பிறவியிலுள்ளவர்களுக்கும் நமஸ்காரம். இதுமட்டுமா! பகவான் வாஸம்செய்யும் கைலாஸத்தில் முளைத்த புல், பூண்டுகளுக்கும் விருக்ஷங்களுக்கும் நமஸ்காரம் செய்கிறேன். (40)

(அ) இந்த ஸ்தோத்ர பாடத்தின் பலன் கூறப்படுகிறது:—

ध्यायन्नित्थं प्रभाते प्रतिदिवसमिदं स्तोत्ररत्नं पठेद्यः
किं वा ब्रूमस्तदीयं सुचरितमथवा कीर्तयामः समासात् ।
संपज्जातं समग्रं सदसि बहुमतिं सर्वलोकप्रियत्वं
संप्राप्यायुःशतान्ते पदमयति परब्रह्मणो मन्मथारेः ॥ ४१ ॥

த்யாயன்னித்தம் ப்ரபாதே ப்ரதிதிவஸமிதம் ஸ்தோத்ரரத்னம்
படேத்ய:
கிம் வா ப்ரூமஸ்ததீயம் ஸுசரிதமதவா கீர்த்தயாம: ஸமாஸாத் l
ஸம்பஜ்ஜாதம் ஸமக்ரம் ஸதஸி பஹுமதிம் ஸர்வலோக
ப்ரியத்வம்
ஸம்ப்ராப்யாயுஶ்ஶதாந்தே பதமயதி பரப்ரஹ்மணோ
மன்மதாரே: ll

प्रतिदिवसं-ஒவ்வொருநாளும், **प्रभाते**-காலையில், **इत्थं**-இவ்வாறு, **ध्यायन्**-தியானம் செய்துகொண்டு, **इदं**-இந்த, **स्तोत्ररत्नं**-சிறந்த ஸ்தோத்திரத்தை, **यः**-எவன், **पठेत्**-படிப்பானோ, **तदीयं**-அவனுடையதான, **सुचरितं**-புண்யத்தை, **किं वा ब्रूमः**-என்னவென்று சொல்வோம்? **अथवा**-அல்லது, **समासात्**-சுருக்கமாக, **कीर्तयामः**-சொல்கிறோம். **समग्रं**-நிறைந்த, **संपज्जातं**-எல்லாச் செல்வங்களையும், **सदसि**-ஸபையில், **बहुमतिं**-நன்மதிப்பையும், **सर्वलोकप्रियत्वं**-எல்லா ஜனங்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

களுக்கும் பிரியனாக இருக்கும் தன்மையையும், संप्राप्य-அடைந்து, आयुश्शतान्ते-நூறு வயது ஆயுளைப்பெற்று அதன் முடிவில், परब्रह्मण:-பரப்ரஹ்மமான, मन्मथारे:-பரம சிவனின், पदं-ஸ்தானத்தை, अयति-அடைகிறான்.

ப்ரதி தினமும் காலையில் இதில் கூறியுள்ளபடி பகவானை தியானம் செய்துகொண்டு இந்தச் சிறந்த ஸ்தோத்ரத்தைப் பாராயணம் செய்பவனின் புண்யத்தை அளவிட்டுக் கூறவே முடியாது. ஆனாலும் சுருக்கிக்கூறலாம். அதாவது நிறைந்த எல்லாச் செல்வங்களையும் ஸபையில் மிகுந்த கௌரவத்தையும் எல்லா ஜனங்களுக்கும் ப்ரியனாக இருக்கும் தன்மையையும் பெற்று 100 வயது முடிய இவ்வுலகில் ஸுகமாக வாழ்ந்து பின்னால் பரப்ரஹ்மபதத்தை அடைவான் இந்த ஸ்தோத்திரத்தை படிப்பவன். *(41)*

ஸ்ரீ சிவபாதாதி கேசாந்த ஸ்தோத்ரம் முற்றும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ श्रीः ॥

श्री दक्षिणामूर्तिवर्णमालास्तोत्रम् ॥

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி வர்ணமாலா ஸ்தோத்ரம்

[ஸ்ரீ பகவத்பாதர் இயற்றி அருளியுள்ள மூன்று தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரங்களில் ஒரு தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம் 8வது மலரிலும், தக்ஷிணாமூர்த்யஷ்டகம் 9வது மலரிலும் வெளியாகியுள்ளது மூன்றாவதான இது 25 சுலோகங்கள் கொண்டது. 24 அக்ஷரங்கள் கொண்ட ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி மஹாமந்திரத்தில் உள்ள ஒவ்வொரு அக்ஷரமும் வரிசையாக இதிலுள்ள சுலோகங்களின் முதல் வர்ணமாக அமைந்துள்ளது. இது மத்தமயூர விருத்தத்தில் அமைந்துள்ளது. கடைசி சுலோகத்தில் இந்த விபரத்தைக் கூறி பரமாத்மாவிடம் இந்த ஸ்துதியை அர்ப்பணம் செய்கிறார். உபநிஷத்திலுள்ள அநேகம் கருத்துக்களை இதில் விளக்குவதுடன் ஈசுவரனை ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி நமது ஆத்மஸ்வரூபம்தான் என்று கூறி அத்வைத தத்வத்தையும் உபதேசிக்கிறார்.]

ॐमित्येतद्यस्य बुधैर्नाम गृहीतं
यद्भासेदं भाति समस्तं वियदादि ।
यस्याज्ञातः स्वस्वपदस्था विधिमुख्या-
स्तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ १ ॥

ஓமித்யேதத் யஸ்ய புதைர் நாம க்ருஹீதம்
யத்பாஸேதம் பாதி ஸமஸ்தம் வியதாதி ।
யஸ்யாக்ஞாத: ஸ்வஸ்வபதஸ்தா விதிமுக்யா:
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

ओमिति–'ஓம்' என்ற, एतत्–இந்த, यस्य–எவருடைய, नाम–பெயர், बुधैः–ஞானிகளால், गृहीतं–ஸ்வீகரிக்கப்பட்டதோ यद्भासा–எவருடைய காந்தியால், वियदादि–ஆகாசம் முதலான इदं समस्तं–காணப்படும் இந்த பிரபஞ்சம் முழுவதும், भाति–விளங்குகிறதோ, यस्य–எவருடைய, आज्ञातः–உத்தரவினால், विधिमुख्याः–பிரஹ்மா முதலானவர்கள், स्वस्वपदस्थाः–தம் தம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்தானத்தில் இருக்கிறார்களோ, तं-அந்த, प्रत्यञ्चं-பிரத்ய காத்மஸ்வரூபியான, दक्षिणवक्त्रं-தக்ஷிணாமூர்த்தியை, कलयामि-தியானம் செய்கிறேன்.

அறிவிற்சிறந்த பெரியோர்கள் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை 'ஓம்' என்ற பெயரால் வர்ணிக்கிறார்கள். तस्य वाचकः प्रणवः என்ற யோகஸூத்ரமும் 'ஓம்' என்ற பிரணவத்தை ஈசுவரனுடைய நாமாவாகக் கூறுகிறது 'ओमित्युमेति युवयोरभिधानमेकं' என்று காளிதாஸ மஹாகவியும் இதையே கூறுகிறார். ஈசுவரனுக்கு எத்தனையோ நாமாக்கள் இருந்தாலும் இதுதான் உபநிஷத்தில் கூறப்பட்ட நாமா. இதை ஜபித்து தியானித்தால் வெகுசீக்கிரத்தில் அவர் ப்ரஸன்னராகி அபீஷ்டங்களைப் பூர்த்திசெய்கிறார். ஞானவடிவான அவருடைய சைதன்ய ப்ரகாசத்தால்தான் ஆகாசம் முதலான காரிய பிரபஞ்சம் முழுவதும் விளங்குகிறது. 'तस्य भासा सर्वमिदं विभाति'. அவருடைய ஆக்ஞைக்குக் கட்டுப்பட்டுத்தான் ப்ரஹ்மா முதலான யாவரும் தம்தம் அதிகாரத்தில் இருந்துகொண்டு உலகை நடத்துகின்றனர். தெற்கு முகமாக இருப்பதால் 'தக்ஷிணவக்த்ரர்' என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. அவருடைய ஸ்வரூபத்தையும் நமது ஜீவஸ்வரூபத்தையும் நன்கு சோதித்து உபாதிகளை விலக்கிப்பார்த்தால் சைதன்ய ஸ்வரூபம் ஒன்றேதான் மிஞ்சுகிறது. ஆகையால் அவரேதான் நமது ப்ரத்யகாத்ம ஸ்வரூபமாக விளங்குகிறார். (1)

नम्राङ्गाणां भक्तिमतां यः पुरुषार्था-
न्दत्वा क्षिप्रं हन्ति च तत्सर्वविपत्तीः ।
पादाम्भोजाधस्तनितापस्मृतिमीशं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ २ ॥

நம்ராங்காணாம் பக்திமதாம் ய: புருஷார்த்தான்
தத்வா க்ஷிப்ரம் ஹந்தி ச தத்ஸர்வ விபத்தீ: ।
பாதாம்போஜாதஸ்தனிதாபஸ்ம்ருதிமீசம்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

यः-எவர், नम्राङ्गाणां-வணங்கிய சரீரமுள்ள, भक्तिमतां-பக்தியுடன் கூடியவர்களுக்கு, पुरुषार्थान्-எல்லாப் புருஷார்த்

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தங்களையும், **दत्वा**-கொடுத்து, **तत्सर्वविपत्तीश्च**-அவர்களின் எல்லா ஆபத்துக்களையும், **क्षिप्रं**-விரைவில், **हरति**-போக்கடிக்கிறதோ, **पादाम्भोजाधस्तनित**-தாமரைபோன்ற திருவடிகளுக்குக்கீழே இருக்கும்படி செய்யப்பட்ட, **अपस्मृतिं**-அபஸ்மாரத்தை உடையவரும், **ईशं**-ஈசுவரனுமான, **तं**-அந்த, **प्रत्यञ्चं**-ஆத்மஸ்வரூபியான, **दक्षिणवक्त्रं**-தக்ஷிணாமூர்த்தியை **कलयामि**-தியானிக்கிறேன்.

மிகுந்த பக்தியுடன் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை வணங்குபவர்களுக்கு அவரது அருளால் எல்லா ஆபத்துக்களும் விலகும். தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற நான்கு புருஷார்த்தங்களையும் அவர்கள் பெறுவார்கள் படுத்துக்கொண்டிருக்கும் நிலையிலுள்ள ஒரு புருஷனை எழுந்திருக்கவொட்டாமல் தமது காலால் மிதித்துக்கொண்டிருப்பதை தக்ஷிணாமூர்த்தி வடிவத்தில் காணலாம். அவனே அபஸ்மாரரோக புருஷன். தக்ஷிணாமூர்த்தியை பக்தியுடன் வணங்குபவர்களுக்கு அபஸ்மார ரோகம் வராது. மற்ற எவ்விதமான ரோகமும் அண்டாது என்பதை இது காட்டுகிறது. நமது ஆத்மஸ்வரூபியான அந்த தக்ஷிணாமூர்த்தியை தியானம் செய்கிறேன். (2)

मोहध्वस्त्यै वैणिकवैयासिकिमुख्याः
संविन्मुद्रापुस्तकवीणाक्षगुणान्यम् ।
हस्ताम्भोजैर्बिभ्रतमाराधितवन्त-
स्तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ ३ ॥

மோஹத்வஸ்த்யை வைணிக வையாஸிகிமுக்யா:
ஸம்வின்முத்ரா புஸ்தக வீணாக்ஷகுணான் யம் ।
ஹஸ்தாம்போஜைர் பிப்ரதமாராதிதவந்த:
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

वैणिकवैयासिकिमुख्याः-வீணாகானம் செய்யும் நாரதர், வியாஸர் குமாரரான சுகர் முதலானவர்கள், **मोहध्वस्त्यै**-அஞ்ஞானம் நாசமடைவதற்காக, **संविन्मुद्रा**-சின்முத்ரை, **पुस्तक**-புஸ்தகம், **वीणा**-வீணை, **अक्षगुणान्**-ஜபமாலை இவை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

களை, **हस्ताम्भोजैः**–தாமரைபோன்ற கைகளால், **बिभ्रत्**–தரித்துக்கொண்டிருக்கும், **यं**–எவரை, **आराधितवन्तः**–ஆராதித்தார்களோ, **तं**–அந்த, **प्रत्यञ्चं**-பிரத்யகாத்மஸ்வரூபியான **दक्षिणवक्त्रं**–தக்ஷிணாமூர்த்தியை, **कलयामि**–தியானம் செய்கிறேன்.

தக்ஷிணாமூர்த்தி தமது நான்கு கைகளிலும் சின்முத்ரை புஸ்தகம், வீணை, ஜபமாலை இவைகளை தரித்திருக்கிறார். கட்டை விரலையும் ஆள்காட்டி விரலையும் ஒன்றுசேர்த்து ஜீவனும் ஈசவரனும் ஒன்றே என்ற தத்வத்தை விளக்கும் முத்ரை சிஷ்யர்களுக்கு ஞானத்தை உண்டுபண்ணுவதால் இதற்கு ஸம்வின்முத்ரை என்றும் சின்முத்ரை என்றும் பெயர். பக்தர்களில் சிறந்த நாரதரும், ஞானிகளில் சிறந்த சுகரும் இந்த தக்ஷிணாமூர்த்தியை ஆராதித்துத்தான் அக்ஞானம் விலகப்பெற்று ஞானமடைந்தனர். எப்பொழுதும் கையில் வீணையை ஏந்திக்கொண்டு கானம் செய்யும் நாரதர் வீணாபாணியான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை உபாஸிப்பதும், பாலரான சுகர் தம்மைப்போலவே சிறு வயதினரான தக்ஷிணாமூர்த்தியை உபாஸிப்பதும் மிக்கப் பொருத்தமுள்ளது. நாரதரும் சுகரும் உபாஸித்த தக்ஷிணாமூர்த்தியை எனது ஆத்மஸ்வரூபமாக தியானிக்கிறேன். (3)

भद्रारूढं भद्रदमाराधयितॄणां
भक्तिश्रद्धापूर्वकमीशं प्रणमन्ति ।
आदित्या यं वाञ्छितसिद्ध्यै करुणाब्धिं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ ४ ॥

பத்ராரூடம் பத்ரதமாராதயித்ரூணாம்
பக்தி ச்ரத்தா பூர்வகமீஶம் ப்ரணமந்தி ।
ஆதித்யா யம் வாஞ்ச்சித ஸித்த்யை கருணாப்திம்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

भद्रारूढं–விருஷபவாஹனத்தில் ஏறி அமர்ந்திருப்பவரும் **आराधयितॄणां**–பூஜிப்பவர்களுக்கு, **भद्रदं**–மங்களங்களைத் தருபவரும், **करुणाब्धिं**–கருணைக்கடலுமான, **यं**–எந்த, **ईशं**–ஈசுவரனை, **आदित्याः**–தேவர்கள், **वाञ्छितसिद्ध्यै**-அபீஷ்டம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நிறைவேறுவதற்காக, **भक्तिश्रद्धापूर्वकं**–பக்தி, சிரத்தை இவைகளுடன்கூட, **प्रणमन्ति**–வணங்குகிறார்களோ, **तं**–அந்த, **प्रत्यञ्चं**–ஆத்மஸ்வரூபியான, **दक्षिणवक्त्रं**–தக்ஷிணாமூர்த்தியை **कलयामि**–தியானிக்கிறேன்.

விருஷபவாஹனரான பரமேசுவரன் தன்னைப் பூஜிக்கிறவர்களுக்கு எல்லா மங்களங்களையும் கொடுக்கிறார். கருணைக் கடலான அந்த ஈசனைத் தங்கள் அபீஷ்டங்கள் நிறைவேறுவதற்காக தேவர்கள் பக்திசிரத்தையுடன் வணங்குகிறார்கள். பிரத்யகாத்மஸ்வரூபியான அந்த தக்ஷிணாமூர்த்தியை தியானம் செய்கிறேன். மனிதர்களுடைய இஷ்டங்களைப் பூர்த்திசெய்யும் தேவதைகளும் தங்கள் அபீஷ்டம் நிறைவேற இவரையே போற்றுகிறார்கள். இவருடைய பெயரான 'சிவம்' என்பது மங்களத்தைக் குறிக்கும். வாஹனமான விருஷபத்தைக்குறிக்கும் 'பத்ர' என்ற பதமும் மங்களத்தைக் குறிக்கும். அவருடைய தேவியான பார்வதிக்கும் 'ஸர்வமங்களா' என்று பெயர். ஆகையால் அவர், பஜிப்பவருக்கு மங்களத்தையே தருவார். (4)

गर्भान्तःस्थाः प्राणिन एते भवपाश-
च्छेदे दक्षं निश्चितवन्तः शरणं यम् ।
आराध्यांघ्रिप्रस्फुरदम्भोरुहयुग्मं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ ५ ॥

கர்ப்பாந்தஸ்த்தா: ப்ராணின ஏதே பவபாஶச்
சேதே தக்ஷம் நிச்சிதவந்த: ஶரணம் யம் ।
ஆராத்யாங்க்ரி ப்ரஸ்புரதம்போருஹ யுக்மம்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

गर्भान्तःस्थाः–கர்ப்பத்திற்குள் இருக்கும், **एते**–இந்த, **प्राणिनः**–பிராணிகள், **यं**–எவரை, **भवपाशच्छेदे**–ஸம்ஸார பந்தத்தை அறுப்பதில், **दक्षं**–ஸமர்த்தராகவும், **शरणं**–ரக்ஷகராகவும், **निश्चितवन्तः**–தீர்மானித்திருக்கிறார்களோ, **आराध्यांघ्रि-प्रस्फुरदम्भोरुहयुग्मं**–பூஜிக்கத்தக்க தாமரைபோல் விளங்கும் இரு திருவடிகளை உடைய, **तं**–அந்த, **प्रत्यञ्चं**–ஆத்மஸ்வரூபி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யான, दक्षिणवक्त्र-தக்ஷிணமூர்த்தியை, कलयामि-தியானம் செய்கிறேன்.

கர்ப்பத்திற்குள் வாஸம்செய்யும் ஸமயம் பிராணிகள் பிறவித் துன்பத்தை அடியோடு ஒழிக்கும் சக்தியுள்ளவர் பரமசிவன் தான் என்று தீர்மானித்து இவரையே வழிபடுகின்றனர். எல்லோராலும் போற்றத் தகுந்த திருவடித் தாமரைகளையுடைய ஆத்ம ஸ்வரூபியான தக்ஷிணமூர்த்தியை தியானிக்கிறேன்.

[கர்ப்பத்தில் வஸிக்கும் ஜீவனுக்கு 9வது மாஸத்தில் சரீரத்தில் எல்லா அவயவங்களும் பூர்ணமாக ஏற்பட்டு தன்னைப்பற்றிய அறிவும் ஏற்படுகிறது. முன்னால் பல பிறவிகளில் தான் பட்ட கஷ்டங்களையும், தான் செய்த தீவினைகளையும் எண்ணி எண்ணி வருந்துகிறான். கர்ப்பத்தில் சிறிய இடத்தில் அசையத் திரும்ப முடியாமல் கட்டப்பட்டு பித்தாக்னியாலும் மற்றும் பலவிதமாயும் துன்பப்படுகிறான். தாய் காரமான உணவை உட்கொண்டால் இவனுக்குத் துன்பம் ஏற்படுகிறது. இதைப் போக்கத் தன்னால் ஒன்றும் செய்யமுடியாத நிலையிலிருக்கிறான். கர்ப்பத்திலிருந்து வெளியே வரும் வகையை எண்ணினாலோ அப்பப்ப! மிகவும் பயங்கரமாயிருக்கிறது. இவ்விதம் எண்ணி எண்ணி மனம் நொந்து "இதுவரை எத்தனையோ பிறவிகளை வீணாகக் கழித்து விட்டேன். இந்தத்தடவை கர்ப்பத்திலிருந்து வெளியேவந்ததும் மறுபடியும் பிறவி வராமலிருப்பதற்கு வேண்டிய ஸாதனங்களை அனுஷ்டிப்பேன்" என்று உறுதிகொள்கிறான் எந்த உபாயத்தை அனுஷ்டிக்கலாம் என்று அவன் ஆலோசிக்கும்பொழுது பசுபதியான பரமேச்வரனை சரணமடைந்தால்தான் ஸம்ஸார பந்தம் விலகும் என்ற தீர்மானம் ஏற்படுகிறது. அப்பொழுது 'यदि योन्याः प्रमुच्येऽहं तत्प्रपद्ये महेश्वरम्। अशुभक्षयकर्तारं फलमुक्तिप्रदायकम्॥' "இந்த கர்பத்திலிருந்து விடுபட்டு வெளியே வருவேனேயாகில் அப்பொழுது கட்டாயம் எல்லாத் துன்பங்களையும் போக்கி சிறந்த பலனான முக்தியை அளிக்கும் மஹேச்வரனை சரணமடைவேன்" என்று ஸங்கல்பம் செய்கிறான்.] (5)

वक्त्रं धन्याः संसृतिवार्धेरतिमात्रा-
 द्भीताः सन्तः पूर्णशशाङ्कद्युति यस्य।
सेवन्तेऽध्यासीनमनन्तं वटमूलं
 तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि॥ ६॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வக்த்ரம் தன்யா: ஸம்ஸ்ருதிவார்த்தேரதிமாத்ராத்
பீதா: ஸந்த: பூர்ண ஶஶாங்கத்யுதி யஸ்ய ।
ஸேவந்தேऽத்யாஸீநமநந்தம் வடமூலம்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

संसृतिवार्धेः-பிறவிக்கடலிலிருந்து, **अतिमात्रात्**-மிகவும் **भीताः**-பயந்த, **धन्याः**-பாக்யசாலிகளான, **सन्तः**-ஸாதுக்கள், **यस्य**-எவருடைய, **पूर्णशशाङ्कद्युति**-பூர்ண சந்திரன்போன்ற காந்தியுள்ள, **वक्त्रं**-முகத்தை, **सेवन्ते**-ஸேவிக்கிறார்களோ, **तं**-அந்த, **अनन्तं**-நாசமற்றவரும், **वटमूलं अध्यासीनं**-ஆலமரத்தடியில் அமர்ந்திருப்பவரும், **प्रत्यञ्चं**-ஆத்மஸ்வரூபியுமான, **दक्षिणवक्त्रं**-தக்ஷிணாமூர்த்தியை, **कलयामि**-தியானிக்கிறேன்.

ஸம்ஸாரம் என்பது பெரிய ஆழ்கடல். இதில் அமிழ்ந்தவர்கள் ஈசனது அருளில்லாமல் கரையேற முடியாது. ஆகையால் இந்த பிறவிக்கடலைக் கண்டு மிகுந்த பயங்கொண்ட சிலர் பூர்ண சந்திரன்போல் ஸகல தாபங்களையும் போக்கும் பகவானின் வதனாரவிந்தத்தை ஸேவிக்கிறார்கள். இவர்களே பாக்யசாலிகள். இவருக்கு நாசமே கிடையாது. ஆலமரத்தடியில் அமர்ந்திருக்கும் இந்த ஆத்மஸ்வரூபியான தக்ஷிணாமூர்த்தியை தியானிக்கிறேன். பூர்ணசந்திரனைக் கண்டால் கடல் மேலே எழும்பும். பகவானின் முகசந்திரனைக்கண்டால் பிறவிக்கடல் வற்றிவிடும். (6)

तेजस्स्तोमैरङ्गदसंघट्टितभास्व-
न्माणिक्योत्थैर्भासितविश्वो रुचिरैर्यः ।
तेजोमूर्तिं खानिलतेजःप्रमुखाब्धिं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ ७ ॥

தேஜஸ்ஸ்தோமைரங்கத ஸங்கட்டித பாஸ்வன்
மாணிக்யோத்தைர் பாஸிதவிச்வோ ருசிரைர் ய: ।
தேஜோமூர்த்திம் கானிலதேஜ: ப்ரமுகாப்திம்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

यः-எவர், **अङ्गदसंघट्टित**-தோள்வளைகளில் பதிப்பிக்கப்பட்ட, **भास्वन्माणिक्योत्थैः**-பிரகாசிக்கிற மாணிக்க ரத்னங்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

களிலிருந்து கிளம்பும், रुचिरैः-அழகிய, तेजस्स्तोमैः-ஒளிக் கூட்டங்களால், भासितविश्वः-பிரகாசிக்கப்பட்ட பிரபஞ்சத்தை உடையவராக இருக்கிறாரோ, तेजोमूर्ति-ஒளியையே உருவமாகக்கொண்டவரும், खानिलतेजःप्रमुखाब्धि-ஆகாசம், வாயு, தேஜஸ் முதலானவைகளுக்கு ஆதாரமாயுமிருக்கும், तं-அந்த, प्रत्यञ्चं-ஆத்மஸ்வரூபியான, दक्षिणवक्त्रं-தக்ஷிணாமூர்த்தியை, कलयामि-தியானிக்கிறேன்.

பகவானுடைய ஸ்வரூபம் தேஜோமயம். அதிலும் அவருடைய தோள்வளைகளில் நன்கு பதிக்கப்பட்ட ஒளியுள்ள மாணிக்க ரத்னங்களிலிருந்து கிளம்புகின்ற அழகிய ஒளிக் கூட்டங்களால் உலகம் முழுவதும் பிரகாசிக்கப்படுகிறது. ஆகாசம், வாயு, தேஜஸ் முதலியவைகளுக்குக் கடலாக இருக்கிறார் ஈசுவரன். தண்ணீரைத் தாங்கிக்கொண்டு அதற்கு ஆதாரமாக ஸமுத்ரம் இருப்பதுபோல் ஆகாசம் முதலான பூதங்கள், பௌதிகமான பிரபஞ்சம் எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு ஆதாரமாக இருக்கும் ஆத்மரூபியான தக்ஷிணாமூர்த்தியை வணங்குகிறேன். (7)

दध्याज्यादिद्रव्यककर्माण्यखिलानि
त्यक्त्वा काङ्क्षां कर्मफलेष्वत्र करोति ।
यज्जिज्ञासारूपफलार्थी क्षितिदेव-
स्तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ ८ ॥

தத்யாஜ்யாதி த்ரவ்யக கர்மாண்யகிலானி
த்யக்த்வா காங்க்ஷாம் கர்மபலேஷ்வத்ர கரோதி ।
யஜ்ஜிஜ்ஞாஸாரூபபலார்த்தீ க்ஷிதிதேவஸ்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

यज्जिज्ञासारूपफलार्थी-எவரை அறியவேண்டுமென்ற தீவ்ரமான விருப்பத்தையே பலனாக அடைய ஆசைப்படும் क्षितिदेवः-பிராஹ்மணர், अत्र-இவ்வுலகில், कर्मफलेषु-அந்தந்த கர்மாக்களுக்கு ஏற்பட்ட பலன்களில், काङ्क्षां-ஆசையை, त्यक्त्वा-விட்டு, अखिलानि-ஸமஸ்தமான, दध्याज्यादिद्रव्यक-தயிர், நெய், இது முதலியவற்றை திரவ்யமாகக்கொண்ட,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

कर्माणि-கர்மாக்களை, **करोति**-செய்கிறாரோ, **तं**-அந்த, **प्रत्यञ्चं**-ப்ரத்யகாத்மஸ்வரூபியான, **दक्षिणवक्त्रं**-தக்ஷிணாமூர்த்தியை **कलयामि**-தியானிக்கிறேன்.

உலகில் சிறந்த பிராஹ்மணர்கள் தயிர், நெய் முதலான ஹவிஸ்ஸுகளைக்கொண்டு வைதிகமான பலவித கர்மாக்களைச் சிரத்தையுடன் அனுஷ்டித்துவருகின்றனர். இந்த கர்மாக்களுக்கு வேதத்தில் பலன் கூறப்பட்டுள்ளபோதிலும் அந்தப் பலனை இவர்கள் விரும்புவதில்லை. ஆனாலும் சித்தசுத்தி, வைராக்யம் முதலியவைகள்மூலம் ஈசுவர ஸ்வரூபத்தை நன்கு அறிவதில் தீவிர விருப்பம் ஏற்படுவதற்காகவே கர்மாக்களை அனுஷ்டிக்கின்றனர். அந்த ஆத்மஸ்வரூபியாயும் ஈசுவரனாயுமுள்ள தக்ஷிணாமூர்த்தியை தியானிக்கிறேன். (8)

क्षिप्रं लोके यं भजमानः पृथुपुण्यः
प्रध्वस्ताधिः प्रोज्झितसंसृत्यखिलार्तिः ।
प्रत्यग्भूतं ब्रह्म परं सन्रमते च
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ ९ ॥

க்ஷிப்ரம் லோகே யம் பஜமாந: ப்ருதுபுண்ய:
ப்ரத்வஸ்தாதி: ப்ரோஜ்ஜித ஸம்ஸ்ருத்யகிலார்த்தி: ।
ப்ரத்யக்பூதம் ப்ரஹ்ம பரம் ஸன் ரமதே ச
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

लोके-உலகில், **यं**-எவரை, **भजमानः**-பஜிக்கின்ற, **पृथुपुण्यः**-மிகுந்த புண்யம் செய்தவன், **क्षिप्रं**-விரைவில், **प्रध्वस्ताधिः**-தோஷங்கள் அழிந்து, **प्रोज्झितसंसृत्यखिलार्तिः**-ஸம்ஸாரத்தால் உண்டாகும் எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுபட்டவனாக **प्रत्यग्भूतं**-உள்ளே விளங்கும், **परं ब्रह्म सन्**-பரப்ரஹ்மமாக இருந்துகொண்டு, **रमते**-ஆனந்தம் அடைகிறானோ,**तं**-அந்த, **प्रत्यञ्चं**-ப்ரத்யகாத்ம ஸ்வரூபியான, **दक्षिणवक्त्रं**-தக்ஷிணாமூர்த்தியை, **कलयामि**-தியானிக்கிறேன்.

மிகுந்த புண்யம் செய்தவன்தான் தக்ஷிணாமூர்த்தியை பஜிப்பதில் ஈடுபடுவான். அவனுக்கு விரைவில் மனதிலுள்ள தோஷங்களெல்லாம் விலகி பிறவித் துன்பங்களெல்லாம் ஒழிந்து

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஜீவாத்மாபின்னமான பரப்ரஹ்மமாகவேயாகி எப்பொழுதும் ஆனந்தானுபவத்துடன் விளங்குகிறான். அந்த ப்ரத்யகாத்ம ஸ்வரூபியான தக்ஷிணாமூர்த்தியை தியானிக்கிறேன். (9)

णानेत्येवं यन्मनुमध्यस्थितवर्णा-
न्भक्ताः काले वर्णगृहीत्यै प्रजपन्तः ।
मोदन्ते संप्राप्तसमस्तश्रुतितन्त्रा-
स्तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ १० ॥

ணானேத்யேவம் யன்மனு மத்ய ஸ்தித வர்ணான்
பக்தா: காலே வர்ண க்ருஹீத்யை ப்ரஜபந்த: ।
மோதந்தே ஸம்ப்ராப்த ஸமஸ்த ச்ருதி தந்த்ராஸ்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

भक्ताः–பக்தர்கள், **वर्णगृहीत्यै**–சப்த ஞானம் ஏற்படுவதற்காக, **काले**–அந்தந்த காலத்தில், **णानेत्येवं**–ண, ந இது முதலான, **यन्मनुमध्यस्थितवर्णान्**-எவருடைய மந்திரத்தின் நடுவிலுள்ள வர்ணங்களை, **प्रजपन्तः**-நன்கு ஜபித்துக் கொண்டு, **संप्राप्तसमस्तश्रुतितन्त्राः**–எல்லா வேதங்களையும் சாஸ்திரங்களையும் அறிந்து, **मोदन्ते** – ஆனந்தமடைகிறார்களோ, **तं** – அந்த, **प्रत्यञ्चं** – ப்ரத்யகாத்மஸ்வரூபியான, **दक्षिणवक्त्रं**–தக்ஷிணாமூர்த்தியை, **कलयामि**–தியானிக்கிறேன்.

தக்ஷிணாமூர்த்தி மஹாமந்திரத்தில் 'ண' 'ந' இது முதலான அக்ஷரங்கள் நடுவில் இருக்கின்றன. பக்தர்கள் இந்த வர்ணங்களுடன் கூடிய மந்திரத்தை அந்தந்தக் காலத்தில் ஜபம் செய்கிறார்கள். இம்மந்திர ப்ரபாவத்தால் சப்தஞானம் ஏற்பட்டு எல்லா வேதங்களையும் சாஸ்திரங்களையும் நன்கு தெரிந்து கொண்டு ஸந்தோஷமடைகின்றனர். (10)

मूर्तिश्छायानिर्जितमन्दाकिनिकुन्द-
प्रालेयाम्भोराशिसुधाभूतिसुरेभा ।
यस्याभ्राभाहासविधादक्षशिरोधि-
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ ११ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மூர்த்திச்சாயா நிர்ஜித மந்தாகினி குந்த
ப்ராலேயாம்போராஸி ஸுதா பூதி ஸுரேபா ।
யஸ்யாப்ராபாஹாஸவிதள தக்ஷஸிரோதிம்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

यस्य-எவருடைய, **मूर्तिः**-வடிவம், **छाया**-காந்தியால், **निर्जित**-ஜயிக்கப்பட்ட, **मन्दाकिनी**-கங்கை, **कुन्द**-குந்தமலர், **प्रालेयाम्भोराशि**- பனிநீர் ஸமுத்ரம், **सुधा**-அமிருதம், **भूति**-விபூதி, **सुरेभा**-தேவயானையான ஐராவதம் இவைகளை உடையதோ, **अभ्राभाहासविधा**-நீருண்ட மேகத்தின் காந்தியைப்பழிக்கும் காரியத்தில், **दक्ष**-திறமையுள்ள, **शिरोधिं**-கழுத்தை உடைய, **तं**-அந்த, **प्रत्यञ्चं**-ப்ரத்யகாத்மாவான, **दक्षिणवक्त्रं**-தக்ஷிணாமூர்த்தியை, **कलयामि**- தியானிக்கிறேன்.

பகவானுடைய சரீரம் கங்கை, குந்தபுஷ்பம், பனி ஸமுத்ரம், அமிருதம். விபூதி, ஐராவதயானை இவைகளைக்காட்டிலும் வெளுப்பானது கழுத்துமட்டும் நீருண்டமேகம் போல் கருப்பானது. அப்பேற்பட்ட தக்ஷிணாமூர்த்தியை தியானிக்கிறேன்,

तप्तस्वर्णच्छायजटाजूटकटाह-
प्रोद्यद्वीचीवल्लिविराजत्सुरसिन्धुम् ।
नित्यं सूक्ष्मं नित्यनिरस्ताखिलदोषं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ १२ ॥

தப்தஸ்வர்ணச்சாய ஜடாஜூட கடாஹ
ப்ரோத்யத் வீசீவல்லி விராஜத் ஸுரஸிந்தும் ।
நித்யம் ஸூக்ஷ்மம் நித்யநிரஸ்தாகிலதோஷம்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

तप्तस्वर्णच्छाय-நெருப்பில் உருக்கிய ஸுவர்ணம்போன்ற காந்தியுள்ள, **जटाजूटकटाह**-பெரிய அகன்ற பாத்திரம் போன்ற ஜடாபந்தத்தில், **प्रोद्यत्** -கிளம்புகிற, **वीचीवल्लि**-கொடிபோன்ற அலைகளுடன், **विराजत्**-விளங்கும், **सुरसिन्धुं** தேவநதியான கங்கையை உடையவரும், **नित्यं**-அழிவற்ற

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வரும், **सूक्ष्मं**–ஸூக்ஷ்மமானவரும் (அறியமுடியாதவரும்), **नित्यनिरस्ताखिलदोषं**–எப்பொழுதும் எல்லா தோஷங்களும் விலகியவரும், **प्रत्यञ्चं**–ப்ரத்யகாத்மஸ்வரூபியுமான, **तं**–அந்த, **दक्षिणवक्त्रं**–தக்ஷிணாமூர்த்தியை, **कलयामि**–தியானம் செய்கிறேன்.

அக்னியில் உருக்கிய ஸுவர்ணம் போன்ற காந்தியுள்ள பகவானின் ஜடாபந்தத்தில் அலைகளுடன் கூடிய கங்கை தங்கி இருப்பது அகன்ற பெரிய பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பி வைத்திருப்பது போல் காக்ஷியளிக்கிறது. இந்த பகவானின் ஸ்வரூபத்திற்கு உத்பத்தி நாசம் இரண்டும் கிடையாது. நித்ய மான வஸ்து. இது ஸூக்ஷ்மம். சுலபமாய் இந்திரியங்களால் இவரை அறியமுடியாது. தோஷங்களெல்லாம் எப்பொழுதுமே இவரிடம் கிடையாது. அவ்விதமான ப்ரத்யகாத்மஸ்வரூபியான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை தியானிக்கிறேன். (12)

येन ज्ञातेनैव समस्तं विदितं स्या-
द्यस्मादन्यद्वस्तु जगत्यां शशशृङ्गम् ।
यं प्राप्तानां नास्ति परं प्राप्यमनादिं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ १३ ॥

யேந ஞாதேநைவ ஸமஸ்தம் விதிதம் ஸ்யாத்
யஸ்மாதன்யத் வஸ்து ஜகத்யாம் ஶஶச்ருங்கம் ।
யம் ப்ராப்தாநாம் நாஸ்தி பரம் ப்ராப்யமநாதிம்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

येन–எவர், **ज्ञातेनैव**–அறியப்பட்டதாலேயே, **समस्तं**–எல்லாம், **विदितं**–அறியப்பட்டதாக, **स्यात्**–ஆகுமோ, **जगत्यां**–உலகில், **यस्मात्**–எவரைக்காட்டிலும், **अन्यत्**–வேறான, **वस्तु**–பொருள், **शशशृङ्गं**–முயல் கொம்புபோன்றதோ, **यं**–எவரை, **प्राप्तानां**–அடைந்தவர்களுக்கு, **परं**–மேலான, **प्राप्यं**–அடைய வேண்டியது, **नास्ति**–இல்லையோ, **अनादिं**–பிறப்பற்ற, **तं**–அந்த, **प्रत्यञ्चं**–ப்ரத்யகாத்மஸ்வரூபரான, **दक्षिणवक्त्रं**–தக்ஷிணா மூர்த்தியை, **कलयामि**–தியானம் செய்கிறேன்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஈசுவர தத்வத்தை அறிந்துகொண்டதாலேயே எல்லாம் அறிந்ததாக ஆகிவிடும். மண் காரணப்பொருள். மண்ணிலிருந்து உண்டாகும் குடம், சட்டி, பானை முதலியவை காரியம் காரணமான மண்ணைத்தெரிந்துகொண்டால் அதன் காரியங்கள் எல்லாம் தெரிந்ததாக ஆகிவிடுகிறது. ஏனெனில் குடம், பானை முதலியவற்றிலும் இருப்பது மண்தான். மண்ணைத்தவிற வேறு ஒன்றும் குடத்தில் இல்லை. உருவமும் பெயரும்தான் மாறியிருக்கிறதே தவிற இருப்பது அதே மண்தான். இதுபோல் இந்த பிரபஞ்சம் எல்லாவற்றிற்கும் காரணம் ஈசுவரன். நாமரூபங்கள் வேருகத் தோன்றினாலும் ப்ரபஞ்சத்தில் இருப்பது ஈசுவர ஸ்வரூபம்தான். மண்ணைத் தெரிந்துகொண்டால் குடம் முதலியவற்றின் ஸ்வரூபம் தெரிவதுபோல் காரணமான ஈசுவரனைத் தெரிந்துகொண்டு விட்டால் கார்யமான பிரபஞ்சத்தின் தத்வம் தெரிந்துவிடும். ஈசுவரனே தான் பிரபஞ்சமாக காக்ஷியளிக்கிறுர். முயல் கொம்பு போலத்தான். ஈசுவரனைக்காட்டிலும் வேருன பிரபஞ்சமும் தத்வஞானத்தால் ஒருவன் இந்த ஈசுவர ஸ்வரூபத்தை அடைந்து விட்டால் அதன்பின் அவனுக்கு அடையவேண்டிய மேலான பதம் வேறென்றுமில்லை. (13)

मत्तो मारो यस्य ललाटाक्षिभवाग्नि-
स्फूर्जत्कीलप्रोषितभस्मीकृतदेहः ।
तद्भस्मासीद्यस्य सुजातः पटवास-
स्तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ १४ ॥

மத்தோ மாரோ யஸ்ய லலாடாக்ஷிபவாக்னி-
ஸ்பூர்ஜத்கீல ப்ரோஷித பஸ்மீக்ருததேஹ: ।
தத் பஸ்மாஸீத் யஸ்ய ஸுஜாத: படவாஸஸ்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

मत्तः–கர்வம்கொண்ட, **मारः**–காமன், **यस्य**–எவருடைய, **ललाटाक्षिभवाग्नि**–நெற்றிக்கண்ணிலிருந்து உண்டான நெருப்பிலிருந்து, **स्फूर्जत्**–வெடித்துக்கிளம்பிய, **कील**–பொரியால், **प्लोषित**–எரிக்கப்பட்டு, **भस्मीकृतदेहः**–சாம்பலாக்கப்பட்ட சரீரமுள்ளவனுக ஆய்விட்டானே, **तद्भस्म**–அந்த சாம்பல், **यस्य**–எவருக்கு, **सुजातः**–சிறந்த, **पटवासः**–வாசனைப்பொடியாக,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

आसीत्-ஆனதோ, **तं**-அந்த, **प्रत्यञ्चं**-ப்ரத்யகாத்மாவான, **दक्षिणवक्त्रं** – தக்ஷிணாமூர்த்தியை, **कलयामि**-தியானிக்கிறேன்.

மன்மதன் மிக கர்வம்கொண்டு பரமசிவனை மயங்கச் செய்ய மலரம்பைத் தொடுத்தான். அவருடைய நெற்றிக்கண்ணிலிருந்து கிளம்பிய நெருப்புப் பொரியால் எரிக்கப்பட்டு சாம்பலாகி விட்டது அவனுடைய சரீரம். அந்த சாம்பலே பகவானுக்கு உடம்பில் பூசிக்கொள்ளும் சிறந்த வாசனைப் பொடியாக ஆகி விட்டது. இவ்வாறு காமத்தை ஜயித்த ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை தியானிக்கிறேன். (14)

ह्यम्भोराशौ संसृतिरूपे लुठतां त-
त्पारं गन्तुं यत्पदभक्तिर्दृढनौका ।
सर्वाराध्यं सर्वगमानन्दपयोधिं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ १५ ॥

ஹ்யம்போராசௌ ஸம்ஸ்ருதிரூபே லுடதாம் தத்
பாரம் கந்தும் யத்பதபக்திர் த்ருடநௌகா ।
ஸர்வாராத்யம் ஸர்வகமாநந்த பயோதிம்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

संसृतिरूपे-ஸம்ஸாரரூபமான, **अम्भोराशौ**-கடலில், **लुठतां**-சுழலுகிறவர்களுக்கு, **तत्पारं**-அதன் அக்கரையை, **गन्तुं**-அடைவதற்கு, **यत्पदभक्तिः**-எவருடைய சரணத்தில் செலுத்தும் பக்தியானது, **दृढनौका**-உறுதியான ஓடமாக ஆகிறதோ, **सर्वाराध्यं**-எல்லோராலும் பூஜிக்கத்தக்கவரும், **सर्वगं**-எங்கும் இருப்பவரும், **आनन्दपयोधिं**-ஆனந்த ஸமுத்திரமாக இருப்பவரும், **प्रत्यञ्चं**-ப்ரத்யகாத்மாவாயுமுள்ள, **तं**-அந்த, **दक्षिणवक्त्रं**-தக்ஷிணாமூர்த்தியை, **कलयामि**-தியானிக்கிறேன்.

ஸம்ஸாரமாகிற பெரிய கடலில் விழுந்து மூழ்கித் தத்தளிப்பவர்கள் அதன் கரையை அடைவதற்கு பகவத் பாதாரவிந்த பக்தி தான் திடமான ஓடமாக ஆகிறது. கடலில் விழுந்தவன் ஓடம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கிடைத்தால் அதில் ஏறி அக்கரை சேர்வான். இதுபோல் பிறவி, மரணம் என்ற கடலில் அகப்பட்டுத் தவிப்பவன் பகவத் பாதார விந்தத்தில் பக்தியைச் செலுத்தினுல் பக்தியின் பிரபாவத்தால் பிறவாத நிலையை அடைவான். அவர் எல்லோராலும் போற்றத் தகுந்தவர். ஆகையால் யாரும் அவரை பஜிக்கலாம். அவர் எங்கும் இருப்பவர். ஆதலால் நாம் இருக்குமிடத்தில் இருந்து கொண்டே பக்தி பண்ணலாம். அவர் ஆனந்த ஸமுத்ரம் அதை பக்தர்களுக்கு அள்ளி அள்ளி எவ்வளவு கொடுத்தாலும் கொஞ்சமும் குறையாது. அப்பேற்பட்ட ப்ரத்யகாத்ம ஸ்வரூபியான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தியை தியானிக்கிறேன். (15)

मेधावी स्यादिन्दुवतंसं धृतवीणं
कर्पूराभं पुस्तकहस्तं कमलाक्षम् ।
चित्ते ध्यायन्यस्य वपुर्द्राङ्निमिषार्धं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ १६ ॥

மேதாவீ ஸ்யாதிந்துவதம்ஸம் த்ருத வீணம்
கர்பூராபம் புஸ்தகஹஸ்தம் கமலாக்ஷம் ।
சித்தே த்யாயன் யஸ்ய வபுர் த்ராங் நிமிஷார்த்தம்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

इन्दुवतंसं–சந்திரனை சிரோபூஷணமாக அணிந்ததும், **धृतवीणं**–வீணையை தரித்திருப்பதும், **कर्पूराभं**–பச்சைக்கர்ப்பூரம்போன்ற காந்தியுள்ளதும், **पुस्तकहस्तं**–கையில் புஸ்தகத்தை வைத்திருப்பதும், **कमलाक्षं**–தாமரைபோன்ற நேத்ரமுடையதுமான, **यस्य**–எவருடைய, **वपुः**–சரீரத்தை, **निमिषार्धं**–அரைநிமிஷம், **चित्ते**–மனதில், **ध्यायन्**–த்யானம் செய்கிறவன், **द्राक्**–சீக்கிரம், **मेधावी**–சிறந்த மேதையுள்ளவனுக, **स्यात्**–ஆவானோ, **तं**–அந்த, **प्रत्यञ्चं**–ப்ரத்யகாத்மாவான **दक्षिणवक्त्रं**–தக்ஷிணாமூர்த்தியை, **कलयामि**–தியானிக்கிறேன்.

சிரஸ்ஸில் சந்திரகலை, கையில் வீணை, புஸ்தகம், பச்சைக் கற்பூரம்போன்ற நிறம், தாமரைபோன்ற கண்கள் இவ்விதமான பகவானின் ஸ்வரூபத்தை அரைநிமிஷமாவது மனதில் தியானம் செய்கிறவன் உடனே மேதாவியாக ஆவான். (16)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

धाम्नां धाम प्रौढरुचीनां परमं य-
त्सूर्यादीनां यस्य न हेतुर्जगदादेः ।
एतावान्यो यस्य न सर्वेश्वरमीड्यं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ १७ ॥

தாம்னாம் தாம ப்ரௌடருசீனாம் பரமம் யத்
ஸூர்யாதீனாம் யஸ்ய ந ஹேதுர் ஜகதாதே: ।
ஏதாவான் யோ யஸ்ய ந ஸர்வேஸ்வரமீட்யம்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

प्रौढरुचीनां-மிகுந்த ஒளியுள்ள, **सूर्यादीनां**-ஸூரியன் முதலியவைகளின், **धाम्नां**-பிரகாசங்களுக்கும், **परमं**-மேலான **धाम**-ஒளியாக, **यत्**-எது உள்ளதோ, **जगदादेः**-பிரபஞ்சத்திற்குக் காரணமான, **यस्य**-எதற்கு, **हेतुः**-காரணம், **न**-இல்லையோ, **यः**-எது, **एतावान्**-இவ்வளவு பிரபஞ்சமாகவும் தோன்றுகிறதோ (உண்மையில்), **यस्य**-எதற்கு, **न**-(ஒன்றும் இல்லையோ, **सर्वेश्वरं**-எல்லாவற்றிற்கும் ஈசுவரனையும், **ईड्यं**-போற்றத்தகுந்தவராயும், **प्रत्यञ्चं**-பிரத்யகாத்மாவாயுமுள்ள, **तं**-அந்த, **दक्षिणवक्त्रं**-தக்ஷிணாமூர்த்தியை, **कलयामि**-தியானம் செய்கிறேன்.

உலகில் அதிகமான ஒளியுள்ள ஸூரியன் முதலியவைகளில் உள்ள ஒளியைவிட மேலான பிரகாச ஸ்வரூபமாக ஈசுவரன் விளங்குகிறார். எல்லாவற்றிற்கும் அவரே காரணம். அவருக்குக் காரணம் வேறொன்றுமில்லை. அவரே எல்லாவற்றையும் அடக்கி ஆள்கிறார். எல்லோரும் அவரையே போற்றுகிறார்கள். நாம் காணும் இந்த பிரபஞ்சம் முழுவதும் அவரேதான். விசாரித்துப் பார்த்தால் இந்த பிரபஞ்சம் வாஸ்தவமில்லை என்பது புலப்படும். ஆதலால் அந்த ஈசுவரனைக்காட்டிலும் வேறாக ஒன்றுமில்லை. அவரை தியானிக்கிறேன். *(17)*

प्रत्याहारप्राणनिरोधादिसमर्थै-
र्भक्तैर्दान्तैः संयतचित्तैर्यतमानैः ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

स्वात्मत्वेन ज्ञायत एव त्वरया य-
स्तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ १८ ॥

ப்ரத்யாஹார ப்ராணநிரோதாதி ஸமர்த்தை:
பக்தைர் தாந்தை ஸம்யதசித்தைர் யதமானை: ।
ஸ்வாத்மத்வேன ஞாயத ஏவ த்வரயா யஸ்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

प्रत्याहार-விஷயங்களில்போகும் புலன்களை அவற்றிலிருந்து திருப்புதல், **प्राणनिरोधादि**-பிராணனை அடக்குதல் இதுமுதலியவற்றில், **समर्थैः**-திறமையுள்ளவர்களாலும், **भक्तैः**-பக்தர்களாலும், **दान्तैः**-அடக்கமுள்ளவர்களாலும், **संयतचित्तैः**-மனதை அடக்கியவர்களாலும், **यतमानैः**-முயற்சிக்கிறவர்களாலும், **त्वरया**-வேகமாக, **यः**-எவர், **स्वात्मत्वेनैव**-தனது ஆத்மஸ்வரூபமாகவே, **ज्ञायते**-அறியப்படுகிறாரோ, **तं**-அந்த, **प्रत्यञ्चं**-ப்ரத்யகாத்மாவான, **दक्षिणवक्त्रं**-தக்ஷிணமூர்த்தியை, **कलयामि**-தியானம் செய்கிறேன்.

யோகாப்யாஸ முறையில் சிலர் மூச்சையடக்கி, விஷயங்களை நோக்கிச்செல்லும் புலன்களைத் தடுத்துத் திருப்பி உள்ளேயே நிறுத்துகிறார்கள் சிலர் வேறு உபாயங்களைக் கைக்கொண்டு மனதையும் இந்திரியங்களையும் அடக்குகிறார்கள். மேலும் பலவித முயற்சிசெய்கிறார்கள். சிலர் ஈசுவரனையே பஜிக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் கடைசியில் ஈசுவரனையே தனது ஆத்மாவாக அறிந்துவிடுகிறார்கள். இந்த ஞானம் ஏற்படத்தான் இத்தனை உபாயங்களும் ஏற்பட்டுள்ளன. இந்த ஈசுவரனை தக்ஷிணமூர்த்தியை தியானிக்கிறேன். (18)

ज्ञांशीभूतान्प्राणिन एतान्फलदाता
चित्तान्तःस्थः प्रेरयति स्वे सकलेऽपि ।
कृत्ये देवः प्राक्तनकर्मानुसरः सं-
स्तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ १९ ॥

ஞாம்ஸீபூதான் ப்ராணின ஏதான் பலதாதா
சித்தாந்தஸ்த்த: ப்ரேரயதி ஸ்வே ஸகலேऽபி ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

க்ருத்யே தேவ: ப்ராக்தன கர்மானுஸர: ஸன்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ||

प्राक्तनकर्मानुसरः सन्-முன்னால் செய்த கர்மாவை அனுஸரித்துக்கொண்டு, **फलदाता**-பலனைக்கொடுக்கிற, **देवः**-ஈசுவரன். **चित्तान्तःस्थः**-மனதிற்குள் இருந்துகொண்டு, **अंशीभूतान्**-சைதன்யஸ்வரூபத்தின் அம்சமாக இருக்கிற, **एतान् प्राणिनः**-இந்த பிராணிகளை, **स्वे**-தன்னுடையதான, **सकले कृत्येपि**-எல்லாக் காரியத்திலும், **प्रेरयति**-ஏவுகிறார், **तं**-அந்த, **प्रत्यञ्चं**-ப்ரத்யகாத்மாவான, **दक्षिणवक्त्रं**-தக்ஷிணாமூர்த்தியை, **कलयामि**-தியானிக்கிறேன்.

ஈசுவரன் அகண்ட சைதன்ய ஸ்வரூபி. அந்த சைதன்யத்தின் அம்சம்தான் எல்லா பிராணிகளிடமும் கொஞ்சம் கொஞ்சம் விளங்குகிறது. அதனால்தான் பிராணிகள் சேதனர்கள். இவர்களின் மனதில் ஸாக்ஷியாக பகவான் வஸிக்கிறார். தன் தன் காரியத்தைச் செய்யும்படி பிராணிகளை ஏவுகிறவர் இவரே. பிராணிகள் முன்னால் செய்த நல்வினை தீவினைகளுக்குத் தக்கபடி ஸுகத்தையும் துக்கத்தையும் கொடுக்கிறவரும் இவரே. பிராணிகள் முன்னால் செய்துள்ள புண்ய பாபங்களின் வாஸனையை ஒட்டி புண்யத்தையோ பாபத்தையோ செய்யும்படி தூண்டுகிறார் என்றும் அர்த்தம் கூறலாம். ஈசுவரன் ப்ரேரகராயிருந்தாலும் ஸூர்யன்போல் ஸாக்ஷியாக மட்டும் இருப்பதால் பிராணிகள் செய்யும் காரியங்களின் பலன் அவரிடம் ஒட்டுவதில்லை. மனதில் சைதன்ய ஸ்வரூபியாக ஈசுவரன் விளங்குவதால்தான் ஜடமான சரீரம் தன் காரியத்தைச் செய்ய முடிகிறது என்பது இதன் கருத்து. (19)

प्रज्ञामात्रं प्रापितसंविन्निजभक्तं
प्राणाक्षादेः प्रेरयितारं प्रणवार्थम् ।
प्राहुः प्राज्ञा यं विदितानुश्रवतत्त्वा-
स्तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ २० ॥

ப்ரஜ்ஞாமாத்ரம் ப்ராபித ஸம்விந்நிஜபக்தம்
ப்ராணாக்ஷாதே: ப்ரேரயிதாரம் ப்ரணவார்த்தம் |
ப்ராஹு: ப்ராஜ்ஞா யம் விதிதானுச்ரவதத்வாஸ்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ||

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

विदितानुश्रवतत्वाः-ப்ரஹ்ம தத்வத்தை அறிந்த, **प्राज्ञाः**-அறிவிற்சிறந்தவர்கள், **य**-எவரை, **प्रज्ञामात्रं**-ஞானத்தையே ஸ்வரூபமாகக்கொண்டவராகவும், **प्रापितसंविन्निजभक्तं**-தன் பக்தர்கள் ஞானத்தை அடையும்படி செய்பவராகவும், **प्राणाक्षादेः**-பிராணன், இந்திரியம், முதலியவற்றை, **प्रेरयितारं**-ஏவுகிறவராகவும், **प्रणवार्थं**-ப்ரணவப்பொருளாகவும், **प्राहुः**-கூறுகிறார்களோ, **तं**-அந்த, **प्रत्यञ्चं**-ப்ரத்யகாத்மாவான, **दक्षिणवक्त्रं**-தக்ஷிணாமூர்த்தியை, **कलयामि**-தியானம் செய்கிறேன்.

வேறு ஒன்றும் கலக்காத சுத்தசைதன்யமே ஈசுவரஸ்வரூபம். இவர் தம் பக்தர்களுக்கு ஞானத்தை அருளுகிறார். ஜடமான பிராணன் இந்திரியம் முதலானவற்றை இயங்கும்படி செய்கிறவர் இவரே. ஓங்காரத்தின் அர்த்தமும் இவர்தான் என்று ப்ரஹ்ம ஞானிகள் கூறுகிறார்கள். குருவின் உபதேசத்தைக் காதால் கேட்டு அதன்மூலம் உபநிஷத்தால் அறிந்துகொள்ளப்படுவதால் ஆனுச்ரவதத்வம் என்பது ப்ரஹ்மத்தைக் குறிக்கும். (20)

यस्याज्ञानादेव नृणां संसृतिबन्धो
यस्य ज्ञानादेव विमोक्षो भवतीति ।
स्पष्टं ब्रूते वेदशिरो देशिकमाद्यं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ २१ ॥

யஸ்யாஜ்ஞானாதேவ ந்ருணாம் ஸம்ஸ்ருதிபந்தோ
யஸ்ய ஜ்ஞானாதேவ விமோக்ஷோ பவதீதி ।
ஸ்பஷ்டம் ப்ரூதே வேதஶிரோ தேஶிகமாத்யம்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

यस्य-எவரை, **अज्ञानादेव**-அறியாததனாலேயே, **नृणां**-மனிதர்களுக்கு, **संसृतिबन्धः**-ஸம்ஸாரபந்தமும், **यस्य ज्ञानादेव**-எவரை அறிந்துகொள்வதனாலேயே, **विमोक्षः**-முக்தியும், **भवति**-ஏற்படுகிறது, **इति**-என்று, **वेदशिरः**-உபநிஷத்து, **स्पष्टं**-தெளிவாக, **ब्रूते**-சொல்கிறதோ, **तं**-அந்த, **आद्यं देशिकं**-ஆதிகுருவும், **प्रत्यञ्चं**-ப்ரத்யகாத்மாவுமான, **दक्षिणवक्त्रं**-தக்ஷிணாமூர்த்தியை, **कलयामि**-தியானிக்கிறேன்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஈசுவர தத்வத்தை நன்கு அறிந்து கொள்ளாததால்தான் பிறவி, மரணம் என்ற ஸம்ஸாரபந்தத்தில் அகப்பட்டுத் தவிக்கிறார்கள். அவரை அறிந்துகொண்டுவிட்டால் எல்லா பந்தமும் விலகி பேரானந்தமடைவான். ஸம்ஸாரபந்தத்திற்கு அக்ஞானம் தான் மூலகாரணம். இது இல்லாவிட்டால் பந்தம் இருக்காது. இதுபோல முக்திக்கு ஞானம்தான் ஸாதனம். ஞானம் ஏற்படாதவரை முக்தியைப் பெறமுடியாது. இந்த விஷயம் உபநிஷத்துக்களில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. **'ज्ञात्वा देवं मुच्यते सर्वपाशैः' 'य एतद्विदुरमृतास्ते भवन्ति' 'तमेव विदित्वाऽतिमृत्युमेति नान्यः पन्था विद्यतेऽयनाय'** (சுவேதா உப) (21)

छन्नेऽविद्यारूपपटेनैव च विश्वं
यत्राध्यस्तं जीवपरेशत्वमपीदम् ।
भानोर्भानुष्वम्बुवदस्ताखिलभेदं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ २२ ॥

சந்நேऽவித்யாரூப படேனைவ ச விச்வம்
யத்ராத்யஸ்தம் ஜீவபரேசத்வமபீதம் ।
பானோர் பானுஷ்வம்புவதஸ்தாகில பேதம்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

यत्र-எந்தஸ்வரூபம், **अविद्यारूपपटेन**-அவித்யை என்ற திரைத்துணியால், **छन्ने एव**-மறைக்கப்பட்ட பொழுது தான், **इदं विश्वं च**-இந்த பிரபஞ்சமும், **जीवपरेशत्वमपि**-ஜீவன் பரமாத்மா என்ற தன்மையும், **भानोः**-ஸூரியனுடைய, **भानुषु**-கிரணங்களில், **अम्बुवत्**-நீர்போல், **अध्यस्तं**-ஆரோபிதமாகத் தோன்றுகிறதோ, **अस्ताखिलभेदं**-எல்லா வேற்றுமைகளும் நீங்கிய, **तं**-அந்த, **प्रत्यञ्चं**-ப்ரத்யகாத்மஸ்வரூபியான, **दक्षिणवक्त्रं**-தக்ஷிணாமூர்த்தியை, **कलयामि**-தியானிக்கிறேன்.

உலகில் திரையைப் போட்டால் உள்ளே இருக்கும் பொருள் மறைந்து நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. அதுபோல் அவித்யை என்னும் திரையால் ப்ரஹ்மம் மறைக்கப்பட்டிருப்பதால் நமக்கு அது தெரிவதில்லை. இதுமட்டுமல்ல; மற்றொரு விசேஷமும் உண்டு. துணித் திரை, இருக்கும் வஸ்துவை மறைப்பதோடு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

நின்றுவிடுகிறது. அவித்யை என்னும் திரை ப்ரஹ்மத்தை மறைப்பதோடு, இல்லாததான பிரபஞ்சத்தையும், ஜீவன், ஈசுவரன் என்ற வேற்றுமையையும் தோன்றச் செய்கிறது. உண்மையில் தண்ணீர் இல்லாமலிருந்தும் வெகுதூரத்திலிருந்து பார்க்கும்பொழுது ஸூர்ய கிரணத்தில் தண்ணீர் என்ற ப்ராந்தி ஏற்படுவதில்லையா! சமீபத்தில் போய்ப் பார்த்தால் 'தண்ணீர்' என்ற ப்ரமம் நீங்கிவிடுகிறது. இதுபோல ப்ரஹ்மத்தை அறிந்து அவித்யை நீங்கிவிட்டால் ப்ரபஞ்சத்தோற்றமும் நீங்கிவிடும் ஆகவே பிரபஞ்சத் தோற்றத்திற்கு அவித்யைதான் காரணம். அவித்யை நீங்கினால் உடன் ப்ராந்தியும் நீங்கிவிடும்.

स्वापस्वप्नौ जाग्रदवस्थापि न यत्र
प्राणश्चेतः सर्वगतो यः सकलात्मा ।
कूटस्थो यः केवलसच्चित्सुखरूप-
स्तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ २३ ॥

ஸ்வாபஸ்வப்நௌ ஜாக்ரதவஸ்த்தாபி ந யத்ர
ப்ராணச்சேத: ஸர்வகதோ ய: ஸகலாத்மா ।
கூடஸ்த்தோ ய: கேவலஸச்சித்ஸுகரூப:
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

यत्र-எந்தஸ்வரூபத்தில், **स्वापस्वप्नौ**-ஸுஷுப்தி, கனவு **जाग्रदवस्थापि**-ஜாக்ரதவஸ்தையும், **प्राणः**-பிராணனும், **चेतः**-மனமும், **न**-இல்லையோ, **यः**-எவர், **सर्वगतः**-எங்கும் உள்ளவராகவும், **सकलात्मा**-எல்லாஸ்வரூபமாகவும் இருக்கிறாரோ, **यः**-எவர், **कूटस्थः**-விகாரமற்றவராகவும், **केवलसच्चित्सुखरूपः**-கலப்பில்லாத சுத்த ஸச்சிதானந்தரூபமாகவும் இருக்கிறாரோ **तं**-அந்த, **प्रत्यञ्चं**-ப்ரத்யகாத்மஸ்வரூபியான, **दक्षिणवक्त्रं**-தக்ஷிணாமூர்த்தியை, **कलयामि**-த்யானம் செய்கிறேன்.

கண், காது முதலான இந்திரியங்களும் மனமும் வேலை செய்யும் நிலைக்கு 'ஜாக்ரத்' என்று பெயர். இந்திரியங்கள் அடங்கி மனம் மட்டும் வேலை செய்யும் நிலை ஸ்வப்னம் எனப்படும். இந்திரியம் மனம் எல்லாம் அடங்கி அவித்யைமட்டும் உள்ள நிலை ஸுஷுப்தி எனப்படும். எங்கும் உள்ளதும் எல்லாமாக இருப்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பதும் ஒருவித மாறுபாடும் அற்றதும் ஸச்சிதானந்த ஸ்வரூபியுமான ஆத்மா எப்பொழுதும் ஸ்வயம்ப்ரகாசமாக இருப்பதால் இம்மூன்று நிலைகளும் ஆத்மாவுக்குக் கிடையாது. மனம், ப்ராணன் முதலியனவும் ஆத்மாவுக்கு இல்லை. அப்பேற்பட்ட ஆத்மஸ்வரூபியான தக்ஷிணாமூர்த்தியை தியானிக்கிறேன். (23)

हा हेत्येवं विस्मयमीयुर्मुनिमुख्या
ज्ञाते यस्मिन्स्वात्मतयानात्मविमोहः ।
प्रत्यग्भूते ब्रह्मणि यातः कथमित्थं
तं प्रत्यञ्चं दक्षिणवक्त्रं कलयामि ॥ २४ ॥

ஹா ஹேத்யேவம் விஸ்மயமீயுர் முனிமுக்யா:
ஞாதே யஸ்மின் ஸ்வாத்மதயாऽநாத்மவிமோஹ: ।
ப்ரத்யக்பூதே ப்ரஹ்மணி யாத: கதமித்தம்
தம் ப்ரத்யஞ்சம் தக்ஷிணவக்த்ரம் கலயாமி ॥

प्रत्यग्भूते-உள்ளே விளங்கும், **यस्मिन् ब्रह्मणि**-எந்த ப்ரஹ்மம், **स्वात्मतया**-தனது ஆத்மஸ்வரூபமாக, **ज्ञाते**-அறியப்பட்டதும், **अनात्मविमोहः**-அநாத்ம ப்ரமம், **इत्थं**-இவ்வாறு, **कथं यातः**-எப்படி நீங்கிவிட்டது? **हा हा**-ஹா ஹா, **इत्येवं**-என்றிவ்வாறு, **मुनिमुख्याः**-முனிவர்களில் சிறந்தவர்கள், **विस्मयं ईयुः**-ஆச்சர்யத்தை அடைந்தனரோ, **तं**-அந்த, **प्रत्यञ्चं**-ப்ரத்யகாத்மாவான, **दक्षिणवक्त्रं**-தக்ஷிணாமூர்த்தியை, **कलयामि**-தியானிக்கிறேன்.

ஸத்குருவின் உபதேசத்தாலும் சிரவண மனன நிதித்யாஸனங்களாலும் 'நானே ப்ரஹ்மம்' என்ற ப்ரஹ்மஸாக்ஷாத்காரம் ஏற்பட்ட மாத்திரத்திலேயே அநாத்மப்ரமம் நீங்கப்பெற்ற ஞானிகள் முன்னிருந்த நிலையையும் இப்பொழுது ஏற்பட்டுள்ள நிலையையும் எண்ணிப்பார்த்து ஆச்சர்யப்படுகின்றனர். கயிற்றை பாம்பு என்று எண்ணி பயத்தால் பலவிதமாகத் துன்பப்பட்டவன் 'இது கயிறுதான்' என்று தெரிந்த பிறகு 'இந்தக் கயிறு என்னபாடு படுத்திவிட்டது' என்று ஆச்சர்யம் அடைவதுபோல் பிரபஞ்சத்தைப் பொய் என்று தெரிந்துகொண்ட ஞானிகளும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

"வாஸ்தவத்தில் இல்லாத இப்பிரபஞ்சம் அனாதிகாலமாக எத்தனையோ விதமாக துன்பப்படுத்திவிட்டு இப்பொழுது ஒரே க்ஷணத்தில் எங்கோ மறைந்துவிட்டதே" என்று ஆச்சர்யப்படுகின்றனர். (24)

यैषा रम्यैर्मत्तमयूराभिधवृत्तै-
राद्यौ क्लृप्ता यन्मनुवर्णैर्मुनिभङ्गी ।
तामेवैतां दक्षिणवक्त्रः कृपयासा-
वूरीकुर्याद्देशिकसम्राट् परमात्मा ॥ २५ ॥

யைஷா ரம்யைர் மத்தமயூராபிதவ்ருத்தை-
ராதௌ க்லுப்தா யன்மனுவர்ணைர் முனிபங்கீ ।
தாமேவைதாம் தக்ஷிணவக்த்ர: க்ருபயாஸா-
வூரீகுர்யாத் தேஶிக ஸம்ராட் பரமாத்மா ॥

या एषा मुनिभङ्गी-எந்த இந்த முனிபங்கியானது, **रम्यैः**-அழகிய, **मत्तमयूराभिधवृत्तैः**-மத்தமயூரம் என்ற வ்ருத்தங்களால், **आदौ**-முதலில், **यन्मनुवर्णैः**-எவருடைய மந்திர வர்ணங்களால், **क्लृप्ता**-ஆக்கப்பட்டதோ, **तामेव एतां**-அந்த இதையே, **देशिकसम्राट्**-குருசக்ரவர்த்தியும், **परमात्मा**-பரமாத்மாவுமான, **असौ**-அந்த, **दक्षिणवक्त्रः**-தக்ஷிணாமூர்த்தி **कृपया**-தயவுடன், **ऊरीकुर्यात्**-ஏற்றுக்கொள்ளட்டும்.

தக்ஷிணாமூர்த்தி மஹாமந்திரத்திலுள்ள ஒவ்வொரு அக்ஷரத்தையும் வரிசையாக ஒவ்வொரு சுலோகத்தின் முதல் எழுத்தாகக் கொண்ட இந்த ஸ்தோத்ரம் மத்தமயூரம் என்ற விருத்தத்தில் அமைந்துள்ளது இதை ஆசார்ய ஸார்வபௌமரான பரமாத்மா தக்ஷிணாமூர்த்தி ஸ்வீகரித்துக்கொண்டு அருள்செய்யட்டும். (25)

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி வர்ணமாலா ஸ்தோத்ரம் முற்றும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ श्रीः ॥

॥ वेदसारशिवस्तोत्रम् ॥

வேதஸார சிவ ஸ்தோத்ரம்

[வேதஸார சிவ ஸ்தோத்ரம் 11 சுலோகங்கள் கொண்டது. பரமசிவனுடைய மஹிமையை நன்கு எடுத்துக்காட்டும் பல நாமாக்களை இதில் காணலாம். சிவனுடைய ஸகுணஸ்வரூப வர்ணனம் இதில் சிறிதளவுதான். அவரை நிர்விசேஷமான பரப்ரஹ்மமாகக் காட்டி உபநிஷத்தில் கூறியுள்ள ரீதியில்தான் அதிகமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. 'तुरीयं, तमःपारं, द्वैतहीनं, शिवं, निराकारं, सदानन्दं, चिदानन्दमूर्ते' இவைகள் ஔபநிஷதமான ப்ரஹ்மத்தைக் குறிக்கும் பதங்களல்லவா! மேலும் உபநிஷத்தில் போலவே 'பூமியல்ல' 'ஜலமல்ல' என்று நிஷேத முகமாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இதனால்தான் 'வேதஸார சிவ ஸ்தோத்ரம்' என்ற பெயர் இதற்கு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.]

पशूनां पतिं पापनाशं परेशं गजेन्द्रस्य कृत्तिं वसानं वरेण्यम् ।
जटाजूटमध्ये स्फुरद्गाङ्गवारिं महादेवमेकं स्मरामि स्मरारिम् ॥ १ ॥

பஶூநாம் பதிம் பாபநாஶம் பரேஶம்
கஜேந்த்ரஸ்ய க்ருத்திம் வஸாநம் வரேண்யம் ।
ஜடாஜூடமத்யே ஸ்புரத்காங்கவாரிம்
மஹாதேவமேகம் ஸ்மராமி ஸ்மராரிம் ॥

पशूनां–பசுக்களுக்கு (ஜீவர்களுக்கு), **पतिं**–தலைவரும், **पापनाशं**–பாபத்தை அழிப்பவரும், **परेशं**–மேலான ஈசுவரனும், **गजेन्द्रस्य**–சிறந்த யானையின், **कृत्तिं**–தோலை, **वसानं**–அணிந்திருப்பவரும், **वरेण्यं**–துதிக்கத்தக்கவரும், **जटाजूटमध्ये**–ஜடாபந்தத்தின் நடுவில், **स्फुरद्गाङ्गवारिं**–விளங்கும் கங்கா தீர்த்தத்தை உடையவரும், **स्मरारिं**–மன்மதனை எரித்தவருமான, **महादेवमेकं**-மஹாதேவன் ஒருவரை, **स्मरामि**–நினைக்கிறேன்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஜீவர்களுக்குத் தலைவர், பாபங்களை அழிப்பவர், எல்லோருக்கும் மேலான ஈசுவரன் யானைத்தோலை இடுப்பில் அணிந்திருப்பவர், போற்றத்தக்கவர். இவருடைய ஜடாபந்தத்தின் நடுவில் கங்காதீர்த்தம் விளங்குகிறது. காமனை எரித்தவர். இவ்விதமான மஹாதேவர் ஒருவரையே நினைக்கிறேன். மாடுகளைக் கட்டவோ அவிழ்த்துவிடவோ அதன் யஜமானனால்தான் முடியும். சரீரத்தில் அபிமானம்கொண்டு அதைப் போஷிப்பதிலேயே ஈடுபடும் அவிவேகிகளான ஜீவர்களும் பசுக்கள்தான். நம்மை இந்த ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுவிப்பவர் நமது யஜமானரான பரமேசுவரர்தான். அவரை உபாஸித்தால் பாபம், காமம், ஆஸுரஸ்வபாவம் எல்லாம் விலகி கங்காதீர்த்தம்போல் தூய்மை பெறலாம். (1)

महेशं सुरेशं सुरारातिनाशं विभुं विश्वनाथं विभूत्यङ्गभूषम् ।
विरूपाक्षमिन्द्वर्कवह्नित्रिनेत्रं सदानन्दमीडे प्रभुं पञ्चवक्त्रम् ॥ २ ॥

மஹேசம் ஸுரேசம் ஸுராராதி நாசம்
விபும் விச்வநாதம் விபூத்யங்க பூஷம் ।
விரூபாக்ஷமிந்த்வர்க்க வஹ்னி த்ரிநேத்ரம்
ஸதானந்தமீடே ப்ரபும் பஞ்சவக்த்ரம் ॥

सुरेशं-தேவர்களுக்குப் ஈசுவரனும், **सुरारातिनाशं**-தேவர்களின் எதிரியான அஸுரர்களை அழிப்பவரும், **विभुं**–எங்கும் உள்ளவரும், **विश्वनाथं**–எல்லோரையும் காப்பாற்றுபவரும், **विभूत्यङ्गभूषं**–சரீரத்திற்கு அலங்காரமாக விபூதியை அணிந்தவரும், **विरूपाक्षं**-விரூபமான கண்களை உடையவரும், **इन्द्वर्कवह्नित्रिनेत्रं**–சந்திரன், சூரியன், அக்னி இவர்களைக் கண்களாகக்கொண்டவரும், **सदानन्दं**–எப்பொழுதும் இருப்பவரும் ஆனந்தரூபியும், **प्रभुं**–யஜமானரும், **पञ्चवक्त्रं**–ஐந்து முகங்களுள்ளவருமான, **महेशं**–மஹேசுவரனை, **ईडे**–துதிக்கிறேன்.

தேவர்களுக்கும் ஈசுவரன் தேவர்களின் சத்துருக்களான அஸுரர்களை அழித்து அவர்களைக் காப்பாற்றுபவர். எங்கும் நிறைந்தவர். எல்லோரையும் காப்பாற்றுபவர். விபூதியை அணிந்தவர். ஸூர்யன், சந்திரன், அக்னி இம்மூவரையும் கண்களாகக் கொண்டவர். உலகில் காணுகபடி நெற்றியில் கண்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இருப்பதால் லோகவிலக்ஷணமான நேத்ரங்கள் உள்ளவர். ஸத்தாகவும் ஆனந்தமாகவும் இருப்பவர். ஐந்து முகங்கள் உள்ளவர். எல்லோருக்கும் யஜமானர். இந்த மஹேசுவரனை துதிக்கிறேன். (2)

गिरीशं गणेशं गले नीलवर्णं गवेन्द्राधिरूढं गुणातीतरूपम् ।
भवं भास्वरं भस्मना भूषिताङ्गं भवानीकलत्रं भजे पञ्चवक्त्रम् ॥

கிரீஶம் கணேசம் கலே நீலவர்ணம்
கவேந்த்ராதிரூடம் குணாதீதரூபம் ।
பவம் பாஸ்வரம் பஸ்மநா பூஷிதாங்கம்
பவாநீகளத்ரம் பஜே பஞ்சவக்த்ரம் ॥

गिरीशं-கைலாஸமலையின் ஈசனும், **गणेशं**-ப்ரமதகணங்களின் நாயகரும், **गले**-கழுத்தில், **नीलवर्णं**-நீலநிறமுள்ளவரும், **गवेन्द्राधिरूढं**-சிறந்த விருஷபத்தில் ஏறிஅமர்ந்திருப்பவரும், **गुणातीतरूपं**-குணங்களுக்கு அப்பாற்பட்ட ஸ்வரூபமுள்ளவரும் (குணமற்றவரும்), **भवं**-காரணமாக இருப்பவரும், **भास्वरं**-பிரகாசிக்கிறவரும், **भस्मना**-விபூதியால், **भूषिताङ्गं**-அலங்கரிக்கப்பட்ட சரீரமுள்ளவரும், **भवानीकलत्रं**-பார்வதியை மனைவியாகக்கொண்டவரும், **पञ्चवक्त्रं**-ஐந்து முகங்களுள்ளவருமான பரமசிவனை, **भजे**-பஜிக்கிறேன்.

கைலாஸமலைக்கு அதிபதி. ப்ரமதகணங்களுக்குத் தலைவர். கழுத்தில் நீலநிறமுள்ளவர். சிறந்த விருஷபத்தில் ஏறி அமர்ந்திருப்பவர். முக்குணங்களுக்கும் அப்பாற்பட்ட ஸ்வரூபமுள்ளவர். காரணப் பொருள். ஒளியுடன் கூடியவர். உடலில் விபூதியை அணிந்தவர். பார்வதியை மனைவியாகக் கொண்டவர். ஐந்து முகமுள்ளவர். இவ்விதமான மஹேசுவரனை பஜிக்கிறேன். (3)

शिवाकान्त शंभो शशाङ्कार्धमौले महेशान शूलिञ्जटाजूटधारिन् ।
त्वमेको जगद्व्यापको विश्वरूपः प्रसीद प्रसीद प्रभो पूर्णरूप ॥

ஶிவாகாந்த ஶம்போ ஶஶாங்கார்த்தமௌளே
மஹேஶாந ஶூலின் ஜடாஜூடதாரின் ।
த்வமேகோ ஜகத்வ்யாபகோ விச்வரூப:
ப்ரஸீத ப்ரஸீத ப்ரபோ பூர்ணரூப ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

शिवाकान्त-பார்வதியின் நாயகனே, **शम्भो**-சம்புவே, **शशाङ्कार्धमौले**-அர்த்த சந்திரனை சிரஸ்ஸில் தரித்திருப்பவரே, **महेशान**-மஹேசுவரரே, **शूलिन्**-சூலாயுதமுள்ளவரே, **जटाजूटधारिन्**-ஜடாபந்தம் தரித்தவரே, **त्वमेकः**-நீர் ஒருவரே, **जगद्व्यापकः**-உலகம் முழுவதும் பரவியிருப்பவர், **विश्वरूपः**-எல்லா வடிவமாகவும் இருப்பவர். **प्रभो**-ஸ்வாமியே, **पूर्णरूप**-நிறைந்த ஸ்வரூபமுள்ளவரே, **प्रसीद प्रसीद**- அருள் புரியும் அருள் புரியும்.

பார்வதியின் மணாளனே! மங்களங்களை அருள்பவனே; அர்த்தசந்திரனை சிரஸில் தரித்திருப்பவனே! மஹேசான! சூலாயுதம் ஏந்தியவனே! ஜடாபந்தம் தரித்தவனே! நீ ஒருவனே உலகம் முழுவதும் இருப்பவன். பலவித உருவம் கொண்டவன். எல்லாம் உன் ஸ்வரூபம். ப்ரபோ! நிறைந்த ஸ்வரூபம் உள்ளவனே! அருள்புரியும் அருள்புரியும். (4)

परात्मानमेकं जगद्बीजमाद्यं निरीहं निराकारमोंकारवेद्यम् ।
यतो जायते पाल्यते येन विश्वं तमीशं भजे लीयते यत्र विश्वम् ॥

பராத்மாநமேகம் ஜகத்பீஜமாத்யம்
நிரீஹம் நிராகாரமோங்கார வேத்யம் ।
யதோ ஜாயதே பால்யதே யேந விச்வம்
தமீசம் பஜே லீயதே யத்ர விச்வம் ॥

यतः-எவரிடமிருந்து, **विश्वं**-பிரபஞ்சம், **जायते**-உண்டாகிறதோ, **येन**-எவரால், **पाल्यते**-காப்பாற்றப்படுகிறதோ, **यत्र**-எவரிடம், **विश्वं**-பிரபஞ்சம், **लीयते**-லயமடைகிறதோ, **तं**-அந்த, **परात्मानं**-பரமாத்மாவும், **एकं**-ஒருவராயும், **जगद्बीजं**-உலகிற்குக் காரணமாயும், **आद्यं**-முதன்மையானவரும், **निरीहं**-ஆசையற்றவரும், **निराकारं**-உருவமற்றவரும், **ओंकारवेद्यं**-பிரணவத்தால் அறியத்தக்கவருமான, **ईशं**-ஈசனை, **भजे**-பஜிக்கிறேன்.

பரமாத்மா ஒரே வஸ்து உலகிற்கு மூலகாரணம், அதனால் முதலில் இருப்பவர் ஆசையற்றவர், உருவமற்றவர். ஆனாலும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ப்ரணவத்தால் அறியத்தக்கவர். ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டித்துப் பரிபாலிப்பவர். முடிவில் எல்லாம் மறைவதும் இவரிடம்தான் அப்பேற்பட்ட ஈசனை பஜிக்கிறேன். (5)

न भूमिर्न चापो न वह्निर्न वायुर्न चाकाशमास्ते न तन्द्रा न निद्रा।
न चोष्णं न शीतं न देशो न वेषो न यस्यास्ति मूर्तिस्त्रिमूर्तिं तमीडे ॥

ந பூமிர் ந சாபோ ந வஹ்நிர் ந வாயுர்
ந சாகாஶமாஸ்தே ந தந்த்ரா ந நித்ரா ।
ந சோஷ்ணம் ந ஶீதம் ந தேஶோ ந வேஷோ
ந யஸ்யாஸ்தி மூர்த்திஸ் த்ரிமூர்த்திம் தமீடே ॥

यस्य-எவருக்கு, **भूमिः**-பூமி, **न**-இல்லை, **आपः च**-ஜலமும், **न**-இல்லை. **वह्निः**-தேஜஸ், **न**-இல்லை, **वायुः**-வாயு, **न**-இல்லை. **आकाशं च**-ஆகாசமும், **न आस्ते**-இல்லை. **तन्द्रा**-சோம்பல், **न**-இல்லை. **निद्रा**-தூக்கம், **न**-இல்லை. **उष्णं च**-சூடும், **न**-இல்லை, **शीतं**-குளிர்ச்சியும், **न**-இல்லை, **देशः**-தேசம், **न**-இல்லை **वेषः**-வேஷம், **न**-இல்லை. **मूर्तिः**-சரீரம், **नास्ति**-இல்லை, **त्रिमूर्तिं**-மும்மூர்த்திவடிவினரான, **तं**-அவரை, **ईडे**-துதிக்கிறேன்.

பரமாத்ம தத்வம் ஒன்றே உண்மையில் உள்ளது நாம் காணும் இப்ப்ரபஞ்சம் வெறும் தோற்றமே தவிற வாஸ்தவமாக இல்லை. அதாவது பூமி, ஜலம், தேஜஸ், வாயு, ஆகாசம், சோம்பல், தூக்கம், சூடு, குளிர்ச்சி, தேசம், வேஷம் இவை ஒன்றுமே இல்லை சிலவற்றை மாத்திரம் இங்கு குறிப்பிட்டாலும் ப்ரஹ்மத்தைத் தவிற வேறு ஒன்றுமே இல்லை என்பது இதன் கருத்து. இவையாவும் உண்மையாக இல்லை ஆகையினால் ப்ரபஞ்சம் தோன்றுவது விருத்தமல்ல. பரமாத்மாவுக்கு சரீரம் கிடையாது. ஆனாலும் மாயையிலுள்ள ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று குணங்களைக் கொண்டு மூன்று சரீரத்துடன் விளங்குகிறது. ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் என்று மூன்றாகப் பிரிந்திருந்தாலும் தத்வம் ஒன்றுதான், அந்த பரமாத்மாவைப் போற்றுகிறேன். (6)

अजं शाश्वतं कारणं कारणानां शिवं केवलं भासकं भासकानाम् ।
तुरीयं तमःपारमाद्यन्तहीनं प्रपद्ये परं पावनं द्वैतहीनम् ॥ ७ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அஜம் ஶாச்வதம் காரணம் காரணானாம்
ஶிவம் கேவலம் பாஸகம் பாஸகானாம் ।
துரீயம் தம:பாரமாத்யந்த ஹீனம்
ப்ரபத்யே பரம் பாவனம் த்வைதஹீனம் ॥

अजं–பிறப்பில்லாதவரும், **शाश्वतं**–எப்பொழுதும் இருப்பவரும், **कारणानां**–காரணப் பொருள்களுக்கும், **कारणं**–காரணமாக இருப்பவரும், **केवलं**–தான் மாத்திரமாக இருப்பவரும், **भासकानां**–பிரகாசிக்கும் வஸ்துக்களையும், **भासकं**–பிரகாசப் படுத்துபவரும், **तुरीयं**–நான்காவது பொருளும், **तमःपारं**–அக்ஞானத்திற்கு அப்பாற்பட்டவரும், **आद्यन्तहीनं**–ஆதியும் அந்தமும் இல்லாதவரும், **परं**–மேலானவரும், **पावनं**–பரிசுத்தமானவரும், **द्वैतहीनं**–இரண்டற்றவருமான, **शिवं**–சிவனை, **प्रपद्ये**–சரணமடைகிறேன்.

பிறக்காதவர், ஆகையால் எப்பொழுதும் இருப்பவர் (அழிவற்றவர்), காரணமான பஞ்சபூதங்களுக்கும் காரணமாக இருப்பவர், மங்களஸ்வரூபி, தனித்து இருப்பவர், ஒளியுள்ள ஸூரியன் முதலியவற்றையும் பிரகாசிக்கச் செய்பவர். வ்யஷ்டியில் ஜாக்ரத், ஸ்வப்னம், ஸுஷுப்தி என்ற மூன்று அவஸ்தைகளுக்கும் முறையே அபிமானிகளான விச்வன், தைஜஸன், ப்ராஜ்ஞன் இம்மூவர்களுக்கும், ஸமஷ்டியில் வைச்வாநரன், ஹிரண்யகர்ப்பன். ஸூத்ராத்மா இம்மூவர்களுக்கும் மேற்பட்ட. நான்காவது பொருள், அக்ஞானத்திற்கு அப்பாலிருப்பவர், ஆதியும் அந்தமுமற்றவர், மேலானவர், பரிசுத்தமான பொருள், இரண்டற்றவர். இந்த தத்வத்தைச் சரணமடைகிறேன். (7)

नमस्ते नमस्ते विभो विश्वमूर्ते नमस्ते नमस्ते चिदानन्दमूर्ते ।
नमस्ते नमस्ते तपोयोगगम्य नमस्ते नमस्ते श्रुतिज्ञानगम्य ॥

நமஸ்தே நமஸ்தே விபோ விச்வமூர்த்தே
நமஸ்தே நமஸ்தே சிதானந்தமூர்த்தே ।
நமஸ்தே நமஸ்தே தபோயோககம்ய
நமஸ்தே நமஸ்தே ச்ருதிஞானகம்ய ॥

विभो–எங்கும் உள்ளவரே, **विश्वमूर्ते**–பிரபஞ்சத்தையே சரீரமாகக்கொண்டவரே, **ते**–உமக்கு, **नमः**–நமஸ்காரம், **ते**–

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உமக்கு, **नमः**-நமஸ்காரம், **चिदानन्दमूर्ते**-சைதன்யத்தையும் ஆனந்தத்தையும் ஸ்வரூபமாகக்கொண்டவரே, **ते**-உமக்கு, **नमः**-நமஸ்காரம், **ते**-உமக்கு, **नमः**-நமஸ்காரம், **तपोयोगगम्य**-தவத்தாலும் யோகத்தாலும் அடையத்தக்கவரே, **ते**-உமக்கு **नमः**-நமஸ்காரம், **ते**-உமக்கு, **नमः**-நமஸ்காரம், **श्रुतिज्ञानगम्य**-வேதாந்த ஞானத்தால் அறியத்தக்கவரே, **ते**-உமக்கு, **नमः**-நமஸ்காரம், **ते**-உமக்கு, **नमः**-நமஸ்காரம்.

எங்கும் உள்ளவரே! பிரபஞ்சம் எல்லாவற்றையும் சரீரமாகக் கொண்டவரே! உமக்கு நமஸ்காரம், உமக்கு நமஸ்காரம். அறிவையும் ஆனந்தத்தையும் சரீரமாகக்கொண்டவரே! உமக்கு நமஸ்காரம், உமக்கு நமஸ்காரம். தவயோகத்தால் அடையத் தக்கவரே! உமக்கு நமஸ்காரம், உமக்கு நமஸ்காரம். வேதாந்த ஞானத்தால் அடையத்தக்கவரே! உமக்கு நமஸ்காரம், உமக்கு நமஸ்காரம். எல்லாமாகவும் அவரே இருப்பதால் அவர் எங்கும் இருப்பவர். ஆனாலும் ஸச்சிதானந்தம்தான் அவருடைய உண்மையான ஸ்வரூபம். தபஸ், யோகாப்யாஸம் முதலான உபாயங்களால் மனதை அடக்கி வேதாந்த விசாரம் செய்து ஞானத்தைப் பெற்றால் அவராகவே ஆகிவிடலாம். (8)

प्रभो शूलपाणे विभो विश्वनाथ
महादेव शंभो महेश त्रिनेत्र ।
शिवाकान्त शान्त स्मरारे पुरारे
त्वदन्यो वरेण्यो न मान्यो न गण्यः ॥ ९ ॥

ப்ரபோ ஶூலபாணே விபோ விச்வநாத
மஹாதேவ ஶம்போ மஹேஶ த்ரிநேத்ர ।
ஶிவாகாந்த ஶாந்த ஸ்மராரே புராரே
த்வதந்யோ வரேண்யோ ந மாந்யோ ந கண்ய: ॥

प्रभो-ஸ்வாமியே, **शूलपाणे**-சூலாயுதத்தைக் கையில் கொண்டவரே, **विभो**-எங்கும் உள்ளவரே, **विश्वनाथ**-ஜகந்நாதா, **महादेव**-மஹாதேவா, **शम्भो**-சம்புவே, **महेश**-மஹேசுவரனே, **त्रिनेत्र**-முக்கண்ணனே, **शिवाकान्त**-பார்வதியின் நாயகனே, **शान्त**-அமைதியுள்ளவரே, **स्मरारे**-மன்மதனின்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சத்ருவே, **पुरारे**–த்ரிபுரர்களின் எதிரியே, **त्वदन्यः**–உம்மைக் காட்டிலும் வேறு, **वरेण्यः**–போற்றத்தக்கவர், **न**–இல்லை, **मान्यः**–மதிக்கத்தக்கவர், **न**-இல்லை, **गण्यः**–எண்ணத்தக்கவர், **न**-இல்லை.

ப்ரபோ! சூலத்தைக் கையில் தரித்தவரே! வியாபகரே! விச்வநாதா! மஹாதேவா! சம்போ, மஹேசா! முக்கண்ணனே! பார்வதியின் காந்தனே! அமைதியுள்ளவரே, மன்மதனுக்கு எதிரியே! த்ரிபுரர்களின் சத்ருவே! நீர்தான் போற்றத் தக்கவர். மதிக்கத்தக்கவரும் எண்ணத்தக்கவரும் நீரே. வேறு ஒருவருமல்ல. (9)

शंभो महेश करुणामय शूलपाणे
गौरीपते पशुपते पशुपाशनाशिन् ।
काशीपते करुणया जगदेतदेक-
स्त्वं हंसि पासि विदधासि महेश्वरोऽसि ॥ १० ॥

ஶம்போ மஹேஶ கருணமய ஶூலபாணே
கௌரீபதே பஶுபதே பஶுபாஶநாஶின் ।
காஶீபதே கருணயா ஜகதேததேக-
ஸ்த்வம் ஹம்ஸி பாஸி விததாஸி மஹேச்வரோऽஸி ॥

शम्भो-சம்புவே, **महेश**-மஹேச்வரா, **करुणामय**–கருணையின் உருவமே, **शूलपाणे**–கையில் சூலத்தை தரித்தவரே, **गौरीपते**-கௌரியின் நாயகனே, **पशुपते**-பசுக்களின் (பிராணிகளின்) ஸ்வாமியே, **पशुपाशनाशिन्**–பசுக்களின் (ஜீவர்களின்) பாசத்தை ஒழிப்பவரே, **काशीपते**-காசீ நகரத் தலைவனே, **त्वं**–நீர், **एकः**–ஒருவனாக இருந்துகொண்டு, **करुणया**–கருணையினால், **एतत् जगत्**–இந்த பிரபஞ்சத்தை, **विदधासि**–ஸிருஷ்டிக்கிறீர், **पासि**–காப்பாற்றுகிறீர், **हंसि**–அழிக்கிறீர் (அதனால்), **महेश्वरः असि**–மஹேச்வரனாக இருக்கிறீர்.

சம்போ, மஹேசா, கருணைவடிவமே, சூலத்தைக் கையில் உள்ளவரே! கௌரியின் நாயகரே, ஜீவர்களின் யஜமானரே,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பிராணிகளின் பந்தத்தை ஒழிப்பவரே, காசீ நகராதிபதியே, நீ ஒருவனே இந்தப் பிரபஞ்சத்தை ஸிருஷ்டித்துக் காப்பாற்றி அழிக்கிருய் ஜீவர்களின் பேரிலுள்ள கருணையால்தான் இவற்றைச் செய்கிருய். சரீரத்தையும் போகங்களையும் கொடுத்து துன்பங்களை விலக்கி முடிவில் பேரின்பத்தையும் தருகிருய் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்யும் சக்தி என்னும் ஐசுவர்யம் உன்னிடமே இருப்பதால் நீயே மஹேசுவரன். (10)

त्वत्तो जगद्भवति देव भव स्मरारे
त्वय्येव तिष्ठति जगन्मृड विश्वनाथ ।
त्वय्येव गच्छति लयं जगदेतदीश
लिङ्गात्मके हर चराचरविश्वरूपिन् ॥ ११ ॥

த்வத்தோ ஜகத் பவதி தேவ பவ ஸ்மராரே
த்வய்யேவ திஷ்டதி ஜகன் ம்ருட விச்வநாத ।
த்வ்ய்யேவ கச்சதி லயம் ஜகதேததீஶ
லிங்காத்மகே ஹர சராசரவிச்வரூபின் ॥

देव-தேவனே, भव-காரணப்பொருளே, स्मरारे-காமனின் எதிரியே, त्वत्तः-உம்மிடமிருந்து, जगत्-பிரபஞ்சம், भवति-உண்டாகிறது, मृड-ஸுகத்தை அளிப்பவரே, विश्वनाथ-ஜகந்நாதா, जगत्-பிரபஞ்சம், त्वय्येव-உம்மிடத்திலேயே, तिष्ठति-நிற்கிறது. ईश-ஈசனே, हर-பாபங்களைப் போக்குபவனே, चराचरविश्वरूपिन्-ஸ்தாவரமாயும் ஜங்கமமாயும் உள்ள பிரபஞ்ச உருவம்கொண்டவரே, लिङ्गात्मके-லிங்கரூபியான, त्वय्येव-உம்மிடத்திலேயே, एतत् जगत्-இந்த ஜகத் लयं-லயத்தை गच्छति-அடைகிறது.

ஹே தேவா, காரண வஸ்துவே, காமனை அழித்தவரே, பிரபஞ்சம் உம்மிடமிருந்து உண்டாகிறது. ஸுகத்தையளிப்பவரே, ஜகந்நாத, உம்மிடமே பிரபஞ்சம் நிற்கிறது. ஈசனே, ஹரனே, ஸ்தாவரமும் ஜங்கமமுமான பிரபஞ்சமாக இருப்பவனே! காரண ஸ்வரூபமான உம்மிடத்தில்தான் இந்த பிரபஞ்சம் லயத்தையடைகிறது. (11)

வேதஸார சிவ ஸ்தோத்ரம் முற்றும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ कालभैरवाष्टकम् ॥

காலபைரவாஷ்டகம்

[ஸ்ரீ சங்கரபகவத் பாதாசார்யாள் வாராணசியில் தங்கியிருந்த சமயத்தில் அங்கு கோயில் கொண்டுள்ள ஸ்ரீ காலபைரவரை தர்சித்து ஸ்தோத்ரம் செய்தருளியிருக்கிறார். அதுதான் 9 சுலோகங்கள் கொண்ட இந்த காலபைரவாஷ்டகம் முதல் 8 சுலோகங்கள் ஸ்தோத்ரமாகவும், கடைசி சுலோகம் பலச்ருதியாகவும் அமைந்துள்ளது இது.]

देवराजसेव्यमानपावनांघ्रिपङ्कजं
व्यालयज्ञसूत्रमिन्दुशेखरं कृपाकरम् ।
नारदादियोगिबृन्दवन्दितं दिगम्बरं
काशिकापुराधिनाथकालभैरवं भजे ॥ १ ॥

தேவராஜ ஸேவ்யமான பாவனாங்க்ரி பங்கஜம்
வ்யாள யக்ஞஸூத்ரமிந்து ஶேகரம் க்ருபாகரம் ।
நாரதாதி யோகிப்ருந்த வந்திதம் திகம்பரம்
காஶிகாபுராதிநாத காலபைரவம் பஜே ॥

देवराज–தேவேந்திரனால், **सेव्यमान**–ஸேவிக்கப்படுகிற, **पावन**–தூய்மையான, **अंघ्रिपङ्कजं**–தாமரைபோன்ற திருவடிகளை உடையவரும், **व्याल**–பாம்பை, **यज्ञसूत्रं**–யக்ஞோபவீதமாகக்கொண்டவரும், **इन्दुशेखरं**–சந்திரனை சிரோபூஷணமாகக்கொண்டவரும், **कृपाकरं**–கருணாநிதியும், **नारदादि**–நாரதர் முதலான, **योगिबृन्द**–யோகிகளின் கூட்டத்தால், **वन्दितं**–வணங்கப்பட்டவரும், **दिगम्बरं**–திசைகளையே ஆடையாக உடையவருமான, **काशिकापुराधिनाथ**–காசிமாநகரின் அதிபதியான, **कालभैरवं**–காலபைரவரை, **भजे**–பஜிக்கிறேன்.

காசீநகருக்கு ஸ்வாமியாக விளங்கும் காலபைரவரின் தூய திருவடித் தாமரைகளை தேவேந்திரனும் வணங்குகிறான். பாம்புகளை பூணூலாகத் தரித்துக்கொண்டிருக்கிறார். சிரஸில்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சந்திரன் அலங்காரமாக விளங்குகிறான். கருணாநிதியான இவரை மனதை அடக்கிய நாரதர் முதலான யோகியர்கள் வணங்குகின்றனர். இடுப்பில் ஆடையில்லாதவர். இந்தக் காலபைரவரை பஜிக்கிறேன். (1)

भानुकोटिभास्वरं भवाब्धितारकं परं
नीलकण्ठमीप्सितार्थदायकं त्रिलोचनम् ।
कालकालमम्बुजाक्षमस्तशून्यमक्षरं
काशिकापुराधिनाथकालभैरवं भजे ॥ २ ॥

பானு கோடி பாஸ்வரம் பவாப்தி தாரகம் பரம்
நீலகண்டமீப்ஸிதார்த்த தாயகம் த்ரிலோசனம் ।
காலகாலமம்புஜாக்ஷமஸ்தஶூன்யமக்ஷரம்
காஶிகா புராதிநாத காலபைரவம் பஜே ॥

भानुकोटि-கோடி ஸூர்யர்கள்போல், **भास्वरं**-பிரகாசிக்கிறவரும், **भवाब्धितारकं**-ஸம்ஸாரக்கடலைத் தாண்டும்படி செய்கிறவரும், **परं**-மேலானவரும், **नीलकण्ठं**-நீலநிறமான கழுத்தையுடையவரும், **ईप्सितार्थदायकं**-விரும்பும் பொருளைத் தருபவரும், **त्रिलोचनं**-முக்கண்ணனும், **कालकालं**-மிருத்யுவுக்கும் மிருத்யுவாயும், **अम्बुजाक्षं**-தாமரைபோன்ற கண்களுள்ளவரும், **अस्तशून्यं**-சூன்யமற்றவரும், **अक्षरं**-அழிவற்றவருமான, **काशिकापुराधिनाथ**-காசிமாநகரின் அதிபதியான, **कालभैरवं**-காலபைரவரை, **भजे**-பஜிக்கிறேன்.

கோடி ஸூர்யர்கள் ஒரேசமயத்தில் இருந்தால் எத்தனை பிரகாசமிருக்குமோ அத்தனை பிரகாசமுள்ளவர். பிறவிக் கடலில் விழுந்து துன்பமுறும் நம்மை அக்கரை சேர்ப்பவர். அவரே மேலான தெய்வம். கழுத்தில் நீல நிறமும் தாமரை போன்ற கண்களுமுள்ளவர். வேண்டியதை எல்லாம் கொடுப்பவர் முக்கண்ணன் காலனையும் நிக்ரஹம் செய்த இவர் மிருத்யு பயத்தைப் போக்குபவர். அழிவற்றவர். இவர் இல்லாத இடமும் காலமும் இல்லை. இந்த காசீநகரஸ்வாமியான காலபைரவரை பஜிக்கிறேன். (2)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

शूलटङ्कपाशदण्डपाणिमादिकारणं
श्यामकायमादिदेवमक्षरं निरामयम् ।
भीमविक्रमं प्रभुं विचित्रताण्डवप्रियं
काशिकापुराधिनाथकालभैरवं भजे ॥ ३ ॥

ஶூல டங்க பாஶ தண்ட பாணிமாதிகாரணம்
ச்யாம காயமாதிதேவமக்ஷரம் நிராமயம் ।
பீமவிக்ரமம் ப்ரபும் விசித்ர தாண்டவப்ரியம்
காஶிகாபுராதிநாத காலபைரவம் பஜே ॥

शूलटङ्कपाशदण्डपाणि-சூலம், உளி, பாசம், தண்டம் இவைகளைக் கையில் வைத்திருப்பவரும், आदिकारणं-முதற் காரணமாக இருப்பவரும், श्यामकायं-கருப்பான உடலுள்ள வரும், आदिदेव-முதலாவது தேவனும், अक्षरं-நாசமில்லாத வரும், निरामयं-பிணியில்லாதவரும், भीमविक्रमं-பயங்கரமான பராக்ரமமுள்ளவரும், प्रभुं-ஸ்வாமியும், विचित्रताण्डवप्रियं-ஆச்சர்யமான தாண்டவத்தில் ப்ரீதி உள்ளவரும், काशिकापुराधिनाथ-காசிமாநகரின் அதிபதியான, कालभैरवं-கால பைரவரை, भजे-பஜிக்கிறேன்.

கைகளில் சூலம், டங்கம், பாசம், தண்டம் இந்த ஆயுதங்களை வைத்திருப்பவர். எல்லாவற்றிற்கும் மூலகாரணம் உடல் வெளுப்பாக இருந்தபோதிலும் கழுத்திலுள்ள விஷத்தால் கருப் பாகவும் தெரிகிறது. முதலாவது தேவன், நாசமில்லாதவர், வியாதி-துன்பம் ஒன்றுமில்லாதவர். துஷ்டர்களுக்கு பயத்தைத் தரும் பராக்ரமமுள்ளவர் எல்லோரும் ஆச்சர்யப்படும்படி பலவிதமாக தாண்டவம் செய்வதில் ப்ரீதி உள்ளவர். இந்த காசி நகரத்தலைவனை காலபைரவரை பஜிக்கிறேன். (3)

भुक्तिमुक्तिदायकं प्रशस्तचारुविग्रहं
भक्तवत्सलं स्थिरं समस्तलोकविग्रहम् ।
निक्वणन्मनोज्ञहेमकिङ्किणीलसत्कटिं
काशिकापुराधिनाथकालभैरवं भजे ॥ ४ ॥

CC-O. In Public Domain. Digitized by eGangotri

புக்தி முக்தி தாயகம் ப்ரஶஸ்த சாருவிக்ரஹம்
பக்த வத்ஸலம் ஸ்திரம் ஸமஸ்தலோக விக்ரஹம் ।
நிக்வணன் மனோக்ஞ ஹேம கிங்கிணீ லஸத்கடிம்
காஶிகாபுராதிநாத காலபைரவம் பஜே ॥

भुक्तिमुक्तिदायकं–போகத்தையும் மோக்ஷத்தையும் தருபவரும், **प्रशस्त**-சிறந்த, **चारु**–அழகிய, **विग्रहं**-சரீரமுள்ளவரும் **भक्तवत्सलं**–பக்தர்களிடம் வாத்ஸல்யமுள்ளவரும், **स्थिरं**–நிலைத்து இருப்பவரும், **समस्तलोकविग्रहं**–எல்லா உலகங்களையும் சரீரமாகக்கொண்டவரும், **निक्वणन्मनोज्ञ**–ஒலிக்கின்ற அழகிய, **हेमकिङ्किणी**–தங்கச் சலங்கைகளுடன், **लसत्**–விளங்கும், **कटिं**–இடுப்பை உடையவருமான, **काशिकापुराधिनाथ**–காசி நகரத்தின் அதிபதியான, **कालभैरवं**–காலபைரவரை, **भजे**–பஜிக்கிறேன்.

இவ்வுலகிலும் மேலுலகிலும் போகங்களையும் மோக்ஷத்தையும் அளிப்பவர். மிகச்சிறந்ததும் அழகியதுமான சரீரமுள்ளவர். பக்தர்களிடம் அன்புகொண்டவர். நிலைத்திருப்பவர். எல்லா உலகங்களையும் சரீரமாகக்கொண்டவர். இடுப்பில் ஒலிக்கும் அழகிய தங்கச்சலங்கைகளுடன் கூடிய அரைஞாண்கட்டிக்கொண்டிருக்கிறார். இந்த காசிநகராதிபதியான காலபைரவரை பஜிக்கிறேன். (4)

धर्मसेतुपालकं त्वधर्ममार्गनाशकं
कर्मपाशमोचकं सुशर्मदायकं विभुम् ।
स्वर्णवर्णकेशपाशशोभिताङ्गनिर्मलं
काशिकापुराधिनाथकालभैरवं भजे ॥ ५ ॥

தர்ம ஸேது பாலகம் த்வதர்ம மார்க்க நாஶகம்
கர்ம பாஶ மோசகம் ஸுஶர்மதாயகம் விபும் ।
ஸ்வர்ணவர்ண கேஶ பாஶ ஶோபிதாங்க நிர்மலம்
காஶிகா புராதிநாத காலபைரவம் பஜே ॥

धर्मसेतु–தர்மமாகிற அணையை, **पालकं**–காப்பாற்றுகிறவரும், **अधर्ममार्गनाशकं**–அதர்ம வழியை அழிப்பவரும், **कर्म**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

पाशमोचकं-கர்மபாசத்திலிருந்து விடுவிப்பவரும், **सुशर्मदायकं**-சிறந்த ஸுகத்தைத்தருபவரும், **विभुं**-எங்கும் உள்ளவரும், **स्वर्णवर्ण**-தங்க நிறமுள்ள, **केशपाश**-கேசஸமூஹங்களால், **शोभिताङ्गनिर्मलं**-விளங்கும் தூய்மையான சரீரமுள்ளவருமான **काशिकापुराधिनाथ**-காசீ நகராதிபதியான, **कालभैरवं**-காலபைரவரை, **भजे**-பஜிக்கிறேன்.

தர்மம் என்னும் அணையை அழியாமல் காப்பாற்றுபவர். அதர்ம வழியை அழிப்பவர். கர்ம பந்தத்திலிருந்து விடுவிப்பவர். சிறந்த ஸுக்த்தைத் தருபவர், வியாபகர், தங்கநிறமுள்ள கேச ஸமூஹத்தால் விளங்கும் தூய்மையான சரீரமுள்ளவர். இந்த காசிமாநகரபதியான காலபைரவரை பஜிக்கிறேன். (5)

रत्नपादुकाप्रभाभिरामपादयुग्मकं
नित्यमद्वितीयमिष्टदैवतं निरञ्जनम् ।
मृत्युदर्पनाशनं करालदंष्ट्रभूषणं
काशिकापुराधिनाथकालभैरवं भजे ॥ ६ ॥

ரத்னபாதுகா ப்ரபாபிராம பாத யுக்மகம்
நித்யமத்விதீயமிஷ்ட தைவதம் நிரஞ்ஜனம் ।
ம்ருத்யுதர்ப நாஶனம் கராளதம்ஷ்ட்ர பூஷணம்
காஶிகாபுராதிநாத காலபைரவம் பஜே ॥

रत्नपादुका-ரத்னம் பதித்த பாதுகைகளின், **प्रभा**-ஒளியால், **अभिराम**-அழகிய, **पादयुग्मकं**-இருபாதங்களையுடையவரும், **नित्यं**-பிறப்பு இறப்பு அற்றவரும், **अद्वितीयं**-இரண்டற்றவரும், **इष्टदैवतं**-இஷ்ட தைவமும், **निरञ्जनं**-தோஷங்கள் அற்றவரும், **मृत्युदर्पनाशनं**-யமனின் கொழுப்பை ஒழித்தவரும், **करालदंष्ट्रभूषणं**-பயங்கரமான கோரைப்பற்களை ஆபரணமாகக்கொண்டவருமான, **काशिकापुराधिनाथ**-காசிநகரபதியான, **कालभैरवं**-காலபைரவரை, **भजे**-பஜிக்கிறேன்.

பாதுகைகளில் பதிக்கப்பட்ட ரத்னங்களின் ஒளியால் இரு திருவடிகளும் அழகுடன் விளங்குகிறது. அழிவற்றவர். இரண்டாவது பொருள் இல்லாதவர். இஷ்டமான தைவம்,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தோஷங்களற்றவர். யமனின் கர்வத்தைப் போக்கியவர். பயங்கரமான கோரைப்பற்களை அணியாகக்கொண்டவர். இந்த காசீநகரபதியான காலபைரவரை பஜிக்கிறேன். (6)

अट्टहासभिन्नपद्मजाण्डकोशसंततिं
दृष्टिपातनष्टपापजालमुग्रशासनम् ।
अष्टसिद्धिदायकं कपालमालिकाधरं
काशिकापुराधिनाथकालभैरवं भजे ॥ ७ ॥

அட்டஹாஸ பிந்ந பத்மஜாண்ட கோஶஸந்ததிம்
த்ருஷ்டிபாத நஷ்ட பாபஜாலமுக்ரஶாஸநம் ।
அஷ்டஸித்தி தாயகம் கபாலமாலிகா தரம்
காஶிகா புராதிநாத காலபைரவம் பஜே ॥

अट्टहास-உரத்த சிரிப்பினால், **भिन्न**-பிளக்கப்பட்ட, **पद्मजाण्डकोशसन्ततिं**-மொட்டுப்போன்ற ப்ரஹ்மாண்டங்களின் கூட்டங்களை உடையவரும், **दृष्टिपात**-பார்வையைச் செலுத்துவதால், **नष्ट**-அழிந்துபோகும், **पापजालं**-பாபக்கூட்டத்தை உடையவரும், **उग्रशासनं**-கடுமையான உத்தரவுகளை உடையவரும், **अष्टसिद्धिदायकं**-எட்டு ஸித்திகளையும் தருபவரும், **कपालमालिकाधरं**-மண்டையோட்டு மாலையைத் தரித்தவருமான, **काशिकापुराधिनाथ**-காசீ நகராதிபதியான, **कालभैरवं**-காலபைரவரை, **भजे**-பஜிக்கிறேன்.

இவர் செய்யும் அட்டஹாஸத்தின் பேரொலியால் ப்ரஹ்மாண்டங்கள் எல்லாம் பிளக்கப்பட்டுவிடுகின்றன. இவருடைய கடாக்ஷம் விழுந்தால் எல்லா பாபங்களும் அழிந்துவிடும். இவருடைய கடுமையான உத்தரவை யாரும் மீறமுடியாது. பக்தர்களுக்கு அணிமா முதலான எட்டு ஸித்திகளையும் தருபவர். எத்தனையோ ப்ரஹ்மாக்களின் மண்டையோடுகளை மாலையாக அணிந்திருக்கிறார். இந்த காசிபுரத்தலைவனான காலபைரவரை பஜிக்கிறேன். (7)

भूतसङ्घनायकं विशालकीर्तिदायकं
काशिवासिलोकपुण्यपापशोधकं विभुम् ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

नीतिमार्गकोविदं पुरातनं जगत्पतिं
काशिकापुराधिनाथकालभैरवं भजे ॥ ८ ॥

பூதஸங்கநாயகம் விஶாலகீர்த்திதாயகம்
காஶிவாஸி லோக புண்ய பாப ஶோதகம் விபும் ।
நீதிமார்க்க கோவிதம் புராதனம் ஜகத்பதிம்
காஶிகாபுராதிநாத காலபைரவம் பஜே ॥

भूतसंघनायकं-பூதக்கூட்டங்களின் தலைவரும், **विशाल-कीर्तिदायकं**-விஸ்தாரமான கீர்த்தியைத் தருபவரும், **काशि-वासि**-காசீ க்ஷேத்திரத்தில் வஸிக்கின்ற, **लोक**-ஜனங்களின் **पुण्यपाप**-புண்ய பாபங்களை, **शोधकं**-சோதிப்பவரும், **विभुं**-வியாபகரும், **नीतिमार्गकोविदं**-நியாய வழியை நன்கு அறிந்தவரும், **पुरातनं**-பழமையானவரும், **जगत्पतिं**-உலகங்களின் தலைவருமான, **काशिकापुराधिनाथ**-காசீ நகராதிபதியான, **कालभैरवं**-காலபைரவரை, **भजे**-பஜிக்கிறேன்.

பூதகணங்களுக்குத் தலைவர், பக்தர்களுக்கு விஸ்தாரமான புகழைத் தருபவர். காசீ க்ஷேத்திரத்தில் வஸிக்கும் ஜனங்களின் புண்யங்களையும் பாபங்களையும் சோதிப்பவர். தான்யங்களை சல்லடையைக் கொண்டு சலித்தால் அஸாரமான அம்சங்களை நீக்கி ஸாரமான அம்சங்களை மட்டும் மிஞ்சச் செய்கிறது. இது போல் பாபங்களையெல்லாம் நீக்கி புண்யத்தை மட்டும் மிஞ்சச் செய்கிறார். வியாபகர், நியாய முறைகளை நன்கு அறிந்தவர். எல்லாவற்றிற்கும் முன்னால் இருப்பவர். உலகங்களுக்குத் தலைவர் - இந்த காசிமாநகர பதியான கால பைரவரை பஜிக்கிறேன். (8)

कालभैरवाष्टकं पठन्ति ये मनोहरं
ज्ञानमुक्तिसाधकं विचित्रपुण्यवर्धनम् ।
शोकमोहलोभदैन्यकोपतापनाशनं
ते प्रयान्ति कालभैरवांघ्रिसन्निधिं ध्रुवम् ॥ ९ ॥

காலபைரவாஷ்டகம் படந்தி யே மனோஹரம்
ஞானமுக்திஸாதகம் விசித்ரபுண்ய வர்த்தனம் ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சோக மோஹ லோப தைன்ய கோப தாப நாசநம்
தே ப்ரயாந்தி காலபைரவாங்க்ரி ஸந்நிதிம் த்ருவம் ॥॥

ये-எவர்கள், मनोहरं-இனிமையானதும், ज्ञानमुक्तिसाधकं-ஞானம் மூலம் முக்திபைப்பெற ஸாதனமாக உள்ளதும், विचित्रपुण्यवर्धनं-பலவித புண்யங்களை வளரச்செய்வதும், शोक-சோகம், मोह-மோஹம், लोभ-லோபம், दैन्य-தைன்யம், कोप-கோபம், ताप-தாபம் இவைகளை, नाशनं-போக்குவதுமான, कालभैरवाष्टकं-காலபைரவாஷ்டகம் என்ற இந்த ஸ்தோத்ரத்தை, पठन्ति-படிக்கிறார்களோ, ते-அவர்கள், ध्रुवं-நிச்சயமாக, कालभैरवांघ्रिसन्निधिं-காலபைரவரின் பாதாரவிந்தத்தின் ஸமீபத்தை प्रयान्ति-அடைகிறார்கள்.

எட்டு சுலோகங்கள் கொண்ட இந்தக் காலபைரவாஷ்டகம் படிப்பதற்கும் கேட்பதற்கும் இனிமையானது. ஞானத்தைக் கொடுத்து அதன் மூலம் மோக்ஷத்தையும் தரவல்லது. ஞானத்திற்கு ஸாதனமாக ஏராளமான புண்யங்களைப் பெருக்குகிறது. சோகம் (வஸ்துக்களின் பிரிவினால் உண்டாகும் துக்கம்) மோஹம் (ப்ராந்தி) பேராசை, ஏழ்மை, கோபம், ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதி தைவிகம் என்ற தாபங்கள் இவற்றையெல்லாம் அடியுடன் போக்கக்கூடியது. இந்த ஸ்தோத்திரத்தை தினமும் படிப்பவர்கள் நிச்சயமாகக் கால பைரவரின் சரணாரவிந்த ஸந்நிதியை அடைவார்கள். (9)

காலபைரவாஷ்டகம் முற்றும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ श्रीः ॥

॥ सुवर्णमालास्तुतिः ॥

ஸுவர்ணமாலா ஸ்துதி

[50 சுலோகங்கள் கொண்ட ஸுவர்ணமாலா ஸ்துதி தாளத்திற்கு இசைவாக அமைந்துள்ளது. அகாரம் முதல் க்ஷகாரம் வரை உள்ள அக்ஷர வரிசைப்படி ஒவ்வொரு சுலோகத்திலும் முதல் அக்ஷரம் இருப்பதால் இதற்கு ஸுவர்ணமாலா ஸ்துதி என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. பூர்வார்த்தம் (சுலோகத்தின் முன்பாதி) வெவ்வேறாக இருந்தாலும் உத்தரார்த்தம் (பின்பாதி) எல்லா சுலோகங்களிலும் ஒரேமாதிரியாகத்தான் இருக்கிறது. அநேகமாக எல்லாம் ஸம்போதனமாகவே உள்ளது. இந்த ஸ்துதியில் பகவத் சரணத்தையே சரணமடைகிறார்]

अथ कथमपि मद्रसनां त्वद्गुणलेशैर्विशोधयामि विभो ।
[1]साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ १ ॥

அத கதமபி மத்ரஸனாம்
த்வத்குணலேசைர் விசோதயாமி விபோ ।
ஸாம்ப ஸதாசிவ சம்போ சங்கர
சரணம் மே தவ சரணயுகம் ॥

विभो–எங்கும் நிறைந்த பரமேசனே! **अथ**–முதலில், **त्वद्गुणलेशैः**–உம்முடைய குணத்துளிகளால், **कथमपि**–எப்படியாவது, **मद्रसनां**–என் நாக்கை, **विशोधयामि**–தூய்மையாக்கிக்கொள்கிறேன். **साम्ब**–அம்பிகையுடன் கூடியவரே, **सदाशिव**–எப்பொழுதும் மங்களஸ்வரூபியே, **शंभो**–மங்களங்களுக்குக்காரணமானவரே, **शंकर**–மங்களத்தைச் செய்பவரே **मे**–எனக்கு, **तव**–உம்முடைய, **चरणयुगं**–இரு திருவடிகளும், **शरणम्**–அடைக்கலம்.

---

1. முதல் சுலோகத்தில் உள்ளது போலவே பின்வரும் எல்லா சுலோகங்களிலும் உத்தரார்த்தம் (சுலோகத்தின் பின்பாதி) ஒரே மாதிரியாகவே இருப்பதால் இங்கு கூறியுள்ள தமிழ் உரையையே எல்லா சுலோகங்களிலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பகவானுடைய குணங்களைச் சொல்லி நாக்கை சுத்தம் செய்வதாக அகாரத்திலாரம்பிக்கும் முதல் சுலோகத்தில் கூறி துதியை ஆரம்பிக்கிறார். பேசுவதற்காக ஏற்பட்டது நாக்கு. சொல்லத்தகாத விஷயங்களை எல்லாம் பேசி நாக்குக்கு அசுத்தி ஏற்பட்டுள்ளது. இந்த அசுத்தி நீங்குவதற்கு பகவானுடைய குணங்களைச் சொல்லவேண்டும். பகவானுடைய குணங்கள் மலைபோன்றது. அளவிடமுடியாதது. அதில் சிறிதளவு சொன்னால் போதும். எல்லாப் பாபங்களும் விலகி நாக்கு பரிசுத்தமாகிவிடும். உலக ஸமாசாரங்களையெல்லாம் பேசும் நாக்கு பகவானைப்பற்றிப் பேசும்பொழுது மௌனமாகிவிடும். இதற்கும் பூர்வஸுகிருதம் வேண்டும். குற்றமுள்ள நாம் பகவத் சரணத்தை சரணமடைவதைத் தவிர வேறு வழியில்லை. தந்தையின் கோபத்தைத் தணித்துத் தாய்தான் குழந்தையைக் காப்பாற்றும்படி செய்வாள். அதனால்தான் அம்பிகையுடன் கூடிய பகவானை சரணமடைகிறார். ஈசன் எப்பொழுதும் மங்கள உருக்கொண்டவர். எல்லா மங்களங்களுக்கும் இவர்தான் காரணம், மங்களத்தைத் தருபவரும் இவரே. ஆகையால் சிவனின் திருவடியை அண்டினால் எல்லா மங்களங்களும் கிடைக்கும். (1)

आखण्डलमदखण्डनपण्डित तण्डुप्रिय चण्डीश विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ २ ॥

ஆகண்டல மத கண்டன பண்டித
தண்டுப்ரிய சண்டீஶ விபோ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

आखण्डल–இந்திரனின், **मद**–கர்வத்தை, **खण्डन**–ஒழிப்பதில், **पण्डित**–திறமையுள்ளவரே, **तण्डुप्रिय**–தண்டு என்ற பக்தனிடம் ப்ரீதியுள்ளவரே, **चण्डीश**–சண்டியின் நாயகரே **विभो**–எங்கும் உள்ளவரே, **साम्ब**–அம்பிகையுடன் கூடியவரே, ... **शरणम्**–அடைக்கலம்.

மூன்று உலகங்களுக்கும் அதிபதியாக இருந்தாலும் தேவேந்திரன் செருக்குற்றால் அவன் கர்வத்தையடக்கி அருள் செய்பவர். தண்டு என்ற தம் பக்தனிடம் ப்ரீதி கொண்டவர். சண்டியின் நாயகர். (2)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

इभचर्माम्बर शम्बररिपुवपुरपहरणोज्ज्वलनयन विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ३ ॥

இபசர்மாம்பர ஶம்பரரிபு வபு-
ரபஹரணோஜ்வல நயன விபோ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

इभचर्माम्बर-யானைத் தோலை ஆடையாக அணிந்தவரே, **शम्बररिपु**-சம்பராஸுரனின் எதிரியாகிய காமனின், **वपुरपहरण**-சரீரத்தை அழிப்பதில், **उज्ज्वल**-மிகுந்த பிரகாசமுள்ள, **नयन**-கண்களை உடையவரே, **विभो** எங்குமுள்ளவரே **साम्ब**-ஸாம்பனே ... **शरणम्**-அடைக்கலம்.

உலகிற்குத் தீங்கு செய்த யானை உருவம்கொண்ட கஜாஸுரனைக் கொன்று அவன் தோலை (யானைத் தோலை) மேலாடையாக அணிந்தவர். சம்பரனை அடக்கிய மன்மதனின். உடலைத் தம் கண்பார்வையாலேயே தஹித்தவர். (3)

ईश गिरीश नरेश परेश महेश बिलेशयभूषण भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ४ ॥

ஈஶ கிரீஶ நரேஶ பரேஶ ம
ஹேஶ பிலேஶய பூஷண போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

भो ईश-ஹே ஈசுவரனே, **गिरीश**-கைலாஸமலைக்கு அதிபனே, **नरेश**-மனிதர்களுக்குத் தலைவனே, **परेश**-மேலான ஈசனே, **महेश**-மஹேசுவரனே, **बिलेशयभूषण**-புற்றில் வாழும் ஸர்ப்பங்களை அணியாகக் கொண்டவனே, **साम्ब**-ஸாம்பனே ... **शरणम्**-அடைக்கலம்.

பாம்புகளையே தம் சரீரத்தில் ஆபரணமாக அணிந்திருக்கிறார் ஆனாலும் எல்லாவற்றிற்கும் ஈசன் (ப்ரபு) அவர் தான். (4)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

उमया दिव्यसुमङ्गलविग्रहयालिङ्गितवामाङ्ग विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ५ ॥

உமயா திவ்ய ஸுமங்கள விக்ரஹ
யாலிங்கித வாமாங்க விபோ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

दिव्य-அழகான, **सुमङ्गल**-நல்ல மங்களம் பொருந்திய, **विग्रहया**-சரீரத்துடன்கூடிய, **उमया**-பார்வதியினால், **आलिङ्गित**-தழுவிக் கொள்ளப்பட்ட, **वामाङ्ग**-சரீரத்தின் இடதுபக்க முடையவரே, **विभो**-வியாபகரே, **साम्ब**-ஸாம்பனே...**शरणम्**-அடைக்கலம்.

பகவான் மங்களரூபி. இவர் பத்னியான உமையின் சரீரமும் திவ்யமங்களரூபம். இவளுக்கு 'ஸர்வ மங்களா' என்று பெயர். பகவானின் இடதுபக்கத்தில் பார்வதி ஆலிங்கனம் செய்து கொண்டிருக்கிறாள். (5)

ऊरीकुरु मामज्ञमनाथं दूरीकुरु मे दुरितं भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ६ ॥

ஊரீகுரு மாமஜ்ஞமநாதம்
தூரீகுரு மே துரிதம் போ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

अज्ञं-அறிவிலியாயும், **अनाथं**-கதியில்லாதவனுமான, **मां**-என்னை, **ऊरीकुरु**-ஏற்றுக்கொள். **भो**-ஹே பரமேசா, **मे**-என்னுடைய, **दुरितं**-பாபத்தை, **दूरीकुरु**-போக்குவாயாக, **साम्ब**-ஸாம்பனே ... **शरणम्**-அடைக்கலம்.

புண்யசாலிகள்தான் பகவானை அடையமுடியும். பாபமுள்ளவர்கள் அடையமுடியாது, நானோ மஹா பாபி. உங்களை அடைவதற்குவேண்டிய ஸாதனங்களை அறியாதவன் எனக்கு வேறு கதியுமில்லை. உங்கள் திருப்பாதங்களையே நம்பி சரண

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மடைகிறேன். தாங்கள் என் பேரில் கிருபைசெய்து என் பாபங்களைப்போக்கி என்னை ஏற்றுக்கொள்ளவேண்டும். (6)

ऋषिवरमानसहंस चराचरजननस्थितिलयकारण भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ७ ॥

ருஷிவர மானஸ ஹம்ஸ சராசர
ஜனன ஸ்திதிலய காரண போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரண யுகம் ॥

ऋषिवर-சிறந்த முனிவர்களின், **मानस**-மனமாகிற மானஸஸரஸ்ஸில், **हंस**-ஹம்ஸம்போல் விளங்குபவரே, **चराचर**-ஸ்தாவரமாயும் ஜங்கமமாயும் உள்ள எல்லாவற்றினுடையவும், **जननस्थितिलय**-பிறப்பு, இருப்பு, அழிவு இவைகளுக்கு, **कारण**-காரணமானவரே, **भो साम्ब**-ஹே ஸாம்பனே ... **शरणम्**-அடைக்கலம்.

ஹம்ஸங்கள் மானஸஸரஸ்ஸில் மிகுந்த ப்ரீதியுடன் வாஸம் செய்யும். தாங்கள் சிறந்த மஹரிஷிகளின் மனதில் வாஸம் செய்கிறீர்கள், முனிவர்கள் தம் மனதைவிட்டு நீர் அகலாதபடி எப்பொழுதும் உம்மை தியானம் செய்கிறார்கள். ஆகையால் எப்பொழுதும் அவர்கள் மனதில் விளங்கிக்கொண்டிருக்கிறீர். இப்பிரபஞ்சத்தை நீர்தான் ஸிருஷ்டிக்கிறீர். காப்பாற்றுவதும் நீர்தான். முடிவில் எல்லாம் உம்மிடத்தில்தான் லயமடைகின்றன. நீர்தான் ஈசன். (7)

ऋक्षाधीशकिरीट महोक्षारूढ विधृतरुद्राक्ष विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ८ ॥

ருக்ஷாதீஶ கிரீட மஹோக்ஷா-
ரூட வித்ருத ருத்ராக்ஷ விபோ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

ऋक्षाधीश-நக்ஷத்திரங்களுக்கு நாயகனான சந்திரனை, **किरीट**-கிரீடத்தில் அணியாகக் கொண்டவரே, **महोक्षारूढ**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பெரிய விருஷப வாஹனத்தில் ஏறி அமர்ந்திருப்பவரே, **विधृतरुद्राक्ष**-ருத்ராக்ஷத்தை தரித்திருப்பவரே, **विभो**-வியாபகரே, **साम्ब**-ஸாம்பனே ... **शरणम्**-அடைக்கலம்.

ருத்ராக்ஷங்களை தரித்துக்கொண்டு சந்திரனை சிரஸில் அணிந்து விருஷப வாஹனத்தில் அமர்ந்துள்ள உம் ஸ்வரூபத்தை தியானிக்கிறேன். (8)

ऌवर्णद्वन्द्वमवृन्तसुकुसुममिवाङ्घ्रौ तवार्पयामि विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ९ ॥

஌வர்ணத்வந்த்வமவ்ருந்த குஸுமமி
வாங்க்ரௌ தவார்பயாமி விபோ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

विभो-வியாபகரே, **ऌवर्णद्वन्द्वमिव**-இரண்டு '஌' வர்ணங்களைப் போன்ற, **अवृन्तसुकुसुमम्**-காம்பில்லாத நல்ல மலரை **तव**-உம்முடைய, **अंघ्रौ**-பாதத்தில், **अर्पयामि**-அர்ப்பணம் செய்கிறேன். **साम्ब**-ஸாம்பனே .... **शरणम्**-அடைக்கலம்.

஌ வர்ணஜோடிபோன்ற காம்பற்ற சிறந்தபூவை உமது திருவடியில் ஸமர்ப்பிக்கிறேன். (9)

एकं सदिति श्रुत्या त्वमेव सदसीत्युपास्महे मृड भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ १० ॥

ஏகம் ஸதிதி ச்ருத்யா த்வமேவ
ஸதஸீத்யுபாஸ்மஹே ம்ருட போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

भो मृड-ஹே ஸுகரூபியே, **एकं सत् इति**—'**एकं सद्विप्रा बहुधा वदन्ति**' என்ற **श्रुत्या**-ச்ருதியினால், **त्वमेव**-நீர்தான் **सत्**-எப்பொழுதும் எங்கும் எல்லாமாகவும், **असि**-இருக்கிறீர் **इति**-என்று, **उपास्महे**-தியானிக்கிறோம். **साम्ब**-ஸாம்பனே, **शरणम्**-அடைக்கலம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

'एकं सत् विप्रा बहुधा वदन्ति' என்ற சுருதியானது 'ஒரே தத்வத்தைத்தான் பலவாகப் பேசுகிறார்கள்' என்று கூறுகிறது. 'ஸத்' என்ற பதத்திற்கு எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் எல்லாப்பொருளாகவும் இருக்கிறது என்று பொருள். அந்த 'ஸத்' என்று கூறப்படும் தத்வம் நீர்தான் என்று தியானிக்கிறோம். நீரே ஆநந்தரூபி. (10)

ऐक्यं निजभक्तेभ्यो वितरसि विश्वंभरोऽत्र साक्षी भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ११ ॥

ஐக்யம் நிஜபக்தேப்யோ விதரஸி
விச்வம்பரோऽத்ர ஸாக்ஷீ போ ।
ஸாம்ப ஸதாசிவ சம்போ சங்கர
சரணம் மே தவ சரணயுகம் ॥

भो-ஹே ஈசா, **निजभक्तेभ्यः**-தன் பக்தர்களுக்கு, **ऐक्यं**-(தன்னுடன்) ஒன்றாக ஆவதை, **वितरसि**-கொடுக்கிறீர். **अत्र**-இந்த விஷயத்தில், **विश्वंभरः**-உலகையெல்லாம் தன்னிடம் தரிக்கிற விஷ்ணு, **साक्षी**-ஸாக்ஷியாக ஆவார். **साम्ब**-ஸாம்பனே ... **शरणम्**-அடைக்கலம்.

தன்னை பஜிப்பவர்களுக்குத் தன்னுடன் ஐக்யத்தையே பகவான் கொடுத்துவிடுகிறார். இது விஷயத்தில் உலகையே தம் குக்ஷியில் தாங்கும் ஸ்ரீ மஹாவிஷ்ணுவையே ஸாக்ஷியாகப் பார்க்கலாம். விஷ்ணு சிவனுடன் ஐக்யமாகி சங்கரநாராயணர் என்ற ஒரே உருவமாகக் காக்ஷியளிக்கிறார். ஆதலால் சிவனை பஜித்தால் எதையும் பெறலாம். (11)

ओमिति तव निर्देष्ट्री मायास्माकं मृडोपकर्त्री भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ १२ ॥

ஓமிதி தவ நிர்தேஷ்ட்ரீ மாயா-
ऽஸ்மாகம் ம்ருடோபகர்த்ரீ போ ।
ஸாம்ப ஸதாசிவ சம்போ சங்கர
சரணம் மே தவ சரணயுகம் ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

भो मृड-ஸுகரூபியான ஹே ஈசா, **ओमिति**-ஓம் என்று **तव**-உம்மை, **निर्देष्ट्री** - சுட்டிக்காட்டுகிற, **माया** - மாயை, **अस्माकं**-எங்களுக்கு, **उपकर्त्री**-உபகாரம் செய்கிறதாக இருக்கிறது. **साम्ब**-ஸாம்பனே .... **शरणम्** -அடைக்கலம்.

பகவானுக்கு நாமாவோ ரூபமோ ஒன்றும் கிடையாது. ஆதலால் அந்தப் பரதத்வத்தை வாக்கால் சொல்லவோ மனதால் நினைக்கவோ ஸாத்யமில்லை, உத்தமாதிகாரிகள் தான் இந்தப் பரதத்வத்தை அறிந்துகொள்ளமுடியும் நம்மால் முடியாது. நம்மையும் கரையேற்றத்தான் அந்த பரதத்வம் மாயையால் அநேக ரூபங்களையும் அநேகம் நாமாக்களையும் தாங்குகிறது, எல்லா நாமாக்களிலும் 'ஓம்' என்ற பிரணவமே மிகச் சிறந்தது. அந்தரங்கமானது பிரணவத்தை ஜபித்து தியானம் செய்தால் பரதத்வத்தை அறிந்துகொள்ளலாம், எல்லாவற்றையும் பரித்யாகம் செய்து ஞானமார்க்கத்தில் செல்கிற பரிவ்ராஜகர்கள் இதையே ஜபித்து த்யானம் செய்கிறார்கள். நாமரூபமற்ற பரதத்வத்திற்கு ஓம் என்ற பெயரை நமக்காக ஏற்படுத்திக்கொடுத்த மாயையைப்போல் உதவி செய்பவர்கள் நமக்கு ஒருவருமில்லை.

औदास्यं स्फुटयति विषयेषु दिगम्बरता च तवैव विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ १३ ॥

ஔதாஸ்யம் ஸ்புடயதி விஷயேஷு தி-
கம்பரதா ச தவைவ விபோ ।
ஸாம்ப ஸதாஶிவ ம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

विभो-வியாபகரே, **दिगम्बरता चैव**-திசைகளையே ஆடையாகக் கொண்டிருக்கும் தன்மையே (ஆடையில்லாமலிருப்பதே), **विषयेषु**-விஷயங்களில், **तव**-உமக்கு, **औदास्यं**-பற்றின்மையை, **स्फुटयति**-தெளிவாகக் காட்டுகிறது. **साम्ब**-ஸாம்பனே ... **शरणम्** - அடைக்கலம்.

உலகம் எல்லாவற்றிற்கும் பிரபுவாக இருந்தாலும் அவருக்கு ஒன்றிலும் பற்றுக்கிடையாது. தனக்கென ஒன்றையும் வைத்துக் கொள்ளமாட்டார். எல்லாவற்றையும் பக்தர்களுக்கே அளித்து

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

விடுவார். பகவானுக்கு திசைகளே ஆடை. அதாவது ஆடையே இல்லாமல் நிர்வாணமாகக் காக்ஷியளிக்கிறார். பக்தர்கள் கேட்பதையெல்லாம் வாரி வழங்கும் ஸர்வலோகேச்வரன் ஆடை யற்றிருப்பதே ஒன்றிலும் அவருக்குப் பற்று இல்லை என்பதை நன்கு எடுத்துக்காட்டுகிறது. "தன் ஆடையான திசைகளைக்கூட திக்பாலகர்களுக்கு கொடுத்துவிட்டார். ஐச்வர்யத்தை விஷ்ணு வுக்கும், தன் பேச்சான வேதத்தை ப்ரஹ்மாவுக்கும் கொடுத்து விட்டார். ஒன்றுமில்லாத கேவல நிலையில் இருக்கிறார்" என்று ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் கூறுகிறார். (13)

अन्तःकरणविशुद्धिं भक्तिं च त्वयि सतीं प्रदेहि विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ १४ ॥

அந்தக்கரண விசுத்திம் பக்திம்
ச த்வயி ஸதீம் ப்ரதேஹி விபோ ।
ஸாம்ப ஸதாசிவ சம்போ சங்கர
சரணம் மே தவ சரண யுகம் ॥

विभो-விபுவே, **अन्तःकरणविशुद्धिं**-மனத்தூய்மையையும், **त्वयि**-உம்மிடத்தில், **सतीं**-சிறந்த, **भक्तिं च**-பக்தியையும், **प्रदेहि** - (எனக்கு) கொடுக்கவேணும். **साम्ब**-ஸாம்பனே, **शरणं**-அடைக்கலம்.

என் மனத்திலுள்ள தோஷங்களையெல்லாம் போக்கித் தூய்மையாக்கி சிறந்த பக்தியை எனக்கு அருளவேண்டும். உலக ஆசைகளும், காமக்ரோதாதி தோஷங்களும் உள்ளவரை பகவா னிடத்தில் ப்ரீதி வராது. உலக போகங்களில் ஆசை அடியோடு நீங்கி வைராக்யம் ஏற்பட்டால்தான் பகவத்பக்தி ஏற்படும். அதனால்தான் சித்த சுத்தியை முதலில் வேண்டுகிறார். பக்தியும் பலவிதம், உலகவிஷயங்களைப் பெறுவதற்காகப் பக்தி பண்ணு வது சிறந்ததல்ல. நிஷ்காம பக்தியே சிலாக்யமானது. அதனால் ஸச்சிதானந்த ஸ்வரூபமான பகவானையே அடையலாம். அதனால் தான் சிறந்த பக்தியை வேண்டுகிறார். (14)

अस्तोपाधिः समस्तव्यस्तै रूपैर्जगन्मयोऽसि विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ १५ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அஸ்தோபாதி: ஸமஸ்த வ்யஸ்தை
ரூபைர் ஜகன்மயோऽஸி விபோ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

विभो-விபுவே, (உண்மையில்) **अस्तोपाधिः**-உபாதி களற்றநீர், **समस्तव्यस्तैः**-ஸமஷ்டியாயும் (சேர்ந்தும்)வ்யஷ்டி யாயும் (தனித்தனியாகவும்) உள்ள, **रूपैः**-உருவங்களால், **जगन्मयः**-பிரபஞ்ச ஸ்வரூபியாக, **असि**-இருக்கிறீர். **साम्ब**-ஸாம்பனே...**शरणं**-அடைக்கலம்.

பகவானுக்கு உண்மையில் ஒரு உபாதியும் கிடையாது. ஆனாலும் மாயா ஸம்பந்தத்தால் ஸமஷ்டியாயும் வ்யஷ்டியாயு முள்ள எல்லா ரூபங்களையும் தரிக்கிறார். ஆதலால் பிரபஞ்சம் முழுவதும் அவருடைய ஸ்வரூபம்தான். இந்த மாயையும் வாஸ்தவமல்லவாதலால் உண்மையில் அவருக்கு ரூபம் ஒன்று மில்லை. (15)

करुणावरुणालय मयि दास उदासस्तवोचितो न हि भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ १६ ॥

கருணா வருணாலய மயி தாஸ உ-
தாஸஸ்தவோசிதோ நஹி போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

भो करुणावरुणालय-கருணா ஸமுத்திரமான ஹே ஈசா, **तव**-உமக்கு, **दासे**-தாஸனான, **मयि**-என்னிடம், **उदासः**-ஔதாஸீன்யம், **न उचितो हि**-உசிதமில்லையல்லவா! **साम्ब**-ஸாம்பனே ... **शरणं**-அடைக்கலம்.

ப்ரபோ, நான் உம்முடைய கிங்கரன். எனக்கு யஜமானர் நீங்கள்தான். நீங்களோ கருணைக்கடல். துன்பப்படும் என்னை கவனியாமலிருப்பது தங்களுக்கு உசிதமா? கருணையுள்ளம் படைத்த ஒரு யஜமானன் தன் வேலைக்காரன் துன்பப்படுவதைப் பார்த்துச் சும்மா இருப்பானா? (16)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

खलसहवासं विघटय घटय सतामेव सङ्गमनिशं भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ १७ ॥

கலஸஹவாஸம் விகடய கடய ஸ
தாமேவ ஸங்கமநிஶம் போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

भोः–ஹே ஈசா, **खलसहवासं**–துஷ்டர்களுடன் சேர்க்கையை, **विघटय**-நீக்கிவிடு **अनिशं**–எப்போதும், **सतां सङ्गमेव** நல்லோர்களின்சேர்க்கையையே, **घटय**–சேர்த்துவை. **साम्ब**–ஸாம்பனே ... **शरणं**–அடைக்கலம்.

ஈசனே, துஷ்டர்களின் பழக்கத்தை நீக்கவேண்டும். ஸாதுக்களின் ஸங்கத்தையே அருளவேண்டும். எவ்வளவு நல்லவனுக இருந்தாலும் துஷ்டர்களுடன் சேர்ந்து வஸிப்பது, அவர்களுடன் பேசுவது, பழகுவது இவற்றைக் கைக்கொண்டால் அவர்களிடமுள்ள தோஷங்கள்தான் இவனிடமும் வந்துசேரும். நல்லோர்களுடன் சேர்ந்து பழகினுல் அவர்களின் நற்குணங்கள் இவனிடமும் நிலைத்து நிற்கும். (17)

गरलं जगदुपकृतये गिलितं भवता समोऽस्ति कोऽत्र विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ १८ ॥

கரளம் ஜகதுபக்ருதயே கிலிதம்
பவதா ஸமோऽஸ்தி கோऽத்ர விபோ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

जगदुपकृतये–உலகிற்கு உதவிசெய்வதற்காக, **गरलं**–விஷமானது, **गिलितं**–விழுங்கப்பட்டது, **अत्र**-இங்கு, **भवता समः**–உமக்கு ஸமமானவர், **कोऽस्ति**–யார் இருக்கிறுர் ? **विभो**–விபுவே, **साम्ब**-ஸாம்பனே ... **शरणं**–அடைக்கலம்.

உலகில் தனக்குத் தீங்கு நேராத வரையில்தான் பிறருக்கு உதவி செய்வார்கள். பிறருக்கு உதவி செய்வதன் மூலம் தன் உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடுமானுல் அந்தக்காரியத்தில்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஒருவனும் இறங்கமாட்டான். பாற்கடலிலிருந்து முதலில் கிளம்பிய விஷம் உலகத்தையே அழிக்கும்பொழுது உலகத்தோரைக் காப்பாற்றுவதற்காக அந்தக்கொடிய ஹாலாஹல விஷத்தை விழுங்கினீர்களே! உங்களைப்போல பரோபகாரி வேறு யார் இருக்கிறார்? (18)

घनसारगौरगात्र प्रचुरजटाजूटबद्धगङ्ग विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ १९ ॥

கனஸார கௌரகாத்ர ப்ரசுரஜ-
டாஜூட பத்த கங்க விபோ |
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ||

घनसार-பச்சைக்கற்பூரம்போல், **गौर**-வெண்மையான, **गात्र**-சரீரமுள்ளவரே, **प्रचुर**-பெரிய, **जटाजूट**-ஜடாபந்தத்தில், **बद्धगङ्ग**-கட்டப்பட்ட கங்கையை உடையவரே, **विभो**-விபுவே **साम्ब**-ஸாம்பனே ... **शरणं**-அடைக்கலம்.

பச்சைக் கற்பூரம் போல வெண்மையான உடலுடன் கூடியதும் பெரிய ஜடாபாரத்தில் கட்டுப்பட்ட கங்கையை உடையதுமான பகவத்ஸ்வரூபத்தை தியானிக்கிறார். (19)

ज्ञप्तिः सर्वशरीरेष्वखण्डिता या विभाति सा त्वं भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ २० ॥

ஞப்தி: ஸர்வ ஶரீரேஷ்வகண்டி
தா யா விபாதி ஸா த்வம் போ |
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ||

भो-ஹே ஈசனே, **सर्वशरीरेषु**-எல்லா சரீரங்களிலும், **अखण्डिता**-பிரிக்கமுடியாத (ஒன்றான), **या**-எந்த, **ज्ञप्तिः**-அறிவு (சைதன்யம்), **विभाति**-விளங்குகிறதோ, **सा**-அது, **त्वं**-நீர்தான். **साम्ब**-ஸாம்பனே ... **शरणं**-அடைக்கலம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சரீரங்கள் வெவ்வேருக இருந்தாலும் பிரிக்கமுடியாத ஞானஸ்வரூபமான ஒரே சைதன்யம்தான் எல்லா சரீரங்களிலும் விளங்குகிறது. ஒரே தத்வம் உபாதி பேதத்தால் பலவாகத் தோன்றுகிறது. இந்த அகண்டமான ஆத்ம சைதன்யம் நீர்தான்.

चपलं मम हृदयकपिं विषयद्रुचरं दृढं बधान विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ २१ ॥

சபலம் மம ஹ்ருதயகபிம் விஷய
த்ருசரம் த்ருடம் பதான விபோ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

विभो-விபுவே, **विषयद्रुचरं**-விஷயங்களாகிற மரங்களில் சஞ்சரிக்கும், **चपलं**-சஞ்சலமான, **मम**-என்னுடைய, **हृदय-कपिं**-மனக்குரங்கை, **दृढं**-உறுதியாக, **बधान**-கட்டிவிடும், **साम्ब**-ஸாம்பனே ... **शरणं**-அடைக்கலம்.

குரங்கு சஞ்சல ஸ்வபாவமுள்ளது. ஸ்திர புத்தி கிடையாது. ஒரு இடத்தில் நிலைத்து நிற்காது. மரத்திற்கு மரம் தாவிக் கொண்டே போகும். இம்மாதிரி மனமும் இருக்கிறது. எப்பொழுதும் விஷயங்களை நோக்கிச் சென்றுகொண்டே இருக்கிறது. அதாவது ஒரு பொருளில் ஆசைகொள்கிறது. அது கிடைத்தால் அத்துடன் திருப்தியடையாமல் வேரொரு பொருளில் ஆசை கொள்கிறது- அது கிடைக்காவிட்டால் துன்பப்படுகிறது. இவ்விதம் குரங்குபோல் விஷயங்களிலேயே சென்று கொண்டிருக்கும் என் மனதை என்னால் அடக்கமுடியவில்லை. கயிற்றினால் கட்டிவிட்டால் குரங்கு ஒரே இடத்தில் நின்றுவிடும். தன் இஷ்டப்படி மரத்திற்கு மரம் தாவிச்செல்ல முடியாது. இது போல பக்தி என்ற கயிறால் என் மனதையும் தாங்கள் கட்ட வேண்டும். தங்களிடத்தில் மாருத நிலையான ப்ரீதி மனதில் உண்டாகும்படி தாங்கள் அருள் செய்துவிட்டால் பிறகு ஒரு பொருளிலும் ஆசை கொள்ளாது. இதே கருத்தை '**हृदय-कपिमत्यन्तचपलं दृढं भक्त्या बध्वा शिव भवदधीनं कुरु विभो**' என்று சிவானந்தலஹரியில் (சு. 20) கூறுகிருர். *(21)*

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

छाया स्थाणोरपि तव तापं नमतां हरत्यहो शिव भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ २२ ॥

சாயா ஸ்த்தாணோரபி தவ தாபம்
நமதாம் ஹரத்யஹோ சிவ போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

भो शिव–ஹே சிவனே, **स्थाणोरपि**–மரத்தூணாக இருந்த போதிலும், **तव**–உம்முடைய, **छाया**–நிழல், **नमतां**–வணங்குபவர்களுடைய, **तापं**–தாபத்தை, **हरति**–போக்குகிறது, **अहो**–ஆச்சர்யம்! **साम्ब**–ஸாம்பனே ... **शरणं**–அடைக்கலம்.

ஸ்தாணு என்ற பதம் மரத்திலிருந்து வெட்டப்பட்ட கட்டை, தூண் இவைகளைக்குறிக்கும். கட்டை அசைவற்றிருப்பதுபோல் த்ரிபுரர்களை எதிர்பார்த்து தான் ஸஜ்ஜராக அசைவற்று இருந்ததாலும், சலனம் முதலான எவ்வித விகாரமும் இல்லாமல் நிலையாக இருப்பதாலும் பரம சிவனுக்கும் ஸ்தாணு என்று பெயர். '**वृक्ष इव स्तब्धो दिवि तिष्ठत्येकः**' என்று ச்ருதி கூறுகிறது. மரக்கட்டைக்கு தாபத்தைப்போக்குகின்ற நிழல் கிடையாது. பகவானுடைய நிழலை அண்டியவர்களுக்கு அதாவது பாதாரவிந்தத்தை அண்டியவர்களுக்கு எல்லாவித தாபங்களும் விலகிவிடும். ஸ்தாணுவாக இருந்தாலும் தன் நிழலால் தாபத்தைப் போக்கச்செய்வது ஆச்சரியமில்லையா! ஆதலால் உம் திருவடி நிழலையே சரணமடைகிறேன். (22)

जय कैलासनिवास प्रमथगणाधीश भूसुरार्चित भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ २३ ॥

ஜய கைலாஸநிவாஸ ப்ரமதகணாதீஶ பூஸுரார்சித போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

कैलासनिवास–கைலாஸத்தில் வாஸம் செய்பவரே, **प्रमथगणाधीश**–ப்ரமத கணங்களின் தலைவனே, **भूसुरार्चित**–

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பிராஹ்மணர்களால் பூஜிக்கப்பட்டவரே, **जय**-சிறப்புடன் விளங்குவீராக. **भो साम्ब**-ஹே ஸாம்பனே ... **शरणं**-அடைக்கலம்.

மஹா கைலாஸத்தில் வாஸம் செய்யும் ப்ரமதகண நாயகரே! உம்மைத்தான் பிராஹ்மணர்கள் பூஜிக்கின்றனர். நீர் சிறப்புடன் விளங்குவீராக. (23)

झणुतकझङ्किणुझणुतत्किटतकशब्दैर्नटसि महानट भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ २४ ॥

ஜணுதக ஜங்கிணு ஜணுதத் கிடதக
சப்தைர் நடஸி மஹாநட போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரண யுகம் ॥

भो महानट-நாட்யம் ஆடுபவர்களில் பெரியவரே, **झणुतकझंकिणुझणुतत्किटतकशब्दैः**-ஜணு தக ஜங் கிணு ஜணு தத் கிட தக என்ற சப்தங்களுடன், **नटसि**-நர்த்தனம்புரிகிறீர். **साम्ब**-ஸாம்பனே ... **शरणं**-அடைக்கலம்.

நாட்யகலையை உலகிற்கு உபதேசித்தவர் நடராஜர். தாமே நாட்யமாடுகிறார், எல்லா நடர்களுக்கும் மேலானவர். அதனால் அவர் மஹாநடர். அவர் நடனம் செய்யும்பொழுது நாட்யத்திற்கு இசைவாகத் தாளம் போடுகிறார்கள். அதிலிருந்து 'ஜணு தக ஜம் கிணு ஜணு தத்கிட தக' என்ற சப்தங்கள் ஒலிக்கின்றன. (24)

ज्ञानं विक्षेपावृतिरहितं कुरु मे गुरुस्त्वमेव विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ २५ ॥

ஞானம் விக்ஷேபாவ்ருதி ரஹிதம்
குரு மே குருஸ்த்வமேவ விபோ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

विभो-விபுவே, **गुरुः**-குருவான, **त्वमेव**-நீரே, **मे**-எனக்கு, **विक्षेपावृतिरहितं**-விக்ஷேபம், ஆவரணம் இரண்டுமற்ற, **ज्ञानं**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஞானத்தை, **कुरु**-செய்யும், **साम्ब**-ஸாம்பனே ... **शरणं**-அடைக்கலம்.

அவித்யைக்கு ஆவரணம் விக்ஷேபம் என்ற இரண்டு சக்திகள் உண்டு. கயிறு பாம்பாகத்தோன்றுவதற்கு அக்ஞானம் தான் காரணம். இந்த அக்ஞானம் முதலில் கயிறை மறைத்துவிடுகிறது. இதுதான் ஆவரண சக்தி என்பது இதனால் அங்கு கயிறு இருந்தும் நம் கண்ணால் பார்த்தும்கூட 'இது கயிறு' என்பது நமக்குத் தெரிவதில்லை. இதோடு நின்றால் தேவலை. ஆனால் அந்தக் கயிறைப் பாம்பாகப் பார்க்கிறோம். இதுதான் விக்ஷேப சக்தி ஒரு பொருள் வேறொரு பொருளாகத் தெரிவது தான் விக்ஷேபம். இதுபோல உலகில் உள்ளது ஸச்சிதானந்தமான பரதத்வம் ஒன்று தான். அது நமக்குத்தெரிவதில்லை. இது ஆவரண சக்தியின் கார்யம். இல்லாததான பிரபஞ்சம் தெரிகிறது. இது விக்ஷேப சக்தியின் காரியம். இவ்விரண்டு சக்திகளும் நீங்கி அக்ஞானம் தொலைந்து ப்ரஹ்மஞானம் ஏற்படும்படி அருள்புரிய வேண்டும். விபரீதமான பிரபஞ்சத்தின் தோற்றம் ஒழிந்து உண்மையான ப்ரஹ்ம சைதன்யத்தின் ஸ்வரூபம் முழுவதும் நன்கு விளங்கவேண்டும் "இந்த ப்ரஹ்ம ஞானத்தை குருதான் உபதேசிக்க முடியும். ஆகவே குருவினிடம் செல்" என்று தாங்கள் சொல்லக்கூடாது. ஆதி குரு தாங்கள் தானே! ப்ரஹ்மாவிற்கும் ஸநகாதி யோகிகளுக்கும் உபதேசம் செய்த தங்களைக் காட்டிலும் மேலான குரு வேறு யார் இருக்கிறார்? குரு பரம்பரையிலும் தாங்கள் தானே முதல்வர். ஆகையால் ஞானம் பெறுவதற்காக ஆதிகுருவான தங்கள் திருவடிகளையே சரணமடைகிறேன். (25)

टङ्कारस्तव धनुषो दलयति हृदयं द्विषामशनिरिव भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ २६ ॥

டங்காரஸ்தவ தனுஷோ தளயதி
ஹ்ருதயம் த்விஷாமஶனிரிவ போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

भो-ஹே ஈசனே, **तव**-உம்முடைய, **धनुषः**-வில்லின், **टङ्कारः**-டங்கார சப்தமானது, **अशनिरिव**-இடிபோல், **द्विषां**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சத்ருக்களின், **हृदयं**-மனதை, **दलयति**-பிளக்கிறது. **साम्ब**-ஸாம்பனே ... **शरणं**-அடைக்கலம்.

தங்கள் கையில் பிநாகம் என்ற வில்லை எடுத்து டங்காரம் செய்தால் அதன் ஒலியே இடிபோன்று சத்ருக்களின் ஹிருதயத்தைப் பிளந்து விடுகின்றது. (26)

ठाकृतिरिव तव माया बहिरन्तः शून्यरूपिणी खलु भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ २७ ॥

ட்டாக்ருதிரிவ தவ மாயா பஹிர-
ந்த: ஶூன்யரூபிணீ கலு போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

भो-ஹே ஈசனே, **तव**-உம்முடைய, **माया**-மாயையானது **ठाकृतिरिव**-'ட்ட' என்ற எழுத்தின் வடிவம் (O) போல், **बहिरन्तः**-வெளியிலும் உள்ளேயும், **शून्यरूपिणी खलु**-ஒன்றுமில்லாததாக இருக்கிறதல்லவா! **साम्ब**-ஸாம்பனே ... **शरणं**-அடைக்கலம்.

'ட்ட' என்ற எழுத்தின் வடிவம் கிரந்த லிபியில் 'O' என்றவாறு காணப்படுகிறது. இது தனியாக இருந்தால் சூன்யத்தை அதாவது ஒன்றுமில்லை என்பதைக் குறிக்கும். இதுபோலத்தான் உம்முடைய மாயையும். பிரபஞ்சம் முழுவதையும் தோன்றச் செய்து உலகில் எல்லா வியவஹாரங்களையும் நடக்கச்செய்வது உம்முடைய மாயா சக்திதான். ஆனால் மாயையின் ஸ்வரூபத்தை நன்கு விசாரிக்க ஆரம்பித்தோமானால் அது மறைந்துவிடுகிறது. உள்ளேயோ வெளியிலேயோ ஒன்றுமில்லை என்பதாக நன்கு தெரியவருகிறது. **या मा सा माया**-எது இல்லையோ அது மாயை என்றும் கூறுவதுண்டு. (27)

डम्बरमम्बुरुहामपि दलयत्यनघं त्वदंघ्रियुगलं भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ २८ ॥

டம்பரமம்புருஹாமபி தளய
த்யநகம் த்வதங்க்ரி யுகளம் போ ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

भो-ஹே ஈசனே, **अनघं**-தோஷமில்லாத, **त्वदंघ्रियुगलं**-உமது இரு திருவடிகள், **अम्बुरुहां**-தாமரைப்பூக்களின், **उम्बरमपि**-அழகையும், **दलयति**-பழிக்கிறது. **साम्ब**-ஸாம்பனே ... **शरणं**-அடைக்கலம்.

தங்கள் திருவடிகள் தாமரைபோல் இருக்கின்றன என்று கவிகள் வர்ணிப்பது உண்டு. இந்தத் திருவடிகளின் எதிரில் தாமரை தன் சோபையை இழந்துவிடுவதால் தாமரைப்பூவைக் காட்டிலும் தங்கள் திருவடிகள் மிக்க அழகுவாய்ந்தவை என்றுதான் கூறவேண்டும். (28)

ढक्काक्षसूत्रशूलद्रुहिणकरोटीसमुल्लसत्कर भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ २९ ॥

டக்காக்ஷ ஸூத்ர ஶூல த்ருஹிணக-
ரோடீ ஸமுல்லஸத்கர போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

ढक्काक्षसूत्रशूलद्रुहिणकरोटी-உடுக்கை, ஜபமாலை, சூலம், பிரஹ்மாவின் மண்டையோடு இவைகளுடன், **समुल्लसत्कर**-விளங்கும் கைகளை உடைய, **भो साम्ब**-ஹே சாம்பனே ... **शरणं**-அடைக்கலம்.

தங்கள் திருக்கைகளில் உடுக்கை, ஜபமாலை, சூலம், பிரம்ம கபாலம் இவைகள் விளங்குகின்றன. இந்த உடுக்கையிலிருந்து தான் வ்யாகரண சாஸ்திரத்திற்கு மூலமான **अइउण्** முதலான ஸூத்ரங்கள் வெளியாகியுள்ளன. ப்ரஹ்மாவின் சிரஸ்ஸைக் கொய்து அதன் கபாலத்தைக் கையில் தரித்திருக்கிறீர்கள். இதிலிருந்து எத்தனையோ ப்ரஹ்மாக்களைத் தோன்றவும் மறையவும் செய்துகொண்டிருக்கிறீர்கள் என்பது தெரிய வருகிறது. (29)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

णाकारगर्भिणी चेच्छुभदा ते शरगतिर्नृणामिह भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ३० ॥

ணாகாரகர்ப்பிணீ சேத் ஶுபதா
தே ஶரகதிர் ந்ருணாமிஹ போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

ते-உம்முடைய, **शरगतिः**-அம்பான விஷ்ணுவின் கதியானது, **णाकारगर्भिणी**-'ண' என்ற எழுத்தை நடுவில் உடையதாக, **चेत्**-இருக்குமானால் **नृणां**-மனிதர்களுக்கு, **इह**-இங்கு, **शुभदा**-நன்மையை கொடுக்கிறதாக ஆகும். **भो साम्ब**-ஹே சாம்பனே ... **शरणं**-அடைக்கலம்.

த்ரிபுர ஸம்ஹார காலத்தில் விஷ்ணு பரமேசுவரனுக்கு அம்பாக வந்து வில்லில் அமர்ந்துகொண்டார். அம்பு எங்கு செல்கிறதோ அங்கு அது துன்பத்தைத்தான் கொடுக்கும். ஆனால் உம்முடைய அம்பு அப்படியல்ல, ணகாரத்தை நடுவில் உடையது அஷ்டாக்ஷர மந்திரம். இம்மந்திரத்தை ஜபித்து பகவானை உபாஸித்தோமானல் பகவான் நமக்கு நன்மையையே தருகிறார். உம்முடைய அம்பே அம்புக்குள்ள ஸ்வபாவத்தை விட்டுவிட்டு சுபத்தைக் கொடுக்குமானல் உம்மைப்பற்றிச் சொல்லவும்வேண்டுமா? (30)

तव मन्त्रतिसंजपतः सद्यस्तरति नरो हि भवाब्धिं भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ३१ ॥

தவ மன்வதிஸஞ்ஜபத: ஸத்யஸ்-
தரதி நரோஹி பவாப்திம் போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

तव-உம்முடைய, **मन्वतिसंजपतः**-மந்திரத்தை (பஞ்சாக்ஷரத்தை) அதிகமாக ஜபம் செய்வதால், **नरः**-மனிதன், **भवाब्धि**-பிறவிக்கடலை, **सद्यः**-உடனேயே, **तरति हि**-தாண்டுகிறானல்லவா! **भो साम्ब**-ஹே சாம்பனே... **शरणं**-சரணம்,

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தங்கள் மந்திரமான பஞ்சாக்ஷரத்தை ஜபம் செய்கிறவன் பிறவிக்கடலைத் தாண்டிவிடுகிறுன். (31)

थूत्कारस्तस्य मुखे भूयात्ते नाम नास्ति यस्य विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ३२ ॥

தூத்காரஸ்தஸ்ய முகே பூயாத்
தே நாம நாஸ்தி யஸ்ய விபோ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரண யுகம் ॥

विभो-ஈசனே, **यस्य**-எவனுடைய, **मुखे**-முகத்தில், **ते**-உம்முடைய, **नाम**-நாமாவானது, **नास्ति**-இல்லையோ, **तस्य मुखे**-அவன் முகத்தில், **थूत्कारः**-'தூ' என்ற இகழ்ச்சி, **भूयात्**-ஏற்படட்டும், **साम्ब**-ஸாம்பனே... **शरणं**-அடைக்கலம்.

தன் கடமையைச் செய்யாதவனை 'தூ' என்று இகழ்வது உலக வழக்கம். உம்முடைய நாமாவை எவன் தன் வாயால் சொல்வதில்லையோ அவன் வாயில் காரி உமிழவேண்டியதுதான். அவன் இகழ்ச்சிக்கு இலக்காக ஆகிவிடுகிறுன். (32)

दयनीयश्च दयालुः कोऽस्ति मदन्यस्त्वदन्य इह वद भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ३३ ॥

தயனீயச்ச தயாளு: கோऽஸ்தி ம-
தன்யஸ்த்வதன்ய இஹ வத போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

मदन्यः-என்னைக்காட்டிலும் வேறு, **दयनीयः**-தயவு காட்டத்தக்கவனும், **त्वदन्यः**-உம்மைக்காட்டிலும் வேறு, **दयालुश्च**-இரக்கமுள்ளவனும், **इह**-இங்கு, **कोऽस्ति**-எவன் இருக்கிறுன்? **वद**-சொல்லும், **भो साम्ब**-ஹே ஸாம்பனே... **शरणं**-சரணம்.

உலகில் உம்மைக் காட்டிலும் கருணைமூர்த்தி வேறு ஒருவரும் இல்லை. தயவுக்குப் பாத்திரமாகக்கூடியவன் என்னைக் காட்டிலும் வேறு ஒருவனும் இல்லை. துன்பப்படுபவனிடம்தான்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தயவுகாட்டவேண்டும். என்னைப்போல் துன்பப்படுபவர்கள் வேறு ஒருவருமில்லாததால் நானே உம் தயவைப் பெறுவதற்கு மிகத் தகுதிவாய்ந்தவன். கருணையுள்ளம் படைத்தவர்களில் உம்மைவிட மேலானவர் ஒருவருமில்லாததால் மிகக் குற்றவாளியான நான் உம்மையே சரணமடைகிறேன். நீர்தான் மன்னித்துக் காப்பாற்றவேண்டும். (33)

धर्मस्थापनदक्ष त्र्यक्ष गुरो दक्षयज्ञशिक्षक भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ३४ ॥

தர்மஸ்த்தாபன தக்ஷ த்ர்யக்ஷ கு-
ரோ தக்ஷயஜ்ஞ ஶிக்ஷக போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

धर्मस्थापनदक्ष-தர்மத்தை நிலைநிறுத்துவதில் ஸாமர்த்தியமுள்ளவரே, **त्र्यक्ष**-முக்கண்ணனே, **गुरो**-குருவே, **दक्षयज्ञशिक्षक**-தக்ஷனின் யாகத்தை அழித்தவரே, **भो साम्ब**-ஹே ஸாம்பனே... **शरणं**-சரணம்.

தர்மம் அழிந்துபோகாமல் காப்பாற்றி நிலைநிறுத்துவதில் மிகவும் சக்திவாய்ந்தவரே, முக்கண்ணனே, அக்ஞானத்தைப் போக்கும் குருவே, தக்ஷனின் யாகத்தை அழித்தவரே, உம் திருவடிகளே கதி. (34)

ननु ताडितोऽसि धनुषा लुब्धधिया त्वं पुरा नरेण विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ३५ ॥

நநு தாடிதோऽஸி தநுஷா லுப்ததி-
யா த்வம் புரா நரேண விபோ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

विभो-விபுவே, **पुरा**-முன்ஒரு சமயம், **नरेण**-மனிதனால், **धनुषा**-வில்லால், **लुब्धधिया**-வேடன் என்ற எண்ணத்தால், **त्वं**-நீர், **ननु ताडितोऽसि**-அடிக்கப்பட்டிருக்கிறீர் அல்லவா! **साम्ब**-ஸாம்பனே... **शरणं**-அடைக்கலம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

முன் ஒரு சமயம் ஒரு மனிதன் உம்மை வேடன் என்று எண்ணி வில்லால் அடித்தான். அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெறத் தவம் செய்யும்பொழுது துர்யோதனனால் ஏவப்பட்ட ஓர் அஸுரன் பன்றி உருக்கொண்டு அர்ஜுனனிடம் வர அவன் அப் பன்றியின்மேல் அம்பை எய்தான். அதே சமயம் அர்ஜுனனுக்கு அருள்செய்ய வேடுவ வேஷம் பூண்டு அங்கு வந்த பரமசிவனும் அப்பன்றிமேல் ஓர் அம்பை எய்தார். ஒரே இலக்கில் இருவரும் அம்பை எய்ததால் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு சண்டை நடந்தது. மஹேசன் அர்ஜுனனின் வில்லின் நாண் கயிற்றை அறுத்துவிட்டார். உடன் அந்த வில்லால் மஹேசனின் மண்டையில் அர்ஜுனன் அடித்தான். அந்தப் பக்தனை அர்ஜுனனின் அடியை ஸந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு சிறிதும் கோபம் கொள்ளாமல் அவனுக்குப் பாசுபதாஸ்திரம் கொடுத்து அனுக்ரஹமும் செய்தீர்கள். தங்களைப்போன்ற பக்த பராதீன தேவதை வேறு யார் இருக்கிறார்? ஆகையால் உம்மையே சரணமடைகிறேன். (35)

परिमातुं तव मूर्तिं नालमजस्तत्परात्परोऽसि विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ३६ ॥

பரிமாதும் தவ மூர்த்திம் நாலம-
ஜஸ்தத்பராத்பரோऽஸி விபோ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

विभो–விபுவே, **तव**–உம்முடைய, **मूर्तिं**–மூர்த்தியை **परिमातुं**–அளப்பதற்கு, **अजः**–பிரஹ்மாவும் (விஷ்ணுவும்) **नालं**–ஸமர்த்தரல்ல. **तत्**–ஆகையால் (நீர்), **परात् परोसि**–உயர்ந்தவரைக்காட்டிலும் உயர்ந்தவராக இருக்கிறீர். **साम्ब**–ஸாம்பனே... **शरणं**–சரணம்.

உம்முடைய மூர்த்தியை அளந்து நிர்ணயம் செய்வதற்கு பிறப் பில்லாத ப்ரஹ்மாவாலும் விஷ்ணுவாலும்கூட முடியவில்லை. ஒரே ஜ்யோதி ஸ்வரூபமாக லிங்கோத்பவ மூர்த்தியாக பகவான் நின்ற சமயம் அடியும் மேலும் காணமல் பிரஹ்மா ஹம்ஸ உருவத்துடன் மேலேயும் விஷ்ணு வராஹ உருவத்துடன் கீழேயும் எவ்வளவு தூரம் சென்றும் முடிவைக்காணமல் திரும்பி வந்தனர். ஆகை யால் பிரஹ்மா முதலியவர்களுக்கும் தாங்கள் மேலானவர். (36)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

फलमिह नृतया जनुषस्त्वत्पदसेवा सनातनेश विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ३७ ॥

பலமிஹ ந்ருதயா ஜனுஷஸ்த்வத்பத
ஸேவா ஸனாதனேஶ விபோ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

विभो-விபுவே, **सनातन**-எப்பொழுதும் உள்ளவரே, **ईश**-ஈசனே, **इह**-இவ்வுலகில், **नृतया**-மனிதனாக, **जनुषः**-பிறவிக்கு, **त्वत्पदसेवा**-உமது திருவடிகளை ஸேவிப்பது, **फलं**-பயன், **साम्ब**-ஸாம்பனே... **शरणं**-சரணம்.

எப்பொழுதும் உள்ள ஈசனே, உயர்ந்த மானிடப்பிறவியைப் பெற்றதன் பயன் உம்முடைய திருவடியை ஸேவிப்பதுதான். ஒருவன் தங்கள் பாதங்களை ஸேவிக்காமல் தன் வாழ்நாளைக் கழித்தானானால் எத்தனையோ புண்யத்தின் பயனாகப்பெற்ற இந்த மானிட ஜன்மாவை அவன் வீணாக்கிவிடுகிறான். (37)

बलमारोग्यं चायुस्त्वद्गुणरुचितां चिरं प्रदेहि विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ३८ ॥

பலமாரோக்யம் சாயுஸ் த்வத்குண
ருசிதாம் சிரம் ப்ரதேஹி விபோ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

विभो-விபுவே, **बलं**-வலிமையையும், **आरोग्यं**-பிணியில்லாமையையும், **आयुः**-ஆயுளையும், **त्वद्गुणरुचितां च**-உமது குணங்களில் ப்ரீதியையும், **चिरं**-வெகுகாலம், **प्रदेहि**-கொடுங்கள், **साम्ब**-ஸாம்பனே... **शरणं**-சரணம்.

உமது திருவடியை ஸதா ஸேவிப்பதற்கு அனுகூலமாக சரீரத்தில் பலத்தையும் ஆரோக்யத்தையும் ஆயுளையும் உமது குணங்களில் ருசியையும் கொடுத்து இவை சிறிதும் குறையாமல் எப்பொழுதும் இருக்குமாறும் அருள்புரியவேண்டும். (38)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

भगवन्भर्ग भयापह भूतपते भूतिभूषिताङ्ग विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ३९ ॥

பகவன் பர்க்க பயாபஹ பூதப-
தே பூதிபூஷிதாங்க விபோ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

भगवन्-பகவானே, **भर्ग**-பாபங்களை அழிப்பவரே, **भयापह**-பயத்தைப்போக்குபவரே, **भूतपते**-பூதங்களின் தலைவனே, **भूतिभूषिताङ्ग**-விபூதியினால் அலங்கரிக்கப்பட்ட உடலை உடையவரே, **विभो**-விபுவே, **साम्ब**-ஸாம்பனே... **शरणं**-அடைக்கலம்.

ஐசுவர்யம், வீர்யம், புகழ், ஞானம், வைராக்யம் இவை முழுவதும் எப்பொழுதும் இருப்பதால் பகவான் என்று கூறப்படுகிறார். எல்லாப் பாபங்களையும் போக்கியருள்வதால் பர்க்கர். பயங்களைப்போக்குபவர், பூதங்களின் தலைவன், தம் உடலில் விபூதியால் அலங்கரித்துக்கொண்டிருக்கிறார். எங்கும் எல்லாமாகவும் இருப்பவர். (39)

महिमा तव न हि माति श्रुतिषु हिमानीधरात्मजाधव भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ४० ॥

மஹிமா தவ நஹி மாதி ச்ருதிஷு ஹி-
மாநீதராத்மஜாதவ போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

भो हिमानीधरात्मजाधव-ஹிமவானின் பெண்ணான பார்வதியின் நாயகரே, **श्रुतिषु**-வேதங்களிலும்கூட, **तव**-உமது, **महिमा**-மாஹாத்ம்யம், **नहि माति**-அளவுக்கு உட்படுகிறதில்லை. **साम्ब**-ஸாம்பனே... **शरणं**-அடைக்கலம்.

பனிமலையின் பெண்ணான பார்வதியின் நாயகனே, உமது திவ்ய மஹிமைகளை வேதங்களாலும் அளவிட்டுக்கூற முடியாது. அதனால்தான் வாக்குக்கு எட்டாதது என்று வேதம் கூறுகிறது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

यमनियमादिभिरङ्गैर्यमिनो हृदये भजन्ति स त्वं भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ४१ ॥

யம நியமாதிபிரங்கைர் யமினோ
ஹ்ருதயே பஜந்தி ஸ த்வம் போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

यमिनः-யோகிகள், **यमनियमादिभिः अङ्गैः**-யமம், நியமம் முதலான அஷ்டாங்கயோகங்களால், **हृदये**-மனதில், **भजन्ति**-(எவரை) பஜிக்கிறார்களோ, **सः**-அவர், **त्वं**-நீர்தான், **भो साम्ब**-ஹே ஸாம்பனே... **शरणं**-சரணம்.

யோகிகள் யமம். நியமம், ஆஸனம், ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், தாரணை, தியானம், ஸமாதி என்னும் அஷ்டாங்க யோகங்களால் உம்மையேதான் ஹிருதயத்தில் பஜிக்கிறார்கள்.

रज्जावहिरिव शुक्तौ रजतमिव त्वयि जगन्ति भान्ति विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ४२ ॥

ரஜ்ஜாவஹிரிவ ஶுக்தௌ ரஜதமி-
வ த்வயி ஜகந்தி பாந்தி விபோ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

विभो-விபோ, **रज्जौ**-பழுதையில், **अहिरिव**-பாம்புபோலவும் **शुक्तौ**-கிளிஞ்சலில், **रजतमिव**-வெள்ளிபோலவும், **त्वयि**-உம்மிடம், **जगन्ति**-உலகங்கள், **भान्ति**-தோன்றுகின்றன. **साम्ब**-ஸாம்பனே... **शरणं**-அடைக்கலம்.

கயிற்றில் பாம்பு போலவும், கிளிஞ்சலில் வெள்ளி போலவும் உம்மிடத்தில் உலகங்கள் தோன்றுகின்றன. உண்மைப்பொருள் கயிறும், கிளிஞ்சலும் தான். அவைகளில் தோன்றும் பாம்பும், வெள்ளியும் உண்மைப் பொருளல்ல. இவை கொஞ்சகாலம் மட்டும் தோன்றி மறையக்கூடியவை. ஆகையால் இவை ப்ராதிபாஸிகம். இது போலவே நாம் காணும் பிரபஞ்சம் எல்லாம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ப்ரஹ்மத்தில் தோன்றி மறைந்து விடுகின்றன. அந்தப் பாரமார்த்திகமான ப்ரஹ்மமே தாங்கள், (42)

लब्ध्वा भवत्प्रसादाच्चक्रं विधुरवति लोकमखिलं भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ४३ ॥

லப்த்வா பவத்ப்ரஸாதாத் சக்ரம்
விதுரவதி லோகமகிலம் போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

विधुः–விஷ்ணுவானவர், **भवत्प्रसादात्**–தங்கள் அனுக்ரஹத்தால், **चक्रं**–சக்ராயுதத்தை, **लब्ध्वा**–பெற்று, **अखिलं लोकं**–எல்லா லோகத்தையும், **अवति**–காப்பாற்றுகிறார். **भो साम्ब**–ஹே ஸாம்பனே... **शरणं**–அடைக்கலம்.

தங்கள் அனுக்ரஹத்தால் சக்ராயுதத்தைப் பெற்று மஹா விஷ்ணு எல்லா உலகங்களையும் காப்பாற்றுகிறார். ததீசி முனிவர் மேல் பிரயோகித்த சக்ராயுதம் வீணாகி நாசமுற்றதைக்கண்டு வருந்தி விஷ்ணுவானவர் மறுபடியும் சக்ராயுதம் பெறுவதற்காக தினமும் ஆயிரம் கமலங்களால் மஹாதேவனைப் பூஜித்துவர, ஒரு தினம் ஒரு மலர் குறையவே தனது நேத்ரத்தையே பகவத் பாதத்தில் ஸமர்ப்பித்தார். இது கண்டு ஸந்தோஷமடைந்த மஹாதேவன் விஷ்ணுவுக்கு ஸுதர்சன சக்ரத்தையும் கமலக் கண்ணன் என்ற திருநாமாவையும் அளித்து அனுக்ரஹித்தார் என்று ஸ்காந்தம் கூறும். (43)

वसुधातद्धरतच्छयरथमौर्वीशर पराकृतासुर भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ४४ ॥

வஸுதா தத்தர தச்சய ரத மௌ-
ர்வீஶர பராக்ருதாஸுர போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

वसुधा–பூமி, **तद्धर**–அதைத்தாங்கும் ஆதிசேஷன், **तच्छय**–அதில் படுத்துக்கொண்டிருக்கும் விஷ்ணு இவர்களை,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

रथमौर्वीशर-தேராகவும் நாண்கயிருகவும், அம்பாகவும் கொண்டவரே, **पराकृतासुर**-அஸுரர்களை தோல்வியுறச் செய்தவரே, **भो साम्ब**-ஹே ஸாம்பனே ... **शरणं**-அடைக்கலம்.

பூமியைத் தேராகவும், பூமியைத்தாங்குகிற ஆதிசேஷனை நாண் கயிருகவும், ஆதிசேஷன் மேல் படுத்துக்கொண்டிருக்கிற மஹா விஷ்ணுவை அம்பாகவும் கொண்டு அஸுரர்களை அடக்கியவர் தாங்கள். (44)

शर्व देव सर्वोत्तम सर्वद दुर्वृत्तगर्वहरण विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ४५ ॥

ஶர்வ தேவ ஸர்வோத்தம ஸர்வத
துர்வ்ருத்த கர்வ ஹரண விபோ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

शर्व-அழிப்பவரே, **देव**-தேவனே, **सर्वोत्तम**-எல்லோரிலும் சிறந்தவரே, **सर्वद**-எல்லாவற்றையும் கொடுப்பவரே, **दुर्वृत्तगर्वहरण**-துஷ்டர்களின் கர்வத்தைப் போக்குபவரே, **विभो**-விபுவே, **साम्ब**-ஸாம்பனே... **शरणं**-அடைக்கலம்.

பிரளயகாலத்தில் எல்லாவற்றையும் அழிப்பவரே, தேவனே, எல்லோரினும் உயர்ந்தவரே, எல்லாவற்றையும் கொடுப்பவரே, துஷ்டர்களின் செருக்கைப்போக்குபவரே, எங்கும் உள்ளவரே தங்கள் திருவடிகளே சரணம். (45)

षड्रिपुषडूर्मिषड्विकारहर सन्मुख षण्मुखजनक विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ४६ ॥

ஷட்ரிபு ஷடூர்மி ஷட்விகாரஹர
ஸன்முக ஷண்முக ஜநக விபோ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

षड्रिपु-ஆறு எதிரிகள், **षडूर्मि**-ஆறு அலைகள், **षड्विकारहर**-ஆறு விகாரங்கள் இவற்றைப் போக்குபவரே, **सन्मुख**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸத்தையே முகமாகக்கொண்டவரே, **षण्मुखजनक**–ஆறுமுகனின் தந்தையே, **विभो**–விபுவே, **साम्ब**–ஸாம்பனே... **शरणं**–சரணம்.

காமம், கோபம், பேராசை, ப்ராந்தி, கர்வம், பொறாமை இவ்வாறும் அரிஷட்வர்க்கம். இவைகள் நமக்குப் பெரிய சத்ருக்கள். மேலே கிளம்பமுடியாமல் படுகுழியில் அமிழ்த்தி விடுவார்கள். இவர்களில் ஒருவருக்கு இடம் கொடுத்தால்கூட மற்றவர்களும் சேர்ந்துவிடுவார்கள். சோகம், மோஹம், பசி, தாஹம், பிறவி மரணம் இவை ஷடூர்மிகள் எனப்படும், அதாவது ஆறு அலைகள். கடலில் அலைகள் ஓய்வில்லாமல் திரும்பத்திரும்ப வந்துகொண்டே இருக்கும். இதுபோலத்தான் பசி தாஹம் முதலியவைகளுக்கும் முடிவு கிடையாது. திரும்பத்திரும்ப வந்து கொண்டே இருக்கும். ஆதலால் இவற்றை அலைகள் என்று கூறுவர். பிறப்பு, இருப்பு, வளர்ச்சி, மாறுதல், குறைவு, நாசம் இவை ஷட்பாவவிகாரமெனப்படும். இவைகளால்தான் நமக்கு எல்லாத்துன்பங்களும். இவைகளை ஒழிக்க பகவானால்தான் முடியும். ஸத்தையே முகமாகக்கொண்டவரே, ஆறுமுகன் தந்தையே விபுவே உமது திருவடிகளே சரணம். (46)

सत्यं ज्ञानमनन्तं ब्रह्मेत्येतल्लक्षणलक्षित भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ४७ ॥

ஸத்யம் ஞானமநந்தம் ப்ரஹ்மே-
த்யேதல்லக்ஷண லக்ஷித போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

ब्रह्म–ப்ரஹ்மம், **सत्यं**–ஸத்யமானது, **ज्ञान**–ஞானரூபம், **अनन्तं**–அனந்தமானது, **इत्येतल्लक्षण**–என்ற இந்த லக்ஷணங்களுடன், **लक्षित**–கூடினவரே, **भो साम्ब**–ஹே ஸாம்பனே... **शरणं**–அடைக்கலம்.

தைத்திரீய உபநிஷத்தில் '**सत्यं ज्ञानं अनन्तं ब्रह्म**' என்று ப்ரஹ்மத்தின் லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. ப்ரஹ்மம் ஸத்யம். உண்மைப்பொருள். பொய்யல்ல முக்காலத்திலும் மறையாமல் அழியாமல் இருப்பது. இது ஞானம் சித்ரூபி சைதன்ய ஸ்வரூபி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஜடமல்ல. ப்ரஹ்மம் அநந்தம். பரிச்சின்னமல்ல. தேசபரிச்சேதம், கால பரிச்சேதம், வஸ்து பரிச்சேதம் என்ற மூன்று பரிச்சேதங் களுமற்றது. இதுதான் ப்ரஹ்மலக்ஷணம். இந்த லக்ஷணம் தங்களிடமே பொருந்தியிருப்பதால் தாங்களே ப்ரஹ்மம். (47)

हाहाहूहूमुखसुरगायकगीतापदानपद्य विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ४८ ॥

ஹாஹா ஹூஹூ முக ஸுர காயக
கீதாபதானபத்ய விபோ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரண யுகம் ॥

हाहाहूहूमुख-ஹாஹா, ஹூஹூ முதலான, **सुरगायक**-தேவலோகத்துப் பாடகர்களான கந்தர்வர்களால், **गीत**-பாடப்பட்ட, **अपदानपद्य**-வீரச்செயல்களின் பாட்டுக்களை உடையவரே, **विभो**-விபுவே, **साम्ब**-ஸாம்பனே... **शरणं**-அடைக்கலம்.

தேவர்களுள் காயகர்களான (கானம் செய்பவர்களான) ஹாஹா ஹூஹூ முதலான கந்தர்வர்கள் தங்கள் வீரச்செயல் களையெல்லாம் பாட்டாகப் பாடுகின்றனர். (48)

ळादिर्न हि प्रयोगस्तदन्तमिह मङ्गलं सदास्तु विभो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ४९ ॥

ளாதிர் நஹி ப்ரயோகஸ்ததந்த
மிஹ மங்களம் ஸதாzஸ்து விபோ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

ळादिः-'ள' என்ற எழுத்தை முதலில் உடைய, **प्रयोगः**-சொல்லின் ப்ரயோகம், **नहि**-இல்லையல்லவா! **विभो**-விபுவே, **तदन्तं**-அந்த 'ள' என்ற எழுத்தைக் கடைசியில் கொண்ட, **मङ्गलं**-மங்களமானது, **इह**-இங்கு, **सदा**-எப்பொழுதும், **अस्तु**-இருக்கட்டும், **साम्ब**-ஸாம்பனே.... **शरणं**-அடைக்கலம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

'ள' என்ற எழுத்தை முதலில் கொண்ட பதமே வழக்கில் இல்லை. ஆகையால் 'ள' என்ற எழுத்தைக்கடைசியில் உள்ள பதத்தைக்கூறுகிறோம். அதுதான் மங்களம் என்பது. இது எப்பொழுதும் இருக்கட்டும். (49)

क्षणमिव दिवसान्नेष्यति त्वत्पदसेवाक्षणोत्सुकः शिव भो ।
साम्ब सदाशिव शंभो शंकर शरणं मे तव चरणयुगम् ॥ ५० ॥

க்ஷணமிவ திவஸான் நேஷ்யதி த்வத்பத
ஸேவா க்ஷணோத்ஸுக: ஶிவ போ ।
ஸாம்ப ஸதாஶிவ ஶம்போ சங்கர
ஶரணம் மே தவ சரணயுகம் ॥

भो शिव–ஹே சிவனே, **त्वत्पदसेवाक्षणोत्सुकः**–வேறு காரியத்தை விட்டு தங்கள் திருவடி ஸேவையிலேயே ஆவலுடன் ஈடுபடுகிறவன், **दिवसान्**–நாட்களை, **क्षणमिव** நிமிஷம் போல, **नेष्यति**–கழிப்பான். **साम्ब**–ஸாம்பனே, **सदाशिव**–ஸதாசிவனே, **शंभो**–சம்போ, **शंकर**–சங்கர, **तव**–உம்முடைய, **चरणयुगं**-இருபாதங்களும், **मे**-எனக்கு, **शरणम्**-சரணம்.

வேறு காரியங்களைவிட்டு தங்கள் திருவடிகளை ஸேவிப்பதிலேயே ஆவலுடன் ஈடுபட்டவன் நாட்களையெல்லாம் நிமிஷமாகக் கழித்துவிடுவான். ஹே ஸாம்பா, ஸதாசிவா சம்போ, சங்கரா, தங்கள் இரு திருவடிகளும் எனக்கு சரணம். (50)

ஸுவர்ணமாலா ஸ்துதி முற்றும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ சிவானந்த லஹரீ

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

முகவுரை

சிவானந்தலஹரி, ஆதிசங்கரரால் அருளப்பட்டது என்பது பரம்பரை. அழகிய பொருளும் உருவும் பெற்ற பாமாலை. அதில் 98-வது சுலோகத்தில், ஆசிரியரே இப் பாமாலையின் சிறப்புகளைக் குறிக்கின்றார். அதில் மிகை சிறிதுமில்லை. சிலேடையுடன் கூடிய இப்பாமாலை, இறைவனது திருவருளைப் பெற, அவனுக்கே அர்ப்பணம் செய்யப்படுகின்றது. எல்லாச்சிறப்புகளும் பொருந்திய மணமகளாகும் இதை ஏற்றுக்கொள்ள, அவன் வேண்டப் படுகிறான். நடையும் பொருளும் இரண்டும் அலங்கரிக்கப் பட்டுள்ளன. ஏறியிறங்கும் ஓசையும் தெய்வீக இசையும் படிப்பவரின் இதயத்தை உயர்நிலைக்கெழுப்பும். இதிலுள்ள பேருண்மைகள் மனதை எழுப்புகின்றன. கலங்கி நிற்கும் ஆத்மாக்களுக்கு இரங்கி ஸ்ரீ சங்கரர் இந்த நூறு பாக்களைக் கொடுத்துள்ளார். அதை வழித்துணையாகக் கொண்டு, நிறைவையடைய அது உதவுகின்றது.

சிவானந்தலஹரி சிவனைப்பற்றியமைவதால், சிவனின் பெருமை ஒவ்வொரு பாவிலும் வற்புறுத்தப்படுகின்றது. சிவனுடைய கருணை, அருள் இவைகளை விளக்கும் புராணங் களிலுள்ள சம்பவங்களெல்லாம் பாக்களில் குறிக்கப்படு கின்றன. வேத பண்டிதர்களில் சிலர், ருத்ரன் கொடிய தேவனென்றும், தனக்கு வேண்டாதவர்களையும் பிறரையும் கெடுக்கவுள்ளவனென்றும், எதிர்மறையாக அவனை சிவ னென்று அழைப்பதாகவும் கொள்கின்றார்கள். ஒருவர் ருத்ர-சிவன் பயப்படத்தகுந்த தேவனென்றும், விஷ்ணு-நாராயணன், அன்பு செய்யப்படவுள்ள தெய்வம் என்றும் குறிக்கின்றார். இந்நூலின் பகுதிகளைப் படிப்பவர்களுக்கு இவ்வாறு கொள்வதற்கிடமில்லையென்பது விளக்கமாகும். மங்களத்திற்கு மூலமென்றும், மங்களமானவைகளைச் செய்பவனென்றும், மங்களமே என்றும் சிவானந்தலஹரி விளக்குகின்றது. ஆத்மாக்களை ரக்ஷிப்பவர் சிவன். நன்மையை எல்லாம் ஆக்குபவரும் அவரே. அவரருள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆத்மாவிற்கு மோக்ஷமாகும் பெருநலத்தைக் கொடுக்க வுள்ளது.

இந்நூலின் உட்பொருள் இறைவனிடத்து பற்று (பக்தி) ஆன்மிகப் பயிற்சியில் பக்தியின் சிறப்பையும், பக்தியின் தன்மையையும் ஆசார்யர் சங்கரர், பல இலக்கியத் துறைகளையும் பயன்படுத்தி வற்புறுத்துகின்றார். பக்தியென்பதே மனப்போக்குகளை ஒருமுகப்படுத்தி அவைகளை இறைவனை நாடவிட்டு அவ்விடத்திலே பதிப்பதாகும். சிந்தித்தல், உணர்தல், விரும்புதல் இவை மனதின் முக்கிய வேலைகளாகும். இப்பலவும் இறைவனை அடைவதை இலட்சியமாகக் கொண்டால், அதுவே பக்தியாகும். இந்த உண்மையைப் போதிக்க சங்கரர், மனதைப் பலவற்றுடன் ஒப்பிட்டு அலங்கார மொழியை உபயோகிக்கின்றார். உயிருள்ளன, உயிரற்றன இவைகளினின்றும், பலவகை உயிர்களினின்றும் பாடங்களைப்புகுத்துகின்றார். மனோநிலையை பல சொற்களைக்கொண்டும் விளக்குகின்றார். சித்தம், சேதஸ், புத்தி மனஸ், இருதயம் என்பன மனதின் உணர்ச்சி நிலையைக் குறிப்பன. த்ருதி என்பது மனோவலிவைக் குறிக்கவுள்ளது. பல உதாரணங்களைக் கொடுத்து, மனதின் பல செயல்களும் இறைவனைச் சார்ந்ததாக இருக்க வேண்டுமென்கிறார்.

61-வது சுலோகத்தில் பக்தியை விரிக்க, சதா மனது இறைவனை நாடிநிற்பதை, (1) அங்கோல மரத்தின் விதைகள் அடிமரத்தையும், வேரையும் நெருங்கி விழுந்து அவை அதனுடன் பற்றிக்கொள்வதையும் (2) காந்தத்தை இரும்புக் கணுக்கள் பற்றிக்கொள்வதையும், (3) கற்புடை மனைவி கணவனிடம் விடாது அன்பு கொள்வதையும் (4) கொடி அயலிலுள்ள ஒரு மரத்தைப் பற்றிக்கொள்வதையும், (5) ஆறு கடலை நோக்கி ஓடுவதையும் உவமிக்கின்றார். ஒரே நோக்குடனும் விடாதும் அங்கு காணப்படும் பற்று மனதில் உதிக்கவேண்டும். இந்த உதாரணங்களில், சிறியது பெரியதைப் பற்றியே நிற்கின்றது. அதேபோல மனது இறைவனைப்பற்றி நிற்கும்பொழுது, பக்தி நிறைகின்றது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பக்தனுக்கு இறைவனன்றி வேறு முடிவில்லை. பக்தி நிறைந்த மனது இறைவனை நாடுவதை, ஹம்ஸ பக்ஷி தாமரைக் குளத்தையும், சாதகம் மேகத்தையும், சக்ரவாகம் சூரியனையும் சகோர பக்ஷி சந்திரனையும் நாடுவதற்கு உவமிக்கின்றார். பக்தி நிறைந்த மனது நான்கு வகைப் பறவைகளுக்குச் சமமாக கூறப்படுகின்றது. ஒவ்வொரு வகைப் பறவையும் தன்னை உயிர்விக்கும் பொருளையே நாடுகின்றது. ஹம்ஸ பக்ஷி தாமரைத்தண்டைத் தின்று உயிர் பிழைக்கின்றது. சாதகபக்ஷி மழைத்துளிகளையே குடித்து உயிர்வளர்வது, சக்ரவாகப் பறவை சூரியோதயத்தை நாடியே உயிர் வாழ்வது. சகோரப்பறவை சந்திரனின் கிரணங்களைப்பெற்று வாழ்வது இவைகளைப்போல பக்தனின் மனது இறைவனிடமே உயிரைப்பெறுகின்றது, பிறவற்றிலன்று. (59)

உலகப்பற்றுடையவர் மனது எளிதாக இறைவனிடம் செல்லுவதில்லை. குரங்கைப்போல ஒரு ஆசையைவிட்டு மற்றொன்றிற்குத் தாவுகின்றது. ஆயின் சிவன் பக்தி என்ற கயிற்றால் அதைக் கட்டினால், அது அவனுடைய சொல்லிற்கிணங்க நடந்து அவனுக்கு உதவ நிற்கும் (20) மனது திருடனைப்போன்றது, முறையற்றவழிகளில் செல்வம் திரட்ட நாடுவது, பேராசையும், பற்றுள்ளமும், அதைத் தம் வசத்துவைத்துக் கொள்கின்றன. அது தர்மத்திற்கு மாறான வழியில் ஒட்டப் படுகின்றது. இந்தத் திருடனைப் பெருந் திருடனும் சிவனன்றி யார் அடக்க முடியும்? அவனே நம்மைக் காப்பாற்ற முன் வந்து, நம் திருடனதும் மனதை அடக்கி அதைக்கட்டுப்படுத்தி வைக்க வேண்டும் (22) மனது வலிவுள்ளது, பழக்கப்படாத யானைபோன்று கட்டுக்கடங்காதது. மதம் பிடித்த ஆனை போன்று மனது எல்லா திக்குகளிலும் சுற்றுவது. சிவனே அதை சாமர்த்தியமாக பக்தியென்னும் கயிற்றால் கட்டி, தைர்யமென்னும் ஈட்டியால் அதை தன் அடிகள் என்னும் முளையில் கட்டவேண்டும். அப்பொழுதே அது சுற்றியலை யாது (96, 97) மனம் கொடிய விலங்குகள் வசிக்கும் காட்டைப்போன்றது, ஆசைகளே கொடிய விலங்குகள்,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிவன் புராதனவேடன். விலங்குகள் மிகுந்த காடுகளில் வேட்டையாடவல்லவன். என் மனதில் வேட்டையாடி மகிழட்டும். (43) மனது பழைய ஸம்ஸ்காரங்கள் நிறைந்தது. துர்க்கந்தம் வீசும் ஒரு பழைய பெட்டியைப்போன்றது. அந்தக்கெட்ட நாற்றங்களை ஓட்டி தெய்வீக மணங்கள் வீசும்படி சிவனே செய்யவேண்டும். தன்னருளால் சிவன், மனதினின்று, ஆசை, மயக்கம், குரோதம் இவைகளை அகற்றவேண்டும். (74)

ஒருவன் இறைவனுக்குத் தன் மனதையும் இதயத்தையுமே சமர்ப்பிக்கவேண்டும். பக்தன் புறத்தமரும் மலர்களைத்தேடி அலைவானேன்? மலர்களைத்தேடி வனங்களையும், மலைகளையும், குளங்களையும் நாடுவானேன்? இதயகமலமே இறைவனுக்குகந்தமலர் (9) அதை சமர்ப்பிக்கும்பொழுதே இறைவன் பக்தனின் எல்லாப் பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்கின்றான். (11) இறைவனாகும் தேனீயை இதய மலரில் திளைக்க அழைப்போமாக (51) நடுமரத்தில் ஈர்க்கப்பட்டு சுற்றி கயிறால் இழுத்து கட்டப்பட்டிருக்கும், ஆனால் வேண்டும்பொழுது அகற்றக்கூடிய அழகான அலங்காரங்களுடன் அமைந்து சுத்தமாக இருக்கும் இந்த இதய கூடாரத்தில் இறைவன் அமரட்டும் (21) ஏன் இன்னும் இறைவன் தன் ரிஷப வாஹனத்தை நாடவேண்டும்? அவனே உலகங்களுக்கெல்லாம் தலைவன். எல்லாச் சிறப்புகளையும் பெற்ற எனது இதயமென்னும் குதிரை மீது அவர் ஏன் சவாரி செய்யலாகாது? (75) எமனை மார்பில் உதைப்பது, அபஸ்மாரத்தை அழிப்பது, கைலாயமலையில் நடப்பது, தேவர்களின் கிரீடங்கள் காலில்பட நடப்பது முதலிய கடினமான வேலைகளைச் செய்கின்றார் சிவபெருமான். காலணியுமின்றி அவர் எப்படி இவைகளைச் செய்யக்கூடும்? இவ்வளவு அடியையும் தாங்கும் அலங்கரிக்கப்பட்ட இந்த இதயச்செருப்பை அணிந்துகொள்ளட்டும் (64) சிவன் கோட்டைகளில் வசிக்க விரும்புகின்றார். தகர்க்கமுடியாததும், நன்று காவலமைந்ததும் பல சௌகரியங்களுமுடையதான இதயக் கோட்டையில் அவர் ஏன் வசிக்கக்கூடாது? இங்கே அவர்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தங்கட்டும் (42) சிங்கமாகும் சிவன், மனமாகும் குகைக்கு வந்து தங்கினால் எனக்கு ஒரு பயமுமில்லை. (44) மனக் கமலமாகும் தலைநகரத்தில் மன்னருக்கு மன்னனாகுபவன், தன் ஆசனத்தை அமர்த்திக்கொண்டால், எல்லாம் நன்றாகும், சீலம் செழிக்கும், பாபம் பறந்தோடும், குரோதங்கள் பட்டொழியும், பெண்யுகம் நிலைபெற்று, சுபிட்சம் தலையெடுக்கும் (39) சந்திரனாகும் சிவன் இதயமாகும் ஆகாயத்தில் அமர்ந்தால் ஆனந்தக்கடலின் அலைகள் பொங்கும், நல்லோர் பெருமகிழ்ச்சியடைவார்கள் (38) மனதைப் பாத்திரமாக்கி, அதில் ஆனந்த அமிர்தத்தை நிறைத்து, இறைவனடிகளை அதன்மீது மாவிலைகளாக வைத்து, ஞானமென்னும் தேங்காயை அதன்மீது வைத்து நாம் 'புண்யாஹவாசனம்' செய்வோம். இறைவன் திருநாமத்தையே சொல்லுவோம். (36)

மனது இறைவனுக்குப் பணி செய்யத் தகுந்த கன்னிப் பெண். அப்பணிக்கு வேண்டிய தகுதிகள் நிறைந்தவள். அவள் கௌரிக்கு துணைவியாக ஏற்றுக்கொள்ளப்படட்டும் (84) கணவனைவிட்டுப் பிரிந்திருக்கும் மனைவியைப்போல மனது விடாது சிவனையே சிந்தனை செய்கின்றது, அதில் அழிந்தும் படுகின்றது. சிவனென்ற நாமமே அவளை மாற்றியமைக்கின்றது. அவள் திறன்களெல்லாம் சிவனையே நாடுகின்றன. (77) சிவபெருமான் தாழ்த்தாது உடனே மனதென்னும் மணமகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். சிவனே அவளுக்குப் பாடம் கற்பிக்கவும் பழக்கவும் வேண்டும். அவள் நன்மையை நாடுகின்றாள், நல்லிதயம் பெற்றவள், பணிவுடையவள், அவளுக்குப் பணிவிடை செய்யவும் தெரியும், அவள் இறைவனையே தலைவனாகப் பெற முற்றும் தகுதியுள்ளவள். (78)

பொறுமையாகவும் விழிப்புடனும் பக்தியை வளர்க்க வேண்டும். இதயமென்னும் வயலில், சிவகதைகளின் அமிருதமென்னும் நீரைப் பாய்ச்சவேண்டும். கவிதை என்னும் சிறு கால்கள் வழியாக அறிவென்னும் ஏற்றத் தால் இறைக்கப்பட்ட நீரைப் பாய்ச்ச பெருவிளைவு உண்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

டாகும். பஞ்சம் என்று பயப்படவேண்டியதில்லை. (40) இதயம் ஒரு பூந்தோட்டம், தியானமே வசந்தகாலம். இக் காலத்தில் பல, பழைய இலைகளை உதிர்த்த (பாவங்களை போக்கிய) செடிகொடிகள் அறமென்னும் துளிர்களை விடுகின்றன. சிவ நாமங்கள் மொட்டுகள், இனிய மணத்தை வீசுகின்றன. (நன்மையை மனதில் பதிப்பிக்கின்றன) அறிவும் ஆனந்தமும் அலர்ந்த மலர்கள். அவை அழிவற்ற தேனைக்கொண்டுள்ளன. பக்திக்கொடிகள் கொடுக்கும் அரும் பழம் ஆத்மாநுபவம். (47) பக்திக்கொடி படர்ந்து காய்க்க மனது பந்தலைப்போல அமைகின்றது. (49) மனது ஒரு குளம்போன்றது, பக்தியென்னும் மேகத்தினின்று இழியும் மழையால் நிறையும்பொழுது வாழ்க்கை பயனுள்ள தாகின்றது, மற்றவழிகளாலல்ல (76) சிவகதை என்னும் ஆற்றில் சிவானந்தம் என்னும் வெள்ளம் பொங்கி வரும் பொழுது, பாபம் அடிக்கப்பட்டுப் போகின்றது. அறி வென்னும் கால்வாய்வழி பாய, பிறவி என்னும் துக்கம் விட்டுப்போகின்றது. மனது என்னும் குளம் நிறைந்து விடுகின்றது. (2)

சில பாக்களில் மனதை, ஒரு அம்ஸம் போன்றமைத்து அதை இறைவனடிகளை நாடப்பணிக்கின்றார். இறைவனின் பாதங்கள், அவர் கால் நகங்களாலும் வளர்பிறைச் சந்திரனாலும், பதிப்பிக்கப்பட்ட இரத்தினங்களால் வெளிச்சம்பெற்ற மாளிகை போன்றுள்ளது. மனதென்னும் ராஜஹம்ஸம் இந்த மாளிகையை அடையட்டும். பறவை யாகும் மனது வீணாகச்சுற்றியலையாமல் இறைவனின் பாதங் களாகும் கூட்டில் பதுங்கட்டும். அங்கு அதற்கு திருப்தியும் நலமும் கிட்ட, துக்கமும் அலைச்சலும் அற்றுப் போகும். (45, 46) சிவத்தியானம் என்ற குளத்தை மன மென்னும் ஹம்ஸம் நாடட்டும். அது என்றைக்குமாய ஆனந்தவெள்ளம் நிறைந்துள்ளது. அக்குளத்திலே தேவர்கள் ரிஷிகள் இவர்களின் இதய கமலங்கள் மலர் கின்றன. அதை விட்டுத் தாழ்ந்தோருக்கு அடிமைப்படும் சேற்றுக் குளத்திற்கு மனஹம்ஸம் போவானேன்? (48)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அத்வைத அநுபவமே, சிவபக்திக்கும் சிவதியானத்திற்கும் இலட்சியமாகும். சகுண உபாசனையாலும் அத்வைத இலட்சியத்தை அடையலாம். வேதாந்தப் படிப்பினாலும் அடையலாம். ஆசார்ய சங்கரர் சிவானந்த லஹரியில் பிரம்மானுபூதிக்கு சைவமுறையையே ஏற்றுக்கொள்ளுகின்றார். சம்ஸாரபந்தங்கள் அறுபடும் பொழுது ஆத்மாநுபூதி உண்டாகின்றது. பந்தங்கள், மாயை அகலவும் அகன்று விடுகின்றன. மாயையை விட ஞானம் வேண்டும் ஞானம் இறைவனின் அருளால் உண்டாகின்றது. அத்வைதத்தில், இறைவனுக்கு இடம் இல்லையென்றோ, பக்தியில்லையென்றோ கொள்வது பிழைபட்டது. "இறைவன் அருளாலேயே அத்வைதத்தில் பற்று ஏற்படுகின்றது - இருவருக்கோ மூவருக்கோ – அது அவர்களை பெரும்பயமாகும் சம்ஸாரத்தினின்று காப்பாற்றுகின்றது" என்ற ஒரு [1]சுலோகம் உள்ளது.

பகவான் ஸ்ரீ ரமணர், சிவானந்த லஹரியின் சார சங்கிரகம் தொகுத்துள்ளார். அதில் அவர் வைப்பு முறையில் பத்து சுலோகங்களே உள்ளன. அப்பத்து சுலோகங்களின் எண்ணிக்கை 61, 76, 83, 6, 65, 10, 12, 9, 11, 91 ஆகும். 61ல் பொருத்தமான உதாரணத்துடன் பக்தி விளக்கப்படுகின்றது. பக்தி விடாது இறைவனைச் சிந்திப்பதே யாகும். (76) மனதில் பக்தி நிறையும்பொழுது வாழ்க்கை நிறைவானதாகவும் பயனுள்ளதாகவும் ஆகின்றது. (83) எது வரையறைக்குட்பட்டதோ, அதை பக்தி செய்வதில் பயனில்லை. பரம்பொருளாகும் இறைவனை பக்தி செய்வதே வேண்டப்படுவது (6) தர்க்கம் பக்திக்கு ஈடாகாது. வாதத்தில் திறமை சுகத்தைக்கொடுப்பதில்லை. அது மனதை ஓயவைக்கும் (65) பக்தனுக்கு வெறுப்பென்பதில்லை. அவன் சாவையும் மறுத்துவிடுகின்றான். அவனை தேவர்களும் போற்றுகின்றார்கள். (10) முக்கியமாவது பக்தி, பிற கருதற்குரியவையல்ல (12) ஒருவன், எம்முறை

1. ईश्वरानुग्रहादेव पुंसामद्वैतवासना ।
महाभयपरित्राणा द्वित्राणामुपजायते ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யிலும் வாழலாம், ஆனால் உண்மை யோகம் இறைவனுக்கு பக்தியே யாகும். (9) மலர்களால் பூசிப்பது பக்தியன்று, இதயத்தை இறைவனுக்கு சமர்ப்பிப்பதே பக்தி (11) வாழ்க்கையின் எந்நிலையிலும் ஒருவன் பக்தனாக இருக்கலாம், ஆயின் தன்னை இறைவனிடம் ஒப்படைக்க வேண்டும். அவனுடைய சுமைகளை இறைவன் சுமந்து கொள்கின்றார். (91) பக்தியின் முடிவு மோக்ஷம் இறைவனுக்குச் செய்யும் பக்தி, அஞ்ஞானம் என்னும் இருளை நீக்கி, ஞானம் என்னும் ஒளியை வீசுகின்றது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ श्रीः ॥

॥ शिवानन्दलहरी ॥

சிவானந்தலஹரீ

(அ) இந்நூல் இடையூறன்னியில் முடிவடைய முதலில் உமா மஹேசுவரர்களை வணங்குகிறார் :—

कलाभ्यां चूडालंकृतशशिकलाभ्यां निजतपः-
फलाभ्यां भक्तेषु प्रकटितफलाभ्यां भवतु मे ।
शिवाभ्यामस्तोकत्रिभुवनशिवाभ्यां हृदि पुन-
र्भवाभ्यामानन्दस्फुरदनुभवाभ्यां नतिरियम् ॥ १ ॥

கலாப்யாம் சூடாலங்க்ருத ஶஶிகலாப்யாம் நிஜதப:—
பலாப்யாம் பக்தேஷு ப்ரகடிதபலாப்யாம் பவது மே ।
ஶிவாப்யாமஸ்தோகத்ரிபுவநஶிவாப்யாம் ஹ்ருதி புந:
பவாப்யாமாநந்தஸ்புரதநுபவாப்யாம் நதிரியம் ॥

कलाभ्यां—வேதத்தில்கூறிய ஸகலவித்யாஸ்வரூபர்களாயும், **चूडालंकृतशशिकलाभ्यां**—சிரஸ்ஸில் அலங்கரிக்கப்பட்ட சந்திரகலையையுடையவர்களாயும், **निजतपःफलाभ्यां**—தங்கள் தங்கள் தவப்பயனாக இருப்பவர்களாயும், **भक्तेषु**—பக்தர்களிடத்தில், **प्रकटितफलाभ्यां**—காண்பிக்கப்பட்ட பலனை உடையவர்களாயும், **अस्तोक त्रिभुवन शिवाभ्यां**—முவ்வுலகிலும் அதிகமான பலனுக்குக் காரண பூதர்களாயும், **हृदि**—ஹ்ருதயத்தில், **पुनर्भवाभ्यां**—அடிக்கடி தோற்றமளிப்பவர்களாயும், **आनन्दस्फुरदनुभवाभ्यां**—ஆனந்தத்துடன் விளங்கும் ஸ்வாத்மானுபவமுள்ளவர்களாயுமிருக்கிற, **शिवाभ्यां**—உமா மஹேச்வரர்களின் பொருட்டு, **मे**—என்னுடைய, **इयं नतिः** இந்த நமஸ்காரம், **भवतु**—இருக்கட்டும்.

என்னுடைய நமஸ்காரங்கள் மங்களமான இருவருக்கும் (சிவன், பார்வதி இவர்களுக்கு) ஆகட்டும். அவர்களே அறிவின்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸாரம். அவர்கள் தலையில் பிறையை அணியாகச் சூடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் ஒருவர் தவத்திற்கு ஒருவர் பயனாக அமைகின்றார்கள். பக்தர்களுக்கு அநுக்ரஹம் செய்கின்றார்கள்; மூவுலகங்களையும் வாழ்த்துகின்றார்கள், விடாது இதயத்து உறைகின்றார்கள். அவர்களே சுகாநுபவத்தைத் தோற்றுவிக்கின்றார்கள்.

இந்த சுலோகத்தில் படைப்பின் அம்மையப்பராகும் பார்வதி பரமேசுவரர்களுக்கு நமஸ்காரங்கள் சொல்லப்பட்டு, இந்நூல் ஆரம்பமாகின்றது. அவர்கள் ஒருவருக்கொருவர் வேறுபட்டவரன்று, ஒரே உண்மையின் பகுதிகள். இந்த அர்த்தநாரி ரூபத்திற்கு ஆழ்ந்த கருத்துண்டு. பிரம்மத்தைத் தவிர்த்து மாயைக்கு இடமில்லை ஈசுவரனின்றும் பிரகிருதியை பிரித்துவைக்க முடியாது. சொல்லையும் பொருளையும் வேறாகப் பிரித்தல் கூடாதவாறுபோல் பார்வதி பரமேசுவரர்களை பிரித்து வைப்பது கூடுவதில்லை என்று காளிதாஸரும் சொல்லியுள்ளார் ஒருவரைப்பற்றி உண்மையாவது மற்றவரைப்பற்றியும் உண்மை ஆகின்றது. ஒருவரது, சிறப்புகளும் அணிகலங்களும் மற்றவரது மாகின்றன. பிறைச்சந்திரன் இருவருக்கும் உரிய அணி. பண்பாடு, கலைகள் இவைகளுக்கு இருவருமே பிறப்பிடங்கள். அவரிருவருமே பக்தர்கள் இதயத்தில் நிலைக்கின்றார்கள்.

பரம்பொருளிற்கு பால் பாகுபாடு இல்லை. எப்பாலையும் கடந்தது. மங்களம் என்று பொருள்படும் சிவ என்ற சொல்லை எப்பாலிலும் (வடமொழியில்) அமைக்கலாம். இந்த நூல் வாழ்த்து சுலோகத்தில் ஆசார்யர் சங்கரர் சிவ என்ற சொல்லை இருமையில் வைத்துள்ளார். (1)

(அ) சிவானந்தம் தம் மனதில் என்றும் விளங்குமாறு வேண்டுகிறார் :—

गलन्ती शंभो त्वच्चरितसरितः किल्बिषरजो
दलन्ती धीकुल्यासरणिषु पतन्ती विजयताम् ।
दिशन्ती संसारभ्रमणपरितापोपशमनं
वसन्ती मच्चेतोहदभुवि शिवानन्दलहरी ॥ २ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கலந்தீ ஶம்போ த்வச்சரிதஸரித: கில்பிஷரஜோ
தலந்தீ தீகுல்யா ஸரணிஷு பதந்தீ விஜயதாம் ।
திஶந்தீ ஸம்ஸார ப்ரமண பரிதாபோபஶமநம்
வஸந்தீ மச்சேதோ ஹ்ரதபுவி ஶிவாநந்தலஹரீ ॥

हे शम्भो–ஸுகத்திற்தக் காரணபூதரான ஹே! ஈச்வர, **त्वच्चरितसरितः**–உன் சரித்திரமாகிய நதியினின்றும், **गलन्ती**-பெருகுகிறதாயும், **किल्बिषरजः**-பாபமாகிற புழுதிகளை, **दलन्ती**-போக்கடிக்கிறதாயும், **धीकुल्यासरणिषु**–புத்தியாகிய வாய்க்கால்வழியாய், **पतन्ती**–செல்லுகிறதாயும், **संसारभ्रमणपरितापोपशमनं**–ஸம்ஸாரத்தில் சுற்றுவதாலேற்படக்கூடிய தாபத்தின் சாந்தியை, **दिशन्ती**–கொடுப்பதாயும், **मच्चेतोह्रदभुवि**-என் மனமாகிய மடு பிரதேசத்தில், **वसंती**–தங்கி இருக்கிறதாயுமுள்ள, **शिवानन्दलहरी**-பார்வதீ பரமேச்வரர்களின் ஆனந்தப்பெருக்கானது, **विजयतां**-மிகவும் மேன்மையாய் பிரகாசிக்கட்டும்.

ஓ சம்போ, தங்கள் கதையாகும் ஆற்றினின்று பரந்தோடும் ஆனந்த வெள்ளம் போற்றப்படட்டும். அவ்வெள்ளம் பாபத்தின் திரளை அகற்றி, அறிவென்னும் கால்வாய்களில் ஓடி சம்சாரத்தில் திரிவதால் உண்டாகும் துக்கத்தைத் துடைக்கட்டும். அது என் மனமென்னும் குளத்தில் நிறையட்டும்.

இந்தப் பாவில், சிவனது அருள்வெள்ளம் என்று பொருள் படும் சிவானந்தலஹரி என்ற தலைப்பெயர் உள்ளது. பரம் பொருளாகும் சிவன் ஆனந்தம். மனது சிவனுகும் ஆனந்தத்தால் நிறைக்கப்படவேண்டும். மனதை எப்படி நிறப்புவது? இவனது பெருங் கதையென்னும் வெள்ளத்தால் நிறப்பவேண்டும். அறிவென்றும் கால்வாய் வழியாக ஆனந்தவெள்ளத்தை மனதிற்குக் கொண்டுவரவேண்டும், நீரோடவும் பாபமெல்லாம் அகற்றப்படும். பந்தத்திலிருந்து விடுபடுவதே பெறப்படும் அரும் பெருங்கனியாகும்.

சிவானந்தலஹரியைக் கேட்டு, பரவசமடைபவர்கள் பாபத்தையும், துக்கத்தையும் துலைத்து மனிதனின் இலட்சியமாகும் விடுதலையைப் பெறுகின்றுர்கள். (2)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

त्रयीवेद्यं हृद्यं त्रिपुरहरमाद्यं त्रिनयनं
जटाभारोदारं चलदुरगहारं मृगधरम् ।
महादेवं देवं मयि सदयभावं पशुपतिं
चिदालम्बं साम्बं शिवमतिविडम्बं हृदि भजे ॥ ३ ॥

த்ரயீவேத்யம் ஹ்ருத்யம் த்ரிபுரஹரமாத்யம் த்ரிநயனம்
ஜடாபாரோதாரம் சலதுரகஹாரம் ம்ருகதரம் ।
மஹாதேவம் தேவம் மயி ஸதயபாவம் பசுபதிம்
சிதாலம்பம் ஸாம்பம் ஸிவமதிவிடம்பம் ஹ்ருதி பஜே ॥

अहं-நான், त्रयीवेद्यं மூன்றுவேதங்களால் அறியக் கூடியவரும், हृद्यं - மனதிற்கு ப்ரீதியைத்தருபவரும், त्रिपुरहरं-த்ரிபுராஸுரர்களை அழித்தவரும், (ஸ்தூலம் ஸூக்ஷ்மம் காரணமென்ற மூன்று சரீரங்களை போக்குகிற வராயும்) आद्यं-உலகஸிருஷ்டிக்கும் முந்தியவரும், त्रिनयनं-முக்கண்ணராயும், जटाभारोदारं-சடையின் பாரத்தால் கம்பீரமாக இருப்பவரும், चलदुरगहारं-அசைந்து கொண்டிருக்கும் ஸர்ப்பங்களை ஆபரணமாயுள்ளவரும், मृगधरं மானை தரிக்கிறவராயும், महादेवं-எங்கும் நிறைந்த ப்ரகாசவடிவமாயும், देवं-ஆனந்தரூபியாயும், मयि-என்னிடம், सदयभावं-தயவுடன் கூடிய மனோபாவமுள்ளவரும், पशुपतिं-ஜீவர்களுக்கு அதிபதியாயும், चिदालम्बं-ஆத்ம ஞானத்திற்கு இருப்பிடமாயும், साम्बं- அம்பிகையுடன் கூடியவரும், अतिविडम्बं-உலகத்தை அனுஸரிப்பவராயுமிருக்கிற, शिवं-ஈச்வரனை, हृदि-மனதில், भजे-சிந்திக்கிறேன்.

மூன்று வேதங்களால் அறியப்படுபவனும், இதயத்திற்கு இனியவனானவனும் முப்புரங்களை எரித்தவனும், முதலானவனும், முக்கண் பெற்றவனும், சடைகள் அணிந்து கம்பீரமாக தோற்றம் அளிப்பவனும், பாம்புகளை அணிகளாகப் புனைந்து கையில் மானை, வைத்திருப்பவனும், மகாதேவனும், எனக்கு கருணை செய்யும் தெய்வமானவனும், ஆத்மாக்களுக்கு இறைவனானவனும், அடிப்படை அறிவானவனும், உமையொடு துணையுடன் நிற்ப

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வனும், உலகின் போக்குகளை ஊக்குபவனுமான சிவனை நான் என் இதயத்தில் வணங்குகின்றேன்.

இங்கு சிவபெருமானின் சிறப்புகள் சில கூறப்படுகின்றன. அவர் சிறந்த தெய்வமாகும் மகாதேவன். பிரகாசிக்கும் பிரபு, அவரே வேதங்களுக்குப் பிறப்பிடம். அவரை வேதங்களால் அறிந்துகொள்ளவேண்டும். அவரே எல்லாவற்றிற்கும் மூலம். அவைகளின் முதற்காரணம்,

அவர் இரும்பு, வெள்ளி, தங்கத்தால் கட்டப்பட்ட மூன்று புரங்களை (கோட்டைகளை) அழித்தவர். மகாபாரதக்கதை இவ்வாறுள்ளது, தாரகனென்ற அசுரன் கார்த்திகேயனுல் அழிக்கப்பட்டான். அவ்வசுரனது மூன்றுகுமாரர்கள் தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி கடுந்தவம் செய்து பிரம்மாவினிட மிருந்து, அப்புரங்களில் குடியேறி அவைகளை விரும்பும் இடங் களிற்கு மாற்ற வரம் பெற்றுர்கள். ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகே அவர்களை ஒரே அம்பால் மாய்க்க முடிந்தது. அம்மூன்று அசுரர்களும் மிகவும் பலமிக்கவர்களாகி, தேவர்களையும், நல்லவர் களையும் மிகவும் துன்புறுத்தினுர்கள். இறுதியாக தேவர்கள் சிவனிடம் சென்று தங்களைக் காப்பாற்றவேண்டினுர்கள். சிவ பெருமான் தேவர்களின் பலத்தில் பாதியைப்பெற்று மஹா தேவனுனர். விஷ்ணு அம்பாகவும், அக்னி அதன் நுனியாகவும், அமைய, வேதம் வில்லாகவும், ஸவிதா வில்நாணுகவும் அமைந்தது. பிரம்மா தேரோட்ட சிவன் முப்புரங்களை அழித்தார். திரிபுர ஹரன். திரிபுராரி, என்று சிவன் அழைக்கப்படுகிறுர். காரணம், சூக்ஷ்மம், ஸ்தூலம் என்ற மூன்று உடம்புகளைக் குறிப்பதுவே மூன்று புரங்கள். இம்மூன்று உடம்புகளே ஆத்மாவை பிணைப் பவை. சிவனது அருளால் தான் இம்மூன்று உடல்களும் அழிக்கப்பட ஆத்மா விடுதலை பெறுகின்றது.

சிவபெருமானுக்கு மூன்று கண்கள், இயற்கையானது இரண்டு நெற்றியின் நடுவிலுள்ளது மூன்ருவது. இந்த மூன்ருவது கண் தோன்றியதிற்கும் ஒரு கதையுண்டு பார்வதி பிராட்டி விளையாட்டாக இறைவனின் இரண்டு கண்களையும் பொத்திக் கொண்டார் உடனே படைப்பு முழுதும் காரிருளால் சூழப் பட்டது. படைப்பிற்கு இரங்கி சிவன், தன் நெற்றியில் ஒரு கண்ணைத் திறந்துகொண்டார். இம்முக்கண்களும் சூரியன், சந்திரன், அக்னியாகும் மூன்று வெளிச்சங்களையும் குறிக்கின்றன.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிவபெருமான் அடர்ந்த சடைகளைப் பெற்றுள்ளார் அதுவே துறவின் அறிகுறி. தாருகவனத்திலுள்ள ரிஷிகள் ஒரு சமயம் சிவனைமடக்க ஒருவேள்வி செய்தார்கள். அதினின்று, கொடிய பாம்புகளும் ஒரு மானும் வெளிவந்தன. ஆயின் அவை சிவ பெருமானை ஒன்றும் செய்யக்கூடவில்லை. அவர் பாம்புகளை அணிகலங்களாக அணிந்துகொண்டு மானைக் கையில் ஏந்திக் கொண்டார். (3)

सहस्रं वर्तन्ते जगति विबुधाः क्षुद्रफलदाः
न मन्ये स्वप्ने वा तदनुसरणं तत्कृतफलम् ।
हरिब्रह्मादीनामपि निकटभाजामसुलभं
चिरं याचे शंभो शिव तव पदाम्भोजभजनम् ॥ ४ ॥

ஸஹஸ்ரம் வர்த்தந்தே ஜகதி விபுதா: க்ஷுத்ரபலதா
ந மந்யே ஸ்வப்நே வா ததநுஸரணம் தத்க்ருதபலம் ।
ஹரிப்ரஹ்மாதீநாமபி நிகடபாஜாமஸுலபம்
சிரம் யாசே ஶம்போ ஶிவ தவ பதாம்போஜ பஜநம் ॥

जगति–உலகத்தில், **क्षुद्रफलदाः**–அல்ப பலனையளிக்கக் கூடிய, **विबुधाः**–தேவர்கள், **सहस्रं**–ஆயிரக்கணக்காக, **वर्तन्ते**-இருக்கிறார்கள், **अहं**–நான், **स्वप्ने वा**–ஸ்வப்னத்திலும் **तदनुसरणं**-அவர்களை அனுஸரிப்பதையாவது, **तत्कृतफलं**–அவர்களால் கொடுக்கப்பட்ட பலனையாவது, **न मन्ये**–எண்ணுகிறதில்லை, **हे शम्भो**–ஈச்வர, **निकटभाजां**–ஸமீபத்தில் ஸேவிக்கின்ற **हरिब्रह्मादीनामपि**-விஷ்ணு ப்ரம்மா முதலியோர் களுக்குங்கூட, **असुलभं**–துர்லபமான, **तव पदाम्भोजभजनं**–உன் பாதாரவிந்த ஸேவையை, **शिव**–பரமசிவனே, **चिरं**–வெகுகாலம், **याचे**-யாசிக்கிறேன்.

சிறுபயன்களைக் கொடுக்கும் தேவர்கள் பலர் இருக்க நான் அவர்களையும் அவர் கொடுக்கும் பயன்களையும் கனவிலும் கருதுவ தில்லை. ஓ சம்போ, ஓ சிவா, உனக்கு அருகாமையிலேயே இருக்கும் விஷ்ணு, பிரம்மா இவர்களுக்கும் கிடைக்க அரிதாகும் உன் இணை தாமரை அடிகளையே வணங்க நீண்ட காலமாக தவஞ் செய்கின்றேன்,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிவனே பரம்பொருள். வாழ்க்கையின் இலட்சியமே அவனை அடைவதாகும். இதற்குக்குறைவான இலட்சியம் மனிதனை பந்தத்தில் சுழலவே செய்யும் சம்சாரத்தினின்று சிவனின் அடிகளே மனிதனைக்காப்பாற்றும். தேவர்களும் உபதேவர்களும் உலகின் நலன்களையும் தேவலோக சுகபோகங்களையும் கொடுக்க வல்லார்கள். ஆயின் இறுதி இலட்சியத்தை நாடுபவருக்கு இவை மதிப்பற்றவை.

யாமுனாசாரியார் ஸ்தோத்திர ரத்னம் 27ஐயும் இங்கு ஒப்பு வைத்துப் பார்க்கலாம். தேன் சொரியும் மலர் பாதங்களைப் பெற்ற ஆத்மா வேறெதை நாடும்? தேனீ தேன் நிறைந்த தாமரையிருக்க, இக்ஷுரகம் என்ற தேனற்ற, மணமற்ற பூவை நாடுமா? (4)

स्मृतौ शास्त्रे वैद्ये शकुनकवितागानफणितौ
पुराणे मन्त्रे वा स्तुतिनटनहास्येष्वचतुरः ।
कथं राज्ञां प्रीतिर्भवति मयि कोऽहं पशुपते
पशुं मां सर्वज्ञ प्रथितकृपया पालय विभो ॥ ५ ॥

ஸ்ம்ருதௌ ஶாஸ்த்ரே வைத்யே ஶகுநகவிதாகாநபணிதௌ
புராணே மந்த்ரே வா ஸ்துதிநடநஹாஸ்யேஷ்வசதுர: ।
கதம் ராஜ்ஞாம் ப்ரீதிர்பவதி மயி கோऽஹம் பஶுபதே
பஶும் மாம் ஸர்வஜ்ஞ ப்ரதிதக்ருபயா பாலய விபோ ॥

स्मृतौ-ஸ்மிருதியிலும், **शास्त्रे**-தர்க்கம் வியாகரணம் முதலிய சாஸ்திரத்திலும், **वैद्ये**-வைத்திய சாஸ்திரத்திலும் **शकुनकवितागानफणितौ**-சகுனம், கவிதை, ஸங்கீதம், இவைகளில்திறமையை ஸபையில் கூறிக்காட்டுவதிலும், **पुराणे**-புராணத்திலும், **मन्त्रे वा**-மந்திரசாஸ்திரத்திலாவது, **स्तुतिनटनहास्येषु**-ஸ்தோத்திரம் செய்வது, நர்த்தனம், விகடம் இவைகளிலும், **अचतुरः**-சக்தியற்றவன். **तस्मात्**-ஆகையால், **राज्ञां**-அரசர்களுக்கு, **प्रीतिः**-பிரியம், **मयि**-என்னிடத்தில், **कथं**-எவ்விதம், **भवति**-உண்டாகும்? (ஆகையால்) **हे पशुपते**-ஜீவர்களின் தலைவனே, **सर्वज्ञ**-எல்லா விஷயங்களையும் உணர்ந்தவரே, **प्रथित**-பிரஸித்தமானவரே, **कोऽहं पशुं**-நான்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யாரென்று அறியாத மிருகத்திற்கு ஒப்பான, **मां**–என்னை, **विभो**–ஸர்வவியாபக, **कृपया**–கருணையால், **पालय**–காப்பாற்றும்.

சாஸ்திரங்களோ, வேதாந்தமோ, வைத்தியமோ, சகுன சாஸ்திரமோ, கவிதையோ, சங்கீதமோ, புராணமோ, மந்திரமோ நடனமோ, விகடமோ, புகழ்ச்சியோ கற்றேனில்லை அரசர்கள் எப்படி என்னை ஆதரிப்பார்கள் ஆத்மாக்களின் இறைவா, அறிவுச் சுடரே, எங்கும் நிறைந்தவனே, பெரும் புகழ் பெற்றவனே, உன் அருளால் என்னைக் காப்பாற்று.

உலகமேம்பாட்டிற்கு அதிகாரத்திலமைபவர்களுக்கு திருப்தி செய்யத் தெரிதல் வேண்டும். அவர்களை திருப்தி செய்ய சாஸ்திரங்களையும், உலக கலைகளையும் கற்றிருக்க வேண்டும். ஆயின் இறைவன் அருளைப் பெற இவைகள் வேண்டப்படுவ தில்லை. இறைவனிடம் சரணடைவதுதான் அவனருளைப்பெற வழியாகும். (5)

घटो वा मृत्पिण्डोऽप्यणुरपि च धूमोऽग्निरचलः
पटो वा तन्तुर्वा परिहरति किं घोरशमनम् ।
वृथा कण्ठक्षोभं वहसि तरसा तर्कवचसा
पदाम्भोजं शंभोर्भज परमसौख्यं व्रज सुधीः ॥ ६ ॥

கடோ வா ம்ருத்பிண்டோzப்யணுரபி ச தூமோzக்நிரசல:
படோ வா தந்துர்வா பரிஹரதி கிம் கோரஶமநம் I
வ்ருதா கண்டக்ஷோபம் வஹஸி தரஸா தர்க்கவசஸா
பதாம்போஜம் ஶம்போர்பஜ பரமஸௌக்யம் வ்ரஜ ஸுதீ:॥

हे सुधीः–நல்ல புத்தியுடையவனே, **घटो वा**–குடமாவது, **मृत्पिण्डोपि**–மண் கட்டியாவது, **अणुरपि च**–பரமாணுவாவது, **धूमः**–புகையாவது, **अग्निः**–நெருப்பாவது, **अचलः**–மலையாவது **पटो वा**–வஸ்திரமாவது, **तन्तुर्वा**–நூலாவது (இவைகள் தர்க்க சாஸ்திரத்தின் சொற்கள்), **घोरशमनं**–பயங்கரமான யமனை, **परिहरति किं**–போக்கடிக்குமா? (அப்புறப்படுத்துமா) **तर्कवचसा**–தர்க்கசாஸ்திரத்தின் வார்த்தைகளால், **वृथा**–

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வீணுக, **कण्ठक्षोभं वहसि**-தொண்டைக்கு சிரமத்தைக் கொடுக்கிருய். **शम्भोः**-ஸுகத்தையளிக்கக்கூடிய ஈச்வரனுடைய, **पदाम्भोजं**-பாதகமலத்தை, **तरसा**-சீக்கிரம், **भज**-ஸேவிப்பாய். **परमसौख्यं**-மோக்ஷ ஸுகத்தை **व्रज**-அடைவாய்.

களிமண், அணு, புகை, மலே, துணி, நூல், இவைகளில் ஏதாவது கொடிய சாவை அகற்ற திறன் பெற்றதா? தர்க்க விவாதத்தால் உன் தொண்டையை கிழித்துக் கொள்வதால் பயனென்ன? அறிவாளியே, சம்புவினுடைய தாமரைப் பாதங்களே வணங்கி பெரும் பேற்றை அடைவாயாக!

உலகின் தர்க்க வாதத்தின் உண்மைப் பயன் என்ன? வாதத்திற்காக பிடிவாதம் செய்து எதிரியை மடக்கலாம் உன் அறிவின் திறனே வெளியிடலாம். ஆயின் அதனல் உனக்கு உண்டாகும் நன்மையென்ன? தர்க்க முறைகளால் உனக்கு தெளிவு உண்டாவதில்லே, அறிவு பெற்றவன், தர்க்க விவாதங்களில் தன் பொழுதை இழக்கமாட்டான். அவன் இறைவன் அடிகளில் சரணடைவான். (6)

मनस्ते पादाब्जे निवसतु वचः स्तोत्रफणितौ
करौ चाभ्यर्चायां श्रुतिरपि कथाकर्णनविधौ ।
तव ध्याने बुद्धिर्नयनयुगलं मूर्तिविभवे
परग्रन्थान्कैर्वा परमशिव जाने परमतः ॥ ७ ॥

மநஸ்தே பாதாப்ஜே நிவஸது வச: ஸ்தோத்ரபணிதௌ
கரௌ சாப்யர்ச்சாயாம் ச்ருதிரபி கதாகர்ணநவிதௌ ।
தவ த்யாநே புத்திர் நயநயுகளம் மூர்த்திவிபவே
பரக்ரந்தான் கைர்வா பரமஶிவ ஜாநே பரமத: ॥

हे परमशिव-ஹே ஈசுவர, **मनः**-மனது, **ते**-உன்னுடைய, **पादाब्जे**-பாதாரவிந்தத்திலும், **वचः**-வாக்கானது, **स्तोत्रफणितौ**-ஸ்தோத்திரம் சொல்வதிலும், **करौ च**-கைகள், **अभ्यर्चायां**-பூஜை செய்வதிலும், **श्रुतिरपि**-காது, **कथाकर्णनविधौ**-கதைகளேக் கேட்பதிலும், **तव**-உன்னுடைய, **ध्याने**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

த்யானத்தில், बुद्धिः-புத்தியும், मूर्तिविभवे-ரூபத்தைப் பார்ப்பதில், नयनयुगलं-இரு கண்களும், निवसतु-வஸிக்கட்டும் (ஈடுபடட்டும்), अतः परं-இதன் பிறகு परग्रन्थान्-வேறு நூல்களை, कैर्वा-எந்த இந்திரியங்களால், जाने-அறிவேன்.

தலையாய சிவபெருமானே! என் மனது உன் திருவடிகளில் அமரட்டும். என் நாவு, உன் புகழைப் பாடட்டும். என் கைகள் உனக்கு பூஜை செய்யட்டும். என் புலன்கள் உன் கதைகளை கேட்கட்டும். என் அறிவு உன் தியானத்தில் நிலைக்கட்டும். உன் திருவுருவை பார்த்தவண்ணம் அமரட்டும் என் கண்கள். இவை இப்படி நிலைக்க, ஏன் எப்படி பிறநூல்களைப் படித்தறிவது?

ஒருவன் எப்படி இறைவன் பாதுகாப்பைப் பெறுவது? இதயம், உணர்வு, மனது, பல திறன் இவைகளைக் கொண்டு அதைப் பெறவேண்டும். இறைவனிடம் ஒன்றுபட்டு நிற்க கற்றுக் கொள்வதுவே பக்தியின் செயல் முறை. ஒரு மனிதன் காதலில் ஈடுபடும்பொழுது எப்படி அமைகிறான்; அவன் முற்றுமாகத் தன்னை தான் காதலிப்பவரிடம் ஒப்படைக்கின்றான். அவன் செய்கை, பேச்சு, மனது, இவை ஒரு குறியைப் பற்றி நின்று தான் காதலிப்பவரை திருப்திசெய்ய முனைகிறான். அவ்விதமே பக்தன் முற்றுமாக தன்னை இறைவனிடம் அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும். மனோநிலை, உணர்ச்சிகள் இவைகளுக்கு இறைவனே குறிக்கோளாக அமைதல்வேண்டும். அவனுடைய அக்கரைகள் பலவிற்கும் கேந்திரம் இறைவனே இறைவனுக்கே அவனது ஒரு மித்த பணியாகின்றது. அவன் அப்பொழுது பிறவற்றை விட்டுவிட வேண்டியவனாகின்றான். அவனுக்கு நூல்களால்தான் என்ன பயன்? நூற்களின் பலனையெல்லாம் பெற்றவனாகி விடுகின்றான்.

குலசேகர ஆழ்வார் முகுந்தமாலையில் 'நாவே, கேசவனின் புகழைப் பாடு, மனமே முரனின் பகைவனை நினை, கைகளே ஸ்ரீயின் தலைவனை பூஜியுங்கள். அச்சுதனின் கதைகளை கேளுங்கள் காதுகளே! கண்களே கிருஷ்ணனைப் பார்த்துக் களியுங்கள். கால்களே ஹரியின் கோயிலிற்குச் செல்லுங்கள். முகுந்தனின் பாதங்களிலுள்ள துளசியை முகரு மூக்கே. பிரபு விஷ்ணுவை வணங்கு தலையே' என்றுள்ளதையும் இங்கு ஒப்பு நோக்கலாம். (7)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

यथा बुद्धिः शुक्तौ रजतमिति काचाश्मनि मणि-
जले पैष्टे क्षीरं भवति मृगतृष्णासु सलिलम् ।
तथा देवभ्रान्त्या भजति भवदन्यं जडजनो
महादेवेशं त्वां मनसि च न मत्वा पशुपते ॥ ८ ॥

யதா புத்தி: ஶுக்தௌ ரஜதமிதி காசாஶ்மநி மணி:
ஜலே பைஷ்டே க்ஷீரம் பவதி ம்ருகத்ருஷ்ணாஸு ஸலிலம் ।
ததா தேவப்ராந்த்யா பஜதி பவதந்யம் ஜடஜநோ
மஹாதேவேஶம் த்வாம் மநஸி ச ந மத்வா பஶுபதே ॥

हे महादेव–மஹாதேவனே, **पशुपते**–பசுபதியே, **शुक्तौ**–முத்துச் சிப்பியில், **रजतमिति बुद्धिः**–வெள்ளியென்ற புத்தியும், **काचाश्मनि**–காசமணியில், **मणिः**–ரத்னமென்ற புத்தியும், **पैष्टे**–மாவுடன் கலந்த, **जले**–ஜலத்தில், **क्षीरं**–பாலென்னும் புத்தியும், **मृगतृष्णासु**–கானலில், **सलिलं**–ஜலமென்ற புத்தியும், **यथा भवति**–எவ்விதமுண்டாகிறதோ, **तथा**–அவ்விதம், **जडजनः**–மூடமனுஷ்யன், **ईशं**–ஈசுவரனை. **त्वां**–உன்னை, **मनसि**–மனதில், **न मत्वा**–எண்ணாமல், **भवदन्यं**–உன்னைக்காட்டிலும் வேறு தேவதையை, **देवभ्रांत्या**–தேவதையென்ற பிரமையால், **भजति**–ஸேவிக்கிறான்.

ஓ மகாதேவா! ஆத்மாக்களின் இறைவா! சிப்பியில் வெள்ளியையும், கண்ணாடி மணியில் ரத்தினக்கல்லையும் மாவு கலந்த நீரில் பாலையும், கானலில் நீரையும் காண்பதைப் போல அறிவிலி, நீ யல்லாத பிற தெய்வங்களை வணங்குகின்றான். ஒரே மனதுடன் நின்னை வணங்காது பிறரை வணங்குகின்றான்.

அறிவற்றோர் மாயையினால் ஒளியிழந்தோராய் பரம்பொருளை விட்டு பிறதெய்வங்களை வணங்குகின்றார்கள். ஒருவன் வெள்ளியை மதிக்கின்றான். அதனால் சிப்பியை வெள்ளியாக தப்பாகக்கொள்கின்றான். மயக்கம் தப்பறிவையே உண்டாக்குவது. ஒருவன் நாடவேண்டுவது பரம்பொருளை. ஆயின் உலகின் அற்ப சுகங்களை நாடுபவன் அவை பரம ஸுகத்தைக்கொடுக்குமென்று நினைத்துக்கொள்கின்றான். அற்ப சுகமும் பரமசுகத்தின்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பிரதிபிம்பமாகையால் அதுவும் அவனுக்குத் தற்காலிகமாக திருப்தியை அளிக்கின்றது. எவன் தோற்றங்களைப் பொய்யென உணர்ந்து உண்மையைப்பற்றி தேவனாகும் பரம்பொருளிடம் பக்தி செய்கின்றானோ அவனே அறிவாளி. (8)

गभीरे कासारे विशति विजने घोरविपिने
विशाले शैले च भ्रमति कुसुमार्थं जडमतिः ।
समर्प्यैकं चेतःसरसिजमुमानाथ भवते
सुखेनावस्थातुं जन इह न जानाति किमहो ॥ ९ ॥

கபீரே காஸாரே விஶதி விஜநே கோரவிபிநே
விஶாலே ஶைலே ச ப்ரமதி குஸுமார்த்தம் ஜடமதி: ।
ஸமர்ப்யைகம் சேத: ஸரஸிஜமுமாநாத பவதே
ஸுகேநாவஸ்தாதும் ஜந இஹ ந ஜாநாதி கிமஹோ ॥

हे उमानाथ–ஹே பார்வதியின் பதியே, गभीरे–ஆழமுள்ள कासारे–குளத்திலும் विजने–ஜனஸஞ்சாரமற்ற, घोरविपिने–பயங்கரமான காட்டிலும், विशाले–விஸ்தீர்ணமான, शैले च–மலையிலும், कुसुमार्थं–புஷ்பத்திற்காக, जडमतिः–உபாயம் தெரியாத மூடன், विशति–பிரவேசிக்கிறான். भ्रमति–சுற்றுகிறான். एकं–ஒரு, चेतःसरसिजं–மனமாகிய தாமரை மலரை भवते–உன் பொருட்டு समर्प्य–அர்ப்பணம் செய்து, सुखेन–சுகமாக, अवस्थातुं–இருப்பதற்கு, इह–இவ்வுலகில், जनः–மனிதன், न जानाति–அறிகிறதில்லை. किमहो–என்ன ஆச்சரியம்.

உமையின் தலைவ! மலர் தேடி கொய்துவர ஆழமான குளத்தில் இறங்குபவனும், அடர்ந்த கொடி காட்டில் புகுபவனும் மலையேறுபவனும் எவ்வளவு மடையர்கள்! பாவம்! தனியான தன்னிதய தாமரையை உனக்கு அர்ப்பணித்து இங்கு சுகமாக வாழத்தெரியாத அறிவிலியே அவன்.

மலரால் அர்ச்சிப்பதற்கு ஒரு உட்பொருளுள்ளது இறைவனுக்கு மலர்களும் அலங்காரமும் வேண்டுவதில்லை. அவரே பரம அழகு. அவரை அழகுபடுத்துவது தேவையன்று. பக்தன் மலரிடும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பொழுது தன் இதயத்தையே இறைவனுக்குக் கொடுப்பதாக பொருள். பூஜையின் பல செயல்களுக்கும் உட்பொருளுண்டு. பெரும்பாலும் உட்பொருள் கைவிடப்பட்டு புறச்செய்கைகள் மட்டும் செய்யப்படுகின்றன. இறைவன் மலர்களை விரும்புகின்றான் என்ற தப்பெண்ணமே மலர்களை அவர்மீது சொரியச் செய்கின்றது. மலரைத்தேடிப் பறிப்பதிலுமே எவ்வளவோ ஆபத்துக்கள் உள்ளன. இந்தப் பாடலெல்லாம் வீணானது என்பது தெளிவானது. இறைவன் வேண்டுவது பல மலர் பூக்களன்று, ஒன்றேயாகும் மனிதனின் இதய கமலத்தையே அவர் வேண்டுகிறார். (9)

नरत्वं देवत्वं नगवनमृगत्वं मशकता
पशुत्वं कीटत्वं भवतु विहगत्वादिजननम् ।
सदा त्वत्पादाब्जस्मरणपरमानन्दलहरी-
विहारासक्तं चेद्धृदयमिह किं तेन वपुषा ॥ १० ॥

நரத்வம் தேவத்வம் நகவநம்ருகத்வம் மஶகதா
புஶுத்வம் கீடத்வம் பவது விஹகத்வாதிஜநநம் ।
ஸதா த்வத்பாதாப்ஜ ஸ்மரண பரமாநந்தலஹரீ-
விஹாராஸக்தம் சேத் ஹ்ருதயமிஹ கிம் தேந வபுஷா ॥

नरत्वं – மனுஷ்யத்தன்மை, **देवत्वं**-தேவத்தன்மை, **नगवनमृगत्वं**–மலை, காட்டுமிருகம் இவற்றின் தன்மை, **मशकता**-கொசுவாயிருப்பது, **पशुत्वं**–பசுத்தன்மை, **कीटत्वं**–புழுத்தன்மை, **विहगत्वादिजननं**-பறவை முதலிய பிறப்பாவது, **भवतु**–உண்டாகட்டும். **सदा**–எப்பொழுதும், **हृदयं**–மனமானது, **त्वत्पादाब्जस्मरणपरमानन्दलहरीविहारासक्तं चेत्**–உன் பாதாரவிந்த ஸ்மரணத்திலுண்டான சிறந்த ஆனந்தப் பெருக்கின் விளையாட்டில் ஈடுபடுமானால், **इह**–இவ்வுலகில், **किं**–என்ன கெடுதல் **तेन वपुषा**–அந்த சரீரத்தால், உண்டாகும்? (ஒன்றும் நஷ்டமில்லை.)

மனிதன், தேவன், மலை, காட்டு விலங்கு, கொசு, பசு, புழு, பறவை இவைகளில் எப்பிறப்பு வேண்டுமானாலும் வரட்டும். இதயமானது ஆனந்தவெள்ளத்தில் திளைத்து நினது மலரடிகளைத்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தியானத்தில் வைக்குமானல் எந்த உடலை ஒருவன் எடுத்தா லென்ன ?

இதயத்தை ஒருவன் இறைவனுக்கு அர்ப்பணம் செய்து விட்டால் பிறகு அவன் எதிர்காலத்தைப்பற்றி கவலையுற வேண்டியதில்லை. அடுத்தபிறவி யாதாயினுமாகலாம். மனிதனுக்கு தாழ்ந்தும், மனிதனையும், மனிதனுக்கு உயர்ந்தும் பிறக்கலாம். இப்பிறவியில் ஒருவன் இறைவனுக்குச் சரணடைந்துவிட்டால் மறு பிறவி யாதென்பது கவலையுறும் விஷயமல்ல.

பகவான் கீதையில் "என்னையன்றி வேறொன்றையும் சிந்திக்காமலும், என்னுடன் இணைந்தும் விடாது என்னை பூஜிப்ப வர்களின் யோகக்ஷேமம் என்னுடைய முற்ருய பொறுப்பு" (9—22) என்று சொல்லுகின்ருர். (10)

वटुर्वा गेही वा यतिरपि जटी वा तदितरो
नरो वा यः कश्चिद्भवतु भव किं तेन भवति ।
यदीयं हृत्पद्मं यदि भवदधीनं पशुपते
तदीयस्त्वं शंभो भवसि भवभारं च वहसि ॥ ११ ॥

வடுர்வா கேஹீ வா யதிரபி ஜடீ வா ததிதரோ
நரோ வா ய: கஸ்சித்பவது பவ கிம் தேந பவதி ।
யதீயம் ஹ்ருத்பத்மம் யதி பவததீநம் பஸுபதே
ததீயஸ்த்வம் ஸம்போ பவஸி பவபாரம் ச வஹஸி ॥

भव—பரமசிவனே, **वटुर्वा**—பிரம்மசாரியாகவாவது, **गेही वा**—கிருகஸ்தனுகவாவது, **यतिरपि** – ஸன்னியாஸியாக வாவது, **जटी वा**—சடையை தரிக்கிறவனுகவாவது, **तदितरः**— அதைத் தவிற வேறு, **यः कश्चिन्नरो वा**—ஏதாவது ஒரு மனுஷ்யனுகவாவது, **भवतु**—இருக்கட்டும். **तेन**—அந்தப் பிறவியினுல், **किं भवति**—என்ன பயன் உண்டாகும்? **हे पशुपते**—லோகநாயக, **यदीयं हृत्पद्मं**—எவனுடைய ஹிருதய கமலம், **भवदधीनं यदि**—உனக்கு அதீனமாயிருக்குமானுல், **शम्भो**—ஸுகத்தையுண்டுபண்ணக்கூடிய ஈசுவரா, **तदीयः**— அவனைச் சேர்ந்தவராக, **त्वं**—நீர், **भवसि**—ஆகிறீர். **भवभारं च**—வாழ்க்கைச் சுமையையும், **वहसि**—தாங்குகிறீர்,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஓ பிரபுவே, பிரம்மசாரி (மாணவன்) கிருஹஸ்தன், (இல்லறத்தான்) சந்நியாசி (துறவி) இவைகளில் ஒருவன் எந்த முறையில் அமைந்தாலும் அதனால் பயனென்ன? ஓ சம்போ, ஒருவனது இதயம் நினதானால், நீ அவனதானால் அவனுடைய வாழ்க்கைப் பொறுப்பை நீ ஏற்றுக்கொள்ளுகின்றாய்.

உண்மை பக்தனுக்கு அடுத்த பிறவியைப்போன்று இவ் வாழ்க்கையின் நிலையும் கவலை கொடுப்பதில்லை. பக்திக்கு ஆச்ரமப் பாகுபாடுகள், பிறப்புப் பாகுபாடுகள் இல்லை. அவன் மாணவனாகவும், இல்லறத்தானாகவும் துறவியாகவும் இருக்கலாம். இந்த வாழ்க்கை நிலைகளை அவன் கருதவேண்டியதில்லை.

நாரதர் பக்தி சூத்திரத்தில் 'பக்தர்களிடையே சாதி, படிப்பு, அழகு, குலம், செல்வம், தொழில் முதலிய புறவேற்றுமைகள் இல்லை' என்று காண்கிறது. (11)

गुहायां गेहे वा बहिरपि वने वाद्रिशिखरे
जले वा वह्नौ वा वसतु वसतेः किं वद फलम् ।
सदा यस्यैवान्तःकरणमपि शंभो तव पदे
स्थितं चेद्योगोऽसौ स च परमयोगी स च सुखी ॥ १२ ॥

குஹாயாம் கேஹே வா பஹிரபி வநே வாZத்ரிஶிகரே
ஜலே வா வஹ்னௌ வா வஸது வஸதே: கிம் வத பலம் ।
ஸதா யஸ்யைவாந்த:கரணம்பி ஶம்போ தவ பதே
ஸ்திதம் சேத்யோகோZஸௌ ஸ ச பரமயோகீ ஸ ச ஸுகீ ॥

गुहायां–குஹையிலாவது, **गेहे वा**–கிருஹத்திலாவது, **बहिरपि**–வெளியிலாவது, **वने वा**–காட்டிலாவது, **अद्रिशिखरे**–மலையுச்சியிலாவது, **जले वा**–தண்ணீரிலாவது, **वह्नौ वा**–நெருப்பிலாவது, **वसतु**–வஸிக்கட்டும். **वसतेः**– அப்படி வஸிப்பதினால், **किं फलं**–என்ன பயன்? **वद**–சொல். **हे शंभो**·அழிவற்ற ஸுகத்திற்குக் காரணமான ஈச்வரா, **यस्य**–எந்த புருஷனுடைய, **अंतःकरणमपि**–மனது, **सदा**–எப்பொழுதும், **तव पदे एव**-உன் திருவடியிலேயே, **स्थितं चेत्**–நிலைத்து இருக்குமானால், **असौ योगः**–இதுதான் சிவயோகம், **स च**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அவனேதான், **परमयोगी**-உயர்ந்த யோகீ, **स च सुखी**-அவன் தான் பரமானந்த ஸுகத்தையடைந்தவன்.

குகையிலோ. வீட்டிலோ, வெளியிலோ, கானிலோ, மலை உச்சியிலோ, கனலிலோ, கடலிலோ எங்கு வேண்டுமானாலும் ஒருவன் வசிக்கட்டும். அப்படி வாழ்வதின் பயனென்ன சொல்லட்டும். சம்போ, ஒருவனது மனது உனது திருவடிகளில் அமர்வதுவே யோகம். அவனே தலைசிறந்த யோகி. அவனே பரமசுகி.

ஒருவன் வசிக்கும் நிலையிலும் செய்யும் தவத்திலும் தனிச்சிறப் பொன்றுமில்லை. மனது இறைவனுக்கு பக்தி செய்வதே வேண்டப்படுவது. யோகமென்றால் மனதை நுகத்தடியில் பூட்டுவ தென்பது பொருள், உண்மையான யோகம் மனதை இறைவ னுடன் பூட்டுவதேயாகும். ஒருவன் இறைவனைச்சுற்றியே அமையும்பொழுது அவன் பேரானந்தத்தை அடைகின்றான். (12)

असारे संसारे निजभजनदूरे जडधिया
भ्रमन्तं मामन्धं परमकृपया पातुमुचितम् ।
मदन्यः को दीनस्तव कृपणरक्षातिनिपुण-
स्त्वदन्यः को वा मे त्रिजगति शरण्यः पशुपते ॥ १३ ॥

அஸாரே ஸம்ஸாரே நிஜபஜநதூரே ஜடதியா
ப்ரமந்தம் மாமந்தம் பரமக்ருபயா பாதுமுசிதம் ।
மதந்ய: கோ தீநஸ்தவ க்ருபணரக்ஷாதிநிபுண-
ஸ்த்வதந்ய: கோ வா மே த்ரிஜகதி ஶரண்ய: பஶுபதே ॥

हे पशुपते-ஹே பசுபதே, **असारे**-பயனற்றதான, **निजभजनदूरे**-தன்னை பஜிப்பதினின்று வெகு தூரமாயிருக்கிற **संसारे**-ஸம்ஸாரத்தில், **जडधिया**-மந்தபுத்தியால், **भ्रमन्तं**-சுழலுகிறவனையும், **अन्धं**-விவேகமில்லாதவனையுமுள்ள, **मां**-என்னை, **परमकृपया**-மிகுந்த கிருபையினால், **पातुं उचितं**-காப்பாற்றுவது யோக்கியம். **दीनः**-தீன சுபாவமுடைய **मदन्यः**-என்னைக் காட்டிலும் வேறு ஒருவன், **तव**-உமக்கு, **कः**-எவனிருக்கிறான்? **कृपणरक्षातिनिपुणः**-தீனர்களை ரக்ஷிப்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பதில் மிகுந்த திறமையுள்ள **शरण्यः**-ரக்ஷிக்கக்கூடியவர், **त्रिजगति**-மூவ்வுலகிலும், **त्वदन्यः** உம்மைக் காட்டிலும் வேறொருவர், **मे**-எனக்கு, **को वा**-யாரிருக்கிறார் ?

ஆத்மாக்களின் தலைவ, உண்மை இலட்சியத்தினின்று எட்டியிருக்கும் சாரமற்ற சம்சாரத்தில் மடையனாக உழலும் நான் குருடன். நீ உன் பெருங்கருணையால் என்னைக்காப்பாற்ற வேண்டும். என்னிலும் அறிவற்றோர் யார் உன்னை அணுகப் போகின்றார்கள்? எனக்கு உன்னிலும் சிறந்த நிபுணன் எவன் கிடைக்கப்போகின்றான். மூவ்வுலகங்களிலும் எளியோரைக் காப்பாற்றி சரண் தர வேறு யாருள்ளார்கள்.

இறைவனுக்கும் ஆத்மாவிற்குமுள்ள தொடர்பு அறு கொண்டது இறைவன் பரம ரக்ஷகன், ஆத்மா பாதுகாப்பைத் தேடி நிற்பது. இவ்வுண்மையறியாதவரை அது உலகின் பொய்யான பாதுகாப்புகளை நம்பி நிற்கின்றது. அஞ்ஞானத்தால் ஒளியிழந்து சம்சாரத்தில் உழன்று துன்புறுகின்றது. மனதில் பக்தி புகும்பொழுது அது கடவுளை நாடி நிச்சயமான காப்பைப் பெற்று பிழைக்கின்றது. இறைவனன்றி துணையில்லை என்பதை அறிபவனே பக்தன். மூவ்வுலகங்களிலும் கடவுளன்றி அவனுக்கு துணையில்லை. (13)

प्रभुस्त्वं दीनानां खलु परमबन्धुः पशुपते
प्रमुख्योऽहं तेषामपि किमुत बन्धुत्वमनयोः ।
त्वयैव क्षन्तव्याः शिव मदपराधाश्च सकलाः
प्रयत्नात्कर्तव्यं मदवनमियं बन्धुसरणिः ॥ १४ ॥

ப்ரபுஸ்த்வம் தீநாநாம் கலு பரமபந்து: பஶுபதே
ப்ரமுக்யோऽஹம் தேஷாமபி கிமுத பந்துத்வமநயோ: ।
த்வயைவ க்ஷந்தவ்யா: ஶிவ மதபராதாஶ்ச ஸகலா:
ப்ரயத்நாத் கர்த்தவ்யம் மதவநமியம் பந்துஸரணி: ॥

हे पशुपते-ஹே லோகநாத, **त्वं**-நீர், **प्रभुः**-அதிக ஸாமர்த்தியமுள்ளவர். **दीनानां**-எளியவர்களுக்கு, **परमबन्धुः खलु**-முக்கியபந்து அல்லவா! **तेषामपि**-அவர்களுக்குள், **अहं**-நான், **प्रमुख्यः**-முந்தினவன். **अनयोः**-(இந்த) நம்மிருவருக்கும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உள்ள, बन्धुत्वं-பந்துத்தன்மை விஷயம், किमुत-கேட்ப்பானேன். हे शिव-ஆனந்தவடிவமுள்ள ஈச்வரா, सकलाः मदपराधाः च-என் எல்லா அபராதங்களும், त्वयैव-உன்னாலேயே, क्षन्तव्याः-பொறுக்கக்கூடியவைகள். प्रयत्नात्-முயற்சியினால், मदवनं कर्तव्यं-என்னைக் காப்பாற்ற வேண்டியது. इयं-இதுதான், बन्धुसरणिः-பந்துக்களின்வழி.

ஆத்மாக்களின் இறைவ, எளியவர்களின் பெருந்துணையன்றோ நீ. எளியவர்களில் முதன்மையானவன் நான். இதுவன்றோ நம் உறவு. சிவா, நீதான் என் பிழைகளை யெல்லாம் மன்னிக்கவல்லவன். முயன்றும் என்னைப்பாதுகாக்க வேண்டும். இப்படியன்றோ உறவினர்களும் நடந்து கொள்கின்றார்கள்.

இங்கு பக்தன் இறைவனுக்கும் தனக்கும் உள்ள உறவை விவரிக்கின்றான். எளியவர்களிலும் எளியவனும் அவன் ஒன்று மற்றவன் என்பதை உணர்கின்றான். இறைவன் பிரபுக்களுக்கெல்லாம் பிரபு அவனுக்கு உயர்ந்தவர்கள் இல்லை. பாதுகாப்பை நாடுவது ஆத்மாவிற்கு உரிமை. அதற்குக் காப்பளிக்க வேண்டுவது இறைவனின் கடமை. ஆத்மா செய்த எந்த பாபத்திற்காகவும் இறைவன் தன் கடமையைச் செய்யாமலிருப்பதற்கில்லை. ஆத்மாவின் பாபங்களை மன்னிக்க வேண்டுவது அவர் கடமையாகின்றது. (14)

उपेक्षा नो चेत्किं न हरसि भवद्ध्यानविमुखां
दुराशाभूयिष्ठां विधिलिपिमशक्तो यदि भवान् ।
शिरस्तद्वैधात्रं ननखलु सुवृत्तं पशुपते
कथं वा निर्यत्नं करनखमुखेनैव लुलितम् ॥ १५ ॥

உபேக்ஷா நோ சேத் கிம் ந ஹரஸி பவத் த்யாநவிமுகாம்
துராசா பூயிஷ்டாம் விதிலிபிமசக்தோ யதி பவான் ।
சிரஸ்தத்வை தாத்ரம் நநகலு ஸுவ்ருத்தம் பசுபதே
கதம் வா நிர்யத்நம் கரநகமுகேநைவ லுலிதம் ॥

हे पशुपते-பசுபதே, उपेक्षा-உபேக்ஷை, नोचेत्-இல்லாவிடில், भवद्ध्यानविमुखां-உம்முடைய த்யானத்திற்கு விரோத

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மானதாயும், दुराशाभूयिष्ठां-துராசைகள் நிறைந்ததுமான, विधिलिपिं-பிரம்மாவின் எழுத்தை (தலையெழுத்தை) किं न हरसि-ஏன்போக்கடிக்கவில்லை? भवान्- தாங்கள், अशक्तो यदि-சக்தியற்றவரானால், ननखलु - நகத்தால் கிள்ளமுடியாததாயும், सुवृत्तं-திடமாயுமிருக்கிற, तत्-அந்த, वैधात्रं शिरः-பிரம்மாவின் தலை, निर्यत्नं-முயர்ச்சியில்லாமல், करनखमुखेनैव-கை நகத்தின் நுனியாலேயே, कथं वा-எப்படி, लुलितं-கிள்ளப்பட்டது?

ஆத்மாக்களின் தலைவ, பிரம்மாவின் கட்டளைப்படி நான் உன்னைப் புறக்கணித்து நின்று என் இதயத்தில் கெட்ட சிந்தனைகளே நின்றாலும் நீர் அந்த பிரம்மாவின் கட்டளையையும் அழிக்கக் கூடாதா? என்னைப் புறக்கணிக்கின்றாய் போலும்! உனக்கு வலிவில்லையா? அப்படியானால் பிரம்மாவின் தலையை கட்டை விரலின் நுனியைக்கொண்டு எப்படிக் கிள்ளியெறிந்தீர்?

விதியின் மீது பழியைப் போட்டு இறைவன் வாளா இருப்பதற்கில்லை. அதை சரிசெய்ய அவருக்கு வலிவில்லையா? இறைவன் வலிவிற்கு முன்பு எதுதான் நிற்கும்? இறைவன் அருளிருக்க விதி என்ன செய்யக்கூடும்?

விதியை வகுப்பவர் பிரம்மா என்பது புராணம். அவருக்கு முன்பு ஐந்து தலைகள் இருந்தனவாம். சிவன் அவற்றிலொன்றை கிள்ளி எறிந்தாராம். இந்நிகழ்ச்சியைப் பற்றி பலகதைகள் உண்டு. வராஹபுராணம் :—

பிரம்மா ருத்திரனைப் படைத்து உலகைக் காக்கச் சொன்னார். சிவன் அப்படி பணியாற்றுங்கால் சிவனை பிரம்மா கபாலி என்று நிந்தித்தார். சிவன் கோபமடைந்து பிரம்மாவின் தலைகளில் ஒன்றைக் கிள்ளியெறிந்தார் அந்த தலை ருத்ரனின் கையிலேயே ஒட்டிக்கொண்டதாம். கூர்ம புராணக்கதை வேறானது. ஒரு சமயம் ரிஷிகள் படைப்பின் ஆதி மூலம் எதுவென்று பிரம்மாவைக் கேட்டார்களாம். பிரம்மா பெருமையாக தானே முதல்வனென்று பதிலளித்தார். சிவன் அங்கு தோன்றி, பிரம்மா சொல்வதை மறுத்தாராம். பிரம்மா தன் வாதத்தை சாதித்து நிற்க, ஒரு நெருப்புப்பிழம்பு தோன்றியது. அதில் சிவபெருமான் நின்றார். சிவன் பைரவரை பிரம்மாவின் தலைகளிலொன்றை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வெட்ட உத்திரவிட்டார். அது நிறைவேற்றப்படவும், பிரம்மாவின் பெருமிதம் அழிந்தது.

பிரம்மாவினும் உயர்ந்து நிற்கும் சிவன் பக்தனின் விதியை மாற்ற வல்லவர். பக்தன் தன் பழைய பாபங்களினின்றும் தப்பிவிடக்கோரவில்லை. உண்டான தண்டனைகளை ஏற்றனுபவிக்கத் தயாராக உள்ளான். அவன் பழைய வாசனைகளால் இதயத்திலமரும் தீய சிந்தனைகளையும், ஈசனை நாடாத போக்கையும் மாற்ற வேண்டுகின்றான். (15)

विरिञ्चिर्दीर्घायुर्भवतु भवता तत्परशिर-
श्चतुष्कं संरक्ष्यं स खलु भुवि दैन्यं लिखितवान् ।
विचारः को वा मां विशद कृपया पाति शिव ते
कटाक्षव्यापारः स्वयमपि च दीनावनपरः ॥ १६ ॥

விரிஞ்சிர் தீர்காயுர் பவது பவதா தத்பரஶிர-
ஶ்சதுஷ்கம் ஸம்ரக்ஷ்யம் ஸ கலு புவி தைந்யம் லிகிதவான் ।
விசார: கோ வா மாம் விஶத க்ருபயா பாதி ஶிவ தே
கடாக்ஷவ்யாபார: ஸ்வயமபி ச தீநாவநபர: ॥

हे विशद-ஹே நிர்மலஸ்வரூப, **विरिंचिः**-பிரம்மாவானவர் **दीर्घायुर्भवतु**-நீண்ட ஆயுளுடையவராயிருக்கட்டும். **भवता**-உம்மால், **तत्परशिरश्चतुष्कं**-அதைக்காட்டிலும் வேறு நான்கு தலைகளும், **संरक्ष्यं** - காப்பாற்றக்கூடியவைகள், **सः**-அந்த பிரம்மா, **भुवि**-பூலோகத்தில், **दैन्यं**-ஏழ்மையை, **लिखितवान् खलु**-எழுதிவிட்டார் அல்லவா! **हे शिव** - மங்களகரமான மஹேச்வரா, **दीनावनपरः**-ஏழையைக் காப்பாற்றக்கூடிய, **ते**-உம்முடைய, **कटाक्षव्यापारः** - கடைக்கண் பார்வை, **स्वयमपि च**-தானாகவே, **कृपया**-கருணையால், **मां**-என்னை, **पाति**-காப்பாற்றுகிறது **को वा विचारः**-அதைப்பற்றி என்ன கவலை?

புனிதமான சிவபெருமானே! பிரம்மன் பலகாலம் வாழட்டும். நீ அவரது எஞ்சியுள்ள நான்கு தலைகளைக் காப்பாற்றுவாயாக. அவர் உலகில் எனக்கு வறுமையையே விதித்துள்ளார். எளிய

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வர்களையே நோக்கி நிற்கும் உன் பார்வை, தானாகவே என்னைக் காப்பாற்ற இருக்க எனக்கு கவலையிருக்க நியாயமென்ன?

பிரம்மா எவருக்கு வறுமையை விதித்துள்ளாரோ அவர். செய்நன்றியறிபவர்களாக இருக்க வேண்டும். எளியவனுயிருப் பவனுக்கு உதவிக்கு கடவுளை நாடியிருப்பது எளிது. தீனரக்ஷக னாகவும், தீனபந்துவாகவும் இறைவன் எளியவர்களைக் காப்பாற்ற இருக்கின்றான்.

பக்தன் பிரம்மா நீண்டு வாழவேண்டுமென்றும், அவர் நான்கு தலைகளுக்கும் பழுதுவரக் கூடாதென்றும் வாழ்த்து கின்றான். (16)

फलाद्वा पुण्यानां मयि करुणया वा त्वयि विभो
प्रसन्नेऽपि स्वामिन् भवदमलपादाब्जयुगलम् ।
कथं पश्येयं मां स्थगयति नमःसंभ्रमजुषां
निलिम्पानां श्रेणिर्निजकनकमाणिक्यमकुटैः ॥ १७ ॥

பலாத்வா புண்யாநாம் மயி கருணயா வா த்வயி விபோ
ப்ரஸந்நேऽபி ஸ்வாமின் பவதமலபாதாப்ஜயுகளம் ।
கதம் பஶ்யேயம் மாம் ஸ்தகயதி நம: ஸம்ப்ரமஜுஷாம்
நிலிம்பாநாம் ஶ்ரேணிர் நிஜகநக மாணிக்ய மகுடை: ॥

हे विभो-ஸர்வ வியாபக, **स्वामिन्**-லோகநாத ஈச்வரா, **पुण्यानां**-புண்யங்களின், **फलाद्वा**-பலத்தாலாவது, **मयि**-என்னிடம், **करुणया वा**-கருணையினுலாவது, **त्वयि**-தாங்கள், **प्रसन्नेपि**-அனுக்ரகம் செய்யக்கூடியவராயிருந்தபோதிலும் **भवदमलपादाब्जयुगलं**-பரிசுத்தமான தமது இரு பாதாரவிந்தங்களை, **अहं**-நான், **कथं पश्येयं**-எப்படிப் பார்ப்பேன்? **नमस्संभ्रमजुषां**-வணங்குவதில் பரபரப்புடன் கூடிய, **निलिंपानां**-தேவர்களுடைய, **श्रेणिः**-ஸமூகமானது, **निजकनकमाणिक्यमकुटैः**-தங்கள் மாணிக்கம் பதித்த தங்கக் கிரீடங்களால், **मां**-என்னை, **स्थगयति**-மறைக்கிறது.

எங்கும் நிறைந்துள்ள தலைவ! என் நற்செயல்களின் விளைவாகவோ, தாங்கள் என் மீது கொள்ளும் கருணையாலேயோ தங்கள் குற்றமற்ற தாமரைத் திருவடிகளை நான் பார்க்க தாங்கள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இங்குள்ளீர்கள். ஆனால் தங்களை வணங்க உந்திவரும் தேவர்களின் கிரீட ஒளியால் நான் தங்கள் திருவடிகளைப் பார்க்க முடியவில்லை.

பக்தன் பழைய புண்ணியத்தாலும், இறைவனின் திருவருளாலும் அவன் முன்னிலைக்கு வருதல் கூடும். ஆனால் பக்தன் திருவடிகளைப் பார்க்கக்கூடுமென்னும் உறுதியில்லை. பல தேவர்கள் சுற்றிநின்று கொண்டு அவருக்கு வணக்கம் செலுத்துகின்றார்கள். தேவர்களின் கும்பலும், அவர்களது மணிக்கிரீடங்களின் ஒளியும் உள்ளது.

சிவனே தலையாய தேவன், தேவர்களுக்கு தேவன் என்பது அலங்கரித்துச் சொல்லப்படுகிறது. (17)

त्वमेको लोकानां परमफलदो दिव्यपदवीं
वहन्तस्त्वन्मूलां पुनरपि भजन्ते हरिमुखाः ।
कियद्वा दाक्षिण्यं तव शिव मदाशा च कियती
कदा वा मद्रक्षां वहसि करुणापूरितदृशा ॥ १८ ॥

த்வமேகோ லோகாநாம் பரமபலதோ திவ்யபதவீம்
வஹந்தஸ்த்வந்மூலாம் புநரபி பஜந்தே ஹரிமுகா: ।
கியத்வா தாக்ஷிண்யம் தவ ஶிவ மதாஶா ச கியதீ
கதா வா மத்ரக்ஷாம் வஹஸி கருணாபூரிதத்ருஶா ॥

हे शिव-ஸுகஸ்வரூப, **लोकानां**-உலகங்களுக்கு, **परमफलदः**-மோக்ஷம் முதலிய உயர்ந்த பலங்களையளிக்கக் கூடியவர், **त्वमेकः**-தாங்கள் ஒருவர்தான். **हरिमुखाः**-விஷ்ணு முதலிய தேவதைகள், **त्वन्मूलां**-உன்காரணமான, **दिव्यपदवीं**-உயர்ந்த ஸ்தானத்தை, **वहन्तः**-அடைந்தும், **पुनरपि**-மறுபடியும், **भजन्ते**-ஸேவிக்கிறார்கள். **तव**-உமக்கு, **कियद्वा दाक्षिण्यं**-எவ்வளவுதான் தாக்ஷிண்யம் (பிறர் கருத்துப்போல் நடந்துகொள்வது)? **मदाशा च**-என் ஆசைதான் **कियती**-எவ்வளவு? **कदा वा**-எப்பொழுதுதான், **करुणापूरितदृशा**-கருணைநிரம்பிய பார்வையால், **मद्रक्षां वहसि**-என்னைக் காப்பாற்றுவாய்?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உள்ளவைகளுக்கெல்லாம் நன்மை பயப்பவனே! சிவனே! உங்களால் உள்ள தெய்வீக நிலையைப்பற்றி விஷ்ணு முதலான தேவர்கள் அவர்களது நிலைக்கு பழுதுவராமலிருக்க உங்களை வேண்டுகின்றார்கள். உன் அருள்தான் என்னே! என் ஆசையும் எவ்வளவு பெரியது! கருணை நிறைந்த நின் கண்களால் என்னை எப்பொழுது காப்பாற்ற நிற்கின்றாய்?

சிவனையண்டியே பல தேவர்களும் பெருமையை அடைகின்றார்கள். அவர்கள் தங்கள் பயன்களைக் காப்பாற்றவும் வளர்க்கவும் அவனை வேண்டுகின்றார்கள். எல்லோருக்கும் நன்மை விளைவிப்பவன் சிவனே. அருளிற்கும் களன் அவனே. தன்மீது சிவன் கருணைபொழிய வேண்டுமென்று பக்தன் வேண்டுகின்றான்.

दुराशाभूयिष्ठे दुरधिपगृहद्वारघटके
दुरन्ते संसारे दुरितनिलये दुःखजनके ।
मदायासं किं न व्यपनयसि कस्योपकृतये
वदेयं प्रीतिश्चेत्तव शिव कृतार्थाः खलु वयम् ॥ १९ ॥

துராஶா பூயிஷ்டே துரதிபக்ருஹத்வார கடகே
துரந்தே ஸம்ஸாரே துரிதநிலயே து:க்கஜநகே ।
மதாயாஸம் கிம் ந வ்யபநயஸி கஸ்யோபக்ருதயே
வதேயம் ப்ரீதிச்சேத் தவ ஶிவ க்ருதார்த்தா: கலு வயம் ॥

हे शिव-மங்களரூபியே, **दुराशाभूयिष्ठे**-அதிக துராசைகளை உடையதாயும், **दुरधिपगृहद्वारघटके** - துஷ்ட பிரபுக்களின் வீட்டுவாயிற்படியை அடையக்கூடியதாயும், **दुरन्ते**-முடிவற்றதும், **दुरितनिलये**-பாபத்திற்கு இருப்பிடமானதும், **दुःखजनके**-துக்கத்தையுண்டுபண்ணக்கூடியதுமான, **संसारे**-ஸம்ஸாரத்தில், **कस्योपकृतये**-பிரம்மாவிற்கு உதவிசெய்வதற்காக, **मदायासं**-என் கஷ்டத்தை, **न व्यपनयसि किं**-போக்கவில்லையா என்ன? **वद**-சொல்லும், **तव इयं प्रीतिश्चेत्** -உமக்கு இந்த ப்ரியமிருக்குமானால், **वयं**-நாங்கள், **कृतार्थाः खलु**-பலனடைந்தவர்களாவோம் அல்லவா!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சம்சாரத்தின் தொல்லைகளால் ஆசைகள் நிறைந்து தீயோர்களின் வாயில்களுக்கு—பாபத்தின் நிலைக்களமும், துன்பத்தின் பிறப்பிடமுமாகும் — ஓயாது சென்று நான் அலைவதை நீ பிரம்மாவிற்கு உதவுவதற்காக அழிக்காது விடுகின்றாய் போலும்! அதுவே நின் திருவுள்ளமானால் நானும் அதைத் திருவருளாகக் கொள்கின்றேன்.

ஒருவனது தீயபான்மையும், கெட்ட போக்குகளும் இறைவன் அருளாலேயே மாற்றமடையும், இறைவனால் மாற்றப்படக் கூடாதது ஒன்றுமில்லை. இறைவன் திருவருளிற்கு முன்பு வினை நிற்பதில்லை.

தீவினையின் பயனாகவே கொடுங்கோல் மன்னரின் ஈகையை நோக்கி அவனிடம் செல்லுதலும் ஏற்படுகின்றது. *(19)*

सदा मोहाटव्यां चरति युवतीनां कुचगिरौ
नटत्याशाशाखास्वटति झटिति स्वैरमभितः ।
कपालिन् भिक्षो मे हृदयकपिमत्यन्तचपलं
दृढं भक्त्या बद्ध्वा शिव भवदधीनं कुरु विभो ॥ २० ॥

ஸதா மோஹாடவ்யாம் சரதி யுவதீநாம் குசகிரௌ
நடத்யாஶாஶாகாஸ்வடதி ஜடிதி ஸ்வைரமபித: ।
கபாலின் பிக்ஷோ மே ஹ்ருதயகபிமத்யந்த சபலம்
த்ருடம் பக்த்யா பத்வா ஶிவ பவததீநம் குரு விபோ ॥

विभो-ஸர்வவியாபக, **शिव**-ஸுகஸ்வரூப, **भो कपालिन्**-கபாலத்துடன் கூடியவரே, **भिक्षो**-பிக்ஷாடனம் செய்கிறவரே, **सदा**-எப்பொழுதும், **मोहाटव्यां**-அஞ்ஞானமாகிய காட்டில் (**हृदयकपिः**-மனமாகிற குரங்கு,) **चरति**-ஸஞ்சரிக்கிறது. **युवतीनां**-யௌவனஸ்திரீகளின், **कुचगिरौ**-ஸ்தனங்களாகிற மலையில், **नटति**-நர்த்தனம் செய்கிறது. **आशाशाखासु**-மனைவி மக்களிடம் ஆசையாகிற கிளைகளில், **स्वैरं**-இஷ்டப்படி, **अभितः**-நாலு பக்கத்திலும், **झटिति**-சீக்கிரம், **अटति**-ஸஞ்சரிக்கிறது. **अत्यन्तचपलं**-அதிக சஞ்சல ஸ்வபாவமுள்ள, **मे**-என்னுடைய, **हृदयकपिं**-மனமாகிற குரங்கை, **दृढं**-கெட்டி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யாய், भक्त्या–பக்தியாகிற கயிறுல், बद्ध्वा–கட்டி, भवदधीनं–உமக்கு ஸ்வாதீனமாக, कुरु–செய்யும்.

சிவனே! பிச்சைப்பாத்திரமாக மண்டையோட்டை உடையவனே! எங்கும் நிறைந்த ஒருவனே! ஓ பிச்சைக்காரனே, என்னுடைய குரங்கு மனது, மாயைக்காட்டில் திரிகின்றது. பெண்கள் மார்பில் குதிக்கின்றது. மரத்தின் ஒரு கிளையினின்று மற்றொன்றிற்கு விடாது குதித்துத் தாவி அலைகின்றது அதையே நான் உனக்குப் பிச்சையாகக்கொடுக்கின்றேன். அதை ஏற்றுக் கொண்டு பக்தியென்னும் கயிற்றுல் பிணைத்து அதை உன் ஆதீனத்தில் வைத்துக்கொள்வாயாக!

இங்கு மனது குரங்கிற்கு உவமிக்கப்படுகின்றது. டார்வீன் சொல்படி குரங்கு முற்றியே மனிதன் உண்டாவனென்பது உண்மையோ அன்றோ, மனிதன் மனதிற்கும் குரங்கின் செய்கைக்கும் ஒருமைப்பாடு நிச்சயமாக இருக்கின்றது. உணர்ச்சிகளால் உந்தப்பட்டும் ஆசைகளால் விரட்டப்பட்டும், மனது ஒவ்வொன்றுகப் பற்றியோடுகின்றது. அது அமைதியற்று சுழன்று நிற்கின்றது.

மனதை ஈசுவர பக்தியினுல் அடக்கியாளலாம். சிவன் திருவிளையாடல்களில் அவர் மண்டையோட்டை ஏந்தி பிச்சைக்குச் செல்வதும் ஒன்று இந்தப் பாவில் மனமென்னும் குரங்கையே பிச்சையாகக்கொடுக்கின்றுர். அவர் அக்குரங்கை பக்தியென்னும் கயிற்றுல் கட்டி, அதை அடக்கி வைத்துக் கொள்வாராயின் அவருக்கு வேண்டிய பிச்சை கிடைக்கும். (20)

धृतिस्तम्भाधारां दृढगुणनिबद्धां सगमनां
विचित्रां पद्माढ्यां प्रतिदिवससन्मार्गघटिताम् ।
स्मरारे मच्चेतःस्फुटपटकुटीं प्राप्य विशदां
जय स्वामिन् शक्त्या सह शिव गणैः सेवित विभो ॥

த்ருதிஸ்தம்பாதாராம் த்ருடகுணநிபத்தாம் ஸகமநாம்
விசித்ராம் பத்மாட்யாம் ப்ரதிதிவஸஸந்மார்க்ககடிதாம்
ஸ்மராரே மச்சேதஃஸ்புடபடகுடீம் ப்ராப்ய விசதாம்
ஜய ஸ்வாமிந் சக்த்யா ஸஹ சிவ கணை: ஸேவித விபோ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

स्मरारे-மன்மதனை எரித்தவரே, **विभो**-ஸர்வவியாபக, **शिव**-ஸுகஸ்வரூப, **स्वामिन्**-லோகநாத, **गणैः सेवित**-பிரமத கணங்களால் ஸேவிக்கப்பட்டவரே, **धृतिस्तम्भाधारां**-தைரியமாகிற ஸ்தம்பத்தை ஆதாரமாக உடையதாயும், **दृढगुण-निबद्धां**-உறுதியான குணங்களால், குணங்களாலுண்டான சரீரத்தால் (உறுதியான கயிறுகளால்) கட்டப்பட்டதாயும், **सगमनां**-பலவேறு இடங்களுக்குப் போகக்கூடியதாயும், **विचित्रां**-நாநாவித வாஸனையுடன் கூடியதாயும் (பலவர்ணங்களுடன் கூடியதும்) **पद्माढ्यां**-லக்ஷ்மீ பிரார்த்தனையுடன், பண ஆசையுடன் கூடியதும் (தாமரைபோன்ற சித்திரத்துடன் கூடியதும்), **प्रतिदिवससन्मार्गघटितां**-தினந்தோறும் ஆத்மவிசார வழியில் ஈடுபட்டதும் (ராஜமார்க்கங்களில் கட்டப்பட்டதும்), **चिरशदां**-நிர்பலமானதுமான, **मच्चेतस्स्फुट-पटकुटीं**-என் மனமாகிற பிரகாசமான துணியால் செய்யப்பட்ட சிறுகுடிசையை, **शक्त्या सह**-அம்பிகையுடன்கூட, **प्राप्य**-அடைந்து, **जय**-பிரகாசிப்பாய். (இந்த சுலோகத்தில் மனதிற்கும் துணியால் செய்யப்பட்ட சிறுகுடிசைக்கும் சில இடங்களில் இரண்டு விதமான அர்த்தம் கூறப்பட்டது.)

மன்மதனையழித்தவனே! இறைவா! சிவனே, உன்னைத் தேவர்களும் பணிகின்றார்கள். எங்கும் நிறைந்தவனே, உமையுடன் என் மனதென்னும் கூடாரத்தில் குடிபுகு. அதன் நடுமரம் உறுதியானது நல்ல சீலங்களென்னும் கயிறுகளால் அது இறுக கட்டப்பட்டுள்ளது. அதை எங்கும் எடுத்துச்செல்லலாம். அதில் பல நிறங்களும் உள்ளன. தாமரைப்பூக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. தினமும் நெடுவழிகளில் அதை எடுத்துச்செல்லலாம். வெற்றி உனக்கு உண்டாகட்டும்.

இங்கு மனது ஒருவலுவாய சௌகரியங்கள் நிறைந்த கூடாரத்திற்கு உவமிக்கப்படுகின்றது. தீமையை ஒழிக்க படையெடுக்கும்பொழுது இதை உபயோகப்படுத்திக்கொள்ள இறைவன் வேண்டப்படுகிறார். உமையுடன் இறைவன் அதில் குடிபுகவுமே தீமையை அழிப்பது உறுதியாகின்றது மனமென்னும் கூடாரத்தைப் பகைவர்கள் கைப்பற்றிக்கொள்ளா வண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும். (21)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

प्रलोभाद्यैरर्थाहरणपरतन्त्रो धनिगृहे
प्रवेशोद्युक्तः सन् भ्रमति बहुधा तस्करपते ।
इमं चेतश्चोरं कथमिह सहे शंकर विभो
तवाधीनं कृत्वा मयि निरपराधे कुरु कृपाम् ॥ २२ ॥

ப்ரலோபாத்யைரர்த்தாஹரணபரதந்த்ரோ தநிக்ருஹே
ப்ரவேஶோத்யுக்த: ஸன் ப்ரமதி பஹுதா தஸ்கரபதே ।
இமம் சேதச்சோரம் கதமிஹ ஸஹே ஶங்கர விபோ
தவாதீநம் க்ருத்வா மயி நிரபராதே குரு க்ருபாம் ॥

शंकर–க்ஷேமத்தை உண்டுபண்ணுகிறவரே, विभो–வியாபக, तस्करपते-திருடர்களுக்கு அரசே (இது நிந்தா ஸ்துதி), प्रलोभाद्यैः–ஆசைகாட்டுவது முதலியவற்றால், अर्थाहरणपरतन्त्रः–பொருள்பறிப்பதிலேயே ஊக்கம்கொண்டு (என் மனமாகிய திருடன்), धनिगृहे–பொருளுள்ளவர்கள் வீட்டில் प्रवेशोद्युक्तस्सन् –உள்ளே போவதில் முயற்சித்துக்கொண்டு, बहुधा–அனேகவிதமாய், भ्रमति–சுற்றுகிறான். इमं चेतश्चोरं–இந்த மனமாகிய திருடனை, इह–இப்பொழுது, कथं–எப்படி, सहे –பொறுத்துக்கொள்ளுவேன் ? तवाधीनं कृत्वा–உமக்கு ஸ்வாதீனமாய்ச் செய்து, निरपराधे- அபராதமில்லாத, मयि–என்னிடத்தில், कृपां–கருணையை, कुरु–செய்யும்.

ஓ சங்கரா ! முதலாகும் கள்வா ! எங்கும் நிறைந்துள்ளவனே என் மனமென்னும் கள்வன் பேராசையால் தூண்டப்பட்டு, பிறர் வீடுகளில் புகும் தொழிலில் அலைகின்றான். அவனை அடக்கி உன் வசப்படுத்திக்கொண்டு குற்றமற்ற என்மீது கருணை பொழிவாயாக !

வஞ்சனை, பித்தலாட்டம் இவைகளையே கையாளும் திருடனைப் போன்று மனது அமைகின்றது. விருப்புகள், வெறுப்புகள், பேராசை, பற்றுள்ளம், கோபம் முதலிய மனோ நிகழ்ச்சிகளும் திருடனுடன் உவமிக்கப்படுகின்றன. நல்லது கெட்டது அறியும் ஞானத்தை அவை பலவும் திருடவே செய்கின்றன. இறைவனன்றி வேறு யார் மனதை அடக்கமுடியும்? அவர் திருடர்களுக்கும் தலைவன் (1) அவரே உலகிற்கெல்லாம் தலைவர் (2) அவர்

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பக்தர்களின் இதயத்தை திருடுகின்றார். வேதங்கள் ருத்ர சிவனை திருடர்களுக்குத் தலைவன் என்று வணங்குகிறது (தஸ்கராணாம் பதயே நம:) (22)

करोमि त्वत्पूजां सपदि सुखदो मे भव विभो
विधित्वं विष्णुत्वं दिशसि खलु तस्याः फलमिति ।
पुनश्च त्वां द्रष्टुं दिवि भुवि वहन् पक्षिमृगता-
मदृष्ट्वा तत्खेदं कथमिह सहे शंकरविभो ॥ २३ ॥

கரோமி த்வத்பூஜாம் ஸபதி ஸுகதோ மே பவ விபோ
விதித்வம் விஷ்ணுத்வம் திஶஸி கலு தஸ்யா: பலமிதி ।
புநச்ச த்வாம் தரஷ்டும் திவி புவி வஹன் பக்ஷிம்ருகதாம்
அத்ருஷ்ட்வா தத்கேதம் கதமிஹ ஸஹே ஶங்கரவிபோ ॥

शंकर-சங்கர, विभो-வியாபக, त्वत्पूजां-உனக்கு பூஜையை, करोमि-செய்கிறேன். सपदि-உடனே, मे-எனக்கு सुखदः-அழிவற்ற சுகத்தை கொடுப்பவராக भव-இரு. तस्याः-அந்த பூஜைக்கு, विधित्वं-பிரம்மஸ்தானமும், विष्णुत्वं-விஷ்ணுஸ்தானமும், फलमिति-பலமென்று, दिशसि खलु-கொடுக்கிறீர் அல்லவா? पुनः-மறுபடியும், त्वां-உம்மை, द्रष्टुं-பார்ப்பதற்கு, दिवि-ஆகாயத்திலும், भुवि च-பூமியிலும் पक्षिमृगतां-பறவை (அன்னம்) மிருகம் (பன்றி) இவைகளின் தன்மையை, वहन्-அடைகிறவனாக, (त्वां-உம்மை) अदृष्ट्वा-காணாமல், तत्खेदं-அந்த துக்கத்தை, इह-இவ்வுலகில், कथं-எப்படி, सहे-பொறுத்துக்கொள்ளுவேன்.

ஓ சங்கரா! எங்கும் பரந்து நிற்பவனே! நான் உன்னை வணங்குகின்றேன். எனக்கு உடனே பேரானந்தத்தை அருளுவாயாக! என் தவப்பயனாக நீ எனக்கு பிரம்மா, விஷ்ணு இவர்களின் நிலையைக்கொடுத்தால், நான் பறவையாகவும், மிருகமாகவும் உருவெடுத்து உன்னை மூவுலகங்களிலும் தேடி காணாது வருந்தும் நிலை உண்டாகும். அந்த வருத்தத்தை நான் எவ்வாறு ஏற்பேன்,

தன் பக்தியின் பயனாக பக்தன் மோக்ஷத்தையே வேண்டுகின்றான். அதற்கு குறைவானதெதுவும் அவனுக்கு திருப்தியைக்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கொடுக்காது. உயர் தேவர்களாகும் விஷ்ணு, பிரம்மாக்களின் நிலையும் அவனுக்குத் திருப்தியைக் கொடுப்பதில்லை.

சிவனது அடிமுடிகளைத்தேடி, பிரம்மனும் விஷ்ணுவும் அலைந்து காணாது நின்ற கதையே இங்கு குறிக்கப்படுகின்றது. பிரம்மாவும், விஷ்ணுவும் ஒரு சமயம் தங்களுடைய உயர் நிலையைப் பற்றி விவாதித்தார்கள். சிவபெருமான் அவர்களுக்கு முன் ஒரு சோதிக்கம்பமாகத் தோன்றினர் அதற்கு அடியும் முடியும் காணவில்லை. பிரம்மாவும் விஷ்ணுவும் அந்த லிங்கத்தின் எல்லைகளைக் கண்டு வருவதாக தங்களுக்குள் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அதன்படி யார் அதில் வெற்றிபெறுகின்றார் களோ அவரே உயர்ந்தவரென்றும் கொண்டார்கள். விஷ்ணு ஒரு வராஹத்தின் (பன்றி) உருவை எடுத்துக்கொண்டு பாதாளத் திற்குக் குடைந்து சென்றார். பிரம்மா ஹம்ஸத்தின் உருவத்தில் மேலே பறந்து முடியைக் காண விரைந்தார். இருவரும் தம் சபதத்தில் வெற்றி பெறவில்லை. தங்கள் பெருமிதம் தணிய, தேவாதி தேவனாகும் சிவனையே முதற்கடவுளாக ஏற்றுக் கொண்டார்கள். திருவண்ணாமலையிலுள்ள அருணாசலமலையே சிவபெருமான் சோதிலிங்கமாக திருமாலுக்கும் பிரம்மாவுக்கும் தோற்றம் கொடுத்த இடம் என்று பரம்பரை கொள்கின்றது.

சிவானந்தலஹரியின் பல சுலோகங்களில் சங்கரர், பிரம்ம விஷ்ணுக்களால் சிவ பெருமானின் பெருமை அளந்தறியக் கூடாததைக் குறிக்கின்றார். (23)

कदा वा कैलासे कनकमणिसौधे सह गणै-
र्वसन् शंभोरग्रे स्फुटघटितमूर्धाञ्जलिपुटः ।
विभो साम्ब स्वामिन् परमशिव पाहीति निगद-
न्विधातॄणां कल्पान् क्षणमिव विनेष्यामि सुखतः ॥ २४ ॥

கதா வா கைலாஸே கநகமணிஸௌதே ஸஹ கணை:
வஸன் ஶம்போரக்ரே ஸ்புடகடிதமூர்தாஞ்ஜலிபுட: ।
விபோ ஸாம்ப ஸ்வாமின் பரமஶிவ பாஹீதி நிகதன்
விதாத்ரூணாம் கல்பான் க்ஷணமிவ விநேஷ்யாமி ஸுகத: ॥

कैलासे—கைலாஸபர்வதத்தில், **कनकमणिसौधे**—தங்கம் ரத்னம் முதலியவைகளால் கட்டப்பட்ட உப்பரிகையில்,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

गणैः सह-பிரமத கணங்களுடன், वसन् -வஸித்துக்கொண்டு शंभोरग्रे-ஈசுவரனுக்கு முன்னல், स्फुटघटितमूर्धाञ्जलिपुटः-நன்கு தெரியும்படி சிரஸ்ஸில் அஞ்ஜலிபந்தம் செய்துகொண்டு, भो विभो-ஸர்வவ்யாபக, साम्ब-அம்பிகையுடன்கூடியவரே स्वामिन् -லோகநாத, परम-உயர்ந்தவரே, शिव-மங்கள மூர்த்தியே, पाहि-காப்பாற்று, इति-என்று, निगदन्-சொல்லிக்கொண்டு, विधातॄणां कल्पान् அநேகம் பிரம்ம கல்பங்களை, सुखतः-சுகமாக, क्षणमिव-ஒருக்ஷணம்போல், कदा वा-எப்பொழுதுதான், क्षेप्यामि-போக்குவேனே ?

நான் எப்பொழுது கைலாசத்தில் வசிப்பேன். தங்கத்தாலும் பச்சைக்கற்களாலும் அலங்கரிக்கப்பட்ட கூடத்தில் தேவகணங்களால் சூழப்பட்டிருக்கும் சிவபெருமானை, இருகரமும் உச்சி மீது குவியப்பணிந்து 'எங்கும் நிறைந்தவனே உமையொருபாகா! இறைவா! பரமாகிய சிவனே! என்னைக்காப்பாற்று' என்று கூவி பிரம்ம யுகங்களும் கணமாக எப்பொழுது காலம் கழிப்பேன் ?

இங்கு சிவபெருமானின் நிலையிடமாகிய கைலாயத்தின் வருணனை உள்ளது. அங்கு காலத்தை அளக்கமுடியாத முக்காலமே நிலையுள்ளது. ஒருவன் சிவனை வணங்கும்பொழுது அவனுக்கு கால உணர்ச்சி உண்டாவதில்லை. (24)

स्तवैर्ब्रह्मादीनां जयजयवचोभिर्नियमिनां
गणानां केलीभिर्मदकलमहोक्षस्य ककुदि ।
स्थितं नीलग्रीवं त्रिनयनमुमाश्लिष्टवपुषं
कदा त्वां पश्येयं करधृतमृगं खण्डपरशुम् ॥ २५ ॥

ஸ்தவைர்ப்ரஹ்மாதீநாம் ஜயஜயவசோபிர் நியமிநாம்
கணநாம் கேலீபிர்மதகலமஹோக்ஷஸ்ய ககுதி ।
ஸ்திதம் நீலக்ரீவம் த்ரிநயநமுமாச்லிஷ்டவபுஷம்
கதா த்வாம் பச்யேயம் கரத்ருதம்ருகம்
கண்டபரசும் ॥

ब्रह्मादीनां-பிரம்மாதி தேவர்களுடைய, स्तवैः-துதிகளாலும், नियमिनां-ரிஷிகளுடைய, जयजयवचोभिः-ஜய விஜய

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சப்தங்களாலும், **गणानां**-பிரமதகணங்களின், **केलीभिः**-கோலாஹலங்களுடனும்கூடி, **मदकलमहोक्षस्य**-மதத்தினால் அழகான உயர்ந்த விருஷபத்தின், **ककुदि**-திமிழ் பிரதேசத்தில், **स्थितं**-இருப்பவரும், **नीलग्रीवं**-கருமையான கழுத்துடன் கூடியவரும், **त्रिनयनं**-முக்கண்ணராயும், **उमाश्लिष्टवपुषं**-பார்வதியுடன் கூடிய சரீரத்தையுடையவரும், **करधृतमृगं**-மானைக்கையிலேந்தியவரும், **खण्डपरशुं**-பாதிகோடரியுடையவருமான, **त्वां**-உம்மை, **कदा**-எப்பொழுது, **पश्येयं**-பார்ப்பேன்.

நீலகண்டமும், முக்கண்ணும் உமையால் தழுவப்பட்ட உடலும், கைகளில் மானும், கோடாலியும் கொண்டு பெரிய ரிஷபம் (எருது) முதுகில் சவாரி வர, பிரம்மா முதலிய தேவர்கள் உன் வாழ்த்துகளைப்பாட துறவிகள் போற்றி, போற்றி என்று வாழ்த்த, தேவகணங்கள் நர்த்தனமாடவுள்ள உன் உருவை நான் எப்பொழுது காண்பேன்.

பக்தன் கைலாய தரிசனத்தை வேண்டுகின்றான். நீலகண்டம், மூன்று கண்கள், அர்த்தநாரி உருவம், இச்சிறப்புகள் இங்கு குறிக்கப்படுகின்றன. இவை மூன்றும் எல்லையற்ற கருணையை விளக்குவன. கைலாயத்தில் துக்கம் என்பதில்லை. எல்லாம் மகிழ்ச்சியும் ஆனந்தமும்தான். சிவன் முன்பு பல உயிர்களும் தம் நிலைகளை மறந்து தமது தனித்தன்மையை இழக்கின்றார்கள். சிவனைப்புகழ்ந்து பாடும்பொழுதும் மெய்மறந்து, ஆடும்பொழுதும் அவர்கள் தங்களையே மறந்துவிடுகின்றார்கள். பெருங்கருணையின் அநுபவமே கைலாயம். (25)

कदा वा त्वां दृष्ट्वा गिरिश तव भव्याङ्घ्रियुगलं
गृहीत्वा हस्ताभ्यां शिरसि नयने वक्षसि वहन् ।
समाश्लिष्याघ्राय स्फुटजलजगन्धान् परिमला-
नलभ्यां ब्रह्माद्यैर्मुदमनुभविष्यामि हृदये ॥ २६ ॥

கதா வா த்வாம் த்ருஷ்ட்வா கிரிஶ தவ பவ்யாங்க்ரியுகளம்
க்ருஹீத்வா ஹஸ்தாப்யாம் ஶிரஸி நயனே வக்ஷஸி
வஹன் ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸமாச்லிஷ்யாக்ராய ஸ்புடஜலஜகந்தான் பரிமளான்
அலப்யாம் ப்ரஹ்மாத்யைர்முதமநுபவிஷ்யாமி
ஹ்ருதயே ॥

गिरिश-கைலாஸ பர்வதத்திலிருக்கிற ஈச்வர, **कदा वा**-எப்பொழுது, **त्वां दृष्ट्वा**-உம்மைப் பார்த்து, **तव**-உம்முடைய, **भव्यांघ्रियुगलं**-நன்மைதரும் இருபாதகமலங்களை, **हस्ताभ्यां**-இருகைகளாலும், **गृहीत्वा**-பிடித்துக்கொண்டு, **शिरसि**-சிரஸ்ஸிலும், **नयने**-இருகண்களிலும், **वक्षसि**-மார்பிலும், **वहन्**-வைத்துக்கொண்டும், **समाश्लिष्य** அணைத்துகொண்டும் **स्फुटजलजगन्धान्** -மலர்ந்த தாமரை மலரின் வாஸனைபோன்ற **परिमलान्** -வாஸனைகளை, **आघ्राय**-முகர்ந்தும், **ब्रह्माद्यैः**-பிரம்மாதி தேவர்களாலும், **अलभ्यां**-அடையமுடியாத, **मुदं**-ஸந்தோஷத்தை, **हृदये**-மனதில், **अनुभविष्यामि**-அனுபவிப்பேன்.

மலையில் வாழ்பவனே உன்னைப்பார்த்துக்கொண்டும் உன் திருவடிகளை என் கைகளால் இறுகப்பற்றிக்கொண்டும், அவைகளை என் மார்பு, தலை, கண்கள் இவைகளில் ஒற்றிக்கொண்டும் அலர்ந்த தாமரை மலரின் நாற்றத்தை முகர்ந்துகொண்டும் இருக்கும் பெரும் பாக்கியம் பிரம்மா முதலானவர்களுக்கும் கிட்டாதது எனக்கு என்று கிட்டுமோ?

ஒருவனது உடல், உணர்ச்சி, மனது இவைகளில் சிவனே நிறைதல் வேண்டும். உணர்ச்சிகளால் வரும் இன்பம், சிவனிடமிருந்து கிடைக்கும் ஆனந்தத்திற்கு எம்மாத்திரம்! பக்தன் சிவனிடமே இருக்கவும், நெருங்கவும் அவனிலேயே கரைந்துபடவும் சதா வேண்டுகிறான். (26)

करस्थे हेमाद्रौ गिरिश निकटस्थे धनपतौ
गृहस्थे स्वर्भूजामरसुरभिचिन्तामणिगणे ।
शिरस्स्थे शीतांशौ चरणयुगलस्थेऽखिलशुभे
कमर्थं दास्येऽहं भवतु भवदर्थं मम मनः ॥ २७ ॥

கரஸ்த்தே ஹேமாத்ரௌ கிரிச நிகடஸ்தே தநபதௌ
க்ருஹஸ்தே ஸ்வர்பூஜாமரஸுரபிசிந்தாமணிகணே ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சிரஸ்தே சீதாம்சௌ சரணயுகளஸ்தே௨கிலசுபே
கமர்த்தம் தாஸ்யேஹம் பவது பவதர்த்தம் மம மந: ॥

हे गिरिश–கைலாஸபர்வதத்திலிருக்கிற ஈச்வர, **हेमाद्रौ**–மஹாமேரு பருவதம், **करस्थे**–கையிலிருக்கும்பொழுது, **धनपतौ**–குபேரன், **निकटस्थे**–பக்கத்திலிருக்கும்பொழுது, **स्वर्भूजामरसुरभिचिन्तामणिगणे**–கல்பவிருக்ஷம், காமதேனு, சிந்தாமணி ரத்னம் இவைகள், **गृहस्थे**–கிருஹத்திலிருக்கும்பொழுது, **शीतांशौ**-சந்திரன், **शिरस्स्थे**-சிரஸ்ஸிலிருக்கும்பொழுது, **अखिलशुभे**-ஸமஸ்த மங்களமும், **चरणयुगलस्थे**-திருவடிகளிலிருக்கும் பொழுது, **अहं**–நான், **कमर्थं**–எந்தப்பொருளை, **दास्ये**–கொடுப்பேன்? **मम मनः**–என் மனமானது, **भवदर्थं**–உமக்காக, **भवतु**–இருக்கட்டும்.

மலையில் வதிப்பவனே! தங்கமேருமலை உன் கையில் அம்பாக (வில்லாக), குபேரன் (செல்வத்தின் தேவன்) உன்னருகாமையில் நிற்க (உன் பணியாளாக) உன் வீட்டில் தெய்வீகமரங்கள் (கல்பக விருக்ஷங்கள்) வளர, காமதேனுவும், விரும்புவதைக்கொடுக்கும் மணிகளுமிருக்க, குளிர்ந்த பிறை உன் தலையில் பிரகாசிக்க, மங்களமானவையெல்லாம் உன் அடிகளில் குவிய, நான் எந்தப் பொருளைத்தருவது! என் மனதையே உனக்கு அர்ப்பணம் செய்ய வேண்டுவதுதான்.

சிவபெருமான் மதிப்புள்ளவைகளுக்கெல்லாம் மூலமாகையில் நாம் அவருக்கு மதிப்புள்ள எதைக் கொடுக்கமுடியும்? அவரிடமில்லாததொன்று எது? அதை நாம் அவருக்கு எப்படிக்கொடுப்பது? அவரடிகளினின்றே மங்களம் ஓடுகின்றது. நமது செல்வத்தையும், நம் உலக சமர்ப்பணங்களையும் அவர் வேண்டுவதில்லை. அவை பலவும் அவரது அருட்பயனே. அவருக்கு நாம் நம் மனதையே கொடுக்கவேண்டும். நம் எண்ணங்களை அவருக்கே சமர்ப்பிப்போம். நம் உணர்ச்சிகளும் அவனை நாடியே செல்லட்டும் நாம் எப்பொழுதும் அவனையே சிந்திப்போமாக. (27)

सारूप्यं तव पूजने शिव महादेवेति संकीर्तने
सामीप्यं शिवभक्तिधुर्यजनतासांगत्यसंभाषणे ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

सालोक्यं च चराचरात्मकतनुध्याने भवानीपते
सायुज्यं मम सिद्धमत्र भवति स्वामिन्कृतार्थोऽस्म्यहम् ॥

ஸாரூப்யம் தவ பூஜனே ஶிவ மஹாதேவேதி ஸங்கீர்த்தனே
ஸாமீப்யம் ஶிவபக்திதுர்யஜனதாஸாங்கத்ய
ஸம்பாஷணே ।
ஸாலோக்யம் ச சராசராத்மகதநுத்யானே பவானீபதே
ஸாயுஜ்யம் மம ஸித்தமத்ர பவதி ஸ்வாமின்
க்ருதார்த்தோऽஸ்ம்யஹம் ॥

भवानीपते-அம்பிகாபதே, **स्वामिन्** -லோகநாத, **तव पूजने**-உம்மை ஆச்சிப்பதில், **मम**-எனக்கு, **सारूप्यं**-ஸமான ரூபமான முக்தியும், **शिव महादेवेति**-சிவ, மஹாதேவ என்று, **संकीर्तने**-சொல்வதில், **सामीप्यं**-ஸமீபத்திலிருக்கும் முக்தியும் **शिवभक्तिधुर्यजनतासाङ्गत्यसंभाषणे**-சிவனிடம் பக்திகொண்ட ஜனங்களுடன் சேர்ந்து ஸம்பாஷிப்பதில், **सालोक्यं**-ஸமான லோகத்திலிருப்பதான முக்தியும், **चराचरात्मकतनुध्याने**-ஸ்தாவர ஜங்கம ரூபமான உம் உருவத்தின் தியானத்திஞல் **सायुज्यं च**-ஒன்ருகக்கலந்து இருக்கும்படியான முக்தியும் **सिद्धं भवति**-நிச்சயமாக ஏற்படுகிறது. **अतः**-ஆகையால், **अहं**-நான், **अत्र**-இங்கேயே, **कृतार्थः अस्मि**-பரமலாபத்தை அடைந்தவஞகிறேன்.

பார்வதியின் கணவ! பூஜையால் அதே உருவையும் (ஸாரூப்யம்), (ஸாமீப்ய) உனது அருகாமையை சிவ மகாதேவா என்று பாடுவதாலும், அதே இடத்தில் வசிப்பதை (ஸாலோக) சிவபக்தி தியானங்களில் சிறந்தவருடன் பேசுவதிலும் வசிப்பதிஞலும், பக்தியும் ஒற்றுமையும்(ஸாயுஜ்யம்) எல்லாவற்றையும் அடக்கும் உன்னுருவை தியானிப்பதாலும் இங்கேயே அடையப்படவேண்டும் அதுவே எனக்கு பெரும் பயன். அதைப் பெற்றுவிட்டேன்.

இறுதி நிலையாகும் முக்தியில் பல படிகள் இல்லாவிட்டாலும் ஈசுவரானுபூதி ஸகுண பிரம்ம உபாசனைகளில் பல நிலைகள் உள்ளன. நான்கு நிலைகள் வகுக்கப்படுகின்றன. (1) ஸாலோகம் என்பது இறைவன் உள்ள அதே இடத்தில் தங்குவது (2) ஸாமீப-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இறைவனருகாமையிலேயே தங்குவது (3) ஸாரூப ஒருருவு பெறுதல் (4) ஸாயுஜ்ய, ஒன்றுதல். சைவசித்தாந்தத்தின்படி சரியை, கிரியை, யோகம் ஞானம் என்ற நான்குபடிகள் அமைகின்றன. சரியையென்பது திருக்கோயில்களை பெருக்கி மெழுகி சுத்தம் செய்தல், இறைவனடியார்களுக்குத் தொண்டுசெய்தலாகும். கிரியை என்பது முறையான பூஜைசெய்தல், யோகமென்பது சிந்தனையும், தியானமும். ஞானமென்பது அறிவுவழி, இறைவனை அடைதல். அப்பர், ஞானஸம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நான்குநாயன்மார்கள் இந்த வழிகளை விளக்குபவர்கள் என்று கொள்ளப்படுகின்றது.

இந்த சுலோகத்தில் ஈசுவரானுபவத்தின் படிகளும் அவைகளையடையும் வழியும் விவரிக்கப்படுகின்றது. (28)

त्वत्पादाम्बुजमर्चयामि परमं त्वां चिन्तयाम्यन्वहं
त्वामीशं शरणं व्रजामि वचसा त्वामेव याचे विभो ।
वीक्षां मे दिश चाक्षुषीं सकरुणां दिव्यैश्चिरं प्रार्थितां
शंभो लोकगुरो मदीयमनसः सौख्योपदेशं कुरु ॥ २९ ॥

த்வத்பாதாம்புஜமர்சயாமி பரமம் த்வாம்
சிந்தயாம்யன்வஹம்
த்வாமீஶம் ஶரணம் வ்ரஜாமி வசஸா த்வாமேவ யாசே
விபோ ।
வீக்ஷாம் மே திஶ சாக்ஷுஷீம் ஸகருணாம்
திவ்யைச்சிரம் ப்ரார்த்திதாம்
ஶம்போ லோககுரோ மதீயமனஸ:
ஸௌக்யோபதேஶம் குரு ॥

विभो-நாநாரூபங்களுடன் கூடியவரே, **परमं**-சிரேஷ்டமான, **त्वत्पादाम्बुजं**-உன் பாதாரவிந்தத்தை, **अन्वहं**-தினந்தோறும் **अर्चयामि**-பூஜிக்கிறேன். **त्वां**-உம்மை, **चिन्तयामि**-தியானம் செய்கிறேன். **ईशं**-ஸர்வலோகநாதனான, **त्वां**-உம்மை, **शरणं**-சரணமாக, **व्रजामि**-அடைகிறேன். **वचसा**-வார்த்தையால், **त्वामेव**-உம்மையேதான், **याचे**-யாசிக்கிறேன். **शंभो**-க்ஷேமத்தையுண்டுபண்ணுகிறவரே, **लोकगुरो**-உலகங்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

களுக்கு குருவான ஈச்வர, दिव्यैः-தேவதைகளால், चिरं-வெகுகாலம், प्रार्थितां-ப்ரார்த்திக்சப்பட்டதான, सकरुणां-கருணையுடன்கூடிய, चाक्षुषीं वीक्षां-கடைக்கண் பார்வையை मे-எனக்கு, दिश-கொடுக்கவேண்டும். मदीयमनसः-என் மனதுக்கு, सौख्योपदेशं-நித்யானந்தமான ப்ரஹ்மத்தின் உபதேசத்தை, कुरु-செய்யும்.

எங்கும் பரந்து நிற்கும் ஒருவ, தங்கள் திருவடிகளை நான் பூஜிக்கின்றேன். பரமமாகிய உன்னை தினமும் தியானம் செய்கின்றேன். இறைவனுகும் உன்னை சரணடைகின்றேன். தனியாக நான் சொற்களைக்கொண்டு உன்னை இறைஞ்சுகின்றேன். தேவர்களும் நீண்டகாலம் தவம் கிடக்கும் உன் கருணைத் திருநோக்கை என்மீது வீச நான் வேண்டுகின்றேன். ஓ சம்போ, உலகிற்கெல்லாம் ஆசிரியனே, சுகமென்பது என்ன என்பதை எனக்கு போதிப்பாயாக.

விடுதலை பெறும் வழியை போதிக்க உலக ஆசிரியன் வேண்டப்படுகின்ருன். அவர் போதனையைப்பெற ஒருவன் முற்றுமாகத் தன்னை ஒப்படைக்கவேண்டும். முற்றுமாக தன்னை ஒப்படைத்தால் தான் இறைவன் அருள் கிடைக்கும் இறைவனருளாலேயே விடுதலை தரும் ஞானம் கிடைக்கப்பெறும்.

பகவத்கீதையில் (2. 7) அர்ச்சுனன் தன்னை கிருஷ்ணனிடம் முற்றுமாக ஒப்படைக்கின்ருன். "நான் உனது சீடன், துணிந்த நல்லதாவதை அருளு. உனக்குச் சரண்புகுந்த எனக்கு போதனை செய்" மேலும் பகவத்கீதையில் (9. 43) "நிலைக்கவும் நகரவுமுள்ள படைப்புகளுள்ள இந்த உலகில் நீயே அப்பன், நீயே வணங்கப்படவேண்டியவன், நீயே பேராசிரியன், முவ்வுலகங்களிலும் உனக்கு ஒப்பாவார் இல்லை சிறப்பின் சிறப்பைப்பெற்ற உன்னிலும் உயர்ந்தோர் யார்?" என்று உள்ளது. (29)

वस्त्रोद्धूतविधौ सहस्रकरता पुष्पार्चने विष्णुता
गन्धे गन्धवहात्मतान्नपचने बर्हिर्मुखाध्यक्षता ।
पात्रे काञ्चनगर्भतास्ति मयि चेद्बालेन्दुचूडामणे
शुश्रूषां करवाणि ते पशुपते स्वामिंस्त्रिलोकीगुरो ॥ ३० ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வஸ்த்ரோத்தூதவிதௌ ஸஹஸ்ரகரதா
புஷ்பார்சனே விஷ்ணுதா
கந்தே கந்தவஹாத்மதாந்நபசனே
பர்ஹிர்முகாத்யக்ஷதா ।
பாத்ரே காஞ்சன கர்பதாஸ்தி மயி சேத்
பாலேந்துசூடாமணே
ஶுச்ரூஷாம் கரவாணி தே பஶுபதே ஸ்வாமிம்
ஸ்த்ரிலோகீகுரோ ॥

बालेन्दुचूडामणे-பாலசந்திரனை சிரஸில் அணிந்தவரான ஈசுவர, **पशुपते**-பசுரூபமான அஞ்ஞானிகளுக்கு அதிபதியே, **स्वामिन्**-உலகத்திற்கு நாதனான ஈசுவர, **त्रिलोकीगुरो**-மூவ்வுலகிற்கும் குருவே. **वस्त्रोद्धूतविधौ**-வஸ்திரோபசார விஷயத்தில், **सहस्रकरता**-சூரியனாகவும், **पुष्पार्चने**-புஷ்பங்களால் அர்ச்சிக்கிற விஷயத்தில், **विष्णुता**-விஷ்ணுவாகவும், **गन्धे**-கந்தோபசாரத்தில், **गन्धवहात्मता**-வாயுவாகவும், **अन्नपचने**-நைவேத்யம் சமைக்கிற விஷயத்தில், **बर्हिर्मुखाध्यक्षता**-இந்திரனாகவும், **पात्रे**-பாத்திர உபசாரத்தில், **काञ्चनगर्भता**-பிரம்மாவாகவுமிருக்கும் தன்மை, **मयि अस्ति चेत्**-என்னிடம் இருக்குமானால், **ते**-உமக்கு, **शुश्रूषां**-சுச்ரூஷையை, **करवाणि**-செய்வேன்.

தலையணியாக இளம்பிறையைச்சூடிய ஒருவ! ஆத்மாக்களின் தலைவ! இறைவா! மூவுலகங்களுக்கும் ஆசிரியனே! ஆயிரம் கைகளைக்கொண்டு (கிரணங்களை) உனக்கு உடையணிய நான் சூரியனது சக்தியைப் பெற்றிருந்தாலும், மலர்களைக்கொண்டு பூஜிக்க விஷ்ணுவின் நிலையைப்பெற்றிருந்தாலும், உனக்குச் சந்தனக்காப்பு செய்ய வாயுவின் திறனைப்பெற்றிருந்தாலும், நினது நிவேதனத்தைச்சமைக்க அக்னியின் தலைவனாகும் இந்திரன் நிலையைப்பெற்றிருந்தாலும், நினக்காகும் பாத்திரங்களையமைக்க ஹிரண்யகர்ப்பனின் தன்மையைப்பெற்றிருந்தாலும் உன் பணிவிடை செய்ய நான் உனக்குச் சரணடையக்கூடும். அப்படி இல்லையே!

சென்ற சுலோகத்தில் சிவன் உலகின் ஆசிரியன் என்று அழைக்கப்பட்டான். (லோக-குரு) இதில் அவர் மூவுலகங்களுக்கும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆசிரியன் என்று சொல்லப்படுகின்றார் (திரி லோக குரு) சிவனருளைப்பெற ஒருவன் அவரை பூஜிக்கவேண்டும். ஆயின் அல்பனாகும் ஒரு மனிதனால் அதை எப்படிச் செய்தல்கூடும்? இறைவன் எல்லையற்றவன்? மனிதன் வரையறுக்கப்பட்டவன். வஸ்திரம், மலர், சந்தனம், நிவேதனம் முதலியவைகளைக்கொண்டு சிறியவனாகும் மனிதன், எப்படி இறைவனை பூஜிப்பது. அதைச் செய்து முடிக்க மனிதன், சூரியன், விஷ்ணு, வாயு, இந்திரன் இவர்களின் நிலையைப்பெற்றாகவேண்டும். (30)

नालं वा परमोपकारकमिदं त्वेकं पशूनां पते
पश्यन्कुक्षिगतांश्चराचरगणान्बाह्यस्थितान्रक्षितुम् ।
सर्वामर्त्यपलायनौषधमतिज्वालाकरं भीकरं
निक्षिप्तं गरलं गले न गिलितं नोद्गीर्णमेव त्वया ॥

நாலம் வா பரமோபகாரகமிதம் த்வேகம் பஶூனாம் பதே
பச்யன் குக்ஷிகதாம்ச்சராசர கணான் பாஹ்ய
ஸ்திதான் ரக்ஷிதும் ।
ஸர்வாமர்த்யபலாயநௌஷதமதிஜ்வாலாகரம் பீகரம்
நிக்ஷிப்தம் கரலம் கலே ந கிலிதம் நோத்கீர்ணமேவ
த்வயா ॥

भो पशूनां पते–பாமர ஜனங்களையும் காப்பாற்றக்கூடிய ஈசா, **कुक्षिगतान्**–வயிற்றுக்குள்ளிருக்கிறதும், **बाह्यस्थितान्**–வெளியிலிருக்கிறதுமான, **चराचरगणान्**–ஸ்தாவர ஜங்கம ஸமூகங்களை, **रक्षितुं**–காப்பாற்றுவதற்கு, **पश्यन्**–பார்த்து, (ஆலோசனை செய்து) **अतिज्वालाकरं**–அதிகமான தாபத்தை உண்டுபண்ணுகிறதும், **भीकरं**–பயங்கரமானதுமான, **गरलं**–காலகூடவிஷம், **सर्वामर्त्यपलायनौषधं**–ஸகல தேவதைகளின் ஓட்டத்தைப்போக்கக்கூடிய ஔஷதமாயிருக்கும்படி, **त्वया**–உம்மால், **गले**–கழுத்தில், **निक्षिप्तं**–வைக்கப்பட்டது. **न गिलितं**–விழுங்கப்படவில்லை, **नोद्गीर्णमेव**–வெளிப்படுத்தப்படவுமில்லை. **परमोपकारकं**–மிகுந்த உதவி செய்கின்ற, **इदमेकं तु**–இது ஒன்றே, **नालं वा**–(உமது மஹிமையை அறியப்) போதாதா!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆத்மாக்களின் தலைவ! உன் கருணையைப்புகழ, உனது ஒரு உதவியும் போதுமானதே! நிலையானவற்றையும், நகர்வனவற்றையும் படைப்பிலுள்ளவைகளை உன் வயிற்றடக்கியும், வெளியே வைத்தும், தேவர்கள் கண்டு அஞ்சி சிதறியோடிய எரிகின்ற கொடிய விஷத்தை, உள்ளே விழுங்காமலும், வெளியே உமிழாமலும் தொண்டையில் வைத்துக்கொண்டாய்!

இதிலும் அடுத்த சுலோகத்திலும் சிவனே உலகிற்கு பெருநன்மையைவிளைவித்தவர் என்பது சொல்லப்படுகின்றது. அவரை, அழிப்பவராக அதிகம் சொல்லப்படுவதால், அவர் உலகை காப்பவர் என்பது மறக்கப்படுகின்றது.

ஹாலஹால விஷத்தை விழுங்கி உலகை சிவன் எப்படி உய்வித்தார் என்பது புராணங்களில் சொல்லப்படுகின்றது. பாற்கடலைக்கடைந்து அதினின்று சாவைப்போக்கும் அமிருதத்தைப்பெற, தேவர்களும் அசுரர்களும் ஒன்ருகக் கடைந்தார்கள். ஆயின் அவர்கள் கடையவும் முதலில் வெளிப்பட்டது ஹாலஹால விஷம். அவர்கள் சாவிற்குப் பயந்து ஓட்டம் எடுத்தார்கள். அவர்களுக்கு இரங்கி சிவபெருமான் அவ்விஷத்தை எடுத்து தன் வாயில் போட்டுக்கொண்டு அவர்களைக் காப்பாற்றினுர். அவர் அதை உள்ளேவிட்டிருந்தால் உள்ளே உள்ளவை அழிந்துவிடுமாகையால், விஷத்தைத் தொண்டையிலேயே அடக்கிக்கொண்டார். அதனுல் அவரது வெள்ளைத் தொண்டை கருத்து நீலமாயிற்று, அதனுல் நீலகண்டன், காலகண்டன், நீலக்ரீவன், என்று அவருக்குப் பெயருண்டாயிற்று.

சுந்திரமூர்த்தி நாயனுரின் இரு திருப்பாசுரங்கள் இவை.

கடிக்கும் அரவால் மலையால் அமரர் கடலைக் கடைய
எழுகாளகூடம்
ஒடிக்கும் உலகங்களை என்றதனை உமக்கே அமுதாக உண்டீர்
உமிழீர்
இடிக்கும் மழைவீழ்த் திட்டருவி இருபாலும் ஒடி இரைக்கும்
திரைக்கை
அடிக்கும் புனல்சேர் அரிசிற் றென்கரை அழகர் திருப்புத்தூர்
அழகனீரே (7—8—10)

கோலமால் வரை மத்தென நாட்டிக் கோளரவு சுற்றிக்
கடைந்தெழுந்த
ஆலநஞ்சுகண் டவர்மிக விரிய வமரர்கட்க்கு அருள் புரிவது கருதி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நீலமார்கடல் விடந்தனையுண்டு கண்டத்தே வைத்த பித்த நீ செய்த சீலங்கண்டு நின் திருவடியடைந்தேன் செழும் பொழிற்றிருப்புன் கூருளானே (7—52—5)

ज्वालोग्रः सकलामरातिभयदः क्ष्वेलः कथं वा त्वया
दृष्टः किं च करे धृतः करतले किं पक्वजम्बूफलम् ।
जिह्वायां निहितश्च सिद्धघुटिका वा कण्ठदेशे भृतः
किं ते नीलमणिर्विभूषणमयं शंभो महात्मन्वद ॥ ३२ ॥

ஜ்வாலோக்ர: ஸகலாமராதிபயத: க்ஷ்வேள: கதம் வா த்வயா
த்ருஷ்ட: கிம் ச கரே த்ருத: கரதலே கிம் பக்வஜம்பூபலம் ।
ஜிஹ்வாயாம் நிஹிதச்ச ஸித்தகுடிகா வா
கண்டதேஶே ப்ருத:
கிம் தே நீலமணிர்விபூஷணமயம் ஶம்போ
மஹாத்மன் வத ॥

शंभो-க்ஷேமத்தையுண்டுபண்ணுகிறவரே, **महात्मन्**-அளவற்ற ரூபமுடையவரே, **ज्वालोग्रः**-ஜ்வாலைகளால் பயங்கரமாயும், **सकलामरातिभयदः**-ஸகலமான தேவதைகளுக்கும், அதிகமான பயத்தைக்கொடுக்கக்கூடியதுமான, **क्ष्वेलः**-காலகூடவிஷம், **कथं वा**-எப்படித்தான், **त्वया**-உம்மால், **दृष्टः**-பார்க்கப்பட்டது? **किंच**-பின்னும், **करे**-கையில், **धृतः**-எடுக்கப்பட்டதே! **करतले**-உள்ளங்கையிலும், **निहितः**-வைக்கப்பட்டதே! **किं पक्वजम्बूफलं**-பழுத்த நாகக்கனியா? **जिह्वायां निहितश्च**-நாக்கில் வைக்கப்பட்டதே! **सिद्धघुटिका वा**-ஸித்தர்களின் மருந்துகுளிகையா? **कण्ठदेशे भृतः**-கழுத்தில், தரிக்கப்பட்டதே! **अयं**-இந்த விஷம், **ते**-உமக்கு, **विभूषणं**-அலங்காரமான, **नीलमणिः किम्**-நீலரத்னமா? **वद**-சொல்லும்.

ஓ சம்போ, தேவர்கள் கண்டஞ்சிய பெருவிடத்தை நீ எப்படிப் பார்த்தாய்? அதை எப்படிக்கையிலெடுத்தாய்? உன் கையில் அது நாவல் பழம் போன்று அமைந்ததா? சித்தர்கள் கையாளும் மருந்தா அது? அது ஒரு நீலக்கல் ஆபரணமென்று தொண்டையில் அடக்கப்பட்டதா? இதையெல்லாம் பெரியோய், எனக்குச் சொல்வாயாக.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உலக அளவைகளைக்கொண்டு நாம் சிவன் எப்படி விஷத்தைப் பருகினர் என்று சொல்வது கூடுவதில்லை. தானே சாகத் துணிந்தோ தவறுதலாகவோவன்றி யாரும் விஷத்தை உட்கொள்ளமாட்டார்கள். ஹாலாஹலம் மிகவும் கொடிய விஷமென்பது சிவனுக்குத் தெரியாதா? தேவர்கள் பயந்தோடுவதை அவர் பார்க்கவில்லையா? அவர் ஒரு மருந்தென்றோ, ஒரு பழமென்றோ, ஒரு அணியென்றோ, அதைக்கொண்டாரா? அவர் செயலை நாம் புரிந்துகொள்வதற்கில்லை. தன் படைப்புகளுக்கு இரங்கிய கருணையின் பெருமைதான் என்னே? (32)

नालं वा सकृदेव देव भवतः सेवा नतिर्वा नुतिः
पूजा वा स्मरणं कथाश्रवणमप्यालोकनं मादृशाम् ।
स्वामिन्नस्थिरदेवतानुसरणायासेन किं लभ्यते
का वा मुक्तिरितः कुतो भवति चेत्किं प्रार्थनीयं तदा ॥

நாலம் வா ஸக்ருதேவ தேவ பவத: ஸேவா நதிர்வா நுதி:
பூஜா வா ஸ்மரணம் கதா ச்ரவணமப்யாலோகநம்
மாத்ருசாம் ।
ஸ்வாமிந்நஸ்த்திர தேவதானுஸரணாயாஸேன
கிம் லப்யதே
கா வா முக்திரித: குதோ பவதி சேத் கிம்
ப்ரார்த்தனீயம் ததா ॥

भो स्वामिन्-ஸர்வலோகாதிபதியான ஈசுவர, **देव**-தேவனே, **मादृशां**-என்னைப்போலிருப்பவர்களுக்கு, **भवतः**-உம்முடைய, **सकृदेव**-ஒரேதடவை, **सेवा**-ஸேவையாவது, **नतिर्वा**-நமஸ்காரமாவது, **नुतिः**-துதியாவது. **पूजा वा**-பூஜையாவது, **स्मरणं**-ஸ்மரணமாவது, **कथाश्रवणमपि**-கதையைக் கேட்பதாவது, **आलोकनं**-தர்சனமாவது, **नालं वा**-போதாதா? **अस्थिरदेवतानुसरणायासेन**-நிலையற்ற தேவதைகளையனுஸரிப்பதிலுள்ள கஷ்டத்தினுல், **किं लभ्यते**-என்ன அடையப் படுகிறது? **इतः**-இதிலிருந்து, **का वा मुक्तिः**-ஏது முக்தி? **कुतो भवति चेत्**-வேறு உபாயத்தால் உண்டாகுமானுல், **तदा**-அப்பொழுது, **किं प्रार्थनीयं**-எது பிரார்த்திக்கக்கூடியது?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஓ இறைவனே தேவனே என்னைப்போன்றவர்கள் ஒருதரம் உன்னை நமஸ்கரிக்கவோ புகழ்ந்து பாடவோ, பூஜிக்கவோ தியானம் செய்யவோ, உன் கதைகளை கேட்கவோ, உன் தரிசனம் பெறவோ செய்தால் போதாதா? இவ்வழிகளிலன்றி எப்படி விடுதலை கிட்டும்? இது உண்மையாக, நிலையற்ற தேவர்களை முயன்று பின் செல்வதின் பயனென்ன? அவர்களை வழிபடுவதும் வேண்டப்படுவதா?

பக்தன் சிவனருளன்றி பிறவற்றால் விடுதலை பெறுவது கூடுவதில்லை என்ற உறுதியை அடைந்துவிட்டான். ஒரு மனதுடன் அவனை வழிபட ஒன்றைச்செய்தாலும் போதியது. தேவர்கள், உபதேவர்களை நாடியலைவானேன்? அவர்களை நாட முயல்வது பயனற்ற வீண்பாடாகும். (33)

किं ब्रूमस्तव साहसं पशुपते कस्यास्ति शंभो भव-
द्धैर्यं चेदृशमात्मनः स्थितिरियं चान्यैः कथं लभ्यते ।
भ्रश्यद्देवगणं त्रसन्मुनिगणं नश्यत्प्रपञ्चं लयं
पश्यन्निर्भय एक एव विहरत्यानन्दसान्द्रो भवान् ॥ ३४ ॥

கிம் ப்ரூமஸ்தவ ஸாஹஸம் பஶுபதே கஸ்யாஸ்தி
ஶம்போ பவத்
தைர்யம் சேத்ருஶமாத்மந: ஸ்திதிரியம் சாந்யை:
கதம் லப்யதே ।
ப்ரச்யத் தேவகணம் த்ரஸன் முனிகணம்
நச்யத்ப்ரபஞ்சம் லயம்
பச்யன் நிர்பய ஏக ஏவ விஹரத்யாநந்த ஸாந்த்ரோ
பவான் ॥

पशुपते-ஜீவர்களின் தலைவனே, **शम्भो**-சம்புவே, **भ्रश्यद्देवगणं**-தன் இருப்பிடமிருந்து நழுவக்கூடிய தேவ ஸமூகத்தையுடையதும், **त्रसन्मुनिगणं**-பயப்படுகிற முனி கணத்துடன் கூடியதும், **नश्यत्प्रपञ्चं**-பிரபஞ்சம் நசிக்கும்படியான, **लयं**-பிரளயத்தை, **पश्यन्**-பார்த்துக்கொண்டிருக்கிற, **भवान्**-நீர், **एक एव**-ஒருவராகவே, **निर्भयः**-பயமில்லாமல், **आनन्दसान्द्रः**-ஸம்பூர்ணமான ஆநந்தத்துடன், **विहरति**-விளையாடுகிறீர். **तव**-உம்முடைய, **साहसं**-கடினமான

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

செய்கையை, किं ब्रूमः-எப்படி சொல்லுவோம்? ईदृशं-இவ்வித மான, भवद्धैर्य-உம்முடைய தைரியம், कस्यास्ति-யாருக்கு இருக்கிறது? आत्मनः-தன்னுடைய, इयं स्थितिः-இந்த நிலைமையானது, अन्यैः-மற்றோர்களால், कथं लभ्यते-எப்படி அடையப்படும்?

ஆன்மாக்களின் இறைவ! உன் திருவிளையாடல்களைப்பற்றி நாங்கள் என்ன சொல்வது? சம்பூ, உன்னைப்போன்ற தைரியம் உள்ளவர்கள் யார்? உன் நிலையை பிறர் எப்படி அடைதல் கூடும்? தேவர்கள் தம் நிலையினின்று கிழிந்து பட்டு மறைவதைக் கண்டு தவசிகள் பயப்படுகின்றார்கள். உலகம் அழிந்து படுகின்றது. நீ தன்னந்தனியாக, பயமின்றி, ஆனந்தம் பொங்கி மிளிர்கின்றாய்! (34)

योगक्षेमधुरंधरस्य सकलश्रेयःप्रदोद्योगिनो
दृष्टादृष्टमतोपदेशकृतिनो बाह्यान्तरव्यापिनः ।
सर्वज्ञस्य दयाकरस्य भवतः किं वेदितव्यं मया
शंभो त्वं परमान्तरङ्ग इति मे चित्ते स्मराम्यन्वहम् ॥

யோக க்ஷேம துரந்தரஸ்ய ஸகல ச்ரேயः ப்ரதோத்யோகிநோ
த்ருஷ்டாத்ருஷ்ட மதோபதேச க்ருதிநோ
பாஹ்யாந்தர வ்யாபிந: ।
ஸர்வக்ஞஸ்ய தயாகரஸ்ய பவத: கிம் வேதிதவ்யம் மயா
ஶம்போ த்வம் பரமாந்தரங்க இதி மே சித்தே
ஸ்மராம்யன்வஹம் ॥

शंभो-ஸுகத்தைக் கொடுக்கக்கூடிய ஈச்வர, योगक्षेम-धुरन्धरस्य-யோகம் (அடையக்கூடாததையடைவது) க்ஷேமம் (அடைந்ததைக்காப்பாற்றுவது) இவைகளை வஹிக்கிறவராயும், सकलश्रेयःप्रदोद्योगिनः-ஸகலமான நன்மைகளையும் கொடுப்பதில் முயற்சியுடையவரும், दृष्टादृष्टमतोपदेशकृतिनः-இம்மை மறுமை இவைகளையடையக்கூடிய உபாயங்களை உபதேசிப்பதில் வல்லவராயும், बाह्यान्तरव्यापिनः-உள்ளும் வெளியிலும் வியாபிக்கிறவராயும், सर्वज्ञस्य-எல்லாவற்றையும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உணர்ந்தவராயும், दयाकरस्य-தயாநிதியாகவுமுள்ள भवतः- உமக்கு, मया-என்னால், किं वेदितव्यं-எது தெரிவிக்கக் கூடியது? त्वं-நீர், परमाप्ततर इति-மிகவும் ஆப்தரென்று, मे चित्ते-என் மனதில், अन्वहं-தினந்தோறும், स्मरामि-நினைக்கிறேன்.

ஓ சம்பு, எல்லாவுயிர்களின் நலத்திற்கும் பொறுப்பாளியாகின்றாய்! நீ நன்மையையெல்லாம் ஈய நிற்கின்றாய். தெரிந்ததும் தெரியாததுமான பயனைக்கொடுக்கவல்லாய் நீயே! உள்ளும் புறமுமாக எங்கும் பரந்து நிற்கின்றாய். கருணை நிறைந்தவன். எல்லாம் அறிவாய். உனக்கு நான் சொல்வதென்ன உள்ளது? என் உள்ளுள்ளும் இருப்பவன் நீ என்றே உன்னை எப்பொழுதும் மனதில் கொள்ளுகின்றேன்.

சிவனே மங்களத்திற்கெல்லாம் இருப்பிடம், அவனே எல்லா நன்மையையும் கொடுப்பவன். எல்லோர் நலத்திற்கும் காப்பு. அவன் நல்லதெது என்னும் அறிவையும் கொடுத்து பரமாகும் உண்மையை விளக்குபவன். அவன் என்றும் இருப்பவன், எல்லாம் அறிபவன், கருணைக்கடல். பக்தன் தனக்கு இதுவேண்டுமென சொல்லவேண்டியதில்லை. அவனுக்கே எல்லாம் தெரியும். சிவன் பெருமை அறிந்து, அவனே அழிவற்று உள்ளிருந்து ஆளுகின்றான் என்பதை அறிந்தால்போதும். (35)

भक्तो भक्तिगुणावृते मुदमृतापूर्णे प्रसन्ने मनः-
कुम्भे साम्ब तवांघ्रिपल्लवयुगं संस्थाप्य संवित्फलम् ।
सत्त्वं मन्त्रमुदीरयन्निजशरीरागारशुद्धिं वह-
न्पुण्याहं प्रकटीकरोमि रुचिरं कल्याणमापादयन् ॥ ३६ ॥

பக்தோ பக்தி குணாவ்ருதே முதம்ருதாபூர்ணே
ப்ரஸன்னே மந:-
கும்பே ஸாம்ப தவாங்க்ரி பல்லவ யுகம் ஸம்ஸ்தாப்ய
ஸம்வித்பலம் ।
ஸத்வம் மந்த்ரமுதீரயன் நிஜஸரீராகார ஸுத்திம் வஹன்
புண்யாஹம் ப்ரகடீகரோமி ருசிரம் கல்யாணமாபாதயன் ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

हे साम्ब–அம்பிகையுடன்கூடிய ஈச்வர, निजशरीरागारशुद्धिं वहन्–தன் சரீரமாகிற கிருஹத்திற்கு, சுத்தியை செய்யக் கூடிய, भक्तः–பக்தனான நான், रुचिरं कल्याणं–மனதுக்குப் பிரியமான கல்யாணத்தை, आपादयन्–உண்டுபண்ணுகிற வனாய்க்கொண்டு, भक्तिगुणावृते–பக்தியாகிற நூலால் சுற்றப் பட்டதும், मुदमृतापूर्णे–ஸந்தோஷமாகிற ஜலத்தினால் நிரப்பப் பட்டதும், प्रसन्ने–சுத்தமானதுமான, मनःकुम्भे–மனதாகிய கும்பத்தில், तव अंघ्रिपल्लवयुगं–உம்முடைய திருவடியாகிற இரண்டு துளிர்களையும், संवित्फलं–ஞானமாகிய தேங்காயை யும், संस्थाप्य–வைத்து, सत्त्वं मन्त्रं–ஸத்வகுணப்ரதானமான மந்திரத்தை, उदीरयन्–சொல்லிக்கொண்டு, पुण्याहं–புண்யாஹவாசனத்தை, प्रकटीकरोमि–ப்ரகாசப்படுத்து கிறேன்.

மனமென்னும் ஒளிவீசும் பாத்திரத்தை பக்தியென்னும் சரடால் கட்டி, அதில் ஆனந்தமென்னும் நீரை நிரப்பி, பக்தனாகும் நான் உனது இரு திருவடிகளைச்சார்த்தி (மாவிலையை), அறி வென்னும் தேங்காயை அதன்மீது வைத்து, எனது வீடாகும் இந்த உடலிற்கு 'புண்யாஹம்' என்னும் மந்திரங்களையோதி பரமானந்தத்தை அடைய முயல்கின்றேன்.

ஒரு இடத்தை புனிதமாக்க புண்யாஹம் செய்யப்படுகின்றது. அசுத்தத்தையும், அமங்களத்தையும் போக்க இது செய்யப் படுவது. ஒரு பானைக்கு சரடு சுற்றி அதில் நீரை வைக்க வேண்டும். பாத்திரத்தின் வாயில் மாவிலைகளை வைத்து அதற்கு மேல் தேங்காய் வைக்கப்படவேண்டும். உரிய மந்திரங்களை ஓத புண்யாஹம் முடிகின்றது. பிறகு அந்த பாத்திரத்திலுள்ள நீர் மாவிலைகளால் வேண்டுமிடங்களில் தெளிக்கப்படுகின்றது. இங்கு உள்ளமைப்பிற்கு புண்யாஹம் கூறப்படுகின்றது. இவ்வழி உடல், ஐம்புலன்கள், மனது முதலியவைகளை சுத்தம் செய்து, ஆத்மாவை விடுவிக்கும் வினை மேற்கொள்ளப்படுகின்றது. ஒவ்வொரு செய்கைக்கும் உட்பொருளொன்றுண்டு. வைதிக கர்மாக்களின் உட்பொருளை உபநிஷத்துகள் விளக்குகின்றன. பிருஹதாரண்யக உபநிஷத்தின் ஆரம்பத்தில் அச்வமேதத்தின் உட்பொருள் விளக்கப்படுகின்றது.

(36)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

आम्नायाम्बुधिमादरेण सुमनःसंघाः समुद्यन्मनो-
मन्थानं दृढभक्तिरज्जुसहितं कृत्वा मथित्वा ततः ।
सोमं कल्पतरुं सुपर्वसुरभिं चिन्तामणिं धीमतां
नित्यानन्दसुधां निरन्तररमासौभाग्यमातन्वते ॥ ३७ ॥

ஆம்நாயாம்புதிமாதரேண ஸுமநஸ்ஸங்கா:
ஸமுத்யன்மநோ
மந்தானம் த்ருட பக்தி ரஜ்ஜு ஸஹிதம் க்ருத்வா
மதித்வா தத:।
ஸோமம் கல்பதரும் ஸுபர்வ ஸுரபிம் சிந்தாமணிம் தீமதாம்
நித்யானந்த ஸுதாம் நிரந்தர ரமா
ஸௌபாக்யமாதன்வதே ॥

सुमनस्संघाः-வித்வான்களாகிற தேவதா ஸமூஹம், **समुद्यन्मनः**-முயர்ச்சியுடன்கூடிய மனதை, **दृढभक्तिरज्जुसहितं**-திடபக்தியாகிய கயிறுடன் கூடியதான, **मन्थानं**-மந்தாக, **कृत्वा**-செய்து, **आम्नायाम्बुधिं**-வேதமாகிற ஸமுத்திரத்தை, **आदरेण**-ஆதரவுடன். **मथित्वा**-கடைந்து, **ततः**-அதினின்றும், **सोमं**-சந்திரனையும், **कल्पतरुं**-கல்பகவிருக்ஷத்தையும், **सुपर्वसुरभिं**-காமதேனுவையும், **चिन्तामणिं**-சிந்தாமணி ரத்னத்தையும், **धीमतां**-மனதிற்கு இஷ்டமான, **नित्यानन्दसुधां**-எப்பொழுதும் ஆநந்தத்தைக்கொடுக்கக்கூடிய அமிருதத்தையும், **निरन्तररमासौभाग्यं**-எப்பொழுதும் லக்ஷ்மீவிலாஸத்தையும், **आतन्वते**-அடைகிறார்கள்.

(தேவர்கள் பாற்கடலைக்கடைந்து அமிருதம் பெற்றனர் வித்வான்களோ மனதால் வேதத்தைக் கடைந்து, **कल्पतरुं**-கல்பவிருக்ஷத்திற்கொப்பானவரும், **चिन्तामणिं**-சிந்தாமணி ரத்தினம்போல் இருப்பவரும், **सुपर्वसुरभिं**-காமதேனுவுக்கு ஸமமானவருமான, **सोमं**- அம்பிகையுடன்கூடிய ப்ரமேச்வரனையும், **धीमतां**-மனதிற்கு இஷ்டமான, **नित्यानन्दसुधां**-அழிவற்ற ஆனந்தமென்னும் அமிருதத்தையும், **निरन्तर, रमासौभाग्यं**-நித்யமான மோக்ஷலக்ஷ்மீ விலாஸத்தையும். **आतन्वते**-அடைகிறார்கள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

துணிந்த ஞானத்தை மத்தாகவும், பிணித்த பக்தியைக் கயிராகவும் கொண்டு, வேதாகமங்களை ஆவலுடன் கடைந்து அதனின்று, சந்திரன், கற்பகவிருக்ஷம், காமதேனு, சிந்தாமணி பரமானந்தமாகும். அமிருதம் இவைகளைப்பெறுகின்றார்கள். அது ஞானிகளுக்கே கிடைக்கக்கூடியது.

இங்கும் பாற்கடலை கடையும் நிகழ்ச்சி குறிக்கப்படுகின்றது. அப்பாற்கடலிலிருந்து பல மங்களமானவை வெளிவந்தன. மனிதனுடைய ஆசைகளைக்கொடுக்ககூடிய ஏதாவது ஒரு மங்களப் பொருள் வருகின்றது. துணிந்த அறிவுடனும் பக்தியுடனும் புனித நூல்களை ஆராய்வதால் பலமுடிவுகளின்றி, இறுதியாகும் மோக்ஷமே கிட்டுகின்றது. சோமம், கற்பகவிருக்ஷம், காமதேனு, சிந்தாமணி, அமிருதம், லக்ஷ்மி இவை பலவும் இறுதிப்பயனாகும் மோக்ஷ நிலையையே குறிக்கின்றன. (37)

प्राक्पुण्याचलमार्गदर्शितसुधामूर्तिः प्रसन्नः शिवः
सोमः सद्गणसेवितो मृगधरः पूर्णस्तमोमोचकः ।
चेतःपुष्करलक्षितो भवति चेदानन्दपाथोनिधिः
प्रागल्भ्येन विजृम्भते सुमनसां वृत्तिस्तदा जायते ॥

ப்ராக் புண்யாசல மார்க தர்சித ஸுதா மூர்த்தி:
ப்ரஸன்ன: ஶிவ:
ஸோம: ஸத்கணஸேவிதோ ம்ருகதர: பூர்ணஸ்தமோ
மோசக: ।
சேத: புஷ்கரலக்ஷிதோ பவதி சேதாநந்தபாதோநிதி:
ப்ராகல்ப்யேன விஜ்ரும்பதே ஸுமநஸாம்
வ்ருத்திஸ் ததா ஜாயதே ॥

प्राक्पुण्याचलमार्गदर्शितसुधामूर्तिः—முற்பிறவிகளில் செய்யப்பட்டு மலைபோல் குவிந்துள்ள புண்யங்களின் வழியாக காண்பிக்கப்பட்ட அமிருதமயமான ஸ்வரூபமுள்ளவரும், (கிழக்கு திசையிலுள்ள உதயமலையின் வழியாக காண்பிக்கப்பட்ட அமிருத சரீரமுள்ளவனும்,) **प्रसन्नः**—ஸ்வச்சனாயும், **शिवः**—ஆனந்தரூபமாயும், (ஆனந்தத்தைச் செய்கிறவனாயும்,) **सद्गणसेवितः**—ஸாதுக்களின் கூட்டத்தால் ஸேவிக்கப்பட்டவரும், (நக்ஷத்ர ஸமூகங்களால் ஸேவிக்கப்பட்டவரும்,)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

मृगधरः-மானை தரித்தவரும், **पूर्णः**-ஸர்வ வியாபகரும், (16 கலைகளால் பூர்ணராயும்,) **तमोमोचकः**- அஞ்ஞானத்தை (இருளை)ப் போக்குகிறவருமான, **सोमः** – அம்பிகையுடன் கூடிய ஈச்வரன் (சந்திரன்) **प्रागल्भ्येन**–பிரகாசத்துடன், **चेतः पुष्करलक्षितः भवति चेत्** – மனமாகிற ஆகாயத்தில் காணப் பட்டால், **आनन्दपाथोनिधिः**–ஆனந்த ஸமுத்திரம், **विजृम्भते**– விருத்தியடைகிறது. **तदा**:–அச்சமயம், **सुमनसां** – ஸாதுக் களுக்கு (தேவதைகளுக்கு,) **वृत्तिः**-நல்ல பிரவிருத்தியானது (ஜீவனமானது,) **जायते**– உண்டாகிறது. இந்த சுலோகத் தில் சந்திரனையும் ஈசுவரனையும் சிலேடையால் துதிக்கிறார்.

மங்களகரமான சந்திரன் மானைத்தரித்து கிழக்கு மலைகளின் வழியாக நக்ஷத்திரங்கள் தொடர வெண்மையாகக் கிளம்பும் பொழுது உலகின் இருள் அகல சந்திரனின் பிரதிபிம்பம் விழும் பொழுது மகிழ்ச்சியடையும் சமுத்திரம் பொங்கியெழுகின்றது. அச்சமயம் தேவர்கள் வாழ்வது சரியாகின்றது.

அமைதியுடன் கையில் மானை ஏந்தி முன்பே தான் பெற்றிருக் கும் மலைபோன்ற சிறப்புடன் சிவன் வரும்பொழுது தேவர்கள் பின் தொடர உலகத்தின் அநாதியாக வரும் அஞ்ஞானம் நீங்கி. பிரம்மானந்தம் தெளிவாக விளங்க நல்லோருடைய மனம் மாற்ற மடைகின்றது.

இந்த சுலோகத்தில் இருபொருட் சொற்கள் பல உள்ளன. சொற்கள் சிவனுக்கும் சந்திரனுக்கும் பொருந்துவன. சந்திரன் இருட்டை அகற்றவும் ஆனந்தத்தைக்கொடுக்கவும் செய் கின்றான். சிவனது அருள் ஆத்மாவின் அநாதியான மாயையை அகற்றி பேரானந்தத்தைக் கொடுக்கின்றது. சிவனே உயர்ந்த தெய்வீக சந்திரன். 'ஸோம' என்ற சொல்லிற்கு தன்னருகே உமையைப் பெற்றவன் என்பது பொருள். (38)

धर्मो मे चतुरङ्घ्रिकः सुचरितः पापं विनाशं गतं
कामक्रोधमदादयो विगलिताः कालाः सुखाविष्कृताः ।
ज्ञानानन्दमहौषधिः सुफलिता कैवल्यनाथे सदा
मान्ये मानसपुण्डरीकनगरे राजावतंसे स्थिते ॥ ३९ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தர்மோ மே சதுரங்க்ரிக: ஸுசரித: பாபம் விநாஶம் கதம்
காம க்ரோத மதாதயோ விகளிதா: காலா:
ஸுகாவிஷ்க்ருத: ।
ஞானனந்த மஹௌஷதி: ஸுபலிதா கைவல்ய நாதே ஸதா
மான்யே மானஸ புண்டரீக நகரே ராஜாவதம்ஸே
ஸ்த்திதே ॥

मान्ये–உயர்ந்தவரான **राजावतंसे**-சந்திரனை அணிந்த பரமசிவன் (உயர்ந்த ராஜா), **मे**–என்னுடைய, **मानसपुण्डरीकनगरे**–ஹிருதய கமலமாகிற பட்டணத்தில், **कैवल्यनाथे**–மோக்ஷமளிக்க வல்லவராக, (ஏக சக்ராதிபதியாக,) **सदा**–எப்பொழுதும், **स्थिते**–இருக்கும்பொழுது, **चतुरंघ्रिकः**-நான்கு கால்களுடன்கூடிய, **धर्मः**–தர்மம், **सुचरितः**–நன்ருய் அனுஷ்டிக்கப்பட்டது **पापं**–பாபமானது, **विनाशं गतं**–நசித்துவிட்டது. **कामक्रोधमदादयः**–காமம் குரோதம் மதம், முதலியவைகள், **विगलिताः**–நழுவிவிட்டன. **कालाः**–வருஷம் மாதம் முதலிய காலங்கள், **सुखाविष्कृतः**–மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன. **ज्ञानानन्दमहौषधिः**–அறிவு, ஆனந்தம் இவைகளாகிற சிறந்த பயிர், **सुफलिता**–நன்கு பலனைத் தந்தது.

சந்திரனைச் சூடாமணியாகப் பெற்றிருக்கும் நிறைவாய இறைவன், மனத்தாமரை யென்னும் சிறப்பு வாய்ந்த நகரில் மகுடாபிஷேகம் செய்து கொள்ளும்பொழுது நான்கு கால்களுள்ள தர்மம் நிறைவாகின்றது. பாபம் அழிக்கப்படுகின்றது. காமக்ரோத அகந்தை நீக்கப்படுகின்றன. இன்பம் நிறைந்த காலமுண்டாகிறது. அறிவு, ஆனந்தம் என்ற பயிர்கள் பெரு விளைவைக்கொடுக்கின்றன.

பல சிந்தனையாளர்கள், சிறந்த அரசியலமைப்பை எவ்வளவோ கற்பனை செய்துள்ளார்கள். ஆதர்ச நிலை எது வென்ருல் அமைதி நிலைப்பதுவேயாகும். நியாயம், ஒப்புறவு, திருப்தி, அமைதி இவைகள் அத்தகைய அரசியலமைப்பில் அமையும் பலமின்றி சீலமே அடிப்படையாகும். ராமராஜ்ய மென்ற பெயரே ஆதர்ச அரசியலமைப்பாகும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஞானிகளும் தவத்தோறும் தேவலோகம், தேவநகரம் என்பவைகளை சித்தரித்துள்ளார்கள். சிவனே அரசர்களுக்கு அரசன். அவர் மனதைத் தலைநகரமாக்கிக்கொண்டு வதிந்தால், உலகம் பல வழிகளிலும் நன்ருயமையும், அவர் நாட்டில் தர்மமே ஆளும். அங்கு பாபத்தின் குறியுமிருக்காது. அறிவும் ஆனந்தமும் அனைவருடைய உடமையுமாகும், நிறைவே பயனாக நிற்கும்,

धीयन्त्रेण वचोघटेन कविताकुल्योपकुल्याक्रमै-
रानीतैश्च सदाशिवस्य चरिताम्भोराशिदिव्यामृतैः ।
हृत्केदारयुताश्च भक्तिकलमाः साफल्यमातन्वते
दुर्भिक्षान्मम सेवकस्य भगवन्विश्वेश भीतिः कुतः ॥ ४० ॥

தீயந்த்ரேண வசோ கடேன கவிதா குல்யோபகுல்யாக்ரமை
ராநீதைச்ச ஸதாஶிவஸ்ய சரிதாம்போராஶி திவ்யாம்ருதை:
ஹ்ருத்கேதார யுதாச்ச பக்தி கலமா: ஸாபல்யமாதன்வதே
துர்பிக்ஷான் மம ஸேவகஸ்ய பகவன் விச்வேஶ பீதி: குத:॥

विश्वेश-உலகநாத, **भगवन्**-உயர்ந்த ஆறு குணங்களுள்ள ஈச, **धीयन्त्रेण**-புத்தியாகிற ராட்டின யந்திரத்திலும், **वचोघटेन**-வார்த்தையாகிற குடத்தாலும், **कविताकुल्योपकुल्याक्रमैश्च**-கவிதையாகிற பெரிய வாய்க்கால் சிறிய வாய்க்கால் வழியாகவும், **आनीतैः**-கொண்டுவரப்பட்ட, **सदाशिवस्य**-ஈச்வரனுடைய, **चरिताम्भोराशिदिव्यामृतैः**-சரித்திரமாகிற ஸமுத்திரத்தின் உயர்ந்த தீர்த்தங்களால், **हृत्केदारयुताः**-ஹிருதயமாகிற நஞ்சை நிலத்திலுள்ள, **भक्तिकलमाः**-பக்தியாகிற சம்பா பயிர்கள், **साफल्यमातन्वते**-நன்கு விளைவையடைகின்றன. **सेवकस्य मम**-உம்மை ஸேவிக்கிற எனக்கு, **दुर्भिक्षात्**-பஞ்சத்திலிருந்து, **भीतिः कुतः**-பயமேது?

ஓ தேவா, லோகங்களின் தலைவ, வாக்கு (நீரை முகந்துவரும்) பறியாக, கவிதை நீர்பாயும் சிறுகால்களாக, அறிவு என்னும் (நீரிரைக்கும்) கவலையால், சதாசிவன் புராணங்களென்னும் நீரை இதயமென்னும் வயல்களில் பாய்ச்சினல் பக்திப்பயிர் பயனுள்ள விளைவைப் பெறும். உனது பணியாளனை எனக்கு, பிறகு பஞ்சபயம் ஏன்?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இங்கு விவசாயத்தொழில் உதாரணமாக்கப்படுகின்றது. ஆத்மாவிற்கு பயிற்சி கொடுக்க, சிவபுராணங்களே நீர், அறிவே நீரிறைக்கும் கவலே, வாக்கே நீரிறைக்கும் பறி, கவியே சிறு கால்வாய்கள். இதயம் இப்படி நீர்பாய்ச்சப்பட்டால், பக்தி பேரளவில் விளைகின்றது. (40)

पापोत्पातविमोचनाय रुचिरैश्वर्याय मृत्युंजय
स्तोत्रध्याननतिप्रदक्षिणसपर्यालोकनाकर्णने ।
जिह्वाचित्तशिरोऽङ्घ्रिहस्तनयनश्रोत्रैरहं प्रार्थितो
मामाज्ञापय तन्निरूपय मुहुर्मामेव मा मेऽवचः ॥ ४१ ॥

பாபோத்பாத விமோசனய ருசிரைச்வர்யாய ம்ருத்யுஞ்ஜய
ஸ்தோத்ர த்யான நதி ப்ரதக்ஷிண
ஸபர்யாலோகநாகர்ணனே ।
ஜிஹ்வா சித்த ஶிரோங்க்ரி ஹஸ்த நயன ச்ரோத்ரை
ரஹம் ப்ரார்த்திதோ
மாமாக்ஞாபய தந்நிருபய முஹுர்மாமேவ மா மேऽவச: ॥

मृत्युञ्जय-யமனை ஜயித்தவ, पापोत्पातविमोचनाय-பாபமாகிற உத்பாதம் நீங்கவும், रुचिरैश्वर्याय-உயர்ந்த ஸம்பத்தின் பொருட்டும், स्तोत्रध्याननतिप्रदक्षिणसपर्यालोकनाकर्णने-துதிப்பது தியானம் செய்வது வணங்குவது பிரதக்ஷிணம் செய்வது பூஜை செய்வது, பார்ப்பது கேட்பது இவைகளில் जिह्वाचित्तशिरोंघ्रिहस्तनयनश्रोत्रैः-நாக்கு புத்தி சிரஸ் பாதங்கள், கைகள், கண்கள், காதுகள் இந்த இந்திரியங்களால் முறையே, अहं प्रार्थितः-நான் வேண்டப்பட்டவனுக இருக்கிறேன். मां आज्ञापय-எனக்கு உத்தரவு செய்யும், तत्-அதைக்குறித்து, मुहुः-அடிக்கடி, मां निरूपय-எனக்கு வழி காட்டும், मे-எனக்கு, अवचः-பேசாமலிருத்தல் (மௌனம்), मैव-வேண்டவே வேண்டாம்.

எமனை மடக்கும் இறைவா! எனது நாக்கு, மனது, தலை, கால்கள், கைகள், கண்கள், காதுகள் இவை உன் பணியில் ஊக்க என்னை வேண்டுகின்றன. உன்னைப்பாடவும், தியானம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

செய்யவும், வணங்கவும், பிரதக்ஷிணம் செய்யவும், பூஜிக்கவும், பார்க்கவும், கேட்கவும் விரும்புகின்றன. அவ்வாறு செய்வதால் பாபம் துலைந்து, பெரும்பயனைப் பெறலாம். எனக்குக் கட்டளை கொடு! மீண்டும் மீண்டும் (உன்னைப் பணிய) வழியைக்காட்டு! என்னிடம் மௌனம் காட்டாதே!

இறைவன் பணியில் மனதையும், ஐம்புலன்களையும் ஊக்கி விடுவதே பக்தியின் சாரமாகின்றது. இறைவனை எப்படிப் பணிவது? ஏன் அவரைப் பணியவேண்டும்? அதற்கு முறை என்ன? செயல் திறன் எது? என்பவைகளை இறைவனே விளக்கவேண்டும். அவனை வழிபடவும் அவனருள் பெற்றுக வேண்டும். ஆகையால் பக்தன், முறைகளையும், வழிகளையும் தனக்கு விளக்க மௌனமாக இருக்கக்கூடாதென்று இறைவனை வேண்டுகின்றான். தக்ஷிணாமூர்த்தியாக, மௌனமாக சிவ பெருமான் போதிக்கின்றார் சனகன், சநாதனன், சனந்தன், சநத்குமாரன் இவர்களைப்போன்று மௌன போதத்தை அறிந்து கொள்ளத் தனக்குத் திறமையில்லை என்கிறான். ஆகையால் தன்னிடத்து தக்ஷிணாமூர்த்தம் பயன் படாது என்கிறான். வாயைத்திறந்து சொற்களைக்கொண்டு தனக்கு விளக்கவேண்டு கிறான், (41)

गाम्भीर्यं परिखापदं घनधृतिः प्राकार उद्यद्गुण-
स्तोमश्चाप्तबलं घनेन्द्रियचयो द्वाराणि देहे स्थितः ।
विद्या वस्तुसमृद्धिरित्यखिलसामग्रीसमेते सदा
दुर्गातिप्रियदेव मामकमनोदुर्गे निवासं कुरु ॥ ४२ ॥

காம்பீர்யம் பரிகா பதம் கன த்ருதி: ப்ராகார உத்யத்குண
ஸ்தோமச்சாப்தபலம் கனேந்த்ரிய சயோ
த்வாராணி தேஹே ஸ்தித: ।
வித்யா வஸ்து ஸம்ருத்திரித்யகில ஸாமக்ரீ ஸமேதே ஸதா
துர்காதிப்ரியதேவ மாமக மனோ துர்கே நிவாஸம் குரு ॥

दुर्गातिप्रिय-கஷ்டப்பட்டு செல்லக்கூடிய மலை முதலிய வற்றில் மிகுந்த பிரியமுள்ளவனே (துர்கையினிடம் மிகுந்த ப்ரீதியுள்ளவரே), देव-தேவனே, परिखापदं-அகழின் லக்ஷண மான, गाम्भीर्यं-காம்பீர்யம், घनधृतिः-மிகுந்த தைரியமாகிற,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

प्राकार:-மதிள் சுவர், **उद्यद्गुणस्तोम:**-உண்டாகும் நற்குணங் களின் கூட்டமாகிற, **आप्तबल**-நம்பிக்கையுள்ள ஸைன்யம் **देहे स्थित:**-சரீரத்திலிருக்கும், **घनेन्द्रियचय:**-நெருக்கமாக இருக் கும் இந்திரியக் கூட்டமாகிற, **द्वाराणि**-கோட்டை வாயில்கள் **विद्या**-அறிவாகிற **वस्तुसमृद्धि:**-பொருள் நிறைவு, **इति**-இவ்வாறு, **अखिलसामग्रीसमेते**-எல்லாப்பொருள்களுடனும் கூடிய, **मामकमनोदुर्गे**-என்னுடையதான மனமாகிற கோட்டையில், **सदा**-எப்பொழுதும், **निवासं कुरु**-வாஸம் செய்யும்.

இறைவ, அணுகமுடியாத கோட்டையை (துர்க்கையை) நீ மிகவும் விரும்புகிறாய் எப்பொழுதும் என் மனது என்னும் கோட்டையில் வசிப்பாயாக. அது கம்பீரமாக அமைகின்றது. சிறப்பாக அமையும் அகழிகள், தைரியம் என்னும் மதிள்கள், அரசர் சேனைகளினும் சிறந்த வீரம், இவை பெற்றுள்ளது. புலன் களென்னும் கோட்டை வாயில்கள் உள்ளன. இக்கோட்டை அறிவென்னும் பொருளால் நிறைந்து முற்றும் ஸாதனங்கள் பெற்றதாக உள்ளது.

மனது ஒரு கோட்டையாக சித்திரிக்கப்பட்டு அதில் சிவன் உறையவேண்டுமென்று கோரப்படுகின்றது. இறைவனுக்கு கோட்டைகளெனில் பிரியம். அவர் மனமென்னும் கோட்டை யிலும் தங்கலாம். துர்கா (**दुर्गा**) என்ற சொல், உமாதேவிக்கும் ஆகின்றது அதில் நகைச்சுவை. லலிதாஸஹஸ்ரநாமத்திலும் துர்லபா (**दुर्लभा**), துர்கமா (**दुर्गमा**), துர்க்கா (**दुर्गा**), துக்கஹந்த்ரீ (**दुःखहन्त्री**), ஸுகப்ரதா (**सुखप्रदा**) என்றுள்ளது. (42)

मा गच्छ त्वमितस्ततो गिरिश भो मय्येव वासं कुरु
स्वामिन्नादिकिरात मामकमनःकान्तारसीमान्तरे ।
वर्तन्ते बहुशो मृगा मदजुषो मात्सर्यमोहादय-
स्तान्हत्वा मृगयाविनोदरुचितालाभं च संप्राप्स्यसि ॥

மா கச்ச த்வமிதஸ்ததோ கிரிஶ போ மய்யேவ வாஸம் குரு
ஸ்வாமின்னாதிகிராத மாமக மந: காந்தார ஸீமாந்தரே ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வர்த்தந்தே பஹுஶோ ம்ருகா மதஜுஷோ
மாத்ஸர்ய மோஹாதய
ஸ்தான் ஹத்வா ம்ருகயா விநோத ருசிதா லாபம்
ச ஸம்ப்ராப்ஸ்யஸி ॥

भो आदिकिरात-ஆதிகாலத்தில் வேடருபந்தரித்த. विभो-ஸர்வ வியாபியான, स्वामिन् -லோகநாத, गिरिश-கைலாஸ பர்வதத்தில் வஸிக்கிற ஈச, त्वं-நீ, इतस्ततः-இங்குமங்கும், मा गच्छ-போகாதே. मय्येव-என்னிடத்திலேயே, वासं कुरु-வாஸம் செய்யும், मामकमनःकान्तारसीमान्तरे-என் மனமாகிய காட்டின் எல்லைக்குள், मदजुषः-கர்வத்தையடைந்த, मात्सर्य-मोहादयः-மாத்ஸர்யம் அஞானம் முதலிய, मृगाः-மிருகங்கள், बहुशः वर्तन्ते-அதிகமாக இருக்கின்றன. तान् -அவைகளை, हत्वा-கொன்று, मृगयाविनोदरुचितालाभं च-வேட்டை விளையாட்டில் உள்ள பிரியத்தின் லாபத்தை, संप्राप्स्यसि-அடைவாய்.

ஓ மலைவாசியே! இறைவா! ஆதிவேடனே! நீ அங்குமிங்கும் (வேட்டை தேடி) அலைவதில்லையா? நீ தனியாக என்னிடம் வாழ்வாயாக. பொறாமை, மயக்கம், முதலிய கொடிய மிருகங்கள் என் மனதென்னும் அடர்ந்த காட்டில் திரிகின்றன. அவைகளைக் கொன்று நீ உன் வேட்டையில் மகிழ்வாயாக!

மனது கொடிய விலங்குகள் திரியும் ஒரு அடர்ந்த காடு. இந்த வளமுள்ள காட்டில் வேடனாகும் சிவபெருமான் வேட்டை ஆடட்டும். அதனால் மனதின் கொடிய பகுதிகள் தொலையும், சிவபெருமானும் தான் வேட்டையாடிய திருப்தியை அடையலாம்.

மகாபாரதத்தில், அர்ச்சுனனின் வில்லாண்மையை சோதிக்கவும், அவனுக்கு பாசுபதம் வழங்கவும், சிவபெருமான் வேடனுருக் கொண்டது சொல்லப்படுகின்றது.

ருத்திரத்தில் "நமஸ்தே அஸ்து தன்வனே பாஹுப்யாம் உத தே நம:" (नमस्ते अस्तु धन्वने बाहुभ्यामुत ते नमः) உன் வில்லிற்கு நமஸ்காரம் உனது இரு கரங்களுக்கும் நமஸ்காரம் என்றுள்ளது. வனானாம் பதயே நம: (वनानां पतये नमः) காடுகளின் பதிக்கு நமஸ்காரம், நமோ ம்ருகயுப்ய: (नमो मृगयुभ्यः)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மிருகங்களை வேட்டையாடுபவனுக்கு நமஸ்காரம் நம: காட்யாய ச (नमः काट्याय च) கற்களும் முள்ளும் நிறைந்த காட்டில் வசிப்பவருக்கு நமஸ்காரம் என்று குறிப்புகள் உள்ளன. (43)

करलग्नमृगः करीन्द्रभङ्गो
घनशार्दूलविखण्डनोऽस्तजन्तुः ।
गिरिशो विशदाकृतिश्च चेतः-
कुहरे पञ्चमुखोऽस्ति मे कुतो भीः ॥ ४४ ॥

கர லக்ன ம்ருக: கரீந்த்ர பங்கோ
கந ஶார்தூல விகண்டனோऽஸ்த ஜந்து: ।
கிரிஶோ விஶதாக்ருதிச் ச சேத: -
குஹரே பஞ்சமுகோऽஸ்தி மே குதோ பீ: ॥

करलग्नमृगः-கையில் மானையுடையதும், **करीन्द्रभङ्गः**-யானையை ஜயிப்பதும், கஜமுகாஸுரனைக்கொல்லுகிறவரும், **घनशार्दूलविखण्डनः**-வலிமையுள்ள புலியைக்கொல்லக்கூடியதும், பலிஷ்டனை வியாக்ராஸுரனைக்கொல்லுகிறவரும், **अस्तजन्तुः**-பிராணிகளை நாசம் செய்ததும், பிரளயத்தில் உலகத்தையழித்தவரும், **गिरिशः**-மலையிலிருக்கிற, கைலாஸ பர்வதத்திலிருக்கிற, **विशदाकृतिश्च**-சுத்தமான, வெளுப்பான ரூபத்தையுடையவருமான, **पञ्चमुखः**-ஸிம்மம், ஐந்து முகங்களுடன் கூடிய ஈச்வரன், **मे चेतःकुहरे**-என் மனமாகிற குகையில், **अस्ति**-இருக்கிறது, இருக்கிறார். **मे**-எனக்கு, **कुतः भीः**-பயமேது ? (ஈச்வரனுக்கும் ஸிம்மத்திற்கும் சிலேடை)

என் மனக்குகையில் ஐந்துமுகங்களுடன் இறைவன் (சிங்கம்) வதிகின்றார். மலையில் வதிபவன் கையில் ஒரு மானை வைத்துள்ளார். (அதுவும் ஒரு மானை இறையாகப் பிடித்துள்ளது) அவர் யானையைக்கொன்றார். (யானைகளைக்கொல்லவும் வல்லது) கொடிய புலியைக்கொன்றார். (புலிகளையும் வெல்லவல்லது. தன்மீது இறந்த விலங்குகளை பெற்றவர் (அருகே இறந்த விலங்குகளை உடையது) வெண்மை நிறம் பெற்றவர் (கம்பீரத் தோற்றம் பெற்றது.) இனி எனக்கு பயமேது !

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இந்த சுலோகம் சிலேடை நிறைந்துள்ளது. சொற்கள் சிவனிற்கும் சிங்கத்திற்கும் பொருந்துபவை. சிவனிற்கு ஐந்து முகங்கள், பஞ்சமுகன் என்று அழைக்கப்படுகின்ருன். அதற்கு சிங்கமென்பதும் பொருள்.

பக்தனின் மனது ஒரு குகையாகச் சொல்லப்படுகின்றது சிவனென்னும் சிங்கம் குகையில் வசிக்க, பக்தன் எதைப்பற்றியும் பயப்படவேண்டியதில்லை. (44)

छन्दःशाखिशिखान्वितैर्द्विजवरैः संसेविते शाश्वते
सौख्यापादिनि खेदभेदिनि सुधासारैः फलैर्दीपिते ।
चेतःपक्षिशिखामणे त्यज वृथासंचारमन्यैरलं
नित्यं शंकरपादपद्मयुगलीनीडे विहारं कुरु ॥ ४५ ॥

சந்த: ஶாகி ஶிகாந்விதைர் த்விஜவரை:
ஸம்ஸேவிதே ஶாச்வதே
ஸௌக்யாபாதினி கேத பேதினி ஸுதாஸாரை:
பலைர் தீபிதே ।
சேத: பக்ஷி ஶிகாமணே த்யஜ வ்ருதா ஸஞ்சார மந்யைரலம்
நித்யம் ஶங்கர பாதபத்ம யுகளீ நீடே விஹாரம் குரு ॥

चेतःपक्षिशिखामणे-மனமாகிய சிறந்த பறவையே, **छन्दश्शाखिशिखान्वितैः**-வேதங்களாகிற மரங்களின் கிளைகளாகிற உபநிஷத்துக்களுடன்கூடிய, **द्विजवरैः**-உயர்ந்த பக்ஷிகளால் உயர்ந்த பிராம்மணர்களால், **संसेविते**-கூடிக்கொண்டு ஸேவிக்கப்பட்டதும், **शाश्वते**-நாசமற்றதும், **सौख्यापादिनि**-ஸௌக்கியத்தையுண்டுபண்ணக்கூடியதாயும், **सुधासारैः**-அமிருதம்போலுள்ள ரஸத்தையுடைய, **फलैः**-பழங்களால், ஞானம் வைராக்கியம் முதலிய பலன்களால் **खेदभेदिनि**-பசியைப்போக்குவதும், ஸம்ஸார துக்கத்தைப்போக்குவதும் **दीपिते**-பிரகாசிக்கிறதுமான, **शङ्करपादपद्मयुगलीनीडे**-ஈசுவரனுடைய திருவடித்தாமரையாகிற கூட்டில், **नित्यं**-எப்பொழுதும், **विहारं कुरु**-விளையாடிக்கொண்டிரு, **अन्यैरलं**-இதர தேவதைகளை நாடுவதில் பயனில்லை. **वृथासंचारं त्यज**-வீணுக அலைவதை விட்டுவிடு.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மனமென்னும் பறவையே, வேதாந்தத்தை மிகவும் கற்றவர் நாடும் சங்கரனது தாமரை அடிகளில் நீ என்றும் அமைவாயாக. (மரக்கிளைகளில் உட்கார்ந்திருக்கும் பறவைகள்) அது என்றும் உள்ளது. (நிலையானது) அதுவே சுகத்தைக்கொடுப்பது (ஆறுதல்) துன்பத்தைக்களைவது (ஓய்வை தருவது) அது இனிமையென்னும் பழங்களுடன் பிரகாசிப்பது (தேன் நிறைந்த பழங்கள்) வீணாக அலைவதை விட்டொழி. வேண்டியது அலைந்து திரிந்து விட்டாய்!

மனதை ஒரு பறவையாக வைத்து, அதை இறைவனடிகள் என்னும் கூட்டில் அமையச்சொல்லுகின்றார். அது வீணாக அங்கு மிங்கும் அலைந்து களைப்படைவானேன்? அதனுடைய பாதுகாப்பு கூட்டிலேயே அமைகின்றது. அங்கு அமைதியாகவும் ஆனந்தத்துடனும் இருப்பது கூடும். (45)

आकीर्णे नखराजिकान्तिविभवैरुद्यत्सुधावैभवै-
राधौतेऽपि च पद्मरागललिते हंसव्रजैराश्रिते ।
नित्यं भक्तिवधूगणैश्च रहसि स्वेच्छाविहारं कुरु
स्थित्वा मानसराजहंस गिरिजानाथाङ्घ्रिसौधान्तरे ॥

ஆகீர்ணே நகராஜி காந்தி விபவைருத்யத்ஸுதா வைபவை
ராதௌதேऽபி ச பத்மராக லலிதே ஹம்ஸ வ்ரஜைராச்ரிதே
நித்யம் பக்தி வதூகணைச்ச ரஹஸி ஸ்வேச்சா விஹாரம் குரு
ஸ்தித்வா மானஸ ராஜஹம்ஸ கிரிஜா நாதாங்க்ரி
ஸௌதாந்தரே ॥

मानसराजहंस—மனமாகிய சிறந்த ஹம்ஸ பக்ஷியே, **नखराजिकान्तिविभवैः**—நகவரிசைகளின் ஒளிகளின் பெருமைகளால், **आकीर्णे**—வியாபிக்கப்பட்டிருப்பதும், **उद्यत्सुधावैभवैः**—விருத்தியடைகிற சிரஸிலிருக்கும் சந்திரனின் அமிருதமய கிரணங்களால், சுண்ணாம்புகளால், **आधौते**—வெண்மை (சுத்தம்) ஆக்கப்பட்டதும், **अपि च**—மேலும், **पद्मरागललिते**—பத்மராகம்போல் அழகுள்ளதும், பத்மராகக் கற்களால் இழைக்கப்பட்டதும், **हंसव्रजैः**—ஹம்ஸபக்ஷிகளால் ஹம்ஸ மந்திர த்யானம் செய்யும் மஹரிஷிகளால், **आश्रिते**—

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆச்ரயிக்கப்பட்டதுமான, **गिरिजानाथांघ्रिसौधान्तरे**-மலைமகள் நாதருடைய திருவடியாகிய உப்பரிகையின் மத்தியில், **स्थित्वा** – இருந்துகொண்டு, **भक्तिवधूगणैः**-பக்தியாகிய ஸ்திரீகளுடன், **रहसि**-ஏகாந்தத்தில், **नित्यं**-எப்பொழுதும், **स्वेच्छाविहारं कुरु**-தன்னிஷ்டம்போல் விளையாடு.

ராஜஹம்ஸமாகிய மனமே, கால் நகங்களால் வெளிச்சம் பெற்றும் சந்திர கிரணங்களால் சுண்ணும்படிக்கப்பட்டதும், ரத்ன மணிகளால் அலங்கரிக்கப்பட்டதும், ஹம்ஸங்களால் நிறையப் பட்டதுமான, மலைமகள் கணவன் சிவபெருமானின் திருவடிகள் என்னும் மாளிகையில் தங்குவாயாக. அங்கு தனித்து பிறபக்தர் களுடன் (பெண்களுடன்) நீ வேண்டியபடி இன்பத்தில் திளைத்து நிற்கலாம்.

பறவையின் உருவகம் இங்கும் நீட்டப்படுகின்றது. இதில் மனது ராஜஹம்ஸமாகின்றது. இறைவனடிகள் மாளிகையா கின்றது. இறைவனடிகளில் மனது அமைந்து, பேரின்பத்தை அடையட்டும். அவனடிகளிலேயே ரிஷிகளும் தவசிகளும் வதி கின்றார்கள் ஹம்ஸம் என்ற சொல், ஹம்ஸத்தையும், தவசி, ரிஷி இவர்களையும் குறிக்கின்றது. (46)

शंभुध्यानवसन्तसङ्गिनि हृदारामेऽघजीर्णच्छदाः
स्रस्ता भक्तिलताच्छटा विलसिताः पुण्यप्रवालश्रिताः ।
दीप्यन्ते गुणकोरका जपवचःपुष्पाश्च सद्वासना
ज्ञानानन्दसुधामरन्दलहरी संवित्फलाभ्युन्नतिः ॥ ४७ ॥

ஶம்பு த்யான வஸந்த ஸங்கினி ஹ்ருதாராமேऽக
ஜீர்ணச்சதா:
ஸ்ரஸ்தா பக்தி லதாச்சடா விலஸிதா: புண்ய
ப்ரவாள ச்ரிதா: ।
தீப்யந்தே குணகோரகா ஜப வச: புஷ்பாச்ச ஸத்வாஸநா
ஞானந்தஸுதா மரந்தலஹரீ ஸம்வித்பலாப்யுந்நதி: ॥

शम्भुध्यानवसन्तसंगिनि-ஈச்வர த்யானமாகிற வஸந்த காலத்தோடுகூடிய, **हृदारामे**-ஹிருதயமாகிய உத்யானத்தில் **अघजीर्णच्छदाः**-பாபமாகிற இலைச்சருகுகள், **स्रस्ताः**-உதிர்ந்தன.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

विलसिता:-பிரகாசமுள்ள, **पुण्यप्रवालश्रिता:**-புண்யமாகிற இளந்தளிர்களுடன் கூடியதும், **गुणकोरका:**குணங்களாகிற மொட்டுகளுடையதும், **सद्वासना:**-நல்ல வாஸனையை உடையதும், **जपवच:पुष्पाश्च**-மந்திரோச்சாரணமாகிற புஷ்பங்களுடன் கூடியதுமான, **भक्तिलताच्छटाश्च**-பக்தியாகிய அனேகம் கொடிகளும், **ज्ञानानन्दसुधामरन्दलहरी**-ஞானம் ஆநந்தம் இவைகளாகிற அமிருதம் புஷ்பத்தேன் இவைகளின் பெருக்கும், **संवित्फलाभ्युन्नति:**-பிரம்பஞானமாகிய பழத்தின் உயர்வும், **दीप्यन्ते**-பிரகாசிக்கின்றன.

இதயமென்னும் தோட்டத்தில், தியானமென்னும் வசந்த காலத்தில், பாபமென்னும் பழைய இலைகளை உதிர்த்து, தகுதியென்னும் துளிர்களையும், சீலமென்னும் மொட்டுகளையும், திவ்ய நாமங்கள் என்னும் அலர்ந்த மலர்களையும், நல்ல வாசனைகள் என்னும் இனிய கந்தங்களையும், ஆனந்தம், ஞானம் என்னும் தேனையும், பிரம்மானந்தமென்னும் பழத்தையும் கொண்ட கொடிகள் அழகாகவும் அளவற்றும் உள்ளன.

இங்கு பக்தி நிறைந்த இதயத்தின் கவிதைச்சித்திரம் அமைகின்றது. இதயமென்னும் பூங்காவில் பக்தியென்னும் கொடி செடிகள் வளர்கின்றன. பருவமும் பொருத்தமானதாகின்றது, அதுவும் தியானமென்னும் வசந்தகாலம். அழகான மலர்கள் இனிய பழங்கள் இவைகளின் பெருத்த விளைவு உறுதியாக உள்ளது நற்சொற்கள், நற்பணிகள், நல்ல சிந்தனைகளே அவைகள். (47)

नित्यानन्दरसालयं सुरमुनिस्वान्ताम्बुजाताश्रयं
स्वच्छं सद्द्विजसेवितं कलुषहृत्सद्वासनाविष्कृतम् ।
शंभुध्यानसरोवरं व्रज मनोहंसावतंस स्थिरं
किं क्षुद्राश्रयपल्वलभ्रमणसंजातश्रमं प्राप्स्यसि ॥ ४८ ॥

நித்யானந்த ரஸாலயம் ஸுரமுநி ஸ்வாந்தாம்பு ஜாதாச்ரயம்
ஸ்வச்சம் ஸத்த்விஜ ஸேவிதம் கலுஷஹ்ருத்
ஸத்வாஸநாவிஷ்க்ருதம் ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ம்பு த்யான ஸரோவரம் வ்ரஜ மனோ ஹம்ஸாவதம்ஸ

ஸ்த்திரம்

கிம் க்ஷுத்ராச்ரய பல்வல ப்ரமண ஸஞ்ஜாத

ச்ரமம் ப்ராப்ஸ்யஸி ||

मनोहंसावतंस-மனமாகிய உயர்ந்த ஹம்ஸமே, **नित्यानन्द-दलालयं**-சாச்வதமான ஆனந்தமாகிற தீர்த்தத்திற்கு இருப்பிடமாயும், **सुरमुनिस्वान्ताम्बुजाताश्रयं**-தேவர்கள் முனிகள் இவர்களின் மனமாகிற தாமரை மலருக்கு ஆச்ரயமாயும், **स्वच्छं**-வேறு சிந்தனைகளில்லாததும் (சுத்தமாயும்), **सद्द्विजसेवितं**-ஸத்பிராம்மணர்களால் (உயர்ந்த ஹம்ஸங்களால்) ஸேவிக்கப்பட்டதும், **कलुषहृत्**-பாபத்தை (அழுக்கைப்)போக்குவதும், **सद्वासनाविष्कृतं**-நல்ல கர்மாக்களின் வாஸனையால் (நறுமணத்தால்) பிரகாசிக்கப்பட்டதும், **स्थिरं**-நாசமற்றதுமான (வற்றாததுமான), **शंभुध्यानसरोवरं**-ஈச்வரன் தியானமான சிறந்த குளத்தை, **व्रज**-அடைவாய். **किं**-ஏன், **क्षुद्राश्रय-पल्वलभ्रमणसंजातश्रमं**-அற்பதேவதைகளின் ஆச்ரயமாகிற சிறு குட்டையில் சுற்றுகிற சிரமத்தை, **प्राप्स्यसि**- அடைகிறாய்

ஹம்ஸங்களில் சிறந்ததான மனமே! என்றைக்கும் ஆனந்தமானதும், தேவர்கள், ரிஷிகள் இவர்களின் இதயகமலங்கள் வளர்வதும், அறிவாளிகளாலும், நல்லவர்களாலும், நாடப்படுவதும், (ஹம்ஸங்கள்) நல்ல கந்தங்களை வீசுவதும், பாபமென்னும் அழுக்கை நீக்கக்கூடியதுமான சிவத்தியானம் என்னும் குளத்திற்குச் செல் இழிந்தோருக்குச் சேவை செய்யும் கலங்கிய குட்டைகளில் அலைந்து ஏன் வீணாக நீ களைத்துப்போகிறாய்?

இங்கும் மனது ராஜஹம்ஸம் என்று அழைக்கப்படுகின்றது. அதற்குத் தகுந்த இடம் சிவத்தியானம் என்னும் குளமே. அது, சிறுமனதும், வன்னெஞ்சும் படைத்த இழியோர்களை நாடுதலென்னும் அழுக்குக் குட்டைக்குச் சென்று தன்னை தாழ்த்திக் கொள்வது சரியல்ல.

அல்பர்களாயும் சிறியவர்களாயுமுள்ளவர்களின் ஆதரவை நாடித் திரிதல் மீண்டு இழிக்கப்படுகின்றது. (48)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

आनन्दामृतपूरिता हरपदाम्भोजालवालोद्यता
स्थैर्योपघ्नमुपेत्य भक्तिलतिका शाखोपशाखान्विता ।
उच्चैर्मानसकायमानपटलीमाक्रम्य निष्कल्मषा
नित्याभीष्टफलप्रदा भवतु मे सत्कर्मसंवर्धिता ॥ ४९ ॥

ஆனந்தாம்ருதபூரிதா ஹர பதாம்போஜாலவாலோத்யதா
ஸ்த்தைர்யோபக்னமுபேத்ய பக்தி லதிகா
ஶாகோபஶாகாந்விதா ।
உச்சைர் மாநஸ காய மாந படலீமாக்ரம்ய நிஷ்கல்மஷா
நித்யாபீஷ்ட பலப்ரதா பவது மே ஸத்கர்ம
ஸம்வர்த்திதா ॥

आनन्दामृतपूरिता–ஆநந்தமாகிற அமிருதத்தால் நிரப்பப் பட்டதும், **हरपदाम्भोजालवालोद्यता**–ஈசுவரனின் திருவடிக் கமலமாகிற பாத்தியிலிருந்து கிளம்பியதாயும், **स्थैर्योपघ्नमुपेत्य**–ஸ்திரத்தன்மையான கொழுக்கொம்பையடைந்து, **शाखोपशाखान्विता**–பெருங்கிளை சிறுகிளைகளுடன் கூடியதும், **उच्चैर्मानसकायमानपटलीं**–உயர்ந்த மனமாகிற பந்தலை, **आक्रम्य**–அடைந்து, **निष्कल्मषा**–தோஷமற்றதும், **सत्कर्मसंवर्धिता**–ஸத்கர்மாக்களால் (உரமிட்டு) விருத்தியடைந்திருக்கிறதுமான **भक्तिलतिका**–பக்தியாகிய கொடியானது, **मे**–எனக்கு, **नित्याभीष्टफलप्रदा**–சாச்வதமான இஷ்டபலத்தை அளிக்கக் கூடியதாக, **भवतु**–ஆகட்டும்.

ஆனந்தமென்னும் நீரால் வளர்க்கப்பட்டதும், சிவனடித் தாமரைகளினின்று முளைத்ததும், வேர்களும் சல்லிவேர்களும் விட்டு திடமென்னும் நடுமரத்தை சுற்றிக்கொண்டுள்ளதும், பழுதற்ற பரந்த மனமென்னும் பந்தலில் படர்ந்ததுமான இந்த பக்தியென்னும் கொடி நான் எப்பொழுதும் நாடுகின்ற பழத்தை எனக்குக் கொடுக்கட்டும்.

47வது சுலோகத்தில் பக்தி கொடியுடன் உவமிக்கப்பட்டது. இங்கு அந்த பக்திக்கொடியை எப்படி வளர்த்து விளைவைப் பெறுவதென்பது சொல்லப்படுகின்றது. அது இறைவனடியிலிருந்து முளைக்கட்டும், திட சித்தம் என்னும் கோலைப்பற்றி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நிற்கட்டும். மனம் முழுதும் பரவி அதை மூடிக்கொள்ளட்டும். இவ்விதம் தூய பக்தி நற்செய்கைகளால், மோக்ஷமென்னும் விடுதலைக்கு வழிவிடும் ஞானமென்னும் பழக்கத்தைக் கொடுக்கட்டும்.

संध्यारम्भविजृम्भितं श्रुतिशिरःस्थानान्तराधिष्ठितं
सप्रेमभ्रमराभिराममसकृत्सद्वासनाशोभितम् ।
भोगीन्द्राभरणं समस्तसुमनःपूज्यं गुणाविष्कृतं
सेवे श्रीगिरिमल्लिकार्जुनमहालिङ्गं शिवालिङ्गितम् ॥ ५० ॥

ஸந்த்யாரம்ப விஜ்ரும்பிதம் ச்ருதி ஶிரஸ்ஸ்தானாந்த
ராதிஷ்ட்டிதம்
ஸப்ரேம ப்ரமராபிராமமஸக்ருத் ஸத்வாஸநாஶோபிதம் ।
போகீந்த்ராபரணம் ஸமஸ்த ஸுமந: பூஜ்யம்
குணாவிஷ்க்ருதம்
ஸேவே ஸ்ரீகிரி மல்லிகார்ஜுந மஹாலிங்கம்
ஶிவாலிங்கிதம் ॥

संध्यारम्भविजृम्भितं–ஸந்தியாகால ஆரம்பத்தில் நர்த்தனத்தினால் பிரகாசிக்கிறவரும், (ஸந்தியா காலத்தில் மலருகிறதும்), **श्रुतिशिरस्स्थानान्तराधिष्ठितं**-உபநிஷத்துக்களால் அறியக்கூடியவரும், (காது சிரஸு இந்த இடங்களிலிருப்பதும்), **सप्रेमभ्रमराभिरामं**-பிரியத்துடன் கூடிய ப்ரமராம்பிகைக்கு இசைந்தவரும், (பிரியத்துடன்கூடிய வண்டுகளுக்கு இசைந்ததும்), **असकृत्** – அடிக்கடி, **सद्वासनाशोभितं**–நல்ல எண்ணத்தால் (நறுமணத்தால்) சோபிக்கப்பட்டவரும், **भोगीन्द्राभरणं**–ஸர்ப்பங்களை ஆபரணங்களாக உடையவரும் (இன்பமுள்ளவர்களுக்கு ஆபரணமாயும்), **समस्तसुमनःपूज्यं**– எல்லா தேவதைகளாலும் பூஜிக்கத்தக்கவரும், (எல்லா புஷ்பங்களிலும் உயர்ந்ததாயும்), **गुणाविष्कृतं**–நல்ல குணங்களால் பிரகாசிப்பவரும், (நார்களால் பிரகாசிப்பதுமான), **शिवालिङ्गितं** - அம்பிகையுடன் கூடியவருமான, **श्रीगिरिमल्लिकार्जुनमहालिङ्गं** – மலையிலிருக்கிற மல்லிகையுடன்கூடிய மருதமரத்துக்கொப்பான ஸ்ரீசைலத்திலிருக்கும் மல்லிகார்ஜுனேச்வர மகாலிங்கத்தை, **सेवे**–பஜிக்கிறேன்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ சைலத்துள்ள மல்லிகார்ஜுனர் என்னும் பெருலிங்கத்தை நான் வணங்குகின்றேன். (அழகான மலையில் மல்லிகைக்கொடிகளால் சுற்றப்பட்ட அர்ஜுனமரம்) அவர் பார்வதி அம்மையாரால் அணைக்கப்படுகின்றார். (மங்களகரமானது) மாலையில் விசித்திரமாக நர்த்தனம் செய்கின்றார். (மாலை நேரத்தில் அதிகமாக மலர்கின்ற) வேதாந்தத்தால் நிலைக்கப்பட்டவர் (அவைகளின் மலர்கள் காதுகளிலும், தலையிலும் அணியப்படுகின்றன.) பிரமராம்பிகை தேவியார் அன்பு செய்ய அருகிருக்கும் அவர் (தம்மைச்சுற்றி ஆவலுடன் தேனீக்கள் ஊதிநிற்க) தவசிகளின் தியானத்தில் பிரகாசிக்கின்றவர் (எப்பொழுதும் இனிய மணத்தைக்கமழும்) பாம்புகளை அணிகளாக அணிபவர். (போகத்தை நாடுபவர்களுக்கு உதவும்) எல்லா தேவர்களாலும் வணங்கப்படுவர் (பூமரங்களில் சிறந்ததான) சீலத்தையே புறத்திடுபவர் (தன் சிறந்தத ன்மையால் நன்றாக அறியப்படுவது.)

இதிலும் அடுத்த சுலோகத்திலும் ஸ்ரீசைல சிவலிங்கம் புகழப்படுகின்றது. அது ஆந்திரதேசத்தில் அமையும் சிறந்த சிவக்ஷேத்திரம். அங்கு லிங்கத்தின் பெயர் மல்லிகார்ஜுனன். அம்மையாரின் பெயர் பிரமராம்பிகையார். அர்ஜுனம் ஒரு மரத்திற்கும் பெயர். இங்கு சொற்கள் இரட்டுற மொழிதல் என்ற அலங்காரத்தில் அமைகின்றன. (50)

भृङ्गीच्छानटनोत्कटः करिमदग्राही स्फुरन्माधवा-
ह्लादो नादयुतो महासितवपुः पञ्चेषुणा चादृतः ।
सत्पक्षः सुमनोवनेषु स पुनः साक्षान्मदीये मनो-
राजीवे भ्रमराधिपो विहरतां श्रीशैलवासी विभुः ॥ ५१ ॥

ப்ருங்கீச்சா நடனோத்கட: கரிமத க்ராஹீ ஸ்புரன்மாதவா
ஹ்லாதோ நாத யுதோ மஹாஸிதவபு:
பஞ்சேஷுணா சாத்ருத: ।
ஸத்பக்ஷ: ஸுமனோவனேஷு ஸ புந: ஸாக்ஷான் மதீயே மனோ
ராஜீவே ப்ரமராதிபோ விஹரதாம் ஸ்ரீசைலவாஸீ விபு: ॥

विभुः—நாநாவிதமான தோற்றமுடையவரும், भृङ्गीच्छानटनोत्कटः—பிருங்கி மகரிஷியின் இச்சைப்படி நடனம் செய்வதில் (பெண்வண்டின் இச்சையை அனுஸரிப்பதில்)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆசையுள்ளவரும், करिमदग्राही கஜாஸுரன் கர்வத்தை அடக்குகிறவரும், (யானையின் மதஜலத்தை பானம் செய்கிறதும்), स्फुरन्माधवाह्लादः-பிரகாசிக்கிற விஷ்ணுவினிடம் பிரீதியுடையவரும் (பிரகாசமான வஸந்தகாலத்தில் பிரியமுடையதும்), नादयुतः-ப்ரணவநாதத்துடன் கூடியவரும், (ரீங்காரத்துடன் கூடியதும்), महासितवपुः-சுத்த வெண்மையான சரீரத்துடன் கூடியவரும் (மிகவும் கருமையான உருவத்துடன் கூடியதும்), पञ्चेषुणा-மன்மதனால், आदृतः-ஆதரவு செய்யப்பட்டவரும் (ஆதரவு செய்யப்பட்டதும் மன்மதனின் மலராகிய வில்லுக்கு வண்டுகள் நாண்கயிர்) सुमनोवनेषु-தேவதைகளைக் காப்பாற்றுவதில் (புஷ்போத்யானங்களில்), सतरक्षः-விசேஷ விருப்பமுடையவரும் (விசேஷ விருப்பமுடையதும் நல்ல இரக்கைகளுள்ளதும்) श्रीशैल-वासी च-ஸ்ரீசைலத்திலிருக்கிறவருமான (மலையிலிருக்கிறதுமான), सः-அந்த, भ्रमराधिपः-பிரமராம்பிகையின் பர்த்தாவான மல்லிகார்ஜுனேச்வரர், (உயர்ந்த வண்டு), साक्षात्-பிரத்யக்ஷமாக, पुनः-மறுபடியும், मदीये मनोराजीवे-என் மனமாகிற தாமரை புஷ்பத்தில், विहरताम्-விளையாடட்டும்.

ஸ்ரீசைலத்தில் வதியும் எங்கும் பரந்துள்ள பிரமராம்பிகையின் தலைவ, (மலையில் வசித்து எங்கும் சுற்றியலையும் தேனீ) பிருங்கி மகரிஷியின் விருப்பப்படி நர்த்தனம் செய்கின்றவரே! (ராணி ஈயின் வழிசெல்லும் தேனீ) யானை (அசுரன்)யை அழித்தவரே (யானையின் மதத்தைப் பருகுகின்ற) பிரகாசம் பொருந்திய மகாவிஷ்ணுவுடன் இனிதமைபவரே (வசந்தகாலத்து மகிழும்) ஓமென்னும் நாதத்துடன் அமைந்தவரே (ரீங்காரத்தை உண்டாக்கும் தேனீயே) பிரகாசமுள்ள மேனியைபெற்றவரே (நீலவர்ண உடம்பைப் பெற்ற தேனீ) மன்மதனுக்கு சரண் கொடுப்பவனே (காமனுக்கு துணைசெய்வது) நல்லதைக் காப்பாற்ற முனைந்து நிற்பவர் (பூங்காக்களில் காணப்படுபவை, அழகிய சிறகுகள் பெற்றவை) அணித்தே அமைபவனே (கண்முன் நிற்பது) அவர் என் மனதென்னும், தாமரையில் திகழ்வாராக! இதிலும் இருபொருட் சொற்களே உள்ளன. ஸ்ரீசைலநாதருக்கும் தலையாய தேனீக்கும் சொற்கள் பொருந்துகின்றன,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்கள் மிகவும் புனிதமானவை. (1) ஸௌராஷ்டிரத்திலுள்ள சோமநாத் (2) ஸ்ரீ சைலம் மல்லிகார்ஜுனம் (3) உஜ்ஜெயினியிலுள்ள மஹாகாலம் (4) ஓங்காரத்திலுள்ள பரமேசுவரர் (5) இமயத்திலுள்ள கேதாரம் (6) தாகினியிலுள்ள பீமசங்கரர் (7) வாரணசியிலுள்ள விச்வேச்வரர் (8) கோதாவரியின் ஆரம்பத்திலுள்ள திரியம்பகம் (9) சிதா பூமியிலுள்ள வைத்தியநாதர் (10) தாருக வனத்திலுள்ள நாகேசர் (11) ஸேதுபந்தனத்திலுள்ள ராமேசர் (12) சிவாலயத்திலுள்ள குஸுமேசர் இம்மூர்த்திகளின் நாமங்களை பக்தர்கள் சொல்லுவதாலேயே மங்களமும், புண்ணியமும் அவர்களுக்கு உண்டாகின்றது.
(51)

कारुण्यामृतवर्षिणं घनविपद्ग्रीष्मच्छिदाकर्मठं
विद्यासस्यफलोदयाय सुमनःसंसेव्यमिच्छाकृतिम् ।
नृत्यद्भक्तमयूरमद्रिनिलयं चञ्चज्जटामण्डलं
शंभो वाञ्छति नीलकंधर सदा त्वां मे मनश्चातकः ॥

காருண்யாம்ருத வர்ஷிணம் கனவிபத் க்ரீஷ்மச்சிதா கர்மடம்
வித்யா ஸஸ்ய பலோதயாய ஸுமந:
ஸம்ஸேவ்யமிச்சாக்ருதிம் ।
ந்ருத்யத் பக்த மயூரமத்ரிநிலயம் சஞ்சஜ்ஜடா மண்டலம்
ஶம்போ வாஞ்ச்சதி நீலகந்தர ஸதா த்வாம் மே
மநச்சாதக: ॥

नीलकन्धर–கருமையான கழுத்தையுடையவரே (கரு மேகமே), **शंभो**–ஸுகத்தைக் கொடுக்கக்கூடியவரான ஈச, **मे मनश्चातकः**–என் மனமாகிற சாதக பக்ஷி, **कारुण्यामृतवर्षिणं**-கருணையாகிற அமிருதத்தை வர்ஷிப்பவரும் (கருணையால் ஜலத்தைப்பொழிகிறதும்), **घनविपद्ग्रीष्मच्छिदाकर्मठं**–அதிக ஆபத்தாகிற உஷ்ணத்தைப்போக்குவதில் திறமையுள்ளவரும் (கோடைகாலத்தின் தாபத்தைப்போக்குவதில் திறமையுள்ளதும், **विद्यासस्यफलोदयाय**–ஞானமாகிற பயிரின் பிரம்மானந்த ரூபமான பலத்தின்பொருட்டு, **सुमनस्संसेव्यं**–தேவதைகளாலும், மகான்களாலும், விவசாயிகளாலும் ஸேவிக்கத்தக்கதும், **इच्छाकृतिं**–இஷ்டம்போல் ரூபமுடைய

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வரும், नृत्यद्भक्तमयूरं-நர்த்தனம் செய்யும் பக்தர்களாகிற மயிலுடன் கூடியவரும் (நர்த்தனம் செய்யும் பிரீதியுள்ள மயில்களையுடையதும்), अद्रिनिलयं-மலையிலிருப்பதும், चञ्चज्जटामण्डलं-அசைந்துகொண்டிருக்கும் ஜடாபாரத்தையுடையவருமான (சலிக்கும்படியான மின்னலையுடையதுமான), स्वाः-உம்மை, सदा-எப்பொழுதும், वाञ्छति-விரும்புகிறது.

மங்களத்தைக் கொடுப்பவனே! நீலகண்டா! (நீர் நிறைந்த கருமேகமே) கருணையென்னும் தேனைப்பொழிகின்ற உன்னை என் மனமாகிய சாதக பக்ஷி சதா நாடி நிற்கின்றது. (மழையைப் பொழிகின்ற மேகமே) பேரின்னல்களையும் விலக்கவல்லவனே (எரியும் சூட்டை அகற்ற வல்லமை படைத்துள்ளது) அறிவென்னும் பழத்தைப்பெற தவசிகளால் நாடப்படுபவனே (பெருவிளைவைப்பெற விவசாயிகளால் வேண்டப்படுவது) எவ்வுருவையும் கொள்ள வல்லாய் (பல்லுருவுகளையும் தோற்றுகின்றது) ஆடுகின்ற அடியவர்களால் சூழப்படுபவனே (ஆடும் மயிலிற்கு உகந்ததாவது) மலைமீது வசிக்கின்றவனே (மலையுச்சியிலிருப்பது) அசையும் சடைகளை உடையவனே (மின்னலால் தொடரப்படுவது)

இந்த சுலோகத்திலும் இரட்டுற மொழிதலுள்ளது. சிவனும், மழைமேகமும் இணைக்கப்படுகின்றார்கள். நீலகண்டன் என்ற சொல்லிற்கு நீலக்கழுத்துடைய பிரான், மழைமேகம் என்ற இரு பொருளுண்டு. மேகத்தினின்று விழும் மழைத்துளிகளையே பருகி உயிர் வாழ்வது சாதகப்பக்ஷி அதனாலே அது மழையையே நாடி நிற்கின்றது. அதுவே போன்று பக்தன் தன் மனம் இறைவனை நாடி நிற்பதாகச் சொல்லுகின்றான். மழை மேகத்தைக்காண மயில் தோகையை விரித்தாடி மகிழச்சியடைகின்றது. இறைவன் தரிசனம் பெற அடியார்கள் ஆனந்தத்தால் ஆடுகின்றார்கள். மேலிருந்து விழும் மழையானது, சூட்டைத்தணித்து, மண்ணை வளம்படுத்துகின்றது, அதனால் உலகில் உயிர் வாழ்கின்றது. பரம்பொருளாகும் சிவபெருமான் எல்லா துக்கங்களையும்போக்கி தன்னின்று வரும் பேரருளால் பெரும் பயனை ஆத்மாவிற்குக் கூட்டுகின்றான். (52)

आकाशेन शिखी समस्तफणिनां नेत्रा कलापी नता-
नुग्राहिप्रणवोपदेशनिनदैः केकीति यो गीयते ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

श्यामां शैलसमुद्भवां घनरुचिं दृष्ट्वा नटन्तं मुदा
वेदान्तोपवने विहाररसिकं तं नीलकण्ठं भजे ॥ ५३ ॥

ஆகாசேன ஶிகீ ஸமஸ்த பணிநாம் நேத்ரா கலாபீ நதா-
ஃநுக்ராஹி ப்ரணவோபதேஶ நிநதை: கேகீதி யோ
கீயதே ।
ச்யாமாம் ஶைல ஸமுத்பவாம் கநருசிம் த்ருஷ்ட்வா
நடந்தம் முதா
வேதாந்தோபவநே விஹார ரஸிகம் தம் நீலகண்டம்
பஜே ॥

आकाशेन-ஆகாயத்தினுல், **शिखी**-கொண்டையுடையவர் **समस्तफणिनां नेत्रा**-எல்லா நாகங்களுக்கும் அரசனுன ஆதி சேஷனுல், **कलापी**-ஆபரணத்தையுடையவர். (தோகைகளுடன்கூடியது), **नतानुग्राहि**-வணங்கியவர்களுக்கு அருள் செய்யும், **प्रणवोपदेशनिनदैः**-ப்ரணவ உபதேசத்திலுண்டான நாதத்தினுல், **यः**-எவர், **केकीति गीयते**-கேகாத்வனியுடன் கூடியவரென்று சொல்லப்படுகிருரோ, **श्यामां**-யௌவனத்துடன்கூடிய (கருமையான), **शैलसमुद्भवां**-மலையிலுண்டான **घनरुचिं**-விசேஷ காந்தியுடைய பார்வதியை(மேககாந்தியை) **दृष्ट्वा**-பார்த்து, **मुदा**-மகிழ்ச்சியால், **नटन्तं**-நர்த்தனம் செய்கிறவரும், **वेदान्तोपवने**-வேதாந்தமாகிற உத்யானத்தில், **विहाररसिकं**-விளையாடுவதில் பிரியமுள்ள, **तं नीलकण्ठं भजे**-அந்த கருமையான கழுத்தையுடைய ஈசுவரனுகிற மயிலை ஸேவிக்கிறேன். (இதுவும் மயிலுக்கும் ஈசுவரனுக்கும் சிலேஷை)

ஆகாயத்தைக்கொண்டையாகவும், ஸர்ப்பராஜனை அணியாகவும் பெற்று, அடியார்களை உய்விக்கவுள்ள ஓம் என்ற பிரணவ சப்தத்தைச் சொல்லும்பொழுது கேகா என்ற ஓசையை உண்டாக்குகின்ருர். மேகத்தைப்போன்ற உடலைப் பெற்று வேதாந்தத்தில் தவழ்ந்து, மலைமகளாகும் பார்வதியைக் காண மகிழும் நீலகண்டபெருமானை நான் வாழ்த்துகின்றேன்.

இதிலும் பின் சுலோகங்களிலும், நர்த்தன சுந்தர மூர்த்தத்தைப் புகழ்கின்ருர். இங்கு சிவபெருமான் மயிலுடன்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஒப்பாக்கப்படுகின்றார் இந்த விச்வரூப மயிலுக்கு ஆகாயமே முடி, பேடை பார்வதி, நர்த்தன அவை வேதாந்தம், ஸர்ப்பங்களே அணிகள், பிரணவமே குறி ஒலி.

இங்கு நீலகண்டன் என்பது நீலகண்டனையும், நீலக்கழுத்துடைய மயிலையும் குறிக்கின்றது. (53)

संध्या घर्मदिनात्ययो हरिकराघातप्रभूतानक-
ध्वानो वारिदगर्जितं दिविषदां दृष्टिच्छटा चञ्चला ।
भक्तानां परितोषबाष्पविततिर्वृष्टिर्मयूरी शिवा
यस्मिन्नुज्ज्वलताण्डवं विजयते तं नीलकण्ठं भजे ॥ ५४ ॥

ஸந்த்யா கர்ம திநாத்யயோ ஹரிகராகாதப்ரபூதாநக
த்வாநோ வாரித கர்ஜிதம் திவிஷதாம்
த்ருஷ்டிச்சடா சஞ்சலா ।
பக்தாநும் பரிதோஷ பாஷ்பவிததிர் வ்ருஷ்டிர் மயூரீ ஶிவா
யஸ்மின்னுஜ்வல தாண்டவம் விஜயதே தம்
நீலகண்டம் பஜே ॥

सन्ध्या–ஸந்தியாகாலம், **घर्मदिनात्ययः**–கிரீஷ்ம காலத்தின் முடிவு (மழைகாலம்), **हरिकराघातप्रभूतानकध्वानः**–மஹாவிஷ்ணுவின் கையாலடிக்கப்பட்ட படகமென்ற வர்த்தியத்தின் பெரிய த்வனி **वारिदगर्जितं**–மேகநாதம், **दिविषदां दृष्टिच्छटा**-தேவதைகளின் பார்வைக்கூட்டம், **चञ्चला**-மின்னல் **भक्तानां**–பக்தர்களுடைய, **परितोषबाष्पविततिः**–ஆனந்தக் கண்ணீர், **वृष्टिः**–மழை, **शिवा**–அம்பிகை, **मयूरी**–பெண்மயில், **यस्मिन्**–எந்த ஈசுவரனிடத்தில் (எந்த மயிலினிடத்தில்), **उज्ज्वलताण्डवं**–பிரகாசமான நர்த்தனம், **विजयते**–பிரகாசிக்கிறதோ, **तं नीलकण्ठं**–அந்த நீலகண்டனை மயிலை, **भजे**–ஸேவிக்கிறேன்.

விஷ்ணு பறையடிப்பதாலுண்டாகும் ஓசை மேகங்களின் உருமலாகவும் (இடியாகவும்) தேவர்களின் பார்வையாகும் கூரொளி மின்னலாகவும் அடியார்களின் ஆனந்தக்கண்ணீர் மழை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யாகவும், பார்வதிதேவியார் பேடையாகவும் அமர, கோடையின் இறுதியில் மாலைப்பொழுதில் நீலகண்டனுடைய நர்த்தனம் நடைபெறுகின்றது. நான் அவரை வணங்குகின்றேன்.

சிவபெருமான் மாலையில் செய்யும் அபூர்வ நர்த்தனத்தின் ஓவியம் இங்குள்ளது. மயிலின் உபமானம் இங்கும் நீடிக்கப்பெறுகின்றது. மயில் ஆடும்பொழுது இடிக்கும் மேகம், மின்னல், மழை பேடை இவை உடனிருப்பவை. இறைவனின் விச்வநர்த்தனத்திற்கு, விஷ்ணுவின் பறை, அதைப்பார்க்கும் தேவர்களின் கூரொளி நோக்கு, அடியார்களின் ஆனந்தக்கண்ணீர், உமாதேவியார் இவர்கள் புடைசூழுகின்றன. (54)

आद्यायामिततेजसे श्रुतिपदैर्वेद्याय साध्याय ते
विद्यानन्दमयात्मने त्रिजगतः संरक्षणोद्योगिने ।
ध्येयायाखिलयोगिभिः सुरगणैर्गेयाय मायाविने
सम्यक्ताण्डवसंभ्रमाय जटिने सेयं नतिः शंभवे ॥ ५५ ॥

ஆத்யாயாமித தேஜஸே ச்ருதிபதைர் வேத்யாய
ஸாத்யாய தே
வித்யாநந்தமயாத்மனே த்ரிஜகத:
ஸம்ரக்ஷணோத்யோகினே ।
த்யேயாயாகில யோகிபி: ஸுரகணைர் கேயாய மாயாவினே
ஸம்யக் தாண்டவ ஸம்ப்ரமாய ஜடினே ஸேயம் நதி:
ஶம்பவே ॥

आद्याय–உலகத்திற்கு முந்தியவரும், **अमिततेजसे**–அளவில்லாத தேஜஸ்ஸையுடையவரும், **श्रुतिपदैर्वेद्याय**–வேதவாக்கியங்களால் அறியக்கூடியவரும், **साध्याय**–பக்தர்களால் உபாஸிக்கக்கூடியவரும், **विद्यानन्दमयात्मने**–ஞானநந்தரூபியாயும், **त्रिजगतः संरक्षणोद्योगिने**-முவ்வுலகங்களையும் காற்கும் முயர்ச்சியுடையவரும், **अखिलयोगिभिः**–ஸமஸ்தமான யோகிகளாலும், **ध्येयाय**–தியானம் செய்யத்தக்கவரும், **सुरगणैः**–தேவ ஸமூகங்களால், **गेयाय**–கானம் செய்யத்தகுந்தவரும், **मायाविने**–மாயையை ஸ்வாதீனமாகக்கொண்டவரும், **सम्यक्**–

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ताण्डवसंभ्रमाय–சிலாக்கியமாக நர்த்தனம் செய்வதில் வேக முள்ளவரும், **जटिने**–ஜடைகளுடன் கூடியவரும், **शम्भवे**–க்ஷேமத்தையுண்டுபண்ணுகிறவருமான, **ते**–உமக்கு, **सेयं नतिः**–இந்த நமஸ்காரம் இருக்கட்டும்.

சடாதாரியே, முழுமுதற்காரணமே, எல்லையற்ற ஒளியே, வேத நூல்களால அறியப்படுபவனே! மூன்று உலகங்களையும் காக்கத்துணிந்தவனே! யோகிகளின் தியானப்பொருளே! தேவர்களின் கூட்டங்களால் புகழப்படுபவனே! மாயையைக் கையாளுபவனே! சிறந்த நர்த்தனத்தில் ஈடுபடுபவனே. சம்புவே உனக்கு என் நமஸ்காரங்கள்.

சம்புவின் நர்த்தனத்தினின்றே பிரபஞ்சம் தோன்றுகிறது. அதனாலேயே உலகம் நிலைக்கப்படுகின்றது அதனாலேயே உலகம் கரைக்கவும் படுகின்றது. அது உண்மையை மறைக்கவும், அருளைப்பொழியவும் செய்கின்றது. சிவனது ஐம்பணிகள் நர்த்தனத்தின் ஐம்பகுதிகளாகும், சிருஷ்டி (உளவாக்கல்) ஸ்திதி (நிலைத்தல்) ஸம்ஹாரம் (அழித்தல்) திரோதானம் (மறைத்தல்) அநுக்ரஹம் (அருளுதல்) நர்த்தனமே மாயை. அதனாலே அவர் மாயாவி என்றழைக்கப்படுகின்றார். சிவனே பல்லுயிருக்கும் நிலைக்களன். அவைகளின் மூலம். அவர் ஸத், சித், ஆனந்த மானவர். அவர் வேதங்களால் அறியப்படுபவர். அவரே பரம இலட்சியம். அவரையே யோகிகள் தியானம் செய்கின்றார்கள். தேவர்கள் அவர் புகழைப்பாடுகின்றார்கள் அவர் விசுவ நர்த்தனம் ஆபூர்வமானது அதுவே அனைவரையும் ஆக்கவும் காக்கவும் உள்ளது. (55)

नित्याय त्रिगुणात्मने पुरजिते कात्यायनीश्रेयसे
सत्यायादिकुटुम्बिने मुनिमनःप्रत्यक्षचिन्मूर्तये ।
मायासृष्टजगत्त्रयाय सकलाम्नायान्तसंचारिणे
सायंताण्डवसंभ्रमाय जटिने सेयं नतिः शंभवे ॥ ५६ ॥

நித்யாய த்ரிகுணாத்மநே புரஜிதே காத்யாயநீ ச்ரேயஸே
ஸத்யாயாதிகுடும்பினே முனிமந: ப்ரத்யக்ஷ
சின்மூர்த்தயே ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மாயா ஸ்ருஷ்ட ஜகத்த்ரயாய ஸகலாம்நாயாந்த
ஸஞ்சாரிணே
ஸாயம் தாண்டவ ஸம்ப்ரமாய ஜடிநே ஸேயம்
நதி: ஸம்பவே ll

नित्याय-நாசமற்றவரும், **त्रिगुणात्मने**-முக்குண ரூபியாயும் (பிரா்ம விஷ்ணு ருத்ர ரூபியானவரும்), **पुरजिते**-த்ரிபுரா்களை ஜயித்தவரும் (ஸ்தூலம் ஸூக்ஷ்மம், காரணம் என்ற முப்புரங்களை ஜயித்தவரும்), **कात्यायनीश्रेयसे**-பார்வதியின் தவத்தின் பயனும், **सत्याय**-முக்காலங்களிலும் அழிவற்றவரும், **आदिकुटुम्बिने**-முதல் தப்பதிகளின் ரூபத்தையுடையவரும், **मुनिमनःप्रत्यक्षचिन्मूर्तये**-ரிஷிகளின் மனதுக்கு நேரில் புலப்படக்கூடிய ஞானரூபியாயும், **मायासृष्टजगत्त्रयाय**-தன் மாயையினால் உலகத்தைப்படைப்பவரும், **सकलाम्नायान्तसंचारिणे**-ஸகல உபநிஷத்துக்களால் அறியக்கூடியவரும், **सायं ताण्डवसंभ्रमाय**-ஸாயங்காலத்தில் நா்த்தனம் செய்வதில், பரபரப்புள்ளவரும், **जटिने**-ஜடாதரராயும், **शम्भवे**-ஸுகத்திற்குக் காரணருமான ஈச்வரன் பொருட்டு, **सेयं नतिः**-அப்படிப்பட்ட இந்த நமஸ்காரம் இருக்கட்டும்.

சம்பு, சடைகளை அணிந்தவனே, என்றுமுள்ளவனே, மூன்று குணங்களையும் பெற்றவனே, முப்புரங்களை வென்றவனே, உமையாருக்கு ஒன்ருகும் மதிப்பு உள்ளவனே. ஸத்தியமே முழுமுதலே, தவசிகளால் மனதில் அநுபவிக்கப்படும் பேரானந்தமே, மாயையால் மூவுலகங்களையும் அமைத்தவனே! வேதாந்தநூல்களின் பொருளே! மாலை நா்த்தனம் செய்து கொண்டிருப்பவனே, உனக்கே என் நமஸ்காரங்கள் உரியதாகட்டும்.

இங்கும் சிவபெருமானின் மாலை நா்த்தனத்தின் சித்திரம் வரையப்படுகின்றது, மகாதேவன், திசைகளைக் குறிக்கும் சடைகளை உடையவன். என்றுமுள்ளவனே நா்த்தனம் செய்கின்ருன். அவன் உமையருகே நின்று ஆடுவதால் உலகை மாயையால் சிருஷ்டிக்கின்ருன். அவரே முதல் அப்பர். பார்வதியை அம்மையாகவும், மஹேசுவரரை அப்பராகவும் சொல்லும் சுலோகமும் உண்டு. "மாதா ச பார்வதீதேவீ பிதா

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தேவோ மஹேசுவர: (माता च पार्वतीदेवी पिता देवो महेश्वरः) (அம்மையப்பரே உலகிற்கெல்லாம் அம்மையப்பர் என்றுணர்க) அவர் எங்கும் இருந்து, எதற்கும் மூலமாகவும், பெற்றோர் களாகவும் இருந்தாலும், அவரை அடைவது எளிதன்று. ஞானி களுக்கும் தவசிகளுக்குமே அவர் விளங்குபவர், அவரை வேதாந்தத்தால் அறியலாம். (56)

नित्यं स्वोदरपूरणाय सकलानुद्दिश्य वित्ताशया
व्यर्थं पर्यटनं करोमि भवतः सेवां न जाने विभो ।
मज्जन्मान्तरपुण्यपाकबलतस्त्वं शर्व सर्वान्तर-
स्तिष्ठस्येव हि तेन वा पशुपते ते रक्षणीयोऽस्म्यहम् ॥

நித்யம் ஸ்வோதர பூரணாய ஸகலானுத்திச்ய வித்தாசயா
வ்யர்த்தம் பர்யடனம் கரோமி பவத: ஸேவாம்
ந ஜானே விபோ ।
மஜ்ஜன்மாந்தர புண்ய பாக டலதஸ்த்வம் சர்வ ஸர்வாந்தர
ஸ்திஷ்ட்டஸ்யேவ ஹி தேன வா பசுபதே தே
ரக்ஷணீயோஸ்ம்யஹம் ॥

पशुपते–அஞ்ஞானிகளைக்காப்பாற்றுகிறவரே ஹே ஈசு வரா, पशुपते– ஆத்மாக்களின் பதியே! नित्यं–எப்பொழுதும், स्वोदरपूरणाय–தன் வயிற்றை நிரப்புவதற்கு, वित्ताशया–பணத்திலுசையால், सकलानुद्दिश्य–எல்லோரையும் உத்தேசித்து व्यर्थं-வீணுக, पर्यटनं करोमि–அலேகிறேன். विभो–ஸர்வவியாபக, भवतः सेवां न जाने–உம்முடைய ஸேவையை அறியவில்லை. शर्व–பக்தர்களின் பாபங்களைப் போக்குகிறவரே, मज्जन्मान्तरपुण्यपाकबलतः-என் அநேக ஜன்ம புண்ணிய பலத்தால், सर्वान्तरः–அந்தர்யாமியாக, त्वं–நீர் तिष्ठस्येव–இருக்கிறீர். तेन वा–அதினுலேயாவது, अहं–நான், ते रक्षणीयोऽस्मि–உன்னுல் காப்பாற்றக்கூடியவனுகிறேன்.

ஆன்மாக்களின் தலைவனே! எங்கும் பரந்துள்ளவனே! சிவனே, செல்வம் திரட்ட பொருளை நாடவும், வயிற்றை நிறைக் கவும் வீணுக அலைவதையே காண்கின்றேன். உன் ஸேவையில்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அமர எனக்குத் தெரியவில்லை. எனது பூர்வ புண்ணியத்தின் பயனாய் நீ ஆளுபவனாய் என்னுள் அமர்ந்துள்ளாய், ஆகையால் என்னைக் காப்பாற்றுவதும் உன் பொறுப்பே ஆகின்றது,

இந்தப் பாவில், இழியோருக்குச் சேவை செய்து அவர்கள் தயவைப் பெறுவது வீணென்பது பன்முறையும் சொல்லப் படுகின்றது. அவர்கள் கொடுப்பதானாலும் பெறுவதாயினும் அதனால் பயனில்லை. அவர்களின் கொடை அவர்களுக்கும் அதைப் பெறுபவர்களுக்கும் நன்மை செய்வதில்லை, ஆனாலும் பெரும் பாலானவர்கள், பணவாசையால் அதிகாரமும் செல்வமும் பெற்றுள்ளோர்களைச் சுற்றியே ஆட்டம் போடுகின்றார்கள். அது மயக்கத்தால் ஆவது. இறைவன் கொடுத்துள்ள திறனையும் பொழுதையும் இப்படியா வீண்செய்வது? பூர்வபுண்ணிய பயனால் இந்நிலையிலும் சிலர் தேவனிருப்பதை உணர்கின்றார்கள். அவர்கள் நிறைவடைய வழி அவர்களுக்கு முன்னால் திறந்து கிடக்கின்றது அவர்கள் வழியை பிடித்துக்கொண்டால் அவர்கள் காப்பாற்றப்படுவார்கள்

एको वारिजबान्धवः क्षितिनभोव्याप्तं तमोमण्डलं
भित्त्वा लोचनगोचरोऽपि भवति त्वं कोटिसूर्यप्रभः ।
वेद्यः किं न भवस्यहो घनतरं कीदृग्भवेन्मत्तम-
स्तत्सर्वं व्यपनीय मे पशुपते साक्षात्प्रसन्नो भव ॥ ५८॥

ஏகோ வாரிஜ பாந்தவ: க்ஷிதி நபோ வ்யாப்தம்
தமோ மண்டலம்
பித்த்வா லோசந கோசரோ(அ)பி பவதி த்வம்
கோடிஸூர்யப்ரப: 1
வேத்ய: கிம் ந பவஸ்யஹோ கநதரம்
கீத்ருக் பவேன்மத்தமஸ்
தத்ஸர்வம் வ்யபநீய மே பசுபதே ஸாக்ஷாத்
ப்ரஸந்நோ பவ 11

पशुपते-ஜீவர்களின் தலைவா, **वारिजबान्धवः**-சூரியன், **एकः**-ஒருவனாகவே, **क्षितिनभोव्याप्तं**-பூமி ஆகாயம் இவைகளில் வியாபித்த, **तमोमण्डलं**-இருள் கூட்டத்தை, **भित्त्वा**-நாசம் செய்து, **लोचनगोचरोऽपि**-கண்ணுக்குப் புலப்படுபவனாகவும், **भवति**-ஆகிறான், **कोटिसूर्यप्रभः**-கோடி சூரியர்களுக்கு ஸம

Sri Vidya Bharati Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மான காந்தியையுடைய, त्वं-நீர், वेद्यः किं न भवसि-ஏன் அறியக்கூடியவராக இல்லை? अहो-ஆச்சர்யம்! घनतरं-மிகவும் கெட்டியான, मत्तमः-என் அஞ்ஞானம், कीदृग्भवेत्-எவ்வளவு? तत्-ஆகையால், सर्वं-எல்லாவித மான அஞ்ஞான இருளையும், व्यपनीय-போக்கடித்து, मे-எனக்கு, साक्षात्प्रसन्नो भव-நேராக அனுக்ரகம் செய்யவேணும்.

ஆன்மாக்களின் தலைவ! காரிருளை நீக்கி, மண்ணிலும் விண்ணிலும் பரவுகின்றது கதிரவனொளி. ஆயின் உன் ஒளியோ கோடி சூரியர்களின் ஒளியிலும் பெரியது ஆயினும் நீ ஏன் வெளிப் படுத்திக்கொள்வதில்லை! என் இருட்டு (அஞ்ஞானம்) எவ்வளவு கடுமையானது! இதை முற்றுமாக அழித்தொழித்து எனக்கு முற்றுமாக விளங்குவாயாக!

பரம்பொருள் தானே ஒளிபெற்றது. அதை விளக்க வேறு ஒளி வேண்டப்படுவதன்று. மண்ணுலகில் சூரியன் தானே வெளிச்சமாய் விளங்குகின்றான். ஆத்மாவிற்கு எல்லையற்ற ஒளி உள்ளது. உலக வழக்கில் சொல்லுவதானல் ஆயிரம் சூரியர்களின் ஒளி அதற்கு உண்டென்று சொல்லலாம். ஆயினும் அது நமக்கு ஏன் வெளிப்படுவதில்லை. அது நமக்குப் புலனுவதில்லையென்று சொல்வதும் பிழையானதே. அது முற்றுமாக நமக்குப் புலனுவது மில்லை. அது வெளிப்பட்டும் வெளிப்படாமலும் இருப்பது இந்த மாற்றமான நிலை மாயை-அவித்யை-யால் ஏற்படுவது. பக்தன் இந்த மாயையை அகற்ற பரம்பொருளை வேண்டுகின்றான். (58)

हंसः पद्मवनं समिच्छति यथा नीलाम्बुदं चातकः
कोकः कोकनदप्रियं प्रतिदिनं चन्द्रं चकोरस्तथा ।
चेतो वाञ्छति मामकं पशुपते चिन्मार्गमृग्यं विभो
गौरीनाथ भवत्पदाब्जयुगलं कैवल्यसौख्यप्रदम् ॥ ५९ ॥

ஹம்ஸ: பத்ம வநம் ஸமிச்சதி யதா நீலாம்புதம் சாதக:
கோக: கோகநத ப்ரியம் ப்ரதிதிநம் சந்த்ரம் சகோரஸ்தத॥
சேதோ வாஞ்ச்சதி மாமகம் பஶுபதே சின்மார்க
ம்ருக்யம் விபோ
கௌரீநாத பவத்பதாப்ஜ யுகளம் கைவல்ய
ஸௌக்யப்ரதம் ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

पशुपते-மூடர்களையும் காக்கிறவரே. विभो-ஸர்வ வியாபக, गौरीनाथ-பார்வதீபதே. यथा-எவ்விதம், हंसः-அன்னபக்ஷி, पद्मवनं-தாமரையோடையையும், चातकः-சாதகபக்ஷி, नीलाम्बुदं-கருமேகத்தையும், कोकः-சக்ரவாக பக்ஷி, कोकनदप्रियं-ஸூரியனையும், चकोरः-சகோரபக்ஷி, चन्द्रं-சந்திரனையும், प्रतिदिनं-தினந்தோறும், समिच्छति-விரும்புகிறதோ, तथा-அவ்விதம், मामकं चेतः-என் மனம், चिन्मार्गमृग्यं-உபநிஷத்துக்களால் தேடத்தக்கதும், कैवल्यसौख्यप्रदं-மோக்ஷஸுகத்தையளிக்கிறதுமான, भवत्पदाब्जयुगलं-உம்முடைய இருபாதகமலங்களை, वाञ्छति-ஆசைப்படுகிறது.

ஆத்மாக்களின் இறைவனே? எங்கும் பரந்து இருப்பவனே! பார்வதி தேவியின் கணவா! ஹம்ஸம் தாமரைக்குளத்தை நாடுவதைப்போலவும், சக்ரவாகப் பறவை சூரியனை நாடுவதைப் போலவும், சகோரப்பறவை சந்திரனை நாடுவதைப்போலவும், அறிவு வழியில் தேடப்படுவதும், பூர்ணமென்னும் ஆனந்தத்தைக் கொடுப்பதுமான உன் திருவடிகளை என் மனம் நாடி நிற்கின்றது.

பக்தனின் நாட்டத்தை விளக்க சில உபமானங்கள் தரப்படுகின்றன. மேலே குறிக்கப்பட்ட இணைகளில் ஒன்றின்றி ஒன்றில்லை. ஒன்றையொன்று பற்றி நிற்பவை. ஹம்ஸமும் குளமும், சாதகமும் மழை மேகமும், சக்ரவாகமும் சூரியனும், சகோரமும் சந்திரனும்; இங்கு நான்கு வகைப்பறவைகள் குறிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பறவையும் ஒவ்வொன்றை நாடி நிற்கின்றது. ஹம்ஸம் தாமரைத்தண்டைத் தின்று உயிர்வாழ்வது. சாதகப்பறவையோ மழைத்துளிகளைப்பருகி உயிர் வாழ்வது. சக்ரவாகப்பறவைகள் இரவில் துணை பிரிந்து நிற்பன. அவை சூரியனொளியை நாடிக்கூடுவன. சகோரப் பறவை சந்திரன் கிரணங்களைப்பருகி உயிர் வாழ்வதாகக் கொள்ளப்படுகின்றது. அதேவிதம் பக்தனின் இதயம் இறைவன் அடிகளை நம்பியே வாழ்வது. (59)

रोधस्तोयहृतः श्रमेण पथिकश्छायां तरोर्वृष्टितो
भीतः स्वस्थगृहं गृहस्थमतिथिर्दीनः प्रभुं धार्मिकम् ।
दीपं संतमसाकुलश्च शिखिनं शीतावृतस्त्वं तथा
चेतः सर्वभयापहं व्रज सुखं शंभोः पदाम्भोरुहम् ॥ ६० ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ரோதஸ்தோய ஹ்ருத: ஶ்ரமேண பதிகச்சாயாம்
தரோர் வ்ருஷ்டிதோ
பீத: ஸ்வஸ்த்த க்ருஹம் க்ருஹஸ்த்தமதிதிர் தீந:
ப்ரபும் தார்மிகம் ।
தீபம் ஸந்தமஸாகுலச்ச ஶிகிநம் ஶீதாவ்ருதஸ்த்வம் ததா
சேத: ஸர்வபயாபஹம் வ்ரஜ ஸுகம் ஶம்போ:
பதாம்போருஹம் ॥

चेतः–மனமே! **यथा**–எவ்விதம், **तोयहृतः**–ஜலத்தின் வேகத்தினுல் இழுக்கப்பட்டவன், **रोधः**-கரையையும், **पथिकः**-வழிப்போக்கன், **श्रमेण**-களைப்பினுல், **तरोः**–மரத்தின், **छायां**-நிழலையும், **वृष्टितः भीतः**–மழையினின்றும் பயந்தவன், **स्वस्थगृहं**–நல்ல கிருஹத்தையும், **अतिथिः**-அதிதி (விருந்தாளி) **गृहस्थं**–கிருஹஸ்தனையும் (கிருஹஸ்தாச்ரமத்திலிருக்கும் புருஷனையும்), **दीनः**–எளியவன், **धार्मिकं प्रभुं**–தர்மசிந்தனை உள்ள தனவந்தனையும், **संतमसाकुलः**–நல்ல இருளால் கலங்கியவன், **दीपं**–தீபத்தையும், **शीतावृतः**-குளிரால் வருந்தியவன், **शिखिनं च**–அக்னியையும். (அடைகிருனே), **तथा**–அப்படி, **त्वं**-நீ, **सर्वभयापहं**-ஸகல பயத்தையும் போக்கடிக்கக் கூடிய, **सुखं**-சுகத்தையுண்டுபண்ணக் கூடிய, **शंभोः**–ஈசுவரனின், **पदाम्भोरुहं**–பாதாரவிந்தத்தை, **व्रज**–அடைவாய்.

தண்ணீரால் அடித்துக்கொண்டு போகப்பட்டவன் கரையேற முயலுவதைப்போலும், களைத்துப்போன வழிப்போக்கன் மரத்து நிழலை நாடுவதைப் போலவும், மழைக்குப் பயப்படுபவன் வீட்டிற்குள் நுழைய முயலுவதைப்போலவும், விருந்தாளி ஒரு இல்லறத்தானை நாடுவதைப் போலவும், எளியவன் செல்வம் நிறைந்த கொடையாளியைத் தேடுவதைப் போலவும், இருட்டில் அவதிப்படுபவன் விளக்கை நாடுவதைப் போலவும், பனியால் நடுங்குபவன் நெருப்பை வேண்டுவதைப் போலவும், ஏ மனமே, பயத்தை யெல்லாம் விரட்டியடிக்கும் சம்புவின் திருவடிகளை நாடியடைவாயாக.

ஆத்மா புகலிடம் தேடி இறைவனடிகளை அடைவதற்கு மேலும் உதாரணங்கள் கொடுக்கின்றார். இவ்வடுக்குகளில் தேடுபவனும் தேடப் படுபவனும் உள்ளார்கள். வாழ்க்கையில் பல ஆபத்துக்களினின்றும் காப்பாற்றப்பட வேண்டியவர்களும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

காப்பாற்றுபவர்களும் உள்ளார்கள். நீரால் இழுத்துப் போகப் படுபவன் கரை சேர்ந்தால் ஆபத்தினின்று தப்புகின்றான். களைத்துப்போன வழிப்போக்கன் மரத்தின் நிழலை நோக்கியே போவான். மழையால் நனைபவன் நனையாதிருக்க இடத்தைத் தேடுகிறான். பசியுள்ளவன் பசியைப்போக்க ஒரு இல்லறத் தானிடம் வருகிறான். செல்வமும் கொடையுமுள்ளவனை எளியவர்கள் சூழுகின்றார்கள். இருட்டில் திகைப்பவனுக்கு விளக்கு வேண்டியதாகின்றது. பனியால் நடுங்குபவன் நெருப்பின் சூட்டை நெருங்குகின்றான். பயத்தினின்று விடுபட விரும்புபவன் இறைவனிடம் சரண்புகவேண்டும். பயத்தினின்று விடுபட விரும்பாதவன் யார்? (60)

अङ्कोलं निजबीजसंततिरयस्कान्तोपलं सूचिका
साध्वी नैजविभुं लता क्षितिरुहं सिन्धुः सरिद्वल्लभम् ।
प्राप्नोतीह यथा तथा पशुपतेः पादारविन्दद्वयं
चेतोवृत्तिरुपेत्य तिष्ठति सदा सा भक्तिरित्युच्यते ॥ ६१ ॥

அங்கோலம் நிஜ பீஜ ஸந்ததிரயஸ்காந்தோபலம் ஸூசிகா
ஸாத்வீ நைஜ விபும் லதா க்ஷிதிருஹம் ஸிந்து:
ஸரித்வல்லபம் ।
ப்ராப்நோதீஹ யதா ததா பசுபதே: பாதாரவிந்தத்வயம்
சேதோவ்ருத்திருபேத்ய திஷ்ட்டதி ஸதா
ஸா பக்திரித்யுச்யதே ॥

इह–இவ்வுலகில், निजबीजसन्ततिः–தன் விதைகளின் கூட்டம், अंकोलं–அழிஞ்சிமரத்தையும், सूचिका–இரும்புக் கம்பி, अयस्कान्तोपलं–அயக்காந்தக் கல்லையும், साध्वी–பதிவிரதை, नैजविभुं–தன் கணவனையும், लता–கொடி, क्षितिरुहं–மரத்தையும், सिंधुः–நதி, सरिद्वल्लभं–ஸமுத்திரத்தையும், यथा–எவ்விதம், प्राप्नोति–அடைகிறதோ, तथा–அவ்விதம், चेतोवृत्तिः–மனதின் வியாபாரம், पशुपतेः–ஈசுவரனின், पादारविन्दद्वयं–இரு திருவடித்தாமரைகளை, उपेत्य–அடைந்து, सदा–எப்பொழுதும், तिष्ठति–இருக்கிறது (என்ற), सा–அது, भक्तिरिति उच्यते–பக்தி என்றுசொல்லப் படுகிறது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அங்கோல மரத்தின் விதைகள் அடிமரத்தை நாடியே விழுவதைப்போலவும், இரும்பு ஊசி காந்தத்தைப் பற்றிக்கொள்வதைப்போலவும், கற்புடை மனைவி கணவனைப்பற்றிக்கொள்வதைப்போலவும். கொடி அயலிலுள்ள மரத்தில் பிணைந்துகொள்வதைப்போலவும், ஆறு கடலை நோக்கி ஓடுவதைப்போலவும், மனது இறைவனடியை விரைந்து பற்றிக்கொண்டு அங்கு நிலைப்பதுவே பக்தியாகும்.

சென்ற இரண்டு சுலோகங்களும் இதற்கு முன்னுரை. இதில் பக்தி விரிக்கப்படுகின்றது. இங்குள்ள உபமானங்கள் உயிருள்ளவும் இல்லவுமாகின்றன. இங்கு கீழுள்ளதிற்கு மேலுள்ள ஒரு துணை வேண்டப்படுவது. ஒரு இலட்சியத்தில் எப்படி விடாத பற்று இருக்கவேண்டுமென்பதற்கு இந்த ஒப்புமைகள் கொடுக்கப்படுகின்றன. கடவுளிடத்து இந்த ஒருமைப்பாடு அமைவதே பக்தியாகின்றது. (61)

आनन्दाश्रुभिरातनोति पुलकं नैर्मल्यतश्छादनं
वाचाशङ्खमुखे स्थितैश्च जठरापूर्तिं चरितामृतैः ।
रुद्राक्षैर्भसितेन देव वपुषो रक्षां भवद्भावना-
पर्यङ्के विनिवेश्य भक्तिजननी भक्तार्भकं रक्षति ॥ ६२ ॥

ஆநந்தாச்ருபிராதநோதி புளகம் நைர்மல்யதச்சாதநம்
வாசாஶங்கமுகே ஸ்திதைச்ச ஜடராபூர்திம் சரித்ராம்ருதை: ।
ருத்ராக்ஷைர் பஸிதேன தேவ வபுஷோ ரக்ஷாம் பவத்பாவனா
பர்யங்கே விநிவேச்ய பக்தி ஜனனீ பக்தார்பகம் ரக்ஷதி ॥

देव–ஹே தேவனே, **भक्तिजननी**-பக்தியாகிற தாய், **भक्तार्भकं**-பக்தனாகிற குழந்தையை, **भवद्भावनापर्यङ्के**–உமது த்யானமாகிற கட்டிலில், **विनिवेश्य** - படுக்கவைத்து, **आनन्दाश्रुभिः** ஆனந்தக்கண்ணீரால், **पुलकं**-மயிர்க்கூச்சலையும், **नैर्मल्यतः**-சுத்தத்தன்மையால், **छादनं**–வஸ்திரம் போர்த்துவதையும், **वाचाशंखमुखे स्थितैः**வேதவாக்யங்களாகிற சங்கின் முகத்திலிருக்கிற, **चरितामृतैः**–சரித்திரமாகிற பாலால், **जठरापूर्तिं** வயிற்றை நிரப்புவதையும், **रुद्राक्षैः भसितेन**-ருத்திராக்ஷங்களாலும் விபூதியாலும், **वपुषो रक्षां**–சரீரத்தைக் காப்பாற்றுவதையும், **आतनोति**-செய்கிறுள். **रक्षति**–காப்பாற்றுகிருள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இறைவ! பக்தியென்னும் தாய் பக்தனென்னும் குழந்தையை காப்பாற்றுகிருள். அவனை ஆனந்தம் என்னும் தண்ணீரால் (கண்ணீரால்) குளிப்பாட்டியும் (உத்சாகப்படுத்தியும்) அவனை தூய்மையென்னும் உடையால் போர்த்தியும், சிவபுராண மென்னும் அமிர்தத்தை ஊட்டியும் (சங்குகொண்டு வாக்கை,) அவனுக்கு உருத்திராக்ஷ மாலை விபூதி அணிவித்தும், உனது தியானம் என்னும் தொட்டிலில் தூங்க வைக்கிருள்.

இங்கு பக்தி ஒரு தாயுடன் உவமிக்கப்படுகின்றது. பக்தன் குழந்தையாகின்ருன். பக்தி இறையன்பை உள்ளும் புறமும் அமைக்கின்றது. பக்தனுடலை ருத்திராக்ஷமும் விபூதியும் அலங் கரிக்கின்றன. உடனுள்ள பக்தர்கள் சிவபுராணங்களைச்சொல்ல பக்தன் அவைகளைக்கேட்டு மகிழ்கின்ருன். அவன் கண்கள் நின்றும் நீர் வடிகின்றது. அவன் மனது தூய்மையை அடை கின்றது. அவன் தியானத்தில் தன்னை இழந்தவனுகின்ருன்.

நாரத பக்தி சூத்திரம் (60) தொண்டையடைக்க தழுதழுத்து பேசுதல், கண்களில் நீர் சொரிதல், மெய்சிலிர்த்து நிற்றல், இவைகள் பெற்றவர் தங்கள் குடும்பங்களையும் உலகத்தையும் புனிதப்படுத்துகின்ருர்கள். (62)

मार्गावर्तितपादुका पशुपतेरङ्गस्य कूर्चायते
गण्डूषाम्बुनिषेचनं पुररिपोर्दिव्याभिषेकायते ।
किंचिद्भक्षितमांसशेषकवलं नव्योपहारायते
भक्तिः किं न करोत्यहो वनचरो भक्तावतंसायते ॥ ६३ ॥

மார்காவர்திதபாதுகா பஸுபதேரங்கஸ்ய கூர்சாயதே
கண்டுஷாம்பு நிஷேசனம் புரரிபோர் திவ்யாபிஷேகாயதே ।
கிஞ்சித்பக்ஷித மாம்ஸ ஶேஷ கபளம் நவ்யோபஹாராயதே
பக்தி: கிம் ந கரோத்யஹோ வநசரோ
பக்தாவதம்ஸாயதே ॥

मार्गावर्तितपादुका-வழியில் அடிக்கடி உபயோகப்படுத் தப்பட்ட செருப்பு, **पशुपतेः**-ஈசுவரனின், **अङ्गस्य**-அவயவத் திற்கு, **कूर्चायते**-புருவங்களின் மத்தியம் போலிருக்கிறது. **गण्डूषाम्बुनिषेचनं**-எச்சில் ஜலம், **पुररिपोः**-திரிபுரர்களுககுச்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சத்துருவான சிவனுக்கு, दिव्याभिषेकायते—கங்காஜலத்தின் அபிஷேகம் போல் ஆகிறது. किञ्चिद्भक्षितमांसशेषकबलं—சிறிது கடித்து மீதியான மாம்ஸம், नव्योपहारायते—புதிதான நைவேத்யமாகிறது. वनचरः—காட்டிலிருக்கும் வேடன், भक्तावतंसायते—உயர்ந்த பக்தனுகிருன். भक्तिः किं न करोति—பக்தியானது எதைத்தான் செய்யாது! अहो—ஆச்சரியம்.

காட்டில் அலைந்ததால் தேய்ந்த செருப்பு இறைவனின் திருமேனியில் இருகண்களுக்குமிடையே இடுகுறியாக அமைந்தது. முப்புரமெரித்த செம்மலிற்கு வாயாற் கொணரப்பட்ட நீர் தெய்வீக அபிஷேகமாயிற்று ஏற்கனவே வாயால் மெல்லப் பட்ட ஊன் (இறைச்சி) புனிதமான நிவேதனமாயிற்று. பக்தி எதைச்செய்யாது! வேடன் பக்தர்களில் தலைசிறந்தவனுகின்ருன்.

இங்கு சங்கரர் கண்ணப்பருக்குத் தலைசிறந்த பக்தனென்று வணக்கம் செலுத்துகின்ருர். முரட்டு வேடன் இறைவனை தன் வழியில் வணங்குகின்ருன். அவனுக்கு சாஸ்திரங்கள் தெரியாது. பூஜை முறைகளை அவன் கற்றிலன். பூஜைக்கு வேண்டிய புறத் தூய்மை கடுகளவும் அவனிடமில்லை. கோயில் பூசாரி அவனது முரட்டு பூஜாவிதியை ஒரு அபசாரமாகவே கொண்டார். ஆயின் அது இறைவனுக்கு சிறந்த பூஜைமுறையாயிற்று. கண்ணப்பன் ஒரு கண்ணை இறைவனுக்குக் கொடுத்துவிட்டு மறுகண்ணும் கொடுக்கத் தயாராகும்பொழுது இறைவனே அவனைக் கண்ணப்பன் என்று அழைத்தார். பக்தியில் கண்ணப்பனுக்குச் சிறந்தவர் யார். அவனே பக்தர்களில் முதன்மையானவன். மாணிக்கவாசகர்,

கண்ணப்ப னொப்ப தோரன்பின்மை கண்டபின்
என்னப்ப னென் னொப்பி லென்னையு மாட்கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப் பொன்னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

என்று (திருக்கோத்தும்பி—4) பாடியுள்ளார்.

ஷோமருஸ் "பெரிய புராணத்தில் கண்ணப்பன், காட்டில் பூஜையற்ற ஒரு சிவலிங்கத்தைக் கண்டு தன்னையும் உலகையும் மறந்து, அந்த லிங்கத்தின் சேவையில் அமர்ந்தான். அதற்காக தன் கண்களையும் அர்ப்பணித்தான்" என்று குறிக்கின்ருர். (63)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

वक्षस्ताडनमन्तकस्य कठिनापस्मारसंमर्दनं
भूभृत्पर्यटनं नमत्सुरशिरःकोटीरसंघर्षणम् ।
कर्मेदं मृदुलस्य तावकपदद्वन्द्वस्य किं वोचितं
मच्चेतोमणिपादुकाविहरणं शंभो सदाऽङ्गीकुरु ॥ ६४ ॥

வக்ஷஸ்தாடனமந்தகஸ்ய கடினாபஸ்மார ஸம்மர்தனம்
பூப்ருத்பர்யடனம் நமத்ஸுர ஸிர:கோடீர ஸங்கர்ஷணம் ।
கர்மேதம் ம்ருதுளஸ்ய தாவக பதத்வந்த்வஸ்ய கிம் வோசிதம்
மச்சேதோ மணி பாதுகா விஹரணம் ஸம்போ
ஸதாங்கீகுரு ॥

शम्भो–சம்புவே, **अन्तकस्य**–யமனுடைய, **वक्षस्ताडनं**–மார்பில் உதைப்பது, **कठिनापस्मारसंमर्दनं**–கடினமான அபஸ்மாரமென்பவனை மிதிப்பது, **भूभृत्पर्यटनं**–மலையில் ஸஞ்சரிப்பது, **नमत्सुरशिरःकोटीरसंघर्षणं**-வணங்கும் தேவதைகளின் சிரஸ்ஸிலுள்ள கிரீடத்தில் உரைவது, **इदं कर्म**-இந்தக்காரியம் **मृदुलस्य**–மிருதுவான, **तावकपदद्वन्द्वस्य**-தங்கள் இரு திருவடிகளுக்கு, **किं वोचितं**–தகுந்ததுதானா? **मच्चेतोमणिपादुकाविहरणं**-என் மனமாகிற ரத்னபாதுகையால் ஸஞ்சரிப்பதை, **सदा अङ्गीकुरु**–எப்பொழுதும் ஏற்றுக்கொள்ளும்.

யமனுடைய மார்பில் உதைத்துக்கொண்டு அபஸ்மாரத்தை காலில் மிதித்துக்கொண்டு, கைலாய மலையில் திரிந்துகொண்டு, வணங்கிய தேவர்களின் முடிகளில் உறைந்துகொண்டு நிற்பவை உன் பாதங்கள். இது முறையா? மணிகள் பொதிந்த என் இதயத்தைச் செருப்பாயணிந்து செல்வாயாக ஓ சம்போ!

பக்தன் இறைவனுக்குத் தன் மனதைச் செருப்பாகக் கொடுக்கிறான். சிவன் பாதங்கள் கடுமையான வேலைகளைச் செய்யவேண்டியிருக்கின்றது ஆகையால் பாதங்களுக்குச் சரியான காப்பு இருக்கவேண்டும்.

இறைவன் தன் பாதங்களுக்குக் கொடுக்கும் சில கடுமையான அலுவல்கள்:—

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

1. மார்க்கண்டேயர் பதினாறுவருஷங்களே வாழப்பிறந்தவர் குறித்தகாலம் நெருங்க அவன் பெற்றோர்கள் இரங்கி வாடினார்கள். அப்பையன் தான் யமனை வென்றுவிடுவதாக பெற்றோர்களிடம் உறுதி கூறினான். கோயிலிற்குச் சென்று சிவலிங்கத்தை வணங்க ஆரம்பித்தான். மார்க்கண்டேயனது உயிரைப்பற்றிவர யமன் தன் தூதர்களை அனுப்பினான். ஆனால் அவர்கள் சிவலிங்கமிருக்கும் கர்ப்பகிருகத்தில் நுழையக்கூடவில்லை. பிறகு யமனே நேரில் வந்தான். லிங்கத்தினின்றும் சிவபெருமான் எழுந்து யமனை மார்பில் உதைத்தார். யமன் இறந்துபட்டான். சிவபெருமான் தன்னருளால் அவனை உயிர்ப்பித்தார். மார்க்கண்டேயன் யமனை வென்று சிரஞ்ஜீவியானான்.

யமனுடைய மார்பில் வெறுங்காலுடன் உதைப்பது கடினமான வேலைதான். சுந்திரர் 7–61–4ல் உதைத்தகோடும் தோழில் என்ற பாவில் இதைக்குறித்துள்ளார்.

2. தாருகாவன யாகத்தில் வெளித்தோன்றியவைகளில் அபஸ்மாரமும் ஒன்று, அது தீய நடுக்கமுள்ள குறளை அதுவும் சிவனைப்பழிக்க, சிவபெருமான் பாதத்தால் அதை நசுக்கி நலித்தார். சிவன் தன் கால் கட்டைவிரலைக்கொண்டு அதன் முதுகெலும்பை மிதிக்க அது உடைந்துபட்டது. நர்த்தன சிவனாகும் நடராஜன் உருவத்தில் அபஸ்மாரம் சிவபெருமான் அடிக்கீழ் படுத்துக்கிடப்பதாக அமைகின்றது.

அபஸ்மாரம் என்பது ஒரு வலிப்பு. அது இயற்கை பிரக்ஞையை இழக்கச் செய்து, நடுங்குகின்றவர்களுக்கு பெரும் வலியைக்கொடுக்கின்றது. அபஸ்மாரம் மாயை, அக்ஞானம் இதைக்குறிப்பது. அதை அகற்றுவது எளிதன்று. ஆகையால் கடினம் என்ற சொல் கையாளப்படுகின்றது.

3. சிவபெருமான் உறைவிடம் கைலையங்கிரி. சிவனடிக்கள் அங்கு கடும்பாறைகளில் நடக்கவேண்டியுள்ளன.

4. தேவர்கள் சிவனடிகளை வணங்கவரும்பொழுது ஒருவரையொருவர் முந்தி வருகின்றார்கள். தங்கள் ஆர்வத்தில் அவர்கள் தாங்கள் சிவபெருமானுக்கு இழைக்கும் தொல்லையை அறிவதில்லை. அவர்களது முடிகளுடன் உறைவது பாதங்களுக்கு கடினமானதன்றோ? (இந்நூல் சு. 17)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இறைவனடிகள் விடாது இக்கடின அலுவல்களைச் செய்ய வேண்டியுள்ளது. பக்தன் தன் மனதைச் செருப்பாக இறைவனுக்குக் கொடுக்கின்றான். அதுவும் நன்றாகவும் அழகாக வும், சிவனால் அணியத்தகுந்ததாகவும் உள்ளது. (64)

वक्षस्ताडनशङ्कया विचलितो वैवस्वतो निर्जराः
कोटीरोज्ज्वलरत्नदीपकलिकानीराजनं कुर्वते ।
दृष्ट्वा मुक्तिवधूस्तनोति निभृताश्लेषं भवानीपते
यच्चेतस्तव पादपद्मभजनं तस्येह किं दुर्लभम् ॥ ६५ ॥

வக்ஷஸ்தாடந ஶங்கயா விசலிதோ வைவஸ்வதோ நிர்ஜரா:
கோடீரோஜ்ஜ்வலரத்ன தீப கலிகா நீராஜனம் குர்வதே ।
த்ருஷ்ட்வா முக்தி வதூஸ்தனோதி
நிப்ருதாச்லேஷம் பவாநீபதே
யச்சேதஸ்தவ பாதபத்ம பஜனம் தஸ்யேஹ
கிம் துர்லபம் ॥

भवानीपते-பார்வதீபதே, **यच्चेतः**-எவன் மனது, **तव**-உம்முடைய, **पादपद्मभजनं**-தாமரை போன்ற திருவடிகளை ஸேவிக்கிறதாக உள்ளதோ (அவனை) **दृष्ट्वा**-பார்த்து **वैवस्वतः**-யமன், **वक्षस्ताडनशङ्कया**-மார்பில் அடி ஏற்படு மென்ற எண்ணத்தால், **विचलितः**- ஓடிவிட்டான். **निर्जराः** தேவதைகள், **कोटीरोज्ज्वलरत्नदीपकलिकानीराजनं कुर्वते**-தங்கள் கிரீடங்களில் பிரகாசிக்கின்ற தீபம் போன்ற ரத்னங்களின் ஒளிகளால் ஆரத்தி செய்கிறார்கள். **मुक्तिवधूः**-முக்தியாகிய பெண், **निभृताश्लेषं तनोति**-காடாலிங்கனம் செய்கிறாள். **तस्य**-அவனுக்கு, **इह**-இவ்வுலகில், **किं दुर्लभं**-எதுதான் அடையமுடியாதது !

பார்வதியின் தலைவ ! எவன் மனது உன்னை பூஜிக்கின்றதோ அவனால் சாதிக்கக்கூடாததென்ன ? அவனைப் பார்த்தாலே, யமன் ஓடிவிடுகின்றான். தேவர்கள் முடிகளிலுள்ள ஒளிவிடும் மணிகளைக்கொண்டு அவனுக்கு விளக்கெடுக்கின்றார்கள் (ஆலத்தி) முக்தி யென்னும் மணப்பெண் அவனை இறுக அணைத்துக்கொள் கிறாள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யமனை வென்றவன் மார்க்கண்டேயன் ஒருவனேயன்று. ஒவ்வொரு பக்தனும் சாவின்மையைப் பெற்றுவிடுகின்றான். அழிவற்ற தேவர்களின் நிலையினும் உயர்ந்தது பக்தனின் நிலை. தேவர்களும் பக்தர்களைப் பாராட்டுகின்றார்கள் அவ்வழி தாம் சிவனையே வணங்குவதாகவும் கொள்கின்றார்கள். அவர்கள் தலை குவிந்து பக்தன் முன்பு செல்லும்பொழுது. அவர்கள் முடிமணிகள் ஆலத்தி போன்றமைகின்றன. சிவனுக்கு பக்தி செய்வதால் பக்தன் மோக்ஷமென்னும் பயனைப்பெறுகின்றான். (65)

क्रीडार्थं सृजसि प्रपञ्चमखिलं क्रीडामृगास्ते जना
यत्कर्माचरितं मया च भवतः प्रीत्यै भवत्येव तत् ।
शम्भो स्वस्य कुतूहलस्य करणं मच्चेष्टितं निश्चितं
तस्मान्मामकरक्षणं पशुपते कर्तव्यमेव त्वया ॥ ६६ ॥

க்ரீடார்த்தம் ஸ்ருஜஸி ப்ரபஞ்சமகிலம்
க்ரீடா ம்ருகாஸ்தே ஜநா
யத்கர்மாசரிதம் மயா ச பவத: ப்ரீத்யை பவத்யேவ தத்।
ஶம்போ ஸ்வஸ்ய குதூஹலஸ்ய கரணம்
மச்சேஷ்டிதம் நிச்சிதம்
தஸ்மான் மாமக ரக்ஷணம் பஶுபதே கர்தவ்யமேவ
த்வயா ॥

शम्भो–மோக்ஷஸுகத்தையளிக்கக்கூடியவரே, **पशुपते**–அக்ஞானிகளையும் காப்பாற்றுகிற ஈச, **अखिल-प्रपञ्चं**–உலகம் பூராவையும், **क्रीडार्थं सृजसि**–விளையாட்டிற்காகப் படைக்கிறீர். **ते**–உமக்கு, **जनाः**–ஜனங்கள், **क्रीडामृगाः**–விளையாட்டு மிருகங்கள், **मया च**–என்னாலும், **यत्कर्म**–எந்தக்காரியம், **आचरितं**–செய்யப்பட்டதோ, **तत्**–அது, **भवतः**–உம்முடைய, **प्रीत्यै एव भवति**–பிரீதிக்காகவே ஆகிறது. **मच्चेष्टितं**–என் செய்கை, **स्वस्य कुतूहलस्य करणं**–உன் ஸந்தோஷத்திற்குக் காரணம் (என்பது), **निश्चितं**–தீர்மானம், **तस्मात्**–ஆகையால் **त्वया**–உம்மால், **मामकरक्षणं कर्तव्यमेव**–என்னைக் காப்பாற்றுவது செய்யத்தகுந்ததே.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சம்பூ, நீயே உலகை விளையாட்டாகப் படைக்கின்றாய். அதிலுள்ள மக்கள் உன் விளையாட்டு பொம்மைகள். நான் எதைச் செய்தாலும் அது உனது ஆனந்தத்திற்காகத்தான். நான் செய்பவையெல்லாம் உன் ஆனந்தத்திற்காக என்பது உறுதி. ஆத்மாக்களின் தலைவ, எனது பாதுகாப்பு உந்தன் பொறுப்பாகின்றது.

இறைவன் விளையாட்டாக உலகைப்படைக்கின்றான். சிருஷ்டியை விளையாட்டென்பதினால் முயற்சியின்றி ஆவது என்பது பொருள். குயவன் பானை வனைவதைப்போலும், பால் தயிராக மாறுவது போலுமன்று சிருஷ்டி முயற்சியற்றதென்றால் அது மாற்றம், (விவர்த்தம்) என்பதாகின்றது. இறைவனுக்கு உலகைப்படைப்பதில் சுயநலம் ஒன்றுமில்லை. அவருக்கு அதனால் இலாபமடையும் நோக்கமில்லை. "இறைவனுக்கு சாதிக்கப்பட வேண்டுவதுமில்லை. அவரால் சாதிக்கப்பட வேண்டுவதும் ஒன்றுமில்லை", (நானவாப்தம், அவாப்தவ்யம்-கீதை 3-22)

பிரம்ம சூத்ரம் (2-1 33) "லோகவத்து லீலா கைவல்யம்" பிரம்மனின் சிருஷ்டியென்பது வெறும் விளையாட்டு. மண்ணுலகில் விளையாட்டு உள்ளதைப்போல. இந்த சூத்திரத்திற்கு விளக்கம் கொடுக்கும்பொழுது ஆதிசங்கரர், 'மன்னர்களும் அமைச்சர்களும் எதற்கும் சம்பந்தமில்லாமல் பேசுவதைப்போன்றது' என்கிறார். சிருஷ்டி வேலை இயற்கையாக மூச்சுவாங்குவது விடுவதைப் போன்று முயற்சியற்றது. அவைகளுக்கு பயனுமில்லை. மனிதன் விளையாட்டுக்களிலாவது இரகசியமான உள்நோக்கம் அமையலாம். இறைவனின் சிருஷ்டிப்பணியில் அதுவும் காணுவதற்கில்லை. சிருஷ்டியைப்பற்றி கூறும் வேதங்கள், மாயை, பெயர்-உரு, உலகம் என்ற பகுதியில் அமைவதையும் நாம் நினைப்பில் வைத்துக்கொள்ளவேண்டும்.

படைப்பு இறைவன் திருவிளையாட்டானால் அதிலுள்ளவர்கள் பொம்மைகளாக வேண்டும். அவர்கள் செய்வதெல்லாம் அவன் திருவுள்ளப்படியாகவேண்டும். பக்தன் இதை அறிந்து, தன் செயலை யெல்லாம் இறைவனுக்கு அர்ப்பணம் செய்கின்றான். நான் செய்வது எதுவானாலும் ஓ சம்பூ, அது உனக்கே அர்ப்பணம் ஆகட்டும். (66)

वहुविधपरितोषबाष्पपूरस्फुटपुलकाङ्कितचारुभोगभूमिम् ।
चिरपदफलकाङ्क्षिसेव्यमानां परमसदाशिवभावनां प्रपद्ये ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ப்ஹுவித பரிதோஷ பாஷ்பபூர ஸ்புட புளகாங்கித
சாரு போக பூமிம் ।
சிரபத பல காங்க்ஷி ஸேவ்யமானாம் பரம ஸதாசிவ
பாவனாம் ப்ரபத்யே ॥

बहुविधपरितोषबाष्पपूरस्फुटपुलकाङ्कितचारुभोगभूमिं - பலவித மான ஆனந்தபாஷ்பப் பெருக்குக்கும், தெளிவான மயிர்க் கூச்சலுக்கும் அனுபவ ஸ்தானமாயும், **चिरपदफलकाङ्क्षिसेव्यमानां**–சாச்வதமான ஸ்தானத்தை அபேக்ஷிக்கிறவர்களால் ஸேவிக்கக்கூடியதாயுமிருக்கிற, **परमसदाशिवभावनां**-உயர்ந்த ஈசுவர த்யானத்தை, **प्रपद्ये**–சரணம் அடைகிறேன்.

நிலையான வாழ்வு என்னும் பலனை நாடுகின்றவர்களால் அலங்கரிக்கப்பட்டு சுகபோகத்திற்கு அழகாக அமையும் நாட்டில், ஆனந்தக்கண்ணீரும், மெய்சிலிர்ப்பும் அமைகின்றன. அந் நாடாகும் பரம சதாசிவன் தியானத்தில் புக நான் அவனை சரண் வேண்டுகின்றேன்.

சிவத்தியானம் விளைவுள்ள வளம் மிக்க நாடாகச் சொல்லப் படுகின்றது. அந்த வயலிலிருந்து மோக்ஷமாகும் விடுதலை பெறப் படுகின்றது. (67)

अमितमुदमृतं मुहुर्दुहन्तीं विमलभवत्पदगोष्ठमावसन्तीम् ।
सदय पशुपते सुपुण्यपाकां मम परिपालय भक्तिधेनुमेकाम् ॥

அமிதமுதம்ருதம் முஹுர் துஹந்தீம் விமலபவத்பத
கோஷ்டமாவஸந்தீம் ।
ஸதய பசுபதே ஸுபுண்ய பாகாம் மம பரிபாலய
பக்தி தேனுமேகாம் ॥

सदय–தயவுடன் கூடியவரே, **पशुपते**–விருஷபத்திற்கு நாத, **अमितमुदमृतं** – எல்லையில்லாத பிரம்மானந்தமாகிற பாலை, **मुहुः**-அடிக்கடி, **दुहन्तीं**–கறக்கிறதாயும், **विमलभवत्पदगोष्ठमावसन्तीं**-சுத்தமான உம்முடைய பாதங்களாகிற தொழு வத்தில் வஸிக்கிறதாயும், **सुपुण्यपाकां**-புண்யத்தின் பலனு மான, **मम भक्तिधेनुमेकां**-என்னுடைய பக்தியாகிற ஒரு பசுவை மாத்திரம், **परिपालय**–காப்பாற்றும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆத்மாக்களின் இறைவ! கருணையாகும் ஒருவனே! நல்வினையின் பயனாகும் பக்தியென்னும், பசுவைக் காப்பாற்றுவாயாக, அது வேண்டும்பொழுதும் அளவில் பால் கொடுக்கின்றது. அது உனது திருவடி யென்னும் குற்றமற்ற மாட்டுக்கொட்டத்தில் உள்ளது.

இங்கு பக்தி ஒரு பழுதற்ற பசுவாக சித்தரிக்கப்பட்டுள்ளது. அது இறைவனின் பாதுகாப்பிற்குத் தகுதியானது என்று சொல்லப்படுகின்றது. குறைவற்றுக்கொடுக்கும் காமதேனுவைப் போன்றமைவது பக்தி. இறைவனடிகளிலேயே அது தங்குகின்றது.

(68)

जडता पशुता कलङ्किता कुटिलचरत्वं च नास्ति मयि देव ।
अस्ति यदि राजमौले भवदाभरणस्य नास्मि किं पात्रम् ॥

ஜடதா பஶுதா களங்கிதா குடிலசரத்வம் ச நாஸ்தி
மயி தேவ ।
அஸ்தி யதி ராஜமௌளே பவதாபரணஸ்ய நாஸ்மி
கிம் பாத்ரம் ॥

जडता-மூடத்தனம் (ஜலமாயிருக்குந்தன்மை), **पशुता**-விவேகமில்லாமை, **कलंकिता**-களங்கத்துடனிருப்பது (தோஷத்தோடு கூடியிருப்பது) **कुटिलचरत्वं च**-வக்ரமாக ஸஞ்சரிப்பது (நேர்மையற்றிருப்பது) (இவை), **मयि नास्ति**-என்னிடமில்லை. **देव**-பிரகாசமானவரே, **राजमौले**-சந்திரனை சிரஸ்ஸில் அணிந்த ஈச்வரா, **अस्ति यदि**-இருக்கிறதானால், **भवदाभरणस्य**-உன் ஆபரணத்திற்கு, **पात्रं नास्मि किं**-பாத்திரமாக மாட்டேனா?

இறைவ, சோம்பல், வெறி, அசுத்தம், தீயவழி செல்லும் வக்கரம் (தீயபோக்கு) இவைகள் என்னிடமில்லை. அவைகள் இருந்தாலும், சந்திரசூட, நானும் உன் அணியாகத்தொண்டாற்ற தகுதியுள்ளவனில்லையா?

பக்தன் தான் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படத் தகுதியுள்ளவன் என்று சொல்லுகின்றான். அவன் பக்தனயிருப்பதுவே அவன் குற்றமற்றிருப்பதற்குச்சான்று. பக்தனுக்கு, அறிவு,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இரக்கம், தூய்மை, நேர்மை முதலியவைகள் உண்டு. இவைகளை அவன் பெற்றிருக்காவிட்டாலும், எதிரான குற்றங்களையே பெற்றிருந்தாலும், சிவனுக்கு அவனை மறுக்க நியாயமில்லை. ஏனெனில் மனிதனுமல்லாத அசுத்தமான தோல்களையும், மானையும், எருதையும், பிறையையும், பாம்புகளையும் அவர் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்.

பிறைச்சந்திரனுக்கு இப்பல குற்றங்களும் உண்டு என்று கொள்ளலாம். அதையே சிவபெருமான் தலையணியாக அணிந்து கொண்டிருக்கின்றார். பக்தன் தன்னையும் ஏற்றுக்கொள்ள ஏன் வேண்டக்கூடாது? உண்மையிலேயே பக்தனிடம் பிறையின் குறைபாடும் இல்லை.

சிவன் பிறையை தலையணியாக ஏற்றுக்கொண்ட விவரம் பல வகையாக உள்ளது. ஒன்று: தக்ஷன் படைப்பு வேலையில் தலைமையானவன், பாரபக்ஷமின்றி நடத்தவேண்டுமென்ற நிபந்தனையுடன் சந்திரனுக்கு தன் பெண்களையெல்லாம் மணம் செய்வித்தான். ஆயின் சந்திரன் ரோஹிணியிடம் அதிக அன்பு காட்டினன். மற்றப்பெண்கள் பிணங்கிக்கொண்டு தகப்பனரிடம் முறையிட்டார்கள். தக்ஷன் கடுங்கோபமடைந்து சந்திரன் தினம் ஒன்ருகத் தன் கலைகளை இழந்து நிற்கவேண்டுமென்று சபித்தான். சந்திரன் சிவனைச் சரண்புகுந்தான். சிவபெருமான் அதை ஏற்றுக்கொண்டு தலையில் அணிந்துகொண்டார். இறைவனருளால் சந்திரன் தினம் ஒன்ருகத் தன் கலைகளைப்பெறலானன். இறைவன் தக்ஷனின் சாபம் நிற்கவேண்டுமென்று கொண்டார். அவர் கலைகள் தேயவும் வளரவும் அருள் செய்தார்.

மற்ெருரு கதைப்படி சந்திரன் தன் ஆசிரியரின் மனைவியை காதலித்ததினுல் அந்த சாபம் வந்ததாம். (69)

अरहसि रहसि स्वतन्त्रबुद्धया वरिवसितुं सुलभः प्रसन्नमूर्तिः ।
अगणितफलदायकः प्रभुर्मे जगदधिको हृदि राजशेखरोऽस्ति ॥

அரஹஸி ரஹஸி ஸ்வதந்த்ர புத்த்யா வரிவஸிதும்
ஸுலபः ப்ரஸன்ன மூர்த்திः ।
அகணித பலதாயகः ப்ரபுர் மே ஜகததிகோ ஹ்ருதி
ராஜசேகரோ ऽஸ்தி ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

प्रसन्नमूर्तिः-அனுக்ரஹம் செய்யக்கூடிய ரூபத்தையுடையவரும், **अगणितफलदायकः**-எல்லேயில்லாத பலனேக்கொடுப்பவரும், **प्रभुः**-முத்தொழில்களிலும் சக்தராயும், **जगदधिकः**-உலகத்தைக் காட்டிலும் மேலானவருமான, **राजशेखरः**-சந்திரனே சிரஸில் உடைய ஈசன் (சக்ரவர்த்தி), **मे हृदि अस्ति** என் மனதில் இருக்கிறார். (ஆனதால்) **अरहसि**-வெளியிலும், **रहसि**-மனதிற்குள்ளேயும், **स्वतन्त्रबुद्ध्या** - தன்னுடையதென்ற புத்தியால், **वरिवसितुं सुलभः**-ஸேவிப்பதற்கு ஸுலபமாக இருக்கிறார்.

வெளிப்படையாகவும் இரகசியமாகவும், அவருடன் சுதந்திர மனதுடன் வாழ்வது சுலபமானது. அவன் உரு கம்பீரமானது, அவர் அளவற்ற பயனேக்கொடுக்கவல்லவர். உலகினும் உயர்ந்தவர், இதயத்தில் வசிக்கும் அந்தப் பிறையணிந்த ஒருவர்.

இறைவன் எல்லேயற்றும் எங்கும் உள்ளவர். அவர் உலகத்தினும் உயர்ந்தவர் (ஜகததிகர்) ஆயின் இதயத்துள்ளும் வசிப்பவர். அவருடன் வசிப்பது எளிதானதாகவேண்டும். ஆயின் அவனருளே உணர ஆரம்பிக்காதவர்களுக்கு அது மிகவும் கடினமானதாகவேண்டும். அவரே கருணே. அவரே மோக்ஷத்தைக் கொடுப்பவர்.

அரஹஸி 'புறத்துலகில்' ரஹஸி 'உள்ளுள்ள இதயத்தில்.' ஜகததிக என்பதற்கு ஜகததிப என்ற பாடபேதமும் உண்டு. (70)

आरूढभक्तिगुणकुञ्चितभावचाप-
युक्तैः शिवस्मरणबाणगणैरमोघैः ।
निर्जित्य किल्बिषरिपून्विजयी सुधीन्द्रः
सानन्दमावहति सुस्थिरराजलक्ष्मीम् ॥ ७१ ॥

ஆரூட பக்தி குண குஞ்சித பாவ சாப
யுக்தை: ஶிவ ஸ்மரண பாண கணைரமோகை: ।
நிர்ஜித்ய கில்பிஷரிபூன் விஜயீ ஸுதீந்த்ர:
ஸாநந்தமாவஹதி ஸுஸ்திர ராஜலக்ஷ்மீம் ॥

सुधीन्द्रः-சிறந்த புத்திமான், **आरूढभक्तिगुणकुञ्चितभावचापयुक्तैः**-உண்டாயிருக்கிற பக்தியாகிற நாண் கயிருல்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வளைக்கப்பட்ட புத்தியாகிய வில்லில் தொடுக்கப்பட்ட **अमोघैः**-வீணாகாத, **शिवस्मरणबाणगणैः**-சிவ ஸ்மரணமாகிற அம்புக்கூட்டங்களால், **किल्बिषरिपून्**-பாபமாகிற சத்ருக்களை **निर्जित्य**-ஜயித்து, **विजयी**-ஜயத்துடன் கூடியவனாக, **सानन्दं**-ஆனந்தத்துடன், **सुस्थिरराजलक्ष्मीं**-ஸ்திரமானபிரம்மாதி தேவர்களுக்கு அதிபரான ஈச்வரனின் ஸாரூப்யமுக்தியை (ஸ்திரமான ராஜ்யத்தை), **आवहति**-அடைகிறான்.

சிவ சிந்தனை யென்னும் பிழையாத அம்புகளை பக்தி யென்னும் நாணால் கட்டப்பட்ட தியானமென்னும் வில்லில் அமைத்து ஊக்கினால் நல்ல மனதுடையவர், பகைவராகும் பாபங்களை வென்று நிலைத்த ஆனந்தத்தைப்பெறலாம்.

பக்தன் கைதேர்ந்த வேடனுக்கு உவமிக்கப்படுகின்றான். ஒரு அரசன் பிறநாட்டைக் கைப்பற்ற, நேரிடையாகப் பகைவர்களுடன் சண்டை பிடிக்கவேண்டும். அப்படி செய்ய வலுவான வில்லும் கைத்திறனும் பெற்றிருக்கவேண்டும். பாபத்துடன் எழும் ஆத்மீகப் போரில் தியானம் வில்லாகவும் அம்பு சிவ சிந்தனையாகவும், அமைகின்றன. பக்தன் இந்த ஆயுதத்தைத் திறமையுடனும் நிச்சயமாகவும் கையாளவேண்டும். அவன் அஞ்ஞானத்தை வென்று பரம இலட்சியமாகும் மோக்ஷத்தை அடைகின்றான். (71)

ध्यानाञ्जनेन समवेक्ष्य तमःप्रदेशं
भित्त्वा महाबलिभिरीश्वरनाममन्त्रैः ।
दिव्याश्रितं भुजगभूषणमुद्वहन्ति
ये पादपद्ममिह ते शिव ते कृतार्थाः ॥ ७२ ॥

த்யானாஞ்ஜனேந ஸமவேக்ஷ்ய தம: ப்ரதேஶம்
பித்வா மஹாபலிபிரீச்வர நாம மந்த்ரை: ।
திவ்யாச்ரிதம் புஜக பூஷண முத்வஹந்தி
யே பாத பத்மமிஹ தே ஶிவ தே க்ருதார்த்தா: ॥

शिव-ஈச்வர, **ध्यानाञ्जनेन**-தியானமாகிற கண்மையால், **समवेक्ष्य**-நன்கு பார்த்து, **महाबलिभिः**-அதிக ஸாமர்த்திய முடைய, **ईश्वरनाममन्त्रैः**-ஈசுவரனின் நாம மந்திரங்களால்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

तमःप्रदेशं-இருளாயிருக்கிற இடத்தை, **भित्त्वा**-பிளந்து, **दिव्याश्रितं**-தேவதைகளால் ஆச்ரயிக்கப் பட்டதும், **भुजगभूषणं**-ஸர்ப்பங்களை ஆபரணமாயுடையதுமான, **ते पादपद्मं**-உம்முடைய திருவடித்தாமரையை, **इह**-இந்த ஜன்மாவில், **ये**-எவர்கள், **उद्वहन्ति**-உபாஸிக்கிறார்களோ **ते कृतार्थाः**-அவர்கள் பலனையடைந்தவர்கள்.

சிவனே, எவர் தேவர்களும் சரணடைகின்ற நின் திருவடிகளை -சர்ப்பங்களை அணிந்த - சேருகின்றார்களோ, தியானமென்னும் கண்மையால் உன் திருவுருவைக் காணுகின்றார்களோ, இறைவன் திருநாமம் சாற்றி அவிசொரிந்து, காரிருளைக் கடந்து போகின்றார் களோ, அவர்களே வாழ்வின் பெரும் பயனைப்பெற்றவர்கள்.

புதையலை நாடுபவர்கள் அது கண்ணிற்குப் புலனாக மந்திரித்த கண் இமையை ட்டுக்கொண்டு அதைத்தேடுகின்றார்கள், அப்பொழுதே அவன் சரியான இடத்தைத் தோண்டமுடியும். பிறகு புதையலைக்காக்கும் தெய்வங்களுக்கு பூசை செய்து தான் வேண்டும் புதையலை அடைகின்றான்.

இங்கு பெறப்படவேண்டும் பொருள் இறைவன் திருவடிகள். கண்மை தியானம், தோண்டப்படவுள்ள கடும் மண் அஞ்ஞானம், அவிசுகள் சிவநாமங்கள். (72)

भूदारतामुदवहद्यदपेक्षया श्री-
भूदार एव किमतः सुमते लभस्व ।
केदारमाकलितमुक्तिमहौषधीनां
पादारविन्दभजनं परमेश्वरस्य ॥ ७३ ॥

பூதாரதாமுதவஹத் யதபேக்ஷயா ஸ்ரீ
பூதார ஏவ கிமத: ஸுமதே லபஸ்வ ।
கேதாரமாகலித முக்தி மஹௌஷதீநாம்
பாதாரவிந்த பஜனம் பரமேச்வரஸ்ய ॥

सुमते-ஓ நல்ல புத்தியே, **यदपेक्षया**-எவருடைய பாதாரவிந்தத்தைப் பார்ப்பதின் பொருட்டு, **श्रीभूदार एव**-லக்ஷ்மீ பூமிதேவிகளுக்கு பர்த்தாவான விஷ்ணுவே, **भूदारतां**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வராஹாவதாரத்தை, **उदवहत्** **किम्**-வகித்தாரல்லவா! **अतः** ஆகையினால், **आकलितमुक्तिमहौषधीनां** - விரும்பப்பட்ட மோக்ஷமாகிய ஔஷதிகளுக்கு, **केदारं**-உற்பத்தி ஸ்தானமான **परमेश्वरस्य**-பரமேச்வரனுடைய, **पादारविन्दभजनं लभस्व**-பாதாரவிந்தத்தையடைவாய்.

ஓ நல்லமனதே! இலக்குமி, பூதேவி இவர்களின் கணவனாகும் விஷ்ணுவே ஒரு பன்றியின் உருவை எடுத்துக்கொண்டு தேடிய திருவடிகளை, எல்லோராலும் வேண்டப்படுகின்ற விடுதலை யென்னும் மருந்துச்செடியை (மூலிகையை) வளர்க்கும் நிலமாகும் சிவனடிகளை வணங்க முயல்வாயாக ஒருவன் வேறெதைச் செய்வது?

இங்கும் விவசாயத்தொழிலுவமை கொடுக்கப்படுகின்றது. இறைவன் திருவடிகள் வளமிக்க வயல்கள்; அவைகளிலே மோக்ஷத்தின் மூலிகை வளர்கின்றது.

இறைவனடிகளைப் புகழும்பொழுது, விஷ்ணு சிவனடிகளை அடையச் செய்த முயற்சி வீணானது குறிப்பிடப்படுகின்றது. (73)

आशापाशक्लेशदुर्वासनादि-
भेदोद्युक्तैर्दिव्यगन्धैरमन्दैः ।
आशाशाटीकस्य पादारविन्दं
चेतःपेटीं वासितां मे तनोतु ॥ ७४ ॥

ஆஶா பாஶ க்லேஶ துர்வாஸநாதி
பேதோத்யுக்தைர் திவ்ய கந்தைரமந்தை: ।
ஆஶா ஶாடீகஸ்ய பாதாரவிந்தம்
சேத: பேடீம் வாஸிதாம் மே தநோது ॥

आशाशाटीकस्य-திக்குகளை வஸ்திரமாக உடைய ஈச்வரனின், **पादारविन्दं**-திருவடியானது, **आशापाशक्लेशदुर्वासनादिभेदोद्युक्तैः**-கயிற்றுக்கொப்பான ஆசை, ஐந்து விதமான கிலேசங்கள், கெட்டபழக்கம் முதலியவைகளை நாசம் செய்வதில் அக்கறையுள்ள, **अमन्दैः**-அதிகமான, **दिव्यगन्धैः**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உயர்ந்த வாஸனைகளால், **मे चेतःपेटीं**-என் மனமாகிற பெட்டியை, **वासितां तनोतु**-நல்ல மணமுடையதாகச் செய்யட்டும்.

ஆசை, மயக்கம், குரோதம் என்ற நாற்றங்களை அகற்றும் இனிய தெய்வீக வாசனைகளை, சீலங்களையே திசையாகக் கொள்ளும் சிவபெருமானது திருவடிகள் எனது இதயத்தில் நிறைவிக்கட்டும்.

இங்கு மனது ஒரு மூடிய பெட்டிக்கு உவமிக்கப்படுகிறது. அது மயக்கம், ஆசைகள், குரோதம் முதலிய நாற்றங்கள் நிறைந்துள்ளது. இறைவன் அதைத்திறந்து அதில் நல்ல மணங்களைப் புகுத்த வேண்டப்படுகிறார். (74)

कल्याणिनं सरसचित्रगतिं सवेगं
सर्वेङ्गितज्ञमनघं ध्रुवलक्षणाढ्यम् ।
चेतस्तुरङ्गमधिरुह्य चर स्मरारे
नेतः समस्तजगतां वृषभाधिरूढ ॥ ७५ ॥

கல்யாணினம் ஸரஸ சித்ர கதிம் ஸவேகம்
ஸர்வேங்கிதக்ஞமநகம் த்ருவ லக்ஷணாட்யம் ।
சேதஸ்துரங்கமதிருஹ்ய சர ஸ்மராரே
நேத: ஸமஸ்த தாம் வ்ருஷபாதிரூட ॥

वृषभाधिरूढ-விருஷபாரூடரே, **स्मरारे**-மன்மதனை எரித்தவரே, **समस्तजगतां नेतः**-எல்லா உலகங்களுக்கும் நாயக, **कल्याणिनं**-மங்களகரமாயும் (கல்யாண லக்ஷணங்களுடன் கூடியதும்) **सरसचित्रगतिं**-இனிமையான நாநாவித கதி விசேஷங்களுடன் கூடியதும், **सवेगं**-வேகத்துடன் கூடியதும், **सर्वेङ्गितज्ञं**-எல்லா விதமான அபிப்ராயங்களையும் அறிந்துகொள்கிறதும், **अनघं**-தோஷமற்றதும், **ध्रुवलक्षणाढ्यं**-சுழி முதலான ஸ்திரமான லக்ஷணங்களுடையதும் (ஈசனிடம் நிலைத்திருப்பது என்ற லக்ஷணமுள்ளதுமான) **चेतस्तुरङ्गं**-என் மனமாகிய குதிரையில், **अधिरुह्य**-ஏறி, **चर**-ஸஞ்சாரம் செய்யுங்கள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

காமத்தை அழிப்பவனே! உலகங்களுக்கெல்லாம் தலைவ! எருதில் ஏறுபவனே! மங்களகரமானதும், வேகமாகச் செல்லக் கூடியதும், அழகான பலவித நடைகளுடன் கூடியதும் குறிகளை எல்லாம் அறிவதும், எவ்வகை பழுதற்றதும் நிலையான குணங்கள் பெற்றதுமான எனது மனமென்னும் குதிரைமீது செல்வாயாக!

சிவனே உலகங்களுக்கெல்லாம் மாபெருந்தலைவன். அவனே காமத்தை அழிக்க வல்ல பெருந்தலைவன். புராணங்கள், மன்மதன் சிவனால் எரிக்கப்பட்டதாகச் சொல்கின்றன. சிவன் வேண்டப்படும் இடங்களுக்குச் செல்லவேண்டியவர். அவர் ஆன்மாக்களைக் கரையேற்றவல்லவர். அவர் எருதேறி இதை எப்படிச்செய்வது? அது மெதுவாகச் செல்வதன்றோ? அவர் பணியில் வேகமாகச் செல்லும் குதிரையாகும் தன் மனதை அமர்த்துகின்றான். அதில் அவர் சவாரி செய்து அதைத் தன் பணிக்கு ஏவட்டும்.

சிவபெருமான் காமனை (மன்மதனை) அழித்த விருத்தாந்தம் இது: தக்ஷன் ஒருயாகம் செய்து, அதற்கு தன் மருகனாகும் சிவ பெருமானை அழைக்கவில்லை. தாக்ஷாயணி – சிவபெருமானின் துணைவி–அழைப்பில்லாமல் அங்கு சென்று அவமதிக்கப்பட்டாள். அதை சகிக்காது தாக்ஷாயணி யாக நெருப்பில் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டாள். இதை அறிந்த சிவபெருமான் அந்த யாகத்தை அழிக்கச்செய்தார். தாக்ஷாயணியே பார்வதி யாகப் (ஹிமவானின் புதல்வியாகப்) பிறந்தாள். மீண்டும் தன் தலைவனையடைய அவள் அருந்தவம் மேற்கொண்டாள். ஆனால் சிவபெருமானோ தியானத்தில் அமர்ந்து தன்னை மறந்திருந்தார். தாரகாசுரனால் தொல்லைபட்ட தேவர்கள், சிவபெருமானின் திருக் குமாரனாலேயே அவன் அழிக்கப்படுவானென்றுகொண்டு காம தேவனை பார்வதியினிடம் சிவனுக்கு ஆர்வமுண்டாக்க அனுப்பினார்கள். மன்மதன் சிவனது தியானத்தைக்குலைக்க, சிவபெருமான் தனது நெற்றியிலுள்ள மூன்றாவது கண்ணைத் திறந்து மன்மதனைப் பார்த்து எரித்துவிட்டார், அதனின்று சிவனுக்கு காமாரி, ஸ்மராரி என்ற பெயர்கள் ஏற்பட்டன. (75)

भक्तिर्महेशपदपुष्करमावसन्ती

कादम्बिनीव कुरुते परितोषवर्षम् ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

संपूरितो भवति यस्य मनस्तटाक-
स्तज्जन्मसस्यमखिलं सफलं च नान्यत् ॥ ७६ ॥

பக்திர் மஹேஶ பத புஷ்கரமாவஸந்தீ
காதம்பிநீவ குருதே பரிதோஷ வர்ஷம் ।
ஸம்பூரிதோ பவதி யஸ்ய மநஸ்தடாக ஸ்தஜ்ஜன்ம
ஸஸ்யமகிலம் ஸபலம் ச நாந்யத் ॥

भक्तिः-பக்தியானது, महेशपदपुष्करमावसन्ती – ஈச்வரன் பாதங்களாகிற ஆகாயத்திலிருந்து கொண்டு, कादम्बिनीव-மேகவரிசைபோல், परितोषवर्षं-ஆனந்தப் பெருக்கை, कुरुते-செய்கிறது (உண்டு பண்ணுகிறது). यस्य-எவனுடைய, मनस्तटाकः-மனமாகிற குளம், संपूरितो भवति-நிரம்பப் படுகிறதோ, अखिलं-ஸமஸ்தமான, तज्जन्मसस्यं-அவன் ஜன்மாவாகிற பயிர், सफलं-பயனுடன் கூடியது. अन्यत्-மற்றது, नच-பயனில்லை.

பரம்பொருளாகும் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் பக்தியென்னும் மேகமானது ஆனந்த மழையைப் பொழிகின்றது. எவன் மனது இந்த ஆனந்த வெள்ளத்தால் நிறைந்துவிடுகின்றதோ அவன் முழுதாய வாழ்வின் பயனை அடைகின்றான். மற்றவர்கள் அல்ல.

இங்கும் உழவுத்தொழில் உவமிக்கப்படுகின்றது. ஈசுவர பக்தி நிறைந்த மனதே இறுதிப்பயனை (மோக்ஷத்தை) அடைகின்றது. (76)

बुद्धिः स्थिरा भवितुमीश्वर पादपद्म-
सक्ता वधूर्विरहिणीव सदा स्मरन्ती ।
सद्भावनास्मरणदर्शनकीर्तनादि
संमोहितेव शिवमन्त्रजपेन विन्ते ॥ ७७ ॥

புத்திः ஸ்த்திரா பவிதுமீச்வர பாத பத்ம
ஸக்தா வதூர்விரஹிணீவ ஸதா ஸ்மரந்தீ ।
ஸத்பாவநா ஸ்மரண தர்ஶன கீர்த்தனாதி
ஸம்மோஹிதேவ ஶிவ மந்த்ர ஜபேந விந்தே ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ईश्वर–செய்வது, செய்யாமலிருப்பது, வேறு விதமாகச் செய்வது, இவைகளில் ஸாமர்த்தியமுள்ள ஈச்வர, **विरहिणी वधूरिव**–கணவனைப் பிரிந்த ஸ்திரீபோல, **पादपद्मसक्ता**–உம்முடைய பாதாரவிந்தத்தில் ஈடுபட்டு, **सदा स्मरन्ती**–எப்பொழுதும் ஸ்மரித்துக் கொண்டிருக்கிற, **बुद्धिः**–மனமானது, **शिवमन्त्रजपेन**–சிவ என்ற மந்திரஜபத்தினால், **संमोहितेव**–மோஹத்தை அடைந்தது போல, **स्थिरा भवितुं**–நிலையாயிருப்பதற்கு, **सद्भावनास्मरणदर्शनकीर्तनादि**-நிலையாக உள்ள பாதாரவிந்தத்தின் தியானம், ஸ்மரிப்பது, பார்ப்பது, நாமாவை உச்சரிப்பது இவைகளைப்பற்றி **विन्ते**–விசாரிக்கிறது.

இறைவ! கணவனைப்பிரிந்து நிற்கும் பெண்ணைப்போல இறைவனடிகளைப்பற்றி நிற்கும் மனது சதா அவனையே நினைக்கின்றது. சிவ மந்திரத்தை அடிக்கடி ஜபிப்பதால் அது தன்னை நல்ல சிந்தனைகள், நினைவு, பார்வை, பாடுதல் இவைகளில் ஈடுபடுத்திக்கொள்கின்றது-

பக்தனின் மனது கணவனைப் பிரிந்துள்ள மனைவியுடன் உவமிக்கப்படுகின்றது. மனது இறைவனைவிட்டுப் பிரிந்திருப்பதைப் பொறுப்பதில்லை. அதில் பிற சிந்தனைகளுக்கு இடமில்லை. சதா சிவனையே சிந்திக்கின்றது நோக்கு, பேச்சு நினைவு எல்லாம் சிவனைப் பற்றிக்கொள்ளவே செய்கின்றன. (77)

सदुपचारविधिष्वनुबोधितां
सविनयां सुहृदं सदुपाश्रिताम् ।
मम समुद्धर बुद्धिमिमां प्रभो
वरगुणेन नवोढवधूमिव ॥ ७८ ॥

ஸதுபசார விதிஷ்வனுபோதிதாம்
ஸவிநயாம் ஸுஹ்ருதம் ஸதுபாச்ரிதாம் ।
மம ஸமுத்தர புத்திமிமாம் ப்ரபோ
வரகுணேன நவோடவதூமிவ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

प्रभो-ஸர்வசக்தியோடு கூடிய ஈச, **सदुपचारविधिषु**-ஸாதுவான உம்முடைய திருவடிகளின் உபசரணை விஷயத்தில், **अनुबोधितां**-சிக்ஷிக்கப்பட்டதாயும், **सविनयां**-வணக்கத்துடன் கூடியதாயும், **सुहृदं**-நல்ல மனமுள்ளதும், **सदुपाश्रितां**-நல்லோர்களை அண்டியதுமான, **मम इमां बुद्धिं**-என்னுடைய இந்தபுத்தியை, **वरगुणेन**-சிறந்த குணோபதேசத்தினால், **नवोढवधूमिव**-புதிதாக விவாஹமான ஸ்திரீயைப் போல், **समुद्धर**-சீராகச்செய்யுங்கள்.

நற்சேவையில் பயிற்றப்பட்டதும், பணிவுபெற்றதும், நல்ல சிந்தனைபெற்று அதையே இறுதியாகக்கொள்வதாகும் எனது அறிவை, இறைவ, உயர்த்துவாயாக. மணைபுகும் மணமகளுக்கு சிறப்புச்செய்வதைப்போல இதற்கும் சிறப்புச் செய்வாயாக

சென்ற பாட்டில் கொடுக்கப்பட்ட மணப்பெண் உவமையே இங்கும் கொடுக்கப்படுகின்றது. சிறப்புகள் பெற்ற மணப்பெண் அறிவு. அதற்கு இறைவனின் மணமகளாவதற்காகும் தகுதிகளெல்லாம் உள்ளன. அவன் வந்து இப்பெண்ணைக் கைபற்றுவானாக! (78)

नित्यं योगिमनःसरोजदलसंचारक्षमस्त्वत्क्रमः
शंभो तेन कथं कठोरयमराड्वक्षःकवाटक्षतिः ।
अत्यन्तं मृदुलं त्वदङ्घ्रियुगलं हा मे मनश्चिन्तय-
त्येतल्लोचनगोचरं कुरु विभो हस्तेन संवाहये ॥ ७९ ॥

நித்யம் யோகி மந: ஸரோஜ தள ஸஞ்சார க்ஷமஸ்த்வத்க்ரம:
ஶம்போ தேந கதம் கடோர யமராட்வக்ஷ: கவாட க்ஷதி: ।
அத்யந்தம் ம்ருதுளம் த்வதங்க்ரி யுகளம் ஹா மே மநச்சிந்தயத்-
யேதல்லோசன கோசரம் குரு விபோ ஹஸ்தேன ஸம்வாஹயே ॥

शम्भो-ஈச்வரா, **त्वत्क्रमः**-உம்முடைய பாத வின்யாஸமானது, **नित्यं**-எப்பொழுதும், **योगिमनस्सरोजदलसंचारक्षमः**-யோகிகளின் தாமரையிதழ்போன்ற மனதில் ஸஞ்சரிப்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பதற்குத் தகுந்தது, तेन-அதனல், कथं-எப்படி, कठोरयमराड्वक्षःकवाटक्षतिः-கெட்டியான யமராஜனுடைய கதவுத் தாப்பாள் போன்ற மார்பினில் உதைப்பது? हा-கஷ்டம், अत्यन्तं मृदुलं-மிகவும் மெதுவான, त्वदंघ्रियुगलं-உமது இரு திருவடிகளை, मे मनः चिन्तयति-என் மனம் தியானம் செய்கிறது विभो-ஈச்வர, एतत्-இந்த உம்முடைய திருவடியை, लोचनगोचरं कुरु-(என்) கண்ணுக்குப் புலப்படும்படி செய். हस्तेन संवाहये-என் கையினுல் பிடிக்கிறேன்.

ஓ சம்பூ, யோகிகளின் மனத்தாமரைகளில் நடந்து பழகியவை உன் திருவடிகள்! அவை எப்படி யமனின் மார்பில் உதைத்தன? உனது திருவடி மெல்லியது. என் மனது கலங்குகின்றது. அவைகளை நான் பார்க்க அருள் செய்வாய். அவைகளை என் கைகளால் ஏற்றுக்கொள்கின்றேன்.

64வது சுலோகத்தில் சிவனது திருவடிகள் ஏற்கும் கடிய வேலைகள் குறிப்பிடப்பட்டன. யமனை உதைப்பது அவைகளில் ஒன்று. யமனது மார்பு ஒரு கடினமான கதவு. எதிரிடையாக யோகிகளின் மனது மெல்லியது. அவையே சிவபெருமானுக்கு உகந்தவை. அத்தகைய அடிகள் யமனை உதைக்கும்பொழுது நொந்திருக்குமன்றோ? பக்தன் இறைவனது புனித அடிகளை தடவிக்கொடுக்கத் தனக்குக் காட்டவேண்டுமென்கிறுன். (79)

एष्यत्येष जनिं मनोऽस्य कठिनं तस्मिन्नटानीति म-
द्रक्षायै गिरिसीम्नि कोमलपदन्यासः पुराभ्यासितः ।
नो चेद्दिव्यगृहान्तरेषु सुमनस्तल्पेषु वेद्यादिषु
प्रायः सत्सु शिलातलेषु नटनं शंभो किमर्थं तव ॥ ८० ॥

ஏஷ்யத்யேஷ ஜனிம் மனோऽஸ்ய கடினம்
தஸ்மிந்நடானீதி மத்-
ரக்ஷாயை கிரிஸீம்னி கோமள பதந்யாஸ: புராऽப்யாஸித: I
நோ சேத் திவ்ய க்ருஹாந்தரேஷு ஸுமநஸ்தல்பேஷு
வேத்யாதிஷு
ப்ராய: ஸத்ஸு ஶிலாதலேஷு நடனம் ஶம்போ
கிமர்த்தம் தவ II

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

शम्भो-ஸுகத்தையுண்டு பண்ணக்கூடிய பரமேச்வர, **एषः**-இவன், **जनिमेष्यति**-பிறப்பான், **अस्य मनः**-இவன் மனம் **कठिनं**-மிகவும் கெட்டியானது, **तस्मिन्नटानि**-அதில் நர்த்தனம் செய்வேன், **इति**-என்று, **मद्रक्षायै**-என்னைக்காப்பதின் பொருட்டு, **गिरिसीम्नि**-மலைபிரதேசத்தில், **कोमल-पदन्यासः**-மெதுவான கால் ஸஞ்சாரம், **पुराऽभ्यासितः**-முன்னாலேயே அப்யாஸம் செய்யப்பட்டதா? **नोचेत्**-இல்லாவிடில் **दिव्यगृहान्तरेषु**-உயர்ந்த கிருஹங்களும், **सुमनस्तल्पेषु**-மலர்களால் செய்யப்பட்ட படுக்கைகளும், **वेद्यादिषु**-திண்ணை முதலியவைகளும், **प्रायस्सत्सु** - பெரும்பாலும் இருக்கும் பொழுது, **शिलातलेषु**-கல்பிரதேசங்களில், **तव**-உமக்கு, **नटनं किमर्थं**-நர்த்தனம் எதற்கு?

இது பிறக்கவே போகின்றது; இதன் மனது கடினமானது. நான் இதில் நடனம் செய்யவேண்டும் என்று கொண்டு, இமயத்தின் கடும்பாறைகளில் நடந்து பயிற்சிகொண்டுள்ளாய். இல்லையேல் தெய்வீக வீடுகளும், மலர்ப்படுக்கைகளும், தாழ்வாரங்களும் வேண்டியவை இருக்க நீ ஏன் பாறைகளில் நடனஞ் செய்கின்றாய்?

முன் சுலோகத்தில் இறைவனது மெல்லிய அடிகள் யமனது கடுமையான மார்பை எப்படி உதைத்தது என்று வியக்கின்றார். இந்தப்பாட்டில் பக்தன் தன் மனமும் கடினமானதென்பதை அறிகின்றான். இறைவன் அது கடினமானதென்றுகொண்டு அதில் புகாமலும் போகலாம். ஆயின் இப்படி இறைவன் சமாதானம் கொடுப்பது இறைவனுக்குக் கூடுவதன்று. இறைவன் அந்த ஆத்மா பிறக்கப்போகின்றதையும் கன்னெஞ்சு படைத்திருக்கும் என்பதையும் அதில் தான் தாண்டவம் செய்யவேண்டியதென்பதும் அறிவார். அதை அறிந்தே இறைவன் பாறைகள் மிகும் இடத்தையே இடமாகக்கொண்டு பாறைகளில் நடந்து வருகின்றார். வேறெதற்காக மலைக்காட்டை அவர் இருப்பிடமாகத் தேர்ந்துள்ளார்? அவருக்கு வேறு வாழிடம் கிடைக்கவில்லையா? தேவர்கள் இதயத்தும், தவசிகள் இதயத்தும் அவிசொரியும் யாகசாலைகளிலும் வேண்டிய இடங்கள் உள்ளனவே? (80)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

कंचित्कालमुमामहेश भवतः पादारविन्दार्चनैः
कंचिद्ध्यानसमाधिभिश्च नतिभिः कंचित्कथाकर्णनैः ।
कंचित्कंचिदवेक्षणैश्च नुतिभिः कंचिद्दशामीदृशीं
यः प्राप्नोति मुदा त्वदर्पितमना जीवन्स मुक्तः खलु ॥

கஞ்சித் காலமுமாமஹேஶ பவத: பாதாரவிந்தார்ச்சனை:
கஞ்சித் த்யாந ஸமாதிபிச்ச நதிபி: கஞ்சித் கதாகர்ணனை: ।
கஞ்சித் கஞ்சிதவேக்ஷணைச்ச நுதிபி: கஞ்சித்தஶாமீத்ருஶீம்
ய: ப்ராப்நோதி முதா த்வதர்பித மநா ஜீவன் ஸ முக்த: கலு ॥

उमामहेश-பார்வதியுடன் கூடிய மஹேச, **कञ्चित्कालं**-சிலகாலம், **भवतः पादारविन्दार्चनैः**-உம்முடையபாதாரவிந்தார்ச்சனைகளாலும், **कञ्चित्**-சிலகாலம், **ध्यानसमाधिभिश्च**-தியானம் ஸமாதி இந்த யோகாப்யாஸங்களாலும், **कञ्चित्**-கொஞ்சகாலம், **नतिभिः**-நமஸ்காரங்களாலும், **कञ्चित्कथाकर्णनैः**-சிலகாலம் கதைகளைக்கேட்பதாலும், **कञ्चिदवेक्षणैश्च**-சில காலம் பார்வையாலும், **कञ्चित्**-சிலகாலம், **नुतिभिः**-துதிப்பதாலும், **मुदा**-ஸந்தோஷத்தால், **त्वदर्पितमनाः**-உன்னிடம் அர்பணம் செய்யப்பட்ட மனமுள்ள, **यः**-எவன், **ईदृशीं दशां**-இந்த நிலைமையை, **प्राप्नोति**-அடைகிருனோ, **सः**-அவன், **जीवन् मुक्तः खलु**-ஜீவித்துக் கொண்டே முக்தியடைந்தவனில்லையா.

உமாதேவியின் துணைவரே, சிறுபொழுது, உனது மலரடிகளைப் பூஜித்துக்கொண்டும், சிறுகாலம் தியானத்திலமர்ந்தும், ஏகாக்ரமாக இருந்தும், சிறுபொழுது நமஸ்காரம் செய்தும், சிறுபொழுது உன் திருவுருவை தரிசனம் செய்தும், சிறுபொழுது உன் புகழைப்பாடியும், ஆனந்தத்து அமரும் நிலையைப்பெற்று தன் மனதை உனக்கு ஒப்படைத்தவனே ஜீவன் முக்தன்.

பக்தி பழுக்கும்பொழுது ஜீவன் முக்தியைக் கொடுக்கின்றது. அது வாழ்விலேயே விடுதலை. பக்தியின் பயன் கண்ணிற்குப் புலனாகாததொன்றல்ல. அதன் பயன் இப்பொழுதே இங்கேயே கிடைக்கவுள்ளது. மனது இறைவனிடம் ஒப்படைக்கப்படும் பொழுது மனது இருப்பது இல்லாமலாகின்றது. அது 'அமனீ

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பாவ' மாகின்றது. மனமே ஆத்மாவைப் பிணைப்பது, மனமே விடுதலையையும் கொடுக்கின்றது. புறபொருள்களைப் பற்றும் மனது உலகுடன் ஆத்மாவைப் பிணைக்க, இறைவனைப்பற்றும் மனது விடுதலை செய்கின்றது. (81)

बाणत्वं वृषभत्वमर्धवपुषा भार्यात्वमार्यापते
घोणित्वं सखिता मृदङ्गवहता चेत्यादि रूपं दधौ ।
त्वत्पादे नयनार्पणं च कृतवांस्त्वद्देहभागो हरिः
पूज्यात्पूज्यतरः स एव हि न चेत्को वा तदन्योऽधिकः ॥

பாணத்வம் வ்ருஷபத்வமர்த்தவபுஷா
பார்யாத்வமார்யாபதே
கோணித்வம் ஸகிதா ம்ருதங்க வஹதா
சேத்யாதி ரூபம் ததௌ ।
த்வத்பாதே நயனார்ப்பணம் ச
க்ருதவாம்ஸ்த்வத்தேஹ பாகோ ஹரி:
பூஜ்யாத் பூஜ்யதர: ஸ ஏவ ஹி ந சேத் கோ வா
ததந்யோऽதிக: ॥

आर्यापते-பார்வதீ பதியான ஈச்வர, हरिः-விஷ்ணு, बाणत्वं-பாணமாயிருப்பது, वृषभत्वं-விருஷபமாயிருப்பது, अर्धवपुषा-பாதி சரீரத்தால், भार्यात्वं-பத்னியாயிருக்கும் தன்மை, घोणित्वं-வராஹாவதாரமெடுப்பது, सखिता-நண்பனுயிருப்பது, मृदङ्गवहता-மிருதங்கம் வாசிப்பது, इत्यादिरूपं दधौ-இது முதலான ரூபத்தையடைந்தார். त्वत्पादे-உன் திருவடியில், नयनार्पणं च कृतवान्-கண்ணையும் அர்ப்பணம் செய்தார். त्वद्देहभागः-உன் சரீரத்தில் பங்குபெற்ற, स एव-அவர்தான், पूज्यात्पूज्यतरः-பூஜ்யாளான பிரம்மாதி தேவர்களைக்காட்டிலும் உயர்ந்தவர், न चेत्-இல்லாவிடில், को वा तदन्योऽधिकः-அவரைக் காட்டிலும் வேறு யார்தான் மேலானவன்?

தேவியின் கணவா! ஹரியானவர், அம்பாகவும், எருதாகவும், உடலைப்பகிர்ந்துகொள்ளும் மனைவியாகவும், பன்றியாகவும், ஒரு நண்பனுகவும், பறையறிபவனுகவும் பல்லுருக்களைகொண்டு ஒரு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சமயம் தன் கண்ணையும் உமது திருவடிகளில் சமர்ப்பித்தார். சிவபெருமானின் ஒரு பாதியாகுபவரே மிகவும் வணங்கத்தக்கவர், அவரினும் மிகுந்தவர் யார்?

இங்கு ஹரிஹர மூர்த்தம் விளக்கப்படுகின்றது. விஷ்ணு (ஹரி) சிவனுடன் பல வழிகளில் இணைக்கப்படுகின்றார், (1) விஷ்ணு திரிபுரம் எரிக்க சிவன் கை அம்பானார். (2) அவர் சிவ வாகனமாகும் எருதுவாகின்றார். (3) அவர் உடலின் பாதியாகி அவர் மனைவியானார். (4) அவர் சிவனடிகளைக் கண்டறிய ஒரு பன்றியானார். (5) அவர் சிவனுக்குத் துணை நிற்க மோஹினி வேடம் கொண்டார். (a) அச்சமயம் தேவர்களே அமிருதத்தை பெறவும், அசுரர்களுக்கு அது இல்லாமல் போகவும் செய்தார். (b) சிவபெருமானால் தான் தொடுபவர்கள் சாம்பலாக மாய வரம் பெற்ற பஸ்மாசுரனை அழிக்கும் பொழுதும் அவர் அவ்வுருக் கொண்டார். (6) சிவபெருமான் நடனம் செய்யும்பொழுது விஷ்ணு மத்தளம் கொட்டுகின்றார். (7) ஒரு சமயம் அவர் சிவனை பூஜை செய்துகொண்டிருக்க ஆயிரத்திற்கு ஒரு தாமரை மலர் குறைவாக இருப்பதைக்கண்டு அதற்குப்பதிலாகத் தன் கண்ணையே கொடுத்தார்.

ஹரி, ஹரனுக்கு மிகவும் நெருங்கியவர், அவர் பிறதேவர்களினும் உயர்ந்தவர். (82)

जननमृतियुतानां सेवया देवतानां
न भवति सुखलेशः संशयो नास्ति तत्र ।
अजनिममृतरूपं साम्बमीशं भजन्ते
य इह परमसौख्यं ते हि धन्या लभन्ते ॥ ८३ ॥

ஜனன ம்ருதி யுதானாம் ஸேவயா தேவதாநாம்
ந பவதி ஸுகலேஶ: ஸம்ஶயோ நாஸ்தி தத்ர ।
அஜநிமம்ருதரூபம் ஸாம்பமீஶம் பஜந்தே
ய இஹ பரம ஸௌக்யம் தே ஹி தன்யா லபந்தே ॥

जननमृतियुतानां-பிறப்பு இறப்பு இவைகளுடன் கூடிய, **देवतानां**-தேவதைகளின், **सेवया**-ஸேவையால், **सुखलेशः**-ஸ்வல்ப ஸுகம்கூட, **न भवति**-உண்டாகிறதில்லை, **तत्र**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அது விஷயத்தில், **संशयः नास्ति**-ஸந்தேஹமில்லை, **ये**-எவர்கள், **इह**-இவ்வுலகில், **अजनिं**-பிறப்பில்லாதவரும், **अमृतरूपं**-இறப்புமில்லாத ரூபத்தையுடையவருமான, **साम्बमीशं**-பார்வதியுடன் கூடிய பரமேச்வரனை, **भजन्ते**-ஸேவிக்கிறார்களோ, **ते धन्याः**-அந்த புண்யவான்கள், **परमसौख्यं लभन्ते**-மேலான ஸுகத்தை (முக்தி ஆனந்தத்தை) அடைகிறார்கள்.

பிறப்பு இறப்பென்னும் சுழலிலுள்ள தேவர்களைப் பூஜிப்பதால் சுகத்தின் சிற்றளவும் நாம் பெறுவதில்லை. இது ஒரு ஸந்தேகமற்ற முடிவு. என்றுமிருப்பவரும், பிறப்பில்லாதவருமான பார்வதியாரின் தலைவனை வணங்குபவர்களே பாக்கியசாலிகள். அவர்களே பேரானந்தத்தை அடைகின்றார்கள்.

சாதாரணமாகும் ஒரு உண்மை இங்கு சொல்லப்படுகின்றது. சிறுதெய்வங்களையும் உபதெய்வங்களையும் வழிபடுவது பயனற்றது. அது நமது இறுதி இலட்சியமாகும் நிறைவைப் பெற உதவாது. என்றுமுள்ளவரான சிவபெருமானே ஆத்மாவைக் காப்பாற்றிப் பேரானந்தத்தைக்கொடுக்கவல்லவர்.

शिव तव परिचर्यासंनिधानाय गौर्या
    भव मम गुणधुर्यां बुद्धिकन्यां प्रदास्ये ।
सकलभुवनबन्धो सच्चिदानन्दसिन्धो
    सदय हृदयगेहे सर्वदा संवस त्वम् ॥ ८४ ॥

ஶிவ தவ பரிசர்யா ஸந்நிதானாய கௌர்யா
    பவ மம குண துர்யாம் புத்தி கன்யாம் ப்ரதாஸ்யே ।
ஸகல புவன பந்தோ ஸச்சிதானந்த ஸிந்தோ
    ஸதய ஹ்ருதயகேஹே ஸர்வதா ஸம்வஸ த்வம் ॥

शिव-மங்களகரமானவரே, **सकलभुवनबन्धो**-எல்லா உலகிற்கும் பந்துவானவரே, **सच्चिदानन्दसिन्धो**-ஸத்யம் ஞானம் ஆனந்தம் இவைகளுக்கு ஸமுத்திரமானவரே, **सदय** தயவுடன் கூடியவரே, **भव**-உலகத்தைப் படைக்கிற ஈச்வர **गौर्या**-பார்வதியுடன் கூட, **तव**-உமக்கு, **परिचर्यासन्निधानाय**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பக்கத்தில் இருந்து ஏவல் செய்வதற்கு, **गुणधुर्यां**-நல்ல குணங்கள் நிறைந்த, **मम**-என்னுடைய, **बुद्धिकन्यां**-புத்தியாகிற கன்னிகையை, **प्रदास्ये**-கொடுக்கிறேன், **त्वं**-நீர், **हृदयगेहे**-ஹ்ருதயமாகிற கிருஹத்தில், **सर्वदा** – எப்பொழுதும், **संवस**–வாஸம் செய்யும்.

ஓ சிவ, ஓ பவ, உலகங்களுக்கெல்லாம் நண்ப! பேரானந்த அநுபவக்கடலே! கருணை வள்ளலே! பல சிறப்புக்களைப் பெற்றுள்ள எனது மனதென்னும் மணமகளை, கௌரியுடன் உனக்குப் பணிவிடை செய்யக்கொடுக்கின்றேன். நீ எப்பொழுதும் என் இதயம் என்னும் வீட்டில் அமர்வாயாக.

பக்தன் தனது மகளாகும் மனதை இறைவன் திருப்பணிவிடைக்குக் கொடுக்கின்றான். மனது பார்வதியாருடன் அமைந்து, அவருடன் சிவபெருமானுக்குப்பணிவிடை செய்யட்டும். இறைவன் இதயத்தையே தன் இருப்பிடமாக வைத்துக் கொள்ளட்டும். அவர் எப்பொழுதும் அதிலிருக்கட்டும். அதை விட்டுப்போகவே வேண்டாம். (84)

जलधिमथनदक्षो नैव पातालभेदी
न च वनमृगयायां नैव लुब्धः प्रवीणः ।
अशनकुसुमभूषावस्त्रमुख्यां सपर्यां
कथय कथमहं ते कल्पयानीन्दुमौले ॥ ८५ ॥

ஜலதி மதன தக்ஷோ நைவ பாதாள பேதீ
ந ச வநம்ருகயாயாம் நைவ லுப்த: ப்ரவீண: ।
அஶன குஸுமபூஷா வஸ்த்ர முக்யாம் ஸபர்யாம்
கதய கதமஹம் தே கல்பயாநீந்துமௌளே ॥

इन्दुमौले–சந்திரனை சிரஸில் அணிந்த ஈசுவர, **अहं**–நான் **जलधिमथनदक्षः नैव**–ஸமுத்திரத்தைக் கடைவதில் ஸாமர்த்தியமுள்ளவனல்ல, **पातालभेदी न च**–பாதாளலோகத்தைப் பிளக்கிறவனுமல்ல, **वनमृगयायां**–காடுகளில் வேட்டையாடுவதில், **प्रवीणः लुब्धः नैव**–சிறந்த வேடனுமல்ல, **ते**–உமக்கு **अशनकुसुमभूषावस्त्रमुख्यां सपर्यां**–ஆஹாரம், புஷ்பம், ஆபரணம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வஸ்திரம் முதலான பூஜையை, कथं-எப்படி, कल्पयानि-செய்வேன்?, कथय-சொல்லும்.

பிறை சூடிய பெருமானே! எனக்குக் கடல் கடையத்திற னில்லை. பாதாளலோகத்தை உடைக்கவும் தெரியாது. நான் திறமை மிக்க வேடனுமன்று இந்நிலையில் நான் உன்னை எப்படிப் பூஜிப்பது? எந்த நிவேதனங்களைப் படைப்பது (விஷத்தை)? மலர் (சந்திரன்), அணி (பாம்புகள்), வஸ்திரம் (யானையின் தோல்) முதலியவைகளை எப்படித்திரட்டுவேன்? எனக்குச்சொல்வாயாக!

பக்தனுக்கு இறைவனை வணங்கும் வழிகள் விளங்கவில்லை. இறைவனுக்கு வேண்டுபவைகளை பக்தன் எப்படிப் பெறுவது? விஷமே சிவபெருமானின் நிவேதனம். பாற்கடலைக் கடைந்தா லன்றி சிவனுணவாகும் ஹாலகாலத்தைப் பெறுவதெப்படி? பாம்புகளே இறைவன் அணிகள். அவைகளைப்பெற நாகலோகத் திற்குப் போகவேண்டும். சிவபெருமானின் வஸ்திரம், யானையின் தோல், புலித்தோல் இவை. இவைகளைப்பெற ஒருவன் வேட்டைத்திறன் பெற்றவனுகவேண்டும். சாதனங்கள் ஒன்றையும் பெருத பக்தன் தான் அவைகளைப் பெறவில்லையாகையால் தான் இறைவனுக்கு எதை சமர்ப்பிப்பது என்று கேட்கின்றுன். (85)

पूजाद्रव्यसमृद्धयो विरचिताः पूजां कथं कुर्महे
पक्षित्वं न च वा किटित्वमपि न प्राप्तं मया दुर्लभम् ।
जाने मस्तकमङ्घ्रिपल्लवमुमाजाने न तेऽहं विभो
न ज्ञातं हि पितामहेन हरिणा तत्त्वेन तद्रूपिणा ॥ ८६ ॥

பூஜா த்ரவ்யஸம்ருத்தயோ விரசிதாः பூஜாம் கதம் குர்மஹே
பக்ஷித்வம் ந ச வா கிடித்வமபி ந ப்ராப்தம் மயா துர்லபம் ।
ஜாநே மஸ்தகமங்க்ரி பல்லவமுமா ஜாநே ந தே஽ஹம் விபோ
ந ஞாதம் ஹி பிதாமஹேன ஹரிணு தத்வேன தத்ருபிணு ॥

उमाजाने-பார்வதீபதியான மகேச்வர, पूजाद्रव्यसमृद्धयः-பூஜைக்கு உரிய பதார்த்தங்களின் நிறைவுகள், विरचिताः-சேகரிக்கப்பட்டன, पूजां-பூஜையை, कथं कुर्महे-எப்படிச் செய்வோம்? मया-என்னுல், दुर्लभं-அடைய முடியாத, पक्षित्वं-பக்ஷியாயிருக்கும் தன்மை, न च प्राप्तं-அடையப்பட

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வில்லை. **किटित्वमपि वा**-வராஹத்தன்மையாவது, **न प्राप्तं**-அடையப்படவில்லை. **विभो**-ஸர்வ வியாபகமான ஈசுவர, **अहं**-நான், **ते**-உம்முடைய, **मस्तकं**-சிரஸ்ஸையும், **अंघ्रिपल्लवं**-துளிர்போன்ற பாதத்தையும், **न जाने**-அறியவில்லை. **तत्त्वेन**-உண்மையாக, **तद्रूपिणा**-அந்த ஹம்ஸபக்ஷி - வராகங்களின் ரூபத்தையுடைய, **पितामहेन हरिणा**-பிரம்மாவாலும் விஷ்ணுவாலும், **न ज्ञातं हि**-அறியப்படவில்லையன்றோ.

பார்வதியின் துணைவா! பூஜா சாமக்ரிகளை சேகரித்தாய் விட்டது. ஆயின் எப்படி பூஜை செய்வது? நான் ஒரு வராஹத்தின் சிறப்போ, ஒரு பறவையின் சிறப்போ பெறவில்லையே. எங்கும் பரந்து உள்ளானே, நான் முடியையோ திருவடிகளையோ பார்க்கவில்லை. பிரம்மாவினுலும் விஷ்ணுவினுலும் கூட அவைகளைப் பார்க்கக்கூடவில்லை.

சிவனை பூஜிக்கவேண்டிய சாமான்களை சேகரித்துவிட்டாலும் கூட எப்படிப் பூஜையைச் செய்வது? சிவனுடைய முடியையும் அடியையும் பார்ப்பது கூடுவதில்லை. பிரம்மா விஷ்ணு இவர்களாலேயும் அவை பார்க்கப்படவில்லை. பூஜையை எப்படிச் செய்வது? (86)

अशनं गरलं फणी कलापो
वसनं चर्म च वाहनं महोक्षः ।
मम दास्यसि किं किमस्ति शंभो
तव पादाम्बुजभक्तिमेव देहि ॥ ८७ ॥

அஶனம் கரளம் பணீ கலாபோ
வஸனம் சர்ம ச வாஹனம் மஹோக்ஷ: 1
மம தாஸ்யஸி கிம் கிமஸ்தி ஶம்போ
தவ பாதாம்புஜ பக்திமேவ தேஹி 11

शम्भो-க்ஷேமத்தை உண்டுபண்ணுகிறவரே, **अशनं**-ஆஹாரம், **गरलं**-காலகூட விஷம்; **कलापः**-ஆபரணம், **फणी**-ஸர்ப்பம், **वसनं**-வஸ்திரம், **चर्म**-தோல், **वाहनं**-வாகனம், **महोक्षः**-பெரிய எருது; **मम**-எனக்கு, **किं दास्यसि**-எதைக் கொடுப்பீர்? **किमस्ति**-என்ன இருக்கிறது? **तव**-உம்முடைய

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

पादाम्बुजभक्तिमेव देहि-பாதாரவிந்தத்தில் பக்தியையே கொடுங்கள்.

ஓ சம்பூ, உனக்கு உணவு விஷம், அணி பாம்பு, வஸ்திரம் தோல், வாகனம் எருது. நீ எதை எனக்குக்கொடுப்பாய்? மேலும் அங்குள்ளதெது? நினது திருவடியில் பக்தியை மட்டும் கொடுப்பாயாக!

85ம் பாட்டில் பக்தன் அவருக்கு உகந்த விஷத்தையும், பாம்புகளையும், தோல்களையும் எப்படிக்கொடுக்கமுடியும் என்று கேட்கிறுன். இந்த சுலோகத்தில் சிவன் தனக்குத் தரக்கூடிய பொருள் எது என்று கேட்கிறுன். சிவனிடம் இருக்கும் விஷம் முதலியவை பக்தனுக்கு பயன்படுவனவன்று. பக்தன் பரமன் திருவடியில் பக்தி செய்வதையே வேண்டுகின்ருன்.

இது நிந்தாஸ்துதி என்ற வகையில் அமைகின்றது, புகழை இகழாகச் சொல்வது. (87)

यदा कृताम्भोनिधिसेतुबन्धनः
करस्थलाधःकृतपर्वताधिपः ।
भवानि ते लङ्घितपद्मसंभव-
स्तदा शिवार्चास्तवभावनक्षमः ॥ ८८ ॥

யதா க்ருதாம்போநிதி ஸேதுபந்தன:
கரஸ்தலாத:க்ருத பர்வதாதிப: ।
பவானி தே லங்கித பத்மஸம்பவ-
ஸ்ததா ஶிவார்சா ஸ்தவ பாவன க்ஷம: ॥

शिव-மங்களஸ்வரூப, **यदा**-எப்பொழுது, **कृताम्भोनिधिसेतुबन्धनः**-ஸமுத்திரத்தில் அணைகட்டுவதைச் செய்தவனுகவும், **करस्थलाधःकृतपर्वताधिपः**-கையால் (பூமியில்) கீழே இருக்கும்படி செய்யப்பட்ட விந்த்யமலையை உடையவனுகவும், **लंघितपद्मसंभवः**-பிரம்மாவைக் காட்டிலும் உயர்ந்தவனுகவும் இருப்பேனே **तदा**-அப்பொழுது, **ते**-உனக்கு, **अर्चास्तवभावनक्षमः**-அர்ச்சனை, ஸ்தோத்திரம், தியானம் இவைகளைச் செய்யத்தகுதியுள்ளவனுக, **भवानि**-ஆவேன்,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடல்மீது பாலம் கட்டினவனாகவோ (ராமனாகவோ), உள்ளங் கையால் விந்தியமலையை அழுத்தியவனாகவோ (அகஸ்திய ராகவோ), உலகங்களைப் படைத்து, வேதங்களை விளக்கிய தாமரையில் பிறந்த பிரம்மனாகவோ ஆனாலல்லது உன்னைப் பூஜிக்க என்றால் முடியுமா? அப்பொழுதே உன்னைப் பூஜிக்கவும் உன் புகழைப்பாடவும், உன் தியானத்தில் அமரவும் கூடும்!

சாவிற்குட்பட்ட மனிதனுக்கு சிவனைப் பூஜிக்கவும், அவர் புகழைச்சொல்லவும், அவரை தியானிக்கவும் கூடுவதில்லை. இவைகளைச் செய்ய ராமசந்திரனாகவும், அகஸ்தியராகவும், பிரம்மனாகவும் இருக்கவேண்டும். ஸ்ரீராமசந்திரர் இலங்கைக்குப் பாலம் கட்டியவர். ராமேசுவரத்தில் சிவனைப் பூஜை செய்தார். அகஸ்தியர் (குறுகிய உருவம் பெற்றவர்) விந்தியபர்வதத்தின் அகந்தையை அகற்ற, அதைத் தன் உள்ளங்கையால் அழுத்தி வைத்தார். அவர் சிவன் புகழைப் பாட வல்லவர். சிவனை தியானிப்பதானால் ஒருவன் பிரம்மாவினும் உயர்ந்தவனாக இருக்க வேண்டும். (88)

नतिभिर्नुतिभिस्त्वमीश पूजा-
विधिभिर्ध्यानसमाधिभिर्न तुष्टः ।
धनुषा मुसलेन चाश्मभिर्वा
वद ते प्रीतिकरं तथा करोमि ॥ ८९ ॥

நதிபிர் நுதிபிஸ்த்வமீஶ பூஜா-
விதிபிர் த்யான ஸமாதிபிர் ந துஷ்ட: ।
தனுஷா முஸலேன சாச்மபிர் வா
வத தே ப்ரீதிகரம் ததா கரோமி ॥

ईश-ஹே ஈச்வர, यथा-எப்படி, त्वं-நீர், धनुषा-வில்லினாலாவது, मुसलेन-உலக்கையாலாவது, अश्मभिर्वा-கற்களினாலாவது तुष्टः-ஸந்தோஷிப்பீரோ, तथा-அவ்வாறு नतिभिः-நமஸ்காரங்களாலும், नुतिभिः-ஸ்தோத்திரங்களாலும், पूजाविधिभिः-பூஜை முறைகளாலும், ध्यानसमाधिभिः-தியான ஸமாதிகளாலும், न तुष्टः-ஸந்தோஷப்படமாட்டீர். (ஆகையால்) ते-உமக்கு, प्रीतिकरं वद-பிரியமான விஷயத்தைச் சொல்லும், तथा करोमि-அவ்விதம் செய்கிறேன்,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இறைவ! நமஸ்காரங்கள், உன் புகழ்பாடுதல், பூஜாவிதிகள், ஒருமைபட்ட மனம், தியானம் இவைகளால் உனக்கு திருப்தி உண்டாவதில்லை. ஒரு அம்பினாலும் கல்லாலும், தண்டத்தாலும் அடிக்கப்படுவதை நீ விரும்புகிறாய் போலும். அப்படியானால் அதைச்சொல் உனக்கு எது உகந்ததோ அதைச்செய்கின்றேன்.

இந்தப்பாட்டும் நிந்தாஸ்துதி. சாதாரண பூஜை முறைகள் சிவனை திருப்தி செய்வதில்லை போலும்! எதற்காக அவர் முரட்டுச் செய்கைகளைப் பூஜையாக ஏற்றுக்கொண்டுள்ளார்? (1) அர்ச்சுனன் சிவனருளைப்பெற கடுந்தவம் செய்துகொண்டிருந்தான். சிவன் ஒரு வேடுவனாக அவன் முன்பு தோன்றினார். அவர்களிருவருக்குள்ளும், யார் அந்த ஒரு விலங்கைக்கொன்றது என்ற சண்டை உண்டாயிற்று- கைகலப்பு உண்டாக அர்ச்சுனன் சிவபெருமானை வில்லால் அடித்தான். சிவபெருமானுக்குப் பெருமகிழ்ச்சி உண்டாயிற்று (2) தண்டமென்பது பாண்டியமன்னனின் பிரம்பைக் குறிக்கின்றது போலும்! மாணிக்கவாசகர் பிழையாக அரசனால் தண்டிக்கப்பட்டார். பாண்டியனுக்குப் பாடம் கற்பிக்க கரைகள் உடையும் வண்ணம் வைகையில் பெருவெள்ளம் வந்தது. மதுரையின் குடிமக்கள் அனைவரும் சேர்ந்து உடைப்புகளை அடைக்கவேண்டுமென்று பாண்டியன் உத்திரவிட்டான். ஆப்பம் விற்கும் ஒரு கிழவிக்கு ஆள்கிடைக்கவில்லை. இறைவனே பணியாளாக வேடம் புனைந்து அக்கிழவியின் வேலையைத் தான் செய்வதாக ஒப்புக்கொண்டார். ஆயின் அவர் வேலையை ஒழுங்காகச் செய்யவில்லை. பிறர் வேலை செய்யாவண்ணம் அவர்கள் அக்கரையையும் அகற்றினார். அரசன் தணிக்கைக்கு வர, இந்தப் பணியாளனைப்பார்த்து, அவனைத் தன் பிரம்பால் தட்டினார். (3) சாக்கிய நாயனார் சமண அரசனின் கீழ் வாழ்ந்தவர். அவருக்கு முறையாக சிவனை பூசிப்பது கூடாததாக அவர் சிவலிங்கத்தின் மீது கல்லெறிந்து இதயபூசை செய்தார். (89)

वचसा चरितं वदामि शंभो-
रहमुद्योगविधासु तेऽप्रसक्तः ।
मनसाकृतिमीश्वरस्य सेवे
शिरसा चैव सदाशिवं नमामि ॥ ९० ॥

வசஸா சரிதம் வதாமி ஶம்போ-
ரஹமுத்யோக விதாஸு தேऽப்ரஸக்த: ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மநஸாக்ருதிமீச்வரஸ்ய ஸேவே
ஶிரஸா சைவ ஸதாஶிவம் நமாமி ॥

ते उद्योगविद्यासु-உம்முடைய உயர்ந்தயோகத்தில், **अप्रसक्तः**-பழக்கமில்லாத, **अहं**-நான், **शम्भोः**-ஈசுவரனுடைய, **चरितं**-கதையை, **वचसा**-வார்த்தையால், **वदामि**-சொல்லுகிறேன், **मनसा**-மனதால், **ईश्वरस्य**-ஈசுவரனின், **आकृतिं**-ரூபத்தை, **सेवे**-தியானம்செய்கிறேன், **शिरसा चैव**-சிரஸ்ஸினுலும், **सदाशिवं नमामि**-ஸதாசிவனை நமஸ்கரிக்கிறேன்.

முயற்சியுடன் உன்னை தியானிக்க நான் பழக்கமடைந்தவனன்று. நான் சம்பூவின் கதைகளைச்சொல்வேன். சிவனுருவத்தை மனதில்கொண்டு வணங்குவேன். தலையால் சதாசிவனுக்கு வணங்குவேன். இவையே என்னுல் செய்யக்கூடியவை.

ஒருவன் இதயத்தால் சிவனைப் பூஜை செய்யத் தகுதி பெற்றிருக்காவிட்டாலும் அவன் தயங்கவேண்டுவதில்லை. அவன் கீழ்ப்படிமுறைகளாலேயே பக்தி செய்யட்டும். அவன் படிப்படியாக மேலேறவே செய்வான். (90)

आद्याऽविद्या हृद्गता निर्गताऽऽसी-
द्विद्या हृद्या हृद्गता त्वत्प्रसादात् ।
सेवे नित्यं श्रीकरं त्वत्पदाब्जं
भावे मुक्तेर्भाजनं राजमौले ॥ ९१ ॥

ஆத்யாऽவித்யா ஹ்ருத்கதா நிர்கதாऽऽஸீத்
வித்யா ஹ்ருத்யா ஹ்ருத்கதா த்வத்ப்ரஸாதாத் ।
ஸேவே நித்யம் ஸ்ரீகரம் த்வத்பதாப்ஜம்
பாவே முக்தேர் பாஜனம் ராஜமௌளே ॥

राजमौले-சந்திரனை சிரஸில் அணிந்தவரே, **त्वत्प्रसादात्**-உம்முடைய அனுக்ரஹத்தால், **आद्या**-ஆதிமுதலிருக்கிற **हृद्गता**-மனதிலுள்ள, **अविद्या**-அக்ஞானம், **निर्गतासीत्**-போய்விட்டது. **या**-எந்த ஞானம், **हृत्**-அக்ஞானத்தைப் போக்குமோ, **विद्या**-அந்த ஞானம், **हृद्गता**-ஹிருதயத்திலிருக்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கிறது. **श्रीकरं**-ஸம்பத்தை யுண்டுபண்ணுகிற, **मुक्तेर्भजनं**-முக்திக்கு ஸாதனமான, **त्वत्पदाब्जं**-உம்முடைய பாதார விந்தத்தை, **भावे**-மனதில், **नित्यं सेवे**-எப்பொழுதும் தியானம்செய்கிறேன்.

பிறைசூடும் பெருமானே! நினது திருவருளால் ஆதியற்று என்னிதயத்து நிலைபெற்ற மாயை அகன்றுவிட்டது. பிரம்ம ஞானம் அங்கு நிலைத்துவிட்டது. மங்களத்தைக் கொடுப்பதும், விடுதலைக்கு வழிவிடுவதுமாய உன் திருவடிகளை நான் தியானம் செய்து வணங்குகின்றேன். (91)

दूरीकृतानि दुरितानि दुरक्षराणि
दौर्भाग्यदुःखदुरहंकृतिदुर्वचांसि ।
सारं त्वदीयचरितं नितरां पिबन्तं
गौरीश मामिह समुद्धर सत्कटाक्षैः ॥ ९२ ॥

தூரீக்ருதானி துரிதானி துரக்ஷராணி
தௌர்பாக்ய துக்க துரஹங்க்ருதி துர்வசாம்ஸி ।
ஸாரம் த்வதீய சரிதம் நிதராம் பிபந்தம்
கௌரீஶ மாமிஹ ஸமுத்தர ஸத்கடாக்ஷை: ॥

गौरीश-கௌரீநாத, **दुरक्षराणि**-பிரம்மாவின் கெட்ட எழுத்தைக் குறிக்கின்ற, **दुरितानि**-பாபங்களால் உண்டான **दौर्भाग्यदुःखदुरहंकृतिदुर्वचांसि**-துரதிருஷ்டம், துக்கம், கெட்ட அஹங்காரம், கெட்ட வார்த்தை இவைகள், **दूरीकृतानि**-போக்கப்பட்டன. **सारं**-உயர்ந்த, **त्वदीयचरितं**-உன்சரித்திரத்தை, **नितरां पिबन्तं**-அதிகமாகக் குடிக்கிற (கேட்கிற) **मां**-என்னை, **सत्कटाक्षैः**சிலாக்கியமான கடைக்கண் பார்வைகளால், **इह**-இந்த ஜன்மாவிலேயே, **समुद्धर**-கரையேற்றும்.

கௌரியின் கணவ, துரதிர்ஷ்டம், கஷ்டம், கொடிய அகந்தை கொடுஞ்சொல் இவைகளெல்லாம் — பாபங்களால் தோன்றுபவை — துரத்தப்பட்டுள்ளன. நான் உனது புகழென்னும் இனிய புராணங்களைப் பருகி நிற்கின்றேன். கிருபை செய்து என்னையும் இங்கே காப்பாற்றுவாயாக!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இறைவனருளாலேயே தீயவையெல்லாம் அகற்றப்படுகின்றன. தீயது, பாபம், கஷ்டம் இவையெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல அகன்றுவிடுகின்றன. (92)

सोमकलाधरमौलौ कोमलघनकंधरे महामहसि ।
स्वामिनि गिरिजानाथे मामकहृदयं निरन्तरं रमताम् ॥

ஸோம கலாதர மௌளௌ
கோமள கநகந்தரே மஹாமஹஸி ।
ஸ்வாமினி கிரிஜா நாதே
மாமக ஹ்ருதயம் நிரந்தரம் ரமதாம் ॥

मामकहृदयं-என் மனம், **सोमकलाधरमौलौ**-சந்திரகலையை சிரஸில் அணிந்தவரும், **कोमलघनकन्धरे**-அழகியமேகம் போல் நீலமான கழுத்தையுடையவரும், **महामहसि**-பெரிய ஒளி ரூபமாயும், **स्वामिनि**-லோக நாதனுமான, **गिरिजानाथे**-பார்வதீபதியிடத்தில், **निरन्तरं रमतां**-இடைவிடாமல் இன்புற்றிருக்கட்டும்.

கிரிஜாவின் கணவனும், பிறையைத்தலையில் அணிபவனும், மேகம்போன்ற நீலமாய கழுத்தைப்பெற்றவனும், பிரகாசத்தைப் பெற்ற உருபடைத்தவனுமான உன்னிடம் என் இதயம் அமர்ந்து மகிழட்டும்.

பக்தன் சிவனது அருட்செயல்கள் சிலவற்றைச்சொல்லி, அதன் பொருளை தியானிக்கின்றார். சிவனது உருவும் அவயவங்களும் அவரது செயலைக்குறிப்பிடுகின்றன. (93)

सा रसना ते नयने तावेव करौ स एव कृतकृत्यः ।
या ये यौ यो भर्गं वदतीक्षेते सदाऽर्चतः स्मरति ॥ ९४ ॥

ஸா ரஸநா தே நயனே
தாவேவ கரௌ ஸ ஏவ க்ருதக்ருத்ய: ।
யா யே யௌ யோ பர்கம்
வததீக்ஷேதே ஸதாऽர்ச்சத: ஸ்மரதி ॥

या-எது, **सदा**-எப்பொழுதும், **भर्गं वदति**-சிவநாமாவைச் சொல்லுகிறதோ, **सा एव रसना**-அதுதான் நாக்கு, **ये**-

Sri Vidyabharathi Book Centre Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

எவைகள், **भर्गं ईक्षेते**-(எப்பொழுதும்) ஈசுவரனைப்பார்க்கிறதுகளோ, **ते नयने**-அவைகள்தான் கண்கள், **यौ**-எவைகள், **भर्गं अर्चतः**-(எப்பொழுதும்) ஈசுவரனைப் பூஜிக்கின்றனவோ, **तावेव करौ**-அவைகள்தான் கைகள், **यः**-எவன், **भर्गं स्मरति**-(எப்பொழுதும்) ஈசனை ஸ்மரணம் செய்கிறானோ **स एव कृतकृत्यः**-அவன்தான் செய்யக்கூடியவைகளை செய்தவனாகிறான்.

எவனது நாக்கு சிவனையே பேசுகின்றதோ, கண்கள் சிவனையே பார்க்கின்றனவோ, கைகள் சிவனையே பூஜிக்கின்றனவோ எவன் அவனையே விடாது சிந்திக்கின்றானோ அவன் தன் இலட்சியத்தைப் பெற்றவனாகின்றான்.

முன்பு பல சுலோகங்களில் சொல்லப்பட்ட கருத்தே இங்கும் சொல்லப்படுகின்றது. புலன்களின் செயலும் மனதும் இறைவனையே நோக்கி அமைதல் வேண்டும். (94)

अतिमृदुलौ मम चरणावतिकठिनं ते मनो भवानीश ।
इति विचिकित्सां संत्यज शिव कथमासीद्गिरौ तथा वेशः ॥

அதிம்ருதுலௌ மம சரணா-
வதிகடினம் தே மனோ பவானீஶ ।
இதி விசிகித்ஸாம் ஸந்த்யஜ
ஶிவ கதமாஸீத் கிரௌ ததா வேஶ: ॥

भवानीश-பார்வதீபதியான ஈச, **मम चरणौ**-என்கால்கள் **अतिमृदुलौ**-மிகவும் மென்மையானவைகள், **ते मनः**-உன் மனம், **अतिकठिनं**-மிகவும் முரடானது, **इति विचिकित्सां संत्यज**-என்ற ஸந்தேகத்தை விட்டுவிடு. **शिव**-மங்களரூபியே **तथा**- அவ்விதமான (கரடுமுரடான), **गिरौ**-மலையில், **कथं**-எப்படி, **वेश आसीत्**-பிரவேசம் ஏற்பட்டது.

பார்வதி தேவியின் கணவ! "எனது பாதங்கள் மிருதுவானவை. உனது இதயம் கடினமானது" என்ற எண்ணத்தை விட்டுவிடுவாயாக! சிவனே, நீ ஏன் மலையில் வசிப்பதை ஏற்றுக் கொண்டாய்?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இங்கும் முன்பு சொல்லிய கோரிக்கையே பக்தனுல் வற்புறுத்தப்படுகின்றது. அவனது இதயம் மிகவும் கடினமானதென்றும் தன் பாதங்கள் மிருதுவானதெனவும் கொண்டு அதில் புக மறுப்பது கூடாது. (95)

धैर्याङ्कुशेन निभृतं रभसादाकृष्य भक्तिशृङ्खलया ।
पुरहर चरणालाने हृदयमदेभं बधान चिद्यन्त्रैः ॥ ९६ ॥

தைர்யாங்குசேன நிப்ருதம்
ரபஸாதாக்ருஷ்ய பக்தி ச்ருங்கலயா ।
புரஹர சரணாலானே
ஹ்ருதயமதேபம் பதாந சித்யந்த்ரை: ॥

पुरहर-முப்புரங்களையெரித்த ஈசுவர, **हृदयमदेभं**-மனமாகிய மதயானையை, **धैर्याङ्कुशेन**-தைரியமாகிற ஈட்டியால் **रभसात्**-வேகமாய், **आकृष्य**-இழுத்து, **भक्तिशृङ्खलया**-பக்தியாகிய சங்கிலியால், **चरणालाने**-திருவடிகளாகிற யானை கட்டும் ஸ்தம்பத்தில், **चिद्यन्त्रैः**-ஞானமாகிற உபாயங்களால் **निभृतं**-அசையாமல் இருக்கும்படி, **बधान**-கட்டும்.

முப்புரங்களை அழித்தவனே, என் இதயமென்னும் யானையை தங்கள் பாதமென்னும் கட்டுமுளையில் கட்டிவையுங்கள். அதை தைரியம் என்னும் வலிவுடன் வேகமாக இழுத்து பக்தி என்னும் தளையால் பிணித்து, அறிவென்னும் இயந்திரம் கொண்டு அது திரியாமல் அதைப்பிணைக்கவேண்டும்.

இதிலும் அடுத்த பாட்டிலும் இதயம் ஒரு யானையுடன் ஒப்பிடப்படுகின்றது. இந்த முரட்டு யானை பிடிக்கப்பட்டு கட்டுப்பாட்டில் வைக்கப்படவேண்டும். இறைவன் ஒருவனே அதைச் செய்யக்கூடும். (96)

प्रचरत्यभितः प्रगल्भवृत्त्या मदवानेष मनःकरी गरीयान् ।
परिगृह्य नयेन भक्तिरज्ज्वा परम स्थाणु पदं दृढं नयामुम् ॥

ப்ரசரத்யபித: ப்ரகல்ப வ்ருத்த்யா
மதவானேஷ மந:கரீ கரீயான் ।
பரிக்ருஹ்ய நயேந பக்தி ரஜ்ஜ்வா
பரம ஸ்த்தாணு பதம் த்ருடம் நயாமும் ॥
Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

परम-அளவற்ற ரூபமுடையவரே. **मदवान्**-மதத்துடன் கூடிய, **गरीयान् एष मनःकरी**-மனமாகிற இந்தப் பெரிய யானை, **प्रगल्भवृत्त्या**-முரட்டு சுபாவத்தால், **अभितः**-நாலா பக்கங்களிலும், **प्रचरति**-அலைகிறது. **अमुं**-இந்த மத யானையை, **भक्तिरज्ज्वा**-பக்தியாகிற கயிறுல், **परिगृह्य**-ஸ்வாதீனம்செய்து, **नयेन** - நயமாக, **दृढं**-கெட்டியாய், **स्थाणु पदं**-நிலையான இடத்தை **नय**-அடையச்செய்.

தலைவர்க்கும் தலைவ! இந்த மனமென்னும் யானை மதம் பிடித்து, பலத்துடன் பல அட்டூழியங்களைச்செய்கின்றது. எல்லா திக்குகளிலும் திரிகின்றது. அதை பக்தி யென்னும் கயிற்றுல் கட்டி, நயமாக நிலையான இடத்திற்கு இழுத்துச் செல்வாயாக!

மனமென்னும் யானை, முரடானது. தன் வழிச்செல்வது, பக்தியென்னும் தளையால் கட்டப்பட்டு, இறைவனடிகளுக்கு இழுத்துச் செல்லப்பட்டு அது நிலைநிறுத்தப்படவேண்டும். ஸ்தாணு என்பது சிவபெருமானின் பெயர்களில் ஒன்று. (97)

सर्वालङ्कारयुक्तां सरलपदयुतां साधुवृत्तां सुवर्णां
सद्भिः संस्तूयमानां सरसगुणयुतां लक्षितां लक्षणाढ्याम् ।
उद्यद्भूषाविशेषामुपगतविनयां द्योतमानार्थरेखां
कल्याणीं देव गौरीप्रिय मम कविताकन्यकां त्वं गृहाण ॥

ஸர்வாலங்கார யுக்தாம் ஸரள பத யுதாம் ஸாது
வ்ருத்தாம் ஸுவர்ணாம்
ஸத்பி: ஸம்ஸ்தூயமாநாம் ஸரஸகுண யுதாம்
லக்ஷிதாம் லக்ஷணாட்யாம் ।
உத்யத் பூஷா விசேஷாமுபகத விநயாம்
த்யோதமாநார்த்த ரேகாம்
கல்யாணீம் தேவ கௌரீப்ரிய மம கவிதா
கந்யகாம் த்வம் க்ருஹாண ॥

देव-பிரகாசமானவரே, **गौरीप्रिय**-பார்வதியிடம் அன்பு கொண்ட பரமேச்வர, **सर्वालङ्कारयुक्तां**-உபமானம் முதலிய எல்லா அலங்காரங்களுடன் (எல்லாவிதமான அலங்காரங்களுடன்) கூடியதும், **सरलपदयुतां**-சுலபமாக அறியக்கூடிய

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அர்த்தங்களுள்ள பதங்களையுடையதும் (மெதுவான நடையையுடையவளும்), **साधुवृत्तां**-சிறந்த விருத்தங்கள் உள்ளதும் (நல்ல நடத்தையுடையவளும்), **सुवर्णां**-நல்ல எழுத்துக்களுடன் கூடியதும் (நல்ல ரூபத்தையுடையவளும்), **सद्भिः संस्तूयमानां**-ஸாதுக்களால் கொண்டாடக் கூடியதும், **सरसगुणयुतां**-சிருங்காரம் முதலிய ரஸங்களுடனும் சிறந்த குணங்களுடனும் கூடியதும், **लक्षितां**-ப்ரதிபாதனம் பண்ணக்கூடிய நாயகனையுடையதும் (கன்னிகையை அபேக்ஷிக்கிறவர்களால் நிச்சயிக்கப்பட்டவளும்.) **लक्षणाढ्यां**-நல்ல லக்ஷணங்களையுடையதும், **उद्यद्भूषाविशेषां**-சப்தாலங்காரச் சிறப்புள்ளதும் (ஒளியுள்ள ஆபரணமணிந்தவளும்), **उपगतविनयां**-கவியின் அடக்கமுள்ளதும் (அடக்கமுள்ளவளும்), **द्योतमानार्थरेखां**-அனேக அர்த்தங்களால் பிரகாசிப்பதும் (பாக்ய ரேகைகளுடன் விளங்குபவளும்), **कल्याणीं**-மங்களம் தருவதும் (மங்களரூபியாயும்) ஆன, **मम** என்னுடைய, **कविताकन्यकां**-கவிதையாகிற கன்னிகையை **त्वं**-நீ, **गृहाण**-ஏற்றுக்கொள்.

கௌரியின் அன்ப, இறைவ, அலங்காரங்கள் நிறைந்து கம்பீர நடையுடனமர்ந்து, தவத்தில் பழக்கம் பெற்று, அழகு நிறைந்து சிறந்த மணமகளாக உள்ள என் கவிதை என்னும் பெண்ணை ஏற்றுக்கொள்வாயாக. அவளுக்கு நல்ல சீலங்களும் ஆபரணங்களும் உண்டு. அவள் பெண்மை நிறைந்து, கையில் நல்ல அதிர்ஷ்ட ரேகைகளையும் பெற்றிருக்கின்றாள். அவள் மங்களம் நிறைந்தவள்.

தகப்பன் தன் மகளைத் தான் தேர்ந்தெடுத்த மணமகனுக்குக் கொடுப்பதைப்போல கவி தன் கவிதையை இறைவனுக்கு ஒப்படைக்கின்றார். இந்த நூலிற்குப் பொருந்தும் சிறப்புகள்: எல்லா அலங்காரங்களும் (அணிகளும்) இதில் உள்ளன. சொற்கள் அழகாக அமைகின்றன, அரிய சந்தங்கள் வைக்கப்பட்டுள்ளன. அழகாக அமைந்திருப்பதால் புலவர்களின் புகழிற்கு உரியது. இதில் பல இரசங்களும் உள்ளன. அதன் பயனும் நோக்கும் அரியவை. பணிவையும் குறிக்கின்றது. ஆழ்ந்த கருத்துகளும் குறிப்பிடும் பொருள்களும் அமைகின்றன. படிப்போருக்கு மங்களத்தை உண்டாக்கவல்லது. (98)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

इदं ते युक्तं वा परमशिव कारुण्यजलधे
गतौ तिर्यग्रूपं तव पदशिरोदर्शनधिया ।
हरिब्रह्माणौ तौ दिवि भुवि चरन्तौ श्रमयुतौ
कथं शंभो स्वामिन्कथय मम वेद्योऽसि पुरतः ॥ ९९ ॥

இதம் தே யுக்தம் வா பரமஶிவ காருண்ய ஜலதே
கதௌ திர்யக்ரூபம் தவ பத ஶிரோ தர்ஶனதியா ।
ஹரி ப்ரஹ்மாணௌ தௌ திவி புவி சரந்தௌ ச்ரமயுதௌ
கதம் ஶம்போ ஸ்வாமின் கதய மம வேத்யோऽஸி புரத: ॥

परमशिव-பரமேச்வர कारुण्यजलधे-கருணைக்கடலே, तव-உம்முடைய, पदशिरोदर्शनधिया-கால், தலை இவைகளைப் பார்க்க வேண்டுமென்கிற கருத்தினால், तिर्यग्रूपं-வராஹம், பக்ஷி இந்த ரூபங்களை, गतौ-அடைந்த, तौ-அந்த, हरिब्रह्माणौ-விஷ்ணுவும் பிரம்மாவும், दिवि भुवि चरन्तौ-ஆகாயத்திலும் பூமியிலும் ஸஞ்சரித்துக்கொண்டு, श्रमयुतौ-சிரமத்தையடைந்தார்கள். इदं-இது, ते युक्तं वा-உமக்குத் தக்கதுதானா? शम्भो - மோக்ஷஸுகத்தையளிக்கிறவரே, स्वामिन्-ஸர்வலோக நாயக, मम पुरतः-என் முன்னாலே, कथं-எப்படி वेद्योऽसि-அறியக்கூடியவராகிறீர்? कथय-சொல்லும்.

பரமாகிய சிவனே! கருணைக்கடலே, உனது அடிமுடிகளைக் காண பிரம்மா விஷ்ணுக்கள், மனிதனினும் தாழ்ந்த உருவங்களை எடுத்துக்கொண்டு, ஆகாயத்தில் தாவியும், நிலத்தைக்கீண்டியும் சென்று துன்புற்றார்கள். இது உனக்கு முறையா? ஓ சம்பூ, தலைவ! உடனடியாக நான் உன்னை தெரிந்துகொள்வதெப்படி?

இங்கும் அடிமுடி காணாது விஷ்ணு பிரம்மா இவர்கள் திகைத்தது குறிக்கப்படுகின்றது. (99)

स्तोत्रेणालमहं प्रवच्मि न मृषा देवा विरिञ्चादयः
स्तुत्यानां गणनाप्रसङ्गसमये त्वामग्रगण्यं विदुः ।
माहात्म्याग्रविचारणप्रकरणे धानातुषस्तोमव-
द्धूतास्त्वां विदुरुत्तमोत्तमफलं शंभो भवत्सेवकाः ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்தோத்ரேணாலமஹம் ப்ரவச்மி ந ம்ருஷா தேவா
விரிஞ்சாதய:
ஸ்துத்யானாம் கணனா ப்ரஸங்க ஸமயே
த்வாமக்ரகண்யம் விது: ।
மாஹாத்ம்யாக்ர விசாரணப்ரகரணே தானா துஷ ஸ்தோமவத்
தூதாஸ்த்வாம் விதுருத்தமோத்தம பலம்
ஶம்போ பவத்ஸேவகா: ॥

शम्भो-அழிவற்ற சுகத்தைக் கொடுக்கக்கூடிய ஈச்வர, **भवत्सेवकाः**-உம்முடைய பக்தர்களான, **विरिञ्चादयः**-பிரம்மா முதலிய, **देवाः**-தேவர்கள், **स्तुत्यानां गणनाप्रसङ्गसमये**-புகழத் தக்கவர்களை எண்ணும் ஸந்தர்ப்பம் நேரும்போது **त्वामग्रगण्यं विदुः**-உம்மைத்தான் முதல்வராக அறிகிறார்கள். **माहात्म्याग्रविचारणप्रकरणे**-உயர்ந்த முத்தொழிலிலும் ஸாமர்த்திய மென்ற மகிமையை எண்ணுகிற ஸமயத்தில், **धानातुषस्तोमवत्** பொரியின் பதரின் குவியல்போல், **धूताः**-போக்கடிக்கப் பட்டவர்களாய், **त्वां**-உம்மை, **उत्तमोत्तमफलं**-ஸர்வோத்தம பலமாக, **विदुः** அறிகிறார்கள். **अहं**-நான், **मृषा न प्रवच्मि**-பொய் பேசவில்லை. **स्तोत्रेणालम्**-ஸ்தோத்திரம் செய்வது போதும்.

ஓ சம்பூ! உனது பணியாட்களான பிரம்மா முதலிய தேவர்கள் புகழத்தக்கவர்களைப்பற்றிப் பேசும்பொழுது உன்னையே முதல்வனாக உணர்கிறார்கள்! பெரியோர்களில் சிறந்த மஹிமையைப்பற்றி விசாரிக்கும்பொழுதும் அவர்கள் மணியை மூடியிருக்கும் உமியைப்போன்றுகின்றார்கள். அவர்கள் நீயே சிறந்த பயன் என்பதை அறிகின்றார்கள். நான் பொய்பேசவில்லை. உன்னை நான் எப்படிப் புகழ்வது?

இங்கு இந்த நூல், சிவனே பரம்பொருள் என்னும் துணிவுடன் முடிகின்றது. தேவர்கள் குழாத்தில் சுலபமாக இவரே முதல்வராக ஏற்றுக்கொள்ளப்படுகின்றார். அவர் பெருமையை உரைக்கப்புகழும் உதவுவதன்று. அவன் புகழைச்சொல்லவும் அவன் அருள் வேண்டும்.

(*100*)

ஸ்ரீ சிவானந்தலஹரீ முற்றும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ श्रीः ॥

॥ श्लोकानुक्रमणिका ॥

ஸ்லோகம்	பக்கம்
अ	
अक्षतैर्धवलैर्दिव्यैः	90
अगौरगात्रैरललाट	16
अत्यर्थं राजते या	41
अद्राक्षमक्षीणदया	3
अपारकारुण्यसुधा	5
अस्तोकस्तोत्रशस्त्रैः	62
आ	
आकाशश्चिकुरायते	127
आगत्य मृत्युञ्जय	80
आत्मप्रेम्णा भवान्या	47
आनन्दायेन्दुकान्तो	60
आनीतेनातिशुभ्रेण	88
आरभ्य स्मरजयिनः	75
आलेपवन्तं मदनाङ्ग	11
उ	
उपासकानां त्वमुमा	20
उपासकानां यदुपासनीयं	1
उपासते यं मुनयः	14
ए	
एकेन मुद्रां परशुं	10
एलाशुण्ठीसहितं	102
क	
कण्ठाश्लेषार्थमाप्ता	52
कर्पूरचूर्णं कपिलाज्य	95
कलाभिरिन्दोरिव	7
कान्त्या निन्दितकुन्द	15
कुर्वन्निर्वाणमार्ग	27
कूश्माण्डवार्ताक	98
केवलमतिमाधुर्यं	99
कैलासे कमनीयरत्न	79
क्रुध्यत्यद्धा ययोः स्वां	37
क्रुध्यद्गौरीप्रसादा	29
क्ष	
क्षोणी यस्य रथो	121
ख	
खट्वाङ्गोदग्रपाणेः	36
ग	

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஶ்லோகம்	பக்கம்
गगनधुनीविमलजलैः	105
गजवदनस्कन्दधृते	93
गुडदधिसहितं	85
गोविन्दादधिकं न	126
च	
चण्डीवक्त्रार्पणेच्छोः	35
चतुश्चत्वारिंशद्विलस	113
चम्पकपङ्कजकुरवक	91
चारुस्मितं सोमकला	13
ज	
जगत्त्रयीख्यात	87
जम्बीरनीराञ्चित	103
त	
तत्त्वार्थमन्तेवसतां	9
द	
दीव्यन्मूर्धेन्दुखण्डः	76
देयासुर्मूर्ध्नि राज	24
दैवतानि कति सन्ति	17
न	
नमो गौरीशाय	110
नागररामठयुक्तं	103
नानाहेमविचित्राणि	88
नीराजनं निर्मलदीप्ति	107
न्यक्कुर्वन्नुर्वराभृत्	43
प	
पंचास्रशान्त पंचास्य	86
पदे पदे सर्वतमो	109
पुन्नागनीलोत्पल	108
पुन्नागमल्लिकाकुन्द	106
पुष्टावष्टम्भभूतौ	58
पृथुकुचभर	74
प्रह्वप्राचीनबर्हिः	66
प्रातर्लिङ्गमुमापतेः	114
प्रौढप्रेमाकुलाया	51
भ	
भासा यस्य त्रिलोकी	44
भास्वन्मौक्तिकतोरणे	82
भूत्यै दृग्भूतयोः	31
भूम्ना यस्यास्तसीम्ना	71
म	
मञ्जीरीभूतभोगि	61
मणिमुकुरे निष्पटले	95
मनोज्ञरम्भानव	101
मन्दारमल्लीकरवीर	83
मन्दारहेमाम्बुज	104
ममाद्य देवो वटमूल	6
माणिक्यकेयूरकिरीट	92
माणिक्यपादुकाद्वन्द्वे	91

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஶ்லோகம்	பக்கம்	ஶ்லோகம்	பக்கம்
मुक्तातपत्रं शशिकोटि	94	विष्णुब्रह्मसुराधिप	134
मुक्तामुक्ते विचित्रा	55	विष्णुर्यस्य सहस्रनाम	129
मुदिताय मुग्धशशिना	18	विष्ण्वाद्याश्च पुरत्रयं	120
मौक्तिकचूर्णसमेतैः	106	वैयाघ्री यत्र कृत्तिः	57
य		व्यालम्बिनीभिः परितो	20
यस्ते प्रसन्नामनुसं	21	**श**	
यस्यासन्धरणीजला	132	शर्करामिलितं स्निग्धं	99
याः स्वस्यैकांशपाता	64	शीतलं मधुरं स्वच्छं	98
युग्मे रुक्माब्जपिङ्गे	32	शौरिं सत्यगिरं	130
येनापादितमङ्गजाङ्ग	124	श्रीगन्धं घनसार	89
येषां रागादिदोष	69	**स**	
यो भासा भात्युपान्त	39	संसारे जनिताप	111
र		सत्याः सत्याननेन्दा	67
रक्षोवक्षोविफालं	54	सद्योजाताख्यमास्यं	46
रम्भाचूत	100	साम्बो नः कुलदैवतं	116
राजान्नं मधुरान्वितं	97	सुगन्धिपुष्पप्रकरैः	84
व		सुहितगिरिसुताभ्यः	73
वक्त्रेन्दोर्दन्तलक्ष्म्या	49	सौधे रत्नमये	112
वर्तित्रयोपेतमखण्ड	96	स्वदक्षजानुस्थित	8
विद्रावितशेषतमो	4	**ह**	
विरिञ्चिमुख्यामर	107	हिंगूजीरकसहितं	102
विशुद्धमुक्ताफल	89	हिमाम्बुवासितैस्तोयैः	85

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ श्रीः ॥

॥ श्लोकानुक्रमणिका ॥

சுலோகம்	பக்கம்
अ	
अङ्गे शृङ्गारयोनेः	159
अजं शाश्वतं कारणं	215
अट्टहासभिन्नपद्म	225
अत्यन्तं भासमाने	170
अथ कथमपि मद्रसनां	228
अन्तःकरणविशुद्धिं	236
अम्भोजाभ्यां च रम्भा	149
अस्तोपाधिः समस्त	236
आ	
आखण्डलमद	229
आतङ्कावेगहारी	140
आमुक्तानर्घरत्न	161
आरूढः प्रौढवेग	148
आश्लेषेष्वद्रिजायाः	164
आसीनस्याधिपीठं	156
इ	
इभचर्माम्बरं	230
ई	
ईशे गिरीश नरेश	230
उ	
उमया दिव्यसुमंगल	231
ऊ	
ऊरीकुरु मामज्ञ	231
ऋ	
ऋषिवरमानस	232
ॠ	
ॠक्षाधीशकिरीट	232
ऌ	
ऌवर्णद्वन्द्वमवृन्त	233
ए	
एकं सदिति श्रुत्या	233
ऐ	
ऐक्यं निजभक्तेभ्यो	234
ओ	
ओमिति तत्र निर्दिष्टा	234
ओमित्येतद्यस्य	188
औ	
औदास्यं स्फुटयति	235
क	
कण्ठप्रान्तावसज्ज	143
करुणावरुणालय	237
कर्णालंकारनाना	169
कल्याणं नो विधत्तां	137

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சுலோகம்	பக்கம்
कान्त्या संफुल्लमल्ली	179
कालभैरवाष्टकं	226
कालारातेः कराग्रे	141
क्ष	
क्षणमिव दिवसान्नेष्यति	257
क्षिप्रं लोके यं भजमानः	196
ख	
खलसहवासं विघटय	238
ग	
गरलं जगदुपकृतये	238
गर्भान्तस्थाः प्राणिन	192
गिरीशं गणेशं गले	213
घ	
घनसारगौरगात्र	239
च	
चपलं मम हृदयकपिं	240
चेतो जातप्रमोदं	184
छ	
छन्नेऽविद्यारूपपटेनैव	207
छाया स्थाणोरपि तव	241
ज	
जय कैलासनिवास	241
जानुद्वन्द्वेन मीन	160
झ	
झणुतकझंकिणु	242

சுலோகம்	பக்கம்
ज्ञ	
ज्ञप्तिः सर्वशरीरे	239
ज्ञांशीभूतान्प्राणिन	204
ज्ञानं विक्षेपावृतिरहितं	242
ट	
टङ्कारस्तव धनुषो	243
ठ	
ठाकृतिरिव तव माया	244
ड	
डम्बरमम्बुरुहामपि	244
ढ	
ढक्काक्षसूत्रशूल	245
ण	
णाकारगर्भिणी चेच्छुभदा	246
णानेत्येवं यन्मनुं	197
त	
तप्तस्वर्णच्छाय	198
तव मन्वतिसंजपतः	246
तेजस्स्तोमैरङ्गद	194
त्वत्तो जगद्भवति	219
थ	
थूत्कारस्तस्य मुखे	247
द	
दध्याज्यादिद्रव्यक	195
दयनीयश्च दयालुः	247

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சுலோகம்	பக்கம்
दिव्याकल्पोज्वलानां	180
देवराजसेव्यमान	220
देवस्याङ्काश्रयायाः	142
देवेभ्यो दानवेभ्यः	185
ध	
धर्मसेतुपालकं	223
धर्मस्थापनदक्ष	248
धाम्नां धाम प्रौढ	203
ध्यायन्नित्थं प्रभाते	186
न	
ननु ताडितोऽसि धनुषा	248
न भूमिर्न चापो	215
नमस्ते नमस्ते विभो	216
नम्राङ्गाणां भक्तिमतां	189
नामीचक्रालवाला	163
निर्यद्दानाम्बुधारा	145
नृत्तारम्भेषु	152
न्यस्तो मध्ये सभायाः	155
प	
परात्मानमेकं	214
परिमातुं तव मूर्तिं	249
पशूनां पतिं	211
प्रज्ञामात्रं प्रापित	205
प्रत्याहारप्राण	203

சுலோகம்	பக்கம்
प्रभो शूलपाणे विभो	217
फ	
फलमिह नृतया	250
ब	
बलमारोग्यं चायु	250
भ	
भगवन् भर्ग भयापह	251
भद्रारूढ भद्रद	191
भानुकोटिभास्वरं	221
भुक्तिमुक्तिदायकं	222
भूतसंघनायकं	225
म	
मत्तो मारो यस्य	200
महिमा तव नहि माति	251
महेशं सुरेशं	212
मुक्तामाणिक्यजालैः	153
मूर्तिश्छायानिर्जित	197
मेधावी स्यादिन्दुवतंसं	202
मोहध्वस्त्यै वैणिक	190
य	
यः पुण्यैर्देवतानां	146
यन्नादो वेदवाचां	158
यमनियमादिभिरंगैः	252
[illegible]	174

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சுலோகம்	பக்கம்
यस्य प्राहुः स्वरूपं	138
यस्याज्ञानादेव	206
याभ्यां कालव्यवस्था	171
येन ज्ञातेनैव समस्तं	199
यैषा रंग्यैर्मत्तमयूरा	210
र	
रज्जावहिरिव शुक्तौ	252
रत्नपादुकाप्रभा	224
ल	
लब्ध्वा भवत्प्रसादाच्चक्रं	253
व	
वक्त्रं धन्याः संसृति	193
वक्राकारः कलंकी	178
वसुधातद्धरतच्छय	253
वामं वामाङ्कगाया	173
वामाङ्के विस्फुरन्त्याः	165
वेंणीसौभाग्य	150
श	
शंभो महेश करुणामय	218
शर्व देव सर्वोत्तम	254
शिवाकान्त शंभो	213

சுலோகம்	பக்கம்
शूलटंकपाशदण्ड	222
श्रृङ्गाराकल्पयोग्यैः	176
ष	
षड्रिपुषड्रूर्मि	254
स	
संध्याकालानुरज्य	162
संभ्रान्तायाः शिवायाः	166
सत्यं ज्ञानमनन्तं	255
स्तम्भैर्जम्भारिरत्न	154
स्थानप्राप्त्या स्वराणां	183
स्वर्गौकस्सुन्दरीणां	181
स्वापस्वप्नौ जाग्र	208
स्वामिन्गङ्गामिव	175
ह	
हाहाहूहूमुखसुर	256
हाहेत्येवं विसाय	209
हृद्यैरद्रीन्द्रकन्या	168
ह्यम्भोराशौ संसृति	201
ळ	
ळादिर्नहि प्रयोग	256

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ श्रीः ॥

॥ श्लोकानुक्रमणिका ॥

ஃலோகம்	பக்கம்	ஃலோகம்	பக்கம்
अ		एष्यत्येष जनिं मनो	356
अङ्कोलं निजबीज	335	**क**	
अतिमृदुलौ मम चरणौ	371	कश्चित्कालमुमामहेश	358
अमितमुदमृतं	344	कदा वा कैलासे	287
अरहसि रहसि	346	कदा वा त्वां दृष्ट्वा	289
अशनं गरलं फणी	364	करलग्नमृगः करीन्द्र	313
असारे संसारे	274	करस्थे हेमाद्रौ	290
आ		करोमि त्वत्पूजां	286
आकाशेन शिखी	324	कलाभ्यां चूडालंकृत	259
आकीर्णे नखराजि	315	कल्याणिनं सरस	351
आद्यायामिततेजसे	327	कारुण्यामृतवर्षिणं	323
आद्याऽविद्या हृद्गता	368	किं ब्रूमस्तव साहसं	300
आनन्दामृतपूरिता	319	क्रीडार्थं सृजसि	342
आनन्दाश्रुभिरातनोति	336	**ग**	
आम्नायाम्बुधिमादरेण	304	गभीरे कासारे	270
आरूढभक्तिगुण	347	गलन्ती शंभो	260
आशापाशक्लेशदुर्वासनादि	350	गांभीर्यं परिखापदं	310
इ		गुहायां गेहे वा	273
इदं ते युक्तं वा	375	**घ**	
उ		घटो वा मृत्पिण्डो	266
उपेक्षा नो चेत् किं	276	**छ**	
ए		छन्दःशाखिशिखान्वितै	314
एको वारिजबान्धवः	331		

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ச்லோகம்	பக்கம்
ज	
जडता पशुता कलंकिता	345
जननमृतियुतानां	360
जलधिमथनदक्षो	362
ज्वाल्लोग्रः सकलामराति	298
त	
त्रयीवेद्यं हृद्यं	262
त्वत्पादाम्बुजमर्चयामि	293
त्वमेको लोकानां	280
द	
दुराशाभूयिष्ठे	281
दूरीकृतानि दुरितानि	369
ध	
धर्मो मे चतुरंघ्रिकः	306
धीयन्त्रेण वचोघटेन	308
धृतिस्तंभाधारां	283
धैर्याङ्कुशेन निभृतं	372
ध्यानाञ्जनेन समवेक्ष्य	348
न	
नतिभिर्नुतिभिस्त्वमीश	366
नरत्वं देवत्वं नगवन	271
नालं वा परमोपकारक	296
नालं वा सकृदेव देव	299
नित्यं योगिमनस्सरोज	355

ச்லோகம்	பக்கம்
नित्यं स्वोदरपूरणाय	330
नित्यानन्दरसालयं	317
नित्याय त्रिगुणात्मने	328
प	
पापोत्पातविमोचनाय	309
पूजाद्रव्यसमृद्धयो	363
प्रचरत्यभितः प्रगल्भ	372
प्रभुस्त्वं दीनानां	275
प्रलोभाद्यैरर्थाहरण	285
प्राक्पुण्याचलमार्ग	305
फ	
फलाद्वा पुण्यानां	279
ब	
बहुविधपरितोष	343
बाणत्वं वृषभत्वमर्धवपुषा	359
बुद्धिः स्थिरा भवितु	353
भ	
भक्तिर्महेशपद	352
भक्तो भक्तिगुणावृते	302
भूदारतामुदवह	349
भृङ्गीच्छानटनोत्कटः	321
म	
मनस्ते पादाब्जे	267
मा गच्छ त्वमितस्ततो	311

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ச்லோகம்	பக்கம்
मार्गावर्तितपादुका	337
य	
यथा बुद्धिः शुक्तौ	269
यदा कृताम्भोनिधि	365
योगक्षेमधुरन्धरस्य	301
र	
रोधस्तोयहृतः श्रमेण	333
व	
वक्षस्ताडनमन्तकस्य	339
वक्षस्ताडनशंकया	341
वचसा चरितं वदामि	367
वटुर्वा गेही वा	272
वक्षोद्भूतविधौ	294
विरिञ्चिर्दीर्घायु	278
श	
शंभुध्यानवसन्त	316
शिव तव परिचर्या	361
स	
संध्या घर्मदिनात्ययो	326
संध्यारंभविजृंभितं	310
सदा मोहाटव्यां	282
सदुपचारविधिष्वनुबोधितां	354
सर्वालङ्कारयुक्तां	373
सहस्रं वर्तन्ते जगति	264
सा रसना ते नयने	370
सारूप्यं तव पूजने	291
सोमकलाधरमौलौ	370
स्तवैर्ब्रह्मादीनां	288
स्तोत्रेणालमहं प्रवच्मि	375
स्मृतौ शास्त्रे वैद्ये	265
ह	
हंसः पद्मवनं समिच्छति	332

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



ஸ்ரீ P.A.C. ராமசாமி ராஜா
ஸ்தாபகர்
ராம்கோ குரூப்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஒப்பாக்கப்படுகின்றார் இந்த விச்வரூப மயிலுக்கு ஆகாயமே முடி, பேடை பார்வதி, நர்த்தன அவை வேதாந்தம், ஸர்ப்பங்களே அணிகள், பிரணவமே குறி ஒலி.

இங்கு நீலகண்டன் என்பது நீலகண்டனையும், நீலக்கழுத்துடைய மயிலையும் குறிக்கின்றது. (53)

संध्या घर्मदिनात्ययो हरिकराघातप्रभूतानक-
ध्वानो वारिदगर्जितं दिविषदां दृष्टिच्छटा चञ्चला ।
भक्तानां परितोषबाष्पविततिर्वृष्टिर्मयूरी शिवा
यस्मिन्नुज्ज्वलताण्डवं विजयते तं नीलकण्ठं भजे ॥ ५४ ॥

ஸந்த்யா கர்ம திநாத்யயோ ஹரிகராகாதப்ரபூதாநக
த்வாநோ வாரித கர்ஜிதம் திவிஷதாம்
த்ருஷ்டிச்சடா சஞ்சலா ।
பக்தாநாம் பரிதோஷ பாஷ்பவிததிர் வ்ருஷ்டிர் மயூரீ ஶிவா
யஸ்மின்னுஜ்வல தாண்டவம் விஜயதே தம்
நீலகண்டம் பஜே ॥

सन्ध्या–ஸந்தியாகாலம், **घर्मदिनात्ययः**–கிரீஷ்ம காலத்தின் முடிவு (மழைகாலம்), **हरिकराघातप्रभूतानकध्वानः**–மஹாவிஷ்ணுவின் கையாலடிக்கப்பட்ட படகமென்ற வர்த்தியத்தின் பெரிய த்வனி **वारिदगर्जितं**–மேகநாதம், **दिविषदां दृष्टिच्छटा**-தேவதைகளின் பார்வைக்கூட்டம், **चञ्चला**-மின்னல் **भक्तानां**–பக்தர்களுடைய, **परितोषबाष्पविततिः**–ஆனந்தக் கண்ணீர், **वृष्टिः**–மழை, **शिवा**–அம்பிகை, **मयूरी**–பெண்மயில், **यस्मिन्**–எந்த ஈசுவரனிடத்தில் (எந்த மயிலினிடத்தில்), **उज्ज्वलताण्डवं**–பிரகாசமான நர்த்தனம், **विजयते**–பிரகாசிக்கிறதோ, **तं नीलकण्ठं**–அந்த நீலகண்டனை மயிலை, **भजे**–ஸேவிக்கிறேன்.

விஷ்ணு பறையடிப்பதாலுண்டாகும் ஓசை மேகங்களின் உருமலாகவும் (இடியாகவும்) தேவர்களின் பார்வையாகும் கூரொளி மின்னலாகவும் அடியார்களின் ஆனந்தக்கண்ணீர் மழை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யாகவும், பார்வதிதேவியார் பேடையாகவும் அமர, கோடையின் இறுதியில் மாலைப்பொழுதில் நீலகண்டனுடைய நர்த்தனம் நடை பெறுகின்றது. நான் அவரை வணங்குகின்றேன்.

சிவபெருமான் மாலையில் செய்யும் அபூர்வ நர்த்தனத்தின் ஓவியம் இங்குள்ளது. மயிலின் உபமானம் இங்கும் நீடிக்கப்பெறு கின்றது. மயில் ஆடும்பொழுது இடிக்கும் மேகம், மின்னல், மழை பேடை இவை உடனிருப்பவை. இறைவனின் விச்வநர்த்தனத் திற்கு, விஷ்ணுவின் பறை, அதைப்பார்க்கும் தேவர்களின் கூரொளி நோக்கு, அடியார்களின் ஆனந்தக்கண்ணீர், உமா தேவியார் இவர்கள் புடைசூழுகின்றன. (54)

आद्यायामिततेजसे श्रुतिपदैर्वेद्याय साध्याय ते
विद्यानन्दमयात्मने त्रिजगतः संरक्षणोद्योगिने ।
ध्येयायाखिलयोगिभिः सुरगणैर्गेयाय मायाविने
सम्यक्ताण्डवसंभ्रमाय जटिने सेयं नतिः शंभवे ॥ ५५ ॥

ஆத்யாயாமித தேஜஸே ச்ருதிபதைர் வேத்யாய
ஸாத்யாய தே
வித்யாநந்தமயாத்மனே த்ரிஜகத:
ஸம்ரக்ஷணோத்யோகினே ।
த்யேயாயாகில யோகிபி: ஸுரகணைர் கேயாய மாயாவினே
ஸம்யக் தாண்டவ ஸம்ப்ரமாய ஜடினே ஸேயம் நதி:
ஶம்பவே ॥

आद्याय–உலகத்திற்கு முந்தியவரும், **अमिततेजसे**–அள வில்லாத தேஜஸ்ஸையுடையவரும், **श्रुतिपदैर्वेद्याय**–வேதவாக் கியங்களால் அறியக்கூடியவரும், **साध्याय**–பக்தர்களால் உபாஸிக்கக்கூடியவரும், **विद्यानन्दमयात्मने**–ஞானானந்தரூபி யாயும், **त्रिजगतः संरक्षणोद्योगिने**-முவ்வுலகங்களையும் காக்கும் முயர்ச்சியுடையவரும், **अखिलयोगिभिः**–ஸமஸ்தமான யோகி களாலும், **ध्येयाय**–தியானம் செய்யத்தக்கவரும், **सुरगणैः**– தேவ ஸமூகங்களால், **गेयाय**–கானம் செய்யத்தகுந்தவரும், **मायाविने**–மாயையை ஸ்வாதீனமாகக்கொண்டவரும், **सम्यक्**–

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ताण्डवसंभ्रमाय–சிலாக்கியமாக நர்த்தனம் செய்வதில் வேக முள்ளவரும், **जटिने**–ஜடைகளுடன் கூடியவரும், **शम्भवे**–க்ஷேமத்தையுண்டுபண்ணுகிறவருமான, **ते**–உமக்கு, **सेयं नतिः**–இந்த நமஸ்காரம் இருக்கட்டும்.

சடாதாரியே, முழு முதற்காரணமே, எல்லையற்ற ஒளியே, வேத நூல்களால அறியப்படுபவனே! மூன்று உலகங்களையும் காக்கத்துணிந்தவனே! யோகிகளின் தியானப்பொருளே! தேவர்களின் கூட்டங்களால் புகழப்படுபவனே! மாயையைக் கையாளுபவனே! சிறந்த நர்த்தனத்தில் ஈடுபடுபவனே. சம்புவே உனக்கு என் நமஸ்காரங்கள்.

சம்புவின் நர்த்தனத்தினின்றே பிரபஞ்சம் தோன்றுகிறது. அதனாலேயே உலகம் நிலைக்கப்படுகின்றது அதனாலேயே உலகம் கரைக்கவும் படுகின்றது. அது உண்மையை மறைக்கவும், அருளைப்பொழியவும் செய்கின்றது. சிவனது ஐம்பணிகள் நர்த்தனத்தின் ஐம்பகுதிகளாகும், சிருஷ்டி (உளவாக்கல்) ஸ்திதி (நிலைத்தல்) ஸம்ஹாரம் (அழித்தல்) திரோதானம் (மறைத்தல்) அநுக்ரஹம் (அருளுதல்) நர்த்தனமே மாயை. அதனாலே அவர் மாயாவி என்றழைக்கப்படுகின்றார். சிவனே பல்லுயிருக்கும் நிலைக்களன். அவைகளின் மூலம். அவர் ஸத், சித், ஆனந்த மானவர். அவர் வேதங்களால் அறியப்படுபவர். அவரே பரம இலட்சியம். அவரையே யோகிகள் தியானம் செய்கின்றார்கள். தேவர்கள் அவர் புகழைப்பாடுகின்றார்கள் அவர் விசுவ நர்த்தனம் ஆபூர்வமானது அதுவே அனைவரையும் ஆக்கவும் காக்கவும் உள்ளது. (55)

नित्याय त्रिगुणात्मने पुरजिते कात्यायनीश्रेयसे
सत्यायादिकुटुम्बिने मुनिमनःप्रत्यक्षचिन्मूर्तये ।
मायासृष्टजगत्त्रयाय सकलाम्नायान्तसंचारिणे
सायंताण्डवसंभ्रमाय जटिने सेयं नतिः शंभवे ॥ ५६ ॥

நித்யாய த்ரிகுணாத்மநே புரஜிதே காத்யாயநீ ச்ரேயஸே
ஸத்யாயாதிகுடும்பிநே முனிமந: ப்ரத்யக்ஷ
சின்மூர்த்தயே ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மாயா ஸ்ருஷ்ட ஜகத்த்ரயாய ஸகலாம்நாயாந்த
ஸஞ்சாரிணே
ஸாயம் தாண்டவ ஸம்ப்ரமாய ஜடிநே ஸேயம்
நதி: ஶம்பவே ॥

नित्याय-நாசமற்றவரும், **त्रिगुणात्मने**-முக்குண ரூபியாயும் (பிரம்ம விஷ்ணு ருத்ர ரூபியானவரும்), **पुरजिते**-த்ரிபுரர்களை ஜயித்தவரும் (ஸ்தூலம் ஸூக்ஷ்மம், காரணம் என்ற முப்புரங்களை ஜயித்தவரும்), **कात्यायनीश्रेयसे**-பார்வதியின் தவத்தின் பயனும், **सत्याय**-முக்காலங்களிலும் அழிவற்றவரும், **आदिकुटुम्बिने**-முதல் தம்பதிகளின் ரூபத்தையுடையவரும், **मुनिमनःप्रत्यक्षचिन्मूर्तये**-ரிஷிகளின் மனதுக்கு நேரில் புலப்படக்கூடிய ஞானரூபியாயும், **मायासृष्टजगत्त्रयाय**-தன் மாயையினால் உலகத்தைப்படைப்பவரும், **सकलाम्नायान्तसंचारिणे**-ஸகல உபநிஷத்துக்களால் அறியக்கூடியவரும், **सायं ताण्डवसंभ्रमाय**-ஸாயங்காலத்தில் நர்த்தனம் செய்வதில், பரபரப்புள்ளவரும், **जटिने**-ஜடாதரராயும், **शम्भवे**-ஸுகத்திற்குக் காரணருமான ஈச்வரன் பொருட்டு, **सेयं नतिः**-அப்படிப்பட்ட இந்த நமஸ்காரம் இருக்கட்டும்.

சம்பு, சடைகளை அணிந்தவனே, என்றுமுள்ளவனே, மூன்று குணங்களையும் பெற்றவனே, முப்புரங்களை வென்றவனே, உமையாருக்கு ஒன்றும் மதிப்பு உள்ளவனே. ஸத்தியமே முழுமுதலே, தவசிகளால் மனதில் அநுபவிக்கப்படும் பேரானந்தமே, மாயையால் மூவுலகங்களையும் அமைத்தவனே! வேதாந்தநூல்களின் பொருளே! மாலை நர்த்தனம் செய்து கொண்டிருப்பவனே, உனக்கே என் நமஸ்காரங்கள் உரியதாகட்டும்.

இங்கும் சிவபெருமானின் மாலை நர்த்தனத்தின் சித்திரம் வரையப்படுகின்றது, மகாதேவன், திசைகளைக் குறிக்கும் சடைகளை உடையவன். என்றுமுள்ளவனே நர்த்தனம் செய்கின்றான். அவன் உமையருகே நின்று ஆடுவதால் உலகை மாயையால் சிருஷ்டிக்கின்றான். அவரே முதல் அப்பர். பார்வதியை அம்மையாகவும், மஹேசுவரரை அப்பராகவும் சொல்லும் சுலோகமும் உண்டு. "மாதா ச பார்வதீதேவீ பிதா

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தேவோ மஹேசுவர: (**माता च पार्वतीदेवी पिता देवो महेश्वरः**) (அம்மையப்பரே உலகிற்கெல்லாம் அம்மையப்பர் என்றுணர்க) அவர் எங்கும் இருந்து, எதற்கும் மூலமாகவும், பெற்றோர்களாகவும் இருந்தாலும், அவரை அடைவது எளிதன்று. ஞானிகளுக்கும் தவசிகளுக்குமே அவர் விளங்குபவர், அவரை வேதாந்தத்தால் அறியலாம். (56)

नित्यं स्वोदरपूरणाय सकलानुद्दिश्य वित्ताशया
व्यर्थं पर्यटनं करोमि भवतः सेवां न जाने विभो ।
मज्जन्मान्तरपुण्यपाकबलतस्त्वं शर्व सर्वान्तर-
स्तिष्ठस्येव हि तेन वा पशुपते ते रक्षणीयोऽस्म्यहम् ॥

நித்யம் ஸ்வோதர பூரணாய ஸகலானுத்திச்ய வித்தாசயா
வ்யர்த்தம் பர்யடனம் கரோமி பவத: ஸேவாம்
ந ஜானே விபோ ।
மஜ்ஜந்மாந்தர புண்ய பாக பலதஸ்த்வம் சர்வ ஸர்வாந்தர
ஸ்திஷ்ட்டஸ்யேவ ஹி தேன வா பசுபதே தே
ரக்ஷணீயோஸ்ம்யஹம் ॥

पशुपते–அஞ்ஞானிகளைக்காப்பாற்றுகிறவரே ஹே ஈசுவ்ரா, **पशुपते**– ஆத்மாக்களின் பதியே! **नित्यं**–எப்பொழுதும், **स्वोदरपूरणाय**–தன் வயிற்றை நிரப்புவதற்கு, **वित्ताशया**–பணத்தினாசையால், **सकलानुद्दिश्य**–எல்லோரையும் உத்தேசித்து **व्यर्थं**-வீணாக, **पर्यटनं करोमि**–அலைகிறேன். **विभो**–ஸர்வவியாபக, **भवतः सेवां न जाने**–உம்முடைய ஸேவையை அறியவில்லை. **शर्व**–பக்தர்களின் பாபங்களைப் போக்குகிறவரே, **मज्जन्मान्तरपुण्यपाकबलतः**-என் அநேக ஜன்ம புண்ணிய பலத்தால், **सर्वान्तरः**–அந்தர்யாமியாக, **त्वं**–நீர் **तिष्ठस्येव**–இருக்கிறீர். **तेन वा**–அதினாலேயாவது, **अहं**–நான், **ते रक्षणीयोऽस्मि**–உன்னால் காப்பாற்றக்கூடியவனாகிறேன்.

ஆன்மாக்களின் தலைவனே! எங்கும் பரந்துள்ளவனே! சிவனே, செல்வம் திரட்ட பொருளை நாடவும், வயிற்றை நிறைக்கவும் வீணாக அலைவதையே காண்கின்றேன். உன் ஸேவையில்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அமர எனக்குத் தெரியவில்லை. எனது பூர்வ புண்ணியத்தின் பயனாய் நீ ஆளுபவனாய் என்னுள் அமர்ந்துள்ளாய், ஆகையால் என்னைக் காப்பாற்றுவதும் உன் பொறுப்பே ஆகின்றது,

இந்தப் பாவில், இழியோருக்குச் சேவை செய்து அவர்கள் தயவைப் பெறுவது வீணென்பது பன்முறையும் சொல்லப் படுகின்றது. அவர்கள் கொடுப்பதானாலும் பெறுவதாயினும் அதனால் பயனில்லை. அவர்களின் கொடை அவர்களுக்கும் அதைப் பெறுபவர்களுக்கும் நன்மை செய்வதில்லை, ஆனாலும் பெரும் பாலானவர்கள், பணவாசையால் அதிகாரமும் செல்வமும் பெற்று ள்ளோர்களைச் சுற்றியே ஆட்டம் போடுகின்றார்கள். அது மயக்கத் தால் ஆவது. இறைவன் கொடுத்துள்ள திறனையும் பொழுதையும் இப்படியா வீண்செய்வது? பூர்வபுண்ணிய பயனால் இந்நிலையிலும் சிலர் தேவனிருப்பதை உணர்கின்றார்கள். அவர்கள் நிறைவடைய வழி அவர்களுக்கு முன்னால் திறந்து கிடக்கின்றது அவர்கள் வழியை பிடித்துக்கொண்டால் அவர்கள் காப்பாற்றப்படுவார்கள்

एको वारिजबान्धवः क्षितिनभोव्याप्तं तमोमण्डलं
भित्त्वा लोचनगोचरोऽपि भवति त्वं कोटिसूर्यप्रभः ।
वेद्यः किं न भवस्यहो घनतरं कीदृग्भवेन्मत्तम-
स्तत्सर्वं व्यपनीय मे पशुपते साक्षात्प्रसन्नो भव ॥ ५८॥

ஏகோ வாரிஜ பாந்தவ: க்ஷிதி நபோ வ்யாப்தம்
தமோ மண்டலம்
பித்த்வா லோசந கோசரோऽபி பவதி த்வம்
கோடிஸூர்யப்ரப: ।
வேத்ய: கிம் ந பவஸ்யஹோ கநதரம்
கீத்ருக் பவேன்மத்தமஸ்
தத்ஸர்வம் வ்யபநீய மே பசுபதே ஸாக்ஷாத்
ப்ரஸந்நோ பவ ॥

पशुपते-ஜீவர்களின் தலைவா, **वारिजबान्धवः**-சூரியன், **एकः**-ஒருவனாகவே, **क्षितिनभोव्याप्तं**-பூமி ஆகாயம் இவைகளில் வியாபித்த, **तमोमण्डलं**-இருள் கூட்டத்தை, **भित्त्वा**-நாசம் செய்து, **लोचनगोचरोऽपि**-கண்ணுக்குப் புலப்படுபவனாகவும், **भवति**-ஆகிறான், **कोटिसूर्यप्रभः**-கோடி சூரியர்களுக்கு சம

Sri Vidya Bharati Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மான காந்தியையுடைய, **त्वं**-நீர், **वेद्यः किं न भवसि**-ஏன் அறியக்கூடியவராக இல்லை? **अहो**-ஆச்சர்யம்! **घनतरं**-மிகவும் கெட்டியான, **मत्तमः**-என் அஞ்ஞானம், **कीदृग्भवेत्**-எவ்வளவு? **तत्**-ஆகையால், **सर्वं**-எல்லாவித மான அஞ்ஞான இருளையும், **व्यपनीय**-போக்கடித்து, **मे**-எனக்கு, **साक्षात्प्रसन्नो भव**-நேராக அனுக்ரகம் செய்யவேணும்.

ஆன்மாக்களின் தலைவ! காரிருளை நீக்கி, மண்ணிலும் விண்ணிலும் பரவுகின்றது கதிரவனொளி. ஆயின் உன் ஒளியோ கோடி சூரியர்களின் ஒளியிலும் பெரியது ஆயினும் நீ ஏன் வெளிப் படுத்திக்கொள்வதில்லை! என் இருட்டு (அஞ்ஞானம்) எவ்வளவு கடுமையானது! இதை முற்றுமாக அழித்தொழித்து எனக்கு முற்றுமாக விளங்குவாயாக!

பரம்பொருள் தானே ஒளிபெற்றது. அதை விளக்க வேறு ஒளி வேண்டப்படுவதன்று. மண்ணுலகில் சூரியன் தானே வெளிச்சமாய் விளங்குகின்றான். ஆத்மாவிற்கு எல்லையற்ற ஒளி உள்ளது. உலக வழக்கில் சொல்லுவதானல் ஆயிரம் சூரியர்களின் ஒளி அதற்கு உண்டென்று சொல்லலாம். ஆயினும் அது நமக்கு ஏன் வெளிப்படுவதில்லை. அது நமக்குப் புலனுவதில்லையென்று சொல்வதும் பிழையானதே. அது முற்றுமாக நமக்குப் புலனுவது மில்லை. அது வெளிப்பட்டும் வெளிப்படாமலும் இருப்பது இந்த மாற்றமான நிலை மாயை-அவித்யை-யால் ஏற்படுவது. பக்தன் இந்த மாயையை அகற்ற பரம்பொருளை வேண்டுகின்றான். (58)

हंसः पद्मवनं समिच्छति यथा नीलाम्बुदं चातकः
कोकः कोकनदप्रियं प्रतिदिनं चन्द्रं चकोरस्तथा ।
चेतो वाञ्छति मामकं पशुपते चिन्मार्गमृग्यं विभो
गौरीनाथ भवत्पदाब्जयुगलं कैवल्यसौख्यप्रदम् ॥ ५९ ॥

ஹம்ஸ: பத்ம வநம் ஸமிச்சதி யதா நீலாம்புதம் சாதக:
கோக: கோகநத ப்ரியம் ப்ரதிதிநம் சந்த்ரம் சகோரஸ்தத॥
சேதோ வாஞ்ச்சதி மாமகம் பசுபதே சின்மார்க
ம்ருக்யம் விபோ
கௌரீநாத பவத்பதாப்ஜ யுகளம் கைவல்ய
ஸௌக்யப்ரதம் ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

पशुपते-மூடர்களையும் காக்கிறவரே. **विभो**-ஸர்வ வியாபக, **गौरीनाथ**-பார்வதீபதே. **यथा**-எவ்விதம், **हंसः**-அன்னபக்ஷி, **पद्मवनं**-தாமரையோடையையும், **चातकः**-சாதகபக்ஷி, **नीलाम्बुदं**-கருமேகத்தையும், **कोकः**-சக்ரவாக பக்ஷி, **कोकनदप्रियं**-ஸூரியனையும், **चकोरः**-சகோரபக்ஷி, **चन्द्रं**-சந்திரனையும், **प्रतिदिनं**-தினந்தோறும், **समिच्छति**-விரும்புகிறதோ, **तथा**-அவ்விதம், **मामकं चेतः**-என் மனம், **चिन्मार्गमृग्यं**-உபநிஷத்துக்களால் தேடத்தக்கதும், **कैवल्यसौख्यप्रदं**-மோக்ஷஸுகத்தையளிக்கிறதுமான, **भवत्पदाब्जयुगलं**-உம்முடைய இருபாதகமலங்களை, **वाञ्छति**-ஆசைப்படுகிறது.

ஆத்மாக்களின் இறைவனே? எங்கும் பரந்து இருப்பவனே! பார்வதி தேவியின் கணவா! ஹம்ஸம் தாமரைக்குளத்தை நாடுவதைப்போலவும், சக்ரவாகப் பறவை சூரியனை நாடுவதைப் போலவும், சகோரப்பறவை சந்திரனை நாடுவதைப்போலவும், அறிவு வழியில் தேடப்படுவதும், பூர்ணமென்னும் ஆனந்தத்தைக் கொடுப்பதுமான உன் திருவடிகளை என் மனம் நாடி நிற்கின்றது.

பக்தனின் நாட்டத்தை விளக்க சில உபமானங்கள் தரப்படுகின்றன. மேலே குறிக்கப்பட்ட இணைகளில் ஒன்றின்றி ஒன்றில்லை. ஒன்றையொன்று பற்றி நிற்பவை. ஹம்ஸமும் குளமும், சாதகமும் மழை மேகமும், சக்ரவாகமும் சூரியனும், சகோரமும் சந்திரனும்; இங்கு நான்கு வகைப்பறவைகள் குறிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பறவையும் ஒவ்வொன்றை நாடி நிற்கின்றது. ஹம்ஸம் தாமரைத்தண்டைத் தின்று உயிர்வாழ்வது. சாதகப்பறவையோ மழைத்துளிகளைப்பருகி உயிர் வாழ்வது. சக்ரவாகப்பறவைகள் இரவில் துணை பிரிந்து நிற்பன. அவை சூரியனொளியை நாடிக்கூடுவன. சகோரப் பறவை சந்திரன் கிரணங்களைப்பருகி உயிர் வாழ்வதாகக் கொள்ளப்படுகின்றது. அதேவிதம் பக்தனின் இதயம் இறைவன் அடிகளை நம்பியே வாழ்வது. (59)

रोधस्तोयहृतः श्रमेण पथिकश्छायां तरोर्वृष्टितो
भीतः स्वस्थगृहं गृहस्थमतिथिर्दीनः प्रभुं धार्मिकम् ।
दीपं संतमसाकुलश्च शिखिनं शीतावृतस्त्वं तथा
चेतः सर्वभयापहं व्रज सुखं शंभोः पदाम्भोरुहम् ॥ ६० ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ரோதஸ்தோய ஹ்ருத: ஶ்ரமேண பதிகச்சாயாம்
தரோர் வ்ருஷ்டிதோ
பீத: ஸ்வஸ்த்த க்ருஹம் க்ருஹஸ்த்தமதிதிர் தீந:
ப்ரபும் தார்மிகம் ।
தீபம் ஸந்தமஸாகுலச்ச ஶிகிநம் ஶீதாவ்ருதஸ்த்வம் ததா
சேத: ஸர்வபயாபஹம் வ்ரஜ ஸுகம் ஶம்போ:
பதாம்போருஹம் ॥

चेतः–மனமே! यथा–எவ்விதம், तोयहृतः–ஜலத்தின் வேகத்தினால் இழுக்கப்பட்டவன், रोधः-கரையையும், पथिकः-வழிப்போக்கன், श्रमेण-களைப்பினால், तरोः–மரத்தின், छायां-நிழலையும், वृष्टितः भीतः–மழையினின்றும் பயந்தவன், स्वस्थगृहं–நல்ல கிருஹத்தையும், अतिथिः-அதிதி (விருந்தாளி) गृहस्थं–கிருஹஸ்தனையும் (கிருஹஸ்தாச்ரமத்திலிருக்கும் புருஷனையும்), दीनः–எளியவன், धार्मिकं प्रभुं–தர்மசிந்தனை உள்ள தனவந்தனையும், संतमसाकुलः–நல்ல இருளால் கலங்கியவன், दीपं–தீபத்தையும், शीतावृतः-குளிரால் வருந்தியவன், शिखिनं च–அக்னியையும். (அடைகிறானோ), तथा–அப்படி, त्वं-நீ, सर्वभयापहं-ஸகல பயத்தையும் போக்கடிக்கக் கூடிய, सुखं-சுகத்தையுண்டுபண்ணக் கூடிய, शंभोः–ஈசுவரனின், पदाम्भोरुहं–பாதாரவிந்தத்தை, व्रज–அடைவாய்.

தண்ணீரால் அடித்துக்கொண்டு போகப்பட்டவன் கரையேற முயலுவதைப்போலும், களைத்துப்போன வழிப்போக்கன் மரத்து நிழலை நாடுவதைப் போலவும், மழைக்குப் பயப்படுபவன் வீட்டிற்குள் நுழைய முயலுவதைப்போலவும், விருந்தாளி ஒரு இல்லறத்தானை நாடுவதைப் போலவும், எளியவன் செல்வம் நிறைந்த கொடையாளியைத் தேடுவதைப் போலவும், இருட்டில் அவதிப்படுபவன் விளக்கை நாடுவதைப் போலவும், பனியால் நடுங்குபவன் நெருப்பை வேண்டுவதைப் போலவும், ஏ மனமே, பயத்தை யெல்லாம் விரட்டியடிக்கும் சம்புவின் திருவடிகளை நாடியடைவாயாக.

ஆத்மா புகலிடம் தேடி இறைவனடிகளை அடைவதற்கு மேலும் உதாரணங்கள் கொடுக்கின்றார். இவ்வடுக்குகளில் தேடுபவனும் தேடப் படுபவனும் உள்ளார்கள். வாழ்க்கையில் பல ஆபத்துக்களினின்றும் காப்பாற்றப்பட வேண்டியவர்களும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

காப்பாற்றுபவர்களும் உள்ளார்கள். நீரால் இழுத்துப் போகப் படுபவன் கரை சேர்ந்தால் ஆபத்தினின்று தப்புகின்றான். களைத்துப்போன வழிப்போக்கன் மரத்தின் நிழலை நோக்கியே போவான். மழையால் நனைபவன் நனையாதிருக்க இடத்தைத் தேடுகிறான். பசியுள்ளவன் பசியைப்போக்க ஒரு இல்லறத் தானிடம் வருகிறான். செல்வமும் கொடையுமுள்ளவனை எளியவர்கள் சூழுகின்றார்கள். இருட்டில் திகைப்பவனுக்கு விளக்கு வேண்டியதாகின்றது. பனியால் நடுங்குபவன் நெருப்பின் சூட்டை நெருங்குகின்றான். பயத்தினின்று விடுபட விரும்புபவன் இறைவனிடம் சரண்புகவேண்டும். பயத்தினின்று விடுபட விரும்பாதவன் யார்? (60)

अङ्कोलं निजबीजसंततिरयस्कान्तोपलं सूचिका
साध्वी नैजविभुं लता क्षितिरुहं सिन्धुः सरिद्वल्लभम् ।
प्राप्नोतीह यथा तथा पशुपतेः पादारविन्दद्वयं
चेतोवृत्तिरुपेत्य तिष्ठति सदा सा भक्तिरित्युच्यते ॥ ६१ ॥

அங்கோலம் நிஜ பீஜ ஸந்ததிரயஸ்காந்தோபலம் ஸூசிகா
ஸாத்வீ நைஜ விபும் லதா க்ஷிதிருஹம் ஸிந்து:
ஸரித்வல்லபம் ।
ப்ராப்நோதீஹ யதா ததா பசுபதே: பாதாரவிந்தத்வயம்
சேதோவ்ருத்திருபேத்ய திஷ்ட்டதி ஸதா
ஸா பக்திரித்யுச்யதே ॥

इह-இவ்வுலகில், **निजबीजसन्ततिः**-தன் விதைகளின் கூட்டம், **अंकोलं**-அழிஞ்சிமரத்தையும், **सूचिका**-இரும்புக் கம்பி, **अयस्कान्तोपलं**-அயக்காந்தக் கல்லையும், **साध्वी**-பதிவிரதை, **नैजविभुं**-தன் கணவனையும், **लता**-கொடி, **क्षितिरुहं**-மரத்தையும், **सिंधुः**-நதி, **सरिद्वल्लभं**-ஸமுத்திரத்தையும், **यथा**-எவ்விதம், **प्राप्नोति**-அடைகிறதோ, **तथा**-அவ்விதம், **चेतोवृत्तिः**-மனதின் வியாபாரம், **पशुपतेः**-ஈசுவரனின், **पादारविन्दद्वयं**-இரு திருவடித்தாமரைகளை, **उपेत्य**-அடைந்து, **सदा**-எப்பொழுதும், **तिष्ठति**-இருக்கிறது (என்ற), **सा**-அது, **भक्तिरिति उच्यते**-பக்தி என்றுசொல்லப் படுகிறது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அங்கோல மரத்தின் விதைகள் அடிமரத்தை நாடியே விழுவதைப்போலவும், இரும்பு ஊசி காந்தத்தைப் பற்றிக்கொள்வதைப்போலவும், கற்புடை மனைவி கணவனைப்பற்றிக்கொள்வதைப்போலவும். கொடி அயலிலுள்ள மரத்தில் பிணைந்துகொள்வதைப்போலவும், ஆறு கடலை நோக்கி ஓடுவதைப்போலவும், மனது இறைவனடியை விரைந்து பற்றிக்கொண்டு அங்கு நிலைப்பதுவே பக்தியாகும்.

சென்ற இரண்டு சுலோகங்களும் இதற்கு முன்னுரை. இதில் பக்தி விரிக்கப்படுகின்றது. இங்குள்ள உபமானங்கள் உயிருள்ளவும் இல்லவுமாகின்றன. இங்கு கீழுள்ளதிற்கு மேலுள்ள ஒரு துணை வேண்டப்படுவது. ஒரு இலட்சியத்தில் எப்படி விடாத பற்று இருக்கவேண்டுமென்பதற்கு இந்த ஒப்புமைகள் கொடுக்கப்படுகின்றன. கடவுளிடத்து இந்த ஒருமைப்பாடு அமைவதே பக்தியாகின்றது. (61)

आनन्दाश्रुभिरातनोति पुलकं नैर्मल्यतश्छादनं
वाचाशङ्खमुखे स्थितैश्च जठरापूर्तिं चरितामृतैः ।
रुद्राक्षैर्भसितेन देव वपुषो रक्षां भवद्भावना-
पर्यङ्के विनिवेश्य भक्तिजननी भक्तार्भकं रक्षति ॥ ६२ ॥

ஆநந்தாச்ருபிராதநோதி புளகம் நைர்மல்யதச்சாதநம்
வாசாஶங்கமுகே ஸ்திதைச்ச ஜடராபூர்திம் சரித்ராம்ருதை: ।
ருத்ராக்ஷைர் பஸிதேன தேவ வபுஷோ ரக்ஷாம் பவத்பாவநா
பர்யங்கே விநிவேச்ய பக்தி ஜனனீ பக்தார்பகம் ரக்ஷதி ॥

देव-ஹே தேவனே, **भक्तिजननी**-பக்தியாகிற தாய், **भक्तार्भकं**-பக்தனாகிற குழந்தையை, **भवद्भावनापर्यङ्के**-உமது த்யானமாகிற கட்டிலில், **विनिवेश्य** - படுக்கவைத்து, **आनन्दाश्रुभिः** ஆனந்தக்கண்ணீரால், **पुलकं**-மயிர்க்கூச்சலையும், **नैर्मल्यतः**-சுத்தத்தன்மையால், **छादनं**-வஸ்திரம் போர்த்துவதையும், **वाचाशंखमुखे स्थितैः**வேதவாக்யங்களாகிற சங்கின் முகத்திலிருக்கிற, **चरितामृतैः**-சரித்திரமாகிற பாலால், **जठरापूर्तिं** வயிற்றை நிரப்புவதையும், **रुद्राक्षैः भसितेन**-ருத்திராக்ஷங்களாலும் விபூதியாலும், **वपुषो रक्षां**-சரீரத்தைக் காப்பாற்றுவதையும், **आतनोति**-செய்கிறாள். **रक्षति**-காப்பாற்றுகிறாள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இறைவ! பக்தியென்னும் தாய் பக்தனென்னும் குழந்தையை காப்பாற்றுகிருள். அவனை ஆனந்தம் என்னும் தண்ணீரால் (கண்ணீரால்) குளிப்பாட்டியும் (உத்சாகப்படுத்தியும்) அவனை தூய்மையென்னும் உடையால் போர்த்தியும், சிவபுராண மென்னும் அமிர்தத்தை ஊட்டியும் (சங்குகொண்டு வாக்கை,) அவனுக்கு உருத்திராக்ஷ மாலை விபூதி அணிவித்தும், உனது தியானம் என்னும் தொட்டிலில் தூங்க வைக்கிருள்.

இங்கு பக்தி ஒரு தாயுடன் உவமிக்கப்படுகின்றது. பக்தன் குழந்தையாகின்ருன். பக்தி இறையன்பை உள்ளும் புறமும் அமைக்கின்றது. பக்தனுடலை ருத்திராக்ஷமும் விபூதியும் அலங்கரிக்கின்றன. உடனுள்ள பக்தர்கள் சிவபுராணங்களைச்சொல்ல பக்தன் அவைகளைக்கேட்டு மகிழ்கின்ருன். அவன் கண்கள் நின்றும் நீர் வடிகின்றது. அவன் மனது தூய்மையை அடைகின்றது. அவன் தியானத்தில் தன்னை இழந்தவனுகின்ருன்.

நாரத பக்தி சூத்திரம் (60) தொண்டையடைக்க தழுதழுத்து பேசுதல், கண்களில் நீர் சொரிதல், மெய்சிலிர்த்து நிற்றல், இவைகள் பெற்றவர் தங்கள் குடும்பங்களையும் உலகத்தையும் புனிதப்படுத்துகின்ருர்கள். (62)

मार्गावर्तितपादुका पशुपतेरङ्गस्य कूर्चायते
गण्डूषाम्बुनिषेचनं पुररिपोर्दिव्याभिषेकायते ।
किंचिद्भक्षितमांसशेषकबलं नव्योपहारायते
भक्तिः किं न करोत्यहो वनचरो भक्तावतंसायते ॥ ६३ ॥

மார்காவர்திதபாதுகா பஶுபதேரங்கஸ்ய கூர்சாயதே
கண்டுஷாம்பு நிஷேசனம் புரரிபோர் திவ்யாபிஷேகாயதே ।
கிஞ்சித்பக்ஷித மாம்ஸ ஶேஷ கபளம் நவ்யோபஹாராயதே
பக்தி: கிம் ந கரோத்யஹோ வநசரோ
பக்தாவதம்ஸாயதே ॥

मार्गावर्तितपादुका–வழியில் அடிக்கடி உபயோகப்படுத்தப்பட்ட செருப்பு, **पशुपतेः**–ஈசுவரனின், **अङ्गस्य**–அவயவத்திற்கு, **कूर्चायते**–புருவங்களின் மத்தியம் போலிருக்கிறது. **गण्डूषाम्बुनिषेचनं**–எச்சில் ஜலம், **पुररिपोः**–திரிபுரர்களுககுச்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சத்துருவான சிவனுக்கு, दिव्याभिषेकायते–கங்காஜலத்தின் அபிஷேகம் போல் ஆகிறது. किंचिद्भक्षितमांसशेषकबलं–சிறிது கடித்து மீதியான மாம்ஸம், नव्योपहारायते–புதிதான நைவேத்யமாகிறது. वनचरः–காட்டிலிருக்கும் வேடன், भक्तावतंसायते–உயர்ந்த பக்தனாகிறான். भक्तिः किं न करोति–பக்தியானது எதைத்தான் செய்யாது! अहो–ஆச்சரியம்.

காட்டில் அலைந்ததால் தேய்ந்த செருப்பு இறைவனின் திருமேனியில் இருகண்களுக்குமிடையே இடுகுறியாக அமைந்தது. முப்புரமெரித்த செம்மலிற்கு வாயாற் கொணரப்பட்ட நீர் தெய்வீக அபிஷேகமாயிற்று ஏற்கனவே வாயால் மெல்லப் பட்ட ஊன் (இறைச்சி) புனிதமான நிவேதனமாயிற்று. பக்தி எதைச்செய்யாது! வேடன் பக்தர்களில் தலைசிறந்தவனாகின்றான்.

இங்கு சங்கரர் கண்ணப்பருக்குத் தலைசிறந்த பக்தனென்று வணக்கம் செலுத்துகின்றார். முரட்டு வேடன் இறைவனை தன் வழியில் வணங்குகின்றான். அவனுக்கு சாஸ்திரங்கள் தெரியாது. பூஜை முறைகளை அவன் கற்றிலன். பூஜைக்கு வேண்டிய புறத் தூய்மை கடுகளவும் அவனிடமில்லை. கோயில் பூசாரி அவனது முரட்டு பூஜாவிதியை ஒரு அபசாரமாகவே கொண்டார். ஆயின் அது இறைவனுக்கு சிறந்த பூஜைமுறையாயிற்று. கண்ணப்பன் ஒரு கண்ணை இறைவனுக்குக் கொடுத்துவிட்டு மறுகண்ணும் கொடுக்கத் தயாராகும்பொழுது இறைவனே அவனைக் கண்ணப்பன் என்று அழைத்தார். பக்தியில் கண்ணப்பனுக்குச் சிறந்தவர் யார். அவனே பக்தர்களில் முதன்மையானவன். மாணிக்கவாசகர்,

கண்ணப்ப னொப்ப தோரன்பின்மை கண்டபின்
என்னப்ப னென் னொப்பி லென்னையு மாட்கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப் பொன்னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

என்று (திருக்கோத்தும்பி–4) பாடியுள்ளார்.

ஷோமருஸ் "பெரிய புராணத்தில் கண்ணப்பன், காட்டில் பூஜையற்ற ஒரு சிவலிங்கத்தைக் கண்டு தன்னையும் உலகையும் மறந்து, அந்த லிங்கத்தின் சேவையில் அமர்ந்தான். அதற்காக தன் கண்களையும் அர்ப்பணித்தான்" என்று குறிக்கின்றார். (63)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

वक्षस्ताडनमन्तकस्य कठिनापस्मारसंमर्दनं
भूभृत्पर्यटनं नमत्सुरशिरःकोटीरसंघर्षणम् ।
कर्मेदं मृदुलस्य तावकपदद्वन्द्वस्य किं वोचितं
मच्चेतोमणिपादुकाविहरणं शंभो सदाऽङ्गीकुरु ॥ ६४ ॥

வக்ஷஸ்தாடநமந்தகஸ்ய கடிநாபஸ்மார ஸம்மர்தனம்
பூப்ருத் பர்யடனம் நமத்ஸுர ஸிர:கோடீர ஸங்கர்ஷணம் ।
கர்மேதம் ம்ருதுளஸ்ய தாவக பதத்வந்த்வஸ்ய கிம் வோசிதம்
மச்சேதோ மணி பாதுகா விஹரணம் ஸம்போ
ஸதாங்கீகுரு ॥

शम्भो-சம்புவே, **अन्तकस्य**-யமனுடைய, **वक्षस्ताडनं**-மார்பில் உதைப்பது, **कठिनापस्मारसंमर्दनं**-கடினமான அபஸ்மாரமென்பவனை மிதிப்பது, **भूभृत्पर्यटनं**-மலையில் ஸஞ்சரிப்பது, **नमत्सुरशिरःकोटीरसंघर्षणं**-வணங்கும் தேவதைகளின் சிரஸ்ஸிலுள்ள கிரீடத்தில் உரைவது, **इदं कर्म**-இந்தக்காரியம் **मृदुलस्य**-மிருதுவான, **तावकपदद्वन्द्वस्य**-தங்கள் இரு திருவடிகளுக்கு, **किं वोचितं**-தகுந்ததுதானா? **मच्चेतोमणिपादुकाविहरणं**-என் மனமாகிற ரத்னபாதுகையால் ஸஞ்சரிப்பதை, **सदा अङ्गीकुरु**-எப்பொழுதும் ஏற்றுக்கொள்ளும்.

யமனுடைய மார்பில் உதைத்துக்கொண்டு அபஸ்மாரத்தை காலில் மிதித்துக்கொண்டு, கைலாய மலையில் திரிந்துகொண்டு, வணங்கிய தேவர்களின் முடிகளில் உறைந்துகொண்டு நிற்பவை உன் பாதங்கள். இது முறையா? மணிகள் பொதிந்த என் இதயத்தைச் செருப்பாயணிந்து செல்வாயாக ஓ சம்போ!

பக்தன் இறைவனுக்குத் தன் மனதைச் செருப்பாகக் கொடுக்கிறான். சிவன் பாதங்கள் கடுமையான வேலைகளைச் செய்யவேண்டியிருக்கின்றது ஆகையால் பாதங்களுக்குச் சரியான காப்பு இருக்கவேண்டும்.

இறைவன் தன் பாதங்களுக்குக் கொடுக்கும் சில கடுமையான அலுவல்கள்:—

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

1. மார்க்கண்டேயர் பதினாறுவருஷங்களே வாழப்பிறந்தவர் குறித்தகாலம் நெருங்க அவன் பெற்றோர்கள் இரங்கி வாடினார்கள். அப்பையன் தான் யமனை வென்றுவிடுவதாக பெற்றோர்களிடம் உறுதி கூறினான். கோயிலிற்குச் சென்று சிவலிங்கத்தை வணங்க ஆரம்பித்தான். மார்க்கண்டேயனது உயிரைப்பற்றிவர யமன் தன் தூதர்களை அனுப்பினான். ஆனால் அவர்கள் சிவலிங்கமிருக்கும் கர்ப்பகிருகத்தில் நுழையக்கூடவில்லை. பிறகு யமனே நேரில் வந்தான். லிங்கத்தினின்றும் சிவபெருமான் எழுந்து யமனை மார்பில் உதைத்தார். யமன் இறந்துபட்டான். சிவபெருமான் தன்னருளால் அவனை உயிர்ப்பித்தார். மார்க்கண்டேயன் யமனை வென்று சிரஞ்ஜீவியானான்.

யமனுடைய மார்பில் வெறுங்காலுடன் உதைப்பது கடினமான வேலைதான். சுந்திரர் 7–61–4ல் உதைத்தகோடும் தோழில் என்ற பாவில் இதைக்குறித்துள்ளார்.

2. தாருகாவன யாகத்தில் வெளித்தோன்றியவைகளில் அபஸ்மாரமும் ஒன்று, அது தீய நடுக்கமுள்ள குறளை அதுவும் சிவனைப்பழிக்க, சிவபெருமான் பாதத்தால் அதை நசுக்கி நலித்தார். சிவன் தன் கால் கட்டைவிரலைக்கொண்டு அதன் முதுகெலும்பை மிதிக்க அது உடைந்துபட்டது. நர்த்தன சிவனுக்கும் நடராஜன் உருவத்தில் அபஸ்மாரம் சிவபெருமான் அடிக்கீழ் படுத்துக்கிடப்பதாக அமைகின்றது.

அபஸ்மாரம் என்பது ஒரு வலிப்பு. அது இயற்கை பிரக்ஞையை இழக்கச் செய்து, நடுங்குகின்றவர்களுக்கு பெரும் வலியைக்கொடுக்கின்றது. அபஸ்மாரம் மாயை, அக்ஞானம் இதைக்குறிப்பது. அதை அகற்றுவது எளிதன்று. ஆகையால் கடினம் என்ற சொல் கையாளப்படுகின்றது.

3. சிவபெருமான் உறைவிடம் கைலையங்கிரி. சிவனடிக்கள் அங்கு கடும்பாறைகளில் நடக்கவேண்டியுள்ளன.

4. தேவர்கள் சிவனடிகளை வணங்கவரும்பொழுது ஒருவரையொருவர் முந்தி வருகின்றார்கள். தங்கள் ஆர்வத்தில் அவர்கள் தாங்கள் சிவபெருமானுக்கு இழைக்கும் தொல்லையை அறிவதில்லை. அவர்களது முடிகளுடன் உறைவது பாதங்களுக்கு கடினமானதன்றோ? (இந்நூல் சு. 17)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இறைவனடிகள் விடாது இக்கடின அலுவல்களைச் செய்ய வேண்டியுள்ளது. பக்தன் தன் மனதைச் செருப்பாக இறைவனுக்குக் கொடுக்கின்ருன். அதுவும் நன்ருகவும் அழகாகவும், சிவனுல் அணியத்தகுந்ததாகவும் உள்ளது. (64)

वक्षस्ताडनशङ्कया विचलितो वैवस्वतो निर्जराः
कोटीरोज्ज्वलरत्नदीपकलिकानीराजनं कुर्वते ।
दृष्ट्वा मुक्तिवधूस्तनोति निभृताश्लेषं भवानीपते
यच्चेतस्तव पादपद्मभजनं तस्येह किं दुर्लभम् ॥ ६५ ॥

வக்ஷஸ்தாடந ஶங்கயா விசலிதோ வைவஸ்வதோ நிர்ஜரா:
கோடீரோஜ்ஜ்வலரத்ன தீப கலிகா நீராஜனம் குர்வதே ।
த்ருஷ்ட்வா முக்தி வதூஸ்தநோதி
நிப்ருதாச்லேஷம் பவாநீபதே
யச்சேதஸ்தவ பாதபத்ம பஜனம் தஸ்யேஹ
கிம் துர்லபம் ॥

भवानीपते-பார்வதீபதே, **यच्चेतः**-எவன் மனது, **तव**-உம்முடைய, **पादपद्मभजनं**-தாமரை போன்ற திருவடிகளை ஸேவிக்கிறதாக உள்ளதோ (அவனை) **दृष्ट्वा**-பார்த்து **वैवस्वतः**-யமன், **वक्षस्ताडनशङ्कया**-மார்பில் அடி ஏற்படுமென்ற எண்ணத்தால், **विचलितः**- ஓடிவிட்டான். **निर्जराः** தேவதைகள், **कोटीरोज्ज्वलरत्नदीपकलिकानीराजनं कुर्वते**-தங்கள் கிரீடங்களில் பிரகாசிக்கின்ற தீபம் போன்ற ரத்னங்களின் ஒளிகளால் ஆரத்தி செய்கிருர்கள். **मुक्तिवधूः**-முக்தியாகிய பெண், **निभृताश्लेषं तनोति**-காடாலிங்கனம் செய்கிருள். **तस्य**-அவனுக்கு, **इह**-இவ்வுலகில், **किं दुर्लभं**-எதுதான் அடையமுடியாதது !

பார்வதியின் தலைவ ! எவன் மனது உன்னை பூஜிக்கின்றதோ அவனுல் சாதிக்கக்கூடாததென்ன ? அவனைப் பார்த்தாலே, யமன் ஓடிவிடுகின்ருன். தேவர்கள் முடிகளிலுள்ள ஒளிவிடும் மணிகளைக்கொண்டு அவனுக்கு விளக்கெடுக்கின்ருர்கள் (ஆலத்தி) முக்தி யென்னும் மணப்பெண் அவனை இறுக அணைத்துக்கொள்கிருள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யமனை வென்றவன் மார்க்கண்டேயன் ஒருவனேயன்று. ஒவ்வொரு பக்தனும் சாவின்மையைப் பெற்றுவிடுகின்றான். அழிவற்ற தேவர்களின் நிலையினும் உயர்ந்தது பக்தனின் நிலை. தேவர்களும் பக்தர்களைப் பாராட்டுகின்றார்கள் அவ்வழி தாம் சிவனையே வணங்குவதாகவும் கொள்கின்றார்கள். அவர்கள் தலை குவிந்து பக்தன் முன்பு செல்லும்பொழுது அவர்கள் முடிமணிகள் ஆலத்தி போன்றமைகின்றன. சிவனுக்கு பக்தி செய்வதால் பக்தன் மோக்ஷமென்னும் பயனைப்பெறுகின்றான். (65)

क्रीडार्थं सृजसि प्रपञ्चमखिलं क्रीडामृगास्ते जना
यत्कर्माचरितं मया च भवतः प्रीत्यै भवत्येव तत् ।
शम्भो स्वस्य कुतूहलस्य करणं मच्चेष्टितं निश्चितं
तस्मान्मामकरक्षणं पशुपते कर्तव्यमेव त्वया ॥ ६६ ॥

க்ரீடார்த்தம் ஸ்ருஜஸி ப்ரபஞ்சமகிலம்
க்ரீடா ம்ருகாஸ் தே ஜநா
யத்கர்ம சரிதம் மயா ச பவத: ப்ரீத்யை பவத்யேவ தத்।
ஶம்போ ஸ்வஸ்ய குதூஹலஸ்ய கரணம்
மச்சேஷ்டிதம் நிச்சிதம்
தஸ்மான் மாமக ரக்ஷணம் பஶுபதே கர்தவ்யமேவ
த்வயா ॥

शम्भो—மோக்ஷஸுகத்தையளிக்கக்கூடியவரே, **पशुपते**—அக்ஞானிகளையும் காப்பாற்றுகிற ஈச, **अखिलं प्रपञ्चं**—உலகம் பூராவையும், **क्रीडार्थं सृजसि**—விளையாட்டிற்காகப் படைக்கிறீர். **ते**—உமக்கு, **जनाः**—ஜனங்கள், **क्रीडामृगाः**—விளையாட்டு மிருகங்கள், **मया च**—என்னாலும், **यत्कर्म**—எந்தக்காரியம், **आचरितं**—செய்யப்பட்டதோ, **तत्**—அது, **भवतः**—உம்முடைய, **प्रीत्यै एव भवति**—பிரீதிக்காகவே ஆகிறது. **मच्चेष्टितं**—என் செய்கை, **स्वस्य कुतूहलस्य करणं**—உன் ஸந்தோஷத்திற்குக் காரணம் (என்பது), **निश्चितं**—தீர்மானம், **तस्मात्**—ஆகையால் **त्वया**—உம்மால், **मामकरक्षणं कर्तव्यमेव**—என்னைக் காப்பாற்றுவது செய்யத்தகுந்ததே.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சம்பூ, நீயே உலகை விளையாட்டாகப் படைக்கின்றாய். அதிலுள்ள மக்கள் உன் விளையாட்டு பொம்மைகள். நான் எதைச் செய்தாலும் அது உனது ஆனந்தத்திற்காகத்தான். நான் செய்பவையெல்லாம் உன் ஆனந்தத்திற்காக என்பது உறுதி. ஆத்மாக்களின் தலைவ, எனது பாதுகாப்பு உந்தன் பொறுப்பாகின்றது.

இறைவன் விளையாட்டாக உலகைப்படைக்கின்றான். சிருஷ்டியை விளையாட்டென்பதினால் முயற்சியின்றி ஆவது என்பது பொருள். குயவன் பானை வனைவதைப்போலும், பால் தயிராக மாறுவது போலுமன்று சிருஷ்டி முயற்சியற்றதென்றால் அது மாற்றம், (விவர்த்தம்) என்பதாகின்றது. இறைவனுக்கு உலகைப்படைப்பதில் சுயநலம் ஒன்றுமில்லை. அவருக்கு அதனால் இலாபமடையும் நோக்கமில்லை. "இறைவனுக்கு சாதிக்கப்பட வேண்டுவதுமில்லை. அவரால் சாதிக்கப்பட வேண்டுவதும் ஒன்றுமில்லை", (நானவாப்தம், அவாப்தவ்யம்-கீதை 3-22)

பிரம்ம சூத்ரம் (2-1 33) "லோகவத்து லீலா கைவல்யம்" பிரம்மனின் சிருஷ்டி யென்பது வெறும் விளையாட்டு. மண்ணுலகில் விளையாட்டு உள்ளதைப்போல. இந்த சூத்திரத்திற்கு விளக்கம் கொடுக்கும்பொழுது ஆதிசங்கரர், 'மன்னர்களும் அமைச்சர்களும் எதற்கும் சம்பந்தமில்லாமல் பேசுவதைப்போன்றது' என்கிறார். சிருஷ்டி வேலை இயற்கையாக மூச்சுவாங்குவது விடுவதைப் போன்று முயற்சியற்றது. அவைகளுக்கு பயனுமில்லை. மனிதன் விளையாட்டுக்களிலாவது இரகசியமான உள்நோக்கம் அமையலாம். இறைவனின் சிருஷ்டிப்பணியில் அதுவும் காணுவதற்கில்லை. சிருஷ்டியைப்பற்றி கூறும் வேதங்கள், மாயை, பெயர்-உரு, உலகம் என்ற பகுதியில் அமைவதையும் நாம் நினைப்பில் வைத்துக்கொள்ளவேண்டும்.

படைப்பு இறைவன் திருவிளையாட்டானால் அதிலுள்ளவர்கள் பொம்மைகளாக வேண்டும். அவர்கள் செய்வதெல்லாம் அவன் திருவுள்ளப்படியாகவேண்டும். பக்தன் இதை அறிந்து, தன் செயலை யெல்லாம் இறைவனுக்கு அர்ப்பணம் செய்கின்றான். நான் செய்வது எதுவானாலும் ஓ சம்பூ, அது உனக்கே அர்ப்பணம் ஆகட்டும். (66)

वहुविधपरितोषबाष्पपूरस्फुटपुलकाङ्कितचारुभोगभूमिम् ।
चिरपदफलकाङ्क्षिसेव्यमानां परमसदाशिवभावनां प्रपद्ये ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ப்ஹுவித பரிதோஷ பாஷ்பபூர ஸ்புட புளகாங்கித
சாரு போக பூமிம் ।
சிரபத பல காங்க்ஷி ஸேவ்யமானாம் பரம ஸதாசிவ
பாவனாம் ப்ரபத்யே ॥

बहुविधपरितोषबाष्पपूरस्फुटपुलकाङ्कितचारुभोगभूमिं - பலவித மான ஆனந்தபாஷ்பப் பெருக்குக்கும், தெளிவான மயிர்க் கூச்சலுக்கும் அனுபவ ஸ்தானமாயும், **चिरपदफलकाङ्क्षिसेव्यमानां**-சாச்வதமான ஸ்தானத்தை அபேக்ஷிக்கிறவர்களால் ஸேவிக்கக்கூடியதாயுமிருக்கிற, **परमसदाशिवभावनां**-உயர்ந்த ஈசுவர த்யானத்தை, **प्रपद्ये**-சரணம் அடைகிறேன்.

நிலையான வாழ்வு என்னும் பலனை நாடுகின்றவர்களால் அலங்கரிக்கப்பட்டு சுகபோகத்திற்கு அழகாக அமையும் நாட்டில், ஆனந்தக்கண்ணீரும், மெய்சிலிர்ப்பும் அமைகின்றன. அந் நாடாகும் பரம சதாசிவன் தியானத்தில் புக நான் அவனை சரண் வேண்டுகின்றேன்.

சிவத்தியானம் விளைவுள்ள வளம் மிக்க நாடாகச் சொல்லப் படுகின்றது. அந்த வயலிலிருந்து மோக்ஷமாகும் விடுதலை பெறப் படுகின்றது. (67)

अमितमुदमृतं मुहुर्दुहन्तीं विमलभवत्पदगोष्ठमावसन्तीम् ।
सदय पशुपते सुपुण्यपाकां मम परिपालय भक्तिधेनुमेकाम् ॥

அமிதமுதம்ருதம் முஹுர் துஹந்தீம் விமலபவத்பத
கோஷ்டமாவஸந்தீம் ।
ஸதய பசுபதே ஸுபுண்ய பாகாம் மம பரிபாலய
பக்தி தேனுமேகாம் ॥

सदय–தயவுடன் கூடியவரே, **पशुपते**–விருஷபத்திற்கு நாத, **अमितमुदमृतं** – எல்லையில்லாத பிரம்மானந்தமாகிற பாலை, **मुहुः**-அடிக்கடி, **दुहन्तीं**–கறக்கிறதாயும், **विमलभवत्पदगोष्ठमावसन्तीं**-சுத்தமான உம்முடைய பாதங்களாகிற தொழு வத்தில் வஸிக்கிறதாயும், **सुपुण्यपाकां**-புண்யத்தின் பலனு மான, **मम भक्तिधेनुमेकां**-என்னுடைய பக்தியாகிற ஒரு பசுவை மாத்திரம், **परिपालय**–காப்பாற்றும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆத்மாக்களின் இறைவ! கருணையாதும் ஒருவனே! நல்வினையின் பயனுகும் பக்தியென்னும், பசுவைக் காப்பாற்றுவாயாக, அது வேண்டும்பொழுதும் அளவில் பால் கொடுக்கின்றது. அது உனது திருவடி யென்னும் குற்றமற்ற மாட்டுக்கொட்டத்தில் உள்ளது.

இங்கு பக்தி ஒரு பழுதற்ற பசுவாக சித்தரிக்கப்பட்டுள்ளது. அது இறைவனின் பாதுகாப்பிற்குத் தகுதியானது என்று சொல்லப்படுகின்றது. குறைவற்றுக்கொடுக்கும் காமதேனுவைப் போன்றமைவது பக்தி. இறைவனடிகளிலேயே அது தங்குகின்றது.
(68)

जडता पशुता कलङ्किता कुटिलचरत्वं च नास्ति मयि देव ।
अस्ति यदि राजमौले भवदाभरणस्य नास्मि किं पात्रम् ॥

ஜடதா பசுதா களங்கிதா குடிலசரத்வம் ச நாஸ்தி
மயி தேவ ।
அஸ்தி யதி ராஜமௌளே பவதாபரணஸ்ய நாஸ்மி
கிம் பாத்ரம் ॥

जडता—மூடத்தனம் (ஜலமாயிருக்குந்தன்மை), **पशुता**—விவேகமில்லாமை, **कलङ्किता**—களங்கத்துடனிருப்பது (தோஷத்தோடு கூடியிருப்பது) **कुटिलचरत्वं च**—வக்ரமாக ஸஞ்சரிப்பது (நேர்மையற்றிருப்பது) (இவை), **मयि नास्ति**—என்னிடமில்லை. **देव**—பிரகாசமானவரே, **राजमौले**—சந்திரனை சிரஸ்ஸில் அணிந்த ஈச்வரா, **अस्ति यदि**—இருக்கிறதானுல், **भवदाभरणस्य**-உன் ஆபரணத்திற்கு, **पात्रं नास्मि किं**-பாத்திரமாக மாட்டேனு?

இறைவ, சோம்பல், வெறி, அசுத்தம், தீயவழி செல்லும் வக்கரம் (தீயபோக்கு) இவைகள் என்னிடமில்லை. அவைகள் இருந்தாலும், சந்திரசூட, நானும் உன் அணியாகத்தொண்டாற்ற தகுதியுள்ளவனில்லையா?

பக்தன் தான் இறைவனுல் ஏற்றுக்கொள்ளப்படத் தகுதியுள்ளவன் என்று சொல்லுகின்றுன். அவன் பக்தனயிருப்பதுவே அவன் குற்றமற்றிருப்பதற்குச்சான்று. பக்தனுக்கு, அறிவு,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இரக்கம், தூய்மை, நேர்மை முதலியவைகள் உண்டு. இவைகளை அவன் பெற்றிருக்காவிட்டாலும், எதிரான குற்றங்களையே பெற்றிருந்தாலும், சிவனுக்கு அவனை மறுக்க நியாயமில்லை. ஏனெனில் மனிதனுமல்லாத அசுத்தமான தோல்களையும், மானையும், எருதையும், பிறையையும், பாம்புகளையும் அவர் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்.

பிறைச்சந்திரனுக்கு இப்பல குற்றங்களும் உண்டு என்று கொள்ளலாம். அதையே சிவபெருமான் தலையணியாக அணிந்து கொண்டிருக்கின்றார். பக்தன் தன்னையும் ஏற்றுக்கொள்ள ஏன் வேண்டக்கூடாது? உண்மையிலேயே பக்தனிடம் பிறையின் குறைபாடும் இல்லை.

சிவன் பிறையை தலையணியாக ஏற்றுக்கொண்ட விவரம் பல வகையாக உள்ளது. ஒன்று: தக்ஷன் படைப்பு வேலையில் தலைமையானவன், பாரபக்ஷமின்றி நடத்தவேண்டுமென்ற நிபந்தனையுடன் சந்திரனுக்கு தன் பெண்களையெல்லாம் மணம் செய்வித்தான். ஆயின் சந்திரன் ரோஹிணியிடம் அதிக அன்பு காட்டினன். மற்றப்பெண்கள் பிணங்கிக்கொண்டு தகப்பனரிடம் முறையிட்டார்கள். தக்ஷன் கடுங்கோபமடைந்து சந்திரன் தினம் ஒன்ருகத் தன் கலைகளை இழந்து நிற்கவேண்டுமென்று சபித்தான். சந்திரன் சிவனைச் சரண்புகுந்தான். சிவபெருமான் அதை ஏற்றுக்கொண்டு தலையில் அணிந்துகொண்டார். இறைவனருளால் சந்திரன் தினம் ஒன்ருகத் தன் கலைகளைப்பெறலானன். இறைவன் தக்ஷனின் சாபம் நிற்கவேண்டுமென்று கொண்டார். அவர் கலைகள் தேயவும் வளரவும் அருள் செய்தார்.

மற்ருெரு கதைப்படி சந்திரன் தன் ஆசிரியரின் மனைவியை காதலித்ததினுல் அந்த சாபம் வந்ததாம். (69)

अरहसि रहसि स्वतन्त्रबुद्ध्या वरिवसितुं सुलभः प्रसन्नमूर्तिः ।
अगणितफलदायकः प्रभुर्मे जगदधिको हृदि राजशेखरोऽस्ति ॥

அரஹஸி ரஹஸி ஸ்வதந்த்ர புத்த்யா வரிவஸிதும்
ஸுலப: ப்ரஸன்ன மூர்த்தி: ।
அகணித பலதாயக: ப்ரபுர் மே ஜகததிகோ ஹ்ருதி
ராஜசேகரோ ऽஸ்தி ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

प्रसन्नमूर्तिः-அனுக்ரஹம் செய்யக்கூடிய ரூபத்தையுடையவரும், **अगणितफलदायकः**-எல்லையில்லாத பலனைக்கொடுப்பவரும், **प्रभुः**-முத்தொழில்களிலும் சக்தராயும், **जगदधिकः**-உலகத்தைக் காட்டிலும் மேலானவருமான, **राजशेखरः**-சந்திரனை சிரஸில் உடைய ஈசன் (சக்ரவர்த்தி), **मे हृदि अस्ति** என் மனதில் இருக்கிறார். (ஆனதால்) **अरहसि**-வெளியிலும், **रहसि**-மனதிற்குள்ளேயும், **स्वतन्त्रबुद्ध्या** - தன்னுடையதென்ற புத்தியால், **वरिवसितुं सुलभः**-ஸேவிப்பதற்கு ஸுலபமாக இருக்கிறார்.

வெளிப்படையாகவும் இரகசியமாகவும், அவருடன் சுதந்திர மனதுடன் வாழ்வது சுலபமானது. அவன் உரு கம்பீரமானது, அவர் அளவற்ற பயனைக்கொடுக்கவல்லவர். உலகினும் உயர்ந்தவர், இதயத்தில் வசிக்கும் அந்தப் பிறையணிந்த ஒருவர்.

இறைவன் எல்லையற்றும் எங்கும் உள்ளவர். அவர் உலகத்தினும் உயர்ந்தவர் (ஜகததிகர்) ஆயின் இதயத்துள்ளும் வசிப்பவர். அவருடன் வசிப்பது எளிதானதாகவேண்டும். ஆயின் அவனருளை உணர ஆரம்பிக்காதவர்களுக்கு அது மிகவும் கடினமானதாகவேண்டும். அவரே கருணை. அவரே மோக்ஷத்தைக் கொடுப்பவர்.

அரஹஸி 'புறத்துலகில்' ரஹஸி 'உள்ளுள்ள இதயத்தில்.' ஜகததிக என்பதற்கு ஜகததிப என்ற பாடபேதமும் உண்டு. (70)

आरूढभक्तिगुणकुञ्चितभावचाप-
युक्तैः शिवस्मरणबाणगणैरमोघैः ।
निर्जित्य किल्बिषरिपून्विजयी सुधीन्द्रः
सानन्दमावहति सुस्थिरराजलक्ष्मीम् ॥ ७१ ॥

ஆரூட பக்தி குண குஞ்சித பாவ சாப
யுக்தை: ஶிவ ஸ்மரண பாண கணைரமோகை: ।
நிர்ஜித்ய கில்பிஷரிபூன் விஜயீ ஸுதீந்த்ர:
ஸாநந்தமாவஹதி ஸுஸ்திர ராஜலக்ஷ்மீம் ॥

सुधीन्द्रः-சிறந்த புத்திமான், **आरूढभक्तिगुणकुञ्चितभावचापयुक्तैः**-உண்டாயிருக்கிற பக்தியாகிற நாண் கயிறால்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வளைக்கப்பட்ட புத்தியாகிய வில்லில் தொடுக்கப்பட்ட **अमोघैः**-வீணுகாத, **शिवस्मरणबाणगणैः**-சிவ ஸ்மரணமாகிற அம்புக்கூட்டங்களால், **किल्बिषरिपून्**-பாபமாகிற சத்ருக்களை **निर्जित्य**-ஜயித்து, **विजयी**-ஜயத்துடன் கூடியவனுக, **सानन्दं**-ஆநந்தத்துடன், **सुस्थिरराजलक्ष्मीं**-ஸ்திரமானபிரம்மாதி தேவர்களுக்கு அதிபரான ஈச்வரனின் ஸாரூப்யமுக்தியை (ஸ்திரமான ராஜ்யத்தை), **आवहति**-அடைகிருன்.

சிவ சிந்தனை யென்னும் பிழையாத அம்புகளை பக்தி யென்னும் நாணுல் கட்டப்பட்ட தியானமென்னும் வில்லில் அமைத்து ஊக்கினுல் நல்ல மனதுடையவர், பகைவராகும் பாபங்களை வென்று நிலைத்த ஆனந்தத்தைப்பெறலாம்.

பக்தன் கைதேர்ந்த வேடனுக்கு உவமிக்கப்படுகின்றுன். ஒரு அரசன் பிறநாட்டைக் கைப்பற்ற, நேரிடையாகப் பகைவர்களுடன் சண்டை பிடிக்கவேண்டும். அப்படி செய்ய வலுவான வில்லும் கைத்திறனும் பெற்றிருக்கவேண்டும். பாபத்துடன் எழும் ஆத்மீகப் போரில் தியானம் வில்லாகவும் அம்பு சிவ சிந்தனையாகவும், அமைகின்றன. பக்தன் இந்த ஆயுதத்தைத் திறமையுடனும் நிச்சயமாகவும் கையாளவேண்டும். அவன் அஞ்ஞானத்தை வென்று பரம இலட்சியமாகும் மோக்ஷத்தை அடைகின்றுன். (71)

ध्यानाञ्जनेन समवेक्ष्य तमःप्रदेशं
भित्त्वा महाबलिभिरीश्वरनाममन्त्रैः ।
दिव्याश्रितं भुजगभूषणमुद्वहन्ति
ये पादपद्ममिह ते शिव ते कृतार्थाः ॥ ७२ ॥

த்யானுஞ்ஜனேந ஸமவேக்ஷ்ய தம: ப்ரதேஶம்
பித்வா மஹாபலிபிரீச்வர நாம மந்த்ரை: ।
திவ்யாச்ரிதம் புஜக பூஷண முத்வஹந்தி
யே பாத பத்மமிஹ தே ஶிவ தே க்ருதார்த்தா: ॥

शिव-ஈச்வர, **ध्यानाञ्जनेन**-தியானமாகிற கண்மையால், **समवेक्ष्य**-நன்கு பார்த்து, **महाबलिभिः**-அதிக ஸாமர்த்தியமுடைய, **ईश्वरनाममन्त्रैः**-ஈசுவரனின் நாம மந்திரங்களால்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

तमःप्रदेशं-இருளாயிருக்கிற இடத்தை, **भित्त्वा**-பிளந்து, **दिव्याश्रितं**-தேவதைகளால் ஆச்ரயிக்கப் பட்டதும், **भुजगभूषणं**-ஸர்ப்பங்களை ஆபரணமாயுடையதுமான, **ते पादपद्मं**-உம் முடைய திருவடித்தாமரையை, **इह**-இந்த ஜன்மாவில், **ये**-எவர்கள், **उद्वहन्ति**-உபாஸிக்கிறார்களோ **ते कृतार्थाः**-அவர்கள் பலனையடைந்தவர்கள்.

சிவனே, எவர் தேவர்களும் சரணடைகின்ற நின் திருவடிகளை —சர்ப்பங்களை அணிந்த — சேருகின்றார்களோ, தியானமென்னும் கண்மையால் உன் திருவுருவைக் காணுகின்றார்களோ, இறைவன் திருநாமம் சாற்றி அவிசொரிந்து, காரிருளைக் கடந்து போகின்றார் களோ, அவர்களே வாழ்வின் பெரும் பயனைப்பெற்றவர்கள்.

புதையலை நாடுபவர்கள் அது கண்ணிற்குப் புலனாக மந்திரித்த கண் இமையை ட்டுக்கொண்டு அதைத்தேடுகின்றார்கள், அப் பொழுதே அவன் சரியான இடத்தைத் தோண்டமுடியும். பிறகு புதையலைக்காக்கும் தெய்வங்களுக்கு பூசை செய்து தான் வேண்டும் புதையலை அடைகின்றான்.

இங்கு பெறப்படவேண்டும் பொருள் இறைவன் திருவடிகள். கண்மை தியானம், தோண்டப்படவுள்ள கடும் மண் அஞ்ஞானம், அவிசுகள் சிவநாமங்கள். (72)

भूदारतामुदवहद्यदपेक्षया श्री-
भूदार एव किमतः सुमते लभस्व ।
केदारमाकलितमुक्तिमहौषधीनां
पादारविन्दभजनं परमेश्वरस्य ॥ ७३ ॥

பூதாரதாமுதவஹத் யதபேக்ஷயா ஸ்ரீ
பூதார ஏவ கிமத: ஸுமதே லபஸ்வ ।
கேதாரமாகலித முக்தி மஹௌஷதீநாம்
பாதாரவிந்த பஜனம் பரமேச்வரஸ்ய ॥

सुमते-ஓ நல்ல புத்தியே, **यदपेक्षया**-எவருடைய பாதார விந்தத்தைப் பார்ப்பதின் பொருட்டு, **श्रीभूदार एव**-லக்ஷ்மீ பூமிதேவிகளுக்கு பர்த்தாவான விஷ்ணுவே, **भूदारतां**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வராஹாவதாரத்தை, **उदवहत्** **किम्**-வகித்தாரல்லவா! **अतः** ஆகையினால், **आकलितमुक्तिमहौषधीनां**-விரும்பப்பட்ட மோக்ஷமாகிய ஔஷதிகளுக்கு, **केदारं**-உற்பத்தி ஸ்தானமான **परमेश्वरस्य**-பரமேச்வரனுடைய, **पादारविन्दभजनं लभस्व**-பாதாரவிந்தத்தையடைவாய்.

ஓ நல்லமனதே! இலக்குமி, பூதேவி இவர்களின் கணவனுகும் விஷ்ணுவே ஒரு பன்றியின் உருவை எடுத்துக்கொண்டு தேடிய திருவடிகளை, எல்லோராலும் வேண்டப்படுகின்ற விடுதலையென்னும் மருந்துச்செடியை (மூலிகையை) வளர்க்கும் நிலமாகும் சிவனடிகளை வணங்க முயல்வாயாக ஒருவன் வேறெதைச் செய்வது?

இங்கும் விவசாயத்தொழிலுவமை கொடுக்கப்படுகின்றது. இறைவன் திருவடிகள் வளமிக்க வயல்கள்; அவைகளிலே மோக்ஷத்தின் மூலிகை வளர்கின்றது.

இறைவனடிகளைப் புகழும்பொழுது, விஷ்ணு சிவனடிகளை அடையச் செய்த முயற்சி வீணனது குறிப்பிடப்படுகின்றது. (73)

आशापाशक्लेशदुर्वासनादि-
भेदोद्युक्तैर्दिव्यगन्धैरमन्दैः ।
आशाशाटीकस्य पादारविन्दं
चेतःपेटीं वासितां मे तनोतु ॥ ७४ ॥

ஆஶா பாஶ க்லேஶ துர்வாஸனாதி
பேதோத்யுக்தைர் திவ்ய கந்தைரமந்தை: ।
ஆஶா ஶாடீகஸ்ய பாதாரவிந்தம்
சேத: பேடீம் வாஸிதாம் மே தனோது ॥

आशाशाटीकस्य-திக்குகளை வஸ்திரமாக உடைய ஈச்வரனின், **पादारविन्दं**-திருவடியானது, **आशापाशक्लेशदुर्वासनादिभेदोद्युक्तैः**-கயிற்றுக்கொப்பான ஆசை, ஐந்து விதமான கிலேசங்கள், கெட்டபழக்கம் முதலியவைகளை நாசம் செய்வதில் அக்கரையுள்ள, **अमन्दैः**-அதிகமான, **दिव्यगन्धैः**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உயர்ந்த வாஸனைகளால், **मे चेतःपेटीं**-என் மனமாகிற பெட்டியை, **वासितां तनोतु**-நல்ல மணமுடையதாகச் செய்யட்டும்.

ஆசை, மயக்கம், குரோதம் என்ற நாற்றங்களை அகற்றும் இனிய தெய்வீக வாசனைகளை, சீலங்களையே திசையாகக் கொள்ளும் சிவபெருமானது திருவடிகள் எனது இதயத்தில் நிறைவிக்கட்டும்.

இங்கு மனது ஒரு மூடிய பெட்டிக்கு உவமிக்கப்படுகிறது. அது மயக்கம், ஆசைகள், குரோதம் முதலிய நாற்றங்கள் நிறைந்துள்ளது. இறைவன் அதைத்திறந்து அதில் நல்ல மணங்களைப் புகுத்த வேண்டப்படுகிறார். (74)

कल्याणिनं सरसचित्रगतिं सवेगं
सर्वेङ्गितज्ञमनघं ध्रुवलक्षणाढ्यम् ।
चेतस्तुरङ्गमधिरुह्य चर स्मरारे
नेतः समस्तजगतां वृषभाधिरूढ ॥ ७५ ॥

கல்யாணினம் ஸரஸ சித்ர கதிம் ஸவேகம்
ஸர்வேங்கிதக்ஞமநகம் த்ருவ லக்ஷணாட்யம் ।
சேதஸ்துரங்கமதிருஹ்ய சர ஸ்மராரே
நேத: ஸமஸ்த தாம் வ்ருஷபாதிரூட ॥

वृषभाधिरूढ-விருஷபாரூடரே, **स्मरारे**-மன்மதனை எரித்தவரே, **समस्तजगतां नेतः**-எல்லா உலகங்களுக்கும் நாயக, **कल्याणिनं**-மங்களகரமாயும் (கல்யாண லக்ஷணங்களுடன் கூடியதும்) **सरसचित्रगतिं**-இனிமையான நாநாவித கதி விசேஷங்களுடன் கூடியதும், **सवेगं**-வேகத்துடன் கூடியதும், **सर्वेङ्गितज्ञं**-எல்லா விதமான அபிப்ராயங்களையும் அறிந்துகொள்கிறதும், **अनघं**-தோஷமற்றதும், **ध्रुवलक्षणाढ्यं**-சுழி முதலான ஸ்திரமான லக்ஷணங்களுடையதும் (ஈசனிடம் நிலைத்திருப்பது என்ற லக்ஷணமுள்ளதுமான) **चेतस्तुरङ्गं**-என் மனமாகிய குதிரையில், **अधिरुह्य**-ஏறி, **चर**-ஸஞ்சாரம் செய்யுங்கள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

காமத்தை அழிப்பவனே! உலகங்களுக்கெல்லாம் தலைவ! எருதில் ஏறுபவனே! மங்களகரமானதும், வேகமாகச் செல்லக் கூடியதும், அழகான பலவித நடைகளுடன் கூடியதும் குறிகளை எல்லாம் அறிவதும், எவ்வகை பழுதற்றதும் நிலையான குணங்கள் பெற்றதுமான எனது மனமென்னும் குதிரைமீது செல்வாயாக!

சிவனே உலகங்களுக்கெல்லாம் மாபெருந்தலைவன். அவனே காமத்தை அழிக்க வல்ல பெருந்தலைவன். புராணங்கள், மன்மதன் சிவனால் எரிக்கப்பட்டதாகச் சொல்கின்றன. சிவன் வேண்டப்படும் இடங்களுக்குச் செல்லவேண்டியவர். அவர் ஆன்மாக்களைக் கரையேற்றவல்லவர். அவர் எருதேறி இதை எப்படிச்செய்வது? அது மெதுவாகச் செல்வதன்றோ? அவர் பணியில் வேகமாகச் செல்லும் குதிரையாகும் தன் மனதை அமர்த்துகின்றான். அதில் அவர் சவாரி செய்து அதைத் தன் பணிக்கு ஏவட்டும்.

சிவபெருமான் காமனை (மன்மதனை) அழித்த விருத்தாந்தம் இது: தக்ஷன் ஒருயாகம் செய்து, அதற்கு தன் மருகனாகும் சிவ பெருமானை அழைக்கவில்லை. தாக்ஷாயணி – சிவபெருமானின் துணைவி–அழைப்பில்லாமல் அங்கு சென்று அவமதிக்கப்பட்டாள். அதை சகிக்காது தாக்ஷாயணி யாக நெருப்பில் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டாள். இதை அறிந்த சிவபெருமான் அந்த யாகத்தை அழிக்கச்செய்தார். தாக்ஷாயணியே பார்வதி யாகப் (ஹிமவானின் புதல்வியாகப்) பிறந்தாள். மீண்டும் தன் தலைவனையடைய அவள் அருந்தவம் மேற்கொண்டாள். ஆனால் சிவபெருமானோ தியானத்தில் அமர்ந்து தன்னை மறந்திருந்தார். தாரகாசுரனால் தொல்லைபட்ட தேவர்கள், சிவபெருமானின் திருக் குமாரனாலேயே அவன் அழிக்கப்படுவானென்றுகொண்டு காம தேவனை பார்வதியினிடம் சிவனுக்கு ஆர்வமுண்டாக்க அனுப்பினார்கள். மன்மதன் சிவனது தியானத்தைக்குலைக்க, சிவபெருமான் தனது நெற்றியிலுள்ள மூன்றாவது கண்ணைத் திறந்து மன்மதனைப் பார்த்து எரித்துவிட்டார், அதனின்று சிவனுக்கு காமாரி, ஸ்மராரி என்ற பெயர்கள் ஏற்பட்டன. (75)

भक्तिर्महेशपदपुष्करमावसन्ती
कादम्बिनीव कुरुते परितोषवर्षम् ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

संपूरितो भवति यस्य मनस्तटाक-
स्तज्जन्मसस्यमखिलं सफलं च नान्यत् ॥ ७६ ॥

பக்திர் மஹேச பத புஷ்கரமாவஸந்தீ
காதம்பினீவ குருதே பரிதோஷ வர்ஷம் I
ஸம்பூரிதோ பவதி யஸ்ய மநஸ்தடாக ஸ்தஜ்ஜன்ம
ஸஸ்யமகிலம் ஸபலம் ச நாந்யத் II

भक्तिः-பக்தியானது, **महेशपदपुष्करमावसन्ती** – ஈச்வரன் பாதங்களாகிற ஆகாயத்திலிருந்து கொண்டு, **कादम्बिनीव**–மேகவரிசைபோல், **परितोषवर्षं**–ஆனந்தப் பெருக்கை, **कुरुते**–செய்கிறது (உண்டு பண்ணுகிறது). **यस्य**–எவனுடைய, **मनस्तटाकः**-மனமாகிற குளம், **संपूरितो भवति**-நிரம்பப் படுகிறதோ, **अखिलं**–ஸமஸ்தமான, **तज्जन्मसस्यं**–அவன் ஜன்மாவாகிற பயிர், **सफलं**–பயனுடன் கூடியது. **अन्यत्**–மற்றது, **नच**–பயனில்லை.

பரம்பொருளாகும் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் பக்தியென்னும் மேகமானது ஆனந்த மழையைப் பொழிகின்றது. எவன் மனது இந்த ஆனந்த வெள்ளத்தால் நிறைந்துவிடுகின்றதோ அவன் முழுதாய வாழ்வின் பயனை அடைகின்றான். மற்றவர்கள் அல்ல.

இங்கும் உழவுத்தொழில் உவமிக்கப்படுகின்றது. ஈசுவர பக்தி நிறைந்த மனதே இறுதிப்பயனை (மோக்ஷத்தை) அடைகின்றது. (76)

बुद्धिः स्थिरा भवितुमीश्वर पादपद्म-
सक्ता वधूर्विरहिणीव सदा स्मरन्ती ।
सद्भावनास्मरणदर्शनकीर्तनादि
संमोहितेव शिवमन्त्रजपेन विन्ते ॥ ७७ ॥

புத்திः ஸ்த்திரா பவிதுமீச்வர பாத பத்ம
ஸக்தா வதூர்விரஹிணீவ ஸதா ஸ்மரந்தீ I
ஸத்பாவநா ஸ்மரண தர்சன கீர்த்தனாதி
ஸம்மோஹிதேவ சிவ மந்த்ர ஜபேந விந்தே II

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ईश्वर–செய்வது, செய்யாமலிருப்பது, வேறு விதமாகச் செய்வது, இவைகளில் ஸாமர்த்தியமுள்ள ஈச்வர, **विरहिणी वधूरिव**–கணவனைப் பிரிந்த ஸ்திரீபோல, **पादपद्मसक्ता**–உம்முடைய பாதாரவிந்தத்தில் ஈடுபட்டு, **सदा स्मरन्ती**–எப்பொழுதும் ஸ்மரித்துக் கொண்டிருக்கிற, **बुद्धिः**–மனமானது, **शिवमन्त्रजपेन**–சிவ என்ற மந்திரஜபத்தினால், **संमोहितेव**–மோஹத்தை அடைந்தது போல, **स्थिरा भवितुं**–நிலையாயிருப்பதற்கு, **सद्भावनास्मरणदर्शनकीर्तनादि**-நிலையாக உள்ள பாதாரவிந்தத்தின் தியானம், ஸ்மரிப்பது, பார்ப்பது, நாமாவை உச்சரிப்பது இவைகளைப்பற்றி **विन्ते**–விசாரிக்கிறது.

இறைவ! கணவனைப்பிரிந்து நிற்கும் பெண்ணைப்போல இறைவனடிகளைப்பற்றி நிற்கும் மனது சதா அவனையே நினைக்கின்றது. சிவ மந்திரத்தை அடிக்கடி ஜபிப்பதால் அது தன்னை நல்ல சிந்தனைகள், நினைவு, பார்வை, பாடுதல் இவைகளில் ஈடுபடுத்திக்கொள்கின்றது.

பக்தனின் மனது கணவனைப் பிரிந்துள்ள மனைவியுடன் உவமிக்கப்படுகின்றது. மனது இறைவனைவிட்டுப் பிரிந்திருப்பதைப் பொறுப்பதில்லை. அதில் பிற சிந்தனைகளுக்கு இடமில்லை. சதா சிவனையே சிந்திக்கின்றது நோக்கு, பேச்சு நினைவு எல்லாம் சிவனைப் பற்றிக்கொள்ளவே செய்கின்றன. (77)

सदुपचारविधिष्वनुबोधितां
सविनयां सुहृदं सदुपाश्रिताम् ।
मम समुद्धर बुद्धिमिमां प्रभो
वरगुणेन नवोढवधूमिव ॥ ७८ ॥

ஸதுபசார விதிஷ்வனுபோதிதாம்
ஸவிநயாம் ஸுஹ்ருதம் ஸதுபாச்ரிதாம் ।
மம ஸமுத்தர புத்திமிமாம் ப்ரபோ
வரகுணேன நவோடவதூமிவ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

प्रभो-ஸர்வசக்தியோடு கூடிய ஈச, **सदुपचारविधिषु**-ஸாதுவான உம்முடைய திருவடிகளின் உபசரணை விஷயத்தில், **अनुबोधितां**-சிக்ஷிக்கப்பட்டதாயும், **सविनयां**-வணக்கத்துடன் கூடியதாயும், **सुहृदं**-நல்ல மனமுள்ளதும், **सदुपाश्रितां**-நல்லோர்களை அண்டியதுமான, **मम इमां बुद्धिं**-என்னுடைய இந்தபுத்தியை, **वरगुणेन**-சிறந்த குணோபதேசத்தினால், **नवोढवधूमिव**-புதிதாக விவாஹமான ஸ்திரீயைப் போல், **समुद्धर**-சீராகச்செய்யுங்கள்.

நற்சேவையில் பயிற்றப்பட்டதும், பணிவுபெற்றதும், நல்ல சிந்தனைபெற்று அதையே இறுதியாகக்கொள்வதாகும் எனது அறிவை, இறைவ, உயர்த்துவாயாக. மணபுகும் மணமகளுக்கு சிறப்புச்செய்வதைப்போல இதற்கும் சிறப்புச் செய்வாயாக

சென்ற பாட்டில் கொடுக்கப்பட்ட மணப்பெண் உவமையே இங்கும் கொடுக்கப்படுகின்றது. சிறப்புகள் பெற்ற மணப்பெண் அறிவு. அதற்கு இறைவனின் மணமகளாவதற்காகும் தகுதிகளெல்லாம் உள்ளன. அவன் வந்து இப்பெண்ணைக் கைபற்றுவானாக! (78)

नित्यं योगिमनःसरोजदलसंचारक्षमस्त्वत्क्रमः
शंभो तेन कथं कठोरयमराड्वक्षःकवाटक्षतिः ।
अत्यन्तं मृदुलं त्वदङ्घ्रियुगलं हा मे मनश्चिन्तय-
त्येतल्लोचनगोचरं कुरु विभो हस्तेन संवाहये ॥ ७९ ॥

நித்யம் யோகி மந: ஸரோஜ தள ஸஞ்சார க்ஷமஸ்த்வத்க்ரம:
ஶம்போ தேந கதம் கடோர யமராட்வக்ஷ: கவாட க்ஷதி: ।
அத்யந்தம் ம்ருதுளம் த்வதங்க்ரி யுகளம் ஹா மே
மநச்சிந்தயத்-
யேதல்லோசன கோசரம் குரு விபோ ஹஸ்தேன
ஸம்வாஹயே ॥

शम्भो-ஈச்வரா, **त्वत्क्रमः**-உம்முடைய பாத வின்யாஸமானது, **नित्यं**-எப்பொழுதும், **योगिमनस्सरोजदलसंचारक्षमः**-யோகிகளின் தாமரையிதழ்போன்ற மனதில் ஸஞ்சரிப்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பதற்குத் தகுந்தது, तेन-அதனால், कथं-எப்படி, कठोरयमराड्वक्षःकवाटक्षतिः-கெட்டியான யமராஜனுடைய கதவுத் தாப்பாள் போன்ற மார்பினில் உதைப்பது? हा-கஷ்டம், अत्यन्तं मृदुलं-மிகவும் மெதுவான, त्वदंघ्रियुगलं-உமது இரு திருவடிகளை, मे मनः चिन्तयति-என் மனம் தியானம் செய்கிறது विभो-ஈச்வர, एतत्-இந்த உம்முடைய திருவடியை, लोचनगोचरं कुरु-(என்) கண்ணுக்குப் புலப்படும்படி செய். हस्तेन संवाहये-என் கையினால் பிடிக்கிறேன்.

ஓ சம்பூ, யோகிகளின் மனத்தாமரைகளில் நடந்து பழகியவை உன் திருவடிகள்! அவை எப்படி யமனின் மார்பில் உதைத்தன? உனது திருவடி மெல்லியது. என் மனது கலங்குகின்றது. அவைகளை நான் பார்க்க அருள் செய்வாய். அவைகளை என் கைகளால் ஏற்றுக்கொள்கின்றேன்.

64வது சுலோகத்தில் சிவனது திருவடிகள் ஏற்கும் கடிய வேலைகள் குறிப்பிடப்பட்டன. யமனை உதைப்பது அவைகளில் ஒன்று. யமனது மார்பு ஒரு கடினமான கதவு. எதிரிடையாக யோகிகளின் மனது மெல்லியது. அவையே சிவபெருமானுக்கு உகந்தவை. அத்தகைய அடிகள் யமனை உதைக்கும்பொழுது நொந்திருக்குமன்றோ? பக்தன் இறைவனது புனித அடிகளை தடவிக்கொடுக்கத் தனக்குக் காட்டவேண்டுமென்கிறான். (79)

एष्यत्येष जनिं मनोऽस्य कठिनं तस्मिन्नटानीति म-
द्रक्षायै गिरिसीम्नि कोमलपदन्यासः पुराभ्यासितः ।
नो चेद्दिव्यगृहान्तरेषु सुमनस्तल्पेषु वेद्यादिषु
प्रायः सत्सु शिलातलेषु नटनं शंभो किमर्थं तव ॥ ८० ॥

ஏஷ்யத்யேஷ ஜனிம் மனோऽஸ்ய கடினம்
தஸ்மிந்நடானீதி மத்-
ரக்ஷாயை கிரிஸீம்னி கோமள பதந்யாஸ: புராऽப்யாஸித: ।
நோ சேத் திவ்ய க்ருஹாந்தரேஷு ஸுமனஸ்தல்பேஷு
வேத்யாதிஷு
ப்ராய: ஸத்ஸு ஶிலாதலேஷு நடனம் ஶம்போ
கிமர்த்தம் தவ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

शम्भो-ஸுகத்தையுண்டு பண்ணக்கூடிய பரமேச்வர, **एषः**-இவன், **जनिमेष्यति**-பிறப்பான், **अस्य मनः**-இவன் மனம் **कठिनं**-மிகவும் கெட்டியானது, **तस्मिन्नटानि**-அதில் நர்த் தனம் செய்வேன், **इति**-என்று, **मद्रक्षायै**-என்னைக்காப் பதின் பொருட்டு, **गिरिसीम्नि** மலைபிரதேசத்தில், **कोमल-पदन्यासः**-மெதுவான கால் ஸஞ்சாரம், **पुराऽभ्यासितः**-முன்னு லேயே அப்யாஸம் செய்யப்பட்டதா? **नोचेत्**-இல்லாவிடில் **दिव्यगृहान्तरेषु**-உயர்ந்த கிருஹங்களும், **सुमनस्तल्पेषु**-மலர் களால் செய்யப்பட்ட படுக்கைகளும், **वेद्यादिषु**-திண்ணை முதலியவைகளும், **प्रायस्सत्सु** - பெரும்பாலும் இருக்கும் பொழுது, **शिलातलेषु**-கல்பிரதேசங்களில், **तव**-உமக்கு, **नटनं किमर्थं**-நர்த்தனம் எதற்கு?

இது பிறக்கவே போகின்றது; இதன் மனது கடினமானது. நான் இதில் நடனம் செய்யவேண்டும் என்று கொண்டு, இமயத் தின் கடும்பாறைகளில் நடந்து பயிற்சிகொண்டுள்ளாய். இல்லையேல் தெய்வீக வீடுகளும், மலர்ப்படுக்கைகளும், தாழ் வாரங்களும் வேண்டியவை இருக்க நீ ஏன் பாறைகளில் நடனஞ் செய்கின்றாய்?

முன் சுலோகத்தில் இறைவனது மெல்லிய அடிகள் யமனது கடுமையான மார்பை எப்படி உதைத்தது என்று வியக்கின்றார். இந்தப்பாட்டில் பக்தன் தன் மனமும் கடினமானதென்பதை அறிகின்றான். இறைவன் அது கடினமானதென்றுகொண்டு அதில் புகாமலும் போகலாம். ஆயின் இப்படி இறைவன் சமாதானம் கொடுப்பது இறைவனுக்குக் கூடுவதன்று. இறைவன் அந்த ஆத்மா பிறக்கப்போகின்றதையும் கன்னெஞ்சு படைத் திருக்கும் என்பதையும் அதில் தான் தாண்டவம் செய்யவேண்டிய தென்பதும் அறிவார். அதை அறிந்தே இறைவன் பாறைகள் மிகும் இடத்தையே இடமாகக்கொண்டு பாறைகளில் நடந்து வருகின்றார். வேறெதற்காக மலைக்காட்டை அவர் இருப்பிடமாகத் தேர்ந்துள்ளார்? அவருக்கு வேறு வாழிடம் கிடைக்கவில்லையா? தேவர்கள் இதயத்தும், தவசிகள் இதயத்தும் அவிசொரியும் யாகசாலைகளிலும் வேண்டிய இடங்கள் உள்ளனவே? (80)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

कंचित्कालमुमामहेश भवतः पादारविन्दार्चनैः
कंचिद्ध्यानसमाधिभिश्च नतिभिः कंचित्कथाकर्णनैः ।
कंचित्कंचिदवेक्षणैश्च नुतिभिः कंचिद्दशामीदृशीं
यः प्राप्नोति मुदा त्वदर्पितमना जीवन्स मुक्तः खलु ॥

கஞ்சித் காலமுமாமஹேஶ பவத: பாதாரவிந்தார்ச்சனை:
கஞ்சித் த்யான ஸமாதிபிச்ச நதிபி: கஞ்சித் கதாகர்ணனை: ।
கஞ்சித் கஞ்சிதவேக்ஷணைச்ச நுதிபி: கஞ்சித்தஶாமீத்ருஶீம்
ய: ப்ராப்னோதி முதா த்வதர்பித மனா ஜீவன் ஸ
முக்த: கலு ॥

उमामहेश-பார்வதியுடன் கூடிய மஹேச, कञ्चित्कालं-சிலகாலம், भवतः पादारविन्दार्चनैः-உம்முடையபாதாரவிந்தார்ச்சனைகளாலும், कञ्चित्-சிலகாலம், ध्यानसमाधिभिश्च-தியானம் ஸமாதி இந்த யோகாப்யாஸங்களாலும், कञ्चित्-கொஞ்ச காலம், नतिभिः-நமஸ்காரங்களாலும், कञ्चित्कथाकर्णनैः-சில காலம் கதைகளைக்கேட்பதாலும், कञ्चिदवेक्षणैश्च-சில காலம் பார்வையாலும், कञ्चित्-சிலகாலம், नुतिभिः-துதிப்பதாலும், मुदा-ஸந்தோஷத்தால், त्वदर्पितमनाः-உன்னிடம் அர்பணம் செய்யப்பட்ட மனமுள்ள, यः-எவன், ईदृशीं दशां-இந்த நிலைமையை, प्राप्नोति-அடைகிறானோ, सः-அவன், जीवन् मुक्तः खलु-ஜீவித்துக் கொண்டே முக்தியடைந்தவனில்லையா.

உமாதேவியின் துணைவரே, சிறுபொழுது, உனது மலரடிகளைப் பூஜித்துக்கொண்டும், சிறுகாலம் தியானத்திலமர்ந்தும், ஏகாக்ரமாக இருந்தும், சிறுபொழுது நமஸ்காரம் செய்தும், சிறுபொழுது உன் திருவுருவை தரிசனம் செய்தும், சிறுபொழுது உன் புகழைப்பாடியும், ஆனந்தத்து அமரும் நிலையைப்பெற்று தன் மனதை உனக்கு ஒப்படைத்தவனே ஜீவன் முக்தன்.

பக்தி பழுக்கும்பொழுது ஜீவன் முக்தியைக் கொடுக்கின்றது. அது வாழ்விலேயே விடுதலை. பக்தியின் பயன் கண்ணிற்குப் புலனாகாததொன்றல்ல. அதன் பயன் இப்பொழுதே இங்கேயே கிடைக்கவுள்ளது. மனது இறைவனிடம் ஒப்படைக்கப்படும் பொழுது மனது இருப்பது ... அது 'அமனீ

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பாவ' மாகின்றது. மனமே ஆத்மாவைப் பிணைப்பது, மனமே விடுதலையையும் கொடுக்கின்றது. புறபொருள்களைப் பற்றும் மனது உலகுடன் ஆத்மாவைப் பிணைக்க, இறைவனைப்பற்றும் மனது விடுதலை செய்கின்றது. (81)

बाणत्वं वृषभत्वमर्धवपुषा भार्यात्वमार्यापते
घोणित्वं सखिता मृदङ्गवहता चेत्यादि रूपं दधौ ।
त्वत्पादे नयनार्पणं च कृतवांस्त्वद्देहभागो हरिः
पूज्यात्पूज्यतरः स एव हि न चेत्को वा तदन्योऽधिकः ॥

பாணத்வம் வ்ருஷபத்வமர்த்தவபுஷா
பார்யாத்வமார்யாபதே
கோணித்வம் ஸகிதா ம்ருதங்கவஹதா
சேத்யாதி ரூபம் ததௌ ।
த்வத்பாதே நயனார்ப்பணம் ச
க்ருதவாம்ஸ்த்வத்தேஹ பாகோ ஹரி:
பூஜ்யாத் பூஜ்யதர: ஸ ஏவ ஹி ந சேத் கோ வா
ததந்யோऽதிக: ॥

आर्यापते-பார்வதீ பதியான ஈச்வர, हरिः-விஷ்ணு, बाणत्वं-பாணமாயிருப்பது, वृषभत्वं-விருஷபமாயிருப்பது, अर्धवपुषा-பாதி சரீரத்தால், भार्यात्वं-பத்னியாயிருக்கும் தன்மை, घोणित्वं-வராஹாவதாரமெடுப்பது, सखिता-நண்பனுயிருப்பது, मृदङ्गवहता-மிருதங்கம் வாசிப்பது, इत्यादिरूपं दधौ-இது முதலான ரூபத்தையடைந்தார். त्वत्पादे-உன் திருவடியில், नयनार्पणं च कृतवान्-கண்ணையும் அர்ப்பணம் செய்தார். त्वद्देहभागः-உன் சரீரத்தில் பங்குபெற்ற, स एव-அவர்தான், पूज्यात्पूज्यतरः-பூஜ்யாளான பிரம்மாதி தேவர்களைக்காட்டிலும் உயர்ந்தவர், न चेत्-இல்லாவிடில், को वा तदन्योऽधिकः - அவரைக் காட்டிலும் வேறு யார்தான் மேலானவன்?

தேவியின் கணவா! ஹரியானவர், அம்பாகவும், எருதாகவும், உடலைப்பகிர்ந்துகொள்ளும் மனைவியாகவும், பன்றியாகவும், ஒரு நண்பனுகவும், பறையறிபவனுகவும் பல்லுருக்களைகொண்டு ஒரு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சமயம் தன் கண்ணையும் உமது திருவடிகளில் சமர்ப்பித்தார். சிவபெருமானின் ஒரு பாதியாகுபவரே மிகவும் வணங்கத்தக்கவர், அவரினும் மிகுந்தவர் யார்?

இங்கு ஹரிஹர மூர்த்தம் விளக்கப்படுகின்றது. விஷ்ணு (ஹரி) சிவனுடன் பல வழிகளில் இணைக்கப்படுகின்றார், (1) விஷ்ணு திரிபுரம் எரிக்க சிவன் கை அம்பானார். (2) அவர் சிவ வாகனமாகும் எருதுவாகின்றார். (3) அவர் உடலின் பாதியாகி அவர் மனைவியானார். (4) அவர் சிவனடிகளைக் கண்டறிய ஒரு பன்றியானார். (5) அவர் சிவனுக்குத் துணை நிற்க மோஹினி வேடம் கொண்டார். (a) அச்சமயம் தேவர்களே அமிருதத்தை பெறவும், அசுரர்களுக்கு அது இல்லாமல் போகவும் செய்தார். (b) சிவபெருமானால் தான் தொடுபவர்கள் சாம்பலாக மாய வரம் பெற்ற பஸ்மாசுரனை அழிக்கும் பொழுதும் அவர் அவ்வுருக் கொண்டார். (6) சிவபெருமான் நடனம் செய்யும்பொழுது விஷ்ணு மத்தளம் கொட்டுகின்றார். (7) ஒரு சமயம் அவர் சிவனை பூஜை செய்துகொண்டிருக்க ஆயிரத்திற்கு ஒரு தாமரை மலர் குறைவாக இருப்பதைக்கண்டு அதற்குப்பதிலாகத் தன் கண்ணையே கொடுத்தார்.

ஹரி, ஹரனுக்கு மிகவும் நெருங்கியவர், அவர் பிறதேவர்களினும் உயர்ந்தவர். (82)

जननमृतियुतानां सेवया देवतानां
न भवति सुखलेशः संशयो नास्ति तत्र ।
अजनिममृतरूपं साम्बमीशं भजन्ते
य इह परमसौख्यं ते हि धन्या लभन्ते ॥ ८३ ॥

ஜனன ம்ருதி யுதானும் ஸேவயா தேவதாநாம்
ந பவதி ஸுகலேஶ: ஸம்ஶயோ நாஸ்தி தத்ர ।
அஜநிமம்ருதரூபம் ஸாம்பமீஶம் பஜந்தே
ய இஹ பரம ஸௌக்யம் தே ஹி தன்யா லபந்தே ॥

जननमृतियुतानां-பிறப்பு இறப்பு இவைகளுடன் கூடிய, **देवतानां**-தேவதைகளின், **सेवया**-சேவையால், **सुखलेशः**-ஸ்வல்ப ஸுகம்கூட, **न भवति**-உண்டாகிறதில்லை, **तत्र**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அது விஷயத்தில், **संशयः नास्ति**-ஸந்தேஹமில்லை, **ये**-எவர்கள், **इह**-இவ்வுலகில், **अजनिं**-பிறப்பில்லாதவரும், **अमृतरूपं**-இறப்புமில்லாத ரூபத்தையுடையவருமான, **साम्बमीशं**-பார்வதியுடன் கூடிய பரமேச்வரனை, **भजन्ते**-ஸேவிக்கிறார்களோ, **ते धन्याः**-அந்த புண்யவான்கள், **परमसौख्यं लभन्ते**-மேலான ஸுகத்தை (முக்தி ஆனந்தத்தை) அடைகிறார்கள்.

பிறப்பு இறப்பென்னும் சுழலிலுள்ள தேவர்களைப் பூஜிப்பதால் சுகத்தின் சிற்றளவும் நாம் பெறுவதில்லை. இது ஒரு ஸந்தேக மற்ற முடிவு. என்றுமிருப்பவரும், பிறப்பில்லாதவருமான பார்வதியாரின் தலைவனை வணங்குபவர்களே பாக்கியசாலிகள். அவர்களே பேரானந்தத்தை அடைகின்றார்கள்.

சாதாரணமாகும் ஒரு உண்மை இங்கு சொல்லப்படுகின்றது. சிறுதெய்வங்களையும் உபதெய்வங்களையும் வழிபடுவது பயனற்றது. அது நமது இறுதி இலட்சியமாகும் நிறைவைப் பெற உதவாது. என்றுமுள்ளவரான சிவபெருமானே ஆத்மாவைக் காப்பாற்றிப் பேரானந்தத்தைக்கொடுக்கவல்லவர்.

शिव तव परिचर्यासंनिधानाय गौर्या
भव मम गुणधुर्यां बुद्धिकन्यां प्रदास्ये ।
सकलभुवनबन्धो सच्चिदानन्दसिन्धो
सदय हृदयगेहे सर्वदा संवस त्वम् ॥ ८४ ॥

ஶிவ தவ பரிசர்யா ஸந்நிதானாய கௌர்யா
பவ மம குண துர்யாம் புத்தி கன்யாம் ப்ரதாஸ்யே I
ஸகல புவன பந்தோ ஸச்சிதானந்த ஸிந்தோ
ஸதய ஹ்ருதயகேஹே ஸர்வதா ஸம்வஸ த்வம் ||

शिव-மங்களகரமானவரே, **सकलभुवनबन्धो**-எல்லா உலகிற்கும் பந்துவானவரே, **सच्चिदानन्दसिन्धो**-ஸத்யம் ஞானம் ஆனந்தம் இவைகளுக்கு ஸமுத்திரமானவரே, **सदय** தயவுடன் கூடியவரே, **भव**-உலகத்தைப் படைக்கிற ஈச்வர **गौर्या**-பார்வதியுடன் கூட, **तव**-உமக்கு, **परिचर्यासन्निधानाय**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பக்கத்தில் இருந்து ஏவல் செய்வதற்கு, **गुणधुर्यां**-நல்ல குணங்கள் நிறைந்த, **मम**-என்னுடைய, **बुद्धिकन्यां**-புத்தியாகிற கன்னிகையை, **प्रदास्ये**-கொடுக்கிறேன், **त्वं**-நீர், **हृदयगेहे**-ஹ்ருதயமாகிற கிருஹத்தில், **सर्वदा** – எப்பொழுதும், **संवस**-வாஸம் செய்யும்.

ஓ சிவ, ஓ பவ, உலகங்களுக்கெல்லாம் நண்ப! பேரானந்த அநுபவக்கடலே! கருணை வள்ளலே! பல சிறப்புக்களைப் பெற்றுள்ள எனது மனதென்னும் மணமகளை, கௌரியுடன் உனக்குப் பணிவிடை செய்யக்கொடுக்கின்றேன். நீ எப்பொழுதும் என் இதயம் என்னும் வீட்டில் அமர்வாயாக.

பக்தன் தனது மகளாகும் மனதை இறைவன் திருப்பணிவிடைக்குக் கொடுக்கின்றான். மனது பார்வதியாருடன் அமைந்து, அவருடன் சிவபெருமானுக்குப்பணிவிடை செய்யட்டும். இறைவன் இதயத்தையே தன் இருப்பிடமாக வைத்துக் கொள்ளட்டும். அவர் எப்பொழுதும் அதிலிருக்கட்டும். அதை விட்டுப்போகவே வேண்டாம். (84)

जलधिमथनदक्षो नैव पातालभेदी
न च वनमृगयायां नैव लुब्धः प्रवीणः ।
अशनकुसुमभूषावस्त्रमुख्यां सपर्यां
कथय कथमहं ते कल्पयानीन्दुमौले ॥ ८५ ॥

ஜலதி மதன தக்ஷோ நைவ பாதாள பேதீ
ந ச வநம்ருகயாயாம் நைவ லுப்த: ப்ரவீண: ।
அஶன குஸுமபூஷா வஸ்த்ர முக்யாம் ஸபர்யாம்
கதய கதமஹம் தே கல்பயாநீந்துமௌளே ॥

इन्दुमौले-சந்திரனை சிரஸில் அணிந்த ஈசுவர, **अहं**-நான் **जलधिमथनदक्षः नैव**-ஸமுத்திரத்தைக் கடைவதில் ஸாமர்த்தியமுள்ளவனல்ல, **पातालभेदी न च**-பாதாளலோகத்தைப் பிளக்கிறவனுமல்ல, **वनमृगयायां**-காடுகளில் வேட்டையாடுவதில், **प्रवीणः लुब्धः नैव**-சிறந்த வேடனுமல்ல, **ते**-உமக்கு **अशनकुसुमभूषावस्त्रमुख्यां सपर्यां**-ஆஹாரம், புஷ்பம், ஆபரணம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வஸ்திரம் முதலான பூஜையை, **कथं**-எப்படி, **कल्पयानि**-செய்வேன்?, **कथय**-சொல்லும்.

பிறை சூடிய பெருமானே! எனக்குக் கடல் கடையத்திற னில்லை. பாதாளலோகத்தை உடைக்கவும் தெரியாது. நான் திறமை மிக்க வேடனுமன்று இந்நிலையில் நான் உன்னை எப்படிப் பூஜிப்பது? எந்த நிவேதனங்களைப் படைப்பது (விஷத்தை)? மலர் (சந்திரன்), அணி (பாம்புகள்), வஸ்திரம் (யானையின் தோல்) முதலியவைகளை எப்படித்திரட்டுவேன்? எனக்குச்சொல்வாயாக!

பக்தனுக்கு இறைவனை வணங்கும் வழிகள் விளங்கவில்லை. இறைவனுக்கு வேண்டுபவைகளை பக்தன் எப்படிப் பெறுவது? விஷமே சிவபெருமானின் நிவேதனம். பாற்கடலைக் கடைந்தா லன்றி சிவனுணவாகும் ஹாலகாலத்தைப் பெறுவதெப்படி? பாம்புகளே இறைவன் அணிகள். அவைகளைப்பெற நாகலோகத் திற்குப் போகவேண்டும். சிவபெருமானின் வஸ்திரம், யானையின் தோல், புலித்தோல் இவை. இவைகளைப்பெற ஒருவன் வேட்டைத்திறன் பெற்றவனாகவேண்டும். சாதனங்கள் ஒன்றையும் பெறாத பக்தன் தான் அவைகளைப் பெறவில்லையாகையால் தான் இறைவனுக்கு எதை சமர்ப்பிப்பது என்று கேட்கின்றான். (85)

पूजाद्रव्यसमृद्धयो विरचिताः पूजां कथं कुर्महे
पक्षित्वं न च वा किटित्वमपि न प्राप्तं मया दुर्लभम् ।
जाने मस्तकमङ्घ्रिपल्लवमुमाजाने न तेऽहं विभो
न ज्ञातं हि पितामहेन हरिणा तत्त्वेन तद्रूपिणा ॥ ८६ ॥

பூஜா த்ரவ்யஸம்ருத்தயோ விரசிதாঃ பூஜாம் கதம் குர்மஹே
பக்ஷித்வம் ந ச வா கிடித்வமபி ந ப்ராப்தம் மயா துர்லபம் ।
ஜாநே மஸ்தகமங்க்ரி பல்லவமுமா ஜாநே ந தேஃஹம் விபோ
ந ஞாதம் ஹி பிதாமஹேன ஹரிணா தத்வேன தத்ரூபிணா ॥

उमाजाने-பார்வதீபதியான மகேச்வர, **पूजाद्रव्यसमृद्धयः**-பூஜைக்கு உரிய பதார்த்தங்களின் நிறைவுகள், **विरचिताः**-சேகரிக்கப்பட்டன, **पूजां**-பூஜையை, **कथं कुर्महे**-எப்படிச் செய்வோம்? **मया**-என்னால், **दुर्लभं**-அடைய முடியாத, **पक्षित्वं**-பக்ஷியாயிருக்கும் தன்மை, **न च प्राप्तं**-அடையப்பட

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வில்லை. **किटित्वमपि वा**-வராஹத்தன்மையாவது, **न प्राप्तं**-அடையப்படவில்லை. **विभो**-ஸர்வ வியாபகமான ஈசுவர, **अहं**-நான், **ते**-உம்முடைய, **मस्तकं**-சிரஸ்ஸையும், **अंघ्रिपल्लवं**-துளிர்போன்ற பாதத்தையும், **न जाने**-அறியவில்லை. **तत्त्वेन**-உண்மையாக, **तद्रूपिणा**-அந்த ஹம்ஸபக்ஷி - வராகங்களின் ரூபத்தையுடைய, **पितामहेन हरिणा**-பிரம்மாவாலும் விஷ்ணுவாலும், **न ज्ञातं हि**-அறியப்படவில்லையன்றோ.

பார்வதியின் துணைவா! பூஜா சாமக்ரிகளை சேகரித்தாய் விட்டது. ஆயின் எப்படி பூஜை செய்வது? நான் ஒரு வராஹத்தின் சிறப்போ, ஒரு பறவையின் சிறப்போ பெறவில்லையே. எங்கும் பரந்து உள்ளானே, நான் முடியையோ திருவடிகளையோ பார்க்கவில்லை. பிரம்மாவினாலும் விஷ்ணுவினாலும் கூட அவைகளைப் பார்க்கக்கூடவில்லை.

சிவனை பூஜிக்கவேண்டிய சாமான்களை சேகரித்துவிட்டாலும் கூட எப்படிப் பூஜையைச் செய்வது? சிவனுடைய முடியையும் அடியையும் பார்ப்பது கூடுவதில்லை. பிரம்மா விஷ்ணு இவர்களாலேயும் அவை பார்க்கப்படவில்லை. பூஜையை எப்படிச் செய்வது? (86)

अशनं गरलं फणी कलापो
वसनं चर्म च वाहनं महोक्षः ।
मम दास्यसि किं किमस्ति शंभो
तव पादाम्बुजभक्तिमेव देहि ॥ ८७ ॥

அஶனம் கரளம் பணீ கலாபோ
வஸனம் சர்ம ச வாஹனம் மஹோக்ஷ: ।
மம தாஸ்யஸி கிம் கிமஸ்தி ஶம்போ
தவ பாதாம்புஜ பக்திமேவ தேஹி ॥

शम्भो-க்ஷேமத்தை உண்டுபண்ணுகிறவரே, **अशनं**-ஆஹாரம், **गरलं**-காலகூட விஷம்; **कलापः**-ஆபரணம், **फणी**-ஸர்ப்பம், **वसनं**-வஸ்திரம், **चर्म**-தோல், **वाहनं**-வாகனம், **महोक्षः**-பெரிய எருது; **मम**-எனக்கு, **किं दास्यसि**-எதைக் கொடுப்பீர்? **किमस्ति**-என்ன இருக்கிறது? **तव**-உம்முடைய

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

पादाम्बुजभक्तिमेव देहि-பாதாரவிந்தத்தில் பக்தியையே கொடுங்கள்.

ஓ சம்பூ, உனக்கு உணவு விஷம், அணி பாம்பு, வஸ்திரம் தோல், வாகனம் எருது. நீ எதை எனக்குக்கொடுப்பாய்? மேலும் அங்குள்ளதெது? நினது திருவடியில் பக்தியை மட்டும் கொடுப்பாயாக!

85ம் பாட்டில் பக்தன் அவருக்கு உகந்த விஷத்தையும், பாம்பு களையும், தோல்களையும் எப்படிக்கொடுக்கமுடியும் என்று கேட் கிருன். இந்த சுலோகத்தில் சிவன் தனக்குத் தரக்கூடிய பொருள் எது என்று கேட்கிருன். சிவனிடம் இருக்கும் விஷம் முதலியவை பக்தனுக்கு பயன்படுவனவன்று. பக்தன் பரமன் திருவடியில் பக்தி செய்வதையே வேண்டுகின்ருன்.

இது நிந்தாஸ்துதி என்ற வகையில் அமைகின்றது. புகழை இகழாகச் சொல்வது. (87)

यदा कृताम्भोनिधिसेतुबन्धनः
करस्थलाधःकृतपर्वताधिपः ।
भवानि ते लङ्घितपद्मसंभव-
स्तदा शिवार्चास्तवभावनक्षमः ॥ ८८ ॥

யதா க்ருதாம்போநிதி ஸேதுபந்தன:
கரஸ்தலாத:க்ருத பர்வதாதிப: ।
பவானி தே லங்கித பத்மஸம்பவ-
ஸ்ததா ஶிவார்சா ஸ்தவ பாவன க்ஷம: ॥

शिव-மங்களஸ்வரூப, **यदा**-எப்பொழுது, **कृताम्भोनिधि-सेतुबन्धनः**-ஸமுத்திரத்தில் அணைகட்டுவதைச் செய்தவனுக வும், **करस्थलाधःकृतपर्वताधिपः**-கையால் (பூமியில்) கீழே இருக்கும்படி செய்யப்பட்ட விந்த்யமலையை உடையவனுக வும், **लंघितपद्मसंभवः**-பிரம்மாவைக் காட்டிலும் உயர்ந்தவனுக வும் இருப்பேனே **तदा**-அப்பொழுது, **ते**-உனக்கு, **अर्चास्तव-भावनक्षमः**-அர்ச்சனை, ஸ்தோத்திரம், தியானம் இவைகளைச் செய்யத்தகுதியுள்ளவனுக, **भवानि**-ஆவேன்,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடல்மீது பாலம் கட்டினவனுகவோ (ராமனுகவோ), உள்ளங் கையால் விந்தியமலையை அழுத்தியவனுகவோ (அகஸ்தியராகவோ), உலகங்களைப் படைத்து, வேதங்களை விளக்கிய தாமரையில் பிறந்த பிரம்மனுகவோ ஆனலல்லது உன்னைப் பூஜிக்க என்ருல் முடியுமா? அப்பொழுதே உன்னைப் பூஜிக்கவும் உன் புகழைப்பாடவும், உன் தியானத்தில் அமரவும் கூடும்!

சாவிற்குட்பட்ட மனிதனுக்கு சிவனைப் பூஜிக்கவும், அவர் புகழைச்சொல்லவும், அவரை தியானிக்கவும் கூடுவதில்லை. இவைகளைச் செய்ய ராமசந்திரனுகவும், அகஸ்தியராகவும், பிரம்மனுகவும் இருக்கவேண்டும். ஸ்ரீராமசந்திரர் இலங்கைக்குப் பாலம் கட்டியவர். ராமேசுவரத்தில் சிவனைப் பூஜை செய்தார். அகஸ்தியர் (குறுகிய உருவம் பெற்றவர்) விந்தியபர்வதத்தின் அகந்தையை அகற்ற, அதைத் தன் உள்ளங்கையால் அழுத்தி வைத்தார். அவர் சிவன் புகழைப் பாட வல்லவர். சிவனை தியானிப்பதானுல் ஒருவன் பிரம்மாவினும் உயர்ந்தவனுக இருக்க வேண்டும். (88)

नतिभिर्नुतिभिस्त्वमीश पूजा-
विधिभिर्ध्यानसमाधिभिर्न तुष्टः ।
धनुषा मुसलेन चाश्मभिर्वा
वद ते प्रीतिकरं तथा करोमि ॥ ८९ ॥

நதிபிர் நுதிபிஸ்த்வமீஶ பூஜா-
விதிபிர் த்யான ஸமாதிபிர் ந துஷ்ட: ।
தனுஷா முஸலேன சாச்மபிர் வா
வத தே ப்ரீதிகரம் ததா கரோமி ॥

ईश-ஹேஈச்வர, **यथा**-எப்படி, **त्वं**-நீர், **धनुषा**-வில்லினுலாவது, **मुसलेन**-உலக்கையாலாவது, **अश्मभिर्वा**-கற்களினுலாவது **तुष्टः**-ஸந்தோஷிப்பீரோ, **तथा**-அவ்வாறு **नतिभिः**-நமஸ்காரங்களாலும், **नुतिभिः**-ஸ்தோத்திரங்களாலும், **पूजाविधिभिः**-பூஜை முறைகளாலும், **ध्यानसमाधिभिः**-தியான ஸமாதிகளாலும், **न तुष्टः**-ஸந்தோஷப்படமாட்டீர். (ஆகையால்) **ते**-உமக்கு, **प्रीतिकरं वद**-பிரியமான விஷயத்தைச் சொல்லும், **तथा करोमि**-அவ்விதம் செய்கிறேன்,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இறைவ! நமஸ்காரங்கள், உன் புகழ்பாடுதல், பூஜாவிதிகள், ஒருமைபட்ட மனம், தியானம் இவைகளால் உனக்கு திருப்தி உண்டாவதில்லை. ஒரு அம்பினாலும் கல்லாலும், தண்டத்தாலும் அடிக்கப்படுவதை நீ விரும்புகிறாய் போலும். அப்படியானால் அதைச்சொல் உனக்கு எது உகந்ததோ அதைச்செய்கின்றேன்.

இந்தப்பாட்டும் நிந்தாஸ்துதி. சாதாரண பூஜை முறைகள் சிவனை திருப்தி செய்வதில்லை போலும்! எதற்காக அவர் முரட்டுச் செய்கைகளைப் பூஜையாக ஏற்றுக்கொண்டுள்ளார்? (1) அர்ச்சுனன் சிவனருளைப்பெற கடுந்தவம் செய்துகொண்டிருந் தான். சிவன் ஒரு வேடுவனாக அவன் முன்பு தோன்றினார். அவர்களிருவருக்குள்ளும், யார் அந்த ஒரு விலங்கைக்கொன்றது என்ற சண்டை உண்டாயிற்று- கைகலப்பு உண்டாக அர்ச்சுனன் சிவபெருமானை வில்லால் அடித்தான். சிவபெருமானுக்குப் பெரு மகிழ்ச்சி உண்டாயிற்று (2) தண்டமென்பது பாண்டியமன்னனின் பிரம்பைக் குறிக்கின்றது போலும்! மாணிக்கவாசகர் பிழையாக அரசனால் தண்டிக்கப்பட்டார். பாண்டியனுக்குப் பாடம் கற்பிக்க கரைகள் உடையும் வண்ணம் வைகையில் பெருவெள்ளம் வந்தது. மதுரையின் குடிமக்கள் அனைவரும் சேர்ந்து உடைப்புகளை அடைக்கவேண்டுமென்று பாண்டியன் உத்திரவிட்டான். ஆப்பம் விற்கும் ஒரு கிழவிக்கு ஆள்கிடைக்கவில்லை. இறைவனே பணி யாளாக வேடம் புனைந்து அக்கிழவியின் வேலையைத் தான் செய்வதாக ஒப்புக்கொண்டார். ஆயின் அவர் வேலையை ஒழுங்காகச் செய்யவில்லை. பிறர் வேலை செய்யாவண்ணம் அவர்கள் அக்கரையையும் அகற்றினார். அரசன் தணிக்கைக்கு வர, இந்தப் பணியாளனைப்பார்த்து, அவனைத் தன் பிரம்பால் தட்டினார். (3) சாக்கிய நாயனார் சமண அரசனின் கீழ் வாழ்ந்தவர். அவருக்கு முறையாக சிவனை பூசிப்பது கூடாததாக அவர் சிவ லிங்கத்தின் மீது கல்லெறிந்து இதயபூசை செய்தார். (89)

वचसा चरितं वदामि शंभो-
रहमुद्योगविधासु तेऽप्रसक्तः ।
मनसाकृतिमीश्वरस्य सेवे
शिरसा चैव सदाशिवं नमामि ॥ ९० ॥

வசஸா சரிதம் வதாமி ஶம்போ-
ரஹமுத்யோக விதாஸு தே஽ப்ரஸக்த: ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மநஸாக்ருதிமீச்வரஸ்ய ஸேவே
ஶிரஸா சைவ ஸதாஶிவம் நமாமி ||

ते उद्योगविधासु-உம்முடைய உயர்ந்தயோகத்தில், **अप्रसक्तः**-பழக்கமில்லாத, **अहं**-நான், **शम्भोः**-ஈசுவரனுடைய, **चरितं**-கதையை, **वचसा**-வார்த்தையால், **वदामि**-சொல்லுகிறேன், **मनसा**-மனதால், **ईश्वरस्य**-ஈசுவரனின், **आकृतिं**-ரூபத்தை, **सेवे**-தியானம்செய்கிறேன், **शिरसा चैव**-சிரஸ்ஸினுலும், **सदाशिवं नमामि**-ஸதாசிவனை நமஸ்கரிக்கிறேன்.

முயற்சியுடன் உன்னை தியானிக்க நான் பழக்கமடைந்தவனன்று. நான் சம்பூவின் கதைகளைச்சொல்வேன். சிவனுருவத்தை மனதில்கொண்டு வணங்குவேன். தலையால் சதாசிவனுக்கு வணங்குவேன். இவையே என்னால் செய்யக்கூடியவை.

ஒருவன் இதயத்தால் சிவனைப் பூஜை செய்யத் தகுதி பெற்றிருக்காவிட்டாலும் அவன் தயங்கவேண்டுவதில்லை. அவன் கீழ்ப்படிமுறைகளாலேயே பக்தி செய்யட்டும். அவன் படிப்படியாக மேலேறவே செய்வான். (90)

आद्याऽविद्या हृद्गता निर्गताऽऽसी-
द्विद्या हृद्या हृद्गता त्वत्प्रसादात् ।
सेवे नित्यं श्रीकरं त्वत्पदाब्जं
भावे मुक्तेर्भाजनं राजमौले ॥ ९१ ॥

ஆத்யாZவித்யா ஹ்ருத்கதா நிர்கதாZZஸீத்
வித்யா ஹ்ருத்யா ஹ்ருத்கதா த்வத்ப்ரஸாதாத் |
ஸேவே நித்யம் ஸ்ரீகரம் த்வத்பதாப்ஜம்
பாவே முக்தேர் பாஜனம் ராஜமௌளே ||

राजमौले-சந்திரனை சிரஸில் அணிந்தவரே, **त्वत्प्रसादात्**-உம்முடைய அனுக்ரஹத்தால், **आद्या**-ஆதிமுதலிருக்கிற **हृद्गता**-மனதிலுள்ள, **अविद्या**-அக்ஞானம், **निर्गतासीत्**-போய்விட்டது. **या**-எந்த ஞானம், **हृत्**-அக்ஞானத்தைப் போக்குமோ, **विद्या**-அந்த ஞானம், **हृद्गता**-ஹிருதயத்திலிருக்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கிறது. **श्रीकरं**-ஸம்பத்தை யுண்டுபண்ணுகிற, **मुक्तेर्भाजनं**-முக்திக்கு ஸாதனமான, **त्वत्पदाब्जं**-உம்முடைய பாதார விந்தத்தை, **भावे**-மனதில், **नित्यं सेवे**-எப்பொழுதும் தியானம்செய்கிறேன்.

பிறைசூடும் பெருமானே! நினது திருவருளால் ஆதியற்று என்னிதயத்து நிலைபெற்ற மாயை அகன்றுவிட்டது. பிரம்ம ஞானம் அங்கு நிலைத்துவிட்டது. மங்களத்தைக் கொடுப்பதும், விடுதலைக்கு வழிவிடுவதுமாய உன் திருவடிகளை நான் தியானம் செய்து வணங்குகின்றேன். (91)

दूरीकृतानि दुरितानि दुरक्षराणि
दौर्भाग्यदुःखदुरहंकृतिदुर्वचांसि ।
सारं त्वदीयचरितं नितरां पिबन्तं
गौरीश मामिह समुद्धर सत्कटाक्षैः ॥ ९२ ॥

தூரீக்ருதானி துரிதானி துரக்ஷராணி
தௌர்பாக்ய துக்க துரஹங்க்ருதி துர்வசாம்ஸி l
ஸாரம் த்வதீய சரிதம் நிதராம் பிபந்தம்
கௌரீஶ மாமிஹ ஸமுத்தர ஸத்கடாக்ஷை: ll

गौरीश-கௌரீநாத, **दुरक्षराणि**-பிரம்மாவின் கெட்ட எழுத்தைக் குறிக்கின்ற, **दुरितानि**-பாபங்களால் உண்டான **दौर्भाग्यदुःखदुरहंकृतिदुर्वचांसि**-துரதிருஷ்டம், துக்கம், கெட்ட அஹங்காரம், கெட்ட வார்த்தை இவைகள், **दूरीकृतानि**-போக்கப்பட்டன. **सारं**-உயர்ந்த, **त्वदीयचरितं**-உன்சரித்திரத்தை, **नितरां पिबन्तं**-அதிகமாகக் குடிக்கிற (கேட்கிற) **मां**-என்னை, **सत्कटाक्षैः**சிலாக்கியமான கடைக்கண் பார்வைகளால், **इह**-இந்த ஜன்மாவிலேயே, **समुद्धर**-கரையேற்றும்.

கௌரியின் கணவ, துரதிர்ஷ்டம், கஷ்டம், கொடிய அகந்தை கொடுஞ்சொல் இவைகளெல்லாம் — பாபங்களால் தோன்றுபவை — துரத்தப்பட்டுள்ளன. நான் உனது புகழென்னும் இனிய புராணங்களைப் பருகி நிற்கின்றேன். கிருபை செய்து என்னையும் இங்கே காப்பாற்றுவாயாக!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இறைவனருளாலேயே தீயவையெல்லாம் அகற்றப்படுகின்றன. தீயது, பாபம், கஷ்டம் இவையெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல அகன்றுவிடுகின்றன. (92)

सोमकलाधरमौलौ कोमलघनकंधरे महामहसि ।
स्वामिनि गिरिजानाथे मामकहृदयं निरन्तरं रमताम् ॥

ஸோம கலாதர மௌளௌ
 கோமள கநகந்தரே மஹாமஹஸி ।
ஸ்வாமினி கிரிஜா நாதே
 மாமக ஹ்ருதயம் நிரந்தரம் ரமதாம் ॥

मामकहृदयं-என் மனம், **सोमकलाधरमौलौ**-சந்திரகலையை சிரஸில் அணிந்தவரும், **कोमलघनकन्धरे**-அழகியமேகம் போல் நீலமான கழுத்தையுடையவரும், **महामहसि**-பெரிய ஒளி ரூபமாயும், **स्वामिनि**-லோக நாதனுமான, **गिरिजानाथे**-பார்வதீபதியிடத்தில், **निरन्तरं रमतां**-இடைவிடாமல் இன்புற்றிருக்கட்டும்.

கிரிஜாவின் கணவனும், பிறையைத்தலையில் அணிபவனும், மேகம்போன்ற நீலமாய கழுத்தைப்பெற்றவனும், பிரகாசத்தைப் பெற்ற உருபடைத்தவனுமான உன்னிடம் என் இதயம் அமர்ந்து மகிழட்டும்.

பக்தன் சிவனது அருட்செயல்கள் சிலவற்றைச்சொல்லி, அதன் பொருளை தியானிக்கின்றார். சிவனது உருவும் அவயவங்களும் அவரது செயலைக்குறிப்பிடுகின்றன. (93)

सा रसना ते नयने तावेव करौ स एव कृतकृत्यः ।
या ये यौ यो भर्गं वदतीक्षेते सदाऽर्चतः स्मरति ॥ ९४ ॥

ஸா ரஸநா தே நயனே
 தாவேவ கரௌ ஸ ஏவ க்ருதக்ருத்ய: ।
யா யே யௌ யோ பர்கம்
 வததீக்ஷேதே ஸதா௨ர்ச்சத: ஸ்மரதி ॥

या-எது, **सदा**-எப்பொழுதும், **भर्गं वदति**-சிவநாமாவைச் சொல்லுகிறதோ, **सा एव रसना**-அதுதான் நாக்கு, **ये**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

எவைகள், भर्गं ईक्षेते-(எப்பொழுதும்) ஈசுவரனைப்பார்க்கிறதுகளோ, ते नयने-அவைகள்தான் கண்கள், यौ-எவைகள், भर्गं अर्चतः-(எப்பொழுதும்) ஈசுவரனைப் பூஜிக்கின்றனவோ, तावेव करौ-அவைகள்தான் கைகள், यः-எவன், भर्गं स्मरति-(எப்பொழுதும்) ஈசனை ஸ்மரணம் செய்கிறானோ स एव कृतकृत्यः-அவன்தான் செய்யக்கூடியவைகளை செய்தவனாகிறான்.

எவனது நாக்கு சிவனையே பேசுகின்றதோ, கண்கள் சிவனையே பார்க்கின்றனவோ, கைகள் சிவனையே பூஜிக்கின்றனவோ எவன் அவனையே விடாது சிந்திக்கின்றானோ அவன் தன் இலட்சியத்தைப் பெற்றவனாகின்றான்.

முன்பு பல சுலோகங்களில் சொல்லப்பட்ட கருத்தே இங்கும் சொல்லப்படுகின்றது. புலன்களின் செயலும் மனதும் இறைவனையே நோக்கி அமைதல் வேண்டும். (94)

अतिमृदुलौ मम चरणावतिकठिनं ते मनो भवानीश ।
इति विचिकित्सां संत्यज शिव कथमासीद्गिरौ तथा वेशः ॥

அதிம்ருதுளௌ மம சரணா-
 வதிகடினம் தே மனோ பவானீஶ ।
இதி விசிகித்ஸாம் ஸந்த்யஜ
 ஶிவ கதமாஸீத் கிரௌ ததா வேஶ: ॥

भवानीश-பார்வதீபதியான ஈச, मम चरणौ-என்கால்கள் अतिमृदुलौ-மிகவும் மென்மையானவைகள், ते मनः-உன் மனம், अतिकठिनं-மிகவும் முரடானது, इति विचिकित्सां संत्यज-என்ற ஸந்தேகத்தை விட்டுவிடு. शिव-மங்களரூபியே तथा- அவ்விதமான (கரடுமுரடான), गिरौ-மலையில், कथं-எப்படி, वेश आसीत्-பிரவேசம் ஏற்பட்டது.

பார்வதி தேவியின் கணவ! "எனது பாதங்கள் மிருதுவானவை. உனது இதயம் கடினமானது" என்ற எண்ணத்தை விட்டுவிடுவாயாக! சிவனே, நீ ஏன் மலையில் வசிப்பதை ஏற்றுக் கொண்டாய்?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இங்கும் முன்பு சொல்லிய கோரிக்கையே பக்தனால் வற்புறுத்தப்படுகின்றது. அவனது இதயம் மிகவும் கடினமானதென்றும் தன் பாதங்கள் மிருதுவானதெனவும் கொண்டு அதில் புக மறுப்பது கூடாது. (95)

धैर्याङ्कुशेन निभृतं रभसादाकृष्य भक्तिशृङ्खलया ।
पुरहर चरणालाने हृदयमदेभं बधान चिद्यन्त्रैः ॥ ९६ ॥

தைர்யாங்குசேன நிப்ருதம்
ரபஸாதாக்ருஷ்ய பக்தி ச்ருங்கலயா ।
புரஹர சரணாலானே
ஹ்ருதயமதேபம் பதாந சித்யந்த்ரை: ॥

पुरहर-முப்புரங்களையெரித்த ஈசுவர, **हृदयमदेभं**-மனமாகிய மதயானையை, **धैर्याङ्कुशेन**-தைரியமாகிற ஈட்டியால் **रभसात्**-வேகமாய், **आकृष्य**-இழுத்து, **भक्तिशृङ्खलया**-பக்தியாகிய சங்கிலியால், **चरणालाने**-திருவடிகளாகிற யானை கட்டும் ஸ்தம்பத்தில், **चिद्यन्त्रैः**-ஞானமாகிற உபாயங்களால் **निभृतं**-அசையாமல் இருக்கும்படி, **बधान**-கட்டும்.

முப்புரங்களை அழித்தவனே, என் இதயமென்னும் யானையை தங்கள் பாதமென்னும் கட்டுமுளையில் கட்டிவையுங்கள். அதை தைரியம் என்னும் வலிவுடன் வேகமாக இழுத்து பக்தி என்னும் தளையால் பிணித்து, அறிவென்னும் இயந்திரம் கொண்டு அது திரியாமல் அதைப்பிணைக்கவேண்டும்.

இதிலும் அடுத்த பாட்டிலும் இதயம் ஒரு யானையுடன் ஒப்பிடப்படுகின்றது. இந்த முரட்டு யானை பிடிக்கப்பட்டு கட்டுப் பாட்டில் வைக்கப்படவேண்டும். இறைவன் ஒருவனே அதைச் செய்யக்கூடும். (96)

प्रचरत्यभितः प्रगल्भवृत्त्या मदवानेष मनःकरी गरीयान् ।
परिगृह्य नयेन भक्तिरज्ज्वा परम स्थाणु पदं दृढं नयामुम् ॥

ப்ரசரத்யபித: ப்ரகல்ப வ்ருத்த்யா
மதவானேஷ மந:கரீ கரீயான் ।
பரிக்ருஹ்ய நயேன பக்தி ரஜ்ஜ்வா
பரம ஸ்த்தாணு பதம் த்ருடம் நயாமும் ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

परम-அளவற்ற ரூபமுடையவரே, **मदवान्**-மதத்துடன் கூடிய, **गरीयान् एष मनःकरी**-மனமாகிற இந்தப் பெரிய யானை, **प्रगल्भवृत्त्या**-முரட்டு சுபாவத்தால், **अभितः**-நாலா பக்கங்களிலும், **प्रचरति**-அலைகிறது. **अमुं**-இந்த மத யானையை, **भक्तिरज्ज्वा**-பக்தியாகிற கயிறுல், **परिगृह्य**-ஸ்வாதீனம்செய்து, **नयेन** - நயமாக, **दृढं**-கெட்டியாய், **स्थाणु पदं**-நிலையான இடத்தை **नय**-அடையச்செய்.

தலைவர்க்கும் தலைவ! இந்த மனமென்னும் யானை மதம் பிடித்து, பலத்துடன் பல அட்டூழியங்களைச்செய்கின்றது. எல்லா திக்குகளிலும் திரிகின்றது. அதை பக்தி யென்னும் கயிற்றுல் கட்டி, நயமாக நிலையான இடத்திற்கு இழுத்துச் செல்வாயாக!

மனமென்னும் யானை, முரடானது. தன் வழிச்செல்வது, பக்தியென்னும் தளையால் கட்டப்பட்டு, இறைவனடிகளுக்கு இழுத்துச் செல்லப்பட்டு அது நிலைநிறுத்தப்படவேண்டும். ஸ்தாணு என்பது சிவபெருமானின் பெயர்களில் ஒன்று. (97)

सर्वालङ्कारयुक्तां सरलपदयुतां साधुवृत्तां सुवर्णां
सद्भिः संस्तूयमानां सरसगुणयुतां लक्षितां लक्षणाढ्याम् ।
उद्यद्भूषाविशेषामुपगतविनयां द्योतमानार्थरेखां
कल्याणीं देव गौरीप्रिय मम कविताकन्यकां त्वं गृहाण ॥

ஸர்வாலங்கார யுக்தாம் ஸரள பத யுதாம் ஸாது
வ்ருத்தாம் ஸுவர்ணாம்
ஸத்பி: ஸம்ஸ்தூயமாநாம் ஸரஸகுண யுதாம்
லக்ஷிதாம் லக்ஷணாட்யாம் ।
உத்யத் பூஷா விஶேஷாமுபகத விநயாம்
த்யோதமாநார்த்த ரேகாம்
கல்யாணீம் தேவ கௌரீப்ரிய மம கவிதா
கந்யகாம் த்வம் க்ருஹாண ॥

देव-பிரகாசமானவரே, **गौरीप्रिय**-பார்வதியிடம் அன்பு கொண்ட பரமேச்வர, **सर्वालङ्कारयुक्तां**-உபமானம் முதலிய எல்லா அலங்காரங்களுடன் (எல்லாவிதமான அலங்காரங்களுடன்) கூடியதும், **सरलपदयुतां**-சுலபமாக அறியக்கூடிய

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அர்த்தங்களுள்ள பதங்களையுடையதும் (மெதுவான நடையையுடையவளும்), **साधुवृत्तां**-சிறந்த விருத்தங்கள் உள்ளதும் (நல்ல நடத்தையுடையவளும்), **सुवर्णां**-நல்ல எழுத்துக்களுடன் கூடியதும் (நல்ல ரூபத்தையுடைய வளும்), **सद्भिः संस्तूयमानां**-ஸாதுக்களால் கொண்டாடக் கூடியதும், **सरसगुणयुतां**-சிருங்காரம் முதலிய ரஸங்களுட னும் சிறந்த குணங்களுடனும் கூடியதும், **लक्षितां**-ப்ரதி பாதனம் பண்ணக்கூடிய நாயகனையுடையதும் (கன்னி கையை அபேக்ஷிக்கிறவர்களால் நிச்சயிக்கப்பட்டவளும்.) **लक्षणाढ्यां**-நல்ல லக்ஷணங்களையுடையதும், **उद्यद्भूषाविशेषां**-சப்தாலங்காரச் சிறப்புள்ளதும் (ஒளியுள்ள ஆபரணமணிந்த வளும்), **उपगतविनयां**-கவியின் அடக்கமுள்ளதும் (அடக்க முள்ளவளும்), **द्योतमानार्थरेखां**-அனேக அர்த்தங்களால் பிர காசிப்பதும் (பாக்ய ரேகைகளுடன் விளங்குபவளும்), **कल्याणीं**-மங்களம் தருவதும் (மங்களரூபியாயும்) ஆன, **मम** என்னுடைய, **कविताकन्यकां**-கவிதையாகிற கன்னிகையை **त्वं**-நீ, **गृहाण**-ஏற்றுக்கொள்.

கௌரியின் அன்ப, இறைவ, அலங்காரங்கள் நிறைந்து கம்பீர நடையுடனமர்ந்து, தவத்தில் பழக்கம் பெற்று, அழகு நிறைந்து சிறந்த மணமகளாக உள்ள என் கவிதை என்னும் பெண்ணை ஏற்றுக்கொள்வாயாக. அவளுக்கு நல்ல சீலங்களும் ஆபரணங்களும் உண்டு. அவள் பெண்மை நிறைந்து, கையில் நல்ல அதிர்ஷ்ட ரேகைகளையும் பெற்றிருக்கின்றாள். அவள் மங்களம் நிறைந்தவள்.

தகப்பன் தன் மகளைத் தான் தேர்ந்தெடுத்த மணமகனுக்குக் கொடுப்பதைப்போல கவி தன் கவிதையை இறைவனுக்கு ஒப்படைக்கின்றார். இந்த நூலிற்குப் பொருந்தும் சிறப்புகள்: எல்லா அலங்காரங்களும் (அணிகளும்) இதில் உள்ளன. சொற்கள் அழகாக அமைகின்றன, அரிய சந்தங்கள் வைக்கப் பட்டுள்ளன. அழகாக அமைந்திருப்பதால் புலவர்களின் புகழிற்கு உரியது. இதில் பல இரசங்களும் உள்ளன. அதன் பயனும் நோக்கும் அரியவை. பணிவையும் குறிக்கின்றது. ஆழ்ந்த கருத்துகளும் குறிப்பிடும் பொருள்களும் அமைகின்றன. படிப் போருக்கு மங்களத்தை உண்டாக்கவல்லது. (98)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

इदं ते युक्तं वा परमशिव कारुण्यजलधे
गतौ तिर्यग्रूपं तव पदशिरोदर्शनधिया ।
हरिब्रह्माणौ तौ दिवि भुवि चरन्तौ श्रमयुतौ
कथं शंभो स्वामिन्कथय मम वेद्योऽसि पुरतः ॥ ९९ ॥

இதம் தே யுக்தம் வா பரமஶிவ காருண்ய ஜலதே
கதௌ திர்யக்ரூபம் தவ பத ஶிரோ தர்ஶனதியா ।
ஹரி ப்ரஹ்மாணௌ தௌ திவி புவி சரந்தௌ ச்ரமயுதௌ
கதம் ஶம்போ ஸ்வாமின் கதய மம வேத்யோऽஸி புரத: ॥

परमशिव-பரமேச்வர कारुण्यजलधे-கருணைக்கடலே, तव-உம்முடைய, पदशिरोदर्शनधिया-கால், தலை இவைகளைப் பார்க்க வேண்டுமென்கிற கருத்தினால், तिर्यग्रूपं-வராஹம், பக்ஷி இந்த ரூபங்களை, गतौ-அடைந்த, तौ-அந்த, हरिब्रह्माणौ-விஷ்ணுவும் பிரம்மாவும், दिवि भुवि चरन्तौ-ஆகாயத்திலும் பூமியிலும் ஸஞ்சரித்துக்கொண்டு, श्रमयुतौ-சிரமத்தையடைந்தார்கள். इदं-இது, ते युक्तं वा-உமக்குத் தக்கதுதானா? शम्भो - மோக்ஷஸுகத்தையளிக்கிறவரே, स्वामिन्-ஸர்வலோக நாயக, मम पुरतः-என் முன்னாலே, कथं-எப்படி वेद्योऽसि-அறியக்கூடியவராகிறீர்? कथय-சொல்லும்.

பரமாகிய சிவனே! கருணைக்கடலே, உனது அடிமுடிகளைக் காண பிரம்மா விஷ்ணுக்கள், மனிதனினும் தாழ்ந்த உருவங்களை எடுத்துக்கொண்டு, ஆகாயத்தில் தாவியும், நிலத்தைக்கீண்டியும் சென்று துன்புற்றார்கள். இது உனக்கு முறையா? ஓ சம்பூ, தலைவ! உடனடியாக நான் உன்னை தெரிந்துகொள்வதெப்படி?

இங்கும் அடிமுடி காணாது விஷ்ணு பிரம்மா இவர்கள் திகைத்தது குறிக்கப்படுகின்றது. (99)

स्तोत्रेणालमहं प्रवच्मि न मृषा देवा विरिञ्चादयः
स्तुत्यानां गणनाप्रसङ्गसमये त्वामग्रगण्यं विदुः ।
माहात्म्याग्रविचारणप्रकरणे धानातुषस्तोमव-
द्धूतास्त्वां विदुरुत्तमोत्तमफलं शंभो भवत्सेवकाः ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்தோத்ரேணாலமஹம் ப்ரவச்மி ந ம்ருஷா தேவா
விரிஞ்சாதய:
ஸ்துத்யானாம் கணனா ப்ரஸங்க ஸமயே
த்வாமக்ரகண்யம் விது: ।
மாஹாத்ம்யாக்ர விசாரணப்ரகரணே தானாதுஷ ஸ்தோமவத்
தூதாஸ்த்வாம் விதுருத்தமோத்தம பலம்
ஶம்போ பவத்ஸேவகா: ॥

शम्भो-அழிவற்ற சுகத்தைக் கொடுக்கக்கூடிய ஈச்வர, **भवत्सेवकाः**-உம்முடைய பக்தர்களான, **विरिञ्चादयः**-பிரம்மா முதலிய, **देवाः**-தேவர்கள், **स्तुत्यानां गणनाप्रसङ्गसमये**-புகழத் தக்கவர்களை எண்ணும் ஸந்தர்ப்பம் நேரும்போது **त्वामग्र-गण्यं विदुः**-உம்மைத்தான் முதல்வராக அறிகிறார்கள். **माहात्म्याग्रविचारणप्रकरणे**-உயர்ந்த முத்தொழிலிலும் ஸாமர்த்திய மென்ற மகிமையை எண்ணுகிற ஸமயத்தில், **धानातुषस्तोमवत्** பொரியின் பதரின் குவியல்போல், **धूताः**-போக்கடிக்கப் பட்டவர்களாய், **त्वां**-உம்மை, **उत्तमोत्तमफलं**-ஸர்வோத்தம பலமாக, **विदुः** அறிகிறார்கள். **अहं**-நான், **मृषा न प्रवच्मि**-பொய் பேசவில்லை. **स्तोत्रेणालम्**-ஸ்தோத்திரம் செய்வது போதும்.

ஓ சம்பூ! உனது பணியாட்களான பிரம்மா முதலிய தேவர்கள் புகழத்தக்கவர்களைப்பற்றிப் பேசும்பொழுது உன்னையே முதல்வனாக உணர்கிறார்கள்! பெரியோர்களில் சிறந்த மஹிமையைப்பற்றி விசாரிக்கும்பொழுதும் அவர்கள் மணியை மூடியிருக்கும் உமியைப்போன்றாகின்றார்கள். அவர்கள் நீயே சிறந்த பயன் என்பதை அறிகின்றார்கள். நான் பொய்பேசவில்லை. உன்னை நான் எப்படிப் புகழ்வது?

இங்கு இந்த நூல், சிவனே பரம்பொருள் என்னும் துணிவுடன் முடிகின்றது. தேவர்கள் குழாத்தில் சுலபமாக இவரே முதல்வராக ஏற்றுக்கொள்ளப்படுகின்றார். அவர் பெருமையை உரைக்கப்புகழும் உதவுவதன்று. அவன் புகழைச்சொல்லவும் அவன் அருள் வேண்டும்.

(100)

ஸ்ரீ சிவானந்தலஹரீ முற்றும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ श्रीः ॥

॥ श्लोकानुक्रमणिका ॥

ஸ்லோகம்	பக்கம்	ஸ்லோகம்	பக்கம்
अ		**ए**	
अक्षतैर्धवलैर्दिव्यैः	90	एकेन मुद्रां परशुं	10
अगौरगात्रैरललाट	16	एलाशुण्ठीसहितं	102
अत्यर्थं राजते या	41	**क**	
अद्राक्षमक्षीणदया	3	कण्ठाश्लेषार्थमाप्ता	52
अपारकारुण्यसुधा	5	कर्पूरचूर्णं कपिलाज्य	95
अस्तोकस्तोत्रशस्त्रैः	62	कलाभिरिन्दोरिव	7
आ		कान्त्या निन्दितकुन्द	15
आकाशश्चिकुरायते	127	कुर्वन्निर्वाणमार्ग	27
आगत्य मृत्युञ्जय	80	कूश्माण्डवार्ताक	98
आत्मप्रेम्णा भवान्या	47	केवलमतिमाधुर्यं	99
आनन्दायेन्दुकान्तो	60	कैलासे कमनीयरत्न	79
आनीतेनातिशुभ्रेण	88	क्रुध्यत्यद्धा ययोः स्वां	37
आरभ्य स्मरजयिनः	75	क्रुध्यद्गौरीप्रसादा	29
आलेपवन्तं मदनाङ्ग	11	**क्ष**	
उ		क्षोणी यस्य रथो	121
उपासकानां त्वमुमा	20	**ख**	
उपासकानां यदुपासनीयं	1	खट्वाङ्गोदग्रपाणेः	36
उपासते यं मुनयः	14	**ग**	

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஶ்லோகம்	பக்கம்
गगनधुनीविमलजलैः	105
गजवदनस्कन्दधृते	93
गुडदधिसहितं	85
गोविन्दादधिकं न	126
च	
चण्डीवक्त्रार्पणेच्छोः	35
चतुश्चत्वारिंशद्विलस	113
चम्पकपङ्कजकुरवक	91
चारुस्मितं सोमकला	13
ज	
जगत्त्रयीख्यात	87
जम्बीरनीराञ्चित	103
त	
तत्त्वार्थमन्तेवसतां	9
द	
दीव्यन्मूर्धेन्दुखण्डः	76
देयासुर्मूर्ध्नि राज	24
दैवतानि कति सन्ति	17
न	
नमो गौरीशाय	110
नागररामठयुक्तं	103
नानाहेमविचित्राणि	88
नीराजनं निर्मलदीप्ति	107
न्यक्कुर्वन्नुर्वराभृत्	43

ஶ்லோகம்	பக்கம்
प	
पंचास्त्रशान्त पंचास्य	86
पदे पदे सर्वतमो	109
पुन्नागनीलोत्पल	108
पुन्नागमल्लिकाकुन्द	106
पुष्टावष्टम्भभूतौ	58
पृथुकुचभर	74
प्रह्वप्राचीनबर्हिः	66
प्रातर्लिङ्गमुमापतेः	114
प्रौढप्रेमाकुलाया	51
भ	
भासा यस्य त्रिलोकी	44
भास्वन्मौक्तिकतोरणे	82
भूत्यै दृग्भूतयोः	31
भूम्ना यस्यास्तसीम्ना	71
म	
मञ्जीरीभूतभोगि	61
मणिमुकुरे निष्पटले	95
मनोज्ञरम्भानव	101
मन्दारमल्लीकरवीर	83
मन्दारहेमाम्बुज	104
ममाद्य देवो वटमूल	6
माणिक्यकेयूरकिरीट	92
माणिक्यपादुकाद्वन्द्वे	91

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஶ்லோகம்	பக்கம்	ஶ்லோகம்	பக்கம்
मुक्तातपत्रं शशिकोटि	94	विष्णुब्रह्मसुराधिप	134
मुक्तामुक्ते विचित्रा	55	विष्णुर्यस्य सहस्रनाम	129
मुदिताय मुग्धशशिना	18	विष्ण्वाद्याश्च पुरत्रयं	120
मौक्तिकचूर्णसमेतैः	106	वैयाघ्री यत्र कृत्तिः	57
य		व्यालम्बिनीभिः परितो	20
यस्ते प्रसन्नामनुसं	21	**श**	
यस्यासन्धरणीजला	132	शर्करामिलितं स्निग्धं	99
याः स्वस्यैकांशपाता	64	शीतलं मधुरं स्वच्छं	98
युग्मे रुक्माब्जपिङ्गे	32	शौरिं सत्यगिरं	130
येनापादितमङ्गजाङ्ग	124	श्रीगन्धं घनसार	89
येषां रागादिदोष	69	**स**	
यो भासा भात्युपान्त	39	संसारे जनिताप	111
र		सत्याः सत्याननेन्दा	67
रक्षोवक्षोविफालं	54	सद्योजाताख्यमास्यं	46
रम्भाचूत	100	साम्बो नः कुलदैवतं	116
राजान्नं मधुरान्वितं	97	सुगन्धिपुष्पप्रकरैः	84
व		सुहितगिरिसुताभ्यः	73
वक्त्रेन्दोर्दन्तलक्ष्म्या	49	सौधे रत्नमये	112
वर्तित्रयोपेतमखण्ड	96	स्वदक्षजानुस्थित	8
विद्राविताशेषतमो	4	**ह**	
विरिञ्चिमुख्यामर	107	हिंगूजीरकसहितं	102
विशुद्धमुक्ताफल	89	हिमाम्बुवासितैस्तोयैः	85

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ श्रीः ॥

॥ श्लोकानुक्रमणिका ॥

சுலோகம்	பக்கம்
अ	
अङ्गे शृङ्गारयोनेः	159
अजं शाश्वतं कारणं	215
अट्टहासभिन्नपद्म	225
अत्यन्तं भासमाने	170
अथ कथमपि मद्रसनां	228
अन्तःकरणविशुद्धिं	236
अम्भोजाभ्यां च रम्भा	149
अस्तोपाधिः समस्त	236
आ	
आखण्डलमद	229
आतङ्कावेगहारी	140
आमुक्तानर्घरत्न	161
आरूढः प्रौढवेग	148
आश्लेषेष्वद्रिजायाः	164
आसीनस्याधिपीठं	156
इ	
इभचर्माम्बरं	230
ई	
ईशे गिरीश नरेश	230
उ	
उमया दिव्यसुमंगल	231
ऊ	
ऊरीकुरु मामज्ञ	231
ऋ	
ऋषिवरमानस	232
ॠ	
ॠक्षाधीशकिरीट	232
ऌ	
ऌवर्णद्वन्द्वमवृन्त	233
ए	
एकं सदिति श्रुत्या	233
ऐ	
ऐक्यं निजभक्तेभ्यो	234
ओ	
ओमिति तव निर्देष्ट्री	234
ओमित्येतद्यस्य	188
औ	
औदास्यं स्फुटयति	235
क	
कण्ठप्रान्तावसज्ज	143
करुणावरुणालय	237
कर्णालंकारनाना	169
कल्याणं नो विधत्तां	137

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சுலோகம்	பக்கம்
कान्त्या संफुल्लमल्ली	179
कालभैरवाष्टकं	226
कालारातेः कराग्रे	141
क्ष	
क्षणमिव दिवसान्नेष्यति	257
क्षिप्रं लोके यं भजमानः	196
ख	
खलसहवासं विघटय	238
ग	
गरलं जगदुपकृतये	238
गर्भान्तस्थाः प्राणिन	192
गिरीशं गणेशं गले	213
घ	
घनसारगौरगात्र	239
च	
चपलं मम हृदयकपिं	240
चेतो जातप्रमोदं	184
छ	
छन्नेऽविद्यारूपपटेनैव	207
छाया स्थाणोरपि तव	241
ज	
जय कैलासनिवास	241
जानुद्वन्द्वेन मीन	160
झ	
झणुतकझंकिणु	242

சுலோகம்	பக்கம்
ज्ञ	
ज्ञप्तिः सर्वशरीरे	239
ज्ञांशीभूतान्प्राणिन	204
ज्ञानं विक्षेपावृतिरहितं	242
ट	
टङ्कारस्तव धनुषो	243
ठ	
ठाकृतिरिव तव माया	244
ड	
डम्बरमम्बुरुहामपि	244
ढ	
ढक्काक्षसूत्रशूल	245
ण	
णाकारगर्भिणी चेच्छुभदा	246
णानेत्येवं यन्मनुं	197
त	
तप्तस्वर्णच्छाय	198
तव मन्वतिसंजपतः	246
तेजस्स्तोमैरङ्गद	194
त्वत्तो जगद्भवति	219
थ	
थूत्कारस्तस्य मुखे	247
द	
दध्याज्यादिद्रव्यक	195
दयनीयश्च दयालुः	247

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சுலோகம்	பக்கம்
दिव्याकल्पोज्वलानां	180
देवराजसेव्यमान	220
देवस्याङ्काश्रयायाः	142
देवेभ्यो दानवेभ्यः	185
ध	
धर्मसेतुपालकं	223
धर्मस्थापनदक्ष	248
धाम्नां धाम प्रौढ	203
ध्यायन्नित्थं प्रभाते	186
न	
ननु ताडितोऽसि धनुषा	248
न भूमिर्न चापो	215
नमस्ते नमस्ते विभो	216
नम्राङ्गाणां भक्तिमतां	189
नामीचक्रालवाला	163
निर्यद्दानाम्बुधारा	145
नृत्तारम्भेषु	152
न्यस्तो मध्ये सभायाः	155
प	
परात्मानमेकं	214
परिमातुं तव मूर्तिं	249
पशूनां पतिं	211
प्रज्ञामात्रं प्रापित	205
प्रत्याहारप्राण	203

சுலோகம்	பக்கம்
प्रभो शूलपाणे विभो	217
फ	
फलमिह नृतया	250
ब	
बलमारोग्यं चायु	250
भ	
भगवन् भर्ग भयापह	251
भद्रारूढ भद्रद	191
भानुकोटिभास्वरं	221
भुक्तिमुक्तिदायकं	222
भूतसंघनायकं	225
म	
मत्तो मारो यस्य	200
महिमा तव नहि माति	251
महेशं सुरेशं	212
मुक्तामाणिक्यजालैः	153
मूर्तिश्छायानिर्जित	197
मेधावी स्यादिन्दुवतंसं	202
मोहध्वस्त्यै वैणिक	190
य	
यः पुण्यैर्देवतानां	146
यन्नादो वेदवाचां	158
यमनियमादिभिरंगैः	252
यस्मिन्नर्धेन्दुमुग्ध	174

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சுலோகம்	பக்கம்
यस्य प्राहुः स्वरूपं	138
यस्याज्ञानादेव	206
याभ्यां कालव्यवस्था	171
येन ज्ञातेनैव समस्तं	199
यैषा रंग्यैर्मत्तमयूरा	210
र	
रज्जावहिरिव शुक्तौ	252
रत्नपादुकाप्रभा	224
ल	
लब्ध्वा भवत्प्रसादाच्चक्रं	253
व	
वक्त्रं धन्याः संसृति	193
वक्राकारः कलंकी	178
वसुधातद्धरतच्छय	253
वामं वामाङ्कगाया	173
वामाङ्के विस्फुरन्त्याः	165
वेणीसौभाग्य	150
श	
शंभो महेश करुणामय	218
शर्व देव सर्वोत्तम	254
शिवाकान्त शंभो	213

சுலோகம்	பக்கம்
शूलटंकपाशदण्ड	222
शृङ्गाराकल्पयोग्यैः	176
ष	
षड्रिपुषडूर्मि	254
स	
संध्याकालानुरज्य	162
संभ्रान्तायाः शिवायाः	166
सत्यं ज्ञानमनन्तं	255
स्तम्भैर्जम्भारिरत्न	154
स्थानप्राप्त्या स्वराणां	183
स्वर्गौकस्सुन्दरीणां	181
स्वापस्वप्नौ जाग्र	208
स्वामिन्गङ्गामिव	175
ह	
हाहाहूहूमुखसुर	256
हाहेत्येवं विसाय	209
हृद्यैरद्रीन्द्रकन्या	168
ह्यम्भोराशौ संसृति	201
ळ	
ळादिर्नहि प्रयोग	256

———

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ श्रीः ॥

॥ श्लोकानुक्रमणिका ॥

சுலோகம்	பக்கம்
अ	
अङ्कोलं निजबीज	335
अतिमृदुलौ मम चरणौ	371
अमितमुदमृतं	344
अरहसि रहसि	346
अशनं गरलं फणी	364
असारे संसारे	274
आ	
आकाशेन शिखी	324
आकीर्णे नखराजि	315
आद्यायामिततेजसे	327
आद्याऽविद्या हृद्गता	368
आनन्दामृतपूरिता	319
आनन्दाश्रुभिरातनोति	336
आम्नायाम्बुधिमादरेण	304
आरूढभक्तिगुण	347
आशापाशक्लेशदुर्वासनादि	350
इ	
इदं ते युक्तं वा	375
उ	
उपेक्षा नो चेत् किं	276
ए	
एको वारिजबान्धवः	331

சுலோகம்	பக்கம்
एष्यत्येष जनिं मनो	356
क	
कञ्चित्कालमुमामहेश	358
कदा वा कैलासे	287
कदा वा त्वां दृष्ट्वा	289
करलग्नमृगः करीन्द्र	313
करस्थे हेमाद्रौ	290
करोमि त्वत्पूजां	286
कलाभ्यां चूडालंकृत	259
कल्याणिनं सरस	351
कारुण्यामृतवर्षिणं	323
किं ब्रूमस्तव साहसं	300
क्रीडार्थं सृजसि	342
ग	
गभीरे कासारे	270
गलन्ती शंभो	260
गांभीर्यं परिखापदं	310
गुहायां गेहे वा	273
घ	
घटो वा मृत्पिण्डो	266
छ	
छन्दःशाखिशिखान्वितै	314

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ச்லோகம்	பக்கம்
ज	
जडता पशुता कलंकिता	345
जननमृतियुतानां	360
जलधिमथनदक्षो	362
ज्वालोग्रः सकलामराति	298
त	
त्रयीवेद्यं हृद्यं	262
त्वत्पादाम्बुजमर्चयामि	293
त्वमेको लोकानां	280
द	
दुराशाभूयिष्ठे	281
दूरीकृतानि दुरितानि	369
ध	
धर्मो मे चतुरंघ्रिकः	306
धीयन्त्रेण वचोघटेन	308
धृतिस्तंभाधारां	283
धैर्याङ्कुशेन निभृतं	372
ध्यानाञ्जनेन समवेक्ष्य	348
न	
नतिभिर्नुतिभिस्त्वमीश	366
नरत्वं देवत्वं नगवन	271
नालं वा परमोपकारक	296
नालं वा सकृदेव देव	299
नित्यं योगिमनस्सरोज	355

ச்லோகம்	பக்கம்
नित्यं स्वोदरपूरणाय	330
नित्यानन्दरसालयं	317
नित्याय त्रिगुणात्मने	328
प	
पापोत्पातविमोचनाय	309
पूजाद्रव्यसमृद्धयो	363
प्रचरत्यभितः प्रगल्भ	372
प्रभुस्त्वं दीनानां	275
प्रलोभाद्यैरर्थाहरण	285
प्राक्पुण्याचलमार्ग	305
फ	
फलाद्वा पुण्यानां	279
ब	
बहुविधपरितोष	343
बाणत्वं वृषभत्वमर्धवपुषा	359
बुद्धिः स्थिरा भवितु	353
भ	
भक्तिर्महेशपद	352
भक्तो भक्तिगुणावृते	302
भूदारतामुदवह	349
भृङ्गीच्छानटनोत्कटः	321
म	
मनस्ते पादाब्जे	267
मा गच्छ त्वमितस्ततो	311

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஶ்லோகம்	பக்கம்
मार्गावर्तितपादुका	337
य	
यथा बुद्धिः शुक्तौ	269
यदा कृताम्भोनिधि	365
योगक्षेमधुरन्धरस्य	301
र	
रोधस्तोयहृतः श्रमेण	333
व	
वक्षस्ताडनमन्तकस्य	339
वक्षस्ताडनशंकया	341
वचसा चरितं वदामि	367
वटुर्वा गेही वा	272
वस्त्रोद्धूतविधौ	294
विरिञ्चिर्दीर्घायु	278
श	
शंभुध्यानवसन्त	316
शिव तव परिचर्या	361
स	
संध्या घर्मदिनात्ययो	326
संध्यारंभविजृंभितं	310
सदा मोहाटव्यां	282
सदुपचारविधिष्वनुबोधितां	354
सर्वालङ्कारयुक्तां	373
सहस्रं वर्तन्ते जगति	264
सा रसना ते नयने	370
सारूप्यं तव पूजने	291
सोमकलाधरमौलौ	370
स्तवैर्ब्रह्मादीनां	288
स्तोत्रेणालमहं प्रवच्मि	375
स्मृतौ शास्त्रे वैद्ये	265
ह	
हंसः पद्मवनं समिच्छति	332

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



ஸ்ரீ P.A.C. ராமசாமி ராஜா
ஸ்தாபகர்
ராம்கோ குரூப்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஒப்பாக்கப்படுகின்றார் இந்த விச்வரூப மயிலுக்கு ஆகாயமே முடி, பேடை பார்வதி, நர்த்தன அவை வேதாந்தம், ஸர்ப்பங்களே அணிகள், பிரணவமே குறி ஒலி.

இங்கு நீலகண்டன் என்பது நீலகண்டனையும், நீலக்கழுத்துடைய மயிலையும் குறிக்கின்றது. (53)

संध्या घर्मदिनात्ययो हरिकराघातप्रभूतानक-
ध्वानो वारिदगर्जितं दिविषदां दृष्टिच्छटा चञ्चला ।
भक्तानां परितोषबाष्पविततिर्वृष्टिर्मयूरी शिवा
यस्मिन्नुज्ज्वलताण्डवं विजयते तं नीलकण्ठं भजे ॥ ५४ ॥

ஸந்த்யா கர்ம திநாத்யயோ ஹரிகராகாதப்ரபூதாநக
த்வாநோ வாரித கர்ஜிதம் திவிஷதாம்
த்ருஷ்டிச்சடா சஞ்சலா ।
பக்தாநாம் பரிதோஷ பாஷ்பவிததிர் வ்ருஷ்டிர் மயூரீ ஶிவா
யஸ்மின் னுஜ்வல தாண்டவம் விஜயதே தம்
நீலகண்டம் பஜே ॥

सन्ध्या–ஸந்தியாகாலம், **घर्मदिनात्ययः**–கிரீஷ்ம காலத்தின் முடிவு (மழைகாலம்), **हरिकराघातप्रभूतानकध्वानः**–மஹாவிஷ்ணுவின் கையாலடிக்கப்பட்ட படகமென்ற வர்த்தியத்தின் பெரிய த்வனி **वारिदगर्जितं**–மேகநாதம், **दिविषदां दृष्टिच्छटा**-தேவதைகளின் பார்வைக்கூட்டம், **चञ्चला**-மின்னல் **भक्तानां**–பக்தர்களுடைய, **परितोषबाष्पविततिः**–ஆனந்தக் கண்ணீர், **वृष्टिः**–மழை, **शिवा**–அம்பிகை, **मयूरी**–பெண்மயில், **यस्मिन्**–எந்த ஈசுவரனிடத்தில் (எந்த மயிலினிடத்தில்), **उज्ज्वलताण्डवं**–பிரகாசமான நர்த்தனம், **विजयते**–பிரகாசிக்கிறதோ, **तं नीलकण्ठं**–அந்த நீலகண்டனை மயிலை, **भजे**–ஸேவிக்கிறேன்.

விஷ்ணு பறையடிப்பதாலுண்டாகும் ஓசை மேகங்களின் உருமலாகவும் (இடியாகவும்) தேவர்களின் பார்வையாகும் கூரொளி மின்னலாகவும் அடியார்களின் ஆனந்தக்கண்ணீர் மழை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யாகவும், பார்வதிதேவியார் பேடையாகவும் அமர, கோடையின் இறுதியில் மாலைப்பொழுதில் நீலகண்டனுடைய நர்த்தனம் நடைபெறுகின்றது. நான் அவரை வணங்குகின்றேன்.

சிவபெருமான் மாலையில் செய்யும் அபூர்வ நர்த்தனத்தின் ஓவியம் இங்குள்ளது. மயிலின் உபமானம் இங்கும் நீடிக்கப்பெறுகின்றது. மயில் ஆடும்பொழுது இடிக்கும் மேகம், மின்னல், மழை பேடை இவை உடனிருப்பவை. இறைவனின் விச்வநர்த்தனத்திற்கு, விஷ்ணுவின் பறை, அதைப்பார்க்கும் தேவர்களின் கூரொளி நோக்கு, அடியார்களின் ஆனந்தக்கண்ணீர், உமாதேவியார் இவர்கள் புடைசூழுகின்றன. (54)

आद्यायामिततेजसे श्रुतिपदैर्वेद्याय साध्याय ते
विद्यानन्दमयात्मने त्रिजगतः संरक्षणोद्योगिने ।
ध्येयायाखिलयोगिभिः सुरगणैर्गेयाय मायाविने
सम्यक्ताण्डवसंभ्रमाय जटिने सेयं नतिः शंभवे ॥ ५५ ॥

ஆத்யாயாமித தேஜஸே ச்ருதிபதைர் வேத்யாய
ஸாத்யாய தே
வித்யாநந்தமயாத்மனே த்ரிஜகத:
ஸம்ரக்ஷணோத்யோகிநே ।
த்யேயாயாகில யோகிபி: ஸுரகணைர் கேயாய மாயாவிநே
ஸம்யக் தாண்டவ ஸம்ப்ரமாய ஜடிநே ஸேயம் நதி:
ஶம்பவே ॥

आद्याय–உலகத்திற்கு முந்தியவரும், **अमिततेजसे**–அளவில்லாத தேஜஸ்ஸையுடையவரும், **श्रुतिपदैर्वेद्याय**–வேதவாக்கியங்களால் அறியக்கூடியவரும், **साध्याय**–பக்தர்களால் உபாஸிக்கக்கூடியவரும், **विद्यानन्दमयात्मने**–ஞானநந்தரூபியாயும், **त्रिजगतः संरक्षणोद्योगिने**-முவ்வுலகங்களையும் காற்கும் முயர்ச்சியுடையவரும், **अखिलयोगिभिः**–ஸமஸ்தமான யோகிகளாலும், **ध्येयाय**–தியானம் செய்யத்தக்கவரும், **सुरगणैः**–தேவ ஸமூகங்களால், **गेयाय**–கானம் செய்யத்தகுந்தவரும், **मायाविने**–மாயையை ஸ்வாதீனமாகக்கொண்டவரும், **सम्यक्**–

Sri Vidyabharathi Book Centre, Sringeri

 CC-O. In Public Domain. Digitized by eGangotri

ताण्डवसंभ्रमाय–சிலாக்கியமாக நர்த்தனம் செய்வதில் வேக முள்ளவரும், **जटिने**–ஜடைகளுடன் கூடியவரும், **शम्भवे**-க்ஷேமத்தையுண்டுபண்ணுகிறவருமான, **ते**–உமக்கு, **सेयं नतिः**–இந்த நமஸ்காரம் இருக்கட்டும்.

சடாதாரியே, முழுமுதற்காரணமே, எல்லையற்ற ஒளியே, வேத நூல்களால அறியப்படுபவனே! மூன்று உலகங்களையும் காக்கத்துணிந்தவனே! யோகிகளின் தியானப்பொருளே! தேவர்களின் கூட்டங்களால் புகழப்படுபவனே! மாயையைக் கையாளுபவனே! சிறந்த நர்த்தனத்தில் ஈடுபடுபவனே. சம்புவே உனக்கு என் நமஸ்காரங்கள்.

சம்புவின் நர்த்தனத்தினின்றே பிரபஞ்சம் தோன்றுகிறது. அதனாலேயே உலகம் நிலைக்கப்படுகின்றது அதனாலேயே உலகம் கரைக்கவும் படுகின்றது. அது உண்மையை மறைக்கவும், அருளைப்பொழியவும் செய்கின்றது. சிவனது ஐம்பணிகள் நர்த்தனத்தின் ஐம்பகுதிகளாகும், சிருஷ்டி (உளவாக்கல்) ஸ்திதி (நிலைத்தல்) ஸம்ஹாரம் (அழித்தல்) திரோதானம் (மறைத்தல்) அநுக்ரஹம் (அருளுதல்) நர்த்தனமே மாயை. அதனாலே அவர் மாயாவி என்றழைக்கப்படுகின்றார். சிவனே பல்லுயிருக்கும் நிலைக்களன். அவைகளின் மூலம். அவர் ஸத், சித், ஆனந்த மானவர். அவர் வேதங்களால் அறியப்படுபவர். அவரே பரம இலட்சியம். அவரையே யோகிகள் தியானம் செய்கின்றார்கள். தேவர்கள் அவர் புகழைப்பாடுகின்றார்கள் அவர் விசுவ நர்த்தனம் ஆபூர்வமானது அதுவே அனைவரையும் ஆக்கவும் காக்கவும் உள்ளது. (55)

नित्याय त्रिगुणात्मने पुरजिते कात्यायनीश्रेयसे
सत्यायादिकुटुम्बिने मुनिमनःप्रत्यक्षचिन्मूर्तये ।
मायासृष्टजगत्त्रयाय सकलाम्नायान्तसंचारिणे
सायंताण्डवसंभ्रमाय जटिने सेयं नतिः शंभवे ॥ ५६ ॥

நித்யாய த்ரிகுணாத்மநே புரஜிதே காத்யாயநீ ச்ரேயஸே
ஸத்யாயாதிகுடும்பிநே முனிமந: ப்ரத்யக்ஷ
சின்மூர்த்தயே ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மாயா ஸ்ருஷ்ட ஜகத்த்ரயாய ஸகலாம்நாயாந்த
ஸஞ்சாரிணே
ஸாயம் தாண்டவ ஸம்ப்ரமாய ஜடிநே ஸேயம்
நதி: ஶம்பவே ll

नित्याय-நாசமற்றவரும், त्रिगुणात्मने-முக்குண ரூபியாயும் (பிரம்ம விஷ்ணு ருத்ர ரூபியானவரும்), पुरजिते-த்ரிபுரர்களை ஜயித்தவரும் (ஸ்தூலம் ஸூக்ஷ்மம், காரணம் என்ற முப்புரங்களை ஜயித்தவரும்), कात्यायनीश्रेयसे-பார்வதியின் தவத்தின் பயனும், सत्याय-முக்காலங்களிலும் அழிவற்றவரும், आदिकुटुम्बिने-முதல் தம்பதிகளின் ரூபத்தையுடையவரும், मुनिमनःप्रत्यक्षचिन्मूर्तये-ரிஷிகளின் மனதுக்கு நேரில் புலப்படக்கூடிய ஞானரூபியாயும், मायासृष्टजगत्त्रयाय-தன் மாயையினால் உலகத்தைப்படைப்பவரும், सकलाम्नायान्तसंचारिणे-ஸகல உபநிஷத்துக்களால் அறியக்கூடியவரும், सायं ताण्डवसंभ्रमाय-ஸாயங்காலத்தில் நர்த்தனம் செய்வதில், பரபரப்புள்ளவரும், जटिने-ஜடாதரராயும், शम्भवे-ஸுகத்திற்குக் காரணருமான ஈச்வரன் பொருட்டு, सेयं नतिः-அப்படிப்பட்ட இந்த நமஸ்காரம் இருக்கட்டும்.

சம்பு, சடைகளை அணிந்தவனே, என்றுமுள்ளவனே, மூன்று குணங்களையும் பெற்றவனே, முப்புரங்களை வென்றவனே, உமையாருக்கு ஒன்றும் மதிப்பு உள்ளவனே. ஸத்தியமே முழுமுதலே, தவசிகளால் மனதில் அநுபவிக்கப்படும் பேரானந்தமே, மாயையால் மூவுலகங்களையும் அமைத்தவனே! வேதாந்தநூல்களின் பொருளே! மாலை நர்த்தனம் செய்து கொண்டிருப்பவனே, உனக்கே என் நமஸ்காரங்கள் உரியதாகட்டும்.

இங்கும் சிவபெருமானின் மாலை நர்த்தனத்தின் சித்திரம் வரையப்படுகின்றது, மகாதேவன், திசைகளைக் குறிக்கும் சடைகளை உடையவன். என்றுமுள்ளவனே நர்த்தனம் செய்கின்றான். அவன் உமையருகே நின்று ஆடுவதால் உலகை மாயையால் சிருஷ்டிக்கின்றான். அவரே முதல் அப்பர். பார்வதியை அம்மையாகவும், மஹேசுவரரை அப்பராகவும் சொல்லும் சுலோகமும் உண்டு. "மாதா ச பார்வதீதேவீ பிதா

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தேவோ மஹேசுவர: (माता च पार्वतीदेवी पिता देवो महेश्वरः) (அம்மையப்பரே உலகிற்கெல்லாம் அம்மையப்பர் என்றுணர்க) அவர் எங்கும் இருந்து, எதற்கும் மூலமாகவும், பெற்றோர் களாகவும் இருந்தாலும், அவரை அடைவது எளிதன்று. ஞானி களுக்கும் தவசிகளுக்குமே அவர் விளங்குபவர், அவரை வேதாந்தத்தால் அறியலாம். (56)

नित्यं स्वोदरपूरणाय सकलानुद्दिश्य वित्ताशया
व्यर्थं पर्यटनं करोमि भवतः सेवां न जाने विभो ।
मज्जन्मान्तरपुण्यपाकबलतस्त्वं शर्व सर्वान्तर-
स्तिष्ठस्येव हि तेन वा पशुपते ते रक्षणीयोऽस्म्यहम् ॥

நித்யம் ஸ்வோதர பூரணாய ஸகலானுத்திச்ய வித்தாசயா
வ்யர்த்தம் பர்யடனம் கரோமி பவத: ஸேவாம்
ந ஜானே விபோ ।
மஜ்ஜன்மாந்தர புண்ய பாக பலதஸ்த்வம் சர்வ ஸர்வாந்தர
ஸ்திஷ்டஸ்யேவ ஹி தேன வா பசுபதே தே
ரக்ஷணீயோஸ்ம்யஹம் ॥

पशुपते-அஞ்ஞானிகளைக்காப்பாற்றுகிறவரே ஹே ஈசு வரா, पशुपते- ஆத்மாக்களின் பதியே! नित्यं-எப்பொழுதும், स्वोदरपूरणाय-தன் வயிற்றை நிரப்புவதற்கு, वित्ता-शया-பணத்திலுசையால், सकलानुद्दिश्य-எல்லோரையும் உத்தேசித்து व्यर्थं-வீணுக, पर्यटनं करोमि-அலைகிறேன். विभो-ஸர்வவியாபக, भवतः सेवां न जाने-உம்முடைய ஸேவையை அறியவில்லை. शर्व-பக்தர்களின் பாபங்களைப் போக்குகிறவரே, मज्जन्मान्तरपुण्यपाकबलतः-என் அநேக ஜன்ம புண்ணிய பலத்தால், सर्वान्तरः-அந்தர்யாமியாக, त्वं-நீர் तिष्ठस्येव-இருக்கிறீர். तेन वा-அதிலுலேயாவது, अहं-நான், ते रक्षणीयोऽस्मि-உன்னுல் காப்பாற்றக்கூடியவனுகிறேன்.

ஆன்மாக்களின் தலைவனே! எங்கும் பரந்துள்ளவனே! சிவனே, செல்வம் திரட்ட பொருளை நாடவும், வயிற்றை நிறைக் கவும் வீணுக அலைவதையே காண்கின்றேன். உன் ஸேவையில்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அமர எனக்குத் தெரியவில்லை. எனது பூர்வ புண்ணியத்தின் பயனாய் நீ ஆளுபவனாய் என்னுள் அமர்ந்துள்ளாய், ஆகையால் என்னைக் காப்பாற்றுவதும் உன் பொறுப்பே ஆகின்றது,

இந்தப் பாவில், இழியோருக்குச் சேவை செய்து அவர்கள் தயவைப் பெறுவது வீணென்பது பன்முறையும் சொல்லப் படுகின்றது. அவர்கள் கொடுப்பதானாலும் பெறுவதாயினும் அதனால் பயனில்லை. அவர்களின் கொடை அவர்களுக்கும் அதைப் பெறுபவர்களுக்கும் நன்மை செய்வதில்லை, ஆனாலும் பெரும் பாலானவர்கள், பணவாசையால் அதிகாரமும் செல்வமும் பெற்று ள்ளோர்களைச் சுற்றியே ஆட்டம் போடுகின்றார்கள். அது மயக்கத் தால் ஆவது. இறைவன் கொடுத்துள்ள திறனையும் பொழுதையும் இப்படியா வீண்செய்வது? பூர்வபுண்ணிய பயனால் இந்நிலையிலும் சிலர் தேவனிருப்பதை உணர்கின்றார்கள். அவர்கள் நிறைவடைய வழி அவர்களுக்கு முன்னால் திறந்து கிடக்கின்றது அவர்கள் வழியை பிடித்துக்கொண்டால் அவர்கள் காப்பாற்றப்படுவார்கள்

एको वारिजबान्धवः क्षितिनभोव्याप्तं तमोमण्डलं
भित्त्वा लोचनगोचरोऽपि भवति त्वं कोटिसूर्यप्रभः ।
वेद्यः किं न भवस्यहो घनतरं कीदृग्भवेन्मत्तम-
स्तत्सर्वं व्यपनीय मे पशुपते साक्षात्प्रसन्नो भव ॥ ५८॥

ஏகோ வாரிஜ பாந்தவ: க்ஷிதி நபோ வ்யாப்தம்
தமோ மண்டலம்
பித்த்வா லோசந கோசரோ(அ)பி பவதி த்வம்
கோடிஸூர்யப்ரப: I
வேத்ய: கிம் ந பவஸ்யஹோ கநதரம்
கீத்ருக் பவேன்மத்தமஸ்
தத்ஸர்வம் வ்யபநீய மே பசுபதே ஸாக்ஷாத்
ப்ரஸந்நோ பவ II

पशुपते-ஜீவர்களின் தலைவா, **वारिजबान्धवः**-சூரியன், **एकः**-ஒருவனாகவே, **क्षितिनभोव्याप्तं**-பூமி ஆகாயம் இவைகளில் வியாபித்த, **तमोमण्डलं**-இருள் கூட்டத்தை, **भित्त्वा**-நாசம் செய்து, **लोचनगोचरोऽपि**-கண்ணுக்குப் புலப்படுபவனாகவும், **भवति**-ஆகிறான், **कोटिसूर्यप्रभः**-கோடி சூர்யர்களுக்கு ஸம

Sri Vidya Bharati Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மான காந்தியையுடைய, त्वं-நீர், वेद्यः किं न भवसि-ஏன் அறியக்கூடியவராக இல்லை? अहो-ஆச்சர்யம்! घनतरं-மிகவும் கெட்டியான, मत्तमः-என் அஞ்ஞானம், कीदृग्भवेत्-எவ்வளவு? तत्-ஆகையால், सर्वं-எல்லாவித மான அஞ்ஞான இருளையும், व्यपनीय-போக்கடித்து, मे-எனக்கு, साक्षात्प्रसन्नो भव-நேராக அனுக்ரகம் செய்யவேணும்.

ஆன்மாக்களின் தலைவ! காரிருளை நீக்கி, மண்ணிலும் விண்ணிலும் பரவுகின்றது கதிரவனொளி. ஆயின் உன் ஒளியோ கோடி சூரியர்களின் ஒளியிலும் பெரியது ஆயினும் நீ ஏன் வெளிப் படுத்திக்கொள்வதில்லை! என் இருட்டு (அஞ்ஞானம்) எவ்வளவு கடுமையானது! இதை முற்றுமாக அழித்தொழித்து எனக்கு முற்றுமாக விளங்குவாயாக!

பரம்பொருள் தானே ஒளிபெற்றது. அதை விளக்க வேறு ஒளி வேண்டப்படுவதன்று. மண்ணுலகில் சூரியன் தானே வெளிச்சமாய் விளங்குகின்றான். ஆத்மாவிற்கு எல்லையற்ற ஒளி உள்ளது. உலக வழக்கில் சொல்லுவதானால் ஆயிரம் சூரியர்களின் ஒளி அதற்கு உண்டென்று சொல்லலாம். ஆயினும் அது நமக்கு ஏன் வெளிப்படுவதில்லை. அது நமக்குப் புலனாவதில்லையென்று சொல்வதும் பிழையானதே. அது முற்றுமாக நமக்குப் புலனாவது மில்லை. அது வெளிப்பட்டும் வெளிப்படாமலும் இருப்பது இந்த மாற்றமான நிலை மாயை-அவித்யை-யால் ஏற்படுவது. பக்தன் இந்த மாயையை அகற்ற பரம்பொருளை வேண்டுகின்றான். (58)

हंसः पद्मवनं समिच्छति यथा नीलाम्बुदं चातकः
कोकः कोकनदप्रियं प्रतिदिनं चन्द्रं चकोरस्तथा ।
चेतो वाञ्छति मामकं पशुपते चिन्मार्गमृग्यं विभो
गौरीनाथ भवत्पदाब्जयुगलं कैवल्यसौख्यप्रदम् ॥ ५९ ॥

ஹம்ஸ: பத்மவநம் ஸமிச்சதி யதா நீலாம்புதம் சாதக:
கோக: கோகநதப்ரியம் ப்ரதிதிநம் சந்த்ரம் சகோரஸ்ததா ।
சேதோ வாஞ்ச்சதி மாமகம் பசுபதே சின்மார்க்க
ம்ருக்யம் விபோ
கௌரீநாத பவத்பதாப்ஜ யுகளம் கைவல்ய
ஸௌக்யப்ரதம் ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

पशुपते-மூடர்களையும் கார்க்கிறவரே. विभो-ஸர்வ வியாபக, गौरीनाथ-பார்வதீபதே. यथा-எவ்விதம், हंसः-அன்னபக்ஷி, पद्मवनं-தாமரையோடையையும், चातकः-சாதகபக்ஷி, नीलाम्बुदं-கருமேகத்தையும், कोकः-சக்ரவாக பக்ஷி, कोकनदप्रियं-ஸூரியனையும், चकोरः-சகோரபக்ஷி, चन्द्रं-சந்திரனையும், प्रतिदिनं-தினந்தோறும், समिच्छति-விரும்பு கிறதோ, तथा-அவ்விதம், मामकं चेतः-என் மனம், चिन्मार्गमृग्यं-உபநிஷத்துக்களால் தேடத்தக்கதும், कैवल्यसौख्यप्रदं-மோக்ஷஸுகத்தையளிக்கிறதுமான, भवत्पदाब्जयुगलं-உம்முடைய இருபாதகமலங்களை, वाञ्छति-ஆசைப்படுகிறது.

ஆத்மாக்களின் இறைவனே? எங்கும் பரந்து இருப்பவனே! பார்வதி தேவியின் கணவா! ஹம்ஸம் தாமரைக்குளத்தை நாடுவதைப்போலவும், சக்ரவாகப் பறவை சூரியனை நாடுவதைப் போலவும், சகோரப்பறவை சந்திரனை நாடுவதைப்போலவும், அறிவு வழியில் தேடப்படுவதும், பூர்ணமென்னும் ஆனந்தத்தைக் கொடுப்பதுமான உன் திருவடிகளை என் மனம் நாடி நிற்கின்றது.

பக்தனின் நாட்டத்தை விளக்க சில உபமானங்கள் தரப்படுகின்றன. மேலே குறிக்கப்பட்ட இணைகளில் ஒன்றின்றி ஒன்றில்லை. ஒன்றையொன்று பற்றி நிற்பவை. ஹம்ஸமும் குளமும், சாதகமும் மழை மேகமும், சக்ரவாகமும் சூரியனும், சகோரமும் சந்திரனும்; இங்கு நான்கு வகைப்பறவைகள் குறிக்கப் படுகின்றன. ஒவ்வொரு பறவையும் ஒவ்வொன்றை நாடி நிற்கின்றது. ஹம்ஸம் தாமரைத்தண்டைத் தின்று உயிர்வாழ்வது. சாதகப்பறவையோ மழைத்துளிகளைப்பருகி உயிர் வாழ்வது. சக்ரவாகப்பறவைகள் இரவில் துணை பிரிந்து நிற்பன. அவை சூரியனொளியை நாடிக்கூடுவன. சகோரப் பறவை சந்திரன் கிரணங்களைப்பருகி உயிர் வாழ்வதாகக் கொள்ளப்படுகின்றது. அதேவிதம் பக்தனின் இதயம் இறைவன் அடிகளை நம்பியே வாழ்வது. (59)

रोधस्तोयहृतः श्रमेण पथिकश्छायां तरोर्वृष्टितो
भीतः स्वस्थगृहं गृहस्थमतिथिर्दीनः प्रभुं धार्मिकम् ।
दीपं संतमसाकुलश्च शिखिनं शीतावृतस्त्वं तथा
चेतः सर्वभयापहं व्रज सुखं शंभोः पदाम्भोरुहम् ॥ ६० ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ரோதஸ்தோய ஹ்ருத: ஶ்ரமேண பதிகச்சாயாம்
தரோர் வ்ருஷ்டிதோ
பீத: ஸ்வஸ்த்த க்ருஹம் க்ருஹஸ்த்தமதிதிர் தீந:
ப்ரபும் தார்மிகம் ।
தீபம் ஸந்தமஸாகுலச்ச ஶிகினம் ஶீதாவ்ருதஸ்த்வம் ததா
சேத: ஸர்வபயாபஹம் வ்ரஜ ஸுகம் ஶம்போ:
பதாம்போருஹம் ॥

चेतः-மனமே! **यथा**-எவ்விதம், **तोयहृतः**-ஜலத்தின் வேகத்தினுல் இழுக்கப்பட்டவன், **रोधः**-கரையையும், **पथिकः**-வழிப்போக்கன், **श्रमेण**-களைப்பினுல், **तरोः**-மரத்தின், **छायां**-நிழலையும், **वृष्टितः भीतः**-மழையினின்றும் பயந்தவன், **स्वस्थगृहं**-நல்ல கிருஹத்தையும், **अतिथिः**-அதிதி (விருந்தாளி) **गृहस्थं**-கிருஹஸ்தனையும் (கிருஹஸ்தாச்ரமத்திலிருக்கும் புருஷனையும்), **दीनः**-எளியவன், **धार्मिकं प्रभुं**-தர்மசிந்தனை உள்ள தனவந்தனையும், **संतमसाकुलः**-நல்ல இருளால் கலங்கியவன், **दीपं**-தீபத்தையும், **शीतावृतः**-குளிரால் வருந்தியவன், **शिखिनं च**-அக்னியையும். (அடைகிருனே), **तथा**-அப்படி, **त्वं**-நீ, **सर्वभयापहं**-ஸகல பயத்தையும் போக்கடிக்கக் கூடிய, **सुखं**-சுகத்தையுண்டுபண்ணக் கூடிய, **शंभोः**-ஈசுவரனின், **पदाम्भोरुहं**-பாதாரவிந்தத்தை, **व्रज**-அடைவாய்.

தண்ணீரால் அடித்துக்கொண்டு போகப்பட்டவன் கரையேற முயலுவதைப்போலும், களைத்துப்போன வழிப்போக்கன் மரத்து நிழலை நாடுவதைப் போலவும், மழைக்குப் பயப்படுபவன் வீட்டிற்குள் நுழைய முயலுவதைப்போலவும், விருந்தாளி ஒரு இல்லறத்தானை நாடுவதைப் போலவும், எளியவன் செல்வம் நிறைந்த கொடையாளியைத் தேடுவதைப் போலவும், இருட்டில் அவதிப்படுபவன் விளக்கை நாடுவதைப் போலவும், பனியால் நடுங்குபவன் நெருப்பை வேண்டுவதைப் போலவும், ஏ மனமே, பயத்தை யெல்லாம் விரட்டியடிக்கும் சம்புவின் திருவடிகளை நாடியடைவாயாக.

ஆத்மா புகலிடம் தேடி இறைவனடிகளை அடைவதற்கு மேலும் உதாரணங்கள் கொடுக்கின்றூர். இவ்வடுக்குகளில் தேடுபவனும் தேடப் படுபவனும் உள்ளார்கள். வாழ்க்கையில் பல ஆபத்துக்களினின்றும் காப்பாற்றப்பட வேண்டியவர்களும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

காப்பாற்றுபவர்களும் உள்ளார்கள். நீரால் இழுத்துப் போகப் படுபவன் கரை சேர்ந்தால் ஆபத்தினின்று தப்புகின்றான். களைத்துப்போன வழிப்போக்கன் மரத்தின் நிழலை நோக்கியே போவான். மழையால் நனைபவன் நனையாதிருக்க இடத்தைத் தேடுகிறான். பசியுள்ளவன் பசியைப்போக்க ஒரு இல்லறத் தானிடம் வருகிறான். செல்வமும் கொடையுமுள்ளவனை எளிய வர்கள் சூழுகின்றார்கள். இருட்டில் திகைப்பவனுக்கு விளக்கு வேண்டியதாகின்றது. பனியால் நடுங்குபவன் நெருப்பின் சூட்டை நெருங்குகின்றான். பயத்தினின்று விடுபட விரும்புபவன் இறைவனிடம் சரண்புகவேண்டும். பயத்தினின்று விடுபட விரும்பாதவன் யார்? (60)

अङ्कोलं निजबीजसंततिरयस्कान्तोपलं सूचिका
साध्वी नैजविभुं लता क्षितिरुहं सिन्धुः सरिद्वल्लभम् ।
प्राप्नोतीह यथा तथा पशुपतेः पादारविन्दद्वयं
चेतोवृत्तिरुपेत्य तिष्ठति सदा सा भक्तिरित्युच्यते ॥ ६१ ॥

அங்கோலம் நிஜ பீஜ ஸந்ததிரயஸ்காந்தோபலம் ஸூசிகா
ஸாத்வீ நைஜ விபும் லதா க்ஷிதிருஹம் ஸிந்து:
ஸரித்வல்லபம் ।
ப்ராப்நோதீஹ யதா ததா பசுபதே: பாதாரவிந்தத்வயம்
சேதோவ்ருத்திருபேத்ய திஷ்ட்டதி ஸதா
ஸா பக்திரித்யுச்யதே ॥

इह–இவ்வுலகில், **निजबीजसन्ततिः**–தன் விதைகளின் கூட்டம், **अंकोलं**–அழிஞ்சிமரத்தையும், **सूचिका**–இரும்புக் கம்பி, **अयस्कान्तोपलं**–அயக்காந்தக் கல்லையும், **साध्वी**–பதிவிரதை, **नैजविभुं**–தன் கணவனையும், **लता**–கொடி, **क्षितिरुहं**–மரத்தையும், **सिंधुः**–நதி, **सरिद्वल्लभं**–ஸமுத்திரத்தை யும், **यथा**–எவ்விதம், **प्राप्नोति**–அடைகிறதோ, **तथा**–அவ்விதம், **चेतोवृत्तिः**–மனதின் வியாபாரம், **पशुपतेः**–ஈசுவரனின், **पादारविन्दद्वयं**–இரு திருவடித்தாமரைகளை, **उपेत्य**–அடைந்து, **सदा**–எப்பொழுதும், **तिष्ठति**–இருக்கிறது (என்ற), **सा**–அது, **भक्तिरिति उच्यते**–பக்தி என்றுசொல்லப் படுகிறது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அங்கோல மரத்தின் விதைகள் அடிமரத்தை நாடியே விழுவதைப்போலவும், இரும்பு ஊசி காந்தத்தைப் பற்றிக்கொள்வதைப்போலவும், கற்புடை மனைவி கணவனைப்பற்றிக்கொள்வதைப்போலவும். கொடி அயலிலுள்ள மரத்தில் பிணைந்துகொள்வதைப்போலவும், ஆறு கடலை நோக்கி ஓடுவதைப்போலவும், மனது இறைவனடியை விரைந்து பற்றிக்கொண்டு அங்கு நிலைப்பதுவே பக்தியாகும்.

சென்ற இரண்டு சுலோகங்களும் இதற்கு முன்னுரை. இதில் பக்தி விரிக்கப்படுகின்றது. இங்குள்ள உபமானங்கள் உயிருள்ளவும் இல்லவுமாகின்றன. இங்கு கீழுள்ளதிற்கு மேலுள்ள ஒரு துணை வேண்டப்படுவது. ஒரு இலட்சியத்தில் எப்படி விடாத பற்று இருக்கவேண்டுமென்பதற்கு இந்த ஒப்புமைகள் கொடுக்கப்படுகின்றன. கடவுளிடத்து இந்த ஒருமைப்பாடு அமைவதே பக்தியாகின்றது. (61)

आनन्दाश्रुभिरातनोति पुलकं नैर्मल्यतश्छादनं
वाचाशङ्खमुखे स्थितैश्च जठरापूर्तिं चरितामृतैः ।
रुद्राक्षैर्भसितेन देव वपुषो रक्षां भवद्भावना-
पर्यङ्के विनिवेश्य भक्तिजननी भक्तार्भकं रक्षति ॥ ६२ ॥

ஆநந்தாச்ருபிராதனோதி புளகம் நைர்மல்யதச்சாதநம்
வாசாஶங்கமுகே ஸ்திதைச்ச ஜடராபூர்திம் சரித்ராம்ருதை: ।
ருத்ராக்ஷைர் பஸிதேன தேவ வபுஷோ ரக்ஷாம் பவத்பாவனா
பர்யங்கே விநிவேச்ய பக்தி ஜனனீ பக்தார்பகம் ரக்ஷதி ॥

देव–ஹே தேவனே, **भक्तिजननी**-பக்தியாகிற தாய், **भक्तार्भकं**-பக்தனாகிற குழந்தையை, **भवद्भावनापर्यङ्के**–உமது த்யானமாகிற கட்டிலில், **विनिवेश्य** - படுக்கவைத்து, **आनन्दाश्रुभिः** ஆனந்தக்கண்ணீரால், **पुलकं**-மயிர்க்கூச்சலையும், **नैर्मल्यतः**-சுத்தத்தன்மையால், **छादनं**–வஸ்திரம் போர்த்துவதையும், **वाचाशंखमुखे स्थितैः**வேதவாக்யங்களாகிற சங்கின் முகத்திலிருக்கிற, **चरितामृतैः**–சரித்திரமாகிற பாலால், **जठरापूर्तिं** வயிற்றை நிரப்புவதையும், **रुद्राक्षैः भसितेन**-ருத்திராக்ஷங்களாலும் விபூதியாலும், **वपुषो रक्षां**–சரீரத்தைக் காப்பாற்றுவதையும், **आतनोति**-செய்கிறாள். **रक्षति**–காப்பாற்றுகிறாள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இறைவ! பக்தியென்னும் தாய் பக்தனென்னும் குழந்தையை காப்பாற்றுகிருள். அவனை ஆனந்தம் என்னும் தண்ணீரால் (கண்ணீரால்) குளிப்பாட்டியும் (உத்சாகப்படுத்தியும்) அவனை தூய்மையென்னும் உடையால் போர்த்தியும், சிவபுராண மென்னும் அமிர்தத்தை ஊட்டியும் (சங்குகொண்டு வாக்கை,) அவனுக்கு உருத்திராக்ஷ மாலை விபூதி அணிவித்தும், உனது தியானம் என்னும் தொட்டிலில் தூங்க வைக்கிருள்.

இங்கு பக்தி ஒரு தாயுடன் உவமிக்கப்படுகின்றது. பக்தன் குழந்தையாகின்ருன். பக்தி இறையன்பை உள்ளும் புறமும் அமைக்கின்றது. பக்தனுடலை ருத்திராக்ஷமும் விபூதியும் அலங் கரிக்கின்றன. உடனுள்ள பக்தர்கள் சிவபுராணங்களைச்சொல்ல பக்தன் அவைகளைக்கேட்டு மகிழ்கின்ருன். அவன் கண்கள் நின்றும் நீர் வடிகின்றது. அவன் மனது தூய்மையை அடை கின்றது. அவன் தியானத்தில் தன்னை இழந்தவனுகின்ருன்.

நாரத பக்தி சூத்திரம் (60) தொண்டையடைக்க தழுதழுத்து பேசுதல், கண்களில் நீர் சொரிதல், மெய்சிலிர்த்து நிற்றல், இவைகள் பெற்றவர் தங்கள் குடும்பங்களையும் உலகத்தையும் புனிதப்படுத்துகின்ருர்கள். (62)

मार्गावर्तितपादुका पशुपतेरङ्गस्य कूर्चायते
गण्डूषाम्बुनिषेचनं पुररिपोर्दिव्याभिषेकायते ।
किंचिद्भक्षितमांसशेषकबलं नव्योपहारायते
भक्तिः किं न करोत्यहो वनचरो भक्तावतंसायते ॥ ६३ ॥

மார்காவர்திதபாதுகா பஶுபதேரங்கஸ்ய கூர்சாயதே
கண்டுஷாம்பு நிஷேசனம் புரரிபோர் திவ்யாபிஷேகாயதே ।
கிஞ்சித்பக்ஷித மாம்ஸ ஶேஷ கபளம் நவ்யோபஹாராயதே
பக்தி: கிம் ந கரோத்யஹோ வநசரோ
பக்தாவதம்ஸாயதே ॥

मार्गावर्तितपादुका-வழியில் அடிக்கடி உபயோகப்படுத் தப்பட்ட செருப்பு, **पशुपतेः**-ஈசுவரனின், **अङ्गस्य**-அவயவத் திற்கு, **कूर्चायते**-புருவங்களின் மத்தியம் போலிருக்கிறது. **गण्डूषाम्बुनिषेचनं**-எச்சில் ஜலம், **पुररिपोः**-திரிபுரர்களுக்குச்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சத்துருவான சிவனுக்கு, दिव्याभिषेकायते–கங்காஜலத்தின் அபிஷேகம் போல் ஆகிறது. किंचिद्भक्षितमांसशेषकबलं– சிறிது கடித்து மீதியான மாம்ஸம், नव्योपहारायते–புதிதான நைவேத்யமாகிறது. वनचरः–காட்டிலிருக்கும் வேடன், भक्तावतंसायते–உயர்ந்த பக்தனாகிறான். भक्तिः किं न करोति–பக்தியானது எதைத்தான் செய்யாது! अहो–ஆச்சரியம்.

காட்டில் அலைந்ததால் தேய்ந்த செருப்பு இறைவனின் திருமேனியில் இருகண்களுக்குமிடையே இடுகுறியாக அமைந்தது. முப்புரமெரித்த செம்மலிற்கு வாயாற் கொணரப்பட்ட நீர் தெய்வீக அபிஷேகமாயிற்று ஏற்கனவே வாயால் மெல்லப் பட்ட ஊன் (இறைச்சி) புனிதமான நிவேதனமாயிற்று. பக்தி எதைச்செய்யாது! வேடன் பக்தர்களில் தலைசிறந்தவனாகின்றான்.

இங்கு சங்கரர் கண்ணப்பருக்குத் தலைசிறந்த பக்தனென்று வணக்கம் செலுத்துகின்றார். முரட்டு வேடன் இறைவனை தன் வழியில் வணங்குகின்றான். அவனுக்கு சாஸ்திரங்கள் தெரியாது. பூஜை முறைகளை அவன் கற்றிலன். பூஜைக்கு வேண்டிய புறத் தூய்மை கடுகளவும் அவனிடமில்லை. கோயில் பூசாரி அவனது முரட்டு பூஜாவிதியை ஒரு அபசாரமாகவே கொண்டார். ஆயின் அது இறைவனுக்கு சிறந்த பூஜைமுறையாயிற்று. கண்ணப்பன் ஒரு கண்ணை இறைவனுக்குக் கொடுத்துவிட்டு மறுகண்ணும் கொடுக்கத் தயாராகும்பொழுது இறைவனே அவனைக் கண்ணப்பன் என்று அழைத்தார். பக்தியில் கண்ணப்பனுக்குச் சிறந்தவர் யார். அவனே பக்தர்களில் முதன்மையானவன். மாணிக்கவாசகர்,

கண்ணப்ப னொப்ப தோரன்பின்மை கண்டபின்
என்னப்ப னென் னொப்பி லென்னையு மாட்கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப் பொன்னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

என்று (திருக்கோத்தும்பி–4) பாடியுள்ளார்.

ஷோமருஸ் "பெரிய புராணத்தில் கண்ணப்பன், காட்டில் பூஜையற்ற ஒரு சிவலிங்கத்தைக் கண்டு தன்னையும் உலகையும் மறந்து, அந்த லிங்கத்தின் சேவையில் அமர்ந்தான். அதற்காக தன் கண்களையும் அர்ப்பணித்தான்" என்று குறிக்கின்றார். (63)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

वक्षस्ताडनमन्तकस्य कठिनापस्मारसंमर्दनं
भूभृत्पर्यटनं नमत्सुरशिरःकोटीरसंघर्षणम् ।
कर्मेदं मृदुलस्य तावकपदद्वन्द्वस्य किं वोचितं
मच्चेतोमणिपादुकाविहरणं शंभो सदाऽङ्गीकुरु ॥ ६४ ॥

வக்ஷஸ்தாடநமந்தகஸ்ய கடிநாபஸ்மார ஸம்மர்தனம்
பூப்ருத் பர்யடனம் நமத்ஸுர ஸிர:கோடீர ஸங்கர்ஷணம் ।
கர்மேதம் ம்ருதுளஸ்ய தாவக பதத்வந்த்வஸ்ய கிம் வோசிதம்
மச்சேதோ மணி பாதுகா விஹரணம் ஸம்போ
ஸதாங்கீகுரு ॥

शम्भो-சம்புவே, **अन्तकस्य**-யமனுடைய, **वक्षस्ताडनं**-மார்பில் உதைப்பது, **कठिनापस्मारसंमर्दनं**-கடினமான அபஸ்மாரமென்பவனை மிதிப்பது, **भूभृत्पर्यटनं**-மலையில் ஸஞ்சரிப்பது, **नमत्सुरशिरःकोटीरसंघर्षणं**-வணங்கும் தேவதைகளின் சிரஸ்ஸிலுள்ள கிரீடத்தில் உரைவது, **इदं कर्म**-இந்தக்காரியம் **मृदुलस्य**-மிருதுவான, **तावकपदद्वन्द्वस्य**-தங்கள் இரு திருவடிகளுக்கு, **किं वोचितं**-தகுந்ததுதானா? **मच्चेतोमणिपादुकाविहरणं**-என் மனமாகிற ரத்னபாதுகையால் ஸஞ்சரிப்பதை, **सदा अङ्गीकुरु**-எப்பொழுதும் ஏற்றுக்கொள்ளும்.

யமனுடைய மார்பில் உதைத்துக்கொண்டு அபஸ்மாரத்தை காலில் மிதித்துக்கொண்டு, கைலாய மலையில் திரிந்துகொண்டு, வணங்கிய தேவர்களின் முடிகளில் உறைந்துகொண்டு நிற்பவை உன் பாதங்கள். இது முறையா? மணிகள் பொதிந்த என் இதயத்தைச் செருப்பாயணிந்து செல்வாயாக ஓ சம்போ!

பக்தன் இறைவனுக்குத் தன் மனதைச் செருப்பாகக் கொடுக்கிறான். சிவன் பாதங்கள் கடுமையான வேலைகளைச் செய்யவேண்டியிருக்கின்றது ஆகையால் பாதங்களுக்குச் சரியான காப்பு இருக்கவேண்டும்.

இறைவன் தன் பாதங்களுக்குக் கொடுக்கும் சில கடுமையான அலுவல்கள்:—

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

1. மார்க்கண்டேயர் பதினாறுவருஷங்களே வாழப்பிறந்தவர் குறித்தகாலம் நெருங்க அவன் பெற்றோர்கள் இரங்கி வாடினார்கள். அப்பையன் தான் யமனை வென்றுவிடுவதாக பெற்றோர்களிடம் உறுதி கூறினான். கோயிலிற்குச் சென்று சிவலிங்கத்தை வணங்க ஆரம்பித்தான். மார்க்கண்டேயனது உயிரைப்பற்றிவர யமன் தன் தூதர்களை அனுப்பினான். ஆனால் அவர்கள் சிவலிங்கமிருக்கும் கர்ப்பகிருகத்தில் நுழையக்கூடவில்லை. பிறகு யமனே நேரில் வந்தான். லிங்கத்தினின்றும் சிவபெருமான் எழுந்து யமனை மார்பில் உதைத்தார். யமன் இறந்துபட்டான். சிவபெருமான் தன்னருளால் அவனை உயிர்ப்பித்தார். மார்க்கண்டேயன் யமனை வென்று சிரஞ்ஜீவியானான்.

யமனுடைய மார்பில் வெறுங்காலுடன் உதைப்பது கடினமான வேலைதான். சுந்திரர் 7-61-4ல் உதைத்தகோடும் தோழில் என்ற பாவில் இதைக்குறித்துள்ளார்.

2. தாருகாவன யாகத்தில் வெளித்தோன்றியவைகளில் அபஸ்மாரமும் ஒன்று, அது தீய நடுக்கமுள்ள குறளை அதுவும் சிவனைப்பழிக்க, சிவபெருமான் பாதத்தால் அதை நசுக்கி நலித்தார். சிவன் தன் கால் கட்டைவிரலைக்கொண்டு அதன் முதுகெலும்பை மிதிக்க அது உடைந்துபட்டது. நர்த்தன சிவனாகும் நடராஜன் உருவத்தில் அபஸ்மாரம் சிவபெருமான் அடிக்கீழ் படுத்துக்கிடப்பதாக அமைகின்றது.

அபஸ்மாரம் என்பது ஒரு வலிப்பு. அது இயற்கை பிரக்ஞையை இழக்கச் செய்து, நடுங்குகின்றவர்களுக்கு பெரும் வலியைக்கொடுக்கின்றது. அபஸ்மாரம் மாயை, அக்ஞானம் இதைக்குறிப்பது. அதை அகற்றுவது எளிதன்று. ஆகையால் கடினம் என்ற சொல் கையாளப்படுகின்றது.

3. சிவபெருமான் உறைவிடம் கைலயங்கிரி. சிவனடிக்ள் அங்கு கடும்பாறைகளில் நடக்கவேண்டியுள்ளன.

4. தேவர்கள் சிவனடிகளை வணங்கவரும்பொழுது ஒருவரையொருவர் முந்தி வருகின்றார்கள். தங்கள் ஆர்வத்தில் அவர்கள் தாங்கள் சிவபெருமானுக்கு இழைக்கும் தொல்லையை அறிவதில்லை. அவர்களது முடிகளுடன் உறைவது பாதங்களுக்கு கடினமானதன்றோ? (இந்நூல் சு. 17)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இறைவனடிகள் விடாது இக்கடின அலுவல்களைச் செய்ய வேண்டியுள்ளது. பக்தன் தன் மனதைச் செருப்பாக இறைவனுக்குக் கொடுக்கின்றான். அதுவும் நன்றாகவும் அழகாகவும், சிவனால் அணியத்தகுந்ததாகவும் உள்ளது. (64)

वक्षस्ताडनशङ्कया विचलितो वैवस्वतो निर्जराः
कोटीरोज्ज्वलरत्नदीपकलिकानीराजनं कुर्वते ।
दृष्ट्वा मुक्तिवधूस्तनोति निभृताश्लेषं भवानीपते
यच्चेतस्तव पादपद्मभजनं तस्येह किं दुर्लभम् ॥ ६५ ॥

வக்ஷஸ்தாடந ஶங்கயா விசலிதோ வைவஸ்வதோ நிர்ஜரா:
கோடீரோஜ்ஜ்வலரத்ன தீப கலிகா நீராஜனம் குர்வதே ।
த்ருஷ்ட்வா முக்தி வதூஸ்தனோதி
நிப்ருதாச்லேஷம் பவாநீபதே
யச்சேதஸ்தவ பாதபத்ம பஜனம் தஸ்யேஹ
கிம் துர்லபம் ॥

भवानीपते-பார்வதீபதே, **यच्चेतः**-எவன் மனது, **तव**-உம்முடைய, **पादपद्मभजनं**-தாமரை போன்ற திருவடிகளை ஸேவிக்கிறதாக உள்ளதோ (அவனை) **दृष्ट्वा**-பார்த்து **वैवस्वतः**-யமன், **वक्षस्ताडनशङ्कया**-மார்பில் அடி ஏற்படுமென்ற எண்ணத்தால், **विचलितः**- ஓடிவிட்டான். **निर्जराः** தேவதைகள், **कोटीरोज्ज्वलरत्नदीपकलिकानीराजनं कुर्वते**-தங்கள் கிரீடங்களில் பிரகாசிக்கின்ற தீபம் போன்ற ரத்னங்களின் ஒளிகளால் ஆரத்தி செய்கிறார்கள். **मुक्तिवधूः**-முக்தியாகிய பெண், **निभृताश्लेषं तनोति**-காடாலிங்கனம் செய்கிறாள். **तस्य**-அவனுக்கு, **इह**-இவ்வுலகில், **किं दुर्लभं**-எதுதான் அடையமுடியாதது!

பார்வதியின் தலைவ! எவன் மனது உன்னை பூஜிக்கின்றதோ அவனால் சாதிக்கக்கூடாததென்ன? அவனைப் பார்த்தாலே, யமன் ஓடிவிடுகின்றான். தேவர்கள் முடிகளிலுள்ள ஒளிவிடும் மணிகளைக்கொண்டு அவனுக்கு விளக்கெடுக்கின்றார்கள் (ஆலத்தி) முக்தி யென்னும் மணப்பெண் அவனை இறுக அணைத்துக்கொள்கிறாள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யமனை வென்றவன் மார்க்கண்டேயன் ஒருவனேயன்று. ஒவ்வொரு பக்தனும் சாவின்மையைப் பெற்றுவிடுகின்றான். அழிவற்ற தேவர்களின் நிலையினும் உயர்ந்தது பக்தனின் நிலை. தேவர்களும் பக்தர்களைப் பாராட்டுகின்றார்கள் அவ்வழி தாம் சிவனையே வணங்குவதாகவும் கொள்கின்றார்கள். அவர்கள் தலை குவிந்து பக்தன் முன்பு செல்லும்பொழுது, அவர்கள் முடிமணிகள் ஆலத்தி போன்றமைகின்றன. சிவனுக்கு பக்தி செய்வதால் பக்தன் மோக்ஷமென்னும் பயனைப்பெறுகின்றான். (65)

क्रीडार्थं सृजसि प्रपञ्चमखिलं क्रीडामृगास्ते जना
यत्कर्माचरितं मया च भवतः प्रीत्यै भवत्येव तत् ।
शम्भो स्वस्य कुतूहलस्य करणं मच्चेष्टितं निश्चितं
तस्मान्मामकरक्षणं पशुपते कर्तव्यमेव त्वया ॥ ६६ ॥

க்ரீடார்த்தம் ஸ்ருஜஸி ப்ரபஞ்சமகிலம்
க்ரீடா ம்ருகாஸ்தே ஜநா
யத்கர்மாசரிதம் மயா ச பவத: ப்ரீத்யை பவத்யேவ தத்।
ஶம்போ ஸ்வஸ்ய குதூஹலஸ்ய கரணம்
மச்சேஷ்டிதம் நிச்சிதம்
தஸ்மான் மாமக ரக்ஷணம் பஶுபதே கர்தவ்யமேவ
த்வயா ॥

शम्भो–மோக்ஷஸுகத்தையளிக்கக்கூடியவரே, **पशुपते**–அக்ஞானிகளையும் காப்பாற்றுகிற ஈச, **अखिलं प्रपञ्चं**–உலகம் பூராவையும், **क्रीडार्थं सृजसि**–விளையாட்டிற்காகப் படைக்கிறீர். **ते**–உமக்கு, **जनाः**–ஜனங்கள், **क्रीडामृगाः**–விளையாட்டு மிருகங்கள், **मया च**–என்னாலும், **यत्कर्म**–எந்தக்காரியம், **आचरितं**–செய்யப்பட்டதோ, **तत्**–அது, **भवतः**–உம்முடைய, **प्रीत्यै एव भवति**–பிரீதிக்காகவே ஆகிறது. **मच्चेष्टितं**–என் செய்கை, **स्वस्य कुतूहलस्य करणं**–உன் ஸந்தோஷத்திற்குக் காரணம் (என்பது), **निश्चितं**–தீர்மானம், **तस्मात्**–ஆகையால் **त्वया**–உம்மால், **मामकरक्षणं कर्तव्यमेव**–என்னைக் காப்பாற்றுவது செய்யத்தகுந்ததே.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சம்பூ, நீயே உலகை விளையாட்டாகப் படைக்கின்றாய். அதிலுள்ள மக்கள் உன் விளையாட்டு பொம்மைகள். நான் எதைச் செய்தாலும் அது உனது ஆனந்தத்திற்காகத்தான். நான் செய்பவையெல்லாம் உன் ஆனந்தத்திற்காக என்பது உறுதி. ஆத்மாக்களின் தலைவ, எனது பாதுகாப்பு உந்தன் பொறுப்பாகின்றது.

இறைவன் விளையாட்டாக உலகைப்படைக்கின்றான். சிருஷ்டியை விளையாட்டென்பதினால் முயற்சியின்றி ஆவது என்பது பொருள். குயவன் பானை வனைவதைப்போலும், பால் தயிராக மாறுவது போலுமன்று சிருஷ்டி முயற்சியற்றதென்றால் அது மாற்றம், (விவர்த்தம்) என்பதாகின்றது. இறைவனுக்கு உலகைப்படைப்பதில் சுயநலம் ஒன்றுமில்லை. அவருக்கு அதனால் இலாபமடையும் நோக்கமில்லை. "இறைவனுக்கு சாதிக்கப்பட வேண்டுவதுமில்லை. அவரால் சாதிக்கப்பட வேண்டுவதும் ஒன்றுமில்லை", (நானவாப்தம், அவாப்தவ்யம்-கீதை 3–22)

பிரம்ம சூத்ரம் (2–1 33) "லோகவத்து லீலா கைவல்யம்" பிரம்மனின் சிருஷ்டியென்பது வெறும் விளையாட்டு. மண்ணுலகில் விளையாட்டு உள்ளதைப்போல. இந்த சூத்திரத்திற்கு விளக்கம் கொடுக்கும்பொழுது ஆதிசங்கரர், 'மன்னர்களும் அமைச்சர்களும் எதற்கும் சம்பந்தமில்லாமல் பேசுவதைப்போன்றது' என்கிறார். சிருஷ்டி வேலை இயற்கையாக மூச்சுவாங்குவது விடுவதைப் போன்று முயற்சியற்றது. அவைகளுக்கு பயனுமில்லை. மனிதன் விளையாட்டுக்களிலாவது இரகசியமான உள்நோக்கம் அமையலாம். இறைவனின் சிருஷ்டிப்பணியில் அதுவும் காணுவதற்கில்லை. சிருஷ்டியைப்பற்றி கூறும் வேதங்கள், மாயை, பெயர்–உரு, உலகம் என்ற பகுதியில் அமைவதையும் நாம் நினைப்பில் வைத்துக்கொள்ளவேண்டும்.

படைப்பு இறைவன் திருவிளையாட்டானால் அதிலுள்ளவர்கள் பொம்மைகளாக வேண்டும். அவர்கள் செய்வதெல்லாம் அவன் திருவுள்ளப்படியாகவேண்டும். பக்தன் இதை அறிந்து, தன் செயலை யெல்லாம் இறைவனுக்கு அர்ப்பணம் செய்கின்றான். நான் செய்வது எதுவானாலும் ஓ சம்பூ, அது உனக்கே அர்ப்பணம் ஆகட்டும். (66)

बहुविधपरितोषबाष्पपूरस्फुटपुलकाङ्कितचारुभोगभूमिम् ।
चिरपदफलकाङ्क्षिसेव्यमानां परमसदाशिवभावनां प्रपद्ये ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ப்ஹுவித பரிதோஷ பாஷ்பபூர ஸ்புட புளகாங்கித
சாரு போக பூமிம் ।
சிரபத பல காங்க்ஷி ஸேவ்யமானாம் பரம ஸதாசிவ
பாவனாம் ப்ரபத்யே ॥

बहुविधपरितोषबाष्पपूरस्फुटपुलकाङ्कितचारुभोगभूमिं - பலவித மான ஆனந்தபாஷ்பப் பெருக்குக்கும், தெளிவான மயிர்க் கூச்சலுக்கும் அனுபவ ஸ்தானமாயும், **चिरपदफलकाङ्क्षिसेव्यमानां**–சாச்வதமான ஸ்தானத்தை அபேக்ஷிக்கிறவர்களால் ஸேவிக்கக்கூடியதாயுமிருக்கிற, **परमसदाशिवभावनां**-உயர்ந்த ஈசுவர த்யானத்தை, **प्रपद्ये**–சரணம் அடைகிறேன்.

நிலையான வாழ்வு என்னும் பலனை நாடுகின்றவர்களால் அலங்கரிக்கப்பட்டு சுகபோகத்திற்கு அழகாக அமையும் நாட்டில், ஆனந்தக்கண்ணீரும், மெய்சிலிர்ப்பும் அமைகின்றன. அந் நாடாகும் பரம சதாசிவன் தியானத்தில் புக நான் அவனை சரண் வேண்டுகின்றேன்.

சிவத்தியானம் விளைவுள்ள வளம் மிக்க நாடாகச் சொல்லப் படுகின்றது. அந்த வயலிலிருந்து மோக்ஷமாகும் விடுதலை பெறப் படுகின்றது. (67)

अमितमुदमृतं मुहुर्दुहन्तीं विमलभवत्पदगोष्ठमावसन्तीम् ।
सदय पशुपते सुपुण्यपाकां मम परिपालय भक्तिधेनुमेकाम् ॥

அமிதமுதம்ருதம் முஹுர் துஹந்தீம் விமலபவத்பத
கோஷ்டமாவஸந்தீம் ।
ஸதய பசுபதே ஸுபுண்ய பாகாம் மம பரிபாலய
பக்தி தேனுமேகாம் ॥

सदय–தயவுடன் கூடியவரே, **पशुपते**–விருஷபத்திற்கு நாத, **अमितमुदमृतं** – எல்லையில்லாத பிரம்மானந்தமாகிற பாலை, **मुहुः**-அடிக்கடி, **दुहन्तीं**–கறக்கிறதாயும், **विमलभवत्पदगोष्ठमावसन्तीं**-சுத்தமான உம்முடைய பாதங்களாகிற தொழு வத்தில் வஸிக்கிறதாயும், **सुपुण्यपाकां**-புண்யத்தின் பலனு மான, **मम भक्तिधेनुमेकां**-என்னுடைய பக்தியாகிற ஒரு பசுவை மாத்திரம், **परिपालय**–காப்பாற்றும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆத்மாக்களின் இறைவ! கருணையாதும் ஒருவனே! நல்வினையின் பயனாகும் பக்தியென்னும், பசுவைக் காப்பாற்றுவாயாக, அது வேண்டும்பொழுதும் அளவில் பால் கொடுக்கின்றது. அது உனது திருவடி யென்னும் குற்றமற்ற மாட்டுக்கொட்டத்தில் உள்ளது.

இங்கு பக்தி ஒரு பழுதற்ற பசுவாக சித்தரிக்கப்பட்டுள்ளது. அது இறைவனின் பாதுகாப்பிற்குத் தகுதியானது என்று சொல்லப்படுகின்றது. குறைவற்றுக்கொடுக்கும் காமதேனுவைப் போன்றமைவது பக்தி. இறைவனடிகளிலேயே அது தங்குகின்றது.

(68)

जडता पशुता कलङ्किता कुटिलचरत्वं च नास्ति मयि देव ।
अस्ति यदि राजमौले भवदाभरणस्य नास्मि किं पात्रम् ॥

ஜடதா பஶுதா களங்கிதா குடிலசரத்வம் ச நாஸ்தி
மயி தேவ ।
அஸ்தி யதி ராஜமௌளே பவதாபரணஸ்ய நாஸ்மி
கிம் பாத்ரம் ॥

जडता–மூடத்தனம் (ஜலமாயிருக்குந்தன்மை), **पशुता**–விவேகமில்லாமை, **कलङ्किता**–களங்கத்துடனிருப்பது (தோஷத்தோடு கூடியிருப்பது) **कुटिलचरत्वं च**–வக்ரமாக ஸஞ்சரிப்பது (நேர்மையற்றிருப்பது) (இவை), **मयि नास्ति**–என்னிடமில்லை. **देव**–பிரகாசமானவரே, **राजमौले**–சந்திரனை சிரஸ்ஸில் அணிந்த ஈச்வரா, **अस्ति यदि**–இருக்கிறதானால், **भवदाभरणस्य**-உன் ஆபரணத்திற்கு, **पात्रं नास्मि किं**-பாத்திரமாக மாட்டேனா?

இறைவ, சோம்பல், வெறி, அசுத்தம், தீயவழி செல்லும் வக்கரம் (தீயபோக்கு) இவைகள் என்னிடமில்லை. அவைகள் இருந்தாலும், சந்திரசூட, நானும் உன் அணியாகத்தொண்டாற்ற தகுதியுள்ளவனில்லையா?

பக்தன் தான் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படத் தகுதியுள்ளவன் என்று சொல்லுகின்றான். அவன் பக்தனாயிருப்பதுவே அவன் குற்றமற்றிருப்பதற்குச்சான்று. பக்தனுக்கு, அறிவு,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இரக்கம், தூய்மை, நேர்மை முதலியவைகள் உண்டு. இவைகளை அவன் பெற்றிருக்காவிட்டாலும், எதிரான குற்றங்களையே பெற்றிருந்தாலும், சிவனுக்கு அவனை மறுக்க நியாயமில்லை. ஏனெனில் மனிதனுமல்லாத அசுத்தமான தோல்களையும், மானையும், எருதையும், பிறையையும், பாம்புகளையும் அவர் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்.

பிறைச்சந்திரனுக்கு இப்பல குற்றங்களும் உண்டு என்று கொள்ளலாம். அதையே சிவபெருமான் தலையணியாக அணிந்து கொண்டிருக்கின்றார். பக்தன் தன்னையும் ஏற்றுக்கொள்ள ஏன் வேண்டக்கூடாது? உண்மையிலேயே பக்தனிடம் பிறையின் குறைபாடும் இல்லை.

சிவன் பிறையை தலையணியாக ஏற்றுக்கொண்ட விவரம் பல வகையாக உள்ளது. ஒன்று: தக்ஷன் படைப்பு வேலையில் தலைமையானவன், பாரபக்ஷமின்றி நடத்தவேண்டுமென்ற நிபந்தனையுடன் சந்திரனுக்கு தன் பெண்களையெல்லாம் மணம் செய்வித்தான். ஆயின் சந்திரன் ரோஹிணியிடம் அதிக அன்பு காட்டினன். மற்றப்பெண்கள் பிணங்கிக்கொண்டு தகப்பனரிடம் முறையிட்டார்கள். தக்ஷன் கடுங்கோபமடைந்து சந்திரன் தினம் ஒன்ருகத் தன் கலைகளை இழந்து நிற்கவேண்டுமென்று சபித்தான். சந்திரன் சிவனைச் சரண்புகுந்தான். சிவபெருமான் அதை ஏற்றுக்கொண்டு தலையில் அணிந்துகொண்டார். இறைவனருளால் சந்திரன் தினம் ஒன்ருகத் தன் கலைகளைப்பெறலானன். இறைவன் தக்ஷனின் சாபம் நிற்கவேண்டுமென்று கொண்டார். அவர் கலைகள் தேயவும் வளரவும் அருள் செய்தார்.

மற்ரெரு கதைப்படி சந்திரன் தன் ஆசிரியரின் மனைவியை காதலித்ததினுல் அந்த சாபம் வந்ததாம். (69)

अरहसि रहसि स्वतन्त्रबुद्ध्या वरिवसितुं सुलभः प्रसन्नमूर्तिः ।
अगणितफलदायकः प्रभुर्मे जगदधिको हृदि राजशेखरोऽस्ति ॥

அரஹஸி ரஹஸி ஸ்வதந்த்ர புத்த்யா வரிவஸிதும்
ஸுலபः ப்ரஸன்ன மூர்த்திः ।
அகணித பலதாயகः ப்ரபுர் மே ஜகததிகோ ஹ்ருதி
ராஜசேகரோ ऽஸ்தி ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

प्रसन्नमूर्तिः-அனுக்ரஹம் செய்யக்கூடிய ரூபத்தையுடையவரும், **अगणितफलदायकः**-எல்லையில்லாத பலனைக்கொடுப்பவரும், **प्रभुः**-முத்தொழில்களிலும் சக்தராயும், **जगदधिकः**-உலகத்தைக் காட்டிலும் மேலானவருமான, **राजशेखरः**-சந்திரனை சிரஸில் உடைய ஈசன் (சக்ரவர்த்தி), **मे हृदि अस्ति** என் மனதில் இருக்கிறார். (ஆனதால்) **अरहसि**-வெளியிலும், **रहसि**-மனதிற்குள்ளேயும், **स्वतन्त्रबुद्ध्या** - தன்னுடையதென்ற புத்தியால், **वरिवसितुं सुलभः**-ஸேவிப்பதற்கு ஸுலபமாக இருக்கிறார்.

வெளிப்படையாகவும் இரகசியமாகவும், அவருடன் சுதந்திர மனதுடன் வாழ்வது சுலபமானது. அவன் உரு கம்பீரமானது, அவர் அளவற்ற பயனைக்கொடுக்கவல்லவர். உலகினும் உயர்ந்தவர், இதயத்தில் வசிக்கும் அந்தப் பிறையணிந்த ஒருவர்.

இறைவன் எல்லையற்றும் எங்கும் உள்ளவர். அவர் உலகத்தினும் உயர்ந்தவர் (ஜகததிகர்) ஆயின் இதயத்துள்ளும் வசிப்பவர். அவருடன் வசிப்பது எளிதானதாகவேண்டும். ஆயின் அவனருளை உணர ஆரம்பிக்காதவர்களுக்கு அது மிகவும் கடினமானதாகவேண்டும். அவரே கருணை. அவரே மோக்ஷத்தைக் கொடுப்பவர்.

அரஹஸி 'புறத்துலகில்' ரஹஸி 'உள்ளுள்ள இதயத்தில்.' ஜகததிக என்பதற்கு ஜகததிப என்ற பாடபேதமும் உண்டு. (70)

आरूढभक्तिगुणकुञ्चितभावचाप-
युक्तैः शिवस्मरणबाणगणैरमोघैः ।
निर्जित्य किल्बिषरिपून्विजयी सुधीन्द्रः
सानन्दमावहति सुस्थिरराजलक्ष्मीम् ॥ ७१ ॥

ஆரூட பக்தி குண குஞ்சித பாவ சாப
யுக்தை: ஶிவ ஸ்மரண பாண கணைரமோகை: ।
நிர்ஜித்ய கில்பிஷரிபூன் விஜயீ ஸுதீந்த்ர:
ஸாநந்தமாவஹதி ஸுஸ்திர ராஜலக்ஷ்மீம் ॥

सुधीन्द्रः-சிறந்த புத்திமான், **आरूढभक्तिगुणकुञ्चितभावचापयुक्तैः**-உண்டாயிருக்கிற பக்தியாகிற நாண் கயிறால்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வளைக்கப்பட்ட புத்தியாகிய வில்லில் தொடுக்கப்பட்ட **अमोघैः**-வீணுகாத, **शिवस्मरणबाणगणैः**-சிவ ஸ்மரணமாகிற அம்புக்கூட்டங்களால், **किल्बिषरिपून्**-பாபமாகிற சத்ருக்களை **निर्जित्य**-ஜயித்து, **विजयी**-ஜயத்துடன் கூடியவனுக, **सानन्दं**-ஆநந்தத்துடன், **सुस्थिरराजलक्ष्मीं**-ஸ்திரமானபிரம்மாதி தேவர்களுக்கு அதிபரான ஈச்வரனின் ஸாரூப்யமுக்தியை (ஸ்திரமான ராஜ்யத்தை), **आवहति**-அடைகிருன்.

சிவ சிந்தனை யென்னும் பிழையாத அம்புகளை பக்தி யென்னும் நாணுல் கட்டப்பட்ட தியானமென்னும் வில்லில் அமைத்து ஊக்கினுல் நல்ல மனதுடையவர், பகைவராகும் பாபங்களை வென்று நிலைத்த ஆனந்தத்தைப்பெறலாம்.

பக்தன் கைதேர்ந்த வேடனுக்கு உவமிக்கப்படுகின்ருன். ஒரு அரசன் பிறநாட்டைக் கைப்பற்ற, நேரிடையாகப் பகைவர்களுடன் சண்டை பிடிக்கவேண்டும். அப்படி செய்ய வலுவான வில்லும் கைத்திறனும் பெற்றிருக்கவேண்டும். பாபத்துடன் எழும் ஆத்மீகப் போரில் தியானம் வில்லாகவும் அம்பு சிவ சிந்தனையாகவும், அமைகின்றன. பக்தன் இந்த ஆயுதத்தைத் திறமையுடனும் நிச்சயமாகவும் கையாளவேண்டும். அவன் அஞ்ஞானத்தை வென்று பரம இலட்சியமாகும் மோக்ஷத்தை அடைகின்ருன். (71)

ध्यानाञ्जनेन समवेक्ष्य तमःप्रदेशं
भित्त्वा महाबलिभिरीश्वरनाममन्त्रैः ।
दिव्याश्रितं भुजगभूषणमुद्वहन्ति
ये पादपद्ममिह ते शिव ते कृतार्थाः ॥ ७२ ॥

த்யாஞஞ்ஜனேந ஸமவேக்ஷ்ய தம: ப்ரதேஶம்
பித்வா மஹாபலிபிரீச்வர நாம மந்த்ரை: ।
திவ்யாச்ரிதம் புஜக பூஷண முத்வஹந்தி
யே பாத பத்மமிஹ தே ஶிவ தே க்ருதார்த்தா: ॥

शिव-ஈச்வர, **ध्यानाञ्जनेन**-தியானமாகிற கண்மையால், **समवेक्ष्य**-நன்கு பார்த்து, **महाबलिभिः**-அதிக ஸாமர்த்தியமுடைய, **ईश्वरनाममन्त्रैः**-ஈசுவரனின் நாம மந்திரங்களால்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

तमःप्रदेशं-இருளாயிருக்கிற இடத்தை, **भित्त्वा**-பிளந்து, **दिव्याश्रितं**-தேவதைகளால் ஆச்ரயிக்கப் பட்டதும், **भुजगभूषणं**-ஸர்ப்பங்களை ஆபரணமாயுடையதுமான, **ते पादपद्मं**-உம் முடைய திருவடித்தாமரையை, **इह**-இந்த ஜன்மாவில், **ये**-எவர்கள், **उद्वहन्ति**-உபாஸிக்கிறார்களோ **ते कृतार्थाः**-அவர்கள் பலனையடைந்தவர்கள்.

சிவனே, எவர் தேவர்களும் சரணடைகின்ற நின் திருவடிகளை -சர்ப்பங்களை அணிந்த - சேருகின்றார்களோ, தியானமென்னும் கண்மையால் உன் திருவுருவைக் காணுகின்றார்களோ, இறைவன் திருநாமம் சாற்றி அவிசொரிந்து, காரிருளைக் கடந்து போகின்றார்களோ, அவர்களே வாழ்வின் பெரும் பயனைப்பெற்றவர்கள்.

புதையலை நாடுபவர்கள் அது கண்ணிற்குப் புலனாக மந்திரித்த கண் இமையை ட்டுக்கொண்டு அதைத்தேடுகின்றார்கள், அப்பொழுதே அவன் சரியான இடத்தைத் தோண்டமுடியும். பிறகு புதையலைக்காக்கும் தெய்வங்களுக்கு பூசை செய்து தான் வேண்டும் புதையலை அடைகின்றான்.

இங்கு பெறப்படவேண்டும் பொருள் இறைவன் திருவடிகள். கண்மை தியானம், தோண்டப்படவுள்ள கடும் மண் அஞ்ஞானம், அவிசுகள் சிவநாமங்கள். (72)

भूदारतामुदवहद्यदपेक्षया श्री-
भूदार एव किमतः सुमते लभस्व ।
केदारमाकलितमुक्तिमहौषधीनां
पादारविन्दभजनं परमेश्वरस्य ॥ ७३ ॥

பூதாரதாமுதவஹத் யதபேக்ஷயா ஸ்ரீ
பூதார ஏவ கிமத: ஸுமதே லபஸ்வ ।
கேதாரமாகலித முக்தி மஹௌஷதீநாம்
பாதாரவிந்த பஜனம் பரமேச்வரஸ்ய ॥

सुमते-ஓ நல்ல புத்தியே, **यदपेक्षया**-எவருடைய பாதாரவிந்தத்தைப் பார்ப்பதின் பொருட்டு, **श्रीभूदार एव**-லக்ஷ்மீ பூமிதேவிகளுக்கு பர்த்தாவான விஷ்ணுவே, **भूदारतां**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வராஹாவதாரத்தை, उदवहत् किम्-வகித்தாரல்லவா! अतः ஆகையினால், आकलितमुक्तिमहौषधीनां-விரும்பப்பட்ட மோக்ஷமாகிய ஒஷதிகளுக்கு, केदारं-உற்பத்தி ஸ்தானமான परमेश्वरस्य-பரமேச்வரனுடைய, पादारविन्दभजनं लभस्व-பாதாரவிந்தத்தையடைவாய்.

ஓ நல்லமனதே! இலக்குமி, பூதேவி இவர்களின் கணவனுகும் விஷ்ணுவே ஒரு பன்றியின் உருவை எடுத்துக்கொண்டு தேடிய திருவடிகளை, எல்லோராலும் வேண்டப்படுகின்ற விடுதலை யென்னும் மருந்துச்செடியை (மூலிகையை) வளர்க்கும் நிலமாகும் சிவனடிகளை வணங்க முயல்வாயாக ஒருவன் வேறெதைச் செய்வது?

இங்கும் விவசாயத்தொழிலுவமை கொடுக்கப்படுகின்றது. இறைவன் திருவடிகள் வளமிக்க வயல்கள்; அவைகளிலே மோக்ஷத்தின் மூலிகை வளர்கின்றது.

இறைவனடிகளைப் புகழும்பொழுது, விஷ்ணு சிவனடிகளை அடையச் செய்த முயற்சி வீணனது குறிப்பிடப்படுகின்றது. (73)

आशापाशक्लेशदुर्वासनादि-
भेदोद्युक्तैर्दिव्यगन्धैरमन्दैः ।
आशाशाटीकस्य पादारविन्दं
चेतःपेटीं वासितां मे तनोतु ॥ ७४ ॥

ஆஶா பாஶ க்லேஶ துர்வாஸனாதி
பேதோத்யுக்தைர் திவ்ய கந்தைரமந்தை: |
ஆஶா ஶாடீகஸ்ய பாதாரவிந்தம்
சேத: பேடீம் வாஸிதாம் மே தநோது ||

आशाशाटीकस्य-திக்குகளை வஸ்திரமாக உடைய ஈச்வரனின், पादारविन्दं-திருவடியானது, आशापाशक्लेशदुर्वासनादिभेदोद्युक्तैः-கயிற்றுக்கொப்பான ஆசை, ஐந்து விதமான கிலேசங்கள், கெட்டபழக்கம் முதலியவைகளை நாசம் செய்வதில் அக்கரையுள்ள, अमन्दैः-அதிகமான, दिव्यगन्धैः-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உயர்ந்த வாஸனைகளால், **मे चेतःपेटीं**-என் மனமாகிற பெட்டியை, **वासितां तनोतु**-நல்ல மணமுடையதாகச் செய்யட்டும்.

ஆசை, மயக்கம், குரோதம் என்ற நாற்றங்களை அகற்றும் இனிய தெய்வீக வாசனைகளை, சீலங்களையே திசையாகக் கொள்ளும் சிவபெருமானது திருவடிகள் எனது இதயத்தில் நிறைவிக்கட்டும்.

இங்கு மனது ஒரு மூடிய பெட்டிக்கு உவமிக்கப்படுகிறது. அது மயக்கம், ஆசைகள், குரோதம் முதலிய நாற்றங்கள் நிறைந்துள்ளது. இறைவன் அதைத்திறந்து அதில் நல்ல மணங்களைப் புகுத்த வேண்டப்படுகிறார். (74)

कल्याणिनं सरसचित्रगतिं सवेगं
सर्वेङ्गितज्ञमनघं ध्रुवलक्षणाढ्यम् ।
चेतस्तुरङ्गमधिरुह्य चर स्मरारे
नेतः समस्तजगतां वृषभाधिरूढ ॥ ७५ ॥

கல்யாணினம் ஸரஸ சித்ர கதிம் ஸவேகம்
ஸர்வேங்கிதக்ஞமநகம் த்ருவ லக்ஷணாட்யம் ।
சேதஸ்துரங்கமதிருஹ்ய சர ஸ்மராரே
நேத: ஸமஸ்த தாம் வ்ருஷபாதிரூட ॥

वृषभाधिरूढ-விருஷபாரூடரே, **स्मरारे**-மன்மதனை எரித்தவரே, **समस्तजगतां नेतः**-எல்லா உலகங்களுக்கும் நாயக, **कल्याणिनं**-மங்களகரமாயும் (கல்யாண லக்ஷணங்களுடன் கூடியதும்) **सरसचित्रगतिं**-இனிமையான நாநாவித கதி விசேஷங்களுடன் கூடியதும், **सवेगं**-வேகத்துடன் கூடியதும், **सर्वेङ्गितज्ञं**-எல்லா விதமான அபிப்ராயங்களையும் அறிந்துகொள்கிறதும், **अनघं**-தோஷமற்றதும், **ध्रुवलक्षणाढ्यं**-சுழி முதலான ஸ்திரமான லக்ஷணங்களுடையதும் (ஈசனிடம் நிலைத்திருப்பது என்ற லக்ஷணமுள்ளதுமான) **चेतस्तुरङ्गं**-என் மனமாகிய குதிரையில், **अधिरुह्य**-ஏறி, **चर**-ஸஞ்சாரம் செய்யுங்கள்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

காமத்தை அழிப்பவனே! உலகங்களுக்கெல்லாம் தலைவ! எருதில் ஏறுபவனே! மங்களகரமானதும், வேகமாகச் செல்லக் கூடியதும், அழகான பலவித நடைகளுடன் கூடியதும் குறிகளை எல்லாம் அறிவதும், எவ்வகை பழுதற்றதும் நிலையான குணங்கள் பெற்றதுமான எனது மனமென்னும் குதிரைமீது செல்வாயாக!

சிவனே உலகங்களுக்கெல்லாம் மாபெருந்தலைவன். அவனே காமத்தை அழிக்க வல்ல பெருந்தலைவன். புராணங்கள், மன்மதன் சிவனால் எரிக்கப்பட்டதாகச் சொல்கின்றன. சிவன் வேண்டப்படும் இடங்களுக்குச் செல்லவேண்டியவர். அவர் ஆன்மாக்களைக் கரையேற்றவல்லவர். அவர் எருதேறி இதை எப்படிச்செய்வது? அது மெதுவாகச் செல்வதன்றோ? அவர் பணியில் வேகமாகச் செல்லும் குதிரையாகும் தன் மனதை அமர்த்துகின்றான். அதில் அவர் சவாரி செய்து அதைத் தன் பணிக்கு ஏவட்டும்.

சிவபெருமான் காமனை (மன்மதனை) அழித்த விருத்தாந்தம் இது: தக்ஷன் ஒருயாகம் செய்து, அதற்கு தன் மருகனாகும் சிவ பெருமானை அழைக்கவில்லை. தாக்ஷாயணி – சிவபெருமானின் துணைவி–அழைப்பில்லாமல் அங்கு சென்று அவமதிக்கப்பட்டாள். அதை சகிக்காது தாக்ஷாயணி யாக நெருப்பில் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டாள். இதை அறிந்த சிவபெருமான் அந்த யாகத்தை அழிக்கச்செய்தார். தாக்ஷாயணியே பார்வதி யாகப் (ஹிமவானின் புதல்வியாகப்) பிறந்தாள். மீண்டும் தன் தலைவனையடைய அவள் அருந்தவம் மேற்கொண்டாள். ஆனால் சிவபெருமானோ தியானத்தில் அமர்ந்து தன்னை மறந்திருந்தார். தாரகாசுரனால் தொல்லைபட்ட தேவர்கள், சிவபெருமானின் திருக் குமாரனாலேயே அவன் அழிக்கப்படுவானென்றுகொண்டு காம தேவனை பார்வதியினிடம் சிவனுக்கு ஆர்வமுண்டாக்க அனுப்பினார்கள். மன்மதன் சிவனது தியானத்தைக்குலைக்க, சிவபெருமான் தனது நெற்றியிலுள்ள மூன்றாவது கண்ணைத் திறந்து மன்மதனைப் பார்த்து எரித்துவிட்டார், அதனின்று சிவனுக்கு காமாரி, ஸ்மராரி என்ற பெயர்கள் ஏற்பட்டன. (75)

भक्तिर्महेशपदपुष्करमावसन्ती

कादम्बिनीव कुरुते परितोषवर्षम् ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

संपूरितो भवति यस्य मनस्तटाक-
स्तज्जन्मसस्यमखिलं सफलं च नान्यत् ॥ ७६ ॥

பக்திர் மஹேஶ பத புஷ்கரமாவஸந்தீ
காதம்பிநீவ குருதே பரிதோஷ வர்ஷம் ।
ஸம்பூரிதோ பவதி யஸ்ய மநஸ்தடாக ஸ்தஜ்ஜன்ம
ஸஸ்யமகிலம் ஸபலம் ச நாந்யத் ॥

भक्तिः-பக்தியானது, महेशपदपुष्करमावसन्ती – ஈச்வரன் பாதங்களாகிற ஆகாயத்திலிருந்து கொண்டு, कादम्बिनीव- மேகவரிசைபோல், परितोषवर्षं-ஆனந்தப் பெருக்கை, कुरुते- செய்கிறது (உண்டு பண்ணுகிறது). यस्य-எவனுடைய, मनस्तटाकः-மனமாகிற குளம், संपूरितो भवति-நிரம்பப் படுகிறதோ, अखिलं-ஸமஸ்தமான, तज्जन्मसस्यं-அவன் ஜன்மாவாகிற பயிர், सफलं-பயனுடன் கூடியது. अन्यत्- மற்றது, नच-பயனில்லை.

பரம்பொருளாகும் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் பக்தியென்னும் மேகமானது ஆனந்த மழையைப் பொழிகின்றது. எவன் மனது இந்த ஆனந்த வெள்ளத்தால் நிறைந்துவிடுகின்றதோ அவன் முழுதாய வாழ்வின் பயனை அடைகின்றான். மற்றவர்கள் அல்ல.

இங்கும் உழவுத்தொழில் உவமிக்கப்படுகின்றது. ஈசுவர பக்தி நிறைந்த மனதே இறுதிப்பயனை (மோக்ஷத்தை) அடைகின்றது. (76)

बुद्धिः स्थिरा भवितुमीश्वर पादपद्म-
सक्ता वधूर्विरहिणीव सदा स्मरन्ती ।
सद्भावनास्मरणदर्शनकीर्तनादि
संमोहितेव शिवमन्त्रजपेन विन्ते ॥ ७७ ॥

புத்திः ஸ்த்திரா பவிதுமீச்வர பாத பத்ம
ஸக்தா வதூர்விரஹிணீவ ஸதா ஸ்மரந்தீ ।
ஸத்பாவநா ஸ்மரண தர்ஶன கீர்த்தனாதி
ஸம்மோஹிதேவ ஶிவ மந்த்ர ஜபேந விந்தே ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ईश्वर–செய்வது, செய்யாமலிருப்பது, வேறு விதமாகச் செய்வது, இவைகளில் ஸாமர்த்தியமுள்ள ஈச்வர, **विरहिणी वधूरिव**–கணவனைப் பிரிந்த ஸ்திரீபோல, **पादपद्मसक्ता**–உம் முடைய பாதாரவிந்தத்தில் ஈடுபட்டு, **सदा स्मरन्ती**–எப்பொழுதும் ஸ்மரித்துக் கொண்டிருக்கிற, **बुद्धिः**–மனமானது, **शिवमन्त्रजपेन**–சிவ என்ற மந்திரஜபத்தினால், **संमोहितेव**–மோஹத்தை அடைந்தது போல, **स्थिरा भवितुं**–நிலையாயிருப்பதற்கு, **सद्भावनास्मरणदर्शनकीर्तनादि**-நிலையாக உள்ள பாதாரவிந்தத்தின் தியானம், ஸ்மரிப்பது, பார்ப்பது, நாமாவை உச்சரிப்பது இவைகளைப்பற்றி **विन्ते**–விசாரிக்கிறது.

இறைவ! கணவனைப்பிரிந்து நிற்கும் பெண்ணைப்போல இறைவனடிகளைப்பற்றி நிற்கும் மனது சதா அவனையே நினைக்கின்றது. சிவ மந்திரத்தை அடிக்கடி ஜபிப்பதால் அது தன்னை நல்ல சிந்தனைகள், நினைவு, பார்வை, பாடுதல் இவைகளில் ஈடுபடுத்திக்கொள்கின்றது.

பக்தனின் மனது கணவனைப் பிரிந்துள்ள மனைவியுடன் உவமிக்கப்படுகின்றது. மனது இறைவனைவிட்டுப் பிரிந்திருப்பதைப் பொறுப்பதில்லை. அதில் பிற சிந்தனைகளுக்கு இடமில்லை. சதா சிவனையே சிந்திக்கின்றது நோக்கு, பேச்சு நினைவு எல்லாம் சிவனைப் பற்றிக்கொள்ளவே செய்கின்றன. (77)

सदुपचारविधिष्वनुबोधितां
सविनयां सुहृदं सदुपाश्रिताम् ।
मम समुद्धर बुद्धिमिमां प्रभो
वरगुणेन नवोढवधूमिव ॥ ७८ ॥

ஸதுபசார விதிஷ்வனுபோதிதாம்
ஸவிநயாம் ஸுஹ்ருதம் ஸதுபாச்ரிதாம் ।
மம ஸமுத்தர புத்திமிமாம் ப்ரபோ
வரகுணேன நவோடவதூமிவ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

प्रभो-ஸர்வசக்தியோடு கூடிய ஈச, **सदुपचारविधिषु**-ஸாதுவான உம்முடைய திருவடிகளின் உபசரணை விஷயத்தில், **अनुबोधितां**-சிக்ஷிக்கப்பட்டதாயும், **सविनयां**-வணக்கத்துடன் கூடியதாயும், **सुहृदं**-நல்ல மனமுள்ளதும், **सदुपाश्रितां**-நல்லோர்களை அண்டியதுமான, **मम इमां बुद्धिं**-என்னுடைய இந்தபுத்தியை, **वरगुणेन**-சிறந்த குணோபதேசத்தினால், **नवोढवधूमिव**-புதிதாக விவாஹமான ஸ்திரீயைப் போல், **समुद्धर**-சீராகச்செய்யுங்கள்.

நற்சேவையில் பயிற்றப்பட்டதும், பணிவுபெற்றதும், நல்ல சிந்தனைபெற்று அதையே இறுதியாகக்கொள்வதாகும் எனது அறிவை, இறைவ, உயர்த்துவாயாக. மணபுகும் மணமகளுக்கு சிறப்புச்செய்வதைப்போல இதற்கும் சிறப்புச் செய்வாயாக

சென்ற பாட்டில் கொடுக்கப்பட்ட மணப்பெண் உவமையே இங்கும் கொடுக்கப்படுகின்றது. சிறப்புகள் பெற்ற மணப்பெண் அறிவு. அதற்கு இறைவனின் மணமகளாவதற்காகும் தகுதிகளெல்லாம் உள்ளன. அவன் வந்து இப்பெண்ணைக் கைபற்றுவானாக! (78)

नित्यं योगिमनःसरोजदलसंचारक्षमस्त्वत्क्रमः
शंभो तेन कथं कठोरयमराड्वक्षःकवाटक्षतिः ।
अत्यन्तं मृदुलं त्वदङ्घ्रियुगलं हा मे मनश्चिन्तय-
त्येतल्लोचनगोचरं कुरु विभो हस्तेन संवाहये ॥ ७९ ॥

நித்யம் யோகி மந: ஸரோஜ தள ஸஞ்சார க்ஷமஸ்த்வத்க்ரம:
ஶம்போ தேந கதம் கடோர யமராட்வக்ஷ: கவாட க்ஷதி: ।
அத்யந்தம் ம்ருதுளம் த்வதங்க்ரி யுகளம் ஹா மே மநச்சிந்தயத்-
யேதல்லோசன கோசரம் குரு விபோ ஹஸ்தேன ஸம்வாஹயே ॥

शम्भो-ஈச்வரா, **त्वत्क्रमः**-உம்முடைய பாத வின்யாஸமானது, **नित्यं**-எப்பொழுதும், **योगिमनस्सरोजदलसंचारक्षमः**-யோகிகளின் தாமரையிதழ்போன்ற மனதில் ஸஞ்சரிப்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பதற்குத் தகுந்தது, **तेन**-அதனால், **कथं**-எப்படி, **कठोरयमराड्वक्षःकवाटक्षतिः**-கெட்டியான யமராஜனுடைய கதவுத் தாப்பாள் போன்ற மார்பினில் உதைப்பது? **हा**-கஷ்டம், **अत्यन्तं मृदुलं**-மிகவும் மெதுவான, **त्वदंघ्रियुगलं**-உமது இரு திருவடிகளை, **मे मनः चिन्तयति**-என் மனம் தியானம் செய்கிறது **विभो**-ஈச்வர, **एतत्**-இந்த உம்முடைய திருவடியை, **लोचनगोचरं कुरु**-(என்) கண்ணுக்குப் புலப்படும்படி செய். **हस्तेन संवाहये**-என் கையினால் பிடிக்கிறேன்.

ஓ சம்பூ, யோகிகளின் மனத்தாமரைகளில் நடந்து பழகியவை உன் திருவடிகள்! அவை எப்படி யமனின் மார்பில் உதைத்தன? உனது திருவடி மெல்லியது. என் மனது கலங்குகின்றது. அவைகளை நான் பார்க்க அருள் செய்வாய். அவைகளை என் கைகளால் ஏற்றுக்கொள்கின்றேன்.

64வது சுலோகத்தில் சிவனது திருவடிகள் ஏற்கும் கடிய வேலைகள் குறிப்பிடப்பட்டன. யமனை உதைப்பது அவைகளில் ஒன்று. யமனது மார்பு ஒரு கடினமான கதவு. எதிரிடையாக யோகிகளின் மனது மெல்லியது. அவையே சிவபெருமானுக்கு உகந்தவை. அத்தகைய அடிகள் யமனை உதைக்கும்பொழுது நொந்திருக்குமன்றோ? பக்தன் இறைவனது புனித அடிகளை தடவிக்கொடுக்கத் தனக்குக் காட்டவேண்டுமென்கிறான். (79)

एष्यत्येष जनिं मनोऽस्य कठिनं तस्मिन्नटानीति म-
द्रक्षायै गिरिसीम्नि कोमलपदन्यासः पुराभ्यासितः ।
नो चेद्दिव्यगृहान्तरेषु सुमनस्तल्पेषु वेद्यादिषु
प्रायः सत्सु शिलातलेषु नटनं शंभो किमर्थं तव ॥ ८० ॥

ஏஷ்யத்யேஷ ஜனிம் மனோऽஸ்ய கடினம்
தஸ்மிந்நடானீதி மத்-
ரக்ஷாயை கிரிஸீம்னி கோமள பதந்யாஸ: புராऽப்யாஸித: ।
நோ சேத் திவ்ய க்ருஹாந்தரேஷு ஸுமநஸ்தல்பேஷு
வேத்யாதிஷு
ப்ராய: ஸத்ஸு ஶிலாதலேஷு நடனம் ஶம்போ
கிமர்த்தம் தவ ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

शम्भो-ஸுகத்தையுண்டு பண்ணக்கூடிய பரமேச்வர, **एषः**-இவன், **जनिमेष्यति**-பிறப்பான், **अस्य मनः**-இவன் மனம் **कठिनं**-மிகவும் கெட்டியானது, **तस्मिन्नटानि**-அதில் நர்த்தனம் செய்வேன், **इति**-என்று, **मद्रक्षायै**-என்னைக் காப்பதின் பொருட்டு, **गिरिसीम्नि**-மலைபிரதேசத்தில், **कोमल-पदन्यासः**-மெதுவான கால் ஸஞ்சாரம், **पुराऽभ्यासितः**-முன்னாலேயே அப்யாஸம் செய்யப்பட்டதா? **नोचेत्**-இல்லாவிடில் **दिव्यगृहान्तरेषु**-உயர்ந்த கிருஹங்களும், **सुमनस्तल्पेषु**-மலர்களால் செய்யப்பட்ட படுக்கைகளும், **वेद्यादिषु**-திண்ணை முதலியவைகளும், **प्रायस्सत्सु** - பெரும்பாலும் இருக்கும் பொழுது, **शिलातलेषु**-கல்பிரதேசங்களில், **तव**-உமக்கு, **नटनं किमर्थं**-நர்த்தனம் எதற்கு?

இது பிறக்கவே போகின்றது; இதன் மனது கடினமானது. நான் இதில் நடனம் செய்யவேண்டும் என்று கொண்டு, இமயத்தின் கடும்பாறைகளில் நடந்து பயிற்சிகொண்டுள்ளாய். இல்லையேல் தெய்வீக வீடுகளும், மலர்ப்படுக்கைகளும், தாழ்வாரங்களும் வேண்டியவை இருக்க நீ ஏன் பாறைகளில் நடனஞ் செய்கின்றாய்?

முன் சுலோகத்தில் இறைவனது மெல்லிய அடிகள் யமனது கடுமையான மார்பை எப்படி உதைத்தது என்று வியக்கின்றார். இந்தப்பாட்டில் பக்தன் தன் மனமும் கடினமானதென்பதை அறிகின்றான். இறைவன் அது கடினமானதென்றுகொண்டு அதில் புகாமலும் போகலாம். ஆயின் இப்படி இறைவன் சமாதானம் கொடுப்பது இறைவனுக்குக் கூடுவதன்று. இறைவன் அந்த ஆத்மா பிறக்கப்போகின்றதையும் கன்னெஞ்சு படைத்திருக்கும் என்பதையும் அதில் தான் தாண்டவம் செய்யவேண்டியதென்பதும் அறிவார். அதை அறிந்தே இறைவன் பாறைகள் மிகும் இடத்தையே இடமாகக்கொண்டு பாறைகளில் நடந்து வருகின்றார். வேறெதற்காக மலைக்காட்டை அவர் இருப்பிடமாகத் தேர்ந்துள்ளார்? அவருக்கு வேறு வாழிடம் கிடைக்கவில்லையா? தேவர்கள் இதயத்தும், தவசிகள் இதயத்தும் அவிசொரியும் யாகசாலைகளிலும் வேண்டிய இடங்கள் உள்ளனவே? (80)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

कंचित्कालमुमामहेश भवतः पादारविन्दार्चनैः
कंचिद्ध्यानसमाधिभिश्च नतिभिः कंचित्कथाकर्णनैः ।
कंचित्कंचिदवेक्षणैश्च नुतिभिः कंचिद्दशामीदृशीं
यः प्राप्नोति मुदा त्वदर्पितमना जीवन्स मुक्तः खलु ॥

கஞ்சித் காலமுமாமஹேஶ பவத: பாதாரவிந்தார்ச்சனை:
கஞ்சித் த்யாந ஸமாதிபிச்ச நதிபி: கஞ்சித் கதாகர்ணனை: ।
கஞ்சித் கஞ்சிதவேக்ஷணைச்ச நுதிபி: கஞ்சித்தஶாமீத்ருஶீம்
ய: ப்ராப்நோதி முதா த்வதர்பித மநா ஜீவன் ஸ
முக்த: கலு ॥

उमामहेश-பார்வதியுடன் கூடிய மஹேச, **कञ्चित्कालं**-சிலகாலம், **भवतः पादारविन्दार्चनैः**-உம்முடையபாதாரவிந்தார்ச்சனைகளாலும், **कञ्चित्**-சிலகாலம், **ध्यानसमाधिभिश्च**-தியானம் ஸமாதி இந்த யோகாப்யாஸங்களாலும், **कञ्चित्**-கொஞ்ச காலம், **नतिभिः**-நமஸ்காரங்களாலும், **कञ्चित्कथाकर्णनैः**-சில காலம் கதைகளைக்கேட்பதாலும், **कञ्चिदवेक्षणैश्च**-சில காலம் பார்வையாலும், **कञ्चित्**-சிலகாலம், **नुतिभिः**-துதிப்பதாலும், **मुदा**-ஸந்தோஷத்தால், **त्वदर्पितमनाः**-உன்னிடம் அர்பணம் செய்யப்பட்ட மனமுள்ள, **यः**-எவன், **ईदृशीं दशां**-இந்த நிலைமையை, **प्राप्नोति**-அடைகிறானோ, **सः**-அவன், **जीवन् मुक्तः खलु**-ஜீவித்துக் கொண்டே முக்தியடைந்தவனில்லையா.

உமாதேவியின் துணைவரே, சிறுபொழுது, உனது மலரடிகளைப் பூஜித்துக்கொண்டும், சிறுகாலம் தியானத்திலமர்ந்தும், ஏகாக்ரமாக இருந்தும், சிறுபொழுது நமஸ்காரம் செய்தும், சிறுபொழுது உன் திருவுருவை தரிசனம் செய்தும், சிறுபொழுது உன் புகழைப்பாடியும், ஆனந்தத்து அமரும் நிலையைப்பெற்று தன் மனதை உனக்கு ஒப்படைத்தவனே ஜீவன் முக்தன்.

பக்தி பழுக்கும்பொழுது ஜீவன் முக்தியைக் கொடுக்கின்றது. அது வாழ்விலேயே விடுதலை. பக்தியின் பயன் கண்ணிற்குப் புலனாகாததொன்றல்ல. அதன் பயன் இப்பொழுதே இங்கேயே கிடைக்கவுள்ளது. மனது இறைவனிடம் ஒப்படைக்கப்படும் பொழுது மனது இருப்பது [illegible] அது 'அமனீ

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பாவ' மாகின்றது. மனமே ஆத்மாவைப் பிணைப்பது, மனமே விடுதலையையும் கொடுக்கின்றது. புறபொருள்களைப் பற்றும் மனது உலகுடன் ஆத்மாவைப் பிணைக்க, இறைவனைப்பற்றும் மனது விடுதலை செய்கின்றது. (81)

बाणत्वं वृषभत्वमर्धवपुषा भार्यात्वमार्यापते
घोणित्वं सखिता मृदङ्गवहता चेत्यादि रूपं दधौ ।
त्वत्पादे नयनार्पणं च कृतवांस्त्वद्देहभागो हरिः
पूज्यात्पूज्यतरः स एव हि न चेत्को वा तदन्योऽधिकः ॥

பாணத்வம் வ்ருஷபத்வமர்த்தவபுஷா
பார்யாத்வமார்யாபதே
கோணித்வம் ஸகிதா ம்ருதங்க வஹதா
சேத்யாதி ரூபம் ததௌ ।
த்வத்பாதே நயனார்ப்பணம் ச
க்ருதவாம்ஸ்த்வத்தேஹ பாகோ ஹரி:
பூஜ்யாத் பூஜ்யதர: ஸ ஏவ ஹி ந சேத் கோ வா
ததந்யோऽதிக: ॥

आर्यापते-பார்வதீ பதியான ஈச்வர, **हरिः**-விஷ்ணு, **बाणत्वं**-பாணமாயிருப்பது, **वृषभत्वं**-விருஷபமாயிருப்பது, **अर्धवपुषा**-பாதி சரீரத்தால், **भार्यात्वं**-பத்னியாயிருக்கும் தன்மை, **घोणित्वं**-வராஹாவதாரமெடுப்பது, **सखिता**-நண்பனாயிருப்பது, **मृदङ्गवहता**-மிருதங்கம் வாசிப்பது, **इत्यादिरूपं दधौ**-இது முதலான ரூபத்தையடைந்தார். **त्वत्पादे**-உன் திருவடியில், **नयनार्पणं च कृतवान्**-கண்ணையும் அர்ப்பணம் செய்தார். **त्वद्देहभागः**-உன் சரீரத்தில் பங்குபெற்ற, **स एव**-அவர்தான், **पूज्यात्पूज्यतरः**-பூஜ்யாளான பிரம்மாதி தேவர்களைக்காட்டிலும் உயர்ந்தவர், **न चेत्**-இல்லாவிடில், **को वा तदन्योऽधिकः** - அவரைக் காட்டிலும் வேறு யார்தான் மேலானவன்?

தேவியின் கணவா! ஹரியானவர், அம்பாகவும், எருதாகவும், உடலைப்பகிர்ந்துகொள்ளும் மனைவியாகவும், பன்றியாகவும், ஒரு நண்பனாகவும், பறையறிபவனாகவும் பல்லுருக்களைகொண்டு ஒரு

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சமயம் தன் கண்ணையும் உமது திருவடிகளில் சமர்ப்பித்தார். சிவபெருமானின் ஒரு பாதியாகுபவரே மிகவும் வணங்கத்தக்கவர், அவரினும் மிகுந்தவர் யார்?

இங்கு ஹரிஹர மூர்த்தம் விளக்கப்படுகின்றது. விஷ்ணு (ஹரி) சிவனுடன் பல வழிகளில் இணைக்கப்படுகின்றார், (1) விஷ்ணு திரிபுரம் எரிக்க சிவன் கை அம்பானார். (2) அவர் சிவ வாகனமாகும் எருதுவாகின்றார். (3) அவர் உடலின் பாதியாகி அவர் மனைவியானார். (4) அவர் சிவனடிகளைக் கண்டறிய ஒரு பன்றியானார். (5) அவர் சிவனுக்குத் துணை நிற்க மோஹினி வேடம் கொண்டார். (a) அச்சமயம் தேவர்களே அமிருதத்தை பெறவும், அசுரர்களுக்கு அது இல்லாமல் போகவும் செய்தார். (b) சிவபெருமானால் தான் தொடுபவர்கள் சாம்பலாக மாய வரம் பெற்ற பஸ்மாசுரனை அழிக்கும் பொழுதும் அவர் அவ்வுருக் கொண்டார். (6) சிவபெருமான் நடனம் செய்யும்பொழுது விஷ்ணு மத்தளம் கொட்டுகின்றார். (7) ஒரு சமயம் அவர் சிவனை பூஜை செய்துகொண்டிருக்க ஆயிரத்திற்கு ஒரு தாமரை மலர் குறைவாக இருப்பதைக்கண்டு அதற்குப்பதிலாகத் தன் கண்ணையே கொடுத்தார்.

ஹரி, ஹரனுக்கு மிகவும் நெருங்கியவர், அவர் பிறதேவர் களினும் உயர்ந்தவர். (82)

जननमृतियुतानां सेवया देवतानां
न भवति सुखलेशः संशयो नास्ति तत्र ।
अजनिममृतरूपं साम्बमीशं भजन्ते
य इह परमसौख्यं ते हि धन्या लभन्ते ॥ ८३ ॥

ஜனன ம்ருதி யுதானாம் ஸேவயா தேவதாநாம்
ந பவதி ஸுகலேஶ: ஸம்ஶயோ நாஸ்தி தத்ர ।
அஜநிமம்ருதரூபம் ஸாம்பமீஶம் பஜந்தே
ய இஹ பரம ஸௌக்யம் தே ஹி தன்யா லபந்தே ॥

जननमृतियुतानां-பிறப்பு இறப்பு இவைகளுடன் கூடிய, **देवतानां**-தேவதைகளின், **सेवया**-ஸேவையால், **सुखलेशः**-ஸ்வல்ப ஸுகம்கூட, **न भवति**-உண்டாகிறதில்லை, **तत्र**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அது விஷயத்தில், संशयः नास्ति-ஸந்தேஹமில்லை, ये-எவர்கள், इह-இவ்வுலகில், अजनिं-பிறப்பில்லாதவரும், अमृतरूपं-இறப்புமில்லாத ரூபத்தையுடையவருமான, साम्बमीशं-பார்வதியுடன் கூடிய பரமேச்வரனை, भजन्ते-ஸேவிக்கிறார்களோ, ते धन्याः-அந்த புண்யவான்கள், परमसौख्यं लभन्ते-மேலான ஸுகத்தை (முக்தி ஆனந்தத்தை) அடைகிறார்கள்.

பிறப்பு இறப்பென்னும் சுழலிலுள்ள தேவர்களைப் பூஜிப்பதால் சுகத்தின் சிற்றளவும் நாம் பெறுவதில்லை. இது ஒரு ஸந்தேகமற்ற முடிவு. என்றுமிருப்பவரும், பிறப்பில்லாதவருமான பார்வதியாரின் தலைவனை வணங்குபவர்களே பாக்கியசாலிகள். அவர்களே பேரானந்தத்தை அடைகின்றார்கள்.

சாதாரணமாகும் ஒரு உண்மை இங்கு சொல்லப்படுகின்றது. சிறுதெய்வங்களையும் உபதெய்வங்களையும் வழிபடுவது பயனற்றது. அது நமது இறுதி இலட்சியமாகும் நிறைவைப் பெற உதவாது. என்றுமுள்ளவரான சிவபெருமானே ஆத்மாவைக் காப்பாற்றிப் பேரானந்தத்தைக்கொடுக்கவல்லவர்.

शिव तव परिचर्यासंनिधानाय गौर्या
भव मम गुणधुर्यां बुद्धिकन्यां प्रदास्ये ।
सकलभुवनबन्धो सच्चिदानन्दसिन्धो
सदय हृदयगेहे सर्वदा संवस त्वम् ॥ ८४ ॥

ஶிவ தவ பரிசர்யா ஸந்நிதானாய கௌர்யா
பவ மம குண துர்யாம் புத்தி கன்யாம் ப்ரதாஸ்யே ।
ஸகல புவன பந்தோ ஸச்சிதானந்த ஸிந்தோ
ஸதய ஹ்ருதயகேஹே ஸர்வதா ஸம்வஸ த்வம் ॥

शिव-மங்களகரமானவரே, सकलभुवनबन्धो-எல்லா உலகிற்கும் பந்துவானவரே, सच्चिदानन्दसिन्धो-ஸத்யம் ஞானம் ஆனந்தம் இவைகளுக்கு ஸமுத்திரமானவரே, सदय தயவுடன் கூடியவரே, भव-உலகத்தைப் படைக்கிற ஈச்வர गौर्या-பார்வதியுடன் கூட, तव-உமக்கு, परिचर्यासन्निधानाय-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பக்கத்தில் இருந்து ஏவல் செய்வதற்கு, **गुणधुर्यां**-நல்ல குணங்கள் நிறைந்த, **मम**-என்னுடைய, **बुद्धिकन्यां**-புத்தியாகிற கன்னிகையை, **प्रदास्ये**-கொடுக்கிறேன், **त्वं**-நீர், **हृदयगेहे**-ஹ்ருதயமாகிற கிருஹத்தில், **सर्वदा** - எப்பொழுதும், **संवस**-வாஸம் செய்யும்.

ஓ சிவ, ஓ பவ, உலகங்களுக்கெல்லாம் நண்ப! பேரானந்த அநுபவக்கடலே! கருணை வள்ளலே! பல சிறப்புக்களைப் பெற்றுள்ள எனது மனதென்னும் மணமகளை, கௌரியுடன் உனக்குப் பணிவிடை செய்யக்கொடுக்கின்றேன். நீ எப்பொழுதும் என் இதயம் என்னும் வீட்டில் அமர்வாயாக.

பக்தன் தனது மகளாகும் மனதை இறைவன் திருப்பணிவிடைக்குக் கொடுக்கின்ருன். மனது பார்வதியாருடன் அமைந்து, அவருடன் சிவபெருமானுக்குப்பணிவிடை செய்யட்டும். இறைவன் இதயத்தையே தன் இருப்பிடமாக வைத்துக் கொள்ளட்டும். அவர் எப்பொழுதும் அதிலிருக்கட்டும். அதை விட்டுப்போகவே வேண்டாம். (84)

जलधिमथनदक्षो नैव पातालभेदी
न च वनमृगयायां नैव लुब्धः प्रवीणः ।
अशनकुसुमभूषावस्त्रमुख्यां सपर्यां
कथय कथमहं ते कल्पयानीन्दुमौले ॥ ८५ ॥

ஜலதி மதன தக்ஷோ நைவ பாதாள பேதீ
ந ச வநம்ருகயாயாம் நைவ லுப்த: ப்ரவீண: ।
அஶன குஸுமபூஷா வஸ்த்ர முக்யாம் ஸபர்யாம்
கதய கதமஹம் தே கல்பயாநீந்துமௌளே ॥

इन्दुमौले-சந்திரனை சிரஸில் அணிந்த ஈசுவர, **अहं**-நான் **जलधिमथनदक्षः नैव**-ஸமுத்திரத்தைக் கடைவதில் ஸாமர்த்தியமுள்ளவனல்ல, **पातालभेदी न च**-பாதாளலோகத்தைப் பிளக்கிறவனுமல்ல, **वनमृगयायां**-காடுகளில் வேட்டையாடுவதில், **प्रवीणः लुब्धः नैव**-சிறந்த வேடனுமல்ல, **ते**-உமக்கு **अशनकुसुमभूषावस्त्रमुख्यां सपर्यां**-ஆஹாரம், புஷ்பம், ஆபரணம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வஸ்திரம் முதலான பூஜையை, कथं-எப்படி, कल्पयानि-செய்வேன்?, कथय-சொல்லும்.

பிறை சூடிய பெருமானே! எனக்குக் கடல் கடையத்திறனில்லை. பாதாளலோகத்தை உடைக்கவும் தெரியாது. நான் திறமை மிக்க வேடனுமன்று இந்நிலையில் நான் உன்னை எப்படிப் பூஜிப்பது? எந்த நிவேதனங்களைப் படைப்பது (விஷத்தை)? மலர் (சந்திரன்), அணி (பாம்புகள்), வஸ்திரம் (யானையின் தோல்) முதலியவைகளை எப்படித்திரட்டுவேன்? எனக்குச்சொல்வாயாக!

பக்தனுக்கு இறைவனை வணங்கும் வழிகள் விளங்கவில்லை. இறைவனுக்கு வேண்டுபவைகளை பக்தன் எப்படிப் பெறுவது? விஷமே சிவபெருமானின் நிவேதனம். பாற்கடலைக் கடைந்தாலன்றி சிவனுணவாகும் ஹாலகாலத்தைப் பெறுவதெப்படி? பாம்புகளே இறைவன் அணிகள். அவைகளைப்பெற நாகலோகத்திற்குப் போகவேண்டும். சிவபெருமானின் வஸ்திரம், யானையின் தோல், புலித்தோல் இவை. இவைகளைப்பெற ஒருவன் வேட்டைத்திறன் பெற்றவனாகவேண்டும். சாதனங்கள் ஒன்றையும் பெறாத பக்தன் தான் அவைகளைப் பெறவில்லையாகையால் தான் இறைவனுக்கு எதை சமர்ப்பிப்பது என்று கேட்கின்றான். (85)

पूजाद्रव्यसमृद्धयो विरचिताः पूजां कथं कुर्महे
पक्षित्वं न च वा किटित्वमपि न प्राप्तं मया दुर्लभम् ।
जाने मस्तकमङ्घ्रिपल्लवमुमाजाने न तेऽहं विभो
न ज्ञातं हि पितामहेन हरिणा तत्त्वेन तद्रूपिणा ॥ ८६ ॥

பூஜா த்ரவ்யஸம்ருத்தயோ விரசிதா: பூஜாம் கதம் குர்மஹே
பக்ஷித்வம் ந ச வா கிடித்வமபி ந ப்ராப்தம் மயா துர்லபம் ।
ஜாநே மஸ்தகமங்க்ரி பல்லவமுமா ஜாநே ந தேऽஹம் விபோ
ந ஞாதம் ஹி பிதாமஹேன ஹரிணா தத்வேன தத்ருபிணா ॥

उमाजाने-பார்வதீபதியான மகேச்வர, पूजाद्रव्यसमृद्धयः-பூஜைக்கு உரிய பதார்த்தங்களின் நிறைவுகள், विरचिताः-சேகரிக்கப்பட்டன, पूजां-பூஜையை, कथं कुर्महे-எப்படிச் செய்வோம்? मया-என்னால், दुर्लभं-அடைய முடியாத, पक्षित्वं-பக்ஷியாயிருக்கும் தன்மை, न च प्राप्तं-அடையப்பட

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வில்லை. **किटित्वमपि वा**-வராஹத்தன்மையாவது, **न प्राप्त**-அடையப்படவில்லை. **विभो**-ஸர்வ வியாபகமான ஈசுவர, **अहं**-நான், **ते**-உம்முடைய, **मस्तकं**-சிரஸ்ஸையும், **अंघ्रिपल्लवं**-துளிர்போன்ற பாதத்தையும், **न जाने**-அறியவில்லை. **तत्त्वेन**-உண்மையாக, **तद्रूपिणा**-அந்த ஹம்ஸபக்ஷி - வராகங்களின் ரூபத்தையுடைய, **पितामहेन हरिणा**-பிரம்மாவாலும் விஷ்ணுவாலும், **न ज्ञातं हि**-அறியப்படவில்லையன்றோ.

பார்வதியின் துணைவா! பூஜா சாமக்ரிகளை சேகரித்தாய் விட்டது. ஆயின் எப்படி பூஜை செய்வது? நான் ஒரு வராஹத்தின் சிறப்போ, ஒரு பறவையின் சிறப்போ பெறவில்லையே. எங்கும் பரந்து உள்ளானே, நான் முடியையோ திருவடிகளையோ பார்க்கவில்லை. பிரம்மாவினாலும் விஷ்ணுவினாலும் கூட அவைகளைப் பார்க்கக்கூடவில்லை.

சிவனை பூஜிக்கவேண்டிய சாமான்களை சேகரித்துவிட்டாலும் கூட எப்படிப் பூஜையைச் செய்வது? சிவனுடைய முடியையும் அடியையும் பார்ப்பது கூடுவதில்லை. பிரம்மா விஷ்ணு இவர்களாலேயும் அவை பார்க்கப்படவில்லை. பூஜையை எப்படிச் செய்வது? (86)

अशनं गरलं फणी कलापो
वसनं चर्म च वाहनं महोक्षः ।
मम दास्यसि किं किमस्ति शंभो
तव पादाम्बुजभक्तिमेव देहि ॥ ८७ ॥

அஶனம் கரளம் பணீ கலாபோ
வஸனம் சர்ம ச வாஹனம் மஹோக்ஷ: 1
மம தாஸ்யஸி கிம் கிமஸ்தி ஶம்போ
தவ பாதாம்புஜ பக்திமேவ தேஹி 11

शम्भो-க்ஷேமத்தை உண்டுபண்ணுகிறவரே, **अशनं**-ஆஹாரம், **गरलं**-காலகூட விஷம்; **कलापः**-ஆபரணம், **फणी**-ஸர்ப்பம், **वसनं**-வஸ்திரம், **चर्म**-தோல், **वाहनं**-வாகனம், **महोक्षः**-பெரிய எருது; **मम**-எனக்கு, **किं दास्यसि**-எதைக் கொடுப்பீர்? **किमस्ति**-என்ன இருக்கிறது? **तव**-உம்முடைய

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

पादाम्बुजभक्तिमेव देहि-பாதாரவிந்தத்தில் பக்தியையே கொடுங்கள்.

ஓ சம்பூ, உனக்கு உணவு விஷம், அணி பாம்பு, வஸ்திரம் தோல், வாகனம் எருது. நீ எதை எனக்குக்கொடுப்பாய்? மேலும் அங்குள்ளதெது? நினது திருவடியில் பக்தியை மட்டும் கொடுப்பாயாக!

85ம் பாட்டில் பக்தன் அவருக்கு உகந்த விஷத்தையும், பாம்பு களையும், தோல்களையும் எப்படிக்கொடுக்கமுடியும் என்று கேட் கிறான். இந்த சுலோகத்தில் சிவன் தனக்குத் தரக்கூடிய பொருள் எது என்று கேட்கிறான். சிவனிடம் இருக்கும் விஷம் முதலியவை பக்தனுக்கு பயன்படுவனவன்று. பக்தன் பரமன் திருவடியில் பக்தி செய்வதையே வேண்டுகின்றான்.

இது நிந்தாஸ்துதி என்ற வகையில் அமைகின்றது. புகழை இகழாகச் சொல்வது. (87)

यदा कृताम्भोनिधिसेतुबन्धनः
करस्थलाधःकृतपर्वताधिपः ।
भवानि ते लङ्घितपद्मसंभव-
स्तदा शिवार्चास्तवभावनक्षमः ॥ ८८ ॥

யதா க்ருதாம்போநிதி ஸேதுபந்தன:
கரஸ்தலாத:க்ருத பர்வதாதிப: ।
பவானி தே லங்கித பத்மஸம்பவ-
ஸ்ததா ஶிவார்சா ஸ்தவ பாவன க்ஷம: ॥

शिव-மங்களஸ்வரூப, **यदा**-எப்பொழுது, **कृताम्भोनिधि-सेतुबन्धनः**-ஸமுத்திரத்தில் அணைகட்டுவதைச் செய்தவனாக வும், **करस्थलाधःकृतपर्वताधिपः**-கையால் (பூமியில்) கீழே இருக்கும்படி செய்யப்பட்ட விந்த்யமலையை உடையவனாக வும், **लंघितपद्मसंभवः**-பிரம்மாவைக் காட்டிலும் உயர்ந்தவனாக வும் இருப்பேனோ **तदा**-அப்பொழுது, **ते**-உனக்கு, **अर्चास्तव-भावनक्षमः**-அர்ச்சனை, ஸ்தோத்திரம், தியானம் இவைகளைச் செய்யத்தகுதியுள்ளவனாக, **भवानि**-ஆவேன்,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கடல்மீது பாலம் கட்டினவனாகவோ (ராமனாகவோ), உள்ளங் கையால் விந்தியமலையை அழுத்தியவனாகவோ (அகஸ்தியராகவோ), உலகங்களைப் படைத்து, வேதங்களை விளக்கிய தாமரையில் பிறந்த பிரம்மனாகவோ ஆனாலல்லது உன்னைப் பூஜிக்க என்றால் முடியுமா? அப்பொழுதே உன்னைப் பூஜிக்கவும் உன் புகழைப்பாடவும், உன் தியானத்தில் அமரவும் கூடும்!

சாவிற்குட்பட்ட மனிதனுக்கு சிவனைப் பூஜிக்கவும், அவர் புகழைச்சொல்லவும், அவரை தியானிக்கவும் கூடுவதில்லை. இவைகளைச் செய்ய ராமசந்திரனாகவும், அகஸ்தியராகவும், பிரம்மனாகவும் இருக்கவேண்டும். ஸ்ரீராமசந்திரர் இலங்கைக்குப் பாலம் கட்டியவர். ராமேசுவரத்தில் சிவனைப் பூஜை செய்தார். அகஸ்தியர் (குறுகிய உருவம் பெற்றவர்) விந்தியபர்வதத்தின் அகந்தையை அகற்ற, அதைத் தன் உள்ளங்கையால் அழுத்தி வைத்தார். அவர் சிவன் புகழைப் பாட வல்லவர். சிவனை தியானிப்பதானால் ஒருவன் பிரம்மாவினும் உயர்ந்தவனாக இருக்க வேண்டும். (88)

नतिभिर्नुतिभिस्त्वमीश पूजा-
विधिभिर्ध्यानसमाधिभिर्न तुष्टः ।
धनुषा मुसलेन चाश्मभिर्वा
वद ते प्रीतिकरं तथा करोमि ॥ ८९ ॥

நதிபிர் நுதிபிஸ்த்வமீஶ பூஜா-
விதிபிர் த்யான ஸமாதிபிர் ந துஷ்ட: ।
தனுஷா முஸலேன சாச்மபிர் வா
வத தே ப்ரீதிகரம் ததா கரோமி ॥

ईश-ஹே ஈச்வர, **यथा**-எப்படி, **त्वं**-நீர், **धनुषा**-வில்லினாலாவது, **मुसलेन**-உலக்கையாலாவது, **अश्मभिर्वा**-கற்களினாலாவது **तुष्टः**-ஸந்தோஷிப்பீரோ, **तथा**-அவ்வாறு **नतिभिः**-நமஸ்காரங்களாலும், **नुतिभिः**-ஸ்தோத்திரங்களாலும், **पूजाविधिभिः**-பூஜை முறைகளாலும், **ध्यानसमाधिभिः**-தியான ஸமாதிகளாலும், **न तुष्टः**-ஸந்தோஷப்படமாட்டீர். (ஆகையால்) **ते**-உமக்கு, **प्रीतिकरं वद**-பிரியமான விஷயத்தைச் சொல்லும், **तथा करोमि**-அவ்விதம் செய்கிறேன்,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இறைவ! நமஸ்காரங்கள், உன் புகழ்பாடுதல், பூஜாவிதிகள், ஒருமைபட்ட மனம், தியானம் இவைகளால் உனக்கு திருப்தி உண்டாவதில்லை. ஒரு அம்பினாலும் கல்லாலும், தண்டத்தாலும் அடிக்கப்படுவதை நீ விரும்புகிறாய் போலும். அப்படியானால் அதைச்சொல் உனக்கு எது உகந்ததோ அதைச்செய்கின்றேன்.

இந்தப்பாட்டும் நிந்தாஸ்துதி. சாதாரண பூஜை முறைகள் சிவனை திருப்தி செய்வதில்லை போலும்! எதற்காக அவர் முரட்டுச் செய்கைகளைப் பூஜையாக ஏற்றுக்கொண்டுள்ளார்? (1) அர்ச்சுனன் சிவனருளைப்பெற கடுந்தவம் செய்துகொண்டிருந்தான். சிவன் ஒரு வேடுவனாக அவன் முன்பு தோன்றினார். அவர்களிருவருக்குள்ளும், யார் அந்த ஒரு விலங்கைக்கொன்றது என்ற சண்டை உண்டாயிற்று. கைகலப்பு உண்டாக அர்ச்சுனன் சிவபெருமானை வில்லால் அடித்தான். சிவபெருமானுக்குப் பெருமகிழ்ச்சி உண்டாயிற்று (2) தண்டமென்பது பாண்டியமன்னனின் பிரம்பைக் குறிக்கின்றது போலும்! மாணிக்கவாசகர் பிழையாக அரசனால் தண்டிக்கப்பட்டார். பாண்டியனுக்குப் பாடம் கற்பிக்க கரைகள் உடையும் வண்ணம் வைகையில் பெருவெள்ளம் வந்தது. மதுரையின் குடிமக்கள் அனைவரும் சேர்ந்து உடைப்புகளை அடைக்கவேண்டுமென்று பாண்டியன் உத்திரவிட்டான். ஆப்பம் விற்கும் ஒரு கிழவிக்கு ஆள்கிடைக்கவில்லை. இறைவனே பணியாளாக வேடம் புனைந்து அக்கிழவியின் வேலையைத் தான் செய்வதாக ஒப்புக்கொண்டார். ஆயின் அவர் வேலையை ஒழுங்காகச் செய்யவில்லை. பிறர் வேலை செய்யாவண்ணம் அவர்கள் அக்கரையையும் அகற்றினார். அரசன் தணிக்கைக்கு வர, இந்தப் பணியாளனைப்பார்த்து, அவனைத் தன் பிரம்பால் தட்டினார். (3) சாக்கிய நாயனார் சமண அரசனின் கீழ் வாழ்ந்தவர். அவருக்கு முறையாக சிவனை பூசிப்பது கூடாததாக அவர் சிவலிங்கத்தின் மீது கல்லெறிந்து இதயபூசை செய்தார். (89)

वचसा चरितं वदामि शंभो-
रहमुद्योगविधासु तेऽप्रसक्तः ।
मनसाकृतिमीश्वरस्य सेवे
शिरसा चैव सदाशिवं नमामि ॥ ९० ॥

வசஸா சரிதம் வதாமி ஶம்போ-
ரஹமுத்யோக விதாஸு தேऽப்ரஸக்த: ।

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

மநஸாக்ருதிமீச்வரஸ்ய ஸேவே
ஶிரஸா சைவ ஸதாஶிவம் நமாமி ॥

ते उद्योगविधासु-உம்முடைய உயர்ந்தயோகத்தில், **अप्रसक्तः**-பழக்கமில்லாத, **अहं**-நான், **शम्भोः**-ஈசுவரனுடைய, **चरितं**-கதையை, **वचसा**-வார்த்தையால், **वदामि**-சொல்லுகிறேன், **मनसा**-மனதால், **ईश्वरस्य**-ஈசுவரனின், **आकृतिं**-ரூபத்தை, **सेवे**-தியானம்செய்கிறேன், **शिरसा चैव**-சிரஸ்ஸினுலும், **सदाशिवं नमामि**-ஸதாசிவனை நமஸ்கரிக்கிறேன்.

முயற்சியுடன் உன்னை தியானிக்க நான் பழக்கமடைந்தவனன்று. நான் சம்பூவின் கதைகளைச்சொல்வேன். சிவனுருவத்தை மனதில்கொண்டு வணங்குவேன். தலையால் சதாசிவனுக்கு வணங்குவேன். இவையே என்னுல் செய்யக்கூடியவை.

ஒருவன் இதயத்தால் சிவனைப் பூஜை செய்யத் தகுதி பெற்றிருக்காவிட்டாலும் அவன் தயங்கவேண்டுவதில்லை. அவன் கீழ்ப்படிமுறைகளாலேயே பக்தி செய்யட்டும். அவன் படிப்படியாக மேலேறவே செய்வான். (90)

आद्याऽविद्या हृद्गता निर्गताऽऽसी-
विद्या हृद्या हृद्गता त्वत्प्रसादात् ।
सेवे नित्यं श्रीकरं त्वत्पदाब्जं
भावे मुक्तेर्भाजनं राजमौले ॥ ९१ ॥

ஆத்யாऽவித்யா ஹ்ருத்கதா நிர்கதாऽऽஸீத்
வித்யா ஹ்ருத்யா ஹ்ருத்கதா த்வத்ப்ரஸாதாத் ।
ஸேவே நித்யம் ஶ்ரீகரம் த்வத்பதாப்ஜம்
பாவே முக்தேர் பாஜனம் ராஜமௌளே ॥

राजमौले-சந்திரனை சிரஸில் அணிந்தவரே, **त्वत्प्रसादात्**-உம்முடைய அனுக்ரஹத்தால், **आद्या**-ஆதிமுதலிருக்கிற **हृद्गता**-மனதிலுள்ள, **अविद्या**-அக்ஞானம், **निर्गतासीत्**-போய்விட்டது. **या**-எந்த ஞானம், **हृत्**-அக்ஞானத்தைப் போக்குமோ, **विद्या**-அந்த ஞானம், **हृद्गता**-ஹிருதயத்திலிருக்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கிறது. श्रीकरं-ஸம்பத்தை யுண்டுபண்ணுகிற, मुक्तेर्भजनं-முக்திக்கு ஸாதனமான, त्वत्पदाब्जं-உம்முடைய பாதாரவிந்தத்தை, भावे-மனதில், नित्यं सेवे-எப்பொழுதும் தியானம்செய்கிறேன்.

பிறைசூடும் பெருமானே! நினது திருவருளால் ஆதியற்று என்னிதயத்து நிலைபெற்ற மாயை அகன்றுவிட்டது. பிரம்ம ஞானம் அங்கு நிலைத்துவிட்டது. மங்களத்தைக் கொடுப்பதும், விடுதலைக்கு வழிவிடுவதுமாய உன் திருவடிகளை நான் தியானம் செய்து வணங்குகின்றேன். (91)

दूरीकृतानि दुरितानि दुरक्षराणि
दौर्भाग्यदुःखदुरहंकृतिदुर्वचांसि ।
सारं त्वदीयचरितं नितरां पिबन्तं
गौरीश मामिह समुद्धर सत्कटाक्षैः ॥ ९२ ॥

தூரீக்ருதானி துரிதானி துரக்ஷராணி
தௌர்பாக்ய துக்க துரஹங்க்ருதி துர்வசாம்ஸி ।
ஸாரம் த்வதீய சரிதம் நிதராம் பிபந்தம்
கௌரீஶ மாமிஹ ஸமுத்தர ஸத்கடாக்ஷை: ॥

गौरीश-கௌரீநாத, दुरक्षराणि-பிரம்மாவின் கெட்ட எழுத்தைக் குறிக்கின்ற, दुरितानि-பாபங்களால் உண்டான दौर्भाग्यदुःखदुरहंकृतिदुर्वचांसि-துரதிருஷ்டம், துக்கம், கெட்ட அஹங்காரம், கெட்ட வார்த்தை இவைகள், दूरीकृतानि-போக்கப்பட்டன. सारं-உயர்ந்த, त्वदीयचरितं-உன்சரித்திரத்தை, नितरां पिबन्तं-அதிகமாகக் குடிக்கிற (கேட்கிற) मां-என்னை, सत्कटाक्षैः-சிலாக்கியமான கடைக்கண் பார்வைகளால், इह-இந்த ஜன்மாவிலேயே, समुद्धर-கரையேற்றும்.

கௌரியின் கணவ, துரதிர்ஷ்டம், கஷ்டம், கொடிய அகந்தை கொடுஞ்சொல் இவைகளெல்லாம் — பாபங்களால் தோன்றுபவை — துரத்தப்பட்டுள்ளன. நான் உனது புகழென்னும் இனிய புராணங்களைப் பருகி நிற்கின்றேன். கிருபை செய்து என்னையும் இங்கே காப்பாற்றுவாயாக!

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இறைவனருளாலேயே தீயவையெல்லாம் அகற்றப்படுகின்றன. தீயது, பாபம், கஷ்டம் இவையெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல அகன்றுவிடுகின்றன. (92)

सोमकलाधरमौलौ कोमलघनकंधरे महामहसि ।
स्वामिनि गिरिजानाथे मामकहृदयं निरन्तरं रमताम् ॥

ஸோம கலாதர மௌளௌ
கோமள கநகந்தரே மஹாமஹஸி ।
ஸ்வாமினி கிரிஜா நாதே
மாமக ஹ்ருதயம் நிரந்தரம் ரமதாம் ॥

मामकहृदयं-என் மனம், **सोमकलाधरमौलौ**-சந்திரகலையை சிரஸில் அணிந்தவரும், **कोमलघनकन्धरे**-அழகியமேகம் போல் நீலமான கழுத்தையுடையவரும், **महामहसि**-பெரிய ஒளி ரூபமாயும், **स्वामिनि**-லோக நாதனுமான, **गिरिजानाथे**-பார்வதீபதியிடத்தில், **निरन्तरं रमतां**-இடைவிடாமல் இன்புற்றிருக்கட்டும்.

கிரிஜாவின் கணவனும், பிறையைத்தலையில் அணிபவனும், மேகம்போன்ற நீலமாய கழுத்தைப்பெற்றவனும், பிரகாசத்தைப் பெற்ற உருபடைத்தவனுமான உன்னிடம் என் இதயம் அமர்ந்து மகிழட்டும்.

பக்தன் சிவனது அருட்செயல்கள் சிலவற்றைச்சொல்லி, அதன் பொருளை தியானிக்கின்றார். சிவனது உருவும் அவயவங்களும் அவரது செயலைக்குறிப்பிடுகின்றன. (93)

सा रसना ते नयने तावेव करौ स एव कृतकृत्यः ।
या ये यौ यो भर्गं वदतीक्षेते सदाऽर्चतः स्मरति ॥ ९४ ॥

ஸா ரஸநா தே நயனே
தாவேவ கரௌ ஸ ஏவ க்ருதக்ருத்ய: ।
யா யே யௌ யோ பர்கம்
வததீக்ஷேதே ஸதா஽ர்ச்சத: ஸ்மரதி ॥

या-எது, **सदा**-எப்பொழுதும், **भर्गं वदति**-சிவநாமாவைச் சொல்லுகிறதோ, **सा एव रसना**-அதுதான் நாக்கு, **ये**-

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

எவைகள், **भर्गं ईक्षेते**-(எப்பொழுதும்) ஈசுவரனைப்பார்க்கிறதுகளோ, **ते नयने**-அவைகள்தான் கண்கள், **यौ**-எவைகள், **भर्गं अर्चतः**-(எப்பொழுதும்) ஈசுவரனைப் பூஜிக்கின்றனவோ, **तावेव करौ**-அவைகள்தான் கைகள், **यः**-எவன், **भर्गं स्मरति**-(எப்பொழுதும்) ஈசனை ஸ்மரணம் செய்கிறானோ **स एव कृतकृत्यः**-அவன்தான் செய்யக்கூடியவைகளை செய்தவனாகிறான்.

எவனது நாக்கு சிவனையே பேசுகின்றதோ, கண்கள் சிவனையே பார்க்கின்றனவோ, கைகள் சிவனையே பூஜிக்கின்றனவோ எவன் அவனையே விடாது சிந்திக்கின்றானோ அவன் தன் இலட்சியத்தைப் பெற்றவனாகின்றான்.

முன்பு பல சுலோகங்களில் சொல்லப்பட்ட கருத்தே இங்கும் சொல்லப்படுகின்றது. புலன்களின் செயலும் மனதும் இறைவனையே நோக்கி அமைதல் வேண்டும். (94)

अतिमृदुलौ मम चरणावतिकठिनं ते मनो भवानीश ।
इति विचिकित्सां संत्यज शिव कथमासीद्गिरौ तथा वेशः ॥

அதிம்ருதுலௌ மம சரணா-
வதிகடிநம் தே மநோ பவானீஶ ।
இதி விசிகித்ஸாம் ஸந்த்யஜ
ஶிவ கதமாஸீத் கிரௌ ததா வேஶ: ॥

भवानीश-பார்வதீபதியான ஈச, **मम चरणौ**-என்கால்கள் **अतिमृदुलौ**-மிகவும் மென்மையானவைகள், **ते मनः**-உன் மனம், **अतिकठिनं**-மிகவும் முரடானது, **इति विचिकित्सां संत्यज**-என்ற ஸந்தேகத்தை விட்டுவிடு. **शिव**-மங்களரூபியே **तथा**- அவ்விதமான (கரடுமுரடான), **गिरौ**-மலையில், **कथं**-எப்படி, **वेश आसीत्**-பிரவேசம் ஏற்பட்டது.

பார்வதி தேவியின் கணவ! "எனது பாதங்கள் மிருதுவானவை. உனது இதயம் கடினமானது" என்ற எண்ணத்தை விட்டுவிடுவாயாக! சிவனே, நீ ஏன் மலையில் வசிப்பதை ஏற்றுக் கொண்டாய்?

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இங்கும் முன்பு சொல்லிய கோரிக்கையே பக்தனால் வற்புறுத்தப்படுகின்றது. அவனது இதயம் மிகவும் கடினமானதென்றும் தன் பாதங்கள் மிருதுவானதெனவும் கொண்டு அதில் புக மறுப்பது கூடாது. (95)

धैर्याङ्कुशेन निभृतं रभसादाकृष्य भक्तिशृङ्खलया ।
पुरहर चरणालाने हृदयमदेभं बधान चिद्यन्त्रैः ॥ ९६ ॥

தைர்யாங்குசேன நிப்ருதம்
ரபஸாதாக்ருஷ்ய பக்தி ச்ருங்கலயா ।
புரஹர சரணாலானே
ஹ்ருதயமதேபம் பதாந சித்யந்த்ரை: ॥

पुरहर–முப்புரங்களையெரித்த ஈசுவர, **हृदयमदेभं**–மனமாகிய மதயானையை, **धैर्याङ्कुशेन**-தைரியமாகிற ஈட்டியால் **रभसात्**–வேகமாய், **आकृष्य**–இழுத்து, **भक्तिशृङ्खलया**–பக்தியாகிய சங்கிலியால், **चरणालाने**–திருவடிகளாகிற யானை கட்டும் ஸ்தம்பத்தில், **चिद्यन्त्रैः**–ஞானமாகிற உபாயங்களால் **निभृतं**–அசையாமல் இருக்கும்படி, **बधान**–கட்டும்.

முப்புரங்களை அழித்தவனே, என் இதயமென்னும் யானையை தங்கள் பாதமென்னும் கட்டுமுளையில் கட்டிவையுங்கள். அதை தைரியம் என்னும் வலிவுடன் வேகமாக இழுத்து பக்தி என்னும் தளையால் பிணித்து, அறிவென்னும் இயந்திரம் கொண்டு அது திரியாமல் அதைப்பிணைக்கவேண்டும்.

இதிலும் அடுத்த பாட்டிலும் இதயம் ஒரு யானையுடன் ஒப்பிடப்படுகின்றது. இந்த முரட்டு யானை பிடிக்கப்பட்டு கட்டுப்பாட்டில் வைக்கப்படவேண்டும். இறைவன் ஒருவனே அதைச் செய்யக்கூடும். (96)

प्रचरत्यभितः प्रगल्भवृत्त्या मदवानेष मनःकरी गरीयान् ।
परिगृह्य नयेन भक्तिरज्ज्वा परम स्थाणु पदं दृढं नयामुम् ॥

ப்ரசரத்யபித: ப்ரகல்ப வ்ருத்த்யா
மதவானேஷ மந:கரீ கரீயான் ।
பரிக்ருஹ்ய நயேன பக்தி ரஜ்ஜ்வா
பரம ஸ்த்தாணு பதம் த்ருடம் நயாமும் ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

परम-அளவற்ற ரூபமுடையவரே, **मदवान्**-மதத்துடன் கூடிய, **गरीयान् एष मनःकरी**-மனமாகிற இந்தப் பெரிய யானை, **प्रगल्भवृत्त्या**-முரட்டு சுபாவத்தால், **अभितः**-நாலா பக்கங்களிலும், **प्रचरति**-அலைகிறது. **अमुं**-இந்த மத யானையை, **भक्तिरज्ज्वा**-பக்தியாகிற கயிறுல், **परिगृह्य**-ஸ்வாதீனம்செய்து, **नयेन** - நயமாக, **दृढं**-கெட்டியாய், **स्थाणुपदं**-நிலையான இடத்தை **नय**-அடையச்செய்.

தலைவர்க்கும் தலைவ! இந்த மனமென்னும் யானை மதம் பிடித்து, பலத்துடன் பல அட்டூழியங்களைச்செய்கின்றது. எல்லா திக்குகளிலும் திரிகின்றது. அதை பக்தி யென்னும் கயிற்றுல் கட்டி, நயமாக நிலையான இடத்திற்கு இழுத்துச் செல்வாயாக!

மனமென்னும் யானை, முரடானது. தன் வழிச்செல்வது, பக்தியென்னும் தளையால் கட்டப்பட்டு, இறைவனடிகளுக்கு இழுத்துச் செல்லப்பட்டு அது நிலைநிறுத்தப்படவேண்டும். ஸ்தாணு என்பது சிவபெருமானின் பெயர்களில் ஒன்று. (97)

सर्वालङ्कारयुक्तां सरलपदयुतां साधुवृत्तां सुवर्णां
सद्भिः संस्तूयमानां सरसगुणयुतां लक्षितां लक्षणाढ्याम् ।
उद्यद्भूषाविशेषामुपगतविनयां द्योतमानार्थरेखां
कल्याणीं देव गौरीप्रिय मम कविताकन्यकां त्वं गृहाण ॥

ஸர்வாலங்கார யுக்தாம் ஸரள பத யுதாம் ஸாது
வ்ருத்தாம் ஸுவர்ணாம்
ஸத்பி: ஸம்ஸ்தூயமாநாம் ஸரஸகுண யுதாம்
லக்ஷிதாம் லக்ஷணாட்யாம் ।
உத்யத் பூஷா விஶேஷாமுபகத விநயாம்
த்யோதமாநார்த்த ரேகாம்
கல்யாணீம் தேவ கௌரீப்ரிய மம கவிதா
கந்யகாம் த்வம் க்ருஹாண ॥

देव-பிரகாசமானவரே, **गौरीप्रिय**-பார்வதியிடம் அன்பு கொண்ட பரமேச்வர, **सर्वालङ्कारयुक्तां**-உபமானம் முதலிய எல்லா அலங்காரங்களுடன் (எல்லாவிதமான அலங்காரங்களுடன்) கூடியதும், **सरलपदयुतां**-சுலபமாக அறியக்கூடிய

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அர்த்தங்களுள்ள பதங்களையுடையதும் (மெதுவான நடையையுடையவளும்), **साधुवृत्तां**-சிறந்த விருத்தங்கள் உள்ளதும் (நல்ல நடத்தையுடையவளும்), **सुवर्णां**-நல்ல எழுத்துக்களுடன் கூடியதும் (நல்ல ரூபத்தையுடையவளும்), **सद्भिः संस्तूयमानां**-ஸாதுக்களால் கொண்டாடக் கூடியதும், **सरसगुणयुतां**-சிருங்காரம் முதலிய ரஸங்களுடனும் சிறந்த குணங்களுடனும் கூடியதும், **लक्षितां**-ப்ரதிபாதனம் பண்ணக்கூடிய நாயகனையுடையதும் (கன்னிகையை அபேக்ஷிக்கிறவர்களால் நிச்சயிக்கப்பட்டவளும்.) **लक्षणाढ्यां**-நல்ல லக்ஷணங்களையுடையதும், **उद्यद्भूषाविशेषां**-சப்தாலங்காரச் சிறப்புள்ளதும் (ஒளியுள்ள ஆபரணமணிந்தவளும்), **उपगतविनयां**-கவியின் அடக்கமுள்ளதும் (அடக்கமுள்ளவளும்), **द्योतमानार्थरेखां**-அனேக அர்த்தங்களால் பிரகாசிப்பதும் (பாக்ய ரேகைகளுடன் விளங்குபவளும்), **कल्याणीं**-மங்களம் தருவதும் (மங்களரூபியாயும்) ஆன, **मम** என்னுடைய, **कविताकन्यकां**-கவிதையாகிற கன்னிகையை **त्वं**-நீ, **गृहाण**-ஏற்றுக்கொள்.

கௌரியின் அன்ப, இறைவ, அலங்காரங்கள் நிறைந்து கம்பீர நடையுடனமர்ந்து, தவத்தில் பழக்கம் பெற்று, அழகு நிறைந்து சிறந்த மணமகளாக உள்ள என் கவிதை என்னும் பெண்ணை ஏற்றுக்கொள்வாயாக. அவளுக்கு நல்ல சீலங்களும் ஆபரணங்களும் உண்டு. அவள் பெண்மை நிறைந்து, கையில் நல்ல அதிர்ஷ்ட ரேகைகளையும் பெற்றிருக்கின்றாள். அவள் மங்களம் நிறைந்தவள்.

தகப்பன் தன் மகளைத் தான் தேர்ந்தெடுத்த மணமகனுக்குக் கொடுப்பதைப்போல கவி தன் கவிதையை இறைவனுக்கு ஒப்படைக்கின்றார். இந்த நூலிற்குப் பொருந்தும் சிறப்புகள்: எல்லா அலங்காரங்களும் (அணிகளும்) இதில் உள்ளன. சொற்கள் அழகாக அமைகின்றன, அரிய சந்தங்கள் வைக்கப் பட்டுள்ளன. அழகாக அமைந்திருப்பதால் புலவர்களின் புகழிற்கு உரியது. இதில் பல இரசங்களும் உள்ளன. அதன் பயனும் நோக்கும் அரியவை. பணிவையும் குறிக்கின்றது. ஆழ்ந்த கருத்துகளும் குறிப்பிடும் பொருள்களும் அமைகின்றன. படிப்போருக்கு மங்களத்தை உண்டாக்கவல்லது. (98)

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

इदं ते युक्तं वा परमशिव कारुण्यजलधे
गतौ तिर्यग्रूपं तव पदशिरोदर्शनधिया ।
हरिब्रह्माणौ तौ दिवि भुवि चरन्तौ श्रमयुतौ
कथं शंभो स्वामिन्कथय मम वेद्योऽसि पुरतः ॥ ९९ ॥

இதம் தே யுக்தம் வா பரமஶிவ காருண்ய ஜலதே
கதௌ திர்யக்ரூபம் தவ பத ஶிரோ தர்ஶனதியா ।
ஹரி ப்ரஹ்மாணௌ தௌ திவி புவி சரந்தௌ ச்ரமயுதௌ
கதம் ஶம்போ ஸ்வாமின் கதய மம வேத்யோऽஸி புரத: ॥

परमशिव-பரமேச்வர **कारुण्यजलधे**-கருணைக்கடலே, **तव**-உம்முடைய, **पदशिरोदर्शनधिया**-கால், தலை இவைகளைப் பார்க்க வேண்டுமென்கிற கருத்தினால், **तिर्यग्रूपं**-வராஹம், பக்ஷி இந்த ரூபங்களை, **गतौ**-அடைந்த, **तौ**-அந்த, **हरिब्रह्माणौ**-விஷ்ணுவும் பிரம்மாவும், **दिवि भुवि चरन्तौ**-ஆகாயத்திலும் பூமியிலும் ஸஞ்சரித்துக்கொண்டு, **श्रमयुतौ**-சிரமத்தையடைந்தார்கள். **इदं**-இது, **ते युक्तं वा**-உமக்குத் தக்கதுதானா? **शम्भो** - மோக்ஷஸுகத்தையளிக்கிறவரே, **स्वामिन्**-ஸர்வலோக நாயக, **मम पुरतः**-என் முன்னாலே, **कथं**-எப்படி **वेद्योऽसि**-அறியக்கூடியவராகிறீர்? **कथय**-சொல்லும்.

பரமாகிய சிவனே! கருணைக்கடலே, உனது அடிமுடிகளைக் காண பிரம்மா விஷ்ணுக்கள், மனிதனினும் தாழ்ந்த உருவங்களை எடுத்துக்கொண்டு, ஆகாயத்தில் தாவியும், நிலத்தைக்கீண்டியும் சென்று துன்புற்றார்கள். இது உனக்கு முறையா? ஓ சம்பு, தலைவ! உடனடியாக நான் உன்னை தெரிந்துகொள்வதெப்படி?

இங்கும் அடிமுடி காணாது விஷ்ணு பிரம்மா இவர்கள் திகைத்தது குறிக்கப்படுகின்றது. (99)

स्तोत्रेणालमहं प्रवच्मि न मृषा देवा विरिञ्चादयः
स्तुत्यानां गणनाप्रसङ्गसमये त्वामग्रगण्यं विदुः ।
माहात्म्याग्रविचारणप्रकरणे धानातुषस्तोमव-
द्धूतास्त्वां विदुरुत्तमोत्तमफलं शंभो भवत्सेवकाः ॥

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்தோத்ரேணலமஹம் ப்ரவச்மி ந ம்ருஷா தேவா
விரிஞ்சாதய:
ஸ்துத்யானும் கணனு ப்ரஸங்க ஸமயே
த்வாமக்ரகண்யம் விது: ।
மாஹாத்ம்யாக்ர விசாரணப்ரகரணே தாநாதுஷ ஸ்தோமவத்
தூதாஸ்த்வாம் விதுருத்தமோத்தம பலம்
ஶம்போ பவத்ஸேவகா: ॥

शम्भो-அழிவற்ற சுகத்தைக் கொடுக்கக்கூடிய ஈச்வர, **भवत्सेवकाः**-உம்முடைய பக்தர்களான, **विरिञ्चादयः**-பிரம்மா முதலிய, **देवाः**-தேவர்கள், **स्तुत्यानां गणनाप्रसङ्गसमये**-புகழத் தக்கவர்களை எண்ணும் ஸந்தர்ப்பம் நேரும்போது **त्वामग्रगण्यं विदुः**-உம்மைத்தான் முதல்வராக அறிகிருர்கள். **माहात्म्याग्रविचारणप्रकरणे**-உயர்ந்த முத்தொழிலிலும் ஸாமர்த்திய மென்ற மகிமையை எண்ணுகிற ஸமயத்தில், **धानातुषस्तोमवत्** பொரியின் பதரின் குவியல்போல், **धूताः**-போக்கடிக்கப் பட்டவர்களாய், **त्वां**-உம்மை, **उत्तमोत्तमफलं**-ஸர்வோத்தம பலமாக, **विदुः** அறிகிருர்கள். **अहं**-நான், **मृषा न प्रवच्मि**-பொய் பேசவில்லை. **स्तोत्रेणालम्**-ஸ்தோத்திரம் செய்வது போதும்.

ஓ சம்பூ! உனது பணியாட்களான பிரம்மா முதலிய தேவர்கள் புகழத்தக்கவர்களைப்பற்றிப் பேசும்பொழுது உன்னையே முதல்வனுக உணர்கிருர்கள்! பெரியோர்களில் சிறந்த மஹிமையைப்பற்றி விசாரிக்கும்பொழுதும் அவர்கள் மணியை மூடியிருக்கும் உமியைப்போன்ருகின்ருர்கள். அவர்கள் நீயே சிறந்த பயன் என்பதை அறிகின்ருர்கள். நான் பொய்பேசவில்லை. உன்னை நான் எப்படிப் புகழ்வது?

இங்கு இந்த நூல், சிவனே பரம்பொருள் என்னும் துணி வுடன் முடிகின்றது. தேவர்கள் குழாத்தில் சுலபமாக இவரே முதல்வராக ஏற்றுக்கொள்ளப்படுகின்ருர். அவர் பெருமையை உரைக்கப்புகழும் உதவுவதன்று. அவன் புகழைச்சொல்லவும் அவன் அருள் வேண்டும்.

(100)

ஸ்ரீ சிவானந்தலஹரீ முற்றும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ श्रीः ॥

॥ श्लोकानुक्रमणिका ॥

ஸ்லோகம்	பக்கம்
अ	
अक्षतैर्धवलैर्दिव्यैः	90
अगौरगात्रैरललाट	16
अत्यर्थं राजते या	41
अद्राक्षमक्षीणदया	3
अपारकारुण्यसुधा	5
अस्तोकस्तोत्रशस्त्रैः	62
आ	
आकाशश्चिकुरायते	127
आगत्य मृत्युञ्जय	80
आत्मप्रेम्णा भवान्या	47
आनन्दायेन्दुकान्तो	60
आनीतेनातिशुभ्रेण	88
आरभ्य स्मरजयिनः	75
आलेपवन्तं मदनाङ्ग	11
उ	
उपासकानां त्वमुमा	20
उपासकानां यदुपासनीयं	1
उपासते यं मुनयः	14

ஸ்லோகம்	பக்கம்
ए	
एकेन मुद्रां परशुं	10
एलाशुण्ठीसहितं	102
क	
कण्ठाश्लेषार्थमाप्ता	52
कर्पूरचूर्णं कपिलाज्य	95
कलाभिरिन्दोरिव	7
कान्त्या निन्दितकुन्द	15
कुर्वन्निर्वाणमार्ग	27
कूश्माण्डवार्ताक	98
केवलमतिमाधुर्यं	99
कैलासे कमनीयरत्न	79
क्रुध्यत्यद्धा ययोः स्वां	37
क्रुध्यद्गौरीप्रसादा	29
क्ष	
क्षोणी यस्य रथो	121
ख	
खट्वाङ्गोदग्रपाणेः	36
ग	

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஶ்லோகம்	பக்கம்
गगनधुनीविमलजलैः	105
गजवदनस्कन्दधृते	93
गुडदधिसहितं	85
गोविन्दादधिकं न	126
च	
चण्डीवक्त्रार्पणेच्छोः	35
चतुश्चत्वारिंशद्विलस	113
चम्पकपङ्कजकुरवक	91
चारुस्मितं सोमकला	13
ज	
जगत्त्रयीख्यात	87
जम्बीरनीराञ्चित	103
त	
तत्त्वार्थमन्तेवसतां	9
द	
दीव्यन्मूर्धेन्दुखण्डः	76
देयासुर्मूर्ध्नि राज	24
दैवतानि कति सन्ति	17
न	
नमो गौरीशाय	110
नागररामठयुक्तं	103
नानाहेमविचित्राणि	88
नीराजनं निर्मलदीप्ति	107
न्यक्कुर्वन्नुर्वराभृत्	43

ஶ்லோகம்	பக்கம்
प	
पंचास्त्रशान्त पंचास्य	86
पदे पदे सर्वतमो	109
पुन्नागनीलोत्पल	108
पुन्नागमल्लिकाकुन्द	106
पुष्टावष्टम्भभूतौ	58
पृथुकुचभर	74
प्रह्वप्राचीनबर्हिः	66
प्रातर्लिङ्गमुमापतेः	114
प्रौढप्रेमाकुलाया	51
भ	
भासा यस्य त्रिलोकी	44
भास्वन्मौक्तिकतोरणे	82
भूत्यै दृग्भूतयोः	31
भूम्ना यस्यास्तसीम्ना	71
म	
मञ्जीरीभूतभोगि	61
मणिमुकुरे निष्पटले	95
मनोज्ञरम्भानव	101
मन्दारमल्लीकरवीर	83
मन्दारहेमाम्बुज	104
ममाद्य देवो वटमूल	6
माणिक्यकेयूरकिरीट	92
माणिक्यपादुकाद्वन्द्वे	91

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஶ்லோகம்	பக்கம்
मुक्तातपत्रं शशिकोटि	94
मुक्तामुक्ते विचित्रा	55
मुदिताय मुग्धशशिना	18
मौक्तिकचूर्णसमेतैः	106
य	
यस्ते प्रसन्नामनुसं	21
यस्यासन्धरणीजला	132
याः स्वस्यैकांशपाता	64
युग्मे रुक्माब्जपिङ्गे	32
येनापादितमङ्गजाङ्ग	124
येषां रागादिदोष	69
यो भासा भात्युपान्त	39
र	
रक्षोवक्षोविफालं	54
रम्भाचूत	100
राजान्नं मधुरान्वितं	97
व	
वक्त्रेन्दोर्दन्तलक्ष्म्या	49
वर्तित्रयोपेतमखण्ड	96
विद्राविताशेषतमो	4
विरिञ्चिमुख्यामर	107
विशुद्धमुक्ताफल	89
विष्णुब्रह्मसुराधिप	134
विष्णुर्यस्य सहस्रनाम	129
विष्ण्वाद्याश्च पुरत्रयं	120
वैयाघ्री यत्र कृत्तिः	57
व्यालम्बिनीभिः परितो	20
श	
शर्करामिलितं स्निग्धं	99
शीतलं मधुरं स्वच्छं	98
शौरिं सत्यगिरं	130
श्रीगन्धं घनसार	89
स	
संसारे जनिताप	111
सत्याः सत्याननेन्दा	67
सद्योजाताख्यमास्यं	46
साम्बो नः कुलदैवतं	116
सुगन्धिपुष्पप्रकरैः	84
सुहितगिरिसुताभ्यः	73
सौधे रत्नमये	112
स्वदक्षजानुस्थित	8
ह	
हिंगूजीरकसहितं	102
हिमाम्बुवासितैस्तोयैः	85

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ श्रीः ॥

॥ श्लोकानुक्रमणिका ॥

சுலோகம்	பக்கம்
अ	
अङ्गे शृङ्गारयोनेः	159
अजं शाश्वतं कारणं	215
अट्टहासभिन्नपद्म	225
अत्यन्तं भासमाने	170
अथ कथमपि मद्रमनां	228
अन्तःकरणविशुद्धि	236
अम्भोजाभ्यां च रम्भा	149
अस्तोपाधिः समस्त	236
आ	
आखण्डलमद	229
आतङ्कावेगहारी	140
आमुक्तानर्घरत्न	161
आरूढः प्रौढवेग	148
आश्लेषेष्वद्रिजायाः	164
आसीनस्याधिपीठं	156
इ	
इभचर्माम्बरं	230
ई	
ईशे गिरीश नरेश	230
उ	
उमया दिव्यसुमंगल	231
ऊ	
ऊरीकुरु मामज्ञ	231
ऋ	
ऋषिवरमानस	232
ॠ	
ॠक्षाधीशकिरीट	232
ऌ	
ऌवर्णद्वन्द्वमवृन्त	233
ए	
एकं सदिति श्रुत्या	233
ऐ	
ऐक्यं निजभक्तेभ्यो	234
ओ	
ओमिति तव निर्देष्ट्री	234
ओमित्येतद्यस्य	188
औ	
औदास्यं स्फुटयति	235
क	
कण्ठप्रान्तावसज्ज	143
करुणावरुणालय	237
कर्णालंकारनाना	169
कल्याणं नो विधत्तां	137

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சுலோகம்	பக்கம்
कान्त्या संफुल्लमल्ली	179
कालभैरवाष्टकं	226
कालारातेः कराग्रे	141
क्ष	
क्षणमिव दिवसान्नेष्यति	257
क्षिप्रं लोके यं भजमानः	196
ख	
खलसहवासं विघटय	238
ग	
गरलं जगदुपकृतये	238
गर्भान्तस्थाः प्राणिन	192
गिरीशं गणेशं गले	213
घ	
घनसारगौरगात्र	239
च	
चपलं मम हृदयकपिं	240
चेतो जातप्रमोदं	184
छ	
छन्नेऽविद्यारूपपटेनैव	207
छाया स्थाणोरपि तव	241
ज	
जय कैलासनिवास	241
जानुद्वन्द्वेन मीन	160
झ	
झणुतकझंकिणु	242

சுலோகம்	பக்கம்
ज्ञ	
ज्ञप्तिः सर्वशरीरे	239
ज्ञांशीभूतान्प्राणिन	204
ज्ञानं विक्षेपावृतिरहितं	242
ट	
टङ्कारस्तव धनुषो	243
ठ	
ठाकृतिरिव तव माया	244
ड	
डम्बरमम्बुरुहामपि	244
ढ	
ढक्काक्षसूत्रशूल	245
ण	
णाकारगर्भिणी चेच्छुभदा	246
णानेत्येवं यन्मनुं	197
त	
तप्तस्वर्णच्छाय	198
तव मन्वतिसंजपतः	246
तेजस्स्तोमैरङ्गद	194
त्वत्तो जगद्भवति	219
थ	
थूत्कारस्तस्य मुखे	247
द	
दध्याज्यादिद्रव्यक	195
दयनीयश्च दयालुः	247

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சுலோகம்	பக்கம்
दिव्याकल्पोज्वलानां	180
देवराजसेव्यमान	220
देवस्याङ्काश्रयायाः	142
देवेभ्यो दानवेभ्यः	185
ध	
धर्मसेतुपालकं	223
धर्मस्थापनदक्ष	248
धाम्नां धाम प्रौढ	203
ध्यायन्नित्थं प्रभाते	186
न	
ननु ताडितोऽसि धनुषा	248
न भूमिर्न चापो	215
नमस्ते नमस्ते विभो	216
नम्राङ्गाणां भक्तिमतां	189
नाभीचक्रालवाला	163
निर्यद्दानाम्बुधारा	145
नृत्तारम्भेषु	152
न्यस्तो मध्ये सभायाः	155
प	
परात्मानमेकं	214
परिमातुं तव मूर्तिं	249
पशूनां पतिं	211
प्रज्ञामात्रं प्रापित	205
प्रत्याहारप्राण	203

சுலோகம்	பக்கம்
प्रभो शूलपाणे विभो	217
फ	
फलमिह नृतया	250
ब	
बलमारोग्यं चायु	250
भ	
भगवन् भर्ग भयापह	251
भद्रारूढ भद्रद	191
भानुकोटिभास्वरं	221
भुक्तिमुक्तिदायकं	222
भूतसंघनायकं	225
म	
मत्तो मारो यस्य	200
महिमा तव नहि माति	251
महेशं सुरेशं	212
मुक्तामाणिक्यजालैः	153
मूर्तिश्छायानिर्जित	197
मेधावी स्यादिन्दुवतंसं	202
मोहध्वस्त्यै वैणिक	190
य	
यः पुण्यैर्देवतानां	146
यन्नादो वेदवाचां	158
यमनियमादिभिरंगैः	252
यस्मिन्वर्षे[illegible]	174

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

சுலோகம்	பக்கம்
यस्य प्राहुः स्वरूपं	138
यस्याज्ञानादेव	206
याभ्यां कालव्यवस्था	171
येन ज्ञातेनैव समस्तं	199
यैषा रंग्यैर्मत्तमयूरा	210
र	
रज्जावहिरिव शुक्तौ	252
रत्नपादुकाप्रभा	224
ल	
लब्ध्वा भवत्प्रसादाच्चक्रं	253
व	
वक्त्रं धन्याः संसृति	193
वक्राकारः कलंकी	178
वसुधातद्धरतच्छय	253
वामं वामाङ्कगाया	173
वामाङ्के विस्फुरन्त्याः	165
वेंणीसौभाग्य	150
श	
शंभो महेश करुणामय	218
शर्व देव सर्वोत्तम	254
शिवाकान्त शंभो	213

சுலோகம்	பக்கம்
शूलटंकपाशदण्ड	222
शृङ्गाराकल्पयोग्यैः	176
ष	
षड्रिपुषड्रूर्मि	254
स	
संध्याकालानुरज्य	162
संभ्रान्तायाः शिवायाः	166
सत्यं ज्ञानमनन्तं	255
स्तम्भैर्जम्भारिरत्न	154
स्थानप्राप्त्या स्वराणां	183
स्वर्गौकस्सुन्दरीणां	181
स्वापस्वप्नौ जाग्र	208
स्वामिन्गङ्गामिव	175
ह	
हाहाहूहूमुखसुर	256
हाहेत्येवं विसाय	209
हृद्यैरद्रीन्द्रकन्या	168
ह्यम्भोराशौ संसृति	201
ळ	
ळादिर्नहि प्रयोग	256

———

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

॥ श्रीः ॥

॥ श्लोकानुक्रमणिका ॥

சுலோகம்	பக்கம்
अ	
अङ्कोलं निजबीज	335
अतिमृदुलौ मम चरणौ	371
अमितमुदमृतं	344
अरहसि रहसि	346
अशनं गरलं फणी	364
असारे संसारे	274
आ	
आकाशेन शिखी	324
आकीर्णे नखराजि	315
आद्यायामिततेजसे	327
आद्याऽविद्या हृद्गता	368
आनन्दामृतपूरिता	319
आनन्दाश्रुभिरातनोति	336
आम्नायाम्बुधिमादरेण	304
आरूढभक्तिगुण	347
आशापाशक्लेशदुर्वासनादि	350
इ	
इदं ते युक्तं वा	375
उ	
उपेक्षा नो चेत् किं	276
ए	
एको वारिजबान्धवः	331
एष्यत्येष जनिं मनो	356
क	
कश्चित्कालमुमामहेश	358
कदा वा कैलासे	287
कदा वा त्वां दृष्ट्वा	289
करलग्नमृगः करीन्द्र	313
करस्थे हेमाद्रौ	290
करोमि त्वत्पूजां	286
कलाभ्यां चूडालंकृत	259
कल्याणिनं सरस	351
कारुण्यामृतवर्षिणं	323
किं ब्रूमस्तव साहसं	300
क्रीडार्थं सृजसि	342
ग	
गभीरे कासारे	270
गलन्ती शंभो	260
गांभीर्यं परिखापदं	310
गुहायां गेहे वा	273
घ	
घटो वा मृत्पिण्डो	266
छ	
छन्दःशाखिशिखान्वितै	314

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஶ்லோகம்	பக்கம்
ज	
जडता पशुता कलंकिता	345
जननमृतियुतानां	360
जलधिमथनदक्षो	362
ज्वालोग्रः सकलामराति	298
त	
त्रयीवेद्यं हृद्यं	262
त्वत्पादाम्बुजमर्चयामि	293
त्वमेको लोकानां	280
द	
दुराशाभूयिष्ठे	281
दूरीकृतानि दुरितानि	369
ध	
धर्मो मे चतुरंघ्रिकः	306
धीयन्त्रेण वचोघटेन	308
धृतिस्तंभाधारां	283
धैर्याङ्कुशेन निभृतं	372
ध्यानाञ्जनेन समवेक्ष्य	348
न	
नतिभिर्नुतिभिस्त्वमीश	366
नरत्वं देवत्वं नगवन	271
नालं वा परमोपकारक	296
नालं वा सकृदेव देव	299
नित्यं योगिमनस्सरोज	355
नित्यं स्वोदरपूरणाय	330
नित्यानन्दरसालयं	317
नित्याय त्रिगुणात्मने	328
प	
पापोत्पातविमोचनाय	309
पूजाद्रव्यसमृद्धयो	363
प्रचरत्यभितः प्रगल्भ	372
प्रभुस्त्वं दीनानां	275
प्रलोभाद्यैरर्थाहरण	285
प्राक्पुण्याचलमार्ग	305
फ	
फलाद्वा पुण्यानां	279
ब	
बहुविधपरितोष	343
बाणत्वं वृषभत्वमर्धवपुषा	359
बुद्धिः स्थिरा भवितु	353
भ	
भक्तिर्महेशपद	352
भक्तो भक्तिगुणावृते	302
भूदारतामुदवह	349
भृङ्गीच्छानटनोत्कटः	321
म	
मनस्ते पादाब्जे	267
मा गच्छ त्वमितस्ततो	311

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ச்லோகம்	பக்கம்
मार्गावर्तितपादुका	337
य	
यथा बुद्धिः शुक्तौ	269
यदा कृताम्भोनिधि	365
योगक्षेमधुरन्धरस्य	301
र	
रोधस्तोयहृतः श्रमेण	333
व	
वक्षस्ताडनमन्तकस्य	339
वक्षस्ताडनशंकया	341
वचसा चरितं वदामि	367
वटुर्वा गेही वा	272
वक्षोद्भूतविधौ	294
विरिञ्चिर्दीर्घायु	278
श	
शंभुध्यानवसन्त	316
शिव तव परिचर्या	361
स	
संध्या घर्मदिनात्ययो	326
संध्यारंभविजृंभितं	310
सदा मोहाटव्यां	282
सदुपचारविधिष्वनुबोधितां	354
सर्वालङ्कारयुक्तां	373
सहस्रं वर्तन्ते जगति	264
सा रसना ते नयने	370
सारूप्यं तव पूजने	291
सोमकलाधरमौलौ	370
स्तवैर्ब्रह्मादीनां	288
स्तोत्रेणालमहं प्रवच्मि	375
स्मृतौ शास्त्रे वैद्ये	265
ह	
हंसः पद्मवनं समिच्छति	332

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



ஸ்ரீ P.A.C. ராமசாமி ராஜா
ஸ்தாபகர்
ராம்கோ குரூப்

Sri Vidyabharathi Book Centre, Sringeri